

இல்லுமினாட்டி
என். கணேசன்
BLACKHOLE

இல்லுமினாட்டி 1

"அன்பு வாசகர்களே,

வணக்கம். இல்லுமினாட்டி நாவல் இருவேறு உலகத்தின் இரண்டாம் பாகமாக இருந்த போதிலும் தனி நாவலாகப் படித்தாலும் முக்கியமானவை எதுவும் விடுபட்டு விடாமல் புரிந்து கொள்ளும்படியாக எழுதப்பட்டிருப்பதால் சில பகுதிகளில் பழைய நிகழ்வுகள் சுருக்கமாக சொல்லப்பட்டிருக்கின்றன. அதனால் இருவேறு உலகத்தைப் படித்தவர்களுக்கு அது திரும்பவும் சொல்லப்படுவது போல் தோன்றக்கூடும். அதன் நோக்கத்தைப் புரிந்து கொண்டு அந்தப் பகுதிகளைக் கடக்கவும்.

பல தீவிர வாசகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க அமானுஷ்யன் அக்‌ஷய் முக்கியக் கதாபாத்திரமாக இல்லுமினாட்டியில் வருகிறான் என்ற மகிழ்ச்சியான செய்தியை அந்த வாசகர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இனி புதிய நாவலுக்குப் போகலாம், வாருங்கள்!

அன்புடன்

என்.கணேசன்

அவன் பெயர் என்னவென்று யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. அளவுக்கு அதிகமாய் போதை மருந்தை உட்கொண்டு ம்யூனிக் நகரத் தெரு ஒன்றில் விழுந்து கிடந்த அவனை அந்த அரசு மருத்துவமனையில் இன்று காலை தான் போலீசார் சேர்த்திருந்தார்கள். அவனை அடையாளம் காட்டக்கூடிய ஆவணம் எதுவும் அவனிடம் இருக்கவில்லை. ஆறடி உயரமும், ஒடிசலான உடல்வாகும் கொண்டிருந்த அவன் முகவாய்க்கட்டையில் ஒரு ஆழமான கீறல் இருந்தது. அந்த மருத்துவமனையின் மருத்துவர் குழு அவன் ஆசியாவைச் சேர்ந்தவனாக இருக்கலாம் என்றும், அவன் வயது முப்பதுக்குள் இருக்கும் என்று கணித்திருந்தது. நீண்ட கால போதைப் பழக்கத்தினால் முன்பே கெட்டிருந்த அவன் உடல்நிலை கடைசியாக உட்கொண்ட அதிக போதை மருந்தால், மருத்துவமனையில் சேர்த்த போதே, அபாயக்கட்டத்தில் தான் இருந்தது.

அவனைப் பரிசோதித்த தலைமை மருத்துவர் அவனைச் சேர்த்த போலீசாரிடம் காலையிலேயே சொல்லியிருந்தார். "இவன் உயிர்பிழைக்க வாய்ப்பில்லை. இவன் குடும்பத்தைக் கண்டுபிடிக்க முடிந்தால் தெரிவித்து விடுங்கள்...."

"இவன் இந்த நகரத்தைச் சேர்ந்தவன் போலத் தெரியவில்லை. எங்கிருந்தோ இங்கு வந்திருக்கலாம்..... இவன் புகைப்படத்தைப் பத்திரிக்கைகளுக்கும் டிவி சேனல்களுக்கும் அனுப்பி இவன் இங்கிருப்பதைத் தெரிவிக்கிறோம்" என்று சொன்னார்கள்.

அவர்கள் சொன்னபடியே இப்போது மாலை நாலரை மணிச் செய்தியில் அவன் படம் டிவியில் காட்டப்படுவதை தலைமை மருத்துவர் பார்த்தார். மருத்துவமனையின் விலாசத்தையும், தொலைபேசி எண்களையும் கூடவே தெரிவித்திருந்தார்கள். இதைப் பார்த்து விட்டு யாராவது இங்கு வரலாம். அல்லது தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம் என்று நினைத்தபடியே தலைமை மருத்துவர் கண்ணாடி ஜன்னல் வழியே வெளியே பார்த்தார்.

அவரது அறை இரண்டாவது மாடியில் இருந்ததால் தெரு முழுவதும் தெளிவாகத் தெரிந்தது. தெருக்கோடியில் ஒரு பெரிய கட்டிடத்தின் முன்பு ஒரு கருப்புக்கார் அப்போது தான் வந்து நின்றது. ஆஜானுபாகுவாக ஒருவன் இறங்கியதும், அவனைத் தொடர்ந்து கண்கள் கருப்புத்துணியால் கட்டப்பட்ட ஒரு இளைஞன் இறங்கினான். அவனைத் தொடர்ந்து இன்னொரு ஆஜானுபாகுவான ஆள் இறங்கினான். அவர் கூர்ந்து பார்ப்பதற்கு முன்பே அவர்கள் மூவரும் அந்தக் கட்டிடத்திற்குள் போய் விட்டார்கள்.

தலைமை மருத்துவருக்கு அந்தத் தெருக்கோடிக் கட்டிடமே ஏதோ ரகசியங்களும், ஆபத்தும் நிறைந்த இடமாகத் தோன்றியது. இன்று பிற்பகல் சுமார் மூன்று மணி அளவில் மிக விலை உயர்ந்த கார்கள் வரிசை வரிசையாக அங்கு வந்து சேர்ந்ததை அவர் கவனிக்க நேர்ந்தது. கார்களில் இருந்து இறங்கி உள்ளே சென்ற அனைவரும் செல்வந்தர்களாகவும், அதிகாரங்கள் படைத்தவர்களாகவும் தோன்றியிருந்தார்கள்..... இப்போது கண்களைக் கட்டி யாரையோ அழைத்துக் கொண்டு போகிறார்கள். அங்கு என்ன நடக்கிறது, நடத்துபவர்கள் யார் என்பதெல்லாம் தெரியவில்லை....

அவர் சிந்தனைகளைக் கலைத்தபடி நர்ஸ் ஒருத்தி அந்த அனாமதேய போதை மனிதனின் ஸ்கேன் ரிப்போர்ட்களை அவர் மேசையில் வைத்து விட்டுப் போனாள். தலைமை மருத்துவர் ஒருவித சலிப்புடன் வந்து தன் இருக்கையில் அமர்ந்தார். சிறிது நேரத்தில் அந்தப் பெயர் தெரியாத போதை மனிதன் சாகப்போகிறான் என்றாலும் அவனுடைய எல்லா ரிப்போர்ட்களையும் ஃபைல் செய்து பத்திரப்படுத்தி வைக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. எதிர்காலத்தில் எப்போது வேண்டுமானாலும் அவை தேவைப்படலாம். உறவினர்கள் யாராவது வழக்கு போடும் வாய்ப்பும் இருக்கிறது. இறந்தும் அந்த மனிதன் பிரச்னையாகலாம்.....

அவர் அவனுடைய எல்லா ஸ்கேன் ரிப்போர்ட்களையும் பிரித்துப் பார்த்தார். அவன் பெயர் தெரியாததால் அந்த எல்லா ரிப்போர்ட்களிலும் பெயர் மிஸ்டர் எக்ஸ் என்றே இருந்தது. தலைமை மருத்துவர் முகத்தில் சின்னதாய் புன்னகை அரும்பியது. அவர் அந்த ரிப்போர்ட்களைப் படிக்க ஆரம்பித்தார். அந்த பரிசோதனைக் குறிப்புகள் எல்லாமே அவர் முன்பே எண்ணியிருந்தபடி மிக மோசமாகவே இருந்தன. அந்த ஆள் மரணத்தை நெருங்கி விட்டான். இனி அதிகபட்சம் ஓரிரு மணி நேரங்கள் தான் அவன் உயிரோடிருக்கும் வாய்ப்பிருக்கிறது.... அவன் இறந்த பின்னும் யாரும் உறவினர்கள் வரா விட்டால் அவன் பிணத்தை என்ன செய்வது என்பதை யோசிக்க வேண்டும். அதில் நிறைய சட்டச்சிக்கல்கள் இருக்கின்றன. எல்லாம் விதிமுறைகளின்படி தான் கவனமாகச் செய்தாக வேண்டும்.....

தலைமை மருத்துவர் அந்தப் போதை மனிதனின் உடல்நிலை குறித்த ரிப்போர்ட்களை எல்லாம் தொகுத்து ஒரு சுருக்கமான அறிக்கை ஒன்றைத் தயார் செய்ய ஆரம்பித்தார். அவன் இறந்தவுடன் அவனைக் காலையில் சேர்த்து விட்டுப் போன போலீஸ்காரர்களுக்குப் போன் செய்து வரவழைத்து அவர்களிடம் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்துப் பேச வேண்டும்....

திடீரென்று எங்கிருந்தோ கிதார் இசை லேசாகக் கேட்க ஆரம்பித்தது. அந்தக் கிதார் இசை இனிமையாக இருந்த அதே நேரத்தில் சற்று அமானுஷ்யமாகவும் இருந்தது போல அவர் உணர்ந்தார். சில நிமிடங்களில் நர்ஸ் ஒருத்தி வேகமாக அவர் அறைக்குள் வந்து சொன்னாள். "டாக்டர் அந்தப் போதை மனிதன் எக்ஸ் கிட்டத்தட்ட இறந்து விட்டான் போல இருந்தது. அவனுடைய இதயத்துடிப்பு எல்லாம் குறைந்து கொண்டே வந்தது. ஆனால் திடீர் என்று இப்போது அவனுக்கு ஜன்னி வந்தது போல் உடம்பெல்லாம் நடுங்குகிறது....."

சிலருக்கு மரணத்திற்கு முன்பு அப்படி ஆவது உண்டு என்பதால் தலைமை மருத்துவர் ஆச்சரியப்படவில்லை. அவன் அருகில் யார் இருக்கிறார்கள் என்று அவளிடம் விசாரித்தார். அவள் உதவி மருத்துவர் ஒருவரின் பெயரைச் சொன்னவுடன் அவர் திருப்தியடைந்தார். இப்போது அந்தக் கிதார் இசை தான் அவரைக் குழப்பியது.

"எங்கிருந்து இந்த கிதார் இசை கேட்கிறது?" என்று அவர் நர்ஸைக் கேட்டார். அவள் கண்களை மூடிக் கவனமாக அந்த இசை வரும் இடத்தை யூகிக்க முயன்றாள். முயற்சி செய்தும் அவளுக்கு முடிவாகச் சொல்ல முடியவில்லை. பக்கத்தில் தான் யாரோ வாசிப்பது போல அவளுக்குத் தோன்றியது. ஆனால் அந்த 'பக்கத்தை' உறுதியாக அவளால் சுட்டிக் காட்ட முடியவில்லை.... "சரியாகத் தெரியவில்லை" என்று தயக்கத்துடன் சொல்லி விட்டுப் பிறகு அதற்கு அதிக முக்கியத்துவம் எதுவும் தராமல் அவள் போய் விட்டாள்.

தலைமை மருத்துவர் எழுந்து போய் கண்ணாடி ஜன்னல் வழியாக வெளியே பார்த்தார். வெளியே பார்வைக்குப் படுவது போல் யாரும் கிதார் வாசித்துக் கொண்டிருக்கவில்லை. ஏனோ அவர் தெருக்கோடியில் இருந்த அந்தப் பெரிய கட்டிடத்தைப் பார்த்தார். அங்கும் கட்டிடத்திற்கு வெளியே யாரும் தெரியவில்லை. கண்களை மூடி அவரும் கிதார் இசை வரும் இடத்தை அறிய முயன்றார். இந்த மருத்துவமனைக்குள்ளேயே தான் அந்த இசை கேட்பது போல் இருந்தது.

'இந்த இசை எங்கிருந்து கேட்டால் நமக்கென்ன' என்பது போல தோள்களைக் குலுக்கிக் கொண்டு அவர் மறுபடியும் அந்த அறிக்கை தயாரிக்கும் வேலையைத் தொடர்ந்தார். கால் மணி நேரத்திற்குப் பின் எக்ஸ் அருகே இருந்த அந்த உதவி மருத்துவரே வந்தார். "அவன் பிழைத்துக் கொள்வான் போலிருக்கிறது டாக்டர். அவன் உடல்நிலையில் கொஞ்சம் கொஞ்சமாய் முன்னேற்றம் தெரிய ஆரம்பித்திருக்கிறது....."

தலைமை மருத்துவர் திகைப்புடன் அவரைப் பார்த்தார். அவர் முன்னால் இருக்கும் ரிப்போர்ட்கள் எதிலும் அவன் பிழைத்துக் கொள்வதற்கான அறிகுறிகள் ஒரு சதவீதம் கூட இருக்கவில்லை..... அவர் குழப்பத்துடன் மெல்ல எழுந்தார். கிதார் இசை இப்போதும் கேட்டுக் கொண்டு தானிருந்தது.

இருவரும் சேர்ந்து மிஸ்டர் எக்ஸ் இருக்கும் பகுதியை நோக்கிச் செல்கையில் தலைமை மருத்துவர் அந்த உதவி மருத்துவரிடம் கேட்டார். "கிதார் இசை எங்கேயிருந்து கேட்கிறது?"

உதவி மருத்துவர் சொன்னார். "இந்த ஆஸ்பத்திரியிலேயே யாரோ வாசிக்கிற மாதிரி தான் தெரிகிறது.... எங்கேயிருந்து என்று சரியாகத் தெரியவில்லை..."

அடுத்த சில நிமிடங்களில் தலைமை மருத்துவர் அந்தக் கிதார் இசை உட்பட அனைத்தையும் மறந்து போனார். மிஸ்டர் எக்ஸின் உடலில் தெரிய ஆரம்பித்த மாற்றங்கள் இது வரை அவர் படித்திருந்த மருத்துவத்தைக் கேலி செய்வது போல் இருந்தன. அவர் போன போது அவன் உடலின் வெப்பம் அபாயக்கட்டத்தையும் மீறி அதிகமாக இருந்தது. உடல் அனலாய் கொதித்தது. தர்மாமீட்டர் 106 டிகிரி ஃபாரன்ஹீட் காட்டியது. ஆனால் அதனால் அவன் உடல் எந்தப் பெரிய பாதிப்புக்கும் ஆளாகவில்லை. மிகக்குறைவாக இருந்த இதயத்துடிப்பு சிறிது சிறிதாக அதிகரித்துக் கொண்டு வந்தது. தலைமை மருத்துவருக்கு அவன் உடலில் அசாதாரணமாக என்னென்னவோ நடந்து கொண்டிருப்பது போல் தோன்றியது. ஆனால் எதுவுமே அவன் வாழ்க்கையை முடிக்கிற விதமாய்த் தெரியவில்லை....

திடீரென்று அவன் கண் விழித்தான். அவன் கண்கள் அமைதியாக அவர்களைப் பார்த்தன.

தலைமை மருத்துவர் குனிந்து அவனிடம் கேட்டார். "நீ யார்? உன் பெயர் என்ன?"

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, June 27, 2019

இல்லுமினாட்டி 2

தலைமை மருத்துவர் நீ யார், உன் பெயர் என்ன என்று கேட்டதற்கு அந்தப் போதை மனிதன் எந்தப் பதிலையும் சொல்லவில்லை. சின்னதாய் புன்னகை அவன் உதடுகளில் வந்து மறைந்தது. ஏனோ அந்தப் புன்னகை அவர் ரத்தத்தை உறைய வைப்பது போல் வில்லத்தனமாய் இருந்தது. உடனே அவர் அப்படி உணர்வது அர்த்தமில்லாதது என்று நினைத்தார். உண்மையில் அவர் கேட்ட கேள்வி அவன் மூளையை எட்டியிருக்காது என்று அவருக்குத் தோன்றியது. இது போன்ற அதிகபட்ச காய்ச்சல் சமயத்தில் இப்படி நடப்பதுண்டு. ஏதோ ஒரு கற்பனைக் காட்சியில் நோயாளி சஞ்சரிப்பதுண்டு. அவன் கற்பனையில் என்ன பார்த்துப் புன்னகைக்கிறானோ என்று எண்ணியவராக அவர் மறுபடி அவனிடம் கேட்டார். "நான் கேட்டது புரிகிறதா? நீ யார்? உன் பெயர் என்ன?"

அவன் ஒன்றும் சொல்லாமல் கண்களை மூடிக் கொண்டான். களைத்திருக்கிறான் என்பதாகத் தலைமை மருத்துவர் புரிந்து கொண்டார். நினைவு திரும்பி அவன் பெயரைச் சொல்லும் வரை அவன் எக்ஸ் தான்... முதலில் அவன் காய்ச்சலைக் குறைக்க வேண்டும், பின் அவன் உடலில் சக்தியை அதிகரிக்க வேண்டும், பிறகு தான் அவனுக்குச் சரியாக நினைவு திரும்பும் வாய்ப்பு இருக்கிறது.... அதற்கான மருந்துகளை அவன் உடலில் ஏற்ற உதவி மருத்துவரிடம் உத்தரவிட்டு விட்டுத் தன் அறைக்கு அவர் திரும்பினார்.

மறுபடியும் தன் மேசையிலிருந்த எல்லா ஸ்கேன் ரிப்போர்ட்களையும் அவர் எடுத்துப் படித்தார். முன்பு அவர் அனுமானத்திற்கு வந்திருந்தபடியே ஒரு ரிப்போர்ட்டில் கூட அவன் உயிர்பிழைக்கும் வாய்ப்பின் தடயம் கூட இல்லை. இவன் பிழைத்துக் கொண்டால் மருத்துவ உலகில் ஒரு அதிசயம் நிகழ்த்தியவனாகக் கருதப்படுவான் என்று தோன்றியது. உடனே அவர் இண்டர்காமில் அழைத்து அவன் உடல்நிலை ஓரளவு இயல்புநிலைக்குத் திரும்பியவுடன் மறுபடியும் ஸ்கேன்கள் செய்யச் சொன்னார்.

அவர் பார்வை கண்ணாடி ஜன்னல் வழியே வீதிக்கு போனது. இப்போது விலை உயர்ந்த கார்கள் அந்தத் தெருக்கோடிக் கட்டிடத்திலிருந்து சாரை சாரையாக வெளியே வந்து கொண்டிருந்தன. அதைப் பார்த்தபடி சிறிது நின்று விட்டுப் பின் மற்ற நோயாளிகளைப் பார்க்க அவர் கிளம்பினார். திடீர் என்று கிதார் இசை நினைவுக்கு வந்தது. இப்போது அது கேட்கவில்லை. எப்போது நின்றது என்று தெரியவில்லை... என்னவோ எல்லாமே விசித்திரமாய் நடக்கின்றன என்று எண்ணியவர் அடுத்த ஒன்றரை மணி நேரம் எல்லா நோயாளிகளையும் பார்த்து விட்டு வரும் வரை மற்ற எல்லாவற்றையும் மறந்திருந்தார். கடைசியாக மறுபடியும் எக்ஸ் அறைக்குப் போனார்.

அவரைப் பார்த்தவுடன் அந்த உதவி மருத்துவர் சொன்னார். "ஒரு கட்டத்தில் 107 டிகிரி வரை ஏறிய காய்ச்சல் இப்போது தான் குறைய ஆரம்பித்திருக்கிறது. 103 டிகிரிக்கு வந்திருக்கிறது. ஆனால் ஒரு மணி நேரத்திற்கு முன் எடுத்த மூளையின் ஸ்கேன் ரிப்போர்ட்கள் குழப்புகின்றன டாக்டர். அசாதாரணமான அதிகப்படியான செயல்கள் மூளையில் தெரிகின்றன....."

அவர் சொல்லிவிட்டு ஸ்கேன் படங்களைக் காட்டிய போது தலைமை மருத்துவர் திகைப்பின் எல்லைக்கே போனார். அவர் அறையில் இருந்த ரிப்போர்ட்டுகளுக்கு நேர்மாறாக உச்சக்கட்ட அளவில் மூளைச் செயல்பாடுகள் இருந்தன. அவர் சொன்னார். "ஸ்கேனிங் மெஷினில் ஏதாவது பிரச்னை இருக்குமோ?"

உதவி மருத்துவர் சொன்னார். "நானும் அதைத் தான் கேட்டேன். ஸ்கேன் ஆபரேட்டர் மெஷின் சரியாகத் தான் இருக்கிறது, இந்த எக்ஸ் சூப்பர் மேனாக இருக்கலாம். யார் கண்டது என்று கிண்டலாகச் சொல்கிறான்...."

எக்ஸ் விஷயத்தில் எங்கோ ஏதோ குழப்பும்படியான தவறுகள் அல்லது பிரமிக்கும்படியான அதிசயங்கள் நடந்திருப்பதாக தலைமை மருத்துவர் நினைத்தார். 107 டிகிரி வரை ஏறிய காய்ச்சலும், மூளையின் அளவுக்கதிகமான செயல்பாடுகளும், சாகக்கிடந்த அவன் உயிர் பிழைத்திருப்பதும் ஒன்று சேர்த்துப் பார்க்கும் போது தலைசுற்றியது. இவன் இயல்புநிலைக்குத் திரும்பி வாய்திறந்து பேசினால் தான் பல விஷயங்கள் புரியும் என்று அவருக்குத் தோன்றியது.

தலைமை மருத்துவர் எக்ஸ் அருகே சென்று பார்த்தார். இப்போது அவன் உடல் சீரடைந்து வருவதாகத் தோன்றியது. மூச்சு சீராக இருந்தது. அவர் உதவி மருத்துவரிடம் சொன்னார். "அவன் இரவு நன்றாக உறங்கி ஓய்வு எடுக்கட்டும். நாளை காலையில் அவனிடம் பேசுவோம்....."

அவர் வீட்டுக்குக் கிளம்பி விட்டார். செல்வதற்கு முன் ரிசப்ஸனில் எக்ஸைக் கேட்டு யாராவது போன் செய்தார்களா என்று கேட்டார். இல்லை என்று பதில் வந்தது. அவன் வீட்டார், நெருங்கியவர்கள் யாரும் டிவியில் அவனைக் குறித்து வெளியிட்ட செய்தியைப் பார்க்கவில்லை போல் இருக்கிறது....

அடுத்தநாள் அதிகாலையிலேயே அவருடைய அலைபேசி இசைத்து அவரை உறக்கத்திலிருந்து எழுப்பியது. அவர் சுவர்க்கடிகாரத்தைப் பார்த்தார். காலை மணி 5.05. அலைபேசியை எடுத்துப் பார்த்தார். அழைப்பு மருத்துவமனையிலிருந்து தான் வருகிறது. பேசினார். "ஹலோ"

நர்ஸ் ஒருத்தி பேசினாள். "டாக்டர், அந்தப் போதை நோயாளி எக்ஸைக் காணோம்"

திகைத்த அவர் ஒரு நிமிடம் ஒன்றும் சொல்லாமல் யோசித்தார். சில சமயங்களில் இது போன்ற ஆட்கள் மயக்கநிலையில் எழுந்து நடப்பதுண்டு. வேறெதாவது அறைக்குச் சென்று படுத்திருக்கும் வாய்ப்பும் இருக்கிறது என்று நினைத்தவராக அவர் கேட்டார். "ஆஸ்பத்திரியில் எல்லா இடங்களிலும் தேடினீர்களா?"

"எல்லா இடங்களிலும் பார்த்து விட்டோம் டாக்டர். இங்கு எங்கும் இல்லை"

எக்ஸ் ஏன் இப்படிப் படுத்துகிறான் என்று எண்ணியபடி அவர் சொன்னார். "போலீஸுக்கும் போன் செய்து தகவலைத் தெரிவித்து விடுங்கள். நான் அரை மணி நேரத்தில் வந்து விடுகிறேன்."

அவர் மருத்துவமனைக்குப் போய்ச் சேர்ந்த சமயம் எக்ஸை அங்கு கொண்டு வந்த போலீஸார் இருவரும் வந்து சேர்ந்தார்கள். அவர்களிடம் நேற்றைய அதிசய நிகழ்வுகளை அவர் தெரிவித்தார். அவர்கள் இருவரும் எந்த உணர்ச்சியையும் காட்டாமல் அவர் சொல்வதை எல்லாம் கேட்டுக் கொண்டார்கள். பின் எக்ஸை யார் கடைசியாக எப்போது பார்த்தார்கள் என்று விசாரித்தார்கள். உதவி மருத்துவர் இரவு 10.30க்கு காய்ச்சல் எந்த அளவு இருக்கிறது என்று பரிசோதித்ததாகவும் அப்போது 99 டிகிரிக்கு காய்ச்சல் இறங்கி இருந்ததாகவும் சொன்னார். நர்ஸ் ஒருத்தி நள்ளிரவு ஒன்றரை மணிக்கு அறைக்கு வந்த போது எக்ஸ் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்ததைப் பார்த்ததாகச் சொன்னாள்.

கடைசியில் ஒரு போலீஸ்காரர் சொன்னார். "அந்த நேரத்திற்குப் பிறகு சிசிடிவி காமிராவில் பார்த்தால் என்ன நடந்திருக்கிறது என்று தெரியும்."

அறைகளில் சிசிடிவி காமிராக்கள் இல்லை என்றாலும் வராந்தாக்களில் அந்தக் காமிராக்கள் இருந்தன. அறையை விட்டு யார் வந்தாலும், அறைக்குள் யார் சென்றாலும் அந்தக் காமிராக்களில் கண்டிப்பாகப் பதிந்திருக்கும் என்பதால் பரபரப்புடன் அந்த அறைக்கு வெளியே இருந்த வராந்தாவில் இரவு ஒன்றரை மணிக்குப் பிறகு பதிவாகி இருந்த சிசிடிவி காமிரா பதிவுகளைப் பார்க்க ஆரம்பித்தார்கள்.

காமிராப்பதிவுகள் காலி வராந்தாவையே அதிகம் காட்டியது. நீண்ட இடைவெளிகளில் ஒரு நோயாளியோ, அவர் உடனிருப்பவரோ, நர்ஸ்களோ வராந்தாவில் தெரிந்தார்கள். ஆனால் அவர்கள் வந்து போனது வேறு அறைகளிலிருந்து தான்... யாரும் எக்ஸ் அறையிலிருந்து வெளியே வரவோ, உள்ளே போகவோ இல்லை... திடீரென்று எக்ஸின் அறையிலிருந்து எக்ஸ் வெளியே எட்டிப் பார்ப்பது தெரிந்தது. உடனே அவர்கள் அந்தக் காமிராப்பதிவு காட்டிய நேரத்தைப் பார்த்தார்கள். காலை மணி 3.37.

வெளியே வராந்தாவில் யாரும் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டவுடன் எக்ஸ் மெல்ல நடக்க ஆரம்பித்தான். அவன் வராந்தாவைத் தாண்டிய காட்சி முடிந்ததும் மற்ற தொடர்பகுதிகளின் காமிராப்பதிவுகளை அவர்கள் பார்த்தார்கள். அவன் ஒரே ஒரு பகுதியில் மட்டும் ஒரு நர்ஸ் வருவதைப் பார்த்து மறைந்து நின்றான். அவள் ஒரு அறைக்குள் நுழைந்தவுடன் வேகமாக அந்த அறையைக் கடந்தான். கடைசியில் மணி 3.48ல் அவன் மருத்துவமனையை விட்டு வெளியேறுவது தெரிந்தது.

ஒரு போலீஸ்காரர் சொன்னார். "கிட்டத்தட்ட மூன்று மணி நேரத்திற்கு முன்பே ஆஸ்பத்திரியை விட்டுப் போய் விட்டான்...."

இன்னொரு போலீஸ்காரர் தலைமை மருத்துவரிடம் சொன்னார். "அவன் பிழைக்க வழியே இல்லை என்றீர்கள். ஆனால் அவன் பிழைத்துக் கொண்டது மட்டுமல்ல ஒரே நாளில் உங்கள் ஆஸ்பத்திரியை விட்டு அவனாகவே நடந்து வெளியே போயிருக்கிறான்"

தலைமை மருத்துவர் சொன்னார். "நேற்றிலிருந்து அவன் அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி கொடுத்துக் கொண்டே இருக்கிறான். இனி நான் அவன் சிகிச்சைக் கணக்கை எப்படி மூடுவது? அவன் செத்திருந்தாலாவது அனாமதேய போதை மனிதன், அனாதைப் பிணம் என்று எழுதி முடித்திருப்பேன்"

"கவலைப்படாதீர்கள். உயிர் போகிற அளவுக்கு போதை மருந்து சாப்பிட்ட ஆள் அந்தப் பழக்கத்திற்கு அடிமையானவன் என்பதால் கண்டிப்பாக சீக்கிரமே மறுபடி சாப்பிட்டு எங்கேயாவது விழுந்து கிடப்பான். அல்லது செத்தும் கிடக்கலாம். அப்போது பார்க்கலாம்.... அவன் இங்கே இருந்த சமயத்தில் வேறெதாவது வித்தியாசமாக நடந்திருக்கிறதா?..."

தலைமை மருத்துவர் சொன்னார். "யாரோ நிறைய நேரம் கிதார் வாசித்துக் கொண்டிருந்தார்கள். அது ஆஸ்பத்திரிக்குள்ளேயே வாசித்தது போல் தான் இருந்தது. அது யார் என்பதை எங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. அது எக்ஸுக்கும் சம்பந்தமில்லாத விஷயமாக இருக்கலாம். ஆனால் நாங்கள் எல்லோரும் காதால் கேட்டும், ஒருவராலும் அது எங்கிருந்து கேட்கிறது என்பதைக் கண்டுபிடிக்க முடியாமல் இருந்தது விசித்திரமாக இருந்தது...."

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, July 4, 2019

இல்லுமினாட்டி 3

அந்தப் போலீஸ்காரர்களுக்கு கிதார் இசை கேட்ட விஷயம் எக்ஸ் சம்பந்தப்பட்டது போலத் தோன்றவில்லை. ஆனாலும் விடை தெரியாத கேள்விகளை விடை தெரியாததாகவே விட்டு விட விரும்பாமல் அங்கிருந்த சில மருத்துவர்கள், நர்ஸ்கள், நோயாளிகளை எல்லாம் அது குறித்துக் கேட்டார்கள். அவர்கள் விசாரித்த எல்லோரும் அந்த இசையைக் கேட்டிருந்தார்கள். அந்த இசை மருத்துவமனைக்குள் இருந்து கேட்பது போலவே உணர்ந்தும் இருந்தார்கள். ஆனால் யாரும் கிதாரை வாசித்ததாக ஒத்துக் கொள்ளவும் இல்லை, எங்கிருந்து கேட்டது என்பதைக் கண்டுபிடித்ததாகவும் சொல்லவில்லை. ஆனால் எல்லோரும் எங்கிருந்து அந்த இசை கேட்கிறது என்று யோசித்திருக்கிறார்கள் என்பது மட்டும் தெரிந்தது.

மூன்றாம் மாடியில் இருந்த ஒரு நோயாளி மாரடைப்பு பிரச்னைக்காக அந்த மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர். அவர் இசைப்பிரியர். பத்திரிக்கைகளில் இசைக்கட்டுரைகள் நிறைய எழுதியிருப்பவர். மற்றவர்களிடம் கேட்ட கேள்வியைப் போலீஸ்காரர்கள் அவரிடம் கேட்ட போது அவர் சொன்னார். "நானும் அந்த இசையைக் கேட்டேன். அதை யார் வாசித்தார்கள் என்று தெரியாவிட்டாலும் அந்த இசை என்ன இசை என்று எனக்குத் தெரியும்"

அது என்ன இசை என்று தெரிந்து கொள்வதில் போலீஸ்காரர்களுக்கு ஆர்வம் இருக்கவில்லை. ஆனாலும் "என்ன இசை அது?" என்று கேட்டு வைத்தார்கள்.

"அது வூடுவின் திகில் நடனத்தில் இசைக்கும் இசை. வூடூ சடங்குகளில் இறந்தவர்களின் ஆவியை வரவழைக்கும் போது அந்த இசையைத் தான் எழுப்புவார்கள்...."

அந்த இசை அமானுஷ்யமாய்த் தனக்குத் தோன்றியதில் வியப்பில்லை என்று தலைமை மருத்துவர் நினைத்தார். அந்த இசைப்பிரியர் தொடர்ந்து சொன்னார். " .... ஆனால் அந்தச் சடங்குகளில் அதிகமாய் மத்தளங்களைத் தான் பயன்படுத்துவார்கள். மற்ற இசைக்கருவிகள் அந்த மத்தளங்களோடு சேர்ந்து தான் இசைக்கப்படும். ஆனால் நேற்று அதே இசை கிதாரில் இசைக்கப்பட்டதைக் கேட்டேன்"

ஒரு போலீஸ்காரர் கேட்டார். "உங்களுக்கு எப்படி இந்த இசை நுணுக்கங்கள் எல்லாம் தெரியும்?"

அப்போது தான் தன் இசை ஈடுபாட்டையும், அது குறித்த கட்டுரைகளைப் பிரபல பத்திரிக்கைகளில் எழுதியிருப்பதையும் அவர் தெரிவித்தார். "அது மட்டுமல்ல. ஹைத்தியில் நான் வூடூ சடங்கு ஒன்றை நேரிலேயே பார்த்து இந்த இசையைக் கேட்டுமிருக்கிறேன்....."

போலீஸ்காரர்கள் அதற்குப்பின் மருத்துவமனையில் அதிக நேரம் இருக்கவில்லை. கிளம்புவதற்கு முன் ஒரு போலீஸ்காரர் தலைமை மருத்துவரிடம் சொன்னார். "இன்றைய பத்திரிக்கைகளிலும் எக்ஸின் படத்தோடு செய்தி வரும். அதைப் பார்த்து விட்டு யாராவது போன் செய்கிறார்களா என்று பார்ப்போம். நாங்கள் டிவியிலும் இன்னொரு முறை அந்த ஆளைப் பற்றி அறிவிப்பு வெளியிட ஏற்பாடு செய்கிறோம்....."

காலை ஒன்பதரை மணிக்கு அவர்கள் எதிர்பார்த்த போன்கால் வந்தது. கீச்சுக்குரலில் ஒரு பெண் பேசினாள். "இன்று பத்திரிக்கையில் என் முன்னாள் கணவரின் ஃபோட்டோ பார்த்தேன். அவர் உடல்நிலை மோசமாகி உங்கள் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கும் செய்தியைப் பார்த்தேன்..... அவர் செத்து விட்டாரா என்ன?"

டெலிபோன் ஆபரேட்டர் சொன்னாள். "இல்லை மேடம். அவர் இறந்து விடவில்லை....."

"அவரிடம் நிறைய பணம் இருந்ததே அதை அவருடன் வைத்திருக்கிறாரா இல்லை தொலைத்து விட்டாரா?"

"பணம் எதுவும் அவரிடம் இருக்கவில்லை மேடம்.... நீங்கள் உங்கள் பெயர் விலாசம் சொன்னால் குறித்துக் கொள்கிறோம்...."

பணம் இல்லை என்றவுடன் எல்லா அக்கறையையும் அந்தப் பெண் இழந்து விட்டாள் போலத் தெரிந்தது. அவள் கறாராகச் சொன்னாள். "அந்த ஆளுடன் வாழ்ந்த போது நரகத்தைத் தான் அனுபவித்தேன். விவாகரத்து வாங்கிய பின் தான் கொஞ்சமாவது நிம்மதியாக நானும் என் மகளும் இருக்கிறோம். அதனால் எதையும் நீங்கள் குறித்துக் கொள்ள வேண்டாம். ஏனென்றால் இப்போது எனக்கும் அந்த ஆளுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை...."

அவள் போனை வைத்து விட்டாள். விஷயத்தைக் கேள்விப்பட்ட தலைமை மருத்துவர் ஒரு போலீஸ்காரருக்குப் போன் செய்து இதைச் சொன்னார்.

போலீஸ்காரர் சொன்னார். "அந்த ஆளின் பெயர் என்ன, விலாசம் என்ன என்று கண்டுபிடிப்பதற்கு இனி கஷ்டமில்லை. வந்த போன்கால் நம்பரைக் குறித்துக் கொண்டால் அந்தப் பெண்ணைத் தொடர்பு கொண்டு அதெல்லாம் தெரிந்து கொண்டு நம் ரெக்கார்டுகளில் குறித்துக் கொள்ளலாம். அதற்கு மேல் செய்ய இதில் ஒன்றுமில்லை. ஏனென்றால் குற்றம் எதுவும் நடக்கவில்லை. ஆளும் சாகவில்லை....."

எத்தனையோ வழக்குகளைப் பார்க்க வேண்டியிருந்த அந்தப் போலீஸ்காரர் அப்படிச் சொன்னது தலைமை மருத்துவருக்குத் தப்பாகத் தோன்றவில்லை. ஆனால் அவரையும் அப்படிப் பெயர் விலாசத்தோடு திருப்தியடைய விடாமல் தடுத்தது எக்ஸின் ஸ்கேன் ரிப்போர்ட்கள். அவனைச் சேர்த்த போது எடுத்ததும், பின்பு எடுத்ததும் ஒன்றுக்கொன்று எதிராக இருந்ததை அவரால் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியவில்லை.

முக்கியமாய் எக்ஸின் மூளை ஸ்கேன் ரிப்போர்ட்கள் முன்னுக்குப் பின் முரணாக அவரை அலைக்கழித்தது. அவருக்கு அந்த நகரிலேயே வசித்து வந்த மூளை விஞ்ஞானியான ஜான் ஸ்மித்திடம் அந்த அந்த ஸ்கேன் ரிப்போர்ட்களின் அதிசயத்தைக் காட்டி அவர் கருத்தைக் கேட்கத் தோன்றியது. அவர் ஜான் ஸ்மித்தைச் சில முறை சந்தித்துப் பேசியிருக்கிறார். ஆனால் ஜான் ஸ்மித் அடிக்கடி உலகநாடுகளுக்குப் பயணம் செய்தபடி இருப்பவர். அவர் இப்போது இங்கு இருக்கிறாரோ இல்லையோ, அவருடன் விரிவாகப் பேச முடியுமோ முடியாதோ...

அவர் ஜான் ஸ்மித்துக்குப் போன் செய்த போது நல்ல வேளையாக அவர் உள்ளூரிலேயே இருந்தார். தலைமை மருத்துவர் சுருக்கமாக விஷயத்தைச் சொன்னவுடன் ஸ்கேன் ரிப்போர்ட்களின் வித்தியாசத்தை அவரும் அதிசயம் என்று ஒப்புக் கொண்டார். அவர் சொன்னார். "சில போதை மருந்துகள் மனித மூளையில் விதவிதமான வித்தியாசமான செயல்பாடுகளை ஏற்படுத்த முடிந்தவை. அதை எத்தனையோ ஆராய்ச்சிகள் பதிவு செய்தும் இருக்கின்றன. ஆனால் போதை அதிகமாகி மரணம் வரை போன பிறகு எந்தச் சிகிச்சையும் இல்லாமல் இப்படிக் குணமாகி மூளையில் இத்தனை வேகமாகச் செயல்பாடுகள் அதிகரிப்பது இது வரை நடக்காத ஒன்று. இது எப்போது நடந்தது என்று சொன்னீர்கள்?"

"நேற்று தான். அவன் காலையில் சேர்க்கப்பட்டான். மாலையில் சாக ஆரம்பித்தான். ஆனால் திடீரென்று பிழைத்துக் கொண்டான்...."

"நேற்று மாலையிலா... அப்போது சுமார் எத்தனை மணி இருக்கும்?"

ஜான் ஸ்மித் ஸ்கேன் ரிப்போர்ட்களுக்கு இணையான முக்கியத்துவம் கொடுத்து அவன் பிழைக்க ஆரம்பித்த நேரத்தைக் கேட்டது அவருக்கு விசித்திரமாய் இருந்தது. அதை வெளிக்காட்டாமல் சொன்னார். "மிகச் சரியாகத் தெரியவில்லை. சுமார் ஆறு மணி இருக்கும்"

ஜான் ஸ்மித் மௌனமாக யோசிப்பது போல் தெரிந்தது. அவரிடமிருந்து உடனடியாகப் பதில் எதுவும் வரவில்லை. பின் மெல்லச் சொன்னார். "ஆச்சரியம் தான்....."

அந்த நேரத்தை ஆச்சரியம் என்று அவர் சொல்லியிருக்க வழியில்லை. அந்த நேரத்தில் என்ன இருக்கிறது? அவர் ஸ்கேன் ரிப்போர்ட்களைத் தான் ஆச்சரியம் என்று குறிப்பிடுகிறார் என்று தலைமை மருத்துவர் நினைத்தார். "ஆமாம். அது மட்டுமல்ல. அவனுக்குக் காய்ச்சல் அபாயக்கட்டமான 106, 107 டிகிரி ஃபாரன்ஹீட்டை எட்டி விட்டும் கூட உடல்நிலை பாதிக்கப்பட்டு விடவில்லை. அதுவும் ஆச்சரியமே அல்லவா?"

ஜான் ஸ்மித் திகைப்போடு கேட்டார். "107 டிகிரி வரை போனதா?"

"ஆமாம். நானும் அதைப் பார்த்து அதிர்ந்து தான் போனேன். நேற்று என்னவோ எல்லாமே விசித்திரமாகவும் அமானுஷ்யமாகவும் நடந்தது. அவன் விஷயத்தோடு சேர்ந்து இன்னொன்றும் நடந்தது. கிதார் இசையை யாரோ வாசித்தார்கள். ஆஸ்பத்திரிக்குள் இருந்தே வாசிப்பது போல இருந்தது. ஆனால் யாரும் வாசித்ததைப் பார்க்க முடியவில்லை. எங்கள் மருத்துவமனையில் இருந்த இசைஞானம் உள்ள ஒரு நோயாளி சொல்கிறார் அந்தக் கிதார் இசை வூடூ திகில் நடனத்தில் ஆவிகளை வரவழைக்கையில் வாசிக்கும் இசை மாதிரியாம். அவர் ஹைத்தியில் நேரடியாகவே அந்த இசையைக் கேட்டிருக்கிறாராம்...."

ஜான் ஸ்மித்திடம் இருந்து எந்தச் சத்தமும் இல்லை. போன் இணைப்பில் இருக்கிறாரா இல்லையா என்ற சந்தேகம் வர தலைமை மருத்துவர் சந்தேகத்துடன் "ஹலோ...." என்றார்.

ஜான் ஸ்மித் சொன்னார். "நான் எதற்கும் வந்து அந்த ரிப்போர்ட்களைப் பார்க்கிறேனே. நீங்கள் என்ன தான் விளக்கினாலும் நேரில் பார்த்தால் ஒரு முடிவுக்கு வருவது சுலபமாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஏனென்றால் இது போன்ற அதிசயங்கள் அடிக்கடிப் பார்க்கக் கிடைப்பதில்லை..."

"நல்லது. எப்போது வருகிறீர்கள்?"

"இப்போதே ஓய்வாகத் தான் இருக்கிறேன். இப்போதே வரட்டுமா?"

அவர் உடனடியாக வருவதற்கு அவர் சொன்னதைத் தவிர வேறு பிரத்தியேகக் காரணங்கள் இருப்பதாகத் தலைமை மருத்துவருக்குத் தோன்றவில்லை... அவர் ஜான் ஸ்மித் வர ஆவலுடன் காத்திருந்தார்.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, July 11, 2019

இல்லுமினாட்டி 4

ஜான் ஸ்மித் நாற்பது நிமிடங்களில் அங்கு வந்து சேர்ந்தார். அவரும் ஆர்வத்துடன் அந்த ஸ்கேன் ரிப்போர்ட்களைப் பார்த்தார். அந்த ரிப்போர்ட்கள் அவரையும் திகைக்க வைத்தது அவர் முகபாவனையிலேயே தெரிந்தது. அவர் ஆழ்ந்த யோசனையுடன் தன் சட்டைப் பட்டன்களைத் திருகியபடியே ஒவ்வொரு ரிப்போர்ட்டையும் கவனமாகப் பார்த்தார். கடைசியில் நிமிர்ந்து உட்கார்ந்து தனக்குள் பேசிக் கொள்வது போல வியப்புடன் சொன்னார். "மனிதனின் உடலைப் போல் அற்புதமான கருவி வேறில்லை. ஆனால் அதில் நடக்கும் எத்தனையோ அற்புதங்கள் அவன் கவனத்திற்கே கொண்டு வரப்படுவதில்லை. அதனாலேயே அவன் தன் உடல்நலத்தை அலட்சியப்படுத்தி விடுகிறான்...."

தலைமை மருத்துவர் சொன்னார். "உண்மை. உண்மை.... வாழ்நாள் எல்லாம் உடம்பை அலட்சியப்படுத்தி போதையால் சீரழித்துக் கொண்டவன் உடலும் கூட மரணம் வரை போய் அற்புதம் புரிந்து இருக்கிறது பாருங்களேன்."

ஜான் ஸ்மித் கேட்டார். "அவன் யார், விலாசம் என்ன என்பது தெரிய வந்ததா?"

தலைமை மருத்துவர் சொன்னார். "இல்லை. அவன் முன்னாள் மனைவி போன் செய்து பணம் எதாவது வைத்திருக்கிறானா என்று கேட்டு, இல்லை என்று தெரிந்தவுடன் வேறு எந்த விவரமும் சொல்லாமல் விட்டு விட்டாள். ஆனால் அவள் நம்பரை வைத்து அவள் விலாசத்தைக் கண்டுபிடித்து அவனைப் பற்றிய விவரங்களையும் கண்டுபிடித்து விடலாம் என்று போலீஸார் நினைக்கிறார்கள். இப்போதைக்கு அவன் பெயர் எக்ஸ் என்று வைத்திருக்கிறோம்...."

ஜான் ஸ்மித்துக்கு அந்தப் பெயர் பொருத்தமாகத் தோன்றியது. கணக்கில் கண்டுபிடிக்க வேண்டியதற்கு எக்ஸ் என்று சொல்வது போல் இவனும் கண்டுபிடிக்க வேண்டியவனே என்பதால் எக்ஸ் என்று அழைப்பது சரி தான். பின் மெல்லக் கேட்டார். "அவன் போகிற காமிராப் பதிவை நானும் பார்க்கலாமா?"

"தாராளமாக. அதன் நகலைத் தனியாக எடுத்து வைத்திருக்கிறேன்" என்று சொன்ன தலைமை மருத்துவர் அந்தக் காமிராப் பதிவைக் காட்டினார். ஆர்வத்துடன் ஜான் ஸ்மித் தன் சட்டைப் பட்டனைத் திருகியபடியே அதைப் பார்த்தார். தலைமை மருத்துவருக்கு ஜான் ஸ்மித்தின் இந்தப் புதுப்பழக்கம் வேடிக்கையாக இருந்தது. சென்ற முறைகளில் அவரைச் சந்தித்துப் பேசிய போது அவரிடம் இப்படி பட்டனைத் திருகும் பழக்கம் இருக்கவில்லை....

காமிராப்பதிவில் எக்ஸ் எந்தப் பதட்டமோ, தள்ளாட்டமோ இல்லாமல் நடந்து சென்றதை ஜான் ஸ்மித் ஆச்சரியத்துடன் கவனித்தார் அவன் சாகக் கிடந்த போதை ஆசாமி என்று இதைப் பார்த்து விட்டு யாருமே சொல்ல மாட்டார்கள் என்று நினைத்துக் கொண்டார். கடைசி காமிராப் பதிவில் அவன் மருத்துவமனையை விட்டு வெளியேறிய போது கூட அவனிடம் எந்தப் பக்கம் போவது என்ற குழப்பம் இல்லாமல் இருந்ததை ஜான் ஸ்மித் கவனித்தார்.

"நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று தலைமை மருத்துவர் ஜான் ஸ்மித்திடம் கேட்டார்.

ஜான் ஸ்மித் சிறிது யோசித்து விட்டுச் சொன்னார். "இது மருத்துவ ஆச்சரியம் தான். ஆனால் எனக்கென்னவோ அவன் சீக்கிரமே எங்காவது மறுபடியும் விழுந்து கிடப்பான் என்று தோன்றுகிறது. போதைப் பழக்கம் அவ்வளவு சீக்கிரம் விடுவிக்க முடிந்ததல்ல. ஒரு முறை பிழைத்துக் கொண்டவனுக்கு அந்த நம்பிக்கையே இன்னும் பல முறை பழைய வழியிலேயே போகத் தூண்டும்...."

தலைமை மருத்துவர் சொன்னார். "நீங்கள் சொல்வது சரி தான். நான் கேட்டது இந்த மருத்துவ ஆச்சரியமே எப்படி நடந்தது என்று உங்களுக்குத் தோன்றுகிறது என்பதைத் தான்...."

ஜான் ஸ்மித் அவரையே வெறித்துப் பார்த்து விட்டுச் சொன்னார். "எனக்கு எந்தத் தீர்மானத்திற்கும் வர முடியவில்லை"

தலைமை மருத்துவர் கேட்டார். "அவன் யார், அவன் முந்தைய வாழ்க்கை எப்படி இருந்தது என்பதெல்லாம் விரிவாகத் தெரிந்தால் அதை வைத்து இந்த அதிசயத்திற்கான காரணத்தை நம்மால் யூகிக்க முடியுமா?"

ஜான் ஸ்மித் சொன்னார். "அதை வைத்து யூகிக்க முடியலாம். இல்லா விட்டால் ஆள் பெயர், வாழ்க்கை வரலாறு தெரிந்தாலும் கூட இந்தக் காரணம் எக்ஸாகவே தங்கி விடும் வாய்ப்பிருக்கிறது...."

தலைமை மருத்துவருக்கு ஜான் ஸ்மித் தன் உண்மையான அபிப்பிராயத்தை முழுவதுமாகச் சொல்லி விடவில்லை என்று ஏனோ தோன்றியது.

ஜான் ஸ்மித் மெல்ல எழுந்தார். "சரி நான் கிளம்பட்டுமா..... எனக்கு ஒரு உதவி வேண்டும். இசை மூளையில் ஏற்படுத்தும் அதிர்வலைகள் குறித்து நான் ஒரு ஆராய்ச்சிக் கட்டுரை எழுத நினைத்திருக்கிறேன். வூடு திகில் இசை நடனம் பற்றி உங்களிடம் சொன்ன உங்கள் நோயாளியைப் பார்த்து என் சில சந்தேகங்களை நிவர்த்தி செய்யலாம் என்று நினைக்கிறேன். அவரிடம் அது குறித்துப் பேச வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க முடியுமா? அவர் பேசும் நிலைமையில் இருக்கிறாரா?"

"அவர் தற்போது குணமாகி ஓய்வாகத் தான் தங்கி இருக்கிறார். அதனால் பிரச்னை இல்லை. அவர் நல்ல மனிதர். இசை பற்றி மணிக்கணக்கில் பேசக்கூடியவர் தான். அவரிடம் கேட்டுச் சொல்கிறேன்" என்று சொன்ன தலைமை மருத்துவர் போனில் அந்த இசைப் பிரியரிடம் பேசினார். பிரபல மூளை விஞ்ஞானி ஜான் ஸ்மித் அவரிடம் இசைக்கும், மூளையின் அதிர்வலைகளுக்கும் உள்ள சம்பந்தம் குறித்து எழுதப்போகும் ஆராய்ச்சிக் கட்டுரை தொடர்பாக சில சந்தேகங்கள் கேட்க விரும்புகிறார் என்று தலைமை மருத்துவர் சொன்னதும் அந்த இசைப்பிரியர் உடனே அவரிடம் பேச ஒத்துக் கொண்டார்.

தலைமை மருத்துவர் சொன்னார். "அறை எண் 315ல் அவர் இருக்கிறார். நான் சில நோயாளிகளை இப்போது பார்க்க வேண்டியிருப்பதால் நீங்கள் போய்க் கொள்கிறீர்களா?"

ஜான் ஸ்மித் அந்த இசைப்பிரியருடன் பேசும் போது அவர் உடன் இருப்பதை விரும்பாததால் நிம்மதியடைந்து "நான் போய்க் கொள்கிறேன். நீங்கள் நோயாளிகளைப் பாருங்கள். அழைத்து இந்த அதிசய நிகழ்வைச் சொன்னதற்கு நன்றி...."

"நான் சொன்னவுடன் நீங்கள் இங்கே வந்ததற்கு நான் தான் உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும்" என்று எழுந்து நின்று அவர் கையைக் குலுக்கி தலைமை மருத்துவர் அனுப்பி வைத்தார்.

ஜான் ஸ்மித் மூன்று நிமிடங்களில் அறை எண் 315ல் இருந்தார். ஐந்தே நிமிடங்களில் அறிமுக உபசார வார்த்தைகளை முடித்து விட்டு ஜான் ஸ்மித் கேட்க வந்த விஷயத்திற்கு வந்தார். "நீங்கள் ஹைத்தி சென்று வூடுவின் திகில் நடனங்களைப் பார்த்திருக்கிறீர்கள், அந்த இசையைக் கேட்டிருக்கிறீர்கள் என்று கேள்விப்பட்டேன். நீங்கள் எப்போது போயிருந்தீர்கள்?"

அந்த இசைப்பிரியர் உற்சாகமாகச் சொல்ல ஆரம்பித்தார். "நான் பத்து வருடங்களுக்கு முன் போயிருந்தேன். என் அதிர்ஷ்டம் 85 வயதான அனுபவம் நிறைந்த ஒரு வூடூ ராணி நடத்தும் திகில் நடனச் சடங்கை என்னால் நேரில் பார்க்க முடிந்தது....."

ஜான் ஸ்மித் இடைமறித்தார். "வூடூ ராணியா?"

"ஆமாம் வூடு திகில் நடனச் சடங்கை அனுபவம் வாய்ந்த பெண் குருமார்கள் தான் அதிகம் தலைமை ஏற்று நடத்துகிறார்கள். அந்தப் பெண் குருவை வூடூ ராணி என்று அழைக்கிறார்கள்...."

"உண்மையில் அந்தத் திகில் நடனச் சடங்கின் உத்தேசம் என்ன?"

"இறந்தவர்களின் ஆவியை வரவழைத்து சில கேள்விகளுக்குப் பதில் பெறுவது அல்லது சில உதவிகள் பெறுவது தான் திகில் நடனச் சடங்கின் உத்தேசம். வூடூ ராணி அதற்கான பாடலைப் பாடுவார். மத்தளம், இசைக்கருவிகள் எல்லாம் பயன்படுத்துவார்கள். இந்த இசையின் தாள லயத்திற்கேற்ப ஒருவர் நடனமாடுவார். வூடுவில் அவரைக் குதிரை என்றழைப்பார்கள். அந்தக் குதிரையின் உடம்பில் தான் அழைக்கப்படும் ஆவி ஏறும். அந்த ஆவி உடலில் புகுந்தவுடன் அந்த மனிதன் தன் சொந்த இயல்பை இழந்து விடுவான். ஆவியின் இயல்பு தான் அவனிடம் காணப்படும். சொல்லப்போனால் அந்த ஆவி மனிதனாகவே அவன் மாறி விடுவான். அந்த ஆவியிடம் தான் கேள்விகள் கேட்பார்கள். வேண்டுகோள் விடுப்பார்கள்...."

அவர் சொல்லிக் கொண்டே போனார். ஜான் ஸ்மித்துக்கு அந்த முழுச்சடங்கைத் தெரிந்து கொள்ளும் ஆர்வம் இருக்கவில்லை. ஆனால் அவருக்கு ஆர்வம் இருக்கும் விஷயத்தை மட்டும் கேட்டு அந்த இசைப்பிரியருக்கு அனாவசிய சந்தேகங்களை ஏற்படுத்தி விட அவர் விரும்பாததால் சுவாரசியமாகத் தலையை ஆட்டிக் கேட்டுக் கொண்டார். கடைசியில் அவர் நிறுத்தியவுடன் தன் சந்தேகத்தைக் கேட்டார்.

"அந்த ஆவியை வரவழைக்கப் பாடும் பாட்டும், இசைக்கப்படும் இசைக்கருவிகளும் அதற்கென்று வகுக்கப்பட்டிருக்கும் இசையில் தான் இருக்க வேண்டுமா, இல்லை எப்படி வேண்டுமானாலும் இசைக்கப்படுமா?"

"பழங்காலத்தில் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான இசையைத் தான் பயன்படுத்தினார்கள். இப்போதெல்லாம் கொஞ்சம் மாற்றி மாற்றியும் பாடுவதாகக் கேள்விப்பட்டேன். ஆனால் அவை அந்த அளவு வெற்றிகரமாக இருப்பதில்லை என்பது அனுபவஸ்தர்களின் அபிப்பிராயம்."

"அந்த உடலில் ஏறிய ஆவி எப்போது எப்படி வெளியேறுகிறது?"

"கேள்விகளும், வேண்டுகோள்களும் முடிந்த பிறகு நன்றி செலுத்தி, வணங்குவார்கள். பின் அந்த ஆவி உடலை விட்டுப் போக வேறுவிதமான இசை இசைக்கப்படும். பாடலும் மாறும். அந்த ஆவி வெளியேறிய பிறகு அந்தக் குதிரை என்பவன் மயங்கி விழுந்து விடுவான்....."

அவர் சொல்லிக் கொண்டே போனார். அந்த விவரிப்பிலும் ஜான் ஸ்மித்துக்கு ஈடுபாடு இருக்கவில்லை. அவர் சொல்லி முடிக்கும் வரை காத்திருந்து பிறகு மெல்லத் தன் சந்தேகத்தைக் கேட்டார். "நேற்று நீங்கள் கேட்ட இசை அந்த ஆவியை வரவழைக்கும் இசை போல இருந்ததென்று நீங்கள் சொன்னதாக டாக்டர் சொன்னார். ஆச்சரியமாக இருந்தது. அது உண்மை தானா?"

"ஆமாம். அதே இசை தான். அதில் எனக்குச் சந்தேகமில்லை."

"கடைசியில் கிதார் இசை ஆவியை அனுப்பி வைக்கும் இசையில் முடிந்ததா?"

"அது தான் இல்லை. வரவழைக்கும் இசையோடு அந்த கிதார் வாசிப்பாளர் முடித்துக் கொண்டார்...."

(தொடரும்)

என்.கணேசன்

இல்லுமினாட்டி 5

அந்த மருத்துவமனையை விட்டு வெளியேறி காரில் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது ஜான் ஸ்மித்தின் மனதில் பலதரப்பட்ட எண்ணங்களும், உணர்ச்சிகளும் அலைமோதியபடி இருந்தன. விஞ்ஞானத்தில் வியப்புகளுக்கும், விதிவிலக்குகளுக்கும் பஞ்சம் இருப்பதில்லை. அவை தான் அடுத்த கண்டுபிடிப்புகளுக்கான விதைகள். அதன் மூலம் தான் அடுத்தநிலை ஆராய்ச்சிகள் ஆரம்பமாகின்றன; கூடுதல் உண்மைகளை விஞ்ஞானம் கண்டறிகிறது. அந்த வகையில் ஒரு அதிசயம் தான் எக்ஸ் என்று தற்காலிகமாக அழைக்கப்படும் போதை மனிதன் உயிர்பிழைத்ததில் நடந்திருக்கிறது என்று நம்ப அவர் ஆசைப்பட்டார். ஆனால் நடந்திருந்த இரண்டு விஷயங்கள் அப்படி நம்ப விடாமல் அவரைத் தடுத்தன. முதலாவது போதை மனிதன் உயிர் பிழைக்க ஆரம்பித்த நேரம். இரண்டாவது அந்தக் கிதார் இசை. இசைத்தது யாரென்று தெரியாவிட்டாலும் அது இறந்தவர்களின் ஆவியை வரவழைக்க வூடுவில் இசைக்கப்படும் வகையைச் சேர்ந்தது என்று தெரிய வந்தது நெருடலாக இருந்தது. அந்த இரண்டையும் அவரால் தற்செயல் என்று ஒதுக்க முடியவில்லை. தலைமை மருத்துவரிடம் அந்த எக்ஸ் சீக்கிரமே எங்காவது மறுபடியும் விழுந்து கிடப்பான் என்று தோன்றுகிறது என்று அவர் கூறியிருந்தாலும் அப்படி நடக்க வழியில்லை என்று உள்ளுணர்வு ஏனோ தெரிவித்தது...

இந்தக் குழப்பத்தில் இருந்து மீள முடிவு செய்த ஜான் ஸ்மித் வழியில் காரை ஓரமாக நிறுத்தி விட்டு அலைபேசியில் ஒரு எண்ணை அழைத்தார். போதை மனிதன் எக்ஸ் பற்றித் தெரிவித்து விட்டு அவனைப் பற்றிய முழு விவரங்களும், அவன் தற்போது எங்கிருக்கிறான் என்ற தகவலும் உடனடியாக வேண்டுமென்றார். ஏன் எதற்கு என்பது போன்ற கேள்விகள் எதுவும் மறுபக்கத்தில் கேட்கப்படவில்லை. “சரி” என்ற ஒற்றைச் சொல்லோடு இணைப்பு துண்டிக்கப்பட்டது.

மறுபடியும் காரைக் கிளப்பி வீடு நோக்கிப் பயணிக்க ஆரம்பித்த போது அவர் மனம் நேற்றைய நிகழ்வுகளிலும், எக்ஸ் மீதுமே தங்கியிருந்தது. எல்லாமே யாருமே எதிர்பாராத நிகழ்வுகள், திருப்பங்கள்! எக்ஸ் அந்த நிகழ்வுகளின் தொடர்ச்சியா, இல்லை, அவை எதற்கும் சம்பந்தமில்லாத ஒரு தற்செயலா? அவர் நேற்று நடந்த நிகழ்வுகள் எல்லாவற்றையும் நிதானமாக மனதில் வரிசைப்படுத்தினார்.

இல்லுமினாட்டியின் அசாதாரணக்கூட்டம் ஒன்று ம்யூனிக் நகரத்தில் மிக ரகசியமாக நேற்று பிற்பகல் நடந்தது. அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஒரு அசாதாரண மனிதன் மாலை நேரத்தில் அமானுஷ்யமான முறையில் இறந்து போனான். அந்த ரகசியக்கூட்டம் நடந்த கட்டிடத்திலிருந்து சுமார் 300 மீட்டர் தொலைவில் இருக்கும் ஒரு மருத்துவமனையில் அதே நேரத்தில் ஒரு போதை மனிதன் இறந்து கொண்டிருக்கிறான். திடீரென்று ஒரு கிதார் இசை கேட்க ஆரம்பிக்கிறது. அந்த இசை இறந்தவர்களின் ஆவியை ஒரு உடலில் வரவழைக்க வூடூ சடங்கில் பயன்படுத்தும் இசை வகையாக இருக்கிறது. இறந்து கொண்டிருந்த போதை மனிதன் திடீரென்று சக்தி பெற்று உயிர் பிழைக்க ஆரம்பிக்கிறான். பின் அவன் மர்மமான முறையில் அங்கிருந்து வெளியேறியும் விடுகிறான். இல்லுமினாட்டி கூட்டத்தில் இறந்தவன் அசாதாரண மனிதனாக இருந்திரா விட்டால், அந்தக் கிதார் இசை வூடூ இசையாக இருந்திரா விட்டால், அந்தப் போதை மனிதன் மருத்துவமனையிலிருந்து ரகசியமாக வெளியேறியிருக்கா விட்டால் இதற்குப் பெரிய முக்கியத்துவம் தந்திருக்க வேண்டியதில்லை...

வீடு போய்ச் சேர்ந்தவுடன் முதல் வேலையாக அவர் சட்டை பட்டனில் ரகசியமாக இணைத்திருந்த அதிநுட்பக் காமிராவைக் கவனமாகக் கழற்றி எடுத்து அதன் மூலமாக மருத்துவமனையில் அவர் எடுத்திருந்த புகைப்படங்களை அவருடைய லாப்டாப்பில் ஏற்றினார். திரும்பவும் அந்த ரிப்போர்ட்களை ஒவ்வொன்றாகப் படித்துப் பார்த்தார். எக்ஸ் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவுடன் எடுக்கப்பட்ட ரிப்போர்ட்களும், அவன் உயிர்பிழைத்தவுடன் எடுக்கப்பட்ட ரிப்போர்ட்களும், ஒரே மனிதனுடையது, சில மணி நேர இடைவெளியில் எடுக்கப்பட்டவை என்று சொன்னால் யாராலும் நம்ப முடியாது என்று அவருக்கு இப்போதும் தோன்றியது. அவர் சந்தேகப்படுவது போல் நடக்க விஞ்ஞானப்படி வழி இல்லை. ஆனால் நடந்திருக்கும் விஷயங்களும், ரிப்போர்ட்களும் கூட விஞ்ஞானம் பதில் கூற முடியாதபடி அல்லவா இருக்கின்றன.

நினைப்பது பைத்தியக்காரத்தனமாகத் தோன்றினாலும் வூடூ சடங்கு ஏதாவது ரகசியமாக நடந்திருக்குமோ என்ற சந்தேகம் ஜான் ஸ்மித் மனதில் எழுந்தது. அவர் இணையத்தில் வூடூ திகில் நடனச்சடங்குகள் பற்றிப் படிக்க ஆரம்பித்தார். பெரும்பாலானவை மாயா ஜாலக்கதைகள் போல இருந்தன. ஆனாலும் படிக்க ஆரம்பித்தார். அந்தச் சடங்குகள், அவற்றின் பின்புலமாக இருந்த நம்பிக்கைகள் எல்லாம் சுவாரசியமாக இருந்தன. அந்த இசைப்பிரியர் சொன்னது போல தற்காலிகமாக ஒரு ஆவியை ஒருவரது உடலில் வரவழைப்பதும், அதன் ஆசிகளையும், பதில்களையும் பெற்ற பின் அனுப்பி வைப்பதுமான சடங்குகளாக அவை இருந்தன. ஆனால் அந்த ஆவி ஒரு உடலில் தங்கியிருப்பது அதிகபட்சமாகச் சில மணி நேரங்கள் தான். அதற்கு மேல் அந்த ஆவிகள் தங்குவதில்லை, வூடூ சடங்கை நடத்துபவர்கள் அப்படி ஆவிகள் தங்க அனுமதிப்பதில்லை. ஆவிகளை ஒரு உடலில் வரவழைப்பதும் அனுப்பி வைப்பதும் இசை கலந்த பாட்டு சடங்குகளிலாகவே நடக்கின்றன. நீண்ட நேரம் அலசியதில் இறந்து கொண்டிருக்கும் உடலில் ஒரு ஆவியை வரவழைப்பது போன்ற சம்பவத்தையோ, வரவழைத்து விட்டு திருப்பி அனுப்பி வைக்காத சம்பவத்தையோ ஒன்று கூட அவரால் காண முடியவில்லை...

ஒரு விஞ்ஞானியான ஜான் ஸ்மித்துக்கு ஆர்வத்துடன் ஆழமாகப் படிக்கும் விஷயங்களின் சூட்சுமங்கள் எப்போதும் பிடிபடாமல் போனதில்லை. உலகப்புகழ் பெற்ற அந்த மூளை விஞ்ஞானி நீண்ட யோசனைக்குப் பின் எக்ஸ் விஷயத்தில் நடந்திருப்பதற்கும், வூடூவுக்கும் அந்தக் குறிப்பிட்ட இசை தவிர வேறெந்த சம்பந்தமும் இல்லை என்ற முடிவுக்கே வந்தார். அதற்கான காரணங்களும் அவரால் கவனிக்கப்பட்டிருந்தன. வூடூ திகில் நடனச் சடங்குகள் ஒரு குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட எல்லைக்குள் மட்டுமே நடப்பவை. அந்த இடங்கள் புனிதப்படுத்தப்பட்டு, மந்திரிக்கப்பட்டு தயார்ப்படுத்தப்பட்ட பின்பு தான் சடங்குகள் நடக்கும். அப்படி வரவழைக்கப்பட்ட ஆவிகள் சடங்குகளின் முடிவில் கண்டிப்பாக விடைபெறுகின்றன. யார் மீது அந்த ஆவி இறங்குகிறதோ அவன் தன் பழைய நிலைக்குத் திரும்புகிறான்...

அவர் அலைபேசி அவருடைய சிந்தனை ஓட்டத்தைக் கலைத்தது. அழைத்தது சில மணி நேரத்திற்கு முன் அவர் எக்ஸ் குறித்து அறியத் தொடர்பு கொண்டிருந்த போலீஸ் உயரதிகாரி தான். அவர் சொன்னார். “அந்தப் போதை மனிதன் பெயர் டேனியல். வயது 28. இந்தியாவில் கேரளாவைச் சேர்ந்தவன். ஐ.டி இன்ஜினியரிங் கிராஜுவேட். பெர்லினில் பெரிய கம்பெனியில் வேலை கிடைத்து ஐந்து வருடத்துக்கு முன் ஜெர்மனி வந்தவன். வந்த ஆறு மாதத்தில் உடன் வேலை பார்த்த குஜராத்தி பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டான். அவர்களுக்கு மூன்று வயதுப் பெண் குழந்தை இருக்கிறது. இரண்டு வருடத்திற்கு முன் வேலையை விட்டு விட்டான். அப்போது தான் போதைக்கு அடிமையாகி இருக்கிறான். போன வருடம் மனைவி அவனை விவாகரத்து செய்து விட்டாள். அவளும் குழந்தையும் பெர்லினில் தான் இப்போதும் இருக்கிறார்கள். அவன் ஃப்ராங்பர்ட்டில் இரண்டு போதை நண்பர்களுடன் தங்கியிருக்கிறான். அவனுக்கு நிரந்தர வேலை எதுவுமில்லை. ஃப்ராங்பர்ட்டில் இருந்து மூன்று நாளுக்கு முன்னால் கிளம்பி இருக்கிறான். அவன் நண்பர்களுக்கு அவன் எங்கே போனான் என்று தெரியவில்லை. அதைப் பற்றி அவர்கள் கவலைப்பட்டதாகவும் தெரியவில்லை...”

கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த ஜான் ஸ்மித் அந்த உயரதிகாரி மேற்கொண்டு எதுவும் சொல்லாமல் சில வினாடிகள் நிறுத்தியதால் கிடைத்திருக்கும் தகவல்கள் அவ்வளவு தான் என்பதை உணர்ந்தார். அவர் மெல்லக் கேட்டார். “அவனை ம்யூனிக்கில் வேறு யாராவது பார்த்திருக்கிறார்களா என்று விசாரித்தீர்களா?”

“முந்தாநாள் ம்யூனிக்கில் அவனைச் சிலர் பார்த்திருக்கிறார்கள். அவன் போதையில் தள்ளாடியபடி வீதிகளில் சென்றதைக் கவனித்திருக்கிறார்கள். ஆனால் ஆஸ்பத்திரியிலிருந்து அவன் வெளியே வந்த பிறகு அவனை யாரும் பார்த்ததாகத் தெரியவில்லை.... ரயில்வே ஸ்டேஷன், பஸ் ஸ்டேஷன், ஏர்போர்ட் முதல்கொண்டு எல்லா இடங்களிலும் அவனுடைய போட்டோ காண்பித்து விசாரித்து விட்டோம். யாரும் அவனைப் பார்த்ததாகச் சொல்லவில்லை. அங்கிருக்கும் காமிராப்பதிவுகளை நாங்களும் பார்த்து விட்டோம்.... அங்கெல்லாம் அவன் போகவில்லை.”

ஜான் ஸ்மித் கேட்டார். “அதெப்படி வெளியே வந்த ஒருவன் யாரும் பார்க்காமல் மாயமாய் மறைய முடியும்?”

அந்தப் போலீஸ் உயரதிகாரி சொன்னார். “அவன் வெளியே வந்த போது யாராவது அவனுக்காக ஒரு வாகனத்தில் காத்திருந்தார்களானால், அவன் அந்த வாகனத்தில் ஏறி போயிருந்தானானால் அவனை வேறு யாரும் பார்த்திருக்க வழியில்லை....”

ஜான் ஸ்மித் பிரச்சினை பெரிதாவதை மெல்ல உணர்ந்தார்.

(தொடரும்)

என்.கணேசன்

இல்லுமினாட்டி 6

டேனியல் என்ற போதை மனிதனை அழைத்துப் போக மருத்துவமனைக்கு வெளியே யாரும் காத்துக் கொண்டிருக்க வழியே இல்லை. அவனுடைய நண்பர்களோ, வேண்டப்பட்டவர்களோ இருந்திருந்தால் அவர்கள் போதையில் மயங்கி விழுந்திருந்த அவனை போலீசார் தூக்கிக் கொண்டு போய் மருத்துவமனையில் போடும் வரை காத்திருந்திருக்க மாட்டார்கள். ஒருவேளை அவன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின் அறிய நேர்ந்திருந்தால் உடனே மருத்துவமனைக்கே சென்று அவனைப் பார்த்திருப்பார்கள். தொலைக்காட்சியிலும், பத்திரிக்கைகளிலும் அறிவிப்பு வெளியிட்ட பிறகும் அவனைப் பார்க்கப் போகாமல் இருந்திருக்க மாட்டார்கள்.

அவன் மயங்கி சாகும் நிலையில் விழுந்து கிடந்த போதும், மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின் அறிவிப்புகள் வெளியிட்டபின்னும் அவனைப் பார்க்க வராதவர்கள், அவன் மருத்துவமனையிலிருந்து வெளியேறிய அந்த அதிகாலை 3.48 மணி நேரத்தில், கடுங்குளிரில் அவனுக்காகத் தயார்நிலையில் காத்திருந்திருப்பார்கள் என்பது நம்பக்கூடியதாக இல்லை.

ஜான் ஸ்மித் சொன்னார். "அவன் வெளியே போனவுடன் என்ன நடந்தது, ஏன் அதன் பிறகு யாரும் அவனைப் பார்க்க முடியவில்லை என்பது உடனே தெரிந்தாக வேண்டும். இது மிக முக்கியம்"

"ஆஸ்பத்திரிக்குப் பக்கத்துக் கட்டிடங்களில் கூட கண்காணிப்புக் காமிரா பொருத்தப்பட்டிருக்கின்றன. அதையெல்லாம் கூடப் பார்த்தால் என்ன நடந்திருக்கிறது என்பதைக் கண்டுபிடிப்பது சிரமமல்ல சார்..."

"உடனே அதைச் செய்யுங்கள்"

மறுநாள் காலை பத்தரை மணிக்கு அந்தப் போலீஸ் உயரதிகாரி ஜான் ஸ்மித் வீட்டுக்கு நேரடியாகவே வந்தார். அந்த மருத்துவமனைக்கு பக்கத்துக் கட்டிடங்களில் பொருத்தப்பட்ட கண்காணிப்புக் காமிராக்களிலிருந்தும், தெருமுனைச் சந்திப்பில் பொருத்தப்பட்ட கண்காணிப்புக் காமிராவிலிருந்தும் எடுத்த வீடியோக்களை இணைத்துக் கொண்டு வந்திருந்தார்.

மருத்துவமனை இருந்த தெருமுனைச் சந்திப்பில் இருந்த வீடியோவில் அதிகாலை 3.30க்கு ஒரு கருப்பு நிறக்கார் அந்தத் தெருவில் நுழைந்தது தெரிந்தது. மருத்துவமனையிலிருந்து இரண்டு கட்டிடங்கள் தள்ளி எதிர்ப்புறம் நின்றது இன்னொரு வீடியோவில் தெரிந்தது. அப்போது மணி 3.31. அந்தக் காரிலிருந்து யாரும் இறங்கவில்லை. காரின் கதவுக் கண்ணாடிகள் கூட இறக்கப்படவில்லை. உள்ளே யார் இருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. 3.48 லிருந்து 3.49 வரை டேனியல் நிதானமாக நடந்து சென்று, கார்க்கதவைத் திறப்பதும் காரில் ஏறுவதும் இரண்டு கட்டிடங்களிலிருந்து எடுக்கப்பட்ட வீடியோக்களில் தெரிந்தன. கதவு திறக்கப்பட்டு மூடப்படுவதற்கு முன்னான சில வினாடிகளில் கூட காரின் உள்ளே இருப்பது யாரென்று தெரியவில்லை. 3.50க்கு கார் மருத்துவமனையைக் கடந்து சென்றது.

ஜான் ஸ்மித் திகைப்போடு வீடியோக்களைப் பார்த்துக் கொண்டிருந்து விட்டுப் பின் மெல்லக் கேட்டார். "இந்த வீடியோக்களில் காரின் ரெஜிஸ்டர்டு நம்பர் தெரியவில்லை. அதைக் கண்டுபிடிக்க ஏதாவது வழி இருக்கிறதா?"

அந்தப் போலீஸ் உயரதிகாரி சொன்னார். "அதைக் கண்டுபிடிப்பது பெரிய கஷ்டமான காரியமில்லை. சுற்று வட்டாரத்தில் இருக்கும் காமிராக்களில் ஏதாவது ஒன்றில் பார்க்க முடியலாம். ஆனால் காரோட்டி வந்திருக்கும் ஆளின் உத்தேசம் தன்னைப் பற்றிய ரகசியத்தைக் காப்பது என்றிருக்குமானால் போலி நம்பர் ப்ளேட்டை மாட்டிக் கொண்டு வந்திருக்க வாய்ப்புகள் அதிகம்..."

ஜான் ஸ்மித் சிறிது நேரம் மௌனமாக யோசித்து விட்டுச் சொன்னார். "டேனியல் ஃப்ராங்பர்ட்டில் இருக்கும் அவன் நண்பர்களிடம் சென்றாலோ தொடர்பு கொண்டாலோ, வேறெங்கேயாவது தென்பட்டாலோ எனக்கு உடனடியாகத் தெரிவியுங்கள்."

"அதற்கு நான் ஏற்பாடு செய்து விட்டுத் தான் வந்திருக்கிறேன் சார்"

"நன்றி. எனக்கு இன்னொரு உதவியும் தேவைப்படுகிறது...." என்று ஆரம்பித்தவர் மருத்துவமனையில் கேட்ட கிதார் இசையைப் பற்றிச் சொன்னார். அது ஆவியை வரவழைக்கும் இசையாக அந்த இசைப்பிரியர் சொன்னதை அவர் தெரிவிக்கவில்லை. அது தேவையில்லை என்று நினைத்தார். "அந்த கிதார் இசையை வாசித்தது யார் என்று யாருக்கும் தெரியவில்லை. ஆனால் எல்லோரும் அதைக் கேட்டிருக்கிறார்கள். எனக்கேனோ அந்த கிதார் வாசித்த ஆளுக்கும் டேனியலுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கலாம் என்று உள்ளுணர்வு சொல்கிறது. அதை அந்த ஆஸ்பத்திரியில் வாசித்த ஆள் யார் என்று கண்டுபிடிக்க முடியுமா?"

"கண்டிப்பாக முயற்சி செய்கிறோம் சார்" என்ற அந்தப் போலீஸ் உயரதிகாரி வணக்கம் தெரிவித்து விட்டுக் கிளம்பினார்.

அவர் போன பிறகு ஜான் ஸ்மித் கண்களை மூடிக் கொண்டு யோசித்தார். நடந்திருப்பது எதுவும் இயல்பாகத் தெரியவில்லை. டேனியலை அழைத்துச் செல்ல யாரோ அந்த அகால நேரத்தில் வந்திருப்பது ஆச்சரியம் என்றால், அவன் வந்த சிறிது நேரத்தில் டேனியல் மருத்துவமனையை விட்டு வெளியேறியது அதைவிடப் பெரிய ஆச்சரியம். காரில் வந்திருந்தது ஒருவரா, பலரா என்று தெரியவில்லை. அவர்கள் அலைபேசியில் அவனை அழைத்திருக்க வழியில்லை. ஏனென்றால் டேனியலிடம் அலைபேசி உட்பட எதுவுமே இருக்கவில்லை. ஆனாலும் கார் வந்திருப்பது தெரிந்தது போல டேனியல் கிளம்பியிருக்கிறான். இது டேனியலின் இயல்புக்கோ நிலைமைக்கோ பொருத்தமாக இருப்பதாகத் தெரியவில்லை. டேனியலை அழைத்துச் செல்ல வந்த ஆளே அல்லது ஆட்களே கூட அந்தக் கிதார் வாசிப்புக்கும் காரணமாக இருக்கவும் வாய்ப்பு இருக்கிறது.... மேலும் அந்த மருத்துவமனையில் நடந்திருப்பது எல்லாவற்றிலும் நேற்றைய இல்லுமினாட்டிக் கூட்டத்தில் இறந்து போன அசாதாரணமான மனிதனின் அடையாளமே தெரிவது போன்ற ஒரு உணர்வு ஏற்பட்டது. யோசிக்க யோசிக்க அந்தக் குளிரிலும் அவருக்கு வியர்த்தது. நடந்திருப்பதை இல்லுமினாட்டியின் தலைமைக்குத் தெரிவித்தே ஆக வேண்டும்...

இல்லுமினாட்டியின் தலைவர் எர்னெஸ்டோவின் உதவியாளருக்கு ஜான் ஸ்மித் போன் செய்தார். எர்னெஸ்டோவும், இல்லுமினாட்டியின் உபதலைவரும் வாஷிங்டன் போயிருப்பதாகவும், நாளை தான் இருவரும் திரும்பி வருவார்கள் என்றும் அந்த உதவியாளர் சொன்னார்.

எர்னெஸ்டோ வரும் வரை காத்திருப்பதைத் தவிர ஜான் ஸ்மித்துக்கு வேறு வழியில்லை....

மறுநாள் மருத்துவமனையின் தலைமை மருத்துவர் எக்ஸைச் சேர்த்த போலீஸ்காரர்களில் ஒருவருக்குப் போன் செய்து விசாரித்தார். "அந்த எக்ஸ் பற்றி ஏதாவது தகவல் தெரிந்ததா?"

"அந்த எக்ஸின் பெயர் டேனியல் என்றும், ஃப்ராங்பர்ட்டில் வசிப்பவன் என்றும் நாங்கள் கண்டுபிடித்து விட்டோம். அவன் ஒரு ஸ்பெஷலான ஆளாய் இருப்பான் போலத் தெரிகிறது. அவனைக் கண்டுபிடிக்க மேலிடத்தில் எங்கள் டிபார்ட்மெண்டையே முடுக்கி விட்டு இருக்கிறார்கள்..."

தலைமை மருத்துவருக்கு ஆச்சரியமாக இருந்தது. "ஏன் அவன் பெயரில் பெரிய கேஸ் ஏதாவது இருக்கிறதா என்ன?"

"எங்களுக்குத் தெரிந்த வரை அப்படித் தெரியவில்லை. சின்னக் கேஸ்கள் இருக்கலாம். ஆனால் அவனோடு பெரிய ஆள் யாராவது சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று நினைக்கிறேன்...."

அவன் பெயர் தெரிந்த பிறகும் தலைமை மருத்துவருக்கு அந்தப் பெயர் அன்னியமாகவே பட்டது. அவர் மனம் இன்னும் அவனை எக்ஸாகவே நினைத்தது. இந்த எக்ஸ் விஷயத்தில் எல்லாமே குழப்பமாகவே இருக்கிறதே. அவன் எந்தப் பெரிய ஆளோடு சம்பந்தப்பட்டிருப்பான் என்று யோசித்தபடி இருந்த போது போலீஸ் உயரதிகாரி ஒருவர் மிடுக்குடன் மருத்துவமனைக்கு வந்தார். அவர் எல்லோரையும் கேட்ட கேள்விகள் முந்தாநாள் மருத்துவமனையில் கேட்ட கிதார் இசையைப் பற்றியதாக இருந்தன.

தலைமை மருத்துவரை அதுவும் ஆச்சரியப்படுத்தியது. அந்தக் கிதார் இசை அவரிடம் எழுப்பிய ஆர்வத்தை போலீஸாரிடமும் ஏற்படுத்தி இருக்கும் என்று அவர் எதிர்பார்த்திருக்கவில்லை. அப்படியானால் அதிலும் ஏதோ இருக்கிறது. ஏன் இந்த மருத்துவமனையில் என்னென்னவோ நடக்கிறது. எல்லாமே அமானுஷ்யமாக எல்லாம் நடக்கிறது.....

அந்த உயர் போலீஸ் அதிகாரி ஒரு மணி நேரம் தான் அந்த மருத்துவமனையில் இருந்தார். அவர் தலைமை மருத்துவர் உட்பட பலரிடம் அந்த இசை கேட்ட விதம், இடம் பற்றி கேள்விகள் கேட்டார். அவர்கள் சொன்னதை எல்லாம் கூர்ந்து கவனித்துக் கேட்டுக் கொண்ட அவர் பிறகு போய் விட்டார்.

அந்தப் போலீஸ் உயரதிகாரி அடுத்த ஐந்தாவது நிமிடம் ஜான் ஸ்மித்துக்குப் போன் செய்து சொன்னார். "சார். உண்மையில் யாரும் அந்தக் கிதார் இசையை அந்த ஆஸ்பத்திரிக்குள் வாசித்த மாதிரி தெரியவில்லை. ரிகார்ட் செய்த இசையை யாரோ ஆஸ்பத்திரிக்குள் ஒலிக்க விட்டிருக்கலாம் என்றே தோன்றுகிறது. இப்போது சவுண்ட் டெக்னாலஜி நிறைய முன்னேறி இருக்கிறது. அது எங்கிருந்து கேட்கிறது என்று தெரியாதபடி மறைத்து ஒட்டு மொத்தமாகக் கேட்பது போல் ஒலிக்க வைக்க முடியும். அது அங்கே நடந்திருக்க வாய்ப்பு அதிகம்..."

ஜான் ஸ்மித் திகைத்தார். அப்படியானால் டேனியலை அழைத்துப் போக வந்தது மட்டுமல்லாமல் முந்தின நாளே வந்து அந்த மருத்துவ மனையில் திட்டமிட்டு நுழைந்து யாரோ அந்தக் கிதார் இசையை ஒலிக்கவும் விட்டிருக்கிறார்கள். யாரது?

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, August 1, 2019

இல்லுமினாட்டி 7

இல்லுமினாட்டியின் தலைவரான எர்னெஸ்டோ வாஷிங்டன் பயணத்தை முடித்துக் கொண்டு ம்யூனிக் விமான நிலையத்தில் இறங்கிய போது அவர் அலைபேசியில் தகவல் வந்தது. "உங்கள் வீட்டில் ஜான் ஸ்மித் உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்"

எர்னெஸ்டோ ஏதோ ஒரு பிரச்சினையான தகவல் காத்துக் கொண்டிருப்பதை உணர்ந்தார். நேற்றும் ஜான் ஸ்மித் அவரைக் கேட்டு போன் செய்ததாக உதவியாளர் தெரிவித்திருந்தார். இன்று நேரடியாகவே பேச ஜான் ஸ்மித் காத்துக் கொண்டிருக்கிறார் என்றால் மிக அவசரத் தகவலாகத் தான் இருக்க வேண்டும் என்பது எர்னெஸ்டோவுக்குப் புரிந்தது. ஏனென்றால் மூளை விஞ்ஞானியான ஜான் ஸ்மித் வீணாக்கும் அளவுக்குக் காலம் இல்லாதவர்...

எர்னெஸ்டோவின் அரண்மனை போன்ற பங்களா பல அடுக்குகள் பாதுகாப்புகள் கொண்டது. இல்லுமினாட்டியின் உயர்மட்ட உறுப்பினர்களைத் தவிர மற்ற உறுப்பினர்களே கூட முன் அனுமதி பெறாமல் அங்கே நுழைய முடியாது. முன் அனுமதி பெறுவதும் அவ்வளவு சுலபமல்ல. மற்ற சாதாரண உறுப்பினர்களே கூட, சந்திக்கவிருக்கும் காரணத்தை எழுத்து மூலம் அனுப்பிக் காத்திருக்க வேண்டும். அது பின் எர்னெஸ்டோவின் பார்வைக்குப் போகும். அதைப் பார்த்து அவசியம் என்று கருதினால் மட்டுமே அவர் சந்திக்க அனுமதி அளிப்பார். மற்ற வெளியாட்கள் எத்தனை சக்தி வாய்ந்த ஆட்களானாலும் அவரைச் சந்திக்க விரும்பினால் அவருடைய உதவியாளருக்கு காரணத்தோடு வேண்டுகோள் விடுக்க வேண்டும். அவர் அனுமதிக்கத் தகுந்த காரணங்கள் உள்ளதாக நினைத்தால் தான் அந்த வேண்டுகோளை எர்னெஸ்டோவின் பார்வைக்கே அனுப்பி வைப்பார். இப்படி எத்தனையோ சக்தி வாய்ந்த பிரபல மனிதர்கள் எர்னெஸ்டோவைச் சந்திக்க இப்போதும் அனுமதிக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். காரணம் இல்லுமினாட்டியின் தலைமைப் பதவி அமெரிக்க ஜனாதிபதியின் பதவிக்குச் சற்றும் குறைந்ததல்ல. சொல்லப் போனால் இரு அவைகளிலும் பெரும்பான்மை ஆதரவு பெற்றவராக இருக்கும் ஒரு அமெரிக்க ஜனாதிபதியை விடவும் சக்தி வாய்ந்த பதவியாக இல்லுமினாட்டியின் தலைமைப் பதவி இருந்தது.

விமானத்தில் பயணித்த போதும் சரி, விமானநிலையத்திலிருந்து தன் அரண்மனை போன்ற பங்களாவுக்கு வந்து சேரும் வரையும் சரி பல அடுக்குப் பாதுகாப்பில் இருந்த எர்னெஸ்டோ தன் வரவேற்பு அறையில் காத்திருந்த ஜான் ஸ்மித்தைப் பார்த்துப் புன்னகையுடன் சொன்னார். "நீண்ட பயணம் முடித்து வரும் இந்தக் கிழவனுக்கு நீ ஓய்வு தர மறுக்கிறாய் ஜான் ஸ்மித். இது நியாயமல்ல...."

"மிக முக்கியமான விஷயமாக இல்லா விட்டால் நான் உங்களைத் தொந்திரவு செய்திருக்க மாட்டேன் தலைவரே" என்று ஜான் ஸ்மித் எழுந்து நின்று சொன்னார்

"உட்கார். எதுவாக இருந்தாலும் சுருக்கமாகச் சொல் பார்ப்போம்..." என்று சொன்னபடி எர்னெஸ்டோ சோபாவில் அமர்ந்தார்.

எர்னெஸ்டோ என்றுமே நீண்ட பிரசங்கங்களையும், விவரிப்புகளையும் சகித்துக் கொண்டதில்லை. அதற்கு அவரிடம் நேரமுமில்லை. விஷயமில்லாமல் வள வளவென்று பேசினால், பேசப் பேசப் பாதியில் எந்தச் சங்கடமும் இல்லாமல் எழுந்து உள்ளே போய் விடக்கூடியவர் அவர். அதனால் அவரைச் சந்திக்க வருபவர்கள் தாங்கள் சொல்ல வந்ததைச் சுருக்கமாகச் சொல்ல தங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டே வருவார்கள்.

ஜான் ஸ்மித் சொன்னார். "மூன்று நாள் முன்பு நம் கூட்டத்தில் ஒருவன் இறந்து போன அதே நேரத்தில் அந்தத் தெருவில் இருக்கும் மருத்துவமனையில் இறந்து கொண்டிருந்த ஒரு போதை மனிதன் பிழைத்துக் கொண்டிருக்கிறான் தலைவரே. பிழைத்தவன் தலைமறைவாகியும் விட்டான்...."

எர்னெஸ்டோவின் பார்வை கூர்மையாகியது. "தற்செயலாகச் சில அதிசயங்கள் மனித வாழ்க்கையில் நடப்பதுண்டு ஜான் ஸ்மித்."

"உண்மை. ஆனால் தற்செயலாய் ஒரே நேரத்தில் பல அதிசயங்கள் நடந்தால் அதைத் தற்செயல் என்று நினைப்பது தவறல்லவா தலைவரே"

எர்னெஸ்டோ தலையசைத்தார். "சரி நடந்ததை விளக்கமாகச் சொல்...."

ஜான் ஸ்மித் எல்லாவற்றையும் சொன்னார். எர்னெஸ்டோ இடைமறிக்காமல் கேட்டுக் கொண்டார். உணர்ச்சிகள் எதையும் வெளியே காண்பிக்காமல் எல்லாவற்றையும் கேட்டுக் கொள்ளும் அவர், கேட்கும் விஷயங்களுக்கு அதிகமாய் முக்கியத்துவம் தருவது போல வெளியே தெரியா விட்டாலும் அவருடைய கூர்மையான அறிவுக்கு எதுவும் தப்பாது என்பதை ஜான் ஸ்மித் அறிவார். அதை உறுதிப்படுத்துவது போல் எர்னெஸ்டோ கடைசியில் கேட்டார். "நீ முக்கியமாய் அவனுடைய மூளை ஸ்கேன் ரிப்போர்ட்கள் பார்த்துத் தான் சந்தேகப்படுகிறாய் போல் தெரிகிறது. அந்த ஸ்கேன் ரிப்போர்ட்களில் என்ன அதிசயத்தைப் பார்த்தாய் ஜான் ஸ்மித்..."

ஜான் ஸ்மித்தால் திகைக்காமல் இருக்க முடியவில்லை. அவர் சொல்லும் போது டேனியலின் உடல்நிலையில் முன்பும், பின்பும் ஏற்பட்ட ஏற்பட்ட மாற்றங்கள் ஆச்சரியப்படும்படி ரிப்போர்ட்களில் தெரிந்தன என்று எல்லா ரிப்போர்ட்களையும் சேர்த்துப் பொதுவாகத் தான் சொல்லியிருந்தார். எர்னெஸ்டோ மூளை ஸ்கேன்களை மட்டும் குறிப்பாகக் கேட்டது ஜான் ஸ்மித் மூளை விஞ்ஞானி அதனால் அதில் ஏதாவது வித்தியாசமாய் பார்த்திருக்கலாம் என்ற அனுமானத்தாலா இல்லை வேறெதாவது காரணம் இருக்குமா என்று ஜான் ஸ்மித்தால் கணிக்க முடியவில்லை.

ஜான் ஸ்மித் தன் ப்ரீஃப்கேஸில் கொண்டு வந்திருந்த ஸ்கேன் ரிப்போர்ட்களின் படங்களை வெளியே எடுத்துக் காண்பித்து விளக்கினார். "டேனியலின் முந்தைய மூளை ஸ்கேன்களைப் பாருங்கள் தலைவரே.... அவை மூளை செயல் இழந்து கொண்டே வருவதைத் தான் காட்டுகின்றன. படிப்படியாக மரணத்தை எட்டும் மனிதனின் மூளையின் தன்மையையே அவை தெளிவாகத் தெரிவிக்கின்றன. இவை அவன் பிழைக்க ஆரம்பித்த போது எடுக்கப்பட்ட ஸ்கேன் ரிப்போர்ட்கள். இவை அதிகபட்ச செயல் திறனைக் காட்டுகின்றது. இது அறிவியல் அதிசயம் தான். காரணம் அப்படி ஒருவேளை ஒருவன் ஏதாவது ஒரு அதிசயத்தால் உயிர் பிழைக்கிறான் என்றாலும் கூட அவன் உயிர் பிழைத்து நலமாவதற்கு வேண்டிய செயல்கள் தான் மூளையில் மெல்லத் தெரிய வரும். இப்படி ஒரே நேரத்தில் மூளையின் அத்தனை பகுதிகளும் படபடவென்று வேலை செய்யாது.... அதுவும் சில பகுதிகள் டேனியல் தன் வாழ்க்கையில் இது வரை உபயோகித்தே இருக்காத பகுதிகள்.... அது சாத்தியமே அல்ல.... அவன் அது வரை ஆர்வமே காட்டியிருக்காத விஷயங்களைக் குறிக்கிற, உபயோகப்படுத்தியே இருக்காத, பகுதிகளின் உச்சக்கட்ட வேலைகள் மூளையில் நடப்பது இது வரை யாரும் பார்த்திருக்காத அதிசயம் தான்.... உதாரணத்துக்குச் சொல்ல வேண்டுமானால் அதிக ப்ரோகிராம்கள் இருந்திருக்காத ஒரு பழைய கம்ப்யூட்டரில் பல புதிய ப்ரோகிராம்களை வேகமாக ஏற்றுவது போலான முயற்சி அது...."

எர்னெஸ்டோ கேட்டார். "அந்தப் புதிய ப்ரோகிராம்கள் எது சம்பந்தமானவை என்று எனக்குப் புரிகிற மாதிரி எளிமையாகச் சொல்ல முடியுமா ஜான் ஸ்மித்?"

ஜான் ஸ்மித் சொன்னார். "அமானுஷ்ய சக்திகள், யோகசக்திகள்.... அவற்றை உபயோகிக்கும் போது மூளையின் எந்தப் பகுதிகள் எல்லாம் செயல்பாடுகளைக் காண்பிக்குமோ அந்தப் பகுதிகள் எல்லாம் டேனியலின் மூளையில் புதியதாகச் செயலாக்கம் பெற்றிருக்கின்றன"

எர்னெஸ்டோ திகைத்தார். இந்தத் தகவல் தான் டேனியல் என்ற போதை மனிதன் உயிர் பிழைத்ததுடன் தலைமறைவானதை ஆபத்தாக அறிவிக்கின்றது என்பது அவருக்குப் புரிந்தது. அது நிச்சயமாக ஜான் ஸ்மித் சந்தேகிப்பதைப் போல அந்த அசாதாரண மனிதனின் அடையாளம் தான்....

அவர் கண்களை மூடி இரண்டு நிமிடங்கள் யோசித்தார். ஒரு புதிய உறுப்பினர் இல்லுமினாட்டியில் இணைக்கப்படும் போது அந்த உறுப்பினர் குறித்த எல்லாத் தகவல்களையும் பல தரப்பிலிருந்து இல்லுமினாட்டியின் மிகச் சக்தி வாய்ந்த உளவுத்துறை சேகரித்துக் கொள்ளும். இந்த விஷயத்தில் இல்லுமினாட்டிக்கு ஆயிரம் கண்கள், ஆயிரம் காதுகள், ஆயிரம் கைகள். அப்படி அவர்கள் அவனைப் பற்றிப் பெற்றிருருக்கிற தகவல்களின் படி அந்த அசாதாரண மனிதன் பல ஆட்களைத் தன் வேலைகளுக்குப் பயன்படுத்தி இருக்கின்றான் என்றாலும் அது ஒரு எஜமானன் கூலித் தொழிலாளிகளைப் பயன்படுத்தும் வகையான தொடர்புகள் தான். மற்றபடி அவன் தனியனே. அவனுக்குக் கூட்டாளிகள் யாரும் கிடையாது. ஆனால் நடந்திருக்கும் சம்பவங்கள் ஒரு கூட்டாளியும் இருப்பதாகச் சொல்கின்றனவே.

இப்படி இறக்க நேரிடும் என்று அவன் அறிய வாய்ப்பே இல்லை. ஏனென்றால் பூரண ஆரோக்கியத்துடனும் சக்தியுடனும் இருந்தவன் அவன். இல்லுமினாட்டியும் கூட எதிர்பார்க்காத நிகழ்வு அது. அப்படி இருக்கையில் அவன் இதை எதிர்பார்த்து வேறெந்த ஏற்பாடுகளையும் செய்திருக்க முடியாது என்பது நிச்சயம். அவன் ம்யூனிக் வந்த போது அவனுடன் யாரும் வரவில்லை என்பதும் அவர்கள் நிச்சயமாக அறிந்து கொண்ட உண்மை. அப்படி இருக்கையில் நடந்திருக்கும் சம்பவங்கள் இல்லுமினாட்டிகே ஒரு சவாலாக இருக்கின்றன.

எர்னெஸ்டோ கேட்டார். "அவனை அழைத்துச் சென்றது யாராக இருக்கும் என்று ஏதாவது யூகங்கள் உன்னிடம் இருக்கிறதா ஜான் ஸ்மித்"

"இல்லை தலைவரே. ஆனால் இல்லுமினாட்டியால் கண்டுபிடிக்க முடியாத ஆளோ, தகவலோ இந்த உலகில் இருக்க முடியுமா என்ன?" என்று நம்பிக்கை மிகுந்த தொனியில் ஜான் ஸ்மித் கேட்டார்.

"உண்மை தான். ஆனால் இது வரை யூகிக்கக்கூட முடியாத நிலைமையும் இல்லுமினாட்டிக்கு வந்ததில்லையே ஜான் ஸ்மித்" என்று எர்னெஸ்டோ யோசனையுடன் சொன்னார்.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, August 8, 2019

இல்லுமினாட்டி 8

ஜான் ஸ்மித் சென்ற பிறகும் எர்னெஸ்டோ ஓய்வெடுக்கவில்லை. நடந்திருக்கும் சம்பவங்கள் அவரை ஓய்வெடுக்க அனுமதிக்கவில்லை. அவர் கம்ப்யூட்டரில் விஸ்வம் என்ற பெயரில் அவர் சேகரித்து வைத்திருந்த எல்லாத் தகவல்களையும் ஆழ்ந்து இன்னொரு முறை படித்துப் பார்த்தார். அந்தத் தகவல்களுடன் இப்போது கிடைத்திருக்கும் தகவல்களையும் சேர்த்துப் பார்த்தால் இப்போதைய தகவல்கள் அதிக ஆச்சரியமாகத் தெரியவில்லை. என்ன மனிதனிவன் என்ற பிரமிப்பு தான் அவருக்கு இறுதியாக மிஞ்சியது.

இரண்டு மாதங்களுக்கு முன்பு அவரிடம் யாராவது இப்படி ஒரு மனிதன் இருக்கிறான் என்று சொல்லியிருந்தால் அவர் அதைக் கட்டுக்கதை என்று சொல்லியிருப்பார். அவன் இல்லுமினாட்டி உறுப்பினர் ஆவான் என்று சொல்லியிருந்தால் அதன் தலைவரான அவர் அதைப் பரிகசித்திருப்பார். ஆனால் அப்படி ஒரு மனிதன் இருப்பது தெரிய வந்தது. அவன் இல்லுமினாட்டியின் உறுப்பினர் ஆனது நிஜமாகியது. அதன் பின் எத்தனையோ எதிர்பாராதத் திருப்பங்கள், திகைப்பான நிகழ்வுகள் நடந்தன. மூன்று நாட்களுக்கு முன் எல்லாம் ஒரு வழியாக முடிந்து இயல்பு நிலைக்கு எல்லோரும் திரும்பியது போல் இருந்தது. ஆனால் அவன் சம்பந்தப்பட்ட பிறகு எதுவுமே இயல்பு நிலை இல்லை என்பது போல மீண்டும் என்னென்னவோ நடந்து விட்டது.

அவர் அறைச் சுவரில் ஒரு பிரமிடுக்குள் விழி இருக்கும் அந்தச் சின்னத்தைத் தவிர வேறு படங்களோ ஓவியங்களோ இருக்கவில்லை. எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கும் விழி! அந்த விழி இல்லுமினாட்டியின் சின்னம். அந்த விழி எப்போதுமே இமைப்பதில்லை. அதனால் அந்த இமைக்கும் நேரத்தில் கூட அதன் பார்வைக்கு எதுவும் தப்பி விடும் வாய்ப்பில்லை. அதையே அவர் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் மனம் அந்த விழியிடம் கேட்டது. “எல்லாம் பார்க்கும் விழியே. நீ இப்போது நடப்பதனைத்துமே கூட பார்த்துக் கொண்டிருப்பாயே. என்ன நடக்கிறது? நடப்பதைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?”

அந்த விழியிடம் இருந்து பதில் இல்லை.

இல்லுமினாட்டி என்ற அமைப்பு பதினெட்டாம் நூற்றாண்டில் ஜெர்மனியின் பவேரியாவில் ஆரம்பிக்கப்பட்டது. அறிவே பிரதானம், அதுவே சக்தி, அதன்படி வாழ்வதே சிறப்பு என்ற சித்தாந்தத்தில் ஆரம்பிக்கப்பட்ட இல்லுமினாட்டி மூடநம்பிக்கைகளையும், அப்போதைய அரசாட்சியின் அநீதியையும் உறுதியாக எதிர்த்து நின்றது. அப்போதைய பவேரிய மன்னரும், கத்தோலிக்க திருச்சபையும் சேர்ந்து இல்லுமினாட்டி அமைப்புக்குத் தடைவிதித்தார்க்ள். ஆனாலும் இல்லுமினாட்டி ரகசியமாக இயங்கி வந்தது. அந்தக் காலக்கட்டத்தில் அதே சித்தாந்தத்தில் சில வித்தியாசங்களுடன் ஃப்ரீ மேசன், ரோசிக்ரூசியன் என்ற அமைப்புகளும் இயங்கிக் கொண்டிருந்தன. அவையும் அரசாங்கங்களின் தணிக்கைக்குத் தப்பவில்லை. பின்னொரு காலக்கட்டத்தில் அந்த இரண்டு அமைப்புகளின் சிறந்த அறிவு ஜீவிகளும் இல்லுமினாட்டியில் ஒன்று சேர்ந்தார்கள். அப்படிச் சேராமல் தனித்தனியாகவே மீதமுள்ள உறுப்பினர்களால் ஃப்ரீ மேசன், ரோசிக்ரூசியன் அமைப்புகள் அதே பெயர்களில் தொடர்ந்தாலும் இல்லுமினாட்டி கூடுதல் பலத்துடன் ரகசியமாக இயங்க ஆரம்பித்தது. பேரறிவு, அதிகார பலம் இந்த இரண்டுமே இல்லுமினாட்டியின் நோக்கமும், வழியுமானது. எத்தனையோ சறுக்கல்கள், தாழ்நிலைகள் வந்த போதும் இல்லுமினாட்டி அழியாமல் தன்னைப் பலப்படுத்திக் கொண்டே வந்தது. வெளிப்பார்வைக்கு வராமலேயே அது ஒரு சக்தி மையமாக உருவாக ஆரம்பித்தது. இல்லுமினாட்டியின் உறுப்பினர்கள் தங்கள் இல்லுமினாட்டி இணைப்பை வெளிக்காட்டாமலேயே பல அரசுகளின் நிர்வாகத்திலும், அதிகாரத்திலும் பங்கு பெற ஆரம்பித்தார்கள். பல்வேறு துறைகளிலும் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்த ஆரம்பித்தார்கள். அவர்கள் ஆதிக்கம் உலகத்தின் பல பகுதிகளிலும் வேரூன்ற ஆரம்பித்தது.

இல்லுமினாட்டியின் அறிஞர்கள் பலரும் ரகசியக்கலைகளிலும் ஆர்வமும், பாண்டித்தியமும் கொண்டிருந்தார்கள். அவர்களது கோயில்கள் மேசன் கோயில்களாகப் பல பகுதிகளில் கட்டப்பட்டன. அந்தக் கோயில்களில் எத்தனையோ ரகசியத் தகவல்கள் பல விதங்களில் வைக்கப்பட்டன. சிற்பங்களாக, வரைபடங்களாக, பெட்டகங்களாக, ரகசியக்குறியீடுகளாக அவை வைக்கப்பட்டன.

ஆரம்பித்து கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டு காலம் கழித்து கெடுபிடிகளும் அதிகமாகி, தகுதி வாய்ந்த உறுப்பினர்களும் குறைய ஆரம்பித்த போது அப்போதிருந்த அறிஞர்கள் கவலை அடைந்து ஆரகிள் என்று சொல்லப்படும் தெய்வீகசக்தி வாய்ந்த, எதிர்காலத்தை முன்கூட்டியே கண்டு சொல்லக்கூடிய ஒரு பெண்மணியிடம் குறி கேட்ட போது அவள் “எத்தனை அடக்குமுறை இருந்தாலும் இப்போதைக்கு இதற்கு அழிவில்லை. இது ரகசியமாய் சக்தி பெற்றுக் கொண்டே வளர்ந்து வந்து உலகத்தையே மறைமுகமாய் ஆளும். இதற்கும் உலகிற்குமே அழிவை ஏற்படுத்தக்கூடிய சூழல், ஒன்றே கால் நூற்றாண்டு கழித்து உருவாகும். அப்போது காப்பாற்றி வழிநடத்த தேர்ந்தெடுக்கப்பட்டவன் ஒருவன் வருவான்” என்கிற வகையில் சொல்லி அவனைப் பற்றிய குறிப்பையும் இப்படிச் சொன்னது.

“உயர் சக்தியால் தேர்ந்தெடுக்கப்பட்டவன் தேஜஸுடன் இமயமலைக்குத் தெற்கில் இருந்து வருவான். எல்லாம் பார்க்கும் விழி அவனை அடையாளம் காட்டி உணர்த்தும். எது சரியென்றும் எது வழியென்றும் உணர்த்தி அவன் வழி காட்டுவான். உய்யும் வழி அது ஒன்றே. அன்றேல் அழிவது உறுதி”

உடனே அதை அப்போதைய இல்லுமினாட்டியின் தலைவர் ஒரு சுவடியில் எழுதி வைத்துக் கொண்டார். எதிர்காலத் தலையெழுத்தை நிர்ணயிக்கும் குறிப்புகள் என்பதால் அவற்றை 1892 ஆம் ஆண்டு அமெரிக்காவில் சிகாகோ நகரில் 21 மாடிகள் கொண்ட மிகப்பெரிய மேசன் கோயிலைக் கட்டுகையில் அதன் அஸ்திவாரத்தில் ஒரு இரகசியப் பெட்டகத்தில் வைத்துப் புதைத்து அதன் மீது கோயிலைக் கட்டினார்கள். அது தான் அக்காலத்தில் உலகிலேயே மிகப்பெரிய மேசன் கோயிலாக இருந்தது. காலச்சூழ்நிலையாலும், சில ரகசியக் காரணங்களாலும் 1939 ஆம் ஆண்டு அந்தக் கோயில் இடிக்கப்பட்டது. அப்போது அந்த ரகசியப் பெட்டகம் அஸ்திவாரத்திலிருந்து எடுக்கப்பட்டு வாஷிங்டனில் இருந்த இல்லுமினாட்டியின் ரகசியக் கருவூலத்தில் பத்திரமாக வைத்தார்கள்.

ஆரகிள் சொன்னபடி இல்லுமினாட்டியின் பலம் கூடிக் கொண்டே வந்தது. உலகத்தையே கிட்டத்தட்ட மறைமுகமாக ஆளும் நிலை உருவாகியது. அதிகார பலமும், வல்லமையும் கூடிவிட்ட பிற்காலத்து இல்லுமினாட்டி உறுப்பினர்களுக்கு பழங்கால ஆரகிளின் எச்சரிக்கை அறிவிக்கப்பட்டாலும் அது பழங்காலக் கற்பனைக் கதை என்றே தோன்ற ஆரம்பித்தது. அவர்களை மீறி உலகத்தின் வலிமையான அரசாங்கங்கள் இயங்காமல் பார்த்துக் கொள்ளும் அளவு வலிமை பெற்றிருந்த அவர்கள் தங்களை அனுசரிக்காதவர்களையும், எதிர்ப்பவர்களையும் களத்திலிருந்தே அப்புறப்படுத்தினார்கள். அவர்களை எதிர்ப்பவர்கள் இருக்கிற இடம் தெரியாமல் போய்க் கொண்டிருந்ததால் தங்களுக்கு அழிவு வரும் என்பதை நம்பாத ஒரு புதிய தலைமுறை இல்லுமினாட்டியில் தலையெடுக்க ஆரம்பித்தது. இல்லுமினாட்டியில் இருந்த பழைய தலைமுறையினரும் அந்த எச்சரிக்கையில் மெல்ல நம்பிக்கை இழக்க ஆரம்பித்திருந்தார்கள்.

இல்லுமினாட்டியின் உண்மை பலம் உலகத்தின் பார்வைக்குத் தெரியாதபடி பல கட்டுக்கதைகளும், போலி அமைப்புகளும் உருவாக ஆரம்பித்தன. உண்மையின் சாயல் கொண்ட கட்டுக்கதைகள் என்ன பெரிதாக நடந்தாலும் அது இல்லுமினாட்டியின் சதி, ஆதிக்கம் என்று சொல்லியபடி வலம் வந்தன. நாங்கள் தான் இல்லுமினாட்டி என்று பல போலி அமைப்புகள் வேடிக்கை காட்டின. இதெல்லாம் அதிகமானது இல்லுமினாட்டிக்கு அனுகூலமாகவே அமைந்தது. போலிகளுக்கு மத்தியில் உண்மையான இல்லுமினாட்டி சத்தமில்லாமல் அதிகார வல்லமையோடு விளங்கியது.

கூர்மையான பேரறிவும், ஏராளமான சொத்துக்களும், செல்வங்களும் கொண்ட ஜெர்மானியரான எர்னெஸ்டோ தன் 61 வது வயதில் இல்லுமினாட்டியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருக்கு முன்னதாக இல்லுமினாட்டியின் தலைவராக இருந்தவர் ஒரு அமெரிக்கர். பதினைந்து ஆண்டுகள் இல்லுமினாட்டியின் தலைவராக இருந்து உடல்நலக்குறைவால் கடைசியில் ஓய்வு பெற்றவர். அவரும் சிறந்த நிர்வாகி. இல்லுமினாட்டியின் பல ரகசிய ஆவணங்களை எர்னெஸ்டோவிடம் அதிகாரபூர்வமாக ஒப்படைத்த போது அவர் சொன்னார்.

"எர்னெஸ்டோ இரண்டு விஷயங்களை உன்னிடம் இந்தக் கட்டத்தில் தனிப்பட்ட முறையில் சொல்ல ஆசைப்படுகிறேன். ஒன்று அறிவுரை, இன்னொன்று வேண்டுகோள். அறிவுரை என்னவென்றால் எந்த நிலையிலும் கர்வம் கொள்ளாதே. கர்வம் அழிவுக்கான விதை என்பதை மறந்து விடாதே. வேண்டுகோள் என்னவென்றால் சுமார் இருபத்தைந்து வருடங்கள் கழித்து இந்த இயக்கமும், உலகமும் அழியும் நிலைமை வரும் என்று ஆரகிள் சொல்லி இருக்கிறது. அது சொல்லி இது வரை எதுவும் பலிக்காமல் போனதில்லை என்பது நம் முன்னவர்களின் அனுபவம். அப்படி நம் இயக்கமும், உலகமும் அழிவது போல் எதுவும் நடக்க அனுமதித்து விடாதே...."

எர்னெஸ்டோ அந்த இரண்டையும் மறக்கவில்லை. தன்னம்பிக்கையை கர்வமாக மாற அவர் என்றுமே அனுமதித்ததில்லை. அதே போல் அழிவு வரும்படியான செயல்களில் இயக்கம் நிதானம் இழந்து ஈடுபட அனுமதித்ததுமில்லை. சரியாக இருபத்தைந்து வருடங்கள் தலைவராக இருந்த அவர் தன் எண்பத்தியாறாம் வயதில் ஓய்வு பெற விரும்பிய போது ஆரகிள் சொன்னபடி இமயத்தின் தெற்கில் இருந்து வருகை இருந்தது. ஆனால் வந்தது ஒருவரல்ல. இருவர்.

இல்லுமினாட்டியைத் தடுமாற வைக்கும் சம்பவங்கள் நடக்க ஆரம்பித்தன.

(தொடரும்)
என்.கணேசன்

Thursday, August 15, 2019

இல்லுமினாட்டி 9

இமயத்தின் தெற்குப் பகுதியிலிருந்து வந்த முதலாமவன் விஸ்வம் என்ற பெயருடையவன். அவனை முதலில் சந்தித்த இல்லுமினாட்டி உறுப்பினர் இந்தியாவைச் சேர்ந்த நவீன்சந்திர ஷா என்பவன். உலக வங்கியின் வைஸ் பிரசிடெண்டாக இருக்கும் அவன் இந்தியா சென்றிருந்த போது ஓஷோவின் ஒரு வாரத் தியான வகுப்பில் விஸ்வத்தைச் சந்தித்தான். விஸ்வத்துக்கு நவீன்சந்திர ஷா ஒரு இல்லுமினாட்டி என்று தெரிந்திருக்க வாய்ப்பே இல்லை. தன்னிடம் இருக்கும் அபூர்வ சக்திகளை லேசாக வெளிப்படுத்திய விஸ்வம் அந்தச் சமயத்தில் நவீன்சந்திர ஷாவிடம் சிறுவயதிலிருந்தே தனக்கு வரும் கனவைப் பற்றித் தெரிவித்தான்.

“ஏதோ ஒரு பெரிய பிரம்மாண்டமான கட்டிடம்.... அதன் அஸ்திவாரத்தில் ஒரு பெட்டி இருக்கிறது..... பெட்டியின் மீது ஒரு பிரமிடும் அதன் நடுவில் ஒரு கண்ணும் கொண்ட படம் தெரிகிறது. அந்தக்கட்டிடம் இடிக்கப்பட்டு சிலர் அந்தப் பெட்டியைக் கண்டுபிடித்துத் திறந்து பார்க்கிறார்கள். ஒரு பழங்காலச் சுவடி இருக்கிறது. யாரோ சொல்கிறார்கள். “இதில் உன்னைப் பற்றிச் சொல்லி இருக்கிறது”. அதோடு நான் விழித்துக் கொள்கிறேன். எனக்கு இந்தக் கனவில் எதுவுமே புரியவில்லை. ஆனாலும் என் ஏழாவது வயதில் இருந்து வருடத்துக்கு ஒரு தடவையாவது இந்தக் கனவு வருகிறது....” அதோடு ஏதோ ஒரு ரகசிய சக்தி இயக்கத்தில் சேர் என்று ஆழ்மனதில் ஒரு குரல் தனக்கு அடிக்கடிச் சொல்வதாகவும் சொன்னான்.

அதைக் கேட்டவுடன் ஆரகிள் எச்சரிக்கையும், சிகாகோ மேசன் கோயிலும் நினைவுக்கு வர நவீன்சந்திர ஷா இல்லுமினாட்டியின் தலைமைக்குழு ஐவரில் ஒருவருக்கு அதைத் தெரிவித்தான். இல்லுமினாட்டியின் தலைமைக்குழு அவனிடம் இல்லுமினாட்டி இயக்கம் குறித்து எதையும் சொல்ல வேண்டாம் என்று எச்சரித்து அவனைக் கூர்ந்து கவனித்து வரும் படி அறிவுறுத்தியது. நவீன்சந்திர ஷா அப்படியே தன் புதிய நண்பனைக் கவனித்தான். தியான வகுப்பின் கடைசி நாளில் பேச எழுந்த ஒரு பேச்சாளரை பேச விடாமல் சிறிது நேரத்திற்குப் பேசும் சக்தியை இழக்க வைத்தும், தியானம் பற்றிப் பேச எழுந்த ஒரு இளைஞனை காதல் பற்றிப் பேச வைத்தும் விஸ்வம் நவீன்சந்திர ஷாவை ஆச்சரியப்படுத்தினான்.

அதையும் நவீன்சந்திர ஷா இல்லுமினாட்டிக்குத் தெரிவிக்கவே இதில் ஏதும் தில்லுமுல்லு இல்லை என்பதை உறுதி செய்ய வேறிரண்டு உறுப்பினர்களை லண்டனுக்கு இல்லுமினாட்டி அனுப்பி வைத்தது. விஸ்வத்தையும் லண்டனுக்கு வரவழைத்தார்கள். அங்கும் அவர்கள் இருவர் மனதில் வித்தியாசமாக நினைத்ததையும் விஸ்வம் கண்டுபிடித்துச் சொல்லி அசத்தினான். அவன் கனவும், அவன் சக்திகளும் சேர்ந்து ஆரகிள் சொன்ன ஆள் அவனே என்று அடையாளம் காட்டுவதாக அவர்களும் சொன்னார்கள். இந்தியாவில் ஒரு ரகசிய ஆன்மீக இயக்கத்தில் இருந்த அவன் அந்த இயக்கத்தின் பெரும் நிதியையும் இல்லுமினாட்டிக்கு அனுப்பி இல்லுமினாட்டியுடன் இணைந்து கொண்டான். புதிய உறுப்பினரான விஸ்வம் இல்லுமினாட்டியின் பல உறுப்பினர்கள் மனதில் பிரமிப்பை ஏற்படுத்தினான்.

அதற்குச் சில நாட்களுக்கு முன் ஏலியன் ஒன்றின் வரவை இஸ்ரோ விஞ்ஞானிகள் பதிவு செய்தார்கள். அவர்களது செயற்கைக் கோள் எடுத்தப் புகைப்படங்களில் அந்த ஏலியன் தமிழக அமைச்சர் ஒருவரின் மகனும், ஒரு ஜீனியஸுமான க்ரிஷ் என்ற இளைஞனைத் தொடர்பு கொண்டதும் பதிவாகி இருந்தது. அந்த இளைஞன் அதைப்பற்றி யாரிடமும் எதுவும் தெரிவிக்கவில்லை. உலக முக்கிய நிகழ்வுகள் எதிலும் முழு விவரங்களை உடனடியாகப் பெறுவதில் என்றுமே தாமதிக்காத இல்லுமினாட்டி அவனிடம் பேசி நடந்த தகவல்களை அனைத்தையும் பெற்று வரும்படி தங்கள் இல்லுமினாட்டி உறுப்பினரும், இந்திய செயற்கைக் கோள் மற்றும் வானியல் ஆராய்ச்சிகளுக்கு சிறப்பு ஆலோசகருமான விஸ்வேஸ்வரய்யா என்பவரை கிரிஷிடம் பேச அனுப்பியது.

தான் ஒரு இல்லுமினாட்டி உறுப்பினரும் கூட என்பதை மறைத்து அரசின் வானியல் ஆராய்ச்சி சிறப்பு ஆலோசகர் என்பதாக மட்டும் க்ரிஷிடம் விஸ்வேஸ்வரய்யா அறிமுகம் செய்து கொண்டு ஏலியன் சந்திப்பை இஸ்ரோ அறிய நேர்ந்ததாகவும் அது குறித்த உண்மைகளைக் கூற வேண்டும் என்றும் அவர் க்ரிஷிடம் வேண்டிக்கொண்டார். விஸ்வேஸ்வரய்யாவிடம் க்ரிஷ் ஏலியன் தன்னைச் சந்தித்ததையும், தன்னுடன் நட்பானதையும், உலகம் அழிவின் விளிம்பில் இருக்கிறது என்று எச்சரித்ததையும், அப்படி அழிக்க அவன் எதிரியான ஒரு பேரறிவாளன் கிளம்பி இருக்கிறான் என்பதையும், அதை க்ரிஷ் தடுக்க முடியும் என்பதையும் தெரிவித்ததைச் சொன்னான். விஸ்வேஸ்வரய்யா அவனிடம் தொடர்ந்து பேசியதில் அந்த எதிரி விஸ்வம் தான் என்பது க்ரிஷுக்குத் தெரிய வந்ததாகவும் தெரிந்தது. க்ரிஷின் குருவாக மாறியிருந்த மாஸ்டர் என்பவர் தான் விஸ்வம் முன்பு உறுப்பினராக இருந்த ரகசிய ஆன்மீக இயக்கத்தின் தலைவர் என்பதும் தெரிந்தது. விஸ்வேஸ்வரய்யா அங்கு நடந்த உரையாடல் பதிவை எர்னெஸ்டோவுக்கு அனுப்பி வைத்தார்.

அதை முழுவதும் கேட்ட எர்னெஸ்டோ பெருங்குழப்பத்தில் ஆழ்ந்தார். ஏலியனால் தொடர்பு கொள்ளப்பட்ட க்ரிஷும் இமயத்தின் தென்பகுதியில் இருப்பவன். அவன் குணாதிசயங்களில் குறை எதுவும் தெரியவில்லை. மந்திரியின் மகனாக இருந்த போதும் சின்னத் தவறுகள் கூடச் செய்யாதவன். ஜீனியஸாக இருந்த போதும் சிறிய அகம்பாவம் கூட இல்லாதவன். ஆரகிள் சொன்னபடியே ஏலியனும் பூமிக்கு அழிவு வரக்கூடும் என்று சொல்லிருயிருக்கிறது. ஆரகிள் அத்துடன் இல்லுமினாட்டிக்கும் அழிவு வரக்கூடும் என்று கூடுதலாகவே சொல்லி இருக்கிறது. ஏலியன் சொன்னது போல் விஸ்வம் அழிக்க வந்தவனாக இருக்கக் கூடுமோ என்ற சந்தேகம் மெல்ல எழும்பியது. க்ரிஷின் இளமைக்காலம் முதலான தகவல்கள் அவரால் பெற முடிந்தது. அவனுடைய தந்தை மந்திரியாக இருந்ததால், அவன் ஜீனியஸாக இருந்ததால் அவனைப் பற்றித் தெரிந்து கொள்வதில் எந்தச் சிரமமும் இருக்கவில்லை. ஆனால் விஸ்வத்தின் கடந்த காலத்தின் பெரும்பகுதி மூடுமந்திரமாகவே இருந்தது. அவன் தனியனாகவே வாழ்ந்ததாலும், உலகத்தின் கவனத்திற்கு அதிகம் வராதவனாக இருந்ததாலும் அவனுடைய தனிப்பட்ட விஷயங்கள் எதுவும் தெரிய வரவுமில்லை.

இந்தச் சூழ்நிலையில் இல்லுமினாட்டியின் சின்னம் ஒன்றை இமயமலையின் பனிக்குகையில் தவமிருந்த ஒரு யோகியிடம் இருந்து விஸ்வம் பெற்று வந்தான். அவனிடம் கொடுத்து விட்டு அவர் இறந்து விட்டதாகத் தெரிவித்தான். அந்தச் சின்னம் அவன் கையில் இருக்கும் போது அடிக்கடி ஒளி வீசியது. அந்த யோகி இல்லுமினாட்டியிலிருந்து அதன் நலனுக்காகத் தவமிருக்க பல ஆண்டுகளுக்கு முந்தைய உறுப்பினர் அகஸ்டின் என்பவர் எனத் தெரிய வந்த போது எர்னெஸ்டோவின் குழப்பம் அதிகரித்தது. ஏலியன் அழிவிலிருந்து காப்பவனாக க்ரிஷை அடையாளம் காட்டியிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் இல்லுமினாட்டியின் சின்னத்துடனேயே விஸ்வம் வந்திருப்பதும், அவனுடைய பழைய கனவுகளைச் சொன்னதும் அவனையே ஆரகிள் சொன்ன ஆளாக அடையாளம் காட்டியது. இவர்களில் யார் உண்மையான காப்பாளன் என்பதை முடிவு செய்ய முடியாமல் தவித்த எர்னெஸ்டோ முடிவில் இருவரையுமே ஒரே மேடையில் பேச வைக்கத் தீர்மானித்தார். இல்லுமினாட்டியின் உறுப்பினர்கள் ஒரு முடிவுக்கு வரட்டும் என்று எண்ணினார்.

ஆனால் இல்லுமினாட்டியின் வரலாற்றிலேயே இல்லுமினாட்டி கூட்டத்தில் இல்லுமினாட்டியின் உறுப்பினரல்லாத ஒருவர் கலந்து கொண்டதில்லை. க்ரிஷை அழைத்துப் பேச வைப்பது இல்லுமினாட்டி விதிகளுக்கு மாறானது. இல்லுமினாட்டி உண்மையா கற்பனையா என்ற குழப்பத்துடன் உலகம் இருக்கையில் உறுப்பினர் அல்லாத க்ரிஷ் இல்லுமினாட்டி இருப்பதைத் தெரிந்து கொள்வதுடன் அதன் உறுப்பினர்களை நேரில் கண்டு பேசுவது அந்த அமைப்புக்கே ஆபத்து என்பதால் கண்களைக் கட்டிக் கொண்டு வந்து தன் பக்கத்துக் கருத்துகளை ம்யூனிக்கில் நடக்கும் இல்லுமினாட்டி கூட்டத்தில் தெரிவிக்கலாம் என்று அவனுக்குச் சொல்லி அனுப்பினார்கள். தனியாகத் தான் வர வேண்டும், கண்களைக் கட்டிக் கொண்டு தான் பேச வேண்டும் என்ற நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு அவன் பேச வந்தது இல்லுமினாட்டியை வியக்கத்தான் வைத்தது.

அந்தக் கூட்டத்தில் முதலில் விஸ்வம் பேசினான். அவன் பேசும் போது அவனுக்கு இல்லுமினாட்டியின் தவசி அகஸ்டின் தந்த பிரமிடு நெற்றிக்கண் சின்னத்தை பேச்சு மேடையிலேயே வைத்துக் கொண்டான். அவன் பேசிய போது சில சமயங்களில் அந்தச் சின்னம் இல்லுமினாட்டி உறுப்பினர்கள் முன்னிலையிலேயே மின்னியது.

“இமயமலையின் தெற்கில் உள்ள இந்தியாவில் பெருமையாய் எதுவும் சொல்ல முடியாத ஒரு சாதாரண ஏழைக்குடும்பத்தில் பிறந்தவன் நான். ஆனால் உள்ளத்தில் ஒரு அக்னியோடு பிறந்தவன். எதையும் தெரிந்து கொள்ளும் அக்னி, எதிலும் ஆழம் வரையும், உச்சம் வரையும் போகும், அக்னி, எதையும் அறிந்து முடிக்காமல் தணியாத அக்னி எனக்குள் இருந்தது. ஒன்றை எடுத்துக் கொண்டபின் அதை வசப்படுத்தாமல் நான் இருந்ததில்லை. அதுவரை நான் இளைப்பாறியதில்லை. அரைகுறைகளில் நான் திருப்தி அடைந்ததில்லை. எனக்கு உதவாத விஷயங்களில் உலாவப் போனதில்லை. இந்த அக்னி எத்தனையோ அமானுஷ்ய சக்திகளை வசமாக்க எனக்கு உதவியது. எத்தனையோ உயரங்களுக்கு எடுத்துச் சென்றது. ஆனால் இத்தனையும் எதற்கு, எதைச் சாதிக்க, என்று என்னால் எதையும் குறிப்பாகச் சுட்டிக்காட்ட நீண்ட காலம் முடியவில்லை.....” என்று பேச ஆரம்பித்தவன் இத்தனையும் இல்லுமினாட்டியில் இணையவும், அதை உயர்த்தவும் தான் தன்னிடம் இருந்தது என்றும், அதையே அவன் அடிக்கடி கண்ட கனவுகளும், அகஸ்டின் அவனிடம் அந்தச் சின்னத்தைத் தந்ததும் புரிய வைப்பதாகச் சொன்னான்.

அவன் முன்பு இருந்த இந்திய அமைப்பின் செல்வத்தை இல்லுமினாட்டிக்குப் பெரும்பகுதியை அனுப்பியபடியே சில தீவிரவாத இயக்கங்களுக்கும் அனுப்பி அவற்றுடன் நட்பில் இருப்பதை அவன் தயக்கமில்லாமல் ஒப்புக் கொண்டான். இனி எதிர்கால உலக நிகழ்வுகளைத் தீர்மானிப்பதில் அந்த தீவிரவாத இயக்கங்கள் பெரும்பங்கு வகிக்கும் என்பதையும் சுட்டிக் காட்டினான். மகாசக்திகளும், பலவீனமில்லாத மனமும், கூர்மையான அறிவும் கொண்ட அவன் இல்லுமினாட்டிக்காகவே பிறந்தவன் என்று அப்போது இல்லுமினாட்டி உறுப்பினர்களுக்குத் தோன்ற ஆரம்பித்தான்.

க்ரிஷ் அங்கே வர மறுத்திருந்தால், அங்கு வந்து பேசாமல் இருந்திருந்தால் எர்னெஸ்டோ ராஜினாமா செய்த பிறகு அடுத்த தலைவனாகவே விஸ்வத்தைத் தேர்ந்தெடுத்திருக்கும் அளவு அனைவர் மனதிலும் விஸ்வம் இடம் பெற்றிருந்தான்.

ஆனால் அங்கே க்ரிஷை வரவழைத்துப் பேச வைத்ததன் மூலம் விதி நிகழ்வுகளின் போக்கை மாற்றி விட்டது...

(இந்த அத்தியாயமும், அடுத்த அத்தியாயமும் இருவேறு உலகம் படித்திராத, இல்லுமினாட்டி நாவலின் புதிய வாசகர்களுக்காக இல்லுமினாட்டி பார்வையில் சம்பவங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதனால் பழைய வாசகர்கள் பொறுப்பார்களாக!)

(தொடரும்)

என்.கணேசன்

இல்லுமினாட்டி 10

க்ரிஷ் அடுத்ததாகப் பேசினான். அவன் பேசும் போது அவன் குரு மாஸ்டர் தலைவராக இருந்த ரகசிய ஆன்மீக இயக்கத்திலும் உலகத்தின் அழிவு காலம் பற்றிய குறிப்பு இக்காலத்தையே குறிப்பிட்டுச் சொல்லி இருந்ததாகவும் அழிவிலிருந்து காப்பாற்ற அந்த இயக்கத்தின் முந்தைய தலைவர்கள் ஒரு வரைபடத்தை விட்டுப் போயிருந்ததாகவும் சொல்லி ஆரம்பித்தான். அந்த வரைபடத்தில் ஒரு பனிமலை, மேலே திரிசூலம், அதற்கும் மேலே ஒரு பறவையின் படம் இருந்ததாகவும், அதை அந்த இயக்கத்தில் இருந்த விஸ்வம் திருடிச் சென்று தான் இமயத்தில் அந்தத் திரிசூலத்திற்குக் கீழே இருந்த குகையைக் கண்டுபிடித்திருக்கிறான் என்பதையும் சுட்டிக் காட்டினான். அந்தக் குகையில் தான் இல்லுமினாட்டியின் தவசி அகஸ்டின் தவம் செய்து கொண்டிருந்ததாகவும் அவரிடமிருந்து தான் விஸ்வம் அந்த இல்லுமினாட்டி சின்னத்தை வாங்கிக் கொண்டு வந்திருப்பதாகவும் தெரிவித்தான். அகஸ்டின் தவசி அவர்களது இயக்கத்தில் சேர்ந்து தான் யோகக்கலையைக் கற்றிருந்தார், பின் தான் தவம் செய்ய இமயம் சென்றார் என்றும் சொல்லி அந்த வகையில் இல்லுமினாட்டிக்கும் அந்த இந்திய ரகசிய ஆன்மீக இயக்கத்திற்கும் இடையே உள்ள ஒற்றுமையையும் சுட்டிக் காட்டினான்.

விஸ்வம் கையில் இருந்த போது அவ்வப்போது ஒளிர்ந்த இல்லுமினாட்டி சின்னத்தை விஸ்வம் அந்தப் பேச்சு மேடையிலேயே விட்டு வந்திருந்தான். கண்கள் கட்டப்பட்டிருந்த க்ரிஷ் அந்தச் சின்னத்தைத் தொட்டுக் கையில் எடுக்க அவன் கையில் இருக்கையில் இல்லுமினாட்டி சின்னம் தொடர்ந்து ஒளிர ஆரம்பித்தது.

விஸ்வம் இருந்த இயக்கத்தில் விசுவாசமாக இருக்கவில்லை என்பதையும், அந்தச் சின்னத்தைக் கொடுத்து விட்டு இறந்த அகஸ்டின் தவசியின் உடலைக் கூட மரியாதையோடு புதைக்க முற்படவில்லை என்பதையும் க்ரிஷ் தன் பேச்சில் சுட்டிக் காட்டினான். விஸ்வத்திற்குப் பிறகு அந்தக் குகையைக் கண்டுபிடித்துப் போன மாஸ்டர் தான் அகஸ்டின் உடலை மரியாதையோடு புதைத்து விட்டு வந்தார் என்பதையும், விஸ்வம் எடுத்து வந்த இல்லுமினாட்டி சின்னம் அந்தக் குகையில் இருந்த சிவன் சிலையின் நெற்றிக்கண்ணாக இருந்ததென்றும், அவன் எடுத்துக் கொண்டு வந்த பின் அதே போன்ற ஒரு சின்னத்தை ஒரு பறவை கொண்டு வந்து தவசி அகஸ்டின் சமாதியில் கொண்டு வந்து வைத்தது என்றும், அதை மாஸ்டர் அந்தச் சிவன் நெற்றியில் பொருத்த அது சரியாகப் பொருந்தியது என்பதையும் சொன்னான். அப்போது ஏற்பட்ட ஆன்மீகப் பேரானந்த அனுபவத்தால் மாஸ்டர் அகஸ்டின் தவம் செய்த இடத்தில் உலக நன்மைக்காக இப்போது தவம் செய்து வருகிறார் என்றும் சொன்னான்.

அப்படிப்பட்ட மாஸ்டரின் ஆன்மிக இயக்கத்தின் பணத்தைக் கையாடல் செய்து விஸ்வம் தீவிரவாத இயக்கங்களுக்கும், இல்லுமினாட்டிக்கும் அனுப்பி இருப்பதைக் குற்றம் சாட்டிய க்ரிஷ், அகஸ்டின் உடலைப் புதைக்கும் மரியாதை கூடச் செய்யாமல் விஸ்வம் அலட்சியப்படுத்தியதையும் சுட்டிக்காட்டி இப்படிப்பட்டவன் இல்லுமினாட்டியையும் ஒரு காலத்தில் ஏமாற்ற மாட்டான் என்பது என்ன நிச்சயம் என்ற கேள்வியை எழுப்பினான். தீவிரவாத இயக்கங்களை எக்காலத்திலும் திருப்திப்படுத்த முடியாது என்றும் அவை சம்பந்தப்பட்டவர்களை அழித்தே தீரும் என்றும் சொல்லி விஸ்வம் தீவிரவாத இயக்கங்களுடன் நட்பில் இருப்பது முட்டாள்தனம் என்றும் குறிப்பாகத் தெரிவித்தான்.

இந்த உலகம் நல்ல முறையில் மாற வேண்டும், உயர வேண்டும், அழியாமல் காப்பாற்றப்பட வேண்டும் என்ற அக்கறையில் ஏலியன் அக்கறையோடு தன்னிடம் சொன்னதை க்ரிஷ் அந்த மேடையில் சொன்னான்

"அறிவும், நல்ல மனமும் சேர்ந்திருக்கும் மனிதர்களாலேயே எந்த ஒரு சமுதாயமும் மேம்பட்டிருக்கிறது. வளர்ந்திருக்கிறது. அப்படிப்பட்ட மனிதர்கள் இல்லாமல் போகும் போது, அப்படிப்பட்ட மனிதர்கள் இருந்தும் அவர்கள் பொது நலனில் அக்கறை காட்டாத போது அழிந்திருக்கிறது. நல்ல மனிதர்கள் பொறுப்பைத் தட்டிக்கழிக்கும் போது எல்லாமே நாசமாகிப் போகிறது..."

"உண்மையான எதிரி ஒரு தனிமனிதன் அல்ல. உங்கள் சமூகத்தில் புறையோடியிருக்கும் சுயநலம், பேராசை, வெறுப்பு, அலட்சியம் எல்லாம் தான்."

"தனிமனித மதிப்பீடுகள் தரம் குறையும் போது அவன் வாழும் சமுதாயத்தின் தரமும் குறைய ஆரம்பிக்கிறது. அப்போது தான் அழிவிற்கான விதைகள் விதைக்கப் படுகின்றன. பொதுநலம் மறக்கப்பட்டு, தன் உண்மையான நலமும் எதுவெனத் தெரியாமல் மனிதன் மயங்கும் சூழ்நிலை உருவாக ஆரம்பித்து, அந்தச் சூழ்நிலையில் தீமைகள் வேகமாக விளைய ஆரம்பிக்கின்றன. அப்போது தன் நிலைமைக்குத் தானே பொறுப்பேற்க மனிதன் மறக்கிறான். அடுத்தபடியாக உடனடிக் கிளர்ச்சிகளுக்காகவும் அற்ப சந்தோஷங்களுக்காகவும், நீண்டகால நன்மைகளையும், உயர்வுகளையும் மனிதன் அலட்சியம் செய்ய ஆரம்பித்து, தன்னை அழித்துக் கொள்ளத் தயாராகிறான். அவன் ஆறாவது அறிவைப் பயன்படுத்துவது குறைய ஆரம்பிக்கிறது. அழிவின் வேகம் அதிகரிக்கிறது….. "

அவன் சொன்ன போது அவன் சொன்னது சத்தியம் என்று ஆமோதிப்பது போல அந்தச் சின்னம் வைரம் போல் ஜொலிக்க ஆரம்பித்தது. இருட்டில் இருந்த அரங்கம் அந்த ஜொலிப்பில் பௌர்ணமி நிலவொளியில் வெட்டவெளியில் இருப்பது போல ஒளி வெள்ளத்தில் மிதந்தது. எல்லோர் முகத்திலும் பிரமிப்பு தெரிய ஆரம்பித்தது. அந்தச் சின்னத்தின் ஜொலிப்பில் க்ரிஷும் தேஜஸுடன் தெரிந்தான். ஒவ்வொருவரின் அந்தராத்மாவுடனும் பேசுவது போல் க்ரிஷ் உலகம் காப்பாற்ற வேண்டுமானால், உலகத்தோடு சேர்ந்து இல்லுமினாட்டியும் காப்பாற்ற வேண்டுமானால் இல்லுமினாட்டி இந்த ஆபத்தான காலக்கட்டத்தில் தன் பொறுப்பை உணர்ந்து நன்மைக்கு மாற வேண்டும் என்று நினைவுபடுத்தினான். கடைசியில் சொன்னான்.

"எண்ணங்களிலும் நோக்கங்களிலும் இருக்கிறது எல்லாச் சூட்சுமமும். யோகிகள் தங்கள் ஞான அலைகளை பரவச் செய்து பலன் பெறத் தகுதியான அலைவரிசைகளில் இருப்பவர்களை உயர வைப்பது போல, ஆளுமை உள்ள மனிதர்களும் தங்கள் எண்ணங்களாலும், செய்கைகளாலும் எத்தனையோ நுட்பமான மாற்றங்களை உருவாக்கி விட முடியும். அந்த வகையில் தலைவர்கள் முடிந்த வரை உதாரண புருஷர்களாய் இருக்க வேண்டும். நன்மைக்கு மதிப்பும் மரியாதையும் தர வேண்டும். நன்மை போற்றப்படுகிறது, அதுவே கௌரவம், அதற்கே மதிப்பு என்ற நம்பிக்கையான சூழலை நாம் உருவாக்கினால் ஒழிய பெரும்பான்மையான மனிதர்களை நாம் நன்மையின் போக்கிற்கு மாற்றி விட முடியாது."

"அப்படி மனிதர்களை மாற்றி அவர்களை மேலுக்கு உயர்த்தி அவர்களுக்குத் தலைமை தாங்குவது தான் உண்மையில் தலைமைக்குப் பெருமை. முட்டாள்களையும், தற்குறிகளையும், கேடிகளையும், போக்கிரிகளையும், கொள்ளையர்களையும், தீவிரவாதிகளையும் சமாளித்து அதிலும் சுய சம்பாத்தியம் பார்ப்பதைத் தலைமை என்று பெருமையாகச் சொல்ல முடியுமா? இல்லுமினாட்டி எந்த மாதிரியான மனிதர்களுக்குத் தலைமை தாங்க நினைக்கிறது? எந்த விதமான தலைமையை அது பெருமையாகச் சொல்லிக் கொள்ள முடியும்.... அறிவும் ஞானமும் படைத்த நீங்கள் யோசித்துப் பாருங்கள். நல்ல மனிதர்களைப் போற்றுங்கள். திறமைக்கு ஆதரவு கொடுங்கள். எது எல்லாம் உயர உதவுமோ அதை எல்லாம் சிலாகியுங்கள். உண்மைக்கு உரிய கவுரவம் கொடுங்கள். இந்த இடைப்பட்ட மனிதர்கள் கண்டிப்பாக நன்மையின் பக்கம் திரும்புவார்கள். உயர ஆரம்பிப்பார்கள்.... இதுவே உலகம் காப்பாற்றப்படும் வழி. அதைவிட்டு எரிகிற வீட்டில் பிடுங்கிய வரை லாபம் என்று இன்றைய அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் செய்வதைப் போல எல்லா இடங்களில் இருந்தும் சுருட்டிக் கொண்டே போனால் கடைசியில் எதுவும் மிஞ்சாது. இப்படி ஒருவன் சேர்த்ததை அவனுக்கு மேல் வலிமையானவன் பிடுங்கி, அவன் பிடுங்கியதை அதற்கு மேல் வலிமையானவன் பிடுங்கி வலிமை என்றாலே ஏமாற்றிப் பிடுங்குவது என்றாகி கடைசியில் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டு தான் சாக வேண்டும்.... அழிப்பதற்கு எந்தத் தனித்திறமையும் தேவையில்லை. பலவீனமானவர்களை ஏமாற்றியும், பயமுறுத்தியும் கொள்ளையடிப்பது பெருமையும் அல்ல."

இல்லுமினாட்டி சின்னம் தொடர்ந்து ஒளிர்ந்ததும், கண்களைக் கட்டி இருந்த போதும் க்ரிஷ் ஜொலித்ததும், அவன் பேச்சில் இருந்த ஆத்மார்த்தமும், சத்தியமும் எல்லாமே சேர்ந்து அவனையே ஆரகிள் சொன்ன 'உயர்சக்தியால் தேர்ந்தெடுக்கப்பட்ட'வனாக அடையாளம் காட்டுவதாய் இல்லுமினாட்டி உறுப்பினர்கள் உணர்ந்தார்கள். எர்னெஸ்டோ க்ரிஷை இல்லுமினாட்டியில் சேர அப்போதே அழைப்பு விடுத்தார்.

அவன் தயங்கிய போது எர்னெஸ்டோ சொன்னார். "இளைஞனே நீ இன்று சொன்ன வார்த்தைகளை இல்லுமினாட்டி என்றும் நினைவு வைத்திருக்கும். இந்தக் கணத்தில் எங்கள் இல்லுமினாட்டி தவசி அகஸ்டின் உன் மூலம் சொன்னதாக நாங்கள் உணரும் இந்த உயர்ந்த உணர்வுகள் நாளைக் காலை எத்தனை பேருக்கு எத்தனை சதவீதம் தங்கும் என்பதை உறுதியாக என்னால் கூற முடியாது. இன்னும் சில நாட்கள் போன பின் கண்டிப்பாக இதே உணர்வுகளை இதே அளவிலும் இதே உறுதியிலும் உறுப்பினர்கள் பின்பற்றுவார்கள் என்று கூற முடியாது. மனித இயல்பை நீண்ட காலம் கவனித்து வந்ததால் தான் இதை வருத்தத்துடன் கூறுகிறேன். இந்த உயர்ந்த உணர்வுகள் நீர்த்துப் போகாமல் இருக்க வேண்டுமென்றால் உன்னைப் போன்றவன் எங்களுடன் இணைந்து இருக்க வேண்டும்."

"இல்லுமினாட்டி என்ற இந்த இயக்கம் உலக நிகழ்வுகளின் போக்கை நிர்ணயிக்கும் சக்தி வாய்ந்த ஒரு இயக்கமாக இருக்கிறது. அதில் சேர வாய்ப்பு கிடைத்த போதும் நீ சேரத் தயங்கினால் அறிவுரை சொல்ல மட்டுமே நீ, அதைக் களத்தில் இறங்கி செய்து காட்டக் கிடைக்கும் பொறுப்பைத் தட்டிக் கழிக்கிறாய் என்றாகி விடாதா? உன் ஏலியன் நண்பனுக்கும், உன் மனசாட்சிக்கும் நீ என்ன பதில் சொல்லப் போகிறாய்?"

கடைசியில் க்ரிஷ் மனம் மாறி இல்லுமினாட்டியில் இணைந்தான். ஆனால் அந்தக் கூட்டத்தில் யாரும் எதிர்பாராத விதமாய் விஸ்வம் உடல்கருகி இறந்திருந்தான். என்ன ஆனது எப்படி ஆனது என்று அவர்கள் யாருக்கும் தெரியவில்லை. க்ரிஷையே எல்லோரும் கவனித்துக் கொண்டிருந்ததால் அவன் கருகி விழுந்திருந்ததைப் பிறகு தான் கவனித்திருந்தார்கள். விஸ்வத்தின் பிணம் ம்யூனிக் மின்மயானத்தில் எரிக்கப்பட்டது.

எல்லாம் முடிந்து இயல்பு வாழ்க்கைக்கு இல்லுமினாட்டி திரும்பியதாக அவர் நினைத்திருக்கும் போது ஜான் ஸ்மித், விஸ்வம் இறந்த அதே நேரத்தில் உயிர் பிழைத்த டேனியல் என்ற போதை மனிதனைப் பற்றிச் சொல்லி விட்டுப் போயிருக்கிறார். அமானுஷ்ய சக்திகள் பெற்றிராத, யோகசக்திகள் கற்றிராத அவனுடைய மூளையில் அது சம்பந்தமான பகுதிகள் திடீரென்று செயலாக்கம் பெற்றிருப்பதாகவும் சொல்லியிருக்கிறார். கூடு விட்டுக் கூடு பாய்வதைப் பற்றி பழங்கதைகளில் படித்திருக்கும் எர்னெஸ்டோ இக்காலத்தில் உண்மையில் அதெல்லாம் சாத்தியம் என்று நம்புபவர் அல்ல. ஆனால் நடந்திருப்பதை வேறெப்படி எடுத்துக் கொள்வது என்றும் அவருக்கு விளங்கவில்லை. என்ன நடக்கிறது? போதை மனிதன் பிழைக்கையில் கிதார் இசையை இசைக்க விட்டதும், அவனை அதிகாலை நேரத்தில் காரில் அழைத்துச் சென்றதும் யார்?

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, August 29, 2019

இல்லுமினாட்டி 11

இல்லுமினாட்டியின் உளவுத்துறை விஸ்வம் குறித்துச் சேர்த்திருக்கும் தகவல்களில் அதிகம் இருந்தது அவன் இந்தியாவின் ரகசிய ஆன்மீக இயக்கத்தில் சேர்ந்த பிறகானவையே. அதற்கு முந்தைய அவனுடைய நாடோடி வாழ்க்கையில் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில தகவல்கள் கிடைத்தனவே தவிர மற்றபடி அவன் ஒரு மறைவு வாழ்க்கையைத் தான் முன்பு வாழ்ந்திருந்தான். அனைத்தையும் பார்த்துக் கொண்டிருப்பதாகவும், கவனித்துக் கொண்டிருப்பதாகவும் சொல்லப்படும் இல்லுமினாட்டியின் குறிப்புகளில் கூட அவன் எங்கேயும் கூடுவிட்டு கூடு பாயும் வித்தையைக் கற்றுக் கொண்டதாகவோ, அது குறித்தப் பயிற்சிகளில் ஆர்வம் காட்டி இருந்ததாகவோ தகவல் இல்லை. ஆனால் தகவல் இல்லாததாலேயே அவன் கற்றிருக்க வாய்ப்பில்லை என்று சொல்ல முடியாது. ஏனென்றால் அவன் தன் ஒவ்வொரு சக்தியைப் பெற்றதையும் ரகசியமாய் தான் செய்திருந்தான். ஒன்றிரண்டு வெளிப்பட்டிருக்கின்றனவே ஒழிய மற்றதை ரகசியமாகவே தக்க வைத்துக் கொண்டிருக்கிறான். அவனைப் பற்றிய பழைய ரகசியங்களை அவன் காப்பாற்றிக் கொள்வதில் வெற்றி கண்டதற்குக் காரணம் அவன் தனியனாகவே ஒவ்வொரு பயிற்சிகளில் ஈடுபட்டதும், வேலை முடிந்த பின் பழையவர்களுடன் எந்த விதத்திலும் தொடர்பு வைத்துக் கொள்ளாததும் தான் என்று தோன்றியது. அவன் வாழ்க்கையில் எல்லாம் தனித் தனி அத்தியாயங்கள். ஒன்றுக்கொன்று எந்த விதத்திலும் தொடர்பு இல்லை...

எர்னெஸ்டோ இப்போதைய நிகழ்வுகளை க்ரிஷுக்கோ, மற்ற இல்லுமினாட்டி உறுப்பினர்களுக்கோ தெரிவிப்பதற்கு முன் என்ன நடந்திருக்கலாம், அதன் விளைவுகள் என்னவாக இருக்கலாம் என்பது பற்றி தோராயமாகவாவது ஒரு அபிப்பிராயத்திற்கு வருவது முக்கியம் என்று நினைத்தார். அதற்குத் தேவையானதைச் செய்ய வேண்டிய பொறுப்பு ஜான் ஸ்மித்திடமே தரப்பட்டது. அந்தப் பொறுப்பை நிறைவேற்ற ஜான் ஸ்மித் உடனே திபெத்தியத் தலைநகரான லாசாவுக்குக் கிளம்பினார்.

ஜான் ஸ்மித் லாசாவுக்குச் சென்று சந்தித்த அந்த ஆவிகள் மற்றும் அமானுஷ்ய சக்திகளின் ஆராய்ச்சியாளர் சுமார் ஐம்பத்தைந்து வயதை எட்டியவர். ஆனால் அவர் தோற்றம் எழுபதை எட்டியது போல இருந்தது. அவர் வீடு முழுவதும் பல விசித்திரமான சின்னங்களாலும், பழங்காலப் பொருள்களாலும் நிறைந்திருந்தன. ஏதோ ஒரு விசித்திர உலகில் வாழும் பழங்கால மனிதர் போல அவர் தோன்றினார். வாழ்க்கை முழுவதும் ஆவிகள் அமானுஷ்ய சக்திகளின் ஆராய்ச்சியிலேயே கழித்திருந்த அவர் தன் ஆராய்ச்சிகளைக் குறித்து எழுதியிருந்த நூலொன்று சர்வதேசப் புகழ் பெற்றிருந்தது. எகிப்தியரான அவர் தன் நாற்பது வயது வரை தன் ஆராய்ச்சிகளைத் தாய்நாட்டிலேயே செய்து வந்தவர். பின் லாசாவுக்குக் குடி பெயர்ந்தவர். திபெத்தில் வெளிநாட்டவர் குடியேறுவது அவ்வளவு சுலபமான செயல் அல்ல. அவர் விண்ணப்பித்து மூன்று வருடங்கள் காத்திருந்த பின்பு, அரசியலில் சிறிதும் ஆர்வமில்லாத அந்த ஆராய்ச்சியாளரால் பிரச்சினை எதுவும் வராது என்று உறுதிப்படுத்திக் கொண்ட பின் தான் சீனா அவரை அங்கு குடியேற அனுமதித்திருந்தது.

அவரைச் சந்திக்க அனுமதி கேட்ட போது ஜான் ஸ்மித் அவரைச் சந்திக்கவென்றே லாசா வருவதாகச் சொல்லவில்லை. நேபாளிற்கு ஒரு வேலையாகச் செல்வதாகவும், அது முடிந்த பின் தனதொரு ஆராய்ச்சி குறித்து அவரிடம் விவாதிக்க விரும்புவதாகவும் சொல்லித் தான் அனுமதி வாங்கி இருந்தார்.

அந்த ஆராய்ச்சியாளர் அவரை இன்முகத்தோடு வரவேற்று உபசரித்தார். உலகப்புகழ் பெற்ற மூளை விஞ்ஞானியைச் சந்திக்க முடிந்ததில் மகிழ்ச்சி என்று சொன்னார். சம்பிரதாயப் பரஸ்பர விசாரிப்புகளின் முடிவில் ஜான் ஸ்மித்திடம் அவர் கேட்டார். "நீங்கள் எந்த ஆராய்ச்சி பற்றி விவாதிக்க விருப்பப்படுகிறீர்கள்?"

ஜான் ஸ்மித் கவனமாகச் சொன்னார். "ஆவிகள், அமானுஷ்ய சக்திகளால் பாதிக்கப்படும் நபர்களின் மூளைகளில் ஏற்படும் மாற்றங்களைப் பற்றி நான் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறேன். ஆவிகள், அமானுஷ்ய சக்திகள் எல்லாம் உங்கள் சப்ஜெக்ட் ஆனதால் உங்களிடம் பேசினால் அது உதவியாக இருக்கும் என்று தோன்றியது...."

ஆராய்ச்சியாளர் தலையசைத்தார். ஜான் ஸ்மித் மெல்லக் கேட்டார். "முதலாவதாக ஆவிகள் இருப்பதும், அந்த ஆவிகள் இன்னொருவர் உடலில் நுழைய முடிவதும் உண்மை தானா? ஏன் இதைக் கேட்கிறேன் என்றால் சில நேரங்களில் மனிதனுடைய அதீத மனநிலைகளே கூட ஆவிகளால் ஆட்கொள்ளப்படுவது போன்ற பிரமையை ஒருவருக்கு ஏற்படுத்தி விட முடியுமல்லவா?"

"உங்கள் சந்தேகம் நியாயமானது தான். ஆனால் ஆவிகளும், மனிதன் சாதாரணமாக உணர முடியாத சூட்சும சக்திகளும் இருப்பது நீங்களும் நானும் இருப்பது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை"

ஜான் ஸ்மித் முகத்தில் ஆச்சரியத்தைக் காட்டினார். அந்த ஆராய்ச்சியாளர் தொடர்ந்தார். "இதைப் பழங்காலத்திலேயே எகிப்தியர்களும், இந்தியர்களும், திபெத்தியர்களும் உணர்ந்திருந்தார்கள். நீங்கள் எப்படி மூளை விஞ்ஞானியோ அப்படியே ஆவிகள், அமானுஷ்ய சக்திகள் விஷயங்களில் இந்த மூன்று நாடுகளின் யோகிகள் விஞ்ஞானிகளாக இருந்தார்கள்....."

ஜான் ஸ்மித் சொன்னார். "அந்த யோகிகள் தங்கள் உடலை விட்டு வெளியேற முடிந்தவர்கள் என்று கூடக் கேள்விப்பட்டிருக்கிறேன். அது எந்த அளவு உண்மை என்று தெரியவில்லை"

"அதுவும் உண்மையே. எகிப்திலும், இமாலயத்திலும் பல நூறு வருடங்களாக வாழும் யோகிகள் சிலர் இருக்கிறார்கள். சிலர் ஆயிரம் ஆண்டுகளைக்கூடக் கடந்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அது கேட்பவர்களுக்கு அதீதக் கற்பனை போல் தோன்றலாம். ஆனால் அது உண்மை தான். சில எகிப்திய யோகிகள் உடல் சமாதிகளில் இருந்தாலும் ஆவியாக அவர்கள் உலகமெங்கும் செல்லக் கூடியவர்களாக இருப்பதாகச் சொல்கிறார்கள்..."

பேச்சு தான் எதிர்பார்க்கும் திசை நோக்கித் திரும்ப ஆரம்பித்ததில் ஜான் ஸ்மித் திருப்தி அடைந்தாலும் உடனடியாக கேட்க வந்த கேள்விகளுக்குக் குதிக்க விரும்பாமல் "உண்மையாகவா?" என்று கேட்டு வைத்தார்.

"ஆமாம். நான் சிறுவனாக இருந்த போது என் தாத்தா அப்படி ஒரு எகிப்திய யோகியைப் பற்றிச் சொல்லி அவர் சமாதியையும் எனக்குக் காட்டி இருக்கிறார். மறுநாள் அதை மறுபடியும் பார்க்க ஆசைப்பட்டு நான் போன போது அந்தச் சமாதி அங்கே இல்லை.... ஆச்சரியப்பட்டு தாத்தாவிடம் போய் சொன்னேன். அவர் ஆச்சரியப்படவில்லை. யோகிகள் மந்திரங்களால் எதையும் மறைக்க வல்லவர்கள் என்றும் விருப்பமில்லா விட்டால் தாங்கள் எந்த விதத்திலும் சாதாரண மக்களின் கவனத்திற்கு வர விரும்ப மாட்டார்கள் என்றும் சொன்னார். ஆனாலும் அவர் வந்தால் கண்டுபிடித்துக் காட்டுவாரோ என்ற ஆசையில் அவரை அழைத்துக் கொண்டு மறுபடியும் அங்கே போனேன். அவரும் நானும் சுற்றிச் சுற்றி அதே இடத்திற்கு பல தடவை வந்து பார்த்தும் அந்தச் சமாதி தெரியவில்லை. இந்த ஆவிகள், அமானுஷ்ய சக்திகள் விஷயத்தில் நான் ஆர்வம் காட்ட ஆரம்பித்ததே அந்த நிகழ்ச்சிக்குப் பின் தான்....."

ஜான் ஸ்மித் கேட்டார். "அந்த யோகி அந்தச் சமாதியை ஏன் மறைத்து வைக்க வேண்டும்?"

"அவர் திரும்பவும் அந்த உடலுக்குத் திரும்பி வர வேண்டும் என்று விரும்பும் வரை அவருடைய உடல் எந்தச் சேதாரமும் இல்லாமல் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதில் அவர்கள் கவனமாக இருப்பார்கள். மனிதர்களின் ஆர்வம் சமாதியின் மேல்பகுதியோடு நின்று விடாமல் தோண்டும் அளவுக்கும் போகலாம் என்ற எச்சரிக்கை உணர்வு தான் அதற்குக் காரணம்"

"அவர்கள் எப்படி அந்த உடலுக்குத் திரும்புவார்கள்?"

"அதற்குச் சில மந்திரங்கள், சடங்குகள் இருக்கின்றன. அவர்கள் உடலோடு இருக்கும் யோகிகளை மானசீகமாகத் தொடர்பு கொண்டு அந்தச் சடங்குகள் செய்ய வைத்து அந்த உடலுக்குத் திரும்புவார்கள். அந்த சடங்குகளுக்கு முன் தான் அந்த சமாதியிலிருந்து அந்த உடல் வெளியே எடுக்கப்படும்"

"அந்த யோகிகள் உடலை விட்டுப் போவதும், பல காலம் கழித்துத் திரும்பவும் வருவதும் எதற்காக?"

"யோகிகளுக்கு சில காரியங்களுக்கு மனித உடல் வேண்டியிருக்கிறது. பல காரியங்களுக்கு மனித உடல் தேவையில்லை. சில விஷயங்களுக்கு உடல் சிறை தான். ஒரு தொந்தரவு தான். அவர்கள் உலகமெல்லாம் சுற்றிச் சில வேலைகளை ஆவி நிலையிலேயே செய்து முடித்து விட்டுத் திரும்பும் போது அந்த உடல் அவர்களுக்கு வேண்டும்"

"ஒருவேளை அவர்கள் திரும்பி வரும் போது அந்த உடம்பு இல்லா விட்டால்?"

"அப்படி நடக்க வாய்ப்பே இல்லை. அதைத் தான் அவர்கள் பத்திரப்படுத்தி ரகசியமாய் மறைத்து வைக்கிறார்களே"

"ஒரு பேச்சுக்குக் கேட்கிறேன். ஒருவேளை அவர்கள் திரும்பி வரும் போது அந்த உடல் அழிந்திருந்தால் வேறொரு உடலுக்குள் புகுந்து கொள்வார்களா?"

ஜான் ஸ்மித்தின் இந்தக் கேள்விக்கு ஆராய்ச்சியாளரால் உடனடியாகப் பதில் சொல்ல முடியவில்லை. அவர் யோசிக்க ஆரம்பித்தார். இதற்குப் பதில் வந்தால் தான் அடுத்த முக்கியமான கேள்விகளைக் கேட்க முடியும் என்பதால் ஜான் ஸ்மித் பொறுமையிழந்து அவரைப் பார்த்தார்.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, September 5, 2019

இல்லுமினாட்டி 12

ஆராய்ச்சியாளர் கடைசியில் மெல்லச் சொன்னார். "அப்படி நடப்பதற்கு வாய்ப்பு குறைவு"

"ஏன்?" ஜான் ஸ்மித் கேட்டார்.

"யோகிகள் இயற்கை சக்திகளுடன் விபரீத விளையாட்டுகளை விளையாடுவதில்லை. அதனால் உடலை முழுப்பாதுகாப்பு செய்து வைத்து விட்டுத் தான் உடலை விட்டு வெளியேறுவார்கள்" என்று ஆராய்ச்சியாளர் மறுபடியும் தன் பழைய கருத்தையே சொன்னார்.

"என்னுடைய கேள்வி என்னவென்றால், அப்படி ஒருவன் உடலை விட்டு வெளியேறிய பிறகு திரும்பவும் தன் உடலுக்கு வர முடியாத நிலைமை உருவானால் என்ன நடக்கும்?" ஜான் ஸ்மித் கேட்டார்.

ஆராய்ச்சியாளரால் அப்படி ஒரு நிலைமையை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை போல இருந்தது. அவர் மூளையைக் கசக்கி யோசிப்பது போல் தெரிந்தது. ஜான் ஸ்மித் கேட்டார். "அவன் இன்னொரு உடம்புக்குள் புகுந்து கொள்ள முடியுமா?"

ஆராய்ச்சியாளர் யோசனையுடன் சொன்னார். "முடியாது என்றில்லை. ஆனால் அந்த உடலில் நீண்ட காலம் தங்கியிருக்க முடியுமா என்பது சந்தேகமே. ஏனென்றால் இது போல கூடு விட்டு கூடு பாயக்கூடிய சக்தியை அந்தச் சக்தி படைத்தவர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே பயன்படுத்துவதாகத் தான் தெரிகிறது. நீங்கள் சொல்கிறபடி திரும்பவும் தன் உடலுக்கு வர முடியாத நிலைமை என்றால் நிரந்தரமாக அந்த இன்னொரு உடலில் தங்க வேண்டியதாகி விடும் அல்லவா? அது நடப்பது சந்தேகம் தான்..."

"அப்படி நடந்திருக்கிறதே" என்று உடைத்துச் சொல்லி விவரிக்க வழி இல்லாமல் தவித்த ஜான் ஸ்மித் சிறிது யோசித்து விட்டுக் கேட்டார். "இந்த விஷயத்தில் எதையும் உறுதியாகச் சொல்லும் அளவு நல்ல ஞானமுள்ள ஆட்கள் யாரையாவது தெரியுமா?"

ஆராய்ச்சியாளர் சொன்னார். "சில மைல்கள் தூரத்திலேயே ஒரு திபெத்திய யோகி இருக்கிறார். அவரைப் பற்றி நான் என் புத்தகத்திலேயே கூட எழுதி இருக்கிறேன். ஆனால் அவர் மனமிருந்தால் தான் பேசுவார். மனமில்லா விட்டால் வாய் திறக்க மாட்டார்..."

ஜான் ஸ்மித் கெஞ்சுகின்ற தொனியில் சொன்னார். "அவரைப் போய்ப் பார்க்க முடியுமா? எனக்கு இது பற்றி முழுவதுமாய் தெளிவாய்த் தெரிந்தால் பெரிய உபகாரமாய் இருக்கும்..."

அவரையே சில வினாடிகள் பார்த்துக் கொண்டிருந்து விட்டு ஆராய்ச்சியாளர் சம்மதித்தார். "சரி... ஆனால் அவர் கண்டிப்பாகப் பேசி எல்லாவற்றையும் தெளிவுபடுத்துவார் என்பது நிச்சயமில்லை. நானே எத்தனையோ தடவை போய் அவர் ஒன்றும் பேசாமலிருந்ததைப் பார்த்து விட்டுத் திரும்ப வந்திருக்கிறேன்..."

ஜான் ஸ்மித் சொன்னார். "அது பரவாயில்லை. ஆனால் அவர் இந்த விஷயத்தில் ஆழ்ந்த ஞானம் உள்ளவர் என்பதில் உங்களுக்கு எந்தச் சந்தேகமும் இல்லையே"

ஆராய்ச்சியாளர் சொன்னார். "அதில் சந்தேகமில்லை."

இருவரும் அந்த யோகியைச் சந்திக்கக் கிளம்பினார்கள். ஆராய்ச்சியாளர் தன் ஜீப்பிலேயே ஜான் ஸ்மித்தை அழைத்துச் சென்றார். போகும் போது ஜான் ஸ்மித் வேறு எதைப் பற்றியும் பேச மனமில்லாமல் கூடு விட்டு கூடு பாயும் சக்தியைப் பற்றியே பேசினார். "இதை நம்ப என்னுடைய விஞ்ஞான அறிவு விடுவதில்லை. ஆனால் சிலருடைய அபூர்வ அமானுஷ்ய அனுபவங்களைக் கேள்விப்படும் போது நம்பாமல் இருக்கவும் முடியவில்லை..."

ஆராய்ச்சியாளர் சொன்னார். "இந்தியாவின் யோகாவில் அஷ்டமகா சித்திகள் என்ற எட்டுவகை சக்திகள் சொல்லப்படுகின்றன. அந்த அஷ்டமகா சித்திகளில் ஒன்று தான் இந்தக் கூடு விட்டு கூடு பாயும் சக்தி. இதை பிரகாமியம் என்ற சக்தியாகச் சொல்கிறார்கள். இந்தியாவின் ஆதிசங்கரர் என்ற மகான் இந்த அஷ்டமகா சக்திகளையும் தன்வசப்படுத்தி இருந்தார் என்று சொல்லப்படுகிறது. அவர் இந்தக் கூடு விட்டுக் கூடு பாயும் பிரகாமிய சக்தியையும் பெற்றிருந்தார்..."

ஆராய்ச்சியாளர், ஆதிசங்கரர் அந்தச் சக்தியைப் பயன்படுத்திய சம்பவத்தையும் விவரித்தார். மந்தன மிஸ்ரா என்ற பேரறிஞரோடு ஆதிசங்கரர் தர்க்கவாதம் என்ற ஞான மார்க்கப் போட்டியில் ஈடுபட்டதாகச் சொல்லப்படும் கர்ணபரம்பரைக் கதையைச் சொன்னார். "போட்டியில் மந்தன மிஸ்ரா தோற்றால் குடும்பஸ்தரான அவர் சன்னியாசம் பெற வேண்டும் என்றும், ஆதிசங்கரர் தோற்றால் துறவியான அவர் குடும்பஸ்தர் ஆக வேண்டும் என்ற நிபந்தனையில் ஆரம்பித்த போட்டியில் ஆதிசங்கரர் ஜெயித்து விட்டார். மந்தன மிஸ்ரா பதினேழு நாட்கள் தொடர்ந்த விவாதங்களின் முடிவில் ஆதிசங்கரரிடம் தோற்றுப் போனார். அவருடைய மனைவி உபயபாரதி கணவரை விட அறிவாளி. கணவர் துறவி ஆவதைச் சகிக்க முடியாமல் உபயபாரதி 'ஒரு குடும்பஸ்தனில் அவனுடைய மனைவியும் ஒரு பாதி. அதனால் என்னையும் நீங்கள் ஜெயித்தால் தான் உண்மையில் ஜெயித்த மாதிரியாகும்' என்று வாதம் செய்தாள். ஆதிசங்கரர் அதற்கும் சம்மதித்தார். உபயபாரதியாலும் ஆதிசங்கரரை வெல்ல முடியவில்லை. கடைசியில் தோல்வியை ஒப்புக் கொள்ள மனமில்லாமல் அவள், ஒரு உண்மையான சன்னியாசியான அவரால் பதில் சொல்ல முடியாதபடி உடலுறவு சம்பந்தமான ஒரு கேள்வியைக் கேட்டு விட்டாள். அவளிடம் பதில் சொல்ல அவகாசம் வாங்கிய ஆதிசங்கரர் அந்தச் சமயத்தில் இறந்திருந்த அரசனின் உடலில் புகுந்து அதையும் கற்றுப் பிறகு தன் உடலுக்குத் திரும்பி அந்த விவாதத்தைத் தொடர்ந்து செய்து வென்றார் என்று சொல்கிறார்கள்... ஆனால் அப்படி அவர் கூடுவிட்டுக் கூடு பாய்ந்த போது கூட ஆதிசங்கரரின் உடலை அவருடைய சீடர்கள் பாதுகாத்து வந்தார்கள் என்றே தான் நான் படித்திருக்கிறேன்...."

ஜான் ஸ்மித் அந்தக் கதையைச் சுவாரசியமாகக் கேட்டுக் கொண்டார். யோசித்துப் பார்க்கையில் அந்த இல்லுமினாட்டிக் கூட்டத்தில் எதனால் எப்படி விஸ்வம் இறந்தான் என்பது அவர்கள் யாருக்குமே தெரியவில்லை. அந்தக் கூட்டத்தின் முடிவில் அவர்கள் கவனத்துக்கு அவன் வந்த போது அவன் உடல் கருகியிருந்தான். அதிகபட்ச வெப்பம் அவன் உடலில் பாய்ந்திருப்பதாகப் பிறகு பரிசோதித்து விட்டுச் சொன்னார்கள். அது எப்படி நடந்தது என்றும் தெரியவில்லை. எப்படியோ அவன் உயிரை விட வேண்டி வந்தது. அவன் எத்தனை தான் யோக சக்திகளில் நிபுணனாக இருந்த போதும் அந்தக் கருகிய உடலில் திரும்பி வர வழியில்லை. அப்படிப் பிறகும் நடக்க விடாமல் அவன் உடல் எரிக்கப்பட்டும் விட்டது...

ஜீப் நின்றது. மலைப்பகுதியில் சற்று உயரத்தில் இருந்த ஒரு சிறிய குடிசையை ஆராய்ச்சியாளர் ஜான் ஸ்மித்துக்குக் காட்டினார். "அங்கே தான் அந்த யோகி இருப்பார். ஆனால் அவரைப் பார்த்தால் யோகி மாதிரி தெரியாது..."

இருவரும் அந்தக் குடிசையை நோக்கி மேலேறி நடக்க ஆரம்பித்தார்கள். சில அடிகளே ஆனாலும் படிக்கட்டுகள் இல்லாத அந்த மலைப்பகுதியில் நடப்பது ஜான் ஸ்மித்துக்குச் சற்று சிரமமாகவே இருந்தது. ஆனால் ஆராய்ச்சியாளர் அந்தப் பகுதிகளில் நடந்து பழக்கப்பட்டவராக இருந்ததால் வேகமாக நடந்தார். ஜான் ஸ்மித் விழுந்து விடக்கூடாது என்ற கவனமும் இருந்ததால் மெல்லத் தான் போனார்.

அந்தக் குடிசைக்குள் ஒரு மரப்பலகையின் மீது அந்த யோகி தியானத்தில் அமர்ந்து இருந்தார். அந்த யோகி மிக மெலிந்து இருந்தார். அவர் முகத்தில் பேரமைதி தெரிந்தது. குடிசைக்குள் சில துணிமணிகளையும், அந்த மரப்பலகையையும் தவிர வேறு எந்தப் பொருளும் இல்லை.

ஜான் ஸ்மித்தைப் பார்த்து "சத்தம் செய்யாதீர்கள்" என்று உதட்டில் விரலை வைத்து சமிக்ஞை செய்த ஆராய்ச்சியாளர் குடிசைக்கு வெளியே இருந்த ஒரு பாறையில் அமர்ந்து தன் அருகில் அமர ஜான் ஸ்மித்துக்குச் சைகை செய்தார். ஜான் ஸ்மித் அவர் அருகில் அமர்ந்தார். பாறை மிகவும் குளுமையாக இருந்தது. வெயில் மென்மையாகத் தெரிய ஜான் ஸ்மித் அந்த இயற்கை அழகை ரசித்துப் பார்த்தார். சுற்றும், முற்றும் கண்ணுக்கு எட்டிய தொலைவு வரை வேறு வீடுகள் இருக்கவில்லை. அந்த மலைப்பாதையில் அவர்கள் வந்த பிறகு வேறெந்த வாகனமும் செல்லவில்லை. தூரத்தில் தெருவில் ஒரு சிறுவனும் மூதாட்டியும் சென்று கொண்டிருந்தார்கள்...

சுமார் இருபது நிமிடங்கள் கழித்து அந்த யோகி வெளியே வந்தார். எழுந்து நின்று வணக்கம் தெரிவித்த ஆராய்ச்சியாளர் ஜான் ஸ்மித்தை திபெத்திய மொழியில் அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார். உலகப்புகழ் பெற்ற விஞ்ஞானி என்ற அறிமுகம் அந்த யோகியை எந்த விதத்திலும் பாதித்தது போல் தெரியவில்லை. அவர் ஜான் ஸ்மித்தை அமைதி மாறாமல் பார்த்தார். ஜான் ஸ்மித் ஆராய்ச்சியாளர் வணக்கம் தெரிவித்த விதத்திலேயே சற்று குனிந்து அந்த யோகிக்கு வணக்கம் செய்தார்.

அந்த வணக்கத்தைச் சிறிய தலையசைப்பில் ஏற்றுக் கொண்ட யோகி ஜான் ஸ்மித்தை ஊடுருவிப் பார்த்தார். அந்த மெலிந்த மனிதரின் பார்வை எளிமையாய் இல்லை. ஆராய்ச்சியாளர் ஜான் ஸ்மித் வந்த காரணத்தை விவரித்த போது அந்த வார்த்தைகளில் அந்த யோகி கவனம் செலுத்தியது போலத் தெரியவில்லை. மாறாக ஜான் ஸ்மித்தைப் பார்த்தே அனைத்தையும் அறிந்து கொள்ள முடிந்தவர் போல அந்த யோகி இருந்தார். முடிவில் சிறியதாக அவர் முகத்தில் ஒரு நொடி நேரம் வந்து போன திகைப்பு, பார்வையாலேயே ம்யூனிக்கில் நடந்து முடிந்த நிகழ்வுகளை அறிந்து கொண்டதால் ஏற்பட்டது என்றும், முன்பே விஸ்வத்தையும் அறிந்து வைத்திருந்தவர் அவர் என்றும் ஏனோ ஜான் ஸ்மித்துக்குத் தோன்றியது.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, September 12, 2019

இல்லுமினாட்டி 13

ஜான் ஸ்மித் மனதில் எழுந்த எண்ணத்தையும் அந்த யோகி உணர்ந்தது போல் தோன்றியது. ஆனால் அதற்கு மேல் எந்த உணர்ச்சியையும் காட்டாமல் அந்த யோகி ஆராய்ச்சியாளர் சொன்னதை எல்லாம் கேட்டுக் கொண்டார். பின் அமைதியாகத் திபெத்திய மொழியில் சொன்னார். “அவர் கேட்கட்டும். எனக்குத் தெரிந்த வரையில் பதில் சொல்கிறேன்”.

அதை ஆராய்ச்சியாளர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து ஜான் ஸ்மித்திடம் சொன்னார். அதன் பின் ஜான் ஸ்மித் கேட்டதைத் திபெத்திய மொழியிலும், யோகி சொன்னதை ஆங்கிலத்திலும் ஆராய்ச்சியாளர் மொழிபெயர்த்துச் சொல்லி உதவினார்.

ஜான் ஸ்மித் கேட்டார். “கூடுவிட்டுக் கூடு பாயும் வித்தை தெரிந்தவர்கள் இந்தக் காலத்திலும் இருக்கிறார்களா?”

“இருக்கிறார்கள்”

“எங்கே இருக்கிறார்கள்?”

“பல இடங்களில் இருக்கிறார்கள். அதிகமாய் இந்த இமயமலையில். எத்தனையோ சக்தி வாய்ந்த யோகிகளின் இருப்பிடம் இந்த இமயம்”

“கூடு விட்டு கூடு பாயும் சக்தி படைத்தவன் எத்தனை காலம் இன்னொரு உடலில் இருக்க முடியும்?”

“அவன் விரும்புகின்ற வரை இருக்க முடியும்”

கேள்விகளுக்குப் பதில் சொல்ல யோகி அதிக நேரம் எடுத்துக் கொள்ளவில்லை. கேட்டவுடனேயே பதில் தெளிவாக வந்த விதம் ஜான் ஸ்மித்தைக் கவர்ந்தது. இந்த யோகி உண்மையாகச் சக்தி படைத்தவர். இவரிடம் குழப்பமே இல்லை...

ஜான் ஸ்மித் கேட்டார். “விரும்புகிற வரை என்றால் நிரந்தரமாகவே கூடத் தங்கி விட முடியுமா?”

இந்தக் கேள்விக்காவது பதில் சற்றுத் தாமதித்து வரும் என்று ஜான் ஸ்மித் எதிர்பார்த்தார். ஆனால் அதற்கும் உடனடியாகப் பதில் வந்தது. “முடியும் என்றாலும் அதிகமாக அப்படி நடப்பதில்லை...”

“ஏன்?”

“இன்னொரு உடம்பில் தங்குவது அவ்வளவு இதமான அனுபவம் அல்ல. அதைத் தனதென்று உணர்வதும் சுலபமாக உணர முடிந்ததல்ல.... அதனால் தான் யோகி தன் உடலில் எத்தனை குறைபாடுகள் இருந்தாலும் அதைப் பாதுகாத்து விட்டே அடுத்த உடலுக்குள் பிரவேசிப்பான். சென்ற நோக்கம் முடிந்தவுடன் திரும்பித் தன் உடலுக்குள் வந்து விடுவான்.”

ஜான் ஸ்மித் கேட்டார். “ஒரு வேளை அந்த யோகியின் பழைய உடல் பாதுகாக்கப்படவில்லை என்று வைத்துக் கொள்வோம். அல்லது அந்த உடல் அழிந்து தான் அந்த யோகி வேறு உடலுக்குப் போயிருந்தால் அந்த இன்னொரு உடலில் நீண்ட காலம் இருந்து விட முடியும்?”

“முடியும்”

“அவனுடைய பழைய சக்திகள் அனைத்தும் அந்தப் புதிய உடலுக்குப் போன பிறகும் அப்படியே குறையாமல் இருக்குமா?”

“யோகியின் சக்திகளுக்கு அந்தப் புதிய உடலும் ஒத்துழைக்க வேண்டும். அப்படி அந்த உடல் ஒத்துழைக்கா விட்டால் யோகி எந்த சக்தியையும் அந்த உடல் அனுமதிக்கும் அளவுக்கு உட்பட்டே உபயோகிக்க முடியும்”

ஜான் ஸ்மித் அந்தப் பதிலை உள்வாங்கிச் சிறிது யோசித்தார். பின் கேட்டார். “யோகி தன் சக்தியால் அந்தப் புதிய உடலைத் தனக்கு வேண்டியது போல் மாற்றிக் கொள்ள முடியாதா?”

“ஓரளவு முடியும். ஆனால் முழுவதுமாக முடியாது. ஏனென்றால் அந்த உடலுக்கு என்று சில எல்லைகள் இருக்கும். அந்த எல்லைகளைக் காலப்போக்கில் அவன் நீட்டிக் கொள்ள முடியும், ஓரளவு மாற்றிக் கொள்ள முடியும். ஆனால் உள்ளே புகுந்தவுடனேயே அவன் எல்லாவற்றையும் தனக்கு வேண்டியபடி மாற்றிக் கொள்ள முடியாது”

ஜான் ஸ்மித் கேட்டார். “ஏன்?”

யோகியின் முகத்தில் சின்னதாய் ஒரு புன்னகை அரும்பியது. அவர் சொன்னார். “எத்தனை சக்திகள் பெற்றிருந்தாலும் யோகி கடவுளாகி விட முடியாது. அவன் சக்திகளை உடல் தாங்க வேண்டும். அந்தச் சக்திகளுக்கு அந்த உடல் ஈடு கொடுக்க வேண்டும்.”

“எனக்குப் புரியவில்லை. எனக்குப் புரிகிறபடி விளக்க முடியுமா?” ஜான் ஸ்மித் கேட்டார்.

அந்த யோகி அப்போதும் யோசிக்க நேரம் எடுத்துக் கொள்ளவில்லை. “உடல் ஒரு எலக்ட்ரிக் வயர் என்று வைத்துக் கொள்ளுங்கள். சக்திகள் மின்சாரம் மாதிரி. அதிக அளவிலான மின்சாரத்தை அந்த வயர் தாங்குமா என்பது அந்த வயரின் இயல்பான தன்மையைப் பொருத்தது. அது தாங்க முடிந்ததை விட அதிகமாய் மின்சாரம் அந்த வயரில் ஊடுருவினால் அந்த வயர் கருகி விடும்....”

அவர் அந்த உதாரணத்தைச் சொன்னவுடனே ஜான் ஸ்மித்துக்கு விஸ்வத்தின் உடல் இல்லுமினாட்டியின் கூட்டத்தில் கருகியது நினைவுக்கு வந்தது. அவனால் தாங்க முடியாத அளவு ஏதோ ஒரு சக்தி அவனுக்குள்ளே ஊடுருவி இருக்கிறது. அதனால் தான் கருகி இருக்கிறது. அப்படிக் கருக வைத்த சக்தி க்ரிஷ் அனுப்பிய சக்தியாக இருக்குமா அல்லது வேறெதாவது சக்தியாக இருக்குமா?...

மனதை மறுபடியும் தான் வந்த நோக்கத்திற்கே திரும்பக் கொண்டு வந்த ஜான் ஸ்மித் கேட்டார். “உங்கள் உதாரணம் பிடித்திருக்கிறது. ஆனால் எனக்கு இன்னமும் புரியாதது என்னவென்றால் யோகியின் உடலும் மனித உடல், அவர் புகுந்த இன்னொரு உடலும் மனித உடல் என்றால் இரண்டும் ஒரே வித வயர்கள் அல்லவா?”

“தோற்றத்திலும் சாதாரண செயல்பாடுகளிலும் இரண்டும் ஒரே விதமாக இருக்கலாம். ஆனால் உண்மையில் இரண்டுக்கும் இடையே இருக்கும் வித்தியாசம் மலைக்கும் மடுவுக்கும் இடையே இருக்கிற அளவு வித்தியாசம் இருக்கலாம். ஏனென்றால் யோகி தன் உடலைப் பயிற்சியாலும், கட்டுப்பாட்டாலும் சக்தி வாய்ந்ததாக மாற்றி வைத்திருப்பான். ஆனால் அவன் உள்ளே நுழைந்தது இன்னொரு யோகியின் உடலாக இல்லா விட்டால் அதன் பலவீனங்களை அவன் சகித்தே ஆக வேண்டும்...”

ஜான் ஸ்மித் அந்த வார்த்தைகளின் அர்த்தத்தை யோசித்து மனதில் இருத்தி விட்டுப் பின் தன் மனதில் எழுந்த கேள்வியைக் கேட்டார். “உடனடியாக இல்லா விட்டாலும் சிறிது சிறிதாக அந்த உடலைப் பயிற்சியாலும், கட்டுப்பாட்டாலும் அவனால் தனக்கு வேண்டியபடி மாற்றிக் கொள்ள முடியும் அல்லவா?”

“ஓரளவு முடியும்”

ஜான் ஸ்மித் அடுத்த கேள்வியைக் கேட்டார். “இப்படிக் கூடுவிட்டுக் கூடு பாய ஒருவருக்கு இன்னொருவர் உதவ முடியுமா? ஒரு குறிப்பிட்ட ஆவியை இன்னொருவர் உடம்பில் வரவழைக்க வூடு மக்கள் சடங்குகள் செய்கிறார்களே அந்த வகையில்”

“முடியும்”

“அந்த வகையிலும் ஒரு ஆவி இன்னொருவர் உடம்பில் நீண்ட காலம் தங்க முடியுமா?”

“அந்தச் சடங்குகள் மூலம் இறக்கப்படும் ஆவி ஒரு குறிப்பிட்ட காலம் மட்டும் தான் இன்னொரு உடம்பில் தங்க முடியும். அதன் பின் தங்க இந்த உடம்பு அனுமதிக்காது. அந்த ஆவியும் தங்க விரும்பாது”

“அந்த வூடு சடங்குகள் மூலம் ஆவி உடலுக்குள் வருவதும், யோக சக்தி “பிரகாமியம்” மூலம் ஒரு உடலை விட்டு இன்னொரு உடலுக்கு ஆவி போவதும் ஒரே மாதிரியானது தானா?”

“இல்லை. பிரகாமியம் யோகியின் தனிப்பட்ட முயற்சி, அந்தச் சடங்குகள் பலரின் கூட்டு முயற்சி. பிரகாமியத்தில் இன்னொரு உடலுக்குப் போவதிலும், திரும்பத் தன் உடலுக்கு வருவதிலும் யோகிக்குப் பூரண கட்டுப்பாடு இருக்கிறது. வூடு சடங்கில் அப்படி எதுவும் இல்லை...”

ஜான் ஸ்மித் யோசித்தார். ம்யூனிக்கில் நடந்திருப்பது இரண்டு விதங்களிலும் சேர்த்து விட முடியாதபடி இருப்பதாகவே உணர்ந்தார். அந்தக் கிதார் இசையைத் தவிர வூடுவில் சம்பந்தப்படுத்த அதில் எதுவும் இல்லை. அதே போல் பிரகாமியம் என்று முழுவதுமாகச் சொல்லி விடவும் முடியாதபடி நிகழ்வு இருந்தது. முதலில் ம்யூனிக்கில் நடந்திருப்பதைச் சந்தேகத்திற்கு இடமில்லாதபடி புரிந்து கொள்ள வேண்டும் என்று தீர்மானித்த ஜான் ஸ்மித் தன் சந்தேகத்தைக் கவனமாக வார்த்தைப்படுத்திக் கேட்டார்.

“ஒருவேளை ஒரு சக்திவாய்ந்த யோகியின் உடலுக்கு ஒரு ஆபத்து வந்து உயிர் இழக்க வேண்டிய நிலைமை உருவாகிறது என்று வைத்துக் கொள்வோம். அப்படி உயிரை விடும் சந்தர்ப்பத்தில் இன்னொரு உடலில் உயிர் போய்க் கொண்டிருக்கிறது. அந்த உடலில் இந்த யோகித் தன் சக்தியை உபயோகித்துப் போய் புகுந்து கொள்ள முடிவது நடக்குமா?”

“உண்மையான யோகியாக இருந்தால் அது நடக்காது. அந்த யோகி அதை விரும்பவும் மாட்டான். உலகில் இருக்க வேண்டிய அவனுடைய காலம் முடிந்து விடாமல் அவன் உடல் அழிய ஆரம்பிக்காது. அப்படி இயற்கையாய் பார்த்து முடித்து வைக்கும் வாழ்க்கையை நீட்டிப்பதை எந்த யோகியும் விரும்ப மாட்டான்...”

விஸ்வம் யோகியின் ரகத்தில் சேர்த்துக் கொள்ளப்படக்கூடியவன் அல்ல என்றே ஜான் ஸ்மித்துக்குத் தோன்றியது. அவர் சொன்னார். “யோக சக்திகளைக் கற்றுக் கொண்டாலும் யோகியின் பக்குவம் பெற்றிருக்காத ஒருவனைப் பற்றிப் பேசுவதாக வைத்துக் கொள்வோம். அவன் அழியும் தன் உடலை விட்டு உயிர் போய்க் கொண்டிருக்கும் இன்னொரு உடலில் புகுந்து கொள்ள முடியுமா?”

யோகி தூரத்திலிருந்த ஒரு மலை முகட்டைப் பார்த்தபடியே சொன்னார். “அபூர்வம் என்றாலும் முடியும். அப்படி நடந்தால் அவனுடைய கர்மாவும், அதற்குக் காரணமானவர்களின் கர்மாவும் அது போன்ற அனர்த்தத்திற்கு வழி ஏற்படுத்திக் கொடுப்பதாகவே அதை எடுத்துக் கொள்ள வேண்டும்”

அப்படியானால் நடந்திருப்பது விஸ்வத்தின் கர்மாவும், அந்த நிகழ்வுக்குக் காரணமானவர்களின் கர்மாவும் சேர்ந்து உருவாகியிருக்கும் அனர்த்தமா? ஜான் ஸ்மித்தை அந்தச் சிந்தனை சுட்டது.

(தொடரும்)

என்.கணேசன்

இல்லுமினாட்டி 14

ஜான் ஸ்மித் இனி என்ன கேட்பது என்று யோசிக்கையில் இனி ஒன்றும் சொல்வதற்கு இல்லை என்பது போல் அந்த யோகி தன் குடிசைக்குள் திரும்பத் தயாரானார். இருந்த இடத்திலிருந்தபடியே எல்லாவற்றையும் அறிந்தவர் போலத் தெரிந்த அவரிடம் ஜான் ஸ்மித் அவசரமாகக் கேட்டார். “அனர்த்தங்கள் உருவாகி விட்ட பின் அதற்குத் தீர்வு எப்படிக் காண்பது?”

யோகியின் கண்களில் மெலிதாய் புன்னகை மிளிர்ந்தது. “உலகத்தை உருவாக்கியவனுக்கு அதைப் பாதுகாப்பது எப்படி என்றும், அழிப்பது எப்போது என்றும் தெரியும். எல்லாவற்றையும் அவன் பார்த்துக் கொள்வான்.”

ஜான் ஸ்மித் மெல்லக் கேட்டார். “பொறுப்புள்ள மனிதர்கள் அப்படி அலட்சியமாக இருந்து விடக்கூடாதல்லவா?”

“பொறுப்பை உணரும் மனிதனுக்கு அதை நிறைவேற்றும் வழியும் தானாய்த் தெரியவரும்”

சொல்லி விட்டு அந்த யோகி போய் விட்டார்.

ஆராய்ச்சியாளர் திகைப்புடன் இருவரையும் பார்த்தார். இருவருக்கிடையே மொழி பெயர்ப்பு செய்ய ஆரம்பித்த போது கேள்விகளும், பதில்களும் இயல்பாக இருந்தது போலத் தான் இருந்தது. ஆனால் போகப் போக இந்த உரையாடலில் ஏதோ ஒன்று விளங்காதது போன்றதொரு உணர்வு அவருக்கு ஏற்பட்டது. கடைசியில் பேசியதோ சுத்தமாகப் புரியவில்லை. ஆனால் கேட்டு விளங்கிக் கொள்ள அவர் நினைக்கவில்லை.

இருவரும் அங்கிருந்து கிளம்பினார்கள்.

ம்யூனிக் விமானநிலையத்தில் இறங்கிய ஜான் ஸ்மித் தன் வீட்டுக்குக் கூடச் செல்லாமல் முதலில் எர்னெஸ்டோ வீட்டுக்குச் சென்றார். அவரைப் பார்த்த பிறகு தான் மெலிதாக ஒலித்துக் கொண்டிருந்த பிதோவன் இசையை எர்னெஸ்டோ நிறுத்தினார். ஒரு கணம் அவரைப் பார்க்கையில் ஜான் ஸ்மித்துக்குப் பொறாமையாக இருந்தது. இல்லுமினாட்டியில் இணைந்த பிறகு பல ஆண்டுகள் எர்னெஸ்டோவை அவர் கூர்ந்து கவனித்து வருகிறார். ஒரு முறை கூட அந்த மனிதர் பதற்றமாகவோ, பொறுமை இழந்த நிலைமையிலோ இருந்து அவர் பார்த்ததில்லை. எத்தனை கவலைக்குரிய சூழ்நிலைகளில் இருந்தாலும் இசையில் மூழ்கவும், ஓய்வாக இருக்கவும் முடிந்த அதிசய மனிதர் அவர். இந்த விசேஷத் தன்மை இல்லா விட்டால் இல்லுமினாட்டியின் தலைவராக இத்தனை ஆண்டு காலம் அவர் தாக்குப் பிடித்திருந்திருக்க முடியாது...

ஜான் ஸ்மித் ஆராய்ச்சியாளரிடம் பேசியதையும், யோகியிடம் பேசியதையும் ரகசியமாகப் பதிவு செய்து கொண்டு வந்திருந்தார். அந்தப் பேச்சுகளை எர்னெஸ்டோ கண்களை மூடிக் கொண்டு கேட்டார். கேட்டு முடித்த பின் எர்னெஸ்டோ சிந்தனையில் ஆழ்ந்தார்.

இரண்டு நிமிடங்கள் கழித்து ஜான் ஸ்மித் சொன்னார். “என்ன நடந்திருக்கிறது என்று அந்த யோகிக்கு யோகசக்தி மூலம் தெரியும் என்ற உணர்வே எனக்கு அவரிடம் பேசும் போது ஏற்பட்டது. ஒருவேளை விஸ்வத்தையே அந்த யோகிக்குத் தெரிந்திருக்கலாம் என்று கூட அங்கிருந்து திரும்பி வரும் போது எனக்குத் தோன்றியது. ஆனால் அவர் எதையும் தெரிந்ததாய்க் காட்டிக் கொள்ளவில்லை.”

எர்னெஸ்டோ புன்னகைத்தார். “இந்த விஷயத்தில் நீயும் உனக்கு இருக்கும் சம்பந்தத்தைச் சொல்லவில்லை. அதனால் அவரும் அவருக்குச் சம்பந்தம் இருந்திருந்தாலும் அதைக் காட்டிக் கொள்வது அவசியமில்லை என்று நினைத்திருக்கலாம்.. ஆனாலும் நீ கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் தெளிவாகவே பதில்களைச் சொல்லி இருக்கிறார். சரி இப்போது நடந்திருப்பது பற்றி உன் அபிப்பிராயம் என்ன?”

“விஸ்வத்தின் ஆவி தான் அந்தப் போதை மனிதனின் உடலில் புகுந்திருக்கிறது என்பதில் சந்தேகமேயில்லை தலைவரே”

“முதலில் விஸ்வம் ஏன் இறந்தான், எப்படி இறந்தான் என்பது பற்றி உனக்கு ஏதாவது அனுமானம் இருக்கிறதா?”

“அந்த யோகி சொன்ன எலக்ட்ரிக் வயர் உதாரணம் வைத்துப் பார்த்தால் அவன் உடல் தாங்க முடியாத ஏதோ சக்தி அவன் உடலில் பாய்ந்து தான் அவன் உடல் கருகி அவன் இறந்திருக்கிறான் என்று தோன்றுகிறது. அந்தச் சக்தியை அவன் உடம்பில் பாய்ச்சியது எது யார் என்று தெரியவில்லை. இல்லுமினாட்டி சின்னமாகக்கூட இருக்கலாம்...”

“அந்த இல்லுமினாட்டி சின்னம் விஸ்வத்திடம் சில நாள்கள் இருந்தன. அது அவனிடம் இருக்கும் போது அவ்வப்போது மின்னியும் இருக்கிறது. ஆனால் அவனை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை.” எர்னெஸ்டோ நினைபடுத்தினார்.

ஜான் ஸ்மித்துக்கும் அது சரியென்றே தோன்றியது. அவர் சிறிது யோசித்து விட்டுச் சொன்னார். “அப்படியானால் கடைசி நேரத்தில் ஏதாவது சக்தியை விஸ்வம் முயற்சி செய்து பார்த்திருக்கலாம். அது அவன் தாங்க முடியாத அளவு சுட்டிருக்கலாம்....”

எர்னெஸ்டோ சொன்னார். “அவன் எதிலும் முழுத் தேர்ச்சி பெறாமல் அரைகுறையாய் கற்றுக் கொண்டு விட்டதில்லை. அதனால் அவன் கற்ற சக்தியாய் இருக்காமல் அது வேறு ஏதாவது சக்தியாக இருக்கலாம்....”

ஜான் ஸ்மித் புன்னகைத்தார். இந்தக் கிழவரின் அறிவுக்கூர்மைக்கு எட்டாத விஷயங்கள் குறைவு. ஜான் ஸ்மித் தலையசைத்து விட்டுத் தன் அனுமானத்தைத் தொடர்ந்தார். “அவன் உயிரை விட்ட போது பக்கத்து ஆஸ்பத்திரியில் போதை மனிதனின் உடலில் இருந்து உயிர் போய்க் கொண்டிருந்தது. விஸ்வத்தின் ஆவி அந்த உடலில் புகுந்திருக்கலாம்....”

ஒரு விஞ்ஞானியான அவருக்கு இந்த வகை அனுமானங்கள் வேறு சந்தர்ப்பங்களில் பழைய அரேபியக் கதைகளின் கற்பனையாகவே தோன்றி இருக்கும் என்றாலும் நடந்திருப்பதை எல்லாம் ஆழமாக யோசித்துப் பார்க்கையில் இப்படித்தான் நடந்திருக்கும் என்று உறுதியாகவே தோன்றியது.

“அந்தக் கிதார் இசை... அவனை அழைத்துப் போகக் காரில் வந்தவர்கள்...” எர்னெஸ்டோ கேட்டார்.

ஜான் ஸ்மித் சொன்னார். “விஸ்வத்திற்கு உதவ யாரோ ஒருவர் அல்லது சிலர் இருந்திருக்கிறார்கள். ஆனால் நமக்குத் தெரிந்த வரை விஸ்வத்துடன் ம்யூனிக் வந்தவர்கள் யாருமில்லை அல்லவா?”

எர்னெஸ்டோ சொன்னார். “விஸ்வத்தைப் பற்றி நவீன்சந்திர ஷா நம்மிடம் சொன்னதில் இருந்து அவனை நாம் கண்காணித்தே வந்திருக்கிறோம். ஒருசில சமயங்களில் நம் ஆட்களின் கண்காணிப்புக்கு அவன் குறுகிய காலம் தப்பிப் போனதும் இருக்கிறது. ஆனால் அவனுடன் யாரும் தொடர்பு கொண்டிருந்ததோ, கூட்டாளி ஒருவன் இருந்ததோ இல்லை என்பதில் சந்தேகமே இல்லை....”

“ஒருவேளை அந்த நபர் அல்லது நபர்கள் விஸ்வத்துக்கே தெரியாமல் ம்யூனிக் வந்திருக்கலாம்....” ஜான் ஸ்மித் சொன்னார்.

எர்னெஸ்டோ அந்த அனுமானத்தில் அபாயத்தை உணர்ந்தார். ஆனால் அது சாத்தியம் தான் என்பதில் அவருக்கும் சந்தேகம் இல்லை. அந்த நபர் அல்லது நபர்கள் ஏதாவது ரகசிய விதங்களில் விஸ்வத்துடன் தொடர்பு கொண்டிருந்தாலும் கூட அது இல்லுமினாட்டியின் கவனத்திலிருந்து தப்பி இருக்காது. ஆனால் அவர்கள் விஸ்வத்துக்கே தெரியாமல் வந்திருந்தாலும் எச்சரிக்கையுடன் தொலைவிலேயே இருந்திருந்தாலும் இல்லுமினாட்டி அதைக் கண்டுபிடித்திருக்க வழியில்லை...

எர்னெஸ்டோ சொன்னார். “இது பற்றி நாம் க்ரிஷிடமும் பேசலாம். விஸ்வத்தின் இப்போதைய அவதார நிலைமை என்ன என்று நீ நினைக்கிறாய்?”

ஜான் ஸ்மித் சொன்னார். “யோகி சொன்னதை வைத்துப் பார்க்கும் போது விஸ்வம் பழைய சக்திகளுடன் சௌகரியமாக அந்த உடலில் இருக்க வாய்ப்பில்லை. மூளையில் சாஃப்ட்வேர் அனைத்தும் சேர்க்கப்பட்டு விட்டதாகத் தான் தெரிகிறது. ஆனால் ஹார்டுவேர் - அந்தப் போதை மனிதனின் உடம்பு - எந்த அளவு ஒத்துழைக்கும் என்பது கேள்விக்குறி தான். ஆனால் அந்த யோகி சொல்வதைப் பார்த்தால் ஓரளவு அவன் அந்த உடம்பைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட முடியும்”

எர்னெஸ்டோ சொன்னார். “அவனை அழைத்துக் கொண்டு போன ஆட்கள் யார், அவர்கள் உத்தேசம் என்ன, அவர்களிடம் இருக்கும் சக்திகள் என்ன என்று நமக்குத் தெரியவில்லை....”

ஜான் ஸ்மித்துக்கும் அது உறுத்தலாகவே இருந்தது. அந்தக் கிதார் ஒலி வூடு சடங்கில் ஆவியை ஒரு உடலில் வரவழைக்கும் இசை என்பதைத் தெரிந்து கொண்ட பிறகு அந்த இசையை ஒலிக்கச் செய்தவர்கள் இந்தச் சக்தி விஷயங்களில் தேர்ச்சி பெற்றவர்கள் என்பது நிச்சயமாகத் தெரிகிறது. எர்னெஸ்டோ சொல்வது போல் அவர்கள் சக்திகள் என்ன, உத்தேசம் என்ன என்பதை அனுமானிக்கவும் எதுவும் தோன்றவில்லை. அவர் மெல்லக் கேட்டார். “அந்தக் காரைக் கண்டுபிடிக்க முடிந்ததா?”

எர்னெஸ்டோ சொன்னார். “அந்த மாடல் கருப்புக் கார் ம்யூனிக்கில் குறைந்தது ஆயிரமாவது இருக்கும் என்று சொல்கிறார்கள். அதில் இருந்த நம்பர் ப்ளேட் போலி என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்... மூன்று கிலோ மீட்டர் வரை அந்தக் காரின் ஓட்டத்தைக் கண்டுபிடித்து விட்டார்கள். அதற்குப் பின் அது மாயமாகி விட்டது. அந்த நம்பர் ப்ளேட்டை அதற்குப் பிறகு மறுபடி எங்கோ ஒரு இடத்தில் மாற்றி இருக்கலாம் என்று போலீஸ்காரர்கள் நினைக்கிறார்கள்...”

அங்கு சில நிமிடங்கள் மௌனம் நிலவியது. இனி விஸ்வமும், அவனை அழைத்துச் சென்றவர்களும் என்ன செய்வார்கள், இல்லுமினாட்டியின் பாதையில் குறுக்கிடுவார்களா இல்லை மாட்டார்களா என்பதை இருவராலும் அனுமானிக்க முடியவில்லை.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, September 26, 2019

இல்லுமினாட்டி 15

க்ரிஷின் ரகசிய அலைபேசி நள்ளிரவு இரண்டு மணிக்கு அலறியது. அந்த ரகசிய அலைபேசி இல்லுமினாட்டி நபர்கள் மட்டுமே அழைக்கக்கூடியது என்பதால் க்ரிஷ் திகைப்புடன் கண்விழித்து அழைத்தது யார் என்று பார்த்தான். எர்னெஸ்டோ!

அவன் திகைப்பு அதிகரித்தது. இல்லுமினாட்டியின் ஆட்கள் மிக முக்கியமாகவும், அவசரமாகவும் இருந்தால் ஒழிய கூப்பிட மாட்டார்கள் என்று சொல்லி இருந்தார்கள். அதனால் அப்படி அழைத்தால் உறுப்பினர்கள் அனைவரும் உடனடியாக அந்த ரகசிய அலைபேசியை எடுத்துப் பேச வேண்டும் என்றும் சொல்லி இருந்தார்கள். அவன் ம்யூனிக்கில் இருந்து வந்து மூன்று நாட்கள் கூட முழுமையாய் முடிந்து விடவில்லை. அதற்குள் இல்லுமினாட்டியின் தலைவரே அழைக்கிறார் என்றால் அதிமுக்கிய அவசரத்தகவல் ஏதோ தான் இருக்க வேண்டும் என்று எண்ணியபடியே க்ரிஷ் பேசினான். "ஹலோ"

எர்னெஸ்டோவின் குரல் அமைதியாகவும், விளையாட்டாகவும் ஒலித்தது. "க்ரிஷ் உன் நண்பன் செத்த பிறகு கூட அசத்தி இருக்கிறான்"

க்ரிஷ் குழப்பத்துடன் கேட்டான். "எப்படி?"

எர்னெஸ்டோ நடந்ததை எல்லாம் தெரிவித்தார். க்ரிஷ் நம்ப முடியாமல் தடுமாறினான். பின் மெல்லக் கேட்டான். "சார் நடந்திருப்பதற்கும் அவனுக்கும் சம்பந்தமில்லாமல் கூட இருக்கலாம் அல்லவா? அந்தப் போதை மனிதன் டேனியல் பிழைத்துக் கொண்டது விஸ்வத்துக்குச் சம்பந்தமில்லாத ஒரு மருத்துவ அதிசயமாகக் கூட இருக்கலாம் தானே"

"இருக்கலாம். அந்த டேனியல் விஸ்வம் இறந்த அதே நேரத்தில் இறக்க ஆரம்பித்து உயிர் பிழைக்காமல் இருந்திருந்தால். அந்தக் கிதாரை யார் வாசித்தது என்று நமக்குத் தெரிந்திருந்தால். அந்த ட்யூன் வூடு சடங்கில் ஆவியை ஒரு உடம்பில் ஏற்றுவதாக இல்லாமல் இருந்தால். டேனியல் தன் வாழ்க்கையில் எப்போதுமே பயன்படுத்தாத மூளையின் சக்தி மையங்களில் அசாதாரண செயல்பாடுகள் இல்லாமல் இருந்தால். உயிர்பிழைத்த டேனியல் ரகசியமாக அதிகாலையில் ஆஸ்பத்திரியை விட்டுத் தப்பித்துச் செல்லாமல் இருந்திருந்தால். அந்த அதிகாலை நேரத்தில் அவனை அழைத்துப் போனது யார் என்பதில் எந்த ரகசியமும் இல்லாமல் இருந்தால்..."

க்ரிஷுக்குத் தலைசுற்றியது. அவர் சொல்வது அனைத்தும் உண்மை. இதில் விஸ்வத்தின் முத்திரை தெளிவாகவே தெரிகிறது. அவன் கூடு விட்டுக் கூடு பாயும் வித்தையையும் விட்டு வைக்கவில்லை போலிருக்கிறது.

எர்னெஸ்டோ கேட்டார். "உனக்கு அவன் கூட்டாளி யாராக இருக்கும் என்ற யூகம் ஏதாவது இருக்கிறதா?"

க்ரிஷ் யோசனையுடன் சொன்னான். "அவன் நிறைய பேரை வேலைக்கு வைத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் அவனுக்குக் கூட்டாளிகள் யாரும் இருந்ததாகத் தெரியவில்லை"

"அவன் வேலைக்கு வைத்துக் கொண்டிருந்த ஆள் யாராவது தெரியுமா?" எல்லாவற்றையும் முன்பே அறிந்திருந்த போதும் எர்னென்ஸோ கேட்டார்.

"மனோகர் என்று ஒருவனைத் தெரியும்..." என்று ஆரம்பித்த க்ரிஷ் தன் காதலி ஹரிணியை மனோகர் கடத்திக் கொண்டு போனதையும், எப்படியோ சாமர்த்தியமாக போலீஸ் அதிகாரி செந்தில்நாதன் அவளை மீட்டு அவனைக் கைது செய்ததையும் விவரித்தான். இப்போது அவன் சிறையில் இருப்பதையும் தெரிவித்தான். "ஆனால் அவனுக்கும் முதலாளியின் தனிப்பட்ட விஷயங்களோ, கூட்டாளிகள் யாராவது இருந்திருந்தால் அதைப்பற்றியோ தெரிந்திருக்க வாய்ப்பில்லை."

எர்னெஸ்டோ சொன்னார். "ஆனால் அந்த வேலையாளுக்கும் ஏதாவது ஒரு சின்னத் தகவல் நினைவு வரலாம். அந்தத் தகவல் மூலம் நாம் இன்னொரு தகவலைக் கண்டுபிடிக்கலாம். இப்படிச் சங்கிலித் தொடராகப் போய் நாம் நமக்கு வேண்டிய தகவலைக் கண்டுபிடிக்கலாம்."

அவர் கூறியது உண்மை என்றே க்ரிஷுக்கும் பட்டது. "நாளைக் காலையிலேயே அவனை விசாரிக்க ஏற்பாடு செய்கிறேன் தலைவரே"

எர்னெஸ்டோ சொன்னார். "ஒருவேளை நாம் பயப்படுவது போல் விஸ்வம் டேனியல் உடம்பில் சேர்ந்திருந்தால் பழைய சக்திகள் அவனுக்கு எத்தனை எந்த அளவில் இருக்கும் என்பது தெரியாது. ஆனால் காலப்போக்கில் முழுவதுமாக இல்லா விட்டாலும் அவன் ஓரளவு அந்தச் சக்திகளைப் பெற்று விடலாம் என்பது திபெத்திய யோகியின் அபிப்பிராயம். அப்படி அவன் தயாரானால் முதலில் தொடர்பு கொள்ளும் நபர் மனோகராக இருக்கலாம். அல்லது நீயாகவும் இருக்கலாம் என்று தோன்றுகிறது க்ரிஷ்... நீ எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏதாவது தகவல் கிடைத்தால் உடனே கூப்பிட்டுச் சொல்"

க்ரிஷ் கேட்டான். "ஒருவேளை விஸ்வம் டேனியலின் பாஸ்போர்ட்டைப் பயன்படுத்தும் வாய்ப்பிருக்கிறதா?"

எர்னெஸ்டோ அமைதியாகச் சொன்னார். "டேனியலின் பாஸ்போர்ட், க்ரெடிட் கார்ட், அவன் பயன்படுத்தினால் முதலில் அது நம் கவனத்துக்கு வர ஏற்பாடு செய்திருக்கிறோம்.... அதை அவனும் எதிர்பார்த்திருப்பான். ஆனால் அவன் வேறு ஏதாவது போலி ஐ.டி, பாஸ்போர்ட்டில் உலாவ வாய்ப்பிருக்கிறது. அதை நாமும் எதிர்பார்த்தே இருப்பது புத்திசாலித்தனம்."

அவர் பேச்சை முடித்துக் கொண்டார். அத்துடன் க்ரிஷின் தூக்கமும் முடிந்து போனது. அவன் இல்லுமினாட்டி கூட்டத்தில் பேச இந்தியாவிலிருந்து கிளம்பிய போது அவன் அண்ணன் உதய்க்கும், காதலி ஹரிணிக்கும் மட்டும் தான் சுருக்கமாக உண்மையைச் சொல்லி இருந்தான். ஆனால் அவன் ம்யூனிக்கில் இல்லுமினாட்டியில் இணைந்ததை அவர்களிடம் கூடச் சொல்லவில்லை. அவர்களைப் பொருத்த வரை அவன் கண்களைக் கட்டிக் கொண்டு இல்லுமினாட்டி கூட்டத்தில் பேசினான். பேச்சின் முடிவில் மர்மமான முறையில் விஸ்வம் இறந்திருந்தான். கண்கள் கட்டப்பட்ட நிலையிலேயே அவனைத் திரும்பவும் ஓட்டல் அறையில் கொண்டு வந்து விட்டார்கள். அவன் மறுநாளே அங்கிருந்து கிளம்பி இந்தியா வந்து விட்டான். இல்லுமினாட்டியில் இணைந்திருப்பது குடும்பத்தினருக்குக் கூடத் தெரிந்திருக்கக்கூடாது என்பது இல்லுமினாட்டியின் விதிமுறை என்பதற்காக மட்டுமல்லாமல் அவர்களுக்குத் தெரிந்தால் நிம்மதியாக இருக்க மாட்டார்கள் என்ற காரணத்திற்காகவும் கூட அதை அவன் மறைத்திருந்தான்.

இப்போது விஸ்வத்தின் இந்தப் புதிய அவதாரம் பற்றி அனாமதேயமாக அங்கிருந்து தகவல் வந்ததாக உதயிடமும், ஹரிணியிடமுமாவது அவன் தெரிவிக்க வேண்டும். ஆபத்து இன்னும் முடிந்து விடவில்லை என்று எச்சரிக்க வேண்டும். அதை நினைத்த போதே மனம் சலிப்பை உணர்ந்தது. இனி விஸ்வம் என்ன செய்யப்போகிறான், அதை எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்ற மலைப்பும் கூடவே எழுந்தது. அதிகாலை வரை பல்வேறு அனுமானங்களில் அவன் மனம் அலைபாய்ந்தது.

அதிகாலையிலேயே அவன் போலீஸ் அதிகாரி செந்தில்நாதனுக்குப் போன் செய்தான். புதிய தகவல்கள் கிடைத்திருக்காததால் அவர் க்ரிஷுக்கு வாழ்த்து தெரிவித்தார். "விஸ்வம் செத்துட்டான்னு கேள்விப்பட்டேன். ஒரு பெரிய பீடை நம்மள விட்டது. வாழ்த்துக்கள்".

"பீடை அவ்வளவு சீக்கிரம் விடற மாதிரி தெரியல சார். செத்த பிறகும் இன்னொரு உடம்புல புகுந்திருக்கிறதா ராத்திரி தகவல் கிடைச்சிருக்கு."

செந்தில்நாதன் திகைத்தார். விஸ்வத்தைத் தவிர வேறு யாரைப் பற்றி இப்படி ஒரு செய்தி கிடைத்திருந்தாலும் செந்தில்நாதன் சிரித்து அந்தத் தகவலைக் கடந்து போயிருப்பார். ஆனால் விஸ்வத்தின் சக்திகள் பற்றியத் தகவல்கள் பல சேகரித்திருந்த அவருக்கு இதுவும் அவனால் முடியக்கூடிய காரியமே என்று தோன்றியது.

க்ரிஷ் சொன்னான். "அப்படி இன்னொரு உடம்புல அவன் நுழைய வேற யாரோ உதவியிருக்கிறதா தெரியுது. இப்போ அவன் புகுந்திருக்கிறதா அவங்க சந்தேகப்படறது ஒரு பலவீனமான உடம்பில். அதில் அவன் பழைய சக்திகளைப் பயன்படுத்தறதுல சில சிக்கல்கள் இருக்கலாம்கிறாங்க. ஆனா கொஞ்ச நாள்ல அவன் ஓரளவு சுதாரிச்சுடுவான்னும் சொல்றாங்க. அப்படி அவன் சுதாரிக்கிறதுக்கு முன்னாடி அவன் இன்னொரு உடம்புல நுழைய உதவியிருக்கிற கூட்டாளி அல்லது கூட்டாளிகள் பத்தி தெரிஞ்சுக்க முடியுமான்னு கேட்கறாங்க"

செந்தில்நாதன் சொன்னார். "அவன் தனியா தான் எல்லாத்தையும் கத்துகிட்டிருக்கான். எந்தச் சக்தி பெறவும் இன்னொரு கூட்டாளியோட அவன் போனதா இது வரைக்கும் நமக்குத் தகவல் இல்லை...."

க்ரிஷ் சொன்னான். "உண்மை தான். ஆனா யாரோ இப்ப அவன் கூடு விட்டு கூட பாய உதவியிருக்கிறாங்க. அதனால குறைந்த பட்சம் ஒரு கூட்டாளியாவது இருக்கறது நிச்சயம். ஜெயில்ல இருக்கற மனோகருக்கு அந்தக் கூட்டாளி பத்தி ஏதாவது தெரிஞ்சிருக்க வாய்ப்பிருக்கா?"

"அவனுக்கும் தெரிஞ்சிருக்க வாய்ப்பு இல்லை..."

"விஸ்வத்தைப் பத்தி அவனுக்குத் தெரிஞ்சிருக்கிற தகவல்கள் ஏதாவது அந்தக் கூட்டாளியை நமக்கு அடையாளம் காட்டலாம் தானே?"

"அதுக்கும் வாய்ப்பு குறைவு தான். ஆனா முயற்சி செய்து பார்க்கலாம்"

"ஒருவேளை விஸ்வம் தன் வேலைகளை ஆரம்பிச்சுட்டா கண்டிப்பா அவன் தன் வேலைக்காரன் மனோகரைத் தொடர்பு கொள்ளவும் வாய்ப்பிருக்கு. அதனால இப்போதைக்கு மனோகர் நமக்கு முக்கியமான துருப்புச்சீட்டு. அவனைக் கவனமாவும் ஜாக்கிரதையாவும் பயன்படுத்தணும். பாதுகாக்கணும்..."

"சரி க்ரிஷ்.... நான் இன்னிக்கு காலைலயே போய் அவனைப் பார்த்து விசாரிக்கிறேன். அவனைக் கண்காணிக்கவும் ஆட்களை ஏற்பாடு செய்றேன்"

க்ரிஷ் கடைசியாக மெல்லச் சொன்னான். "சார் நீங்களும் ஜாக்கிரதையா இருங்க"

(தொடரும்)

என்.கணேசன்

இல்லுமினாட்டி 16

விதி அவனுடைய வாழ்க்கையை இப்படித் தலைகீழாய் மாற்றி குப்புறத் தள்ளி அடிமட்டத்திற்கு அழுத்தி விடும் என்று மனோகர் கனவிலும் முன்பு எதிர்பார்த்திருக்கவில்லை. விஸ்வத்திடம் வேலைக்குச் சேர்ந்த பிறகு பணம், புகழ், படாடோபம், கௌரவம் என்று எதற்குமே குறைவில்லாத வாழ்க்கையை மனோகர் அனுபவித்து வந்திருந்தான்.

விஸ்வம் தன் ஆட்களிடம் ஐந்து தகுதிகளை எப்போதும் எதிர்பார்த்தவனாய் இருந்தான். முதலாவது புத்திகூர்மை. இரண்டாவது, கச்சிதமாய் வேலை செய்யும் ஒழுங்கு முறை. மூன்றாவது எதிலும் அலட்சியம் காட்டாத தன்மை. நான்காவது அதிகப்பிரசங்கித் தனமாகவோ, தான்தோன்றித்தனமாகவோ நடந்து கொள்ளும் போக்கு சிறிதும் இல்லாமல் இருத்தல், ஐந்தாவது ரகசியம் காக்கும் தன்மை. இந்த ஐந்து தகுதிகளும் இருப்பது உறுதியான பிறகே ஒருவன் விஸ்வத்தால் வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவான். அந்தத் தகுதிகளில் இம்மியும் குறை வராத வரையில் அந்த வேலையாள் ராஜபோக வாழ்க்கை வாழ முடியும். காலப்போக்கில் குறைபாடுகள் தெரிய ஆரம்பித்து விட்டால் அந்த ஆள் வேலையை விட்டு நீக்கப்படுவதில்லை. உடனடியாக உலகை விட்டே அனுப்பப்படுவான். காரணம் விஸ்வம் தன் சில்லறை ரகசியங்களை அறிந்திருக்கும் எந்த ஒரு மனிதனும் கூட எதிர்காலப் பிரச்சினை ஆவதை அனுமதிப்பதில்லை.

மனோகர் இந்த ஐந்து தகுதிகளில் தன்னை நிரூபித்த பின்னரே விஸ்வத்திடம் வேலைக்குச் சேர்ந்தவன். தகுதிகளை இழந்தால் என்ன ஆகும் என்பது சந்தேகத்திற்கிடமில்லாமல் அறிந்திருந்ததால் அவன் இரட்டிப்பு ஜாக்கிரதை உணர்வோடு தான் அவன் ஒப்படைக்கப்பட்ட வேலைகளைச் செய்து வந்தான். தமிழகத்தின் முதலமைச்சர் அலுவலகத்தில் கூட அவனுக்கு ராஜ மரியாதை இருந்தது. முதலமைச்சரே கூட அவனைப் பார்த்துப் பயந்தார் என்பது காலம் உணர்த்திய உண்மை.

அப்படி உச்சத்தில் இருந்த அவன் ஹரிணியைக் கடத்தும் வேலை அவனிடம் ஒப்படைக்கப்பட்ட போது கச்சிதமான திட்டம் ஒன்றைத் தீட்டி விஸ்வத்திடம் சொன்னான். கடத்தும் விதமும், அவளை மறைத்து வைக்கும் இடமும் விஸ்வத்தின் ஒப்புதல் வாங்கின பிறகே கடத்தல் அரங்கேற்றப்பட்டது. அந்த இடத்தை எப்படி செந்தில்நாதன் கண்டுபிடித்தார் என்பது இப்போதும் அவனுக்குப் புரியாத புதிர் தான். பிடிபட்டவுடன் அவன் அதிர்ச்சி அடைந்தாலும் அவன் உடைந்து விடவில்லை. காரணம் அவனுக்கு விஸ்வத்தின் சக்திகள் பற்றித் தெரியும். அவன் மனோகர் என்ற தனிமனிதன் அல்ல. விஸ்வத்தின் ஆள். விஸ்வம் அவனை விடுவிக்க என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்வான் என்று பூரணமாக எதிர்பார்த்தான்.

கைது செய்த செந்தில்நாதன் அவனைச் சிறையில் அடைப்பதற்கு முன்பே முதலமைச்சர் மாணிக்கம் அவனை விடுவிக்க ஏற்பாடுகள் உடனே செய்வார் அல்லது விஸ்வம் அவரைச் செய்ய வைப்பான் என்று மனோகர் உறுதியாக நம்பினான். ஆனால் கைதான அவனைச் சிறையில் சட்டப்படி அடைப்பதற்குப் பதிலாக மயக்கமடைய வைத்தார்கள். விழிப்பு வந்த போது கண்கள் கட்டப்பட்டு இடம் தெரியாத ஒரு இருட்டறையில் அவன் அடைக்கப்பட்டிருந்தான். அந்தக் கண்கட்டை அவனால் அவிழ்க்க முடியாதபடி கண்ணிமைகள் மீது பசையும், தடித்த துணியும் ஒட்டப்பட்டிருந்தது. பல முறை தீவிரமாக முயன்றும் அவனால் அதைப் பிரித்தெடுக்க முடியவில்லை. ஆனால் விஸ்வத்தின் சக்திகள் பற்றித் தெரிந்த அவன் எப்படியாவது அந்த இடத்தை விஸ்வம் கண்டுபிடித்து விடுவான் என்று எதிர்பார்த்தான்.

வெளிநாட்டில் இருந்த விஸ்வம் தன் சக்தி மூலமாக அவனை ஊடுருவிய போது அவன் சந்தோஷப்பட்டான். ஆனால் அவன் மூலமாக விஸ்வம் எதையும் அறிந்து கொள்ள முடியாத நிலைமை இருந்தது. மனோகரால் எதையும் பார்க்க முடியவில்லை என்பது மட்டுமல்ல. எதையும் காதால் கேட்டு விஸ்வத்துக்குத் தெரிவிக்கவும் வழி இருக்கவில்லை. எப்போதுமே ஒரு மயான அமைதி நிலவும் ஒரு இடம். அவன் காதில் விழுந்த ஒரே ஒலி ஒரு காவலாளியின் காலடியோசை. அவன் உணவுப் பொட்டலத்தை மேலே இருந்த துளை ஒன்றில் வழியாக வீசி விட்டுப் போவான். பின் அவன் அடுத்த பொட்டலத்தை வீச வருவது அடுத்த நாள் தான். அந்த அறைச் சுவர்களிலும் அறையை ஒட்டி இருந்த பாத்ரூம் சுவரிலும் மனோகர் காதுகளை ஒட்ட வைத்து மணிக்கணக்கில் நின்றிருக்கிறான். சில சமயங்களில் வெளியே வீசிய காற்றும், சுவர்க்கோழியில் சத்தமும் மட்டும் கேட்கும். அவ்வளவு தான். விஸ்வம் அவன் மூலமாக எதையும் அறிந்து கொள்ளக்கூடாது என்பதற்காகவே இந்த ஏற்பாடு என்று புரிந்தது.

விஸ்வம் மீண்டும் நான்கு முறை மனோகர் உடலில் ஊடுருவியதை அவன் உணர்ந்தான். நான்கு முறையும் அவன் மூலம் விஸ்வம் எதையும் அறிய முடியவில்லை. வெளிநாட்டிலிருந்து விஸ்வம் திரும்பி வந்த பின் கண்டிப்பாக இந்த இடத்தைக் கண்டுபிடித்து விடுவான் என்று மனோகர் அடுத்தபடியாக நம்பிக்கை கொண்டான். அலைவரிசைகளைப் பிடித்துக் கொண்டே விஸ்வம் நேரடியாக வர முடிந்தவன். அதை அவன் தொலைவில் இருந்து செய்ய முடியாது. இந்தியா திரும்பியவுடன் செய்து விட முடியும். விஸ்வம் வேலை முடிந்தவுடன் கண்டிப்பாக சீக்கிரமாக இந்தியா வருவான், காப்பாற்றுவான் என்று எதிர்பார்த்தான்.

அதுவும் நடக்கவில்லை. அந்த நம்பிக்கையும் துரதிர்ஷ்டவசமாகத் தகர்ந்தது. அது மட்டுமல்ல. விஸ்வம் அவன் மீது ஊடுருவுவதும் நின்று போனது. விஸ்வம் அவனைக் கைவிட்டு விட்டானா என்ற சந்தேகம் வந்த போது விஸ்வம் அப்படிப் பட்டவனல்ல என்று மனம் அடித்துச் சொன்னது. மனோகர் அப்படிச் சிறைப்பட்டிருப்பது உண்மையில் விஸ்வத்துக்குத் தான் பின்னடைவும், அவமானமும்.

திடீரென்று ஒரு நாள் அவனை அங்கிருந்து அழைத்துச் சென்றார்கள். அவன் கண்ணில் இருக்கும் கட்டை ஒரு ஆஸ்பத்திரியில் என்னவெல்லாமோ செய்து தான் அவிழ்த்தார்கள். அவனை ஒரு நீதிபதி வீட்டுக்கு அழைத்துப் போனார்கள். அவர் முன்னால் மூன்று நிமிடங்கள் அவன் இருந்திருப்பான். அவரிடம் அவன் தன் வக்கீலைப் பார்க்க வேண்டும் என்றான். அவர் அவன் பேசியது போலவே காட்டிக் கொள்ளாமல் ஒரு தாளில் எதையோ உத்தரவாக எழுதினார். அவனைத் தனிச் சிறையில் அடைத்தார்கள். சிறைக்கு அழைத்துச் சென்ற போலீசாரிடமும், சிறை வார்டனிடமும், காவலாளிகளிடம் தன் வக்கீலைப் பார்க்க வேண்டும் என்று அழாத குறையாகச் சொன்னான். அவர்களும் அதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. கடைசியில் அவனே அப்படிச் சொல்வதை நிறுத்தினான். ஒருநாள் சாப்பாட்டு நேரத்தில் மற்ற கைதிகள் பேசிக் கொண்டது காதில் விழுந்த போது தான் மாணிக்கம் முதலமைச்சர் பதவியில் இருந்து ராஜினாமா செய்ததும், க்ரிஷின் தந்தை கமலக்கண்ணன் முதலமைச்சர் ஆகியிருந்ததும் தெரிய வந்தது. அவன் இருட்டறையில் அடைபட்டிருந்த போது இத்தனயும் நடந்திருக்கிறது. மனோகர் அதிர்ந்தான். இத்தனை ஆன பின்னும் விஸ்வம் வரவில்லை, அவன் உடலில் ஆக்கிரமிக்கவும் இல்லை, அவர்கள் மனோகரை ரகசிய இருட்டறையில் வைத்திருக்கும் அவசியத்தையும் இப்போது உணரவில்லை என்றால் அதற்கு ஒரே ஒரு அர்த்தம் தான் இருக்க முடியும். விஸ்வம் இல்லை. அவன் திரும்பவும் வருவான் என்ற பயமும் அவர்களுக்கு இல்லை. இந்த உண்மை புலப்பட ஆரம்பித்த பிறகு மனோகர் மனமுடைந்து போனான். நடைப்பிணமானான். இனி என்ன செய்வது என்று பல விதங்களில் யோசித்து வழி கிடைக்காமல் அவன் திண்டாடிக் கொண்டிருந்த சமயத்தில் தான் அவனைச் சந்திக்க முக்கியமான நபர் வந்திருப்பதாக காவலாளி வந்து சொன்னான்.

யார் என்று தெரியா விட்டாலும் அந்தச் செய்தியே அவன் வயிற்றில் பாலை வார்த்தது போல் இருந்தது. கடைசியில் விஸ்வம் ஆள் அனுப்பி இருக்கிறான் என்று தோன்றியது. பரபரப்புடனும், எதிர்பார்ப்புடனும் ஆவலுடன் வருகையாளர்கள் அறைக்கு அவன் வந்த போது செந்தில்நாதன் அவனுக்காகக் காத்திருந்தார். அடப்பாவி இந்த ஆளா என்று மனம் நொந்தாலும் இந்த ஆளும் ஏதோ ஒரு காரணமாகத் தான் வந்திருக்க வேண்டும். அது தெரிந்தால் அவனுடைய நிலைமை என்னவாகப் போகிறது என்று தெரியலாம் என்று தோன்றியது. எதுவுமே தெரியாத குழப்ப நிலையை விடத் தெளிவாக நிலைமை தெரிந்தால் அதை வைத்து அடுத்ததை அவன் யோசிக்கவாவது முடியும் என்று நினைத்தான்.

செந்தில்நாதன் ஒருசில நாட்களில் ஒருமனிதன் தோற்றத்தில் இவ்வளவு மாற்றம் ஏற்பட முடியுமா என்று அவனைப் பார்த்த முதல் கணத்தில் ஆச்சரியப்பட்டார். அகப்பட்டவுடன் கூட அதிகம் அசராத மனோகர் இப்போது பலமிழந்து பரிதாபமாய் தெரிந்தான்.

செந்தில்நாதன் விஸ்வத்தின் ஆள் உடனடியாக எதையும் சொல்வான் என்று எதிர்பார்த்து வரவில்லை. இவனுக்கு அதிகம் தெரிந்திருக்க வாய்ப்பு இல்லை, தெரிந்திருக்கும் சில துணுக்குச் செய்திகளைக்கூட இவன் சொல்லக் கூடிய ஆள் அல்ல என்பதை அறிந்திருந்த அவர் அவனை எதிரே உட்காரச் சைகை செய்தார். அவன் அமர்ந்தவுடன் சொன்னார்.

“உன்னை சாதாரணக் கைதியாய் இங்கே மாற்றியதிலிருந்தே உன் முதலாளி உயிரோடில்லை என்பது உனக்குப் புரிஞ்சுருக்கும். ஆளே இறந்தாலும் எங்களுக்கு இந்த ஃபைலைக் க்ளோஸ் பண்ண சில தகவல்கள் தேவைப்படுது. உனக்குத் தெரிஞ்ச எல்லாத் தகவல்களையும் சொன்னா நீ சீக்கிரம் விடுதலையாக நான் உனக்கு உதவ முடியும்”

அவன் அவரைப் பார்க்காமல் தரையையே பார்த்தபடி மௌனமாக உட்கார்ந்திருந்தான். அவர் ஐந்து வினாடிகள் மட்டுமே பொறுத்துப் பார்த்தார். பின் அமைதியாகச் சொன்னார். “எப்பவாவது எதாவது சொல்லணும், ஜெயில்ல இருந்து வெளிய வரணும்னு உனக்குத் தோணினா எனக்குச் சொல்லி அனுப்பு. ஒருவேளை நீ இப்படியே மௌனமாவே இருந்தாலும் எங்களுக்கு நஷ்டமில்ல. எங்களுக்கு க்ளோஸ் பண்ண முடியாத நிறைய மத்த கேஸ்கள் இருக்கு. உன்னை வெச்சு அத க்ளோஸ் பண்ணிப்போம்.”

அவர் சொன்னதன் அர்த்தம் அவனுக்குப் புரிய ஆரம்பிப்பதற்குள் செந்தில்நாதன் எழுந்து போய் விட்டார். அர்த்தம் புரிந்த மனோகர் பயத்தில் உறைந்து போய் உட்கார்ந்திருந்தான்.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, October 10, 2019

இல்லுமினாட்டி 17

மனோகர் மீண்டும் தன் தனிச்சிறைக்குத் திரும்பிய போது அவன் மனம் பல கவலைகளில் மூழ்க ஆரம்பித்தது. செந்தில்நாதன் "எங்களுக்கு க்ளோஸ் பண்ண முடியாத நிறைய மத்த கேஸ்கள் இருக்கு. உன்னை வெச்சு அத க்ளோஸ் பண்ணிப்போம்." என்று சொன்னது அவனுடைய கவலைகளுக்குக் காரணமாக இருந்தது. என்னென்ன கேஸ்களோ, எதையெல்லாம் அவன் தலையில் திணிப்பார்களோ, அதற்கு என்னவெல்லாம் தண்டனைகளோ என்ற பயங்கள் அவன் மனதை அரிக்க ஆரம்பித்து விட்டன. ஆனாலும் விஸ்வத்தைப் பற்றித் தெரிந்ததை எல்லாம் செந்தில்நாதனிடம் சொல்லித் தப்பிக்கலாம் என்ற முடிவை எடுக்க அவன் மனம் தயங்கியது. எப்போதுமே விஸ்வத்தின் எதிரியாவதை விட மற்றதெல்லாம் தேவலை என்று அவனுக்கு இப்போதும் தோன்றியது.

யோசிக்க யோசிக்க செந்தில்நாதன் சொன்னது போல விஸ்வம் இறந்திருக்க வாய்ப்பில்லை என்று அவனுடைய உள்மனம் உறுதியாகச் சொன்னது. தான் நினைத்ததைச் சாதிக்காமல் விஸ்வம் இறந்து போக மாட்டான் என்று மனோகர் தீவிரமாக நம்பினான். விஸ்வம் ஒதுங்கி இருக்கலாம் அல்லது பதுங்கி இருக்கலாம். ஆனால் அவனை யாராலும் கொல்ல முடியாது. இயற்கையாக மரணம் வருவதற்கு விஸ்வம் உடல்நிலை ஒன்றும் மோசமில்லை. சொல்லப் போனால் விஸ்வத்தைப் போல் உடம்பைக் கச்சிதமாக வைத்துக் கொள்ளும் ஒரு மனிதனை மனோகர் பார்த்ததில்லை. பின் ஏன் அவன் தொடர்பு கொள்ளவில்லை என்று ஆழமாக யோசித்த போது விஸ்வம் எதாவது புதிய சக்தியைப் பெறுவதில் மும்முரமாக இருக்கலாம் என்று மனோகருக்குத் தோன்றியது. அப்படி எதையாவது பெறுவதில் விஸ்வம் ஈடுபட்டு விட்டால் பின் அதில் சிகரத்தை அடையும் வரை விஸ்வம் வேறெதிலும் கவனம் செலுத்த மாட்டான். அப்படித்தான் ஏதாவது ஆகியிருக்க வேண்டும். அவன் கண்டிப்பாக வருவான், அவன் வரும் வரை தாக்குப்பிடிக்க வேண்டும் என்ற எண்ணம் மனோகர் மனதில் வலுப்பெற ஆரம்பித்தது. செந்தில்நாதன் அவன் மீது திணிக்கப் போகிற கேஸ்கள் பற்றிய பயம் மெல்லக் குறைந்தது. என்ன தான் ஆகிறது என்று பார்ப்போம் என்று மனோகர் நினைக்க ஆரம்பித்தான்.

இப்படி ஓரளவு அவன் தன் தைரியத்தை மீட்டு எடுத்த போது அவன் அறைக்குப் புதியதொரு கைதி வந்து சேர்ந்தான்...

ம்யூனிக் நகர மருத்துவமனையில் நடந்த வினோத நிகழ்வு இல்லுமினாட்டி உறுப்பினர்களுக்கு சுற்றறிக்கையாக அனுப்பப்பட்டது. டேனியல் என்ற போதை மனிதன் செத்துப் பிழைத்த நேரம், ஸ்கேன் ரிப்போர்ட்கள், வூடு சடங்கில் ஆவிகளை வரவழைக்கும் இசை கிதாரில் கேட்டது, டேனியல் உயிர்பிழைத்த பின் ரகசியமாய் வெளியேறியது எல்லாம் சுருக்கமாகத் தெரிவிக்கப்பட்டது. அதில் விஸ்வத்தின் பெயர் உபயோகப்படுத்தப்படவில்லை. ஆனால் டேனியலின் மூளையில் அமானுஷ்ய சக்திகள் சம்பந்தப்பட்ட பகுதியில் தெரிந்த தீவிரச் செயல்பாடுகள் தெரிவிக்கப்பட்டன. ஜான் ஸ்மித் திபெத் போய் அறிந்து வந்த விஷயங்கள் தெரியப்படுத்தப்படவில்லை. அந்த விவரங்கள் இல்லுமினாட்டியின் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஐவருக்கு மட்டுமே அனுப்பப்பட்டது. தலைமைக்குழு உறுப்பினர்களுக்கு அனுப்பியதில் கூட விஸ்வத்தின் பெயர் பயன்படுத்தப்படவில்லை. இல்லுமினாட்டியின் உறுப்பினர்கள் அறிவாளிகள் என்பதால் பெயர் பயன்படுத்தப்படா விட்டாலும் கூட அவர்கள் விஸ்வத்தின் திருவிளையாடல் தான் அது என்பதை உணர்ந்தார்கள்.

சீனாவின் ஷாங்காய் நகரில் நடந்த உலகப் பொருளாதார நிபுணர்கள் மாநாட்டில் கலந்து கொண்டிருந்த ஜப்பானிய பொருளாதார நிபுணர் அகிடோ அரிமா மாநாட்டில் தன்னுடைய பேச்சை முடித்து விட்டுத் தன் இருக்கையில் அமர்ந்த போது தான் ரகசிய அலைபேசியில் வந்திருந்த அந்தச் செய்தியைப் படித்தார். இல்லுமினாட்டியின் தலைமையிலிருந்து வந்த செய்தியாக அது இருக்கா விட்டால் அவர் அந்தச் செய்தியை மாயா ஜாலக் கதைகளில் வரும் அதீதக் கற்பனையாக நினைத்துச் சிரித்திருப்பார். ஆனால் எர்னெஸ்டோவின் ஒப்புதலுக்குப் பிறகு வரும் செய்தி என்பதால் அதில் சந்தேகிக்க ஏதுமில்லை...

அவர் அலைபேசி அடித்தது. பார்த்தார். அவருடைய நெருங்கிய நண்பரும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் சக்தி வாய்ந்த ஒரு தலைவருமான வாங் வேயின் பெயரைப் பார்த்ததும் அவர் முகத்தில் மெல்லிய புன்னகை அரும்பியது. அலை பேசியில் பேசினார். "ஹலோ"

"உன் பேச்சு முடிந்ததா?"

"முடிந்தது"

"செய்தியைப் படித்தாயா?"

"படித்தேன். பிரமிப்பாக இருக்கிறது...." என்று சொன்ன அகிடோ அரிமா தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஐவரில் ஒருவரான வாங் வேக்கு கூடுதல் தகவல்கள் வந்திருக்கலாம் என்பதை யூகித்தார். அதை அலைபேசியில் அவர் கேட்க விரும்பவில்லை. சில விஷயங்களை அலைபேசியில் பேசுவது ஆபத்து.

"மாநாடு முடிந்தவுடன் வீட்டுக்கு வருகிறாயா?" வாங் வே கேட்டார். அவருக்கு ஒரு பெரிய வீடு ஷாங்காய் நகரத்தில் இருந்தது.

அகிடோ அரிமா சரியென்றார். நன்றியுரை என்ற பெயரில் விழா அமைப்பாளர் ஒருவர் வளவளவென்று எதோ சொல்லிக் கொண்டிருந்தது அவர் மனதில் பதியவில்லை. ம்யூனிக் நகர நிகழ்வும், விஸ்வத்தின் நினைவுகளுமே அவர் மனதை ஆக்கிரமித்திருந்தன...

முக்கால் மணி நேரம் கழித்து வாங் வேயை அவர் சந்தித்த போது வாங் வே கேட்ட முதல் கேள்வி "நீ என்ன நினைக்கிறாய்?"

"உங்களுக்கு வந்திருக்கும் கூடுதல் தகவல்களும் தெரிந்தால் தான் சரியாகச் சொல்ல முடியும்" என்று அகிடோ அரிமா சொன்ன போது வாங் வேயின் முகத்தில் அரிதான புன்னகை ஒன்று வந்து போனது. அவர் ஜான் ஸ்மித்தின் திபெத்தியப் பயணம் பற்றியும் அவரின் அனுமானங்கள் பற்றியும் தன் நண்பரிடம் தெரிவித்தார். எல்லாம் கேட்டு விட்டு அகிடோ அரிமா சொன்னார். "விஸ்வத்தைச் சந்தித்த பிறகு இல்லுமினாட்டியின் அனுபவங்கள் எதுவும் இயல்பாக இல்லை. அதனால் இனி நடக்க இருப்பதும் சாதாரணமாக இருக்கப் போவதில்லை என்றே தோன்றுகிறது"

தான் நினைத்ததையே தன் நெருங்கிய நண்பனும் சொன்னது வாங் வேக்கு ஆச்சரியமாக இல்லை. அவர்கள் இருவர் சிந்தனையும் எப்போதும் ஒன்று போலவே இருக்கும். இந்த சமயத்திலும் அது மாறிவிடவில்லை. அவரும் அதையே தான் நினைத்திருந்தார். ஆனாலும் கேட்டார். "எப்படிச் சொல்கிறாய்?" நண்பனின் சிந்தனைகளில் சில கூடுதலாகவும் இருப்பதுண்டு. அதனால் கூடுதல் தெளிவும் கிடைப்பதுண்டு...

அகிடோ அரிமா சொன்னார். "அவனைப் போல ஒருவன் இல்லுமினாட்டியில் இதுவரை சேர்ந்ததில்லை. நம் கவனத்திற்கு வந்த பின் இவ்வளவு விரைவாகவும் நாம் யாரையும் சேர்த்துக் கொண்டதுமில்லை. குறுகிய காலத்தில் அவன் அளவுக்குப் பிரபலமானவர்களும் யாரும் இல்லை. அவன் நம்மிடம் சேர்ந்திருக்கா விட்டால் எர்னெஸ்டோ கண்டிப்பாக க்ரிஷை நம் கூட்டத்தில் பேச அழைத்திருக்கப்போவதில்லை. அதுவும் நடந்தது. எனக்குத் தெரிந்து கிழவர் இது வரை தானாக எந்த ஆளையும் இல்லுமினாட்டியில் சேர்த்ததில்லை. தகுதி இருந்து சேர விரும்பின ஆளை அலசி ஆராய்ந்து உங்கள் குழு சேர்த்துக் கொள்ள சிபாரிசு செய்தாலும் நிதானமாக யோசித்துத் தான் அவர் முடிவு செய்வார். அப்படிப்பட்டவர் க்ரிஷைத் தானாகவே இல்லுமினாட்டியில் சேர அழைத்தார். க்ரிஷ் இந்தியாவில் ஒரு மாநில முதலமைச்சர் மகனாக இருந்தாலும் அங்கே அரசியலில் கூடச் சேராதவன். அப்படிப்பட்டவன் அதிசயமாய் எர்னெஸ்டோ அழைத்த உடனே சேர்ந்து விட்டான். நம் இல்லுமினாட்டி கூட்டத்தில் இதுவரை மர்மமாய் யாரும் இறந்ததும் இல்லை. விஸ்வம் தான் அப்படி இறந்த முதல் ஆள். எல்லாவற்றுக்கும் உச்சமாய், இறந்தவர் ஆவி இன்னொரு உடலில் புகுந்திருக்கிறது. இது நாம் இதுநாள் வரை கேள்விப்பட்டிருக்காத நம்பக் கஷ்டமான விஷயம் என்றாலும் நடந்திருப்பதை மறுக்கவும் முடியாது. இனி என்னவெல்லாம் நடக்குமோ தெரியவில்லை. ஆனால் இல்லுமினாட்டி ஆரகிள் சொன்ன மாதிரி ஒரு விபரீத காலகட்டத்தில் நுழைந்து விட்டது மட்டும் உறுதி."

வாங் வே யோசனையுடன் தலையசைத்தார். நண்பன் சொன்னதைப் போல நடந்ததெல்லாம் ஆச்சரியமே. நண்பன் சொல்லாமல் விட்டதை அவரே சொன்னார். "விஸ்வம் தனி ஆள் என்று நினைத்திருந்தோம். இப்போது அவனுக்கு ஒரு கூட்டாளியோ, பல கூட்டாளிகளோ இருக்கிறார்கள் என்பது உறுதியாகி விட்டது. அவர்களையும் நம்மால் கண்டுபிடிக்க முடியவில்லை. இப்போது விஸ்வம் எங்கிருக்கிறான் என்றும் நமக்குத் தெரியவில்லை...."

அவர் நிறுத்திய போது அகிடோ அரிமா சொன்னார். "முக்கியமாய் அவன் இனி என்ன செய்வான் என்றும் தெரியவில்லை... அவன் கண்டிப்பாக ஒதுங்கி இருப்பான் என்று தோன்றவில்லை. எர்னெஸ்டோவும் அப்படி நினைப்பதால் தான் எச்சரிக்கை செய்வது போல் நம் எல்லோருக்கும் தகவல் தெரிவித்திருக்கிறார். விஸ்வம் இனி என்ன செய்வான் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?..."

வாங் வே யோசனையுடன் சொன்னார். "தெரியவில்லை. சாதாரணமாகவே அவன் சுலபமாக அனுமானிக்க முடிந்த ஆள் அல்ல... இப்போது அவனுக்கு கூட்டாளிகளும் இருக்கிறார்கள் என்று தெரிகிறது. அவர்கள் உத்தேசம் என்ன என்பதும் தெரியாததால் எல்லாம் குழப்பமாகத்தான் இருக்கிறது..."

சொல்லி விட்டு வாங் வே எதையோ தீவிரமாகச் சிந்திக்க ஆரம்பித்ததை அகிடோ அரிமா கவனித்தார். அவர் சிந்தனையின் தீவிரத்தைப் பார்க்கும் போது ஏதோ விதத்தில் மறைமுகமாக இயங்க நண்பர் தயாராகி விட்டதாகவே அகிடோ அரிமாவுக்குத் தோன்றியது. மறைவான இடத்தில் விஸ்வம், மறைமுகமாக வாங் வே என இல்லுமினாட்டியில் ஆட்டம் களைகட்டப் போகிறது என்பதை அவர் புரிந்து கொண்டார்

(தொடரும்)

என்.கணேசன்

இல்லுமினாட்டி 18

ம்யூனிக் நகரத்திலிருந்து நூறு கிலோமீட்டர் தொலைவில் இருந்த ஒரு கிராமத்து வீட்டில் அவன் படுத்திருந்தான். மூன்று படுக்கையறைகள் கொண்ட வசதியான வீடு அது. அந்த வீட்டிற்கு சுமார் ஒரு கிலோமீட்டர் தூரத்திற்கு வேறெந்த வீடோ, வேறு கட்டிடமோ இருக்கவில்லை. சுற்றிலும் பேரமைதி இருந்த போதிலும் அவன் மனதில் அமைதி இருக்கவில்லை. படுக்கை வசதியாக இருந்த போதும் அவன் உடல் வசதியாக இல்லை. அந்த உடல் அவனுக்கு அருவருப்பாகவும், அசௌகரியமாகவுமே இருந்தது. இந்த மூன்று நாட்களில் அவன் பேசியது ஒரே முறை தான். அதுவும் ஒரே ஒரு வாக்கியம் தான். "எனக்கு இந்த உடல் பிடிக்கவில்லை"

இந்த மூன்று நாட்களும் அவன் அருகிலேயே இருந்த மனிதன் அதற்கு ஆறுதல் சொன்னான். "கவலைப்படாதே. உனக்குப் பிடித்தது போல் அதை நீ சீக்கிரமே மாற்றிக் கொள்ள முடியும்"

அவனுக்கு அந்த வார்த்தைகள் ஆறுதல் தரவில்லை. அந்த உடலை அவனுடைய பழைய உடல் போல் மாற்றிக் கொள்வது எத்தனை காலத்திலும் முடியாது. போதை மனித நரம்புகளையும், செல்களையும் பெருமளவு பலவீனப்படுத்தி விடுகிறது. போதைப் பழக்கம் ஒரு வகையில் ஒருவன் மெல்ல மெல்ல செய்து கொள்ளக்கூடிய தற்கொலையே. அப்படி தற்கொலை செய்து கொண்ட டேனியலை அவன் இகழ்ச்சியுடன் மனதில் கடிந்து கொண்டான். "முட்டாள்"

சென்ற வாரம் வரை இப்படிப்பட்ட ஒரு பாழ்பட்ட உடலில் வாழவேண்டி வரும் என்று அவன் கற்பனையில் கூட நினைத்ததில்லை. உலகின் விதியை எழுத முடிந்தவனாகவே அவன் தன்னை நினைத்து வந்திருந்தான். இல்லுமினாட்டியில் இணைந்த பிறகு அவனுக்கு தன் வெற்றி வாய்ப்பில் கடுகளவு சந்தேகமும் வந்ததில்லை. கோடு போட்டுப் பயணித்தது போல் வாழ்க்கை ஒரு உச்சத்தை நோக்கி நகர்ந்து கொண்டு இருந்தது. அவன் கண்ணுக்கெட்டிய தூரம் வரை அவனுக்குப் போட்டியாக வரக்கூடியவர்கள் யாரும் தென்படவில்லை. ஆனால் தொலைதூரத்தில் இருந்து விதி மின்னல் வேகத்தில் க்ரிஷைக் கூட்டிக் கொண்டு வந்தது. அவனை இல்லுமினாட்டி கூட்டத்தில் பேச வைத்தது.

க்ரிஷ் பேச ஆரம்பித்த போது கூட அவன் தனக்கு எதிராக எதுவும் நடக்க முடியும் என்று எதிர்பார்த்திருக்கவில்லை. ஆனால் க்ரிஷின் பேச்சும், அவன் பேச்சின் போது தொடர்ந்து கூடுதலாக ஜொலித்த இல்லுமினாட்டி சின்னமும் சேர்ந்து அவனுக்கு எதிரானதொரு நிலைமையை அங்கே உருவாக்கி விட்டது. கண்களைக் கட்டிக் கொண்டு பேசிய க்ரிஷ் அந்த ஒளிவெள்ளத்தில் நீதி தேவன் போலக் காட்சியளித்த போது ஆரகிள் சொல்லியிருந்தபடி இல்லுமினாட்டியை அழிவிலிருந்து காப்பாற்ற வந்தவனாய் அந்தச் சின்னம் உறுப்பினர்களுக்கு அடையாளம் காட்டுவது போன்ற தோற்றம் உருவாக ஆரம்பித்த போது தான் அவன் அபாயத்தை உணர்ந்தான்.

ஏலியனின் சக்திக் கவசம் க்ரிஷைச் சுற்றி இருக்கக்கூடும், அது தாக்குபவரைத் திருப்பித் தாக்கி அழிக்கக்கூடும் என்ற சந்தேகம் அவனுக்கு இருந்ததால் தன் சக்திப் பிரயோகங்களை க்ரிஷ் மீது செலுத்தாமல் அந்த ஜொலிக்கும் சின்னத்தின் மீது செலுத்தி அதை மங்க வைக்கக் கடைசியில் அவன் முடிவெடுத்தான். அந்த முடிவு அவனுக்கே முடிவு கட்டும் என்று அவன் எதிர்பார்த்திருக்கவில்லை. அந்தச் சின்னத்தில் அவன் தன் சக்திகளைக் குவித்துப் பிரயோகித்த அந்தக் கணத்தில் அவன் உடம்பில் இருந்து சக்திகள் உருவப்பட ஆரம்பித்தன. அவன் உடலில் தாங்க முடியாத உஷ்ணம் உருவாக ஆரம்பித்தது. அவன் உடல் எல்லா சக்திகளையும் இழந்து அழிய ஆரம்பித்தது. இல்லுமினாட்டியின் சின்னம் உண்மையில் மாஸ்டருக்காகவும், க்ரிஷுக்காகவும் தான் காத்திருந்தது. அதனால் அவர்களுக்குச் சாதகமாகவே செயல்பட்டு அவர்களுக்கு எதிரான அவனை அழிக்கின்றது என்பது அவனுக்குப் புரிந்தது. அவனவனுக்குச் சேர வேண்டியதை அடுத்தவன் இடையே பிடுங்கிக் கொண்டாலும் கூட விதி பிடுங்கியவன் மூலமாகவே கூட சேர வேண்டியதைச் சேர வேண்டியவனிடம் சேர்த்தும் விடுகிறது என்பது அவன் பழைய உடலில் சிந்தித்த கடைசி சிந்தனையாக இருந்தது. கருகிப் போன அந்த உடலளவில் இழந்த சக்திகளை மானசீக அளவிலும் அவன் இழக்காமல் அவனைக் காப்பாற்றியது அந்தக் கிதார் இசை.

அந்த இசையை அவன் அறிவான். அவன் ஹைத்தி தீவிற்குச் சென்று சில நாட்களில் கற்றுக் கொண்ட சக்தி சூட்சுமங்களில் ஒன்றை அவன் உயிர் அவன் உடலை விட்டு வெளியேறிக் கொண்டிருந்த சமயத்தில் அந்த இசை நினைவுபடுத்தியது. தோற்கப் பிறந்தவன் அல்ல அவன். வெல்லவே பிறந்தவன். மரணம் கூட அவனை அவன் இலக்கிலிருந்து விலக்கி வைக்க முடியாது. அந்த இசை அடுத்து அவன் செய்ய முடிந்ததை, அதற்கிருக்கும் வாய்ப்பைச் சுட்டிக் காட்டியது. அந்த இசை ஒலிக்கும் திசையில் ஒரு உடலில் இருந்து உயிர் வெளியேறிக் கொண்டிருந்தது.

அவன் தன் வாழ்க்கையில் கற்று வளர்த்துக் கொண்ட சக்திகள் ஏராளம். எல்லாச் சக்திகளுக்கும் உச்சமாய் அவன் கற்ற சக்தி கூடு விட்டுக் கூடு பாய்வது. இமயமலையில் மானசரோவர் அருகே வாழ்ந்த ஒரு சித்தரிடம் அவன் அந்த வித்தையைக் கற்றான். மூன்று மாதங்கள் கடுமையானதொரு தவ வாழ்க்கை வாழ்ந்து அவன் அடைந்த மகாசக்தி அது. கற்றுக் கொடுத்த அந்தச் சித்தர் முன் அந்தச் சக்தியை அவன் பிரயோகித்தும் காட்டினான். பனிமலையில் சற்றுமுன் இறந்திருந்த ஒரு பனிக்கரடியின் உடலில் புகுந்து அந்தச் சித்தரைப் பனிக்கரடியாகவே மூன்று முறை வலம் வந்து வணங்கி மீண்டும் அவன் தன் உடல் வந்து சேர்ந்தான். சில நிமிடங்கள் தான் அந்தப் பனிக்கரடி உடலில் அவன் தங்கி இருந்தான் என்ற போதும் அந்த நிகழ்ச்சி அவனுக்கு உண்மையாகவே திருப்தி அளித்தது.

அந்தச் சித்தர் அப்போது சொன்னார். "ஒருநாள் இந்தச் சக்தி உனக்கு உதவலாம். அப்போது சரியாகப் பயன்படுத்திக் கொள்"

அவர் சொன்னது அவனுக்கு அப்போது வேடிக்கையாக இருந்தது. அந்தச் சக்தியை அவன் அடிக்கடிப் பயன்படுத்துவதாக இல்லை. காரணம் தன் உடலில் இருந்த வலிமையை அந்தப் பனிக்கரடி உடலில் அவனால் உணர முடியவில்லை. சில நிமிடங்களே தங்கியிருந்தாலும், ஒரு விளையாட்டு போலவே அதை நினைக்க வேண்டும் என்று அவன் நினைத்திருந்தாலும், அவனுக்கு அந்த அன்னிய உடலில் தங்கியிருந்த சில நிமிடங்களும் மனக் கசப்புடன் தாக்குப் பிடித்த நிமிடங்களாகவே இருந்தன.

அங்கிருந்து கிளம்பி வந்த போது இனி விளையாட்டுக்குக் கூட இந்த கசப்பு அனுபவம் தேவை இல்லை என்று முடிவெடுத்திருந்தான். ஆனால் அந்தச் சித்தர் சொன்னது போல அந்த வித்தை இல்லுமினாட்டி கூட்டத்தில் அவன் தன் உடலிலிருந்து உயிரை விட ஆரம்பித்த சரியான கணத்தில் உதவியது. அந்த இசை நினைவுபடுத்திய நுணுக்கம், அவன் மானசரோவரில் கற்ற வித்தையைப் பயன்படுத்தத் தூண்டியது. அந்த இசை கேட்ட இடத்தில் தெரிந்த வாய்ப்பை அவன் பயன்படுத்திக் கொள்ள அவன் மனதைக் குவித்தான். சக்திகள் கரைந்து கொண்டிருந்த சமயத்தில் அது சாதாரண விஷயமாய், எளிதில் சாதிக்க முடிந்த செயலாய் இருக்கவில்லை. ஆனால் அவனும் சாதாரண மனிதனல்ல. அவன் கற்றிருந்த வித்தைகளும், சக்திகளும் கூட சாதாரணமானவை அல்ல.

உடல் கருகி அதிலிருந்து கிளம்பியவுடன் இரும்புச் சங்கிலியிலிருந்து விடுபட்டவனைப் போல அவன் உணர்ந்தான். அவன் கடைசியாய் குவித்த அந்த மானசீக சக்தி, இல்லுமினாட்டி சின்னம் உருவியும் அவன் இழக்காத அந்தக் கடைசி இச்சா சக்தி, அவன் கற்ற வித்தையை அவன் வழக்கப்படியே கச்சிதமாய் செயல்பட வைத்தது. அவன் அந்த மருத்துவமனையில் ஒரு முட்டாள் போதை மனிதன் இறந்து முடிந்த தருவாயில் அந்த உடலில் நுழைந்தான்.

உடலில் இருந்து உயிர் பிரியும் சமயத்தில் ஒவ்வொரு நொடியும் மிக முக்கியமானவை. அடுத்த நிலையை, அடுத்த வாழ்க்கையை அவை தீர்மானிக்கக்கூடியவை. உடல் முழு பலத்தையும் இழக்கும் முன்பு, உடலில் முழு பிராணனும் விடை பெற்று சில்லிட்டு பிணமாக வீணாவதற்கு முன் செய்ய முடிந்த அற்புதங்கள் ஏராளம். அவன் அதைச் செய்தான். முதலில் தன் சக்திகளைப் புதிய உடலின் மூளையில் பதிய வைத்தான். மற்றவை எல்லாம் அவனுக்கு இரண்டாம் பட்சமே!

அவன் தன் வாழ்க்கையில் உச்சத்தில் செய்து காட்டிய பெரும் சக்திப் பிரயோகம் அது. ஆனால் அவனை அது மகிழ்ச்சியடைய வைத்து விடவில்லை. காரணம் உணர்வு நிலையில் அவன் இல்லுமினாட்டி கூட்டத்தில் நடப்பதையும் கவனித்து வந்தது தான். க்ரிஷை எர்னெஸ்டோ இல்லுமினாட்டிக்கு அழைத்ததும், அவன் இல்லுமினாட்டியில் இணைய சம்மதித்ததும் அந்த நிலைமையிலும் அவனுக்கு ஏற்படுத்திய ஆத்திரம் தான். அவன் கச்சிதமாகத் திட்டமிட்டு படிப்படியாக முன்னேறி இல்லுமினாட்டியில் இணைந்து அதைக் கைப்பற்ற நினைத்து அது கிட்டத்தட்ட நிறைவேறும் கட்டத்தில் க்ரிஷ் எந்தத் திட்டமும் போடாமல், எந்தப் பெரிய முயற்சியும் செய்யாமல் இல்லுமினாட்டியே அவனை அழைத்து அவனை இணைத்துக் கொண்டதை அவனால் சகிக்க முடியவில்லை.

அப்போது அவன் மானசீகமாக க்ரிஷை நினைத்து மனதில் கறுவினான். "க்ரிஷ். எல்லாம் முடிந்து விட்டது என்று நினைக்காதே. எல்லாம் முடிந்து விடவில்லை. நான் இன்னும் இருக்கிறேன். நாம் மீண்டும் சந்திப்போம்"

(தொடரும்)

என்.கணேசன்

இல்லுமினாட்டி 19

அந்தப் போதை மனிதனின் உடலில் தங்கிய பின் அவன் மோசமான சிறையில் இருப்பது போல் எல்லா விதங்களிலும் உணர்ந்தான். அவன் சக்திகள் எல்லாம் புதிய உடலில் வெற்றிகரமாகப் புகுந்து தங்குவதிலேயே வடிந்து விட்டதை உணர்ந்தான். ஆனால் அவன் உணர்வுநிலை அவனுடைய பழைய உடல் இருந்த இடத்திலும், புதிய உடல் இருக்கும் மருத்துவமனையிலும் முன்பு போலவே வேலை செய்தது. இரண்டு இடங்களிலும் சுற்றி நடப்பதை எல்லாம் முன்பு போலவே அவனால் உணர முடிந்தது. ஆனால் மற்ற இடங்களுக்குப் போய் எதையும் அவனால் அறிவது முன்பு போல் முடியவில்லை. அதற்கு அவன் சக்திகள் போதவில்லை...

ம்யூனிக் மின்மயானத்தில் அவன் பழைய உடலை எரிக்க வந்தவர்கள் ஏழே பேர். இல்லுமினாட்டி தலைவர் எர்னெஸ்டோ, உபதலைவர், நவீன்சந்திர ஷா, க்ரிஷ், வேறு மூன்று இல்லுமினாட்டி உறுப்பினர்கள். அதில் அவனுக்காக மனம் இரங்கியது க்ரிஷ் மட்டுமே. எதிரியே ஆனாலும் அவனுக்காக க்ரிஷ் பிரார்த்தித்து நின்றதை அவனால் உணர முடிந்தது.

எதிரியின் இரக்கத்தை விட ஒரு கொடுமையான விஷயம் ஒரு தன்மானமுள்ள மனிதனுக்கு இருக்க முடியுமா என்று அவன் நினைத்தான். அவன் பழைய உடல் மின்சாரத்தால் வெந்தது. அவன் தன்மான உணர்வு க்ரிஷின் இரக்கத்தால் வெந்தது. எத்தனையோ சக்திகள் வசமாகியும் ஒரு நீண்ட வாழ்க்கையில் அவன் மரணத்திற்குப் பின் வருத்தப்படவும், நண்பனே என்று அழைக்கவும் அவன் எதிரியாக நினைத்தவனே மிஞ்சி இருந்த நிலைமையின் விசித்திரம் உணர்விலும் தகித்தது. விதி அவன் வாழ்க்கையை எல்லா விதங்களிலும் புரட்டிப் போட்டிருக்கிறது. ஆனால் அதிலும் அவன் மரணத்தை வென்று பிழைத்திருக்கிறான். அந்த மகத்தான சாதனை ஒன்று மட்டும் அவனுக்கு இதமாய் இருந்தது. அவனுக்கு எத்தனை பின்னடைவுகள் இருந்தாலும் இந்த ஒரு பெருஞ்சாதனையை யாரும் மறுக்க முடியாது.

பழைய உடல் அழிந்த பிறகு தன்னையே அவனால் விஸ்வம் என்று நினைக்க முடியவில்லை. ஒரு பெயர் உடலோடு எப்படி இணைந்து விடுகிறது என்று அவன் ஆச்சரியப்பட்டான். உண்மையில் அவனுக்கு விஸ்வம் என்ற அவனுடைய பெயர் மிகவும் பிடித்தமானது. பிரபஞ்சம் என்ற பொருள் தரும் அந்தப் பெயர் அவனுக்குப் பொருத்தமாகவும் அவனைச் சரியாக அடையாளம் காட்டுவதாகவும் அவனுக்குப் பலமுறை தோன்றியிருக்கிறது. பழைய வாழ்க்கையில் அவன் பல இடங்களில் பல பெயர்களோடு வாழ்ந்திருந்தாலும் கூட அவன் அவனாக உணர்ந்தது அந்தப் பெயரில் தான். டேனியல் என்ற பெயரும் சிங்கங்கள் அடைந்த கூட்டில் அடைபட்டும் இறைவன் அருளால் உயிர் தப்பிய ஒரு மகானின் பெயராகவும், நீதிக்குப் பெயர் போன பெயராகவும் இருந்ததையும் அவன் அறிவான். ஆனால் இறைவன் அருளும், நீதியும் அவனுக்கு கசப்பானவையே என்பதால் அந்தப் பெயர் அவனுக்குக் கசந்தது...

யோசிக்கையில் இந்தக் கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தையை அவன் பயன்படுத்தத் தூண்டியது அந்த உடலை விட்டு உயிர் பிரிந்த தருணத்தில் கேட்ட கிதார் இசையே. கேட்ட கிதார் இசை வூடு சடங்கில் ஆவியை வரவழைக்கும் இசையாக இருந்தது மின்னலாக அவன் உயிர்த்துடிப்பை ஆக்கிரமித்தது. அந்தக் கிதார் வாசித்த ஜிப்ஸி அவன் மனதுக்கு மிகவும் நெருக்கமானவன். சொல்லப் போனால் அப்படி அவன் மனதுக்கு நெருக்கமானவனாகச் சொல்ல இன்னொரு மனிதன் அவன் வாழ்க்கையில் இருக்கவில்லை. அவன் கிதார் வாசித்து விஸ்வத்துக்கு அவன் செய்ய வேண்டியதை நினைவூட்டியதன் மூலம் இரண்டாம் முறையும் அவன் வாழ்க்கையை திசை திருப்பியிருக்கிறான். இரண்டுமே அவன் வாழ்வின் மிக முக்கியமான திருப்புமுனைகள்...

முதல் முறையிலும் இலக்கில்லாமல் ஊர் சுற்றித் திரிந்த விஸ்வத்தின் வாழ்க்கை திசை திரும்பியது அந்த ஜிப்ஸியைச் சந்தித்த பிறகு தான். மழையில் நனைவதிலிருந்து தப்பிக்க இருவரும் ஒரே கட்டிட வாசலில் தான் ஒதுங்கினார்கள். பெருமழை நிற்பதாகத் தெரியவில்லை. நேரம் போக்க அந்த ஜிப்ஸி தன் கையிலிருந்த கிதாரை வாசிக்க ஆரம்பித்தான். வாசிக்கையில் அந்த ஜிப்ஸி விஸ்வத்தைப் பார்த்தான். முதலில் சாதாரணமாகப் பார்த்தவன் கிதாரை வாசித்துக் கொண்டே மிக உன்னிப்பாகப் பார்க்க ஆரம்பித்துப் பின் ஆச்சரியமாகப் பார்த்தான்.

பின் அவன் விஸ்வத்தின் பெயர், அம்மா, அப்பா பெயர் எல்லாம் சொல்ல ஆரம்பித்தான். சொல்ல ஆரம்பித்தான் என்பதை விட அவன் மேல் எழுதி இருந்ததைப் படிக்க ஆரம்பித்தான் என்று சொல்வது மிகவும் பொருத்தமாக இருக்கும். பார்த்துப் படிப்பது போலத் தான் படித்தான். ஆனால் அவன் சொல்வது எல்லாம் சரியாக இருந்தது. பின் கடந்த கால நிகழ்வுகள் இரண்டைச் சொன்னான். அந்த இரண்டு நிகழ்வுகளும் அவன் மட்டுமே அறிந்திருந்த நிகழ்வுகள். அதுவும் சரியாக இருந்தது. பின் எதிர்காலம் பற்றிச் சொல்ல ஆரம்பித்தான். "நீ எதிர்காலத்தில் மிகவும் சக்தி வாய்ந்தவனாய் ஆகப் போகிறாய். பல அமானுஷ்ய சக்திகள் உன் வசமாகப் போகின்றன..... சக்திகளைப் பொறுத்த வரை நீ நிறுத்திக் கொள்வது தான் எல்லை..... நீ முறைப்படி அமானுஷ்ய சக்திகளைக் கற்றுக் கொண்டால் தான் ஒவ்வொன்றாய் உனக்குக் கிடைக்கும். ஆனால் நீ அதைச் சாதிப்பாய். உன் விதியில் அது தெரிகிறது.."

ஆச்சரியப்பட்ட விஸ்வம் "என் விதியில் வேறென்ன தெரிகிறது?" என்று ஆர்வத்துடன் கேட்டான்.

"நீ இது வரை கற்பனை செய்து வைத்திருந்த சக்திகள் எல்லாம் உனக்குக் கிடைக்கப் போக்கின்றன. பல பேரைப் பிரமிக்க வைக்கப் போகிறாய். பல பேர் உன்னைப் பார்த்துப் பயப்படப் போகிறார்கள். கணக்கில்லாத செல்வம் உன்னிடம் சேரப்போகிறது. உன் கனவுகளை நோக்கி வேகமாக முன்னேறப் போகிறாய்..... உனக்கு எதிராக சில சக்திகளும் உருவாகி வருவதும் தெரிகிறது. ஆனால் கவலைப்படாதே. எல்லாமே ஒரு மாறாத விதியின்படியே நடக்கிறது. அந்த விதி என்ன தெரியுமா? இரண்டு சக்திகளுக்குள் மோதல் வருமானால், இரண்டில் எது கூடுதல் சக்தியோ, எது அதிக சக்தியோ அது தான் எப்போதும் ஜெயிக்கும்" என்று அந்த ஜிப்ஸி சொல்லி விட்டுப் போனான்.

அதன் பின் சக்தி என்ற வார்த்தையே விஸ்வத்தின் வாழ்க்கையின் தாரக மந்திரமாக இருந்தது. அதையே தேடினான். அதற்காகவே வாழ்ந்தான். அதைப் பெற என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அதைச் செய்தான். மனம், வாக்கு, செயல் எல்லாமே அந்த சக்திக்காகவே செயல்பட்டன. ஒரு சக்தியை அடைந்த பின் அடுத்த சக்தியைத் தேடினான், அதற்காகவே வாழ்ந்தான்..... இப்படி ஒன்றன் பின் ஒன்றாக ஒவ்வொரு சக்தியாக அவன் சேர்த்து வைத்துக் கொண்டே முன்னேறினான்.....

அவன் முன்னேறிய பிறகு மீண்டும் ஒரு முறை அவனை ஜிப்ஸி சந்தித்தான். அப்போது தான் ஜிப்ஸி இல்லுமினாட்டி பற்றியும், அவர்களுக்குக் கிடைத்திருந்த ரகசியச் சுவடிகள் பற்றியும் சொல்லி இல்லுமினாட்டியை நோக்கிப் பயணிக்க வழிகாட்டினான்.

அப்போது பிரியும் முன் அவனிடம் விஸ்வம் கேட்டான். "மீண்டும் எப்போது சந்திப்போம்?"

"இனி நம் சந்திப்பு இருக்காது. அது உனக்குத் தேவையும் படாது. உன் விதியை நீயே எழுதிக் கொள்வாய்... ஆனால் கவனமாய் எழுது. ஏன்னா இதில் அழித்தல், திருத்தல் கிடையாது....." என்று சொல்லி விட்டு அந்த ஜிப்ஸி வேகமாக மறைந்தான். ஒவ்வொரு முறையும் வந்து அடுத்த கட்ட வழியைச் சொல்லித் தந்து விட்டுப் போகும் அவனை அறிய விஸ்வம் தன் சக்திகளை எல்லாம் திரட்டி முயன்றான். மங்கலான பனிமூட்டமும் அதனூடே தூரத்தில் ஒரு பிரகாசமான நட்சத்திரமும் தெரிந்தது..... அதற்கு என்ன அர்த்தம் என்று சரியாக விளங்கவில்லை என்றாலும் விதி அனுப்பிய ஆளே அவன் என்று விஸ்வம் உணர்ந்தான்.

ஜிப்ஸி சொன்னது போலவே விஸ்வம் பழைய உடலோடு இருக்கையில் அவர்கள் இருவரும் மீண்டும் சந்திக்கவில்லை. இல்லுமினாட்டி கூட்டத்தில் விஸ்வம் உயிர் விட்ட தருணத்திலும் இசை சுட்டிக்காட்டிய விஷயத்தை விஸ்வம் உணர்ந்தானேயொழிய ஜிப்ஸியை உணரவில்லை. ஜிப்ஸியை அவன் உணர்வுநிலையில் உணர்ந்தது அந்த மருத்துவமனையில் நள்ளிரவு மூன்று மணிக்கு. மெல்ல ஜிப்ஸி அவன் எண்ண அலைகளில் ஊடுருவ ஆரம்பித்தான். விஸ்வம் ஜிப்ஸியை உணர்ந்தான். அவன் ஏதோ சொல்வது போல இருந்தது. உணர்வு நிலையைக் கஷ்டப்பட்டுக் கூர்மையாக்கினான். இந்த பாழாய்ப் போன போதை உடலில் அது சுலபமாக இருக்கவில்லை. ஆனால் கஷ்டமான பல சாதனைகள் செய்து பழகிய விஸ்வத்துக்கு அது முடியாததாக இருக்கவில்லை.

மெல்ல விஸ்வம் ஜிப்ஸி அனுப்பிய தகவலை உணர்ந்தான். "அங்கே இருப்பது ஆபத்து. கிளம்பி விடு. நான் அழைத்துப் போக வருகிறேன். தயாராக இரு"

ஆரம்பத்தில் அந்த உடலை அசைப்பது கூட விஸ்வத்துக்குக் கஷ்டமாக இருந்தது. ஆனால் எல்லா சக்திகளையும் குவித்து விஸ்வம் அந்த உடலோடு எழுந்து போகப் பிரம்மப் பிரயத்தனம் செய்து தயாராக ஆரம்பித்தான். அப்படிச் செய்யும் போது ஒரு கேள்வி மனதில் பெரிதாய் அலைபாய்ந்தது. "யாரிந்த ஜிப்ஸி? அவன் நோக்கம் தான் என்ன?"

(தொடரும்)

என்.கணேசன்

(தீபாவளி போனஸாக தீபாவளிக்கு முன்தினம் 26.10.2019 சனிக்கிழமை மாலை அடுத்த அத்தியாயம் வெளியிடப்படும்)

Saturday, October 26, 2019

இல்லுமினாட்டி 20

என்ன தான் உடல் தளர்வாக இருந்தாலும் மனம் தன் சிந்தனையின் தீவிரத்தைக் குறைத்துக் கொள்ளத் தயாராக இல்லை என்பதால் விஸ்வத்தின் மனம் அந்த ஜிப்ஸியைக் குறித்த சிந்தனைகளில் தீவிரமாக இறங்கியது. வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் அந்த ஜிப்ஸியே அவன் வாழ்க்கைக்கு அந்தந்த காலத்திற்குத் திருப்புமுனையாக இருந்திருக்கிறான். விஸ்வம் தான்தோன்றித்தனமாக சுற்றிக் கொண்டிருந்த சமயத்தில் சக்திகளைப் பெறுவதை நோக்கி அவன் வாழ்க்கை திசை திரும்பியது அந்த ஜிப்ஸியைச் சந்தித்த முதல் சந்திப்பிற்குப் பிறகு தான். பல சக்திகளைப் பெற்று விஸ்வம் வேகமாக முன்னேறிக் கொண்டிருந்த போது இரண்டாவது முறை சந்தித்து இல்லுமினாட்டி பற்றித் தெரிவித்து, அந்த மேசன் கோயிலின் பழங்காலச் சுவடி பற்றியும் தகவல் தெரிவித்து இல்லுமினாட்டியை நோக்கி அவன் வாழ்க்கையைத் திசை திருப்பி விட்டவனும் அந்த ஜிப்ஸி தான். அந்த இரண்டாம் சந்திப்பில் இனி நம் சந்திப்பு இருக்காது என்று அந்த ஜிப்ஸி சொல்லியிருந்ததை மீறி இப்போது மூன்றாவதும் சந்திப்பு நிகழ்பெறப் போகிறது. அதுவும் ஒருவிதத்தில் அவன் முன்பு சொன்னதற்கு எதிர்மாறானது என்று சொல்லி விட முடியாது. விஸ்வம் பழைய உடலில் இல்லை. இது கிட்டத்தட்ட மறுபிறவி போலத் தான்.

இப்போதும் கூட சாக இருந்தவனை ஒரு விதத்தில் புதிய உடலுக்குச் செல்லத் தூண்டியது அந்த ஜிப்ஸி தான். மூன்றாவது முறையாகவும் அவன் வாழ்வை அந்த ஜிப்ஸி தான் திசை திருப்பி இருக்கிறான். எப்போதும் மன அமைதி இழக்காத விஸ்வத்தை க்ரிஷும், அந்த இல்லுமினாட்டி சின்னமும் சேர்ந்து நிதானம் தவற வைத்து விட்டதால் முன்பே கூடுவிட்டுக் கூடு பாயும் வித்தையும் கற்றிருந்தாலும் கூட அவன் இறக்கும் போது இன்னொரு உடலுக்குப் போகிற எண்ணமே அவனுக்கு வந்திருக்கவில்லை. கூடுவிட்டு கூடு பாய்வது போன்ற மகாசக்திப் பிரயோகங்களில் ஒரு வினாடியில் நூற்றில் ஒரு பங்கு கூட மிக முக்கியமானது தான். அந்த நுண்ணிய காலத்தை இழந்து விட்டால் கூட சில சக்திப் பிரயோகங்கள் சாத்தியப்படாது. அப்படி இருக்கையில் மிகச்சரியான துல்லியமான காலக்கட்டத்தில் அந்தக் கிதார் இசை அவனை எட்டியிருக்கவில்லை என்றால் அவனால் இந்த உடல் மாற்றப் பிரயோகத்தைச் சாதித்திருக்க முடியாது. அந்த மிக முக்கியக் கணத்திலும் அவனைக் காப்பாற்றியது அந்த ஜிப்ஸியே.

இதுநாள் வரை அவன் அந்த ஜிப்ஸியை வேறெந்த குறிப்பிட்ட நோக்கமும் இல்லாத ஒரு சக்திவாய்ந்த மனிதனாகவே நினைத்திருந்தான். அவன் விஸ்வத்தைப் பார்க்கையில் அவன் விதியைப் படிக்க முடிந்து உதவிய ஒரு உள்நோக்கமில்லாத செயலாகவே அவனுக்குத் தோன்றியிருந்தது. ஆனால் இப்போது உள்நோக்கமில்லாத ஆளாக அந்த ஜிப்ஸியை அவனால் நினைக்க முடியவில்லை.

இந்தியாவில் இருந்த அந்த ஜிப்ஸி மிகச்சரியாக ஜெர்மனியில் ம்யூனிக் நகரில் அவன் சாகும் கணத்தில் வந்து உதவியிருப்பது தற்செயலாக முடிகிற காரியம் அல்ல. விஸ்வத்தை யார் பின் தொடர்ந்து வந்திருந்தாலும் விஸ்வம் கண்டிப்பாக அறிந்திருப்பான். அவனுடைய சக்தி அப்போது அந்த நுட்ப நிலையில் தான் இருந்தது. அதுமட்டுமல்ல இல்லுமினாட்டியும் விஸ்வத்தின் பின்னால் யாராவது தொடர்ந்து வந்திருந்தால் கண்டிப்பாகக் கண்டுபிடித்திருக்கும். அந்த ஜிப்ஸி விஸ்வத்துக்கும், இல்லுமினாட்டிக்கும் தெரியாதபடி, அவர்கள் யாரும் உணராதபடி தூரமாகவே இருந்திருக்கிறான்.

இல்லுமினாட்டியின் கூட்டம் மிக ரகசியமாக சத்தமே வெளியில் கேட்காத ஒரு அரங்கில் நடைபெற்றது. அங்கே நடந்தது வெளியே யாருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பே இல்லை. அதிலும் முக்கியமாக அவன் இறந்தது கண்டிப்பாக யாரும் அறிந்திருக்க வாய்ப்பே இல்லை. இல்லுமினாட்டி உறுப்பினர்களே அவன் இறந்ததைச் சிறிது நேரம் கழித்து தான் கண்டுபிடித்தார்கள். அப்படி இருக்கையில் அவன் இறந்த சரியான தருணத்தில் அந்த ஜிப்ஸி உணர்ந்து கிதார் இசைத்திருப்பது ஒரு சாதாரண சக்தியாளனுக்குச் செய்ய முடிகிற செயல் அல்ல. ஆனால் அதை அந்த ஜிப்ஸி செய்திருக்கிறான். அப்படியானால் அவன் சக்தி பிரம்மாண்டமானது தான்.

இப்போது விஸ்வத்துக்குப் புதிய சந்தேகம் ஒன்றும் எழுந்தது. அவன் விதியைப் படிக்க முடிந்ததாகச் சிலதைச் சொல்லி மற்றது மங்கலாகத் தெரிகிறது என்று அந்த ஜிப்ஸி சொன்னது உண்மையில்லையோ? அவன் முன்பே இந்த மரண நிகழ்வைக் கூட அவனுடைய ஞானதிருஷ்டியில் பார்த்திருப்பானோ? அதனால் தான் அவன் ம்யூனிக் வந்து சரியான நேரத்தில் அவனுக்கு உதவியிருக்கிறானோ?

விஸ்வத்திற்குத் தலை வலித்தது. இந்தச் சிந்தனை ஓட்டம் அவனுக்கும் அவனையும் மீறிய சக்தியாளனாக அந்த ஜிப்ஸியை அடையாளம் காட்டியது. வேறு உடம்பில் புகுந்து தன் மனதையும், தன் சக்திகளையும் பத்திரப்படுத்திக் கொண்டிருந்த இந்த வெற்றியின் உச்சத்திலும் தனக்கும் மேற்பட்ட ஒரு சக்தியாளனாக அந்த ஜிப்ஸி இருப்பதில், தான் மங்கிப் போவது போல் விஸ்வத்தால் உணராமல் இருக்க முடியவில்லை.

முக்கியமாக அந்த ஜிப்ஸி உண்மையில் யார்? அவனுடைய உண்மையான நோக்கம் என்ன? அவனோடு மாத்திரம் அல்லாமல் இல்லுமினாட்டியோடும் விஸ்வம் சம்பந்தப்பட்டவன் போலத் தோன்றுகிறதே, அது என்ன சம்பந்தம்? என்ற கேள்விகளில் அவன் மனம் அலைபாய்ந்தது.

ஆனால் இப்போதைய நிலைமையில் அந்த அலை பாயும் எண்ணங்கள் அவன் சக்தியை வடிய வைப்பது போலத் தோன்றியதால் விஸ்வம் உடனே அந்த எண்ண ஓட்டத்தை நிறுத்தினான். அந்த ஜிப்ஸி யாராக இருந்தாலும், அவன் நோக்கம் என்னவாக இருந்தாலும் ஒன்று மட்டும் நிச்சயம். அவன் எதிரி மட்டும் அல்ல. இது வரை அவன் உதவியாக மட்டுமே இருந்திருக்கிறான். இப்போதைக்கு அவனை விட்டால் அவனுக்கு உதவி செய்ய வேறெந்த ஜீவனும் இல்லை...

அசைய மறுக்கும் இந்த உடலைக் கிளப்பி அவன் அந்த ஜிப்ஸி வரும் போது யார் கவனத்தையும் கவர்ந்து விடாமல் மருத்துவமனைக்கு வெளியே செல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் விஸ்வம் தங்கினான். அதற்கு இப்போதைக்கு நிறைய சக்தி தேவைப்படும் என்பதால் அமைதியாகிச் சில மூச்சுப் பயிற்சிகள் செய்து உடலின் சக்தியைப் பெருக்கிக் கொண்டான். சுமார் அரை மணி நேரத்தில் ஜிப்ஸி வந்து விட்ட செய்தி அவன் உணர்வில் வந்து சேர்ந்தது. விஸ்வம் மெல்ல எழுந்தான். முதல் சில அடிகள் எடுத்து வைத்ததில் தடுமாறினாலும் பின் அந்த உடல் அவனுக்குக் கட்டுப்பட்டது. மெல்ல அறையை விட்டு வெளியே வந்தான்...

மருத்துவமனையை விட்டு வெளியே வந்த போது சற்று தள்ளி ஒரு கருப்புக்காரில் ஜிப்ஸி காத்திருந்தான். விஸ்வம் காரின் பின்புறத்தில் ஏறினான். அவனுக்கு ஓய்வெடுக்க பின்புற முழு இருக்கையே வசதி. அவன் ஏறியவுடன் ஜிப்ஸி உற்சாகத்துடன் சொன்னான். "நீ செய்திருப்பது பெரிய சாதனை தான். வாழ்த்துக்கள்"

விஸ்வம் மெலிதாய் புன்னகைத்தான். அவன் அந்தக் கார் வரை வருவதற்கே முழுமையாய் சக்தியைச் செலவு செய்திருந்தான். அதனால் அவனுக்குப் பேசவும் முடியவில்லை. அந்தப் பின் இருக்கையில் அவன் படுத்துக் கொள்ள கார் நகர்ந்தது. விஸ்வம் கண்களை மூடிக் கொண்டான். ஒரு பாதுகாப்பை அவன் மனம் உணர்ந்தது. உறக்கம் வந்தது.

கடைசியாகக் கார் நின்று "நாம் தங்குமிடம் வந்து விட்டது. இறங்கலாமா?" என்று ஜிப்ஸி சொன்ன போது தான் விஸ்வம் கண்விழித்தான். காரை விட்டு இறங்கவும் அவனுக்குச் சற்றுக் கூடுதல் நேரம் தேவைப்பட்டது. இறங்கியவன் அந்த அழகான வீட்டையும், கண்ணுக்கு எட்டிய தூரம் வரை வேறெந்த வீடோ, கட்டிடமோ இல்லாமல் இருப்பதையும் கவனித்தான்.

அவன் கேட்காமலேயே ஜிப்ஸி சொன்னான். "இந்த வீட்டுக்காரன் நியூயார்க் நகரில் ஒரு மல்டிநேஷனல் கம்பெனியில் வேலை பார்க்கிறான். அவன் வருடத்துக்கு ஒரு முறை கிறிஸ்துமஸ் சமயத்தில் மட்டுமே வந்து இங்கு ஒரு மாதம் இருப்பான். மற்ற சமயங்களில் இந்த வீடு காலியாகவே இருக்கும்."

விஸ்வம் தலையசைத்தான். கஷ்டப்பட்டு உள்ளே போய் ஜிப்ஸி காட்டிய ஒரு அறையில் படுக்கையில் விழுந்தவன் நீண்ட நேரம் உறங்கினான். அவன் கண்விழித்த போது தொண்டை வரண்டிருந்தது. அந்த ஜிப்ஸி அவனுக்குக் குடிக்க சத்துமிக்க ஒரு பானத்தைத் தயாராய் வைத்திருந்தான். அந்தப் பானம் தொண்டையில் அமிலம் போல் இறங்கியது. புண்ணாகியும் சிதிலமாகியும் பாழ்பட்டிருந்த அந்த உடல் அவனுக்கு அருவருப்பையே தந்தது. இத்தனைக்கும் இது அவன் பழைய உடலை விட இளமையான உடல். அவன் சொன்னான். . "எனக்கு இந்த உடல் பிடிக்கவில்லை". அவனுக்கே அந்தக் குரல் அன்னியமாகத் தோன்றியது. இனி ஒவ்வொன்றும் அவனுடையது என்று உணர சிறிது காலம் தேவைப்படும்....

ஜிப்ஸி புரிதலுடன் சொன்னான். "கவலைப்படாதே. உனக்குப் பிடித்தது போல் அதை நீ சீக்கிரமே மாற்றிக் கொள்ள முடியும்"

அந்த வார்த்தைகள் அவனைச் சமாதானப்படுத்தவில்லை. ஆனால் மறுத்து எதுவும் பேசாமல் கண் மூடி உறங்கினான். மூன்று நாட்களில் அவன் உடல் ஓரளவு தேறியது. நான்காவது நாள் டேனியலின் புகைப்படத்தை டிவியில் காண்பித்தார்கள். "போதைக்கு அடிமையான நோயாளியாக இருக்கும் இவர் திடீரென்று ம்யூனிக் மருத்துவமனையிலிருந்து தலைமறைவாகி விட்டார். இவரைக் காண்பவர்கள் உடனே காவல்துறைக்குத் தகவல் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவரைக் கண்டுபிடிக்க உதவுபவர்களுக்கு நல்ல சன்மானம் வழங்கப்படும்..."

விஸ்வம் யோசனையுடன் ஜிப்ஸியைப் பார்த்தான். ஜிப்ஸி ஒரே ஒரு வார்த்தையைப் பதிலாகச் சொன்னான். "இல்லுமினாட்டி"

Thursday, October 31, 2019

இல்லுமினாட்டி 21

டேனியலின் புகைப்படத்தோடு டிவியில் வந்த அறிவிப்பை அகிடோ அரிமாவும், வாங் வேயும் பார்த்தார்கள். அந்த அறிவிப்பைப் பார்த்து விட்டு அகிடோ அரிமா தன் நண்பரின் முகத்தைப் பார்த்தார். அவர் பல மனக்கணக்குகளைப் போட்டுப் பார்த்துக் கொண்டிருந்தது போலிருந்தது.

அகிடோ அரிமா சொன்னார். "பெர்லினில் இருக்கும் டேனியலின் மனைவிக்கு அவன் வேண்டாம். ஃப்ராங்க்பர்ட்டில் இருக்கும் அவன் நண்பர்களுக்கும் அவன் திரும்ப வேண்டும் என்ற அக்கறையில்லை. ஆனால் உலகத்தை ஆட்சி செய்து வரும் இல்லுமினாட்டிக்கு அவன் இப்போது முக்கியமானவனாய்ப் போய் விட்டான். என்னவொரு விசித்திரம்! கிழவர் இந்த அளவு இதற்கு முக்கியத்துவம் தருவதற்குக் காரணம் என்ன? வழக்கம் போல இல்லுமினாட்டியுடன் அவன் சம்பந்தப்பட்டிருந்ததால் அவனைப் பற்றிய முழுவிவரம் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்ற காரணமா? இல்லை கிழவர் கூடுதல் காரணம் எதையாவதும் வைத்திருக்கிறாரா?"

வாங் வே நண்பரிடம் சொன்னார். "கிழவர் தலைமைக்குழுவிடம் சொன்னது வழக்கமான காரணம் தான். ஆனால் வெளியே தெரிவிக்காத கூடுதல் காரணங்களை அவர் மனதில் வைத்திருக்கிற மாதிரி தான் தெரிகிறது."

அகிடோ அரிமா கேட்டார். "இப்போது திடீர் என்று விஸ்வம் இந்தப் புதிய சாதனையோடு இல்லுமினாட்டிக்குத் திரும்பி வந்தால் என்ன ஆகும்? "அதாவது இல்லுமினாட்டி கூட்டத்தில் வில்லனாக இறந்தவன் கூடுவிட்டு கூடு பாய்ந்து புதுப்பிறவி எடுத்து வந்ததால் கதாநாயகனாகி விடுவானா அல்லது பழைய வில்லனாகவே தெரிவானா? அவனை உறுப்பினராக ஏற்றுக் கொள்வோமா, மாட்டோமா? உங்கள் தலைமைக்குழுவின் முடிவு என்னவாக இருக்கும்?"

"தலைவரின் முடிவு தான் தலைமைக்குழுவின் முடிவாக இருக்கும்..." சொல்லும் போதே வாங் வேயின் வார்த்தைகளில் கசப்பு தெரிந்தது.

அந்த நிலைமை தான் இல்லுமினாட்டியில் இருந்தது. தீர்மானமாக எர்னெஸ்டோ ஒன்றை அறிவித்து விட்டால் அதை வெளிப்படையாக எதிர்க்கும் துணிவு இல்லுமினாட்டியில் ஒருவருக்கும் இல்லை. வாங் வேக்கு எர்னெஸ்டோவை நினைக்கையில் பொறாமையாக இருந்தது. உலக முக்கிய நிகழ்வுகளைத் தீர்மானிக்கும் அதி உச்சப் பதவியில் சர்வ பலத்துடனும், அதிகாரத்துடனும் இருக்கும் எர்னெஸ்டோவைப் பார்த்துப் பொறாமையடையாதவர்கள் குறைவு. அந்த அதி உச்சப் பதவியையும் அவர் போனால் போகிறது என்று பெருந்தன்மையுடன் வைத்திருக்கும் தோற்றத்தையே பார்க்கிறவர்களிடம் உருவாக்கி இருந்தார். அந்தப் பதவி சமீப காலங்களில் அவருக்குச் சலித்து விட்டது போலவே நடந்து கொண்டும் வந்தார். அது உண்மையே என்பதை உணர்த்தும் வகையில் ராஜினாமா செய்யப் போவதை அறிவித்தும் இருந்தார். அதன் பின் அவருடைய பதவிக்குப் பெரும் போட்டியும் உருவாக ஆரம்பித்தது. போட்டியாளர்களாகத் தயாராகிக் கொண்டிருந்தவர்களில் வாங் வேயும் ஒருவர். வாங் வேயின் கனவே அந்தப் பதவியாக இருந்தது. ஆனால் தலைவர் பதவிக்குத் தேர்வு நடக்கும் முன் விஸ்வம் இல்லுமினாட்டியில் நுழைந்து எல்லாவற்றையும் மாற்றி விட்டான்... ராஜினாமா செய்ய இருந்த எர்னெஸ்டோ தன் முடிவைத் தள்ளிப் போட்டு விட்டார். இனி அவராக விலகும் வரை யாருக்கும் வாய்ப்பில்லை.... வாங் வே பெருமூச்சு விட்டார்.

அகிடோ அரிமா கேட்டார். "தலைவரின் முடிவு என்னவாக இருக்கும்?"

வாங் வே சொன்னார். "அவர் ஆரகிள் சொன்னதை முழுமையாக நம்புகிறார். இது இல்லுமினாட்டியின் அழிவுக்காலமாக இருக்குமானால் விஸ்வம் இல்லுமினாட்டிக்குக் கதாநாயகனாக மாறினாலும் சரி, வில்லனாக மாறினாலும் சரி இல்லுமினாட்டியை அழிக்கிற வாய்ப்பு இருக்கிறது என்று நினைக்கிறார். அவரை க்ரிஷின் பேச்சு நிறையவே பாதித்து இருக்கிறது. அவன் சொன்னதை அவர் அப்படியே ஏற்றுக் கொள்கிறார் என்றே தோன்றுகிறது."

அகிடோ அரிமா சொன்னார். "இல்லுமினாட்டியில் க்ரிஷ் பேசியது சித்தாந்தமாக நன்றாகவே இருந்தது. நம் சின்னம் ஜொலித்ததும் அவனையே தேஜஸோடு காப்பாற்ற வந்தவனாகப் பலரையும் அந்தச் சமயத்தில் நினைக்க வைத்தது. அதெல்லாம் சரி தான். ஆனால் இப்போது ப்ராடிக்கலாக யோசித்துப் பார்த்தால் அவன் சொல்கிறபடி இல்லுமினாட்டி மாறினால் நாம் பழைய அதிகாரத்துடன் இருக்க முடியுமா? நம்மைப் பார்த்து உலகநாடுகளின் ஆட்சியாளர்கள் பயப்படுவார்களா? நாம் பலவீனமாகத் தெரிய மாட்டோமா? இதெல்லாம் நடக்கிற காரியமா? இந்த எண்ணங்கள் எனக்கு மட்டும் தான் வருகிறதா? எனக்கு ஒன்றுமே புரியவில்லை"

வாங் வே முகத்தில் அபூர்வ முறுவல் வந்து போனது. அவரும் அப்படி நினைக்க ஆரம்பித்திருந்தார். அவர் மெல்லச் சொன்னார். "நானும் அப்படித் தான் நினைக்கிறேன். எனக்கென்னவோ இப்போது யோசித்தால் க்ரிஷ் சொல்லி இருக்கும் மென்மையான அணுகுமுறை தான் இல்லுமினாட்டியை அழிக்கும் என்று தோன்றுகிறது. இல்லுமினாட்டியின் பலத்தைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமானால் விஸ்வத்தின் அணுகுமுறையே சரியென்று தோன்றுகிறது..."

"ஒருவேளை விஸ்வம் டேனியல் உடலோடு இல்லுமினாட்டிக்கு மீண்டும் வந்தால், நம் தலைவர் எதிர்க்கவோ ஆதரிக்கவோ செய்யாமல் நடுநிலைமை வகித்தால், நீங்கள் அவனை ஆதரிப்பீர்களா?" அகிடோ அரிமா தன் நண்பரை நேரடியாகவே கேட்டார்.

வாங் வே நண்பருக்குப் பிடிகொடுக்காமல் சொன்னார். "யோசிக்க வேண்டும்"

எங்கே வெற்றி நிச்சயம் என்று அறியும் வரை நண்பர் யோசிப்பதை நிறுத்த மாட்டார் என்றறிந்திருந்த அகிடோ அரிமா புன்னகைத்தார். குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கத் தயாராகக் காத்திருக்கும் நண்பரின் குணாதிசயங்கள் அவருக்கு அத்துப்படி. நண்பரையே கூர்மையாகப் பார்த்தபடி. திடீரென்று ஒரு தகவல் நினைவுக்கு வந்தவர் போல் அவர் சொன்னார். "விஸ்வம் தன் முழு சக்திகளையும் திரும்பப் பெற்று விட்டால் அவனை எதிர்ப்பது தலைவருக்கு ஆபத்து தான். கடும் பாதுகாப்போடு இருந்த இந்தியாவின் ஒரு மாநில முதலமைச்சரை அவன் கொன்று விட்டான், மாரடைப்பு என்றே எல்லாரையும் நம்ப வைத்தும் விட்டான் என்று கேள்விப்பட்டோம். ஞாபகம் இருக்கிறதா?"

வாங் வேக்கு அப்போது தான் அது நினைவு வந்தது. விஸ்வத்தின் பல வித சக்திகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்ததால் இது குறிப்பாக நினைவு இருக்கவில்லை. அவனுக்கு எதிர்ப்பு தெரிவிக்கிறவர்கள் யார் மீதும் அவன் அந்தச் சக்தியைப் பிரயோகிக்க முடியும்... எத்தனை சக்தி வாய்ந்தவர்களாக அவர்கள் இருந்தாலும்... ஏன் அகிடோ அரிமா சொல்வது போல், எர்னெஸ்டோவாகவே இருந்தாலும் சரி...

இந்த சிந்தனை வாங் வேயின் இதயத்தை வேகமாகப் படபடக்க வைத்தது. அந்தப்படபடப்பை வெளியே காட்டாமல் கட்டுப்படுத்திக் கொண்டு யோசனையுடன் வாங் வே சொன்னார். "அது அவனுக்குப் பழைய சக்திகள் பரிபூரணமாகத் திரும்பப் பெற முடிந்தால் தான் முடியும். டேனியல் உடம்பில் அவன் தன் முழுச்சக்திகளைத் திரும்பப் பெற முடிவது கஷ்டம் தான் என்று திபெத் போய் விசாரித்து வந்திருக்கிற ஜான் ஸ்மித் சொல்கிறார்...."

அகிடோ அரிமா சொன்னார். "ஆனால் சாஃப்ட்வேர் முழுவதுமாக இன்ஸ்டால் செய்து விட்ட மாதிரி தான் என்று ஜான் ஸ்மித் சொன்னதாகச் சொன்னீர்கள். அதை முழுவதுமாகப் பயன்படுத்த அவனுடைய உடம்பு அனுமதிக்க வேண்டும். என்ன தான் போதையால் மோசமாகி இருந்தாலும் டேனியல் சின்ன வயதுக்காரன். அந்த உடம்பை விஸ்வம் பலப்படுத்திக் கொள்வது முடியாத காரியம் அல்ல. சிறிது காலம் தேவைப்படலாம். அவ்வளவு தானே?"

வாங் வேக்கு மறுபடி இதயத்தின் படபடப்பு அதிகரித்தது. அந்தச் சிறிது காலம் என்பது எத்தனை மாதம் எத்தனை நாட்கள்... இல்லை வருடமே கூடத் தேவைப்படுமா? அது தெரிந்தால் நன்றாக இருக்கும் என்று அவருக்குத் தோன்றியது. அவன் முழு சக்தி பெற்று விடுவதற்கு முன் அவனை ரகசியமாகச் சந்தித்தால் நல்லது என்றும் தோன்றியது... யோசிக்க யோசிக்க என்ன வேண்டுமானாலும் ஆகலாம், ஆக்கலாம் என்கிற சூழல் உருவாவது புரிந்தது. இந்தச் சூழ்நிலையைச் சரியாகவும், புத்திசாலித்தனமாகவும் பயன்படுத்திக் கொள்ள அவர் அறிவு தூண்டியது.

அவரையே கவனித்துக் கொண்டிருந்த அகிடோ அரிமாவுக்கு அவர் எண்ண ஓட்டத்தைப் படிக்க முடிந்தது. இதே போன்ற எண்ணம் இனி இல்லுமினாட்டியில் உள்ள பலருக்கும் வரலாம் என்றும் தோன்றியது. இல்லுமினாட்டியில் இனி ஆட்டம் களைகட்டப் போகிறது என்று எண்ணியவராகப் புன்னகைத்தார்...

அதே நேரத்தில் வாஷிங்டன் நகரத்தில் இன்னொரு வயதான இல்லுமினாட்டி உறுப்பினர் தனக்கு வந்திருந்த சுற்றறிக்கையை இருபதாவது தடவையாகப் படித்துக் கொண்டிருந்தார். ம்யூனிக் நகர ஆஸ்பத்திரி நிகழ்வுகளைப் படித்ததில் இருந்தே தூக்கத்தைத் தொலைத்திருந்தார் அவர். காரணம், எந்த இல்லுமினாட்டி உறுப்பினருக்கும் தெரிந்திராத ஒரு இரகசியத் தகவல் அவருக்கு முன்பே தெரிந்திருந்தது தான். அவர் அறிந்திருந்த அந்தத் தகவலுக்கு இவ்வளவு காலம் பெரிய முக்கியத்துவம் எதுவும் இருந்திருக்கவில்லை. ஆனால் இப்போதோ நிலைமை மாறிவிட்டது. அவர் மட்டுமே அறிந்திருக்கும் அந்த உண்மை அவரை அபாயத்திலும் ஆழ்த்தி விடலாம் என்பதை அவர் உணர்ந்தே இருந்ததால் தான் அவரால் உறங்க முடியவில்லை.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, November 7, 2019

இல்லுமினாட்டி 22

மனோகருக்குச் சிறையிலிருந்து விடுதலை கிடைக்கா விட்டாலும் தனிமையின் கொடுமையிலிருந்து விடுதலை கிடைத்தது. அந்த விடுதலை நல்லதா, கெட்டதா என்று ஆரம்பத்திலேயே அவனால் யூகிக்க முடியவில்லை. அவனுடைய சிறையறைக்கு வந்து சேர்ந்த கைதிக்கு சுமார் 25 வயதிருக்கும். கருப்பாகவும், திடகாத்திரமாகவும் இருந்தான். நிறைய பேசுபவனாக இருந்தான். உள்ளே வந்தவுடனேயே அவன் மனோகரைக் கேட்டான். "என்ன கொலையா, கொள்ளையா?"

எந்தக் குற்றம் செய்து இங்கே வந்திருக்கிறாய் என்று அவன் கேட்கிறான் என்பது சில வினாடிகள் கழித்து தான் மனோகருக்கு விளங்கியது. பெயரைக் கேட்பதற்கு முன் அப்படிக் கேட்டது மனோகருக்குப் பிடிக்கவில்லை. அதனால் பதில் சொல்லாமல் அவனை முறைத்துப் பார்த்தான்.

அது அந்தக் கைதியைப் பாதிக்கவில்லை. அவன் புன்னகையோடு சொன்னான். "சரி விடு. நீ என்ன சுதந்திரப்போராட்டத்துக்காகவா உள்ளே வந்திருப்பே. நீயும் என்னை மாதிரி ஒரு கேப்மாரி... எதாவது பண்ணி உள்ளே வந்திருப்பே. ஆனா பிடிபடறது உனக்கு இது தான் முதல் தடவையா?"

நீயும் என்னை மாதிரி ஒரு கேப்மாரி என்று அவனோடு தன்னை இணைத்துச் சொன்னது பிடிக்கா விட்டாலும் முதல் தடவை பிடிபடுவதை அவன் கண்டுபிடித்தது ஆச்சரியப்படுத்த மனோகர் கேட்டான். "உனக்கெப்படித் தெரியும்?"

அந்தக் கைதி சொன்னான். "முதல் தடவை மாட்டி உள்ளே வந்தவன் தான் அதை வெளியே சொல்ல கூச்சப்படுவான். என்னை மாதிரி பல தடவை உள்ளே வந்தவங்க எதைச் சொல்றதுக்கும் வெக்கப்பட்டுக்கறதுல்ல. நான் ராஜேஷ். எல்லாரும் ராஜ்ன்னு கூப்டுவாங்க. எந்த மாதிரியான பூட்டயும் லாக்கரயும் சாவியில்லாமலேயே திறந்துடுவேன். அதுல நான் கில்லாடி. நான் எத்தனை தடவ உள்ளே வந்திருக்கேன்னு கணக்கு வெச்சுக்கல. இந்த ஜெயில் எனக்கு இன்னொரு வீடு மாதிரி. வார்டன், காவலாளிங்க எல்லாம் ப்ரண்ட்ஸ் மாதிரி..."

அவன் நிறுத்தாமல் பேசிக்கொண்டே போனான். அந்தச் சிறை மட்டுமல்லாமல் தமிழ்நாட்டுச் சிறைகள் வேறு இரண்டிலும் கூட சில காலம் இருந்திருப்பதை எந்தக் கூச்சமுமின்றி ராஜேஷ் சொன்னான். சிறை அதிகாரிகளையும், காவலர்களையும் தனிப்பட்ட முறையில் நன்றாக 'கவனித்துக்' கொள்வதால் இந்த மூன்று சிறைகளிலும் தனக்கு வேண்டிய சலுகைகள் கிடைப்பதைப் பெருமையாகச் சொன்னான்.

"ரெண்டு நாளுக்கு முன்னாடி தான் இந்த ஜெயிலுக்கு வந்தேன். மூனு கேடிகளோட என்னையும் அடச்சிருந்தாங்க. அவனுங்க நேரங்காலமில்லாம சண்டை போடுவானுக. ராத்திரி கூட சண்டை ஓயாது. ரெண்டு நாளா சரியாத் தூக்கமேயில்ல. குடுக்கறத குடுத்து, விஷயத்த சொல்லி வேற ரூமுக்கு அனுப்புங்கன்னு அதிகாரிகள கேட்டுகிட்டேன். உடனே இங்கே அனுப்பிட்டாங்க. எப்புடி என்னோட பவரு? ஆமா உன் பேரு என்ன?"

விஸ்வம் டேனியலின் புகைப்படத்தோடு வெளியிட்ட அறிவிப்புக்குக் காரணமாக 'இல்லுமினாட்டி' என்று ஜிப்ஸி சொன்ன ஒற்றை வார்த்தையைக் கேட்டு உடனடியாக எதையும் சொல்லாமல் ஜிப்ஸியைக் கூர்ந்து பார்த்தான். அந்தக் கூர்மைப்பார்வையில் ஜிப்ஸி சின்னதாய் தர்மசங்கடத்தை உணர்ந்தது போலிருந்தது. ஜிப்ஸி கேட்டான். "ஏன் அப்படிப் பார்க்கிறாய்?"

விஸ்வம் அதற்குப் பதில் சொல்லாமல் ஜிப்ஸியைக் கேட்டான். "நீ யார்?"

மறுபடியும் டேனியலின் குரல் விஸ்வத்துக்கு அன்னியமாக இருந்தது. வேறொரு உடலில் தங்கியிருந்து அந்த உறுப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு இயங்குவது சுலபமானதல்ல. இந்த உடலை எந்தக் காலத்திலும் அவனுடையதாய் அவனால் உணர்வது முடியாத காரியமாய்த் திரும்பவும் தோன்றியது... ஆனால் வேறு வழியில்லை, இப்போதைக்கு இதிலிருந்தே இயங்க வேண்டும் என்ற உண்மையை ஜீரணித்து ஏற்றுக் கொண்டு தான் ஆக வேண்டும் என்று அவன் தன் மனதிற்குக் கண்டிப்புடன் கட்டளையிட்டான்.

ஜிப்ஸி பதில் சொல்லாமல் யோசனையுடன் விஸ்வத்தைப் பார்த்தான். விஸ்வம் அமைதியாகச் சொன்னான். "என் வாழ்க்கையின் முக்கியமான கட்டங்களில் எல்லாம் வந்து இவ்வளவு தூரம் எனக்கு உதவியிருக்கிறாய். இத்தனை காலம் நம் முதல் சந்திப்பை நான் யதேச்சையாக நடந்தது என்று நினைத்திருந்தேன். பின் இரண்டாம் முறை சந்தித்து இல்லுமினாட்டி பற்றிச் சொன்னாய். அது யதேச்சையல்ல என்பது எனக்குத் தெரிந்திருந்தாலும் ஏதோ எனக்கு உதவுவதற்காகத் திரும்பவும் ஒருமுறை வந்து சொல்கிறாய் என்று நினைத்தேன். மூன்றாவது சந்திப்பு நடக்காது. அது தேவையிருக்காது என்றாய். பழைய உடலில் நான் இருக்கையில் நம் சந்திப்பு நடக்கவுமில்லை. ஆனால் மூன்றாவது முறையும் என் வாழ்க்கையில் குறுக்கிட்டிருக்கிறாய். அதுவும் முக்கியமான கட்டத்தில். நான் இந்த உடலில் வந்து சேர நீ உதவியிருக்கிறாய். இப்போது இல்லுமினாட்டி கையில் நான் கிடைத்து விடாமல் நீ என்னைக் காப்பாற்றியுமிருக்கிறாய். இப்போது யோசித்தால் முதல் தடவையிலிருந்தே உன்னைப் பற்றி நான் நினைத்தது எதுவும் சரியல்ல என்பது புரிகிறது. தயவு செய்து இனியாவது எதையும் மறைக்காமல் நீ சொல். யார் நீ? ஆரம்பத்திலிருந்தே நீ ஏன் என்னைப் பின் தொடர்கிறாய்?"

ஜிப்ஸி அவனையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்து விட்டு மெல்லச் சொன்னான். "நண்பனே. நீ சொன்னது உண்மை தான். நம் சந்திப்புகள் எதுவும் தற்செயலாக நடந்தது அல்ல. உன் விதியும் என் விதியும் பின்னிப் பிணைந்தே இருக்கின்றன நண்பனே. அதனால் தான் சரியான ஒரு முகூர்த்தத்தில் முதல் முறையாக உன்னைச் சந்திக்க நேர்ந்தது. பார்த்தவுடன் உன்னை நான் அடையாளம் கண்டேன். எல்லையில்லாத சக்திகளை நீ பெற முடிந்தவன் என்பதை என்னால் உணர முடிந்தது. அதனால் உன்னை அந்தச் சக்திகள் நோக்கித் திருப்பி விட்டேன். நான் என் உள்ளுணர்வில் கண்டது பொய் அல்ல என்பதற்கு அறிகுறியாய் நீயும் பல சக்திகளை வசப்படுத்தினாய். ஒருவேளை அப்படி நீ சக்திகளை வசப்படுத்தாமல் இருந்திருந்தால் உனக்கு அடுத்த இலக்கைக் காட்டி இருக்க மாட்டேன். அடுத்த இலக்காய் இல்லுமினாட்டியைக் காட்டிய போது அதில் நீ நிச்சயம் இணைந்து அதன் தலைவனாய் வருவாய் என்று நான் நூறு சதம் எதிர்பார்த்தேன். அதனால் தான் இனி நம் சந்திப்பு இருக்காது, என் உதவியும் உனக்குத் தேவைப்படாது என்று சொல்லி இருந்தேன். நான் எதிர்பார்த்த மாதிரியே நீ இல்லுமினாட்டியில் சேர்ந்தாய். அங்கே அத்தனை பேரையும் கவர்ந்தாய். ஆனால் கடைசி நிமிஷத்தில் இல்லுமினாட்டி கூட்டத்தில் க்ரிஷின் வரவு இருக்கும் என்று நானும் எதிர்பார்த்திருக்கவில்லை. அவன் பேச்சும், அந்தச் சின்னமும் சேர்ந்து எல்லாவற்றையும் மாற்றும் என்றும் எதிர்பார்த்திருக்கவில்லை. உன் மரணத்தைக் கண்டிப்பாக நான் எதிர்பார்த்திருக்கவேயில்லை. தடைகளால் தடுக்கப்பட்டு நின்று விட நீ பிறந்தவன் அல்ல. அடுத்த வழி ஒன்று இருக்கிறது என்று காட்டினேன். நீ வழக்கம் போல ஜெயித்து விட்டாய்...."

ஜிப்ஸி எல்லாவற்றையும் சொல்லி விட்ட பாவனையில் புன்னகைத்தான். ஆனால் விஸ்வம் ஏமாந்து விடவில்லை. அவன் கேட்டான். "நான் கேட்டதற்கு நீ பதில் சொல்லவில்லை. நீ யார்? உன் நோக்கம் என்ன? இத்தனை உதவி எனக்குச் செய்ததில் உனக்குக் கிடைக்கப் போகும் லாபம் என்ன?"

ஜிப்ஸி சிறிய தயக்கத்துக்குப் பின் சொன்னான். "நண்பனே. உன்னிடம் நான் பொய் சொல்ல விரும்பவில்லை. அதே நேரம் என்னைப் பற்றிய எல்லா உண்மைகளையும் உடைத்துச் சொல்லும் நிலைமையிலும் நான் இல்லை. நான் செய்து கொடுத்திருக்கும் ஒரு சத்தியம் உன்னிடம் உண்மையைச் சொல்ல விடாமல் என்னைத் தடுக்கிறது. ஆனால் நான் உன் நண்பன் என்பதையும், உன் நலத்தில் உனக்கு நிகராய் அக்கறை காட்டுபவன் என்பதையும் மட்டும் இப்போது சொல்ல நான் ஆசைப்படுகிறேன். கண்டிப்பாக ஒருநாள் உண்மை எல்லாமே உனக்குத் தெரிய வரும். அது வரை நீ என்னை நம்ப வேண்டும்..."

விஸ்வம் கண்களை மூடிக் கொண்டான். இந்த ஜிப்ஸியை நம்பாமல் இருக்கக் காரணமில்லை. இப்போதைய நிலைமையில் இந்த ஜிப்ஸியைத் விட்டால் அவனுக்கு வேறு நாதியுமில்லை. விஸ்வம் முடிந்த வரை மற்ற நிலவரங்களை எல்லாம் புரிந்து கொள்ள முயன்றான். அவன் கேட்டான். "இந்த வீட்டுச் சொந்தக்காரன் நியூயார்க்கில் இருப்பதாகச் சொன்னாய். அவனுக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்?"

"ஒரு சம்பந்தமும் இல்லை. வீடு காலியாக இருக்கிறது. அவன் இப்போது வர வாய்ப்பில்லை. அதனால் தைரியமாகவும், பாதுகாப்பாகவும் இங்கே நாம் தங்கியிருக்கிறோம். அவ்வளவு தான்."

விஸ்வம் வாய்விட்டுச் சிரித்தான். திருட்டுத்தனமாய் ஒரு வீட்டில் தங்கியிருப்பதை எந்தப் பயமும், குற்றவுணர்வும் இல்லாமல் ஒரு சர்வசாதாரணமான விஷயத்தைச் சொல்வது போல் அவன் சொன்ன விதம் அவனுக்குப் பிடித்திருந்தது. ஆள் அழுத்தமானவன்...

ஜிப்ஸியும் மெல்லப் புன்னகைத்து விட்டுச் சொன்னான். "இல்லுமினாட்டிக்குத் தெரியாமல் நாம் நிறைய தூரம் போக வழியில்லை. அதனால் தான் உள்ளதிலேயே எல்லா விதங்களிலும் பாதுகாப்பான இந்த வீட்டை நான் தேர்ந்தெடுத்தேன்..."

விஸ்வம் கேட்டான். "சரி இனி நாம் என்ன செய்யப்போகிறோம்?"

(தொடரும்)

என்.கணேசன்

இல்லுமினாட்டி 23

விஸ்வம் என்ன செய்யப் போகிறோம் என்று கேட்டவுடன் ஜிப்ஸி சொன்னான். “நீ பழையபடி உன் சக்திகளை எல்லாம் பிரயோகிக்க முடிந்தவனாக வேண்டும்”

விஸ்வம் முகத்தில் நரகவேதனை தோன்றி மறைந்தது. சக்திகளின் பிரயோகத்திற்கு மனிதனின் நரம்பு மண்டலம் மிக வலிமையாக இருக்க வேண்டும். சக்திகளை ஒன்றாகக் குவித்துப் பிரயோகிக்கும் போது மனிதனின் பிராணசக்தியும், நரம்பு மண்டலமும் சரியாக ஒத்துழைக்க வேண்டும். அப்படி ஒத்துழைக்கா விட்டால் வசப்படுத்தி வைத்திருக்கும் சக்திகள் வலுவில்லாமல் பலவீனமாகவே வெளிப்படும். திட்டமிட்ட இலக்கை எட்டாது. இப்போதைய உடல் போதையால் ஒட்டு மொத்தமாக வலிமை இழந்த உடல். கற்றிருந்த சக்திகளை அவனால் இந்த உடலின் மூளையில் பதிவு செய்து கொள்ள மட்டுமே முடிந்தது. ஆனால் பிரயோகத்திற்கு அந்தப் பதிவுகள் மட்டும் போதாது… சக்திகளை முழுக் கட்டுப்பாட்டுடன் இயக்க முடிந்த நரம்பு மண்டலமும் வேண்டும். போதையால் கிட்டத்தட்ட அழிந்து பலவீனமாகி விட்டிருந்த இந்த உடலின் நரம்புகள் சக்திப்பிரயோகங்களுக்கு உதவும் நிலையில் இல்லை.

விஸ்வத்துக்கு நோக்கு வர்மத்தைக் கற்றுக் கொடுத்த சாது நினைவுக்கு வந்தார். நோக்கு வர்மத்தில் அந்த சாது சிறந்த நிபுணராக இருந்தார். அவரிடம் போதைப் பழக்கமும் இருந்தது. ஆனால் அந்தப் போதைப் பழக்கத்துடனேயே வேறு சில மூலிகைகள் சாப்பிட்டும், பயிற்சிகள் செய்தும் அந்தப் போதைப் பழக்கம் அவருடைய சக்திப் பிரயோகத்தைத் தடுத்து விடாத அளவு அவர் எச்சரிக்கையுடன் இருந்ததை அவன் கவனித்திருக்கிறான். அவர் அதையே அவனிடம் பெருமையாகவும் ஒரு தடவை சொல்லியிருக்கிறார். அப்போது அவன் இகழ்ச்சியாகப் பதில் அளித்திருந்தான். “விஷத்தையும் சாப்பிட்டு, விஷமுறிவு மருந்தையும் சாப்பிடுவது தேவையில்லாத வடிகட்டிய முட்டாள்தனம்.”

அவன் சொன்னதைக் கேட்டு அவர் முகம் வாடிப்போனது அவனுக்கு நினைவிருக்கிறது. அந்த சாதுவுக்கும் அந்தப் போதைப் பழக்கத்திற்கு அடிமையாகி விட்டதில் வருத்தம் இருந்ததை அவன் உணர்ந்திருக்கிறான். இந்த டேனியலோ விஷத்தை மட்டுமே சாப்பிட்டு விஷ முறிவு மருந்தைப் பற்றிச் சிந்தித்தேயிருக்காத அடிமட்ட முட்டாள்…

ஜிப்ஸி அவன் முகத்தில் தோன்றி மறைந்த வலியைப் பார்த்து விட்டு மென்மையாகச் சொன்னான். "வருத்தப்படாதே. உனக்கு இது சவால் என்று நினைத்துக் கொள். சக்திகளைப் பொருத்த வரை நீ இது வரை முயற்சி செய்து முடியாமல் போனது எதுவும் இல்லவே இல்லை. அதனால் நீ கண்டிப்பாக முன் போல் ஆகி விட முடியும். நமக்கு இப்போதைய தேவை காலமும், பொறுமையும் தான்”

விஸ்வம் தன் மீது காட்டப்படும் இரக்கத்தை ரசிக்க முடியாதவன். ஜிப்ஸி காட்டிய இரக்கம் அவனுக்குக் கசந்தது என்றாலும் ஜிப்ஸியின் நம்பிக்கை சிறிது ஆறுதலாகவும் இருந்தது. விஸ்வம் திடீரென்று நினைவு வந்தவனாகக் கேட்டான். “உன்னிடம் இருக்கும் சக்திகளைப் பற்றி நீ இது வரை சொல்லவேயில்லையே”

ஜிப்ஸி அந்தத் திடீர்க்கேள்வியை எதிர்பார்த்திருக்கவில்லை போல் தெரிந்தது. ஜிப்ஸி சொன்னான். “சொல்லிக் கொள்ளும்படியாக என்னிடம் எந்தச் சிறப்புச் சக்தியும் இல்லை நண்பா”

விஸ்வம் சொன்னான். “அப்படி ஒரு சக்தியும் இல்லாமலேயா நீ என்னைப் பார்த்தவுடன் என் கடந்த காலம் அன்று சொன்னாய். இல்லுமினாட்டியில் நான் இறந்து கொண்டிருப்பது அங்கிருந்தவர்களுக்கே தெரியாத போது உனக்குத் தெரிந்திருந்தது. அதே போல் அந்த நேரத்தில் இறந்து கொண்டு இருந்த டேனியல் பற்றியும் உனக்குத் தெரிந்திருந்தது. இதெல்லாம் சிறப்புச் சக்தி இல்லாதவனிடம் இருக்க முடிந்ததா?”

ஜிப்ஸி அந்தக் கேள்வியில் அசரவில்லை. உடனே சொன்னான். “நண்பனே, நீயும் நானும் விதியால் முன்கூட்டியே பிணைக்கப்பட்டிருக்கிறோம். அதனால் நீ சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் என்னால் உடனுக்குடன் தெரிந்து கொள்ள முடியும். உனக்கு உதவக்கூடிய விஷயங்களையும் என்னால் உடனே தெரிந்து கொள்ள முடியும். மற்றது எதுவும் எனக்குத் தெரியாது.”

‘நாம் இருவரும் விதியால் பிணைக்கப்பட்டிருக்கிறோம் என்கிறாய். ஆனால் சக்திகளின் உச்சத்தில் நான் இருந்த காலத்திலேயே உன்னைப் பற்றி என்னால் முழுவதுமாக தெரிந்து கொள்ள முடிந்ததில்லை’ என்று சொல்ல நினைத்த விஸ்வம் அதைச் சொல்லாமல் வார்த்தைகளை விழுங்கிக் கொண்டான். இந்த ஜிப்ஸி முழு உண்மைகளையும் சொல்லி விடவில்லை என்ற போதிலும் அவன் சொல்வது எதுவும் பொய்யாகவும் இருக்கவில்லை. விஸ்வமே பூரண சக்திகளைக் குவித்து இந்த உடலுக்குள் வந்து தன் சக்திகளையும் பதிவு செய்த பின் எல்லா சக்திகளையும் செலவழித்துக் காலியாக்கி விட்ட உணர்வைப் பெற்றாலும் கூட அவனால் ஜிப்ஸி வருவதாகச் சொன்ன செய்தியை உணர முடிந்தது நினைவுக்கு வந்தது. விதியால் இருவரும் முன்கூட்டியே பிணைக்கப்பட்டவர்களாக இருப்பதாகச் சொன்னது உண்மையாகவே இருக்கலாம்.

விஸ்வம் கேட்டான். "நான் இந்த உடம்பை எந்த அளவு தேற்ற முடியும் என்று பார்க்கிறேன். தேற்றிய பிறகு அடுத்ததாக நாம் என்ன செய்யப் போகிறோம்… அது வரை இல்லுமினாட்டி என்ன செய்யும்?"

ஜிப்ஸி சொன்னான். “இல்லுமினாட்டியைப் பொறுத்த வரை உறுப்பினர்கள் எந்த ஒரு கருத்தையும் வெளிப்படையாகத் தங்கள் கூட்டங்களில் பேசலாம். தலைமைக்குத் தெரிவிக்கலாம். ஆனால் முக்கிய முடிவுகளை எடுப்பது தலைமைக் குழு. தலைமைக்குழுவில் இருக்கும் ஐந்து பேர்களில் மூன்று பேர் உனக்கு நன்றாகவே தெரியும். தலைவர் எர்னெஸ்டோ, உபதலைவர், ஃப்ராங்க்பர்ட்டில் நீ முன்பே சந்தித்திருக்கும் கலைப்பொருள்கள் சேகரிக்கும் ஆசாமி. மீதி இருவர் சீனாவின் அரசியல் தலைவர் ஒருவர், தென்னாப்பிரிக்க அணுசக்தி விஞ்ஞானி ஒருவர். இந்தத் தலைமைக்குழுவிலும் தலைவரான எர்னெஸ்டோ தான் சர்வ சக்தி வாய்ந்தவர். அவரிடமும் மற்ற நாலு பேரும் கருத்து தெரிவிக்கலாம். ஆனால் அவர் எடுத்த முடிவை அவர்களும் இது வரை எதிர்த்ததில்லை. இந்த அளவு அதிகாரத்தை எர்னெஸ்டோவுக்கு முந்தைய தலைவர் கூடக் கையில் வைத்திருக்கவில்லை என்று சொல்கிறார்கள். அதனால் இப்போதைக்கு எர்னெஸ்டோவின் முடிவே இல்லுமினாட்டியின் முடிவு. அவரோ உன்னை இல்லுமினாட்டிக்கு வில்லனாகவும், க்ரிஷைக் கதாநாயகனாகவும் நினைக்கிறார்…"

விஸ்வத்துக்கு இல்லுமினாட்டி கூட்டத்தில் எர்னெஸ்டோ க்ரிஷை இல்லுமினாட்டியில் சேர அழைத்ததை உணர்வு நிலையில் இருந்து கவனித்தது நினைவு வந்தது. அவரே இல்லுமினாட்டிக்கு அழைத்தவன் அவருக்குக் கதாநாயகனாக இருப்பதும், கதாநாயனுக்கு எதிரானவனை வில்லனாக அவர் நினைப்பதும் ஆச்சரியமில்லை.

விஸ்வம் சொன்னான். “ஒரு காலத்தில் நான் விதியை நம்பியதில்லை நண்பனே. குறிப்பாக என் விதியை நானே எழுதிக் கொள்வேன் என்பதில் எனக்குச் சந்தேகமே இருந்ததில்லை. ஆனால் இப்போது விதியும் இருப்பதை நான் ஒப்புக் கொள்ள வேண்டியதாகி விட்டது. இல்லுமினாட்டியில் சேர நான் செய்த முயற்சிகள், சேர்ந்த பின் நான் செய்த முயற்சிகள் எல்லாம் கச்சிதமாக விளைவுகளைக் கொடுத்து என் விதியை நான் எழுகிறேன் என்ற நம்பிக்கையைக் கொடுத்தது. ஆனால் எந்த முயற்சியும் எடுக்காமல், இல்லுமினாட்டி அல்ல எந்தவொரு இயக்கத்திலும் சேரும் உத்தேசமும் இல்லாமல் சும்மா இருந்த க்ரிஷை இல்லுமினாட்டிக்குக் கூட்டிக் கொண்டு வந்ததுடன் அவனை அதில் சேர்த்தும் விட்டது தனிப்பட்ட யாருடைய திட்டமும் இல்லாமல் இருப்பதால் அது விதி என்றே நான் நம்ப வேண்டி இருக்கிறது. இது அவன் விதியாக இருக்கலாம்…"

ஜிப்ஸி சொன்னான். “ஆனாலும் கடைசியிலும் உன் விதியை நீ தான் எழுதிக் கொண்டிருக்கிறாய். மரணத்தில் கூட நீ தான் ஜெயித்திருக்கிறாய். அதனால் இப்போதும் நீ தான் முந்தி இருக்கிறாய் நண்பா…."

விஸ்வம் மெலிதாய்ப் புன்னகைத்தான். ஒரு விதத்தில் ஜிப்ஸி சொல்வது உண்மை தான் என்றாலும் இந்த போதை மனிதன் உடல் கிடைக்காமல் வேறு ஒரு சாதாரண உடல் கிடைத்திருந்தாலும் அவன் வெற்றியைக் கொஞ்சம் அதிகமாய் உணர்ந்திருப்பான்.

ஜிப்ஸி சொன்னான். “உனக்கு முதல் எதிரி க்ரிஷ் தான் என்றாலும் இரண்டாவது எதிரியாய் சேர்ந்திருக்கிற எர்னெஸ்டோ தான் இப்போது அதிக ஆபத்தான ஆளாய் இருக்கிறார். உன்னை அவர் பழைய கதையாய் ஒதுக்கி விடமாட்டேன்கிறார். உன்னைத் தேடுவதில் அவர் இவ்வளவு மும்முரமாக இருப்பது உன்னைக் கொல்வதற்காகத் தான். க்ரிஷ் நீ உலகத்தை அழிப்பாய் என்று நம்புகிறான் என்றால் எர்னெஸ்டோ நீ அதற்கு முன் இல்லுமினாட்டியை அழிப்பாய் என்று நம்புகிறார். அதனால் நீ உடனடியாக முடிக்க வேண்டிய எதிரி எர்னெஸ்டோ. அதை நீ செய்யா விட்டால் அவர் உன்னை முடித்து விடுவார். ஒரு முறை உபயோகித்து நீ வெற்றி பெற்றிருக்கிற இந்தக் கூடு விட்டுக் கூடு பாயும் வித்தையும் இன்னொரு தடவை வெற்றி தர இப்போதைக்கு உனக்கு சக்திகள் போதாது."

வாஷிங்டனில் இருக்கும் அந்த வயதான இல்லுமினாட்டி உறுப்பினர் கர்னீலியஸ் ஒரு அடுக்குமாடிக் கட்டிடத்தில் பன்னிரண்டாவது மாடியில் தனியாக வசிக்கிறார். அவர் மனைவி இறந்து இருபது வருடங்களாகின்றன. இரண்டு மகன்கள் தொலை தூரங்களில் வசிக்கிறார்கள். அவர் வீட்டு ஜன்னல் வழியாகப் பார்த்தால் இல்லுமினாட்டியின் இரகசியக் காப்பறைக் கட்டிடம் தெளிவாகத் தெரியும். பல மனப் போராட்டங்களுடன் இப்போது ஜன்னல் வழியாக அதைத்தான் அவர் பார்த்துக் கொண்டிருக்கிறார். இந்த நள்ளிரவிலும் அங்கு பலத்த காவல் இருப்பதை அவரால் பார்க்க முடிந்தது. அதனுள் இருக்க வேண்டிய ஒரு இரகசிய ஆவணம் அவரிடம் இருக்கிறது. அது அவரை உறங்க விடாமல் தடுக்கிறது. ஆபத்தான இந்தக் காலக்கட்டத்தில் ஆபத்தான தகவல்களைக் கொண்ட அந்த ஆவணத்தை இனியும் தன்னிடம் வைத்துக் கொண்டிருப்பது சரியல்ல என்று அறிவும் மனசாட்சியும் சேர்ந்தே அவரை எச்சரித்தன. என்ன செய்வது என்று யோசித்தபடியே அந்த நள்ளிரவில் நீண்ட நேரம் ஜன்னலருகே நின்று கொண்டிருந்தார் அவர்…

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, November 21, 2019

இல்லுமினாட்டி 24

முந்தைய உடலில் முழு சக்திகளுடன் இருந்திருந்ததால் கூடு விட்டுக்கூடு பாய்வது கடைசி கணத்தில் உடல் வலுவை இழந்து கொண்டிருந்த போது கூட விஸ்வத்துக்கு முடிந்தது. அந்தச் சக்திகளில் பாதி இருந்தாலும் யாரையும் ஒழித்துக்கட்டுவது விஸ்வத்துக்கு ஒரு பெரிய விஷயமே அல்ல. இப்போதோ உடனடியாக எதையும் செய்து முடிக்க நிலைமை அவனுக்கு அனுகூலமாக இல்லை. இப்போது புதிய உடலின் மூளையில் பழைய சக்திகளின் நுணுக்கங்களை முழுவதுமாய் அவன் பதிவு செய்து வைத்திருக்கிறான். ஆனால் அவற்றைப் பயன்படுத்தத் தேவையான நரம்பு மண்டல சக்தி, போதையால் அழிந்து போன இந்தப் புதிய உடலில் இல்லை. இனி அற்புதங்கள். ஏதாவது செய்ய வேண்டுமென்றால் அவன் இந்த உடலின் சக்திகளைச் சேமித்துப் பத்திரப்படுத்த வேண்டும். நரம்பு மண்டலச் சக்திகளை வளர்க்க வேண்டும். உடலின் உள் பாகங்களைப் பழுது பார்க்க வேண்டும்... போதைக்குப் பழக்கப்பட்ட இந்த உடம்பு போதை மருந்துகள் கிடைக்காததால் அதற்காகப் போராட ஆரம்பித்து விட்டது. கடுமையான தலைவலி, தசைகளின் இறுக்கம், வாந்தி வருகிற உணர்வு எல்லாம் ஆரம்பித்து விட்டது. இதைச் சமாளிக்க வேண்டும்...

விஸ்வத்தின் முகத்தில் லேசாகத் தோன்றி மறைந்த வேதனையின் காரணத்தை ஜிப்ஸியால் உணர முடிந்தது. கரிசனத்துடன் கேட்டான். "மருந்துகள் ஏதாவது வாங்கி வரட்டுமா?"

"வேண்டாம். போதை உடம்பை அடிமையாக்குவது போலத்தான் மருந்தும் உடம்பை அடிமையாக்குகிறது. மூன்று நாளில் தானாகச் சரியாகி விடும்." என்றான் விஸ்வம். மூன்று நாட்கள் உடம்பு அசௌகரியத்தை உணர்வது, மருந்தால் உடனடியாகக் குணமாவதை விடத் தேவலை... உடல் சில அசௌகரியங்களை அலட்சியப்படுத்தக் கற்றுக் கொள்ள வேண்டும். இல்லா விட்டால் உடல் என்னைக் கவனி, எனக்கு சௌகரியம் கொடு என்று சதா முணுமுணுத்துக் கொண்டே இருக்கும். அதைக் கவனிக்கவே அதிக நேரம் போய் விடும். இப்போதே போதையை வேண்டிக் கொண்டு உடல் படும் சங்கடங்கள் அதிகமாகத் தான் இருக்கின்றன. கவனத்தை முக்கியமான விஷயங்களுக்குத் திருப்பி விஸ்வம் அந்த சங்கடங்களை அலட்சியப்படுத்துவதற்காக ஜிப்ஸியிடம் கேட்டான். "எர்னெஸ்டோ ஒழிந்தால் பிரச்னைகள் எல்லாம் ஒழிந்து விடாதே. அவர் போன பின்பு இல்லுமினாட்டியில் என் இடம் என்னவாக இருக்கும்?"

ஜிப்ஸி சொன்னான். "எர்னெஸ்டோவின் மரணம் இயல்பானதாக வெளியே தெரியும் வரை அதிகமான எதிர்ப்பு இருக்காது. அதே சமயம் க்ரிஷ் நுழைவதற்கு முன் உனக்கு இருந்த அமோக ஆதரவும் இப்போது இருக்க வழியில்லை. அந்த சமயத்தில் இல்லுமினாட்டியில் இருந்த மனோபாவம் வேறு. நீ இல்லுமினாட்டி சுவடி அடையாளம் காண்பித்த பாதுகாவலன், உன்னிடம் இருந்த சக்திகளும் பிரம்மாண்டமானவை, உன் தலைமையில் இல்லுமினாட்டி இன்னும் பல மடங்கு அதிகார உச்சத்தைச் சந்திக்கும், என்ற எதிர்பார்க்கும் மனநிலை பெரும்பாலான உறுப்பினர்களிடம் இருந்தது. இப்போது இல்லுமினாட்டி அடையாளம் காட்டியது உன்னைத் தான் என்கிற நம்பிக்கையை க்ரிஷ் ஒட்டு மொத்தமாக அழித்து விட்டான்... அதனால் எர்னெஸ்டோ ஒழிந்தாலும் மற்றவர்களுடன் போட்டி போட்டுத் தான் நீ தலைமைப் பதவிக்குப் போக முடியும்..."

விஸ்வத்திற்கு அதை இப்போது நினைத்தாலும் வயிறெரிந்தது. அவன் கவனமாக மிக அழகாக இல்லுமினாட்டியில் உருவாக்கி வைத்திருந்த பிம்பத்தை க்ரிஷ் அலட்டிக் கொள்ளாமல் சுக்குநூறாக உடைத்து விட்டான்.

ஜிப்ஸி அவனைத் தேற்றுவது போல் சொன்னான். "ஆனால் உன் பழைய இடத்தை க்ரிஷ் பிடித்துக் கொள்ள முடியவில்லை. அவன் பேசி முடித்த போது வேலை செய்த மேஜிக் இப்போது வேலை செய்யவில்லை. எந்த மேன்மையான விஷயமும் கேள்விப்படும் நேரத்தில் ஏற்படுத்தும் பரவசத்தையும், உறுதியையும் தொடர்ந்து மனிதர்களிடம் தொடர்ந்து தக்க வைப்பதில்லை. மென்மையாகவும், நேர்மையாகவும் இருந்து இல்லுமினாட்டியை வளர வைக்க முடியும் என்று பல உறுப்பினர்களுக்கு நம்ப முடியவில்லை என்பது தான் இப்போதைய நிலை."

விஸ்வம் புன்னகையோடு கேட்டான். "இப்போது நான் இல்லுமினாட்டி உறுப்பினரா இல்லையா. இல்லுமினாட்டியின் விதிமுறைகள் என்ன சொல்கின்றன?"

ஜிப்ஸி லேசாகச் சிரித்துக் கொண்டே சொன்னான். "இல்லுமினாட்டியில் மட்டுமல்ல உலகத்தின் எந்தச் சட்டத்திலும், விதிமுறையிலும் உனக்கு திட்டவட்டமான இடமில்லை. உலகத்தைப் பொருத்த வரை நீ இனி டேனியல் தான். உலகம் உடலை வைத்தே யாரையும் அடையாளம் காண்கிறது. இல்லுமினாட்டிக்கு நீ டேனியல் உடம்பில் இருப்பது தெரிந்து விட்டது என்றாலும் அவர்கள் சௌகரியப்பட்டபடி தீர்மானிக்கலாம். விஸ்வம் என்ற உறுப்பினராக உன்னை வரவேற்கவும் செய்யலாம், டேனியல் என்ற சம்பந்தப்படாத போதை ஆசாமியாக உன்னைக் கைகழுவியும் விடலாம். எல்லாம் தீர்மானிப்பவர்களைப் பொருத்தது என்பதால் யாரைத் தீர்மானிக்க விடுகிறோம் என்பதைப் பொருத்ததே உன் நிலைமை."

அப்படியானால் எர்னெஸ்டோ தீர்மானிக்கக்கூடாது என்பது மிகவும் அவசியமாவதை விஸ்வம் உணர்ந்தான். அவன் உடல் களைப்படைய ஆரம்பித்தது. அவன் இந்த உடலைப் பலப்படுத்தி, சக்திகளை சீக்கிரமாக மீட்டெடுக்க வேண்டும். அது சாதாரண காரியம் அல்ல. ஆனால் விஸ்வமும் சாதாரணமானவனல்ல...

வாங் வேக்கு நேற்று ஒரு ரகசியத் தகவல் வந்து சேர்ந்திருந்தது. இல்லுமினாட்டியின் உளவுத்துறை மிக முக்கியம், அதி அவசரம் என்ற வகையிலான ஒரு ரிப்போர்ட்டை தலைவர் எர்னெஸ்டோவின் தனிப் பார்வைக்கு அனுப்பிக் கொடுத்திருக்கிறது என்ற தகவல் தான் அது. பெரும்பாலும் அது போன்றதொரு ரிப்போர்ட் எர்னெஸ்டோ பார்வைக்குச் சென்றால் அவரிடமிருந்து அதன் பிரதி அல்லது சாராம்சம் மற்ற தலைமைக்குழு உறுப்பினர்களுக்கு சில மணி நேரங்களிலேயே போய்ச் சேரும். எல்லோருக்குமான செய்தி என்றால் அடுத்த நாள் மற்றெல்லா உறுப்பினர்களுக்கும் கூடப் போய்ச் சேரும். எர்னெஸ்டோ உளவுத்துறை ரிப்போர்ட்களை இது வரை ரகசியமாக தன் அளவிலேயே வைத்துக் கொண்ட நபர் அல்ல. ஆனால் ரிப்போர்ட் கிடைத்து 24 மணி நேரம் கழிந்த பின்னும் எர்னெஸ்டோவிடமிருந்து தலைமைக்குழு உறுப்பினர்களுக்குக் கூட அது குறித்த எந்தச் செய்தியும் வரவில்லை. அது வாங் வேக்கு நெருடலாகவே இருந்தது. இல்லுமினாட்டியில் மிக முக்கியமானது எதுவும் நடந்து அல்லது நடக்கவிருந்து அதுபற்றி இது போன்ற கட்டத்தில் தான் அறியாமலிருப்பது நல்லதல்ல என்று அவர் அறிவு எச்சரித்தது. அகிடோ அரிமா ஜப்பானுக்குப் போய் விட்டிருந்தபடியால் அவரிடமும் அது குறித்து விவாதிக்க வழியில்லை. இதெல்லாம் போனில் பேசுவது உசிதமும் அல்ல. அந்த ரிப்போர்ட்டில் என்ன இருந்தது என்பதை அறிந்து கொள்ளாமல் மண்டை வெடித்து விடும் போல இருந்தது. பல விதமாக யோசித்து அவர் தூக்கத்தையும், நிம்மதியையும் தொலைத்திருந்தார்.

சில அபூர்வ சமயங்களில் எர்னென்ஸ்டோ தன் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருசிலரை அழைத்து சில விஷயங்களை அலசுவதும் உண்டு என்பதால் அப்படி யாரையாவது அழைத்து எர்னெஸ்டோ பேசியிருக்கிறாரா என்று தெரிந்து கொள்ள வாங் வே துடித்தார். யோசித்து அவ்வளவாக முக்கியமல்லாததாக இருந்தாலும் தலைவரிடம் சொல்ல வேண்டியிருந்த ஒரு நிர்வாக விஷயத்தைத் தேடி எடுத்துக் கொண்டார். பின் எர்னெஸ்டோவின் உதவியாளருக்குப் போன் செய்தார். அந்த உதவியாளர் பத்து வருடங்களாக அந்த வேலையில் இருப்பதால் வாங் வேக்கு நன்றாகப் பரிச்சயமானவர்...

"ஹலோ"

"ஹலோ நான் வாங் வே பேசுகிறேன். தலைவர் இருக்கிறாரா? அவரிடம் பேசலாமா?"

"மிக மிக முக்கியமான விஷயமானால் மட்டும் அவரிடம் பேசுங்கள். அப்படி இல்லா விட்டால் இரண்டு நாள் பொறுத்துப் பேசுங்கள். இல்லாவிட்டால் மெயில் அனுப்புங்கள். அது தான் நல்லது. ஏனென்றால் முக்கியமில்லாத விஷயமென்றால் திட்டு வாங்கக்கூடிய வாய்ப்புண்டு"

"ஏன் தலைவர் அவ்வளவு பிசியா?"

"நேற்றிரவு அவர் தூங்கிய போது மணி இரண்டு. இன்று காலை ஐந்து மணிக்கே எழுந்து விட்டார்..."

"ஏன் விருந்தாளிகள் யாராவது இருக்கிறார்களா என்ன?"

"விருந்தாளிகள் யாருமில்லை. நேற்றுக் கொடுத்திருந்த அப்பாயின்மெண்ட்களைக் கூடக் கேன்சல் செய்து விட்டார். யாரையும் பார்க்கவுமில்லை. ஏதோ தீவிர மிக முக்கியமான வேலையை எடுத்துக் கொண்டிருக்கிறார் போலிருக்கிறது."

"அப்படியானால் அவரைத் தொந்தரவு செய்ய நான் விரும்பவில்லை. நான் பேசவிருக்கும் விஷயத்தை நிதானமாகக் கூடச் சொல்லிக் கொள்ளலாம். அவசரமேயில்லை."

வாங் வே போனை வைத்து விட்டார். எர்னெஸ்டோவுக்கு உளவுத்துறை அனுப்பியிருக்கிற தகவல் சாதாரணமானதாக இருக்க வழியேயில்லை. ஏனென்றால் எர்னெஸ்டோ எப்படிப்பட்ட சூழலிலும் ஏழு மணி நேரத் தூக்கத்தைத் தியாகம் செய்யாதவர். அவசர வேலை வந்து தூங்கப் போகும் நேரம் பின்னிரவானால் மறு நாள் மதியம் தான் எழுந்திருப்பார். அப்படிப்பட்டவர் மூன்றே மணி நேரம் தூங்கி எழுந்து வேலை பார்க்கிறார். அதே போல் கொடுத்த அப்பாயின்மெண்ட்களை அனாவசியமாக அவர் கேன்சல் செய்பவரும் அல்ல. அப்படிப்பட்டவர் அதையும் செய்திருக்கிறார் என்றால் கிடைத்திருக்கிற தகவல் பெரிதாக அவரைப் பாதிக்கிற தகவலாகத் தான் இருக்க வேண்டும். என்ன அது என்ற கேள்வி வாங் வே மனதில் விஸ்வரூபம் எடுத்து நின்றது.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, November 28, 2019

இல்லுமினாட்டி 25

இல்லுமினாட்டியின் உளவுத்துறையில் அனைத்து வகையான பேரறிவாளர்கள் இருந்தார்கள். நவீன அறிவியல் நுட்பங்களின் உச்சத்தைப் பயன்படுத்தும் போக்கும் இயல்பாகவே இருந்தது. உளவுத்துறை இல்லுமினாட்டியின் தலைவருக்கு மட்டுமே கட்டுப்பட்டதாக இருந்தது. அவர் இல்லாத பட்சத்தில், அவரை அணுக முடியாதபடி அவர் நோய்வாய்ப்பட்டிருந்தாலோ, ஆபத்திலிருந்தாலோ அடுத்தபடியாக உபதலைவருக்குக் கட்டுப்பட்டதாக இருந்தது. மற்ற இல்லுமினாட்டி உறுப்பினர்கள் தங்களுக்கு வேண்டிய தகவல்களைப் பெற இந்த உளவுத்துறையை அணுக முடியாது. அவர்கள் மற்ற தனிப்பட்ட அல்லது அரசாங்க உளவு அதிகாரிகள் மற்றும் நிபுணர்களையே அணுகுவார்கள். அப்படி இல்லுமினாட்டி உறுப்பினர்கள் கூடத் தொடர்பில் இருக்க முடியாத வலிமையான உளவுத்துறை தலைமையோடு மட்டும் இணைந்ததாக இருந்தது தலைமையின் உச்சப் பலத்தை அதிகப்படுத்துவதாக இருந்தது. அந்த உளவுத்துறை எல்லாத் தகவல்களையும் இல்லுமினாட்டியின் தலைவரிடமே சமர்ப்பிக்கும். அவர் அந்தத் தகவல்களைப் படித்து விட்டு தலைமைக்குழுவுக்கு மட்டும் அனுப்ப வேண்டுமா, எல்லா உறுப்பினர்களுக்கும் அனுப்ப வேண்டுமா என்று முடிவு செய்து பின் அனுப்புவார். சில மிக ரகசிய ரிப்போர்ட்களை அவர் தன்னிடமே கூட வைத்துக் கொள்ள முடியும். அப்படி முதல் முறையாக ஒரே சமயத்தில் வந்த இரண்டு ரிப்போர்ட்களை எர்னெஸ்டோ தன்னிடமே வைத்துக் கொண்டிருக்கிறார்.

முதல் ரிப்போர்ட் "விஸ்வம்" என்ற பெயரில் இருந்தது. அதில் விஸ்வம் என்ற சக்தி வாய்ந்த மனிதன் அடுத்ததாக என்ன செய்யப் போகிறான் என்பதை அவனது பழைய சரித்திரத்தை வைத்து உளவுத்துறையின் துப்பறியும் நிபுணர்களும், மூன்று மனோதத்துவ மேதைகளும் சேர்ந்து கணித்திருந்தார்கள். விஸ்வத்தைப் பற்றிய சின்னச் சின்னத் தகவல்களையும் வைத்துக் கொண்டு மேலும் பல புதிய தகவல்களைப் பெற்றிருந்த துப்பறியும் நிபுணர்கள் அந்தத் தகவல்களை மனோதத்துவ மேதைகளுக்குத் தந்து விஸ்வத்தின் எதிர்கால நடவடிக்கைகளை அனுமானித்திருந்தார்கள். மனிதன் தன் இயல்பான குணங்கள் மற்றும் பழக்க வழக்கங்களின்படியே இயங்குபவன் என்பதால் அந்தக் கணிப்பு பொய்த்துப் போக வழியில்லை...

'விஸ்வம் தனக்கு எதிரான நிலையை எடுக்கக் கூடியவர்களையும், தன் நோக்கத்திற்குத் தடையாக இருக்கக்கூடியவர்களையும் தன் அமானுஷ்ய சக்திகளைப் பயன்படுத்திக் கொல்லத் தயங்காதவன் என்பது இந்தியாவின் ரகசிய ஆன்மீகத்தின் முந்தைய குருவின் மரணத்திலிருந்தும், தமிழ்நாட்டு முந்தைய முதலமைச்சர் ராஜகுருவின் மரணத்திலிருந்தும் தெரிவதால் கண்டிப்பாக இல்லுமினாட்டியில் அவனை ஏற்றுக் கொள்ளா விட்டாலும், எதிர்த்தாலும் அதே பாணியைக் கையாள்வதற்கு சாத்தியமிருக்கிறது. அதைச் செய்யுமளவு அவன் புதிய உடல் பலம் பெற்ற பின் அவன் முதல் வேலை இல்லுமினாட்டி தலைவரைக் கொல்வதாக இருக்கலாம்' என்று அந்த ரிப்போர்ட் தெரிவித்திருந்தது. விஸ்வத்தின் கடந்த காலச் சரித்திரத்தை, தெரிந்த வரை ஆழமாக ஆராய்ந்த பின்பும் விஸ்வத்தை அழைத்துச் சென்ற கூட்டாளிகளை உளவுத்துறையால் யூகிக்கவும் முடியவில்லை. ஆனால் பெரும்பாலும் ஒருவனாக அல்லது அதிகபட்சமாக இருவராக இருக்கலாம் என்றும் அவனுடைய பழைய வாழ்க்கையில் அந்தக் கூட்டாளி/கள் அதிகமாக அவனுடன் தொடர்பில் இருந்திருக்க வழியில்லை என்று மட்டும் யூகித்திருந்தது.

'கிதார் இசையில் வூடு சடங்கு ட்யூனை ஒலிக்க விட்டதைப் பார்க்கும் போது அந்தக் கூட்டாளி/கள் இந்த அமானுஷ்ய சக்திகளின் சம்பந்தம் பெற்றவர்களாகவே இருக்கவேண்டும் என்றாலும் அவர்கள் அந்தச் சக்திகளை இதுவரை அதிகம் வெளிப்படுத்தியிருக்காத, யாருக்கும் சக்தியாளர்களாக அறிமுகம் ஆகியிருக்காதவர்களாகவே இருக்கக்கூடும்' என்று ரிப்போர்ட் சொன்னது. அப்படி ஒலிக்க வைக்க நுழைந்த ஆள் அல்லது ஆட்களை மருத்துவமனைக் கண்காணிப்புக் காமிராப்பதிவுகளைப் பல முறை நுட்பமாகப் பார்த்தும் கண்டுபிடிக்க முடியவில்லை. அதனால் அந்தக் கூட்டாளிகளும் வலிமையும், ரகசியமும், செயல்திறனும் வாய்ந்த ஆட்களாய் இருக்க வாய்ப்பிருப்பதாகவே உளவுத்துறை சந்தேகப்பட்டது. அதனால் எர்னெஸ்டோ உயிருக்குப் பேராபத்து இருக்கின்றது என்று உளவுத்துறை எச்சரித்திருந்தது.

விஸ்வத்தின் கூட்டாளி/கள் வெளிப்படையாக முன்னுக்கு வருவதில் தயக்கமிருப்பதற்கு வலுவான காரணங்கள் இருக்க வேண்டும் என்று மனோதத்துவ நிபுணர்கள் நம்பினார்கள். சக்திகள் இருந்தும் இது வரை வெளிப்படுத்தாத கூட்டாளிகள் முன்பு போலவே இனியும் ரகசியமாக பின்னால் இருந்து இயங்கவே வாய்ப்புகள் அதிகம் என்று அவர்கள் கணித்திருந்தார்கள்.

விஸ்வத்தின் உடல் வலிமை தேறுவதற்கு ஆகும் கால அளவை மூளை விஞ்ஞானிகளும், நரம்பியல் நிபுணர்களும் சேர்ந்து ஓரளவு அனுமானிக்க முடியும் என்று அந்த ரிப்போர்ட் சுட்டிக்காட்டியது. மூளை விஞ்ஞானி என்றால் ஜான் ஸ்மித்துக்கு மிஞ்சிய நபர் இல்லை. ஏற்கெனவே இந்த விவகாரத்தில் அவர் ஈடுபட்டு விட்டதால் அவரும் தலைசிறந்த நரம்பியல் நிபுணர் யாராவதும் சேர்ந்து அந்தக் கால அளவை நிர்ணயிப்பது நல்லது என்றும் அதை உடனடியாகச் செய்வது அதிமுக்கியம் என்றும் அவசரம் என்றும் ரிப்போர்ட் கூறியிருந்தது.

எர்னெஸ்டோ தன் உயிருக்கு என்றுமே பயப்பட்டவரல்ல. எப்போது மரணம் வந்தாலும் மறு உலகம் எப்படியிருக்கும் என்று சென்று பார்க்கிற ஆர்வமுடையவராக அவர் தயார்நிலையிலேயே இருந்தார். ஆனால் அவர் தலைமை வகிக்கும் இல்லுமினாட்டி அழிவை நோக்கிச் செல்வதை அவர் ஏற்றுக் கொள்ள முடியாதவராகவே இருந்தார். அதனால் இல்லுமினாட்டியை ஒரு சரியான தலைமையில் ஒப்படைப்பதற்கு முன் முட்டாள்தனமாக இப்போது உயிரை விடுவதற்கு அவர் விரும்பவில்லை.

அந்த முதல் ரிப்போர்ட்டை அவர் படித்து முடிகையில் இரவு மணி பத்தரை ஆகியிருந்தது. ஜான் ஸ்மித்தை உடனடியாக இந்த நேரத்தில் அழைப்பது அவசியமில்லை என்று நினைத்த அவர் நாளை வந்து சந்திக்கும்படி ஜான் ஸ்மித்துக்குத் தகவல் அனுப்பி விட்டு அந்த இரண்டாவது ரிப்போர்ட்டை எடுத்தார்.

இரண்டாவது ரிப்போர்ட் "அமானுஷ்யன்" என்ற பெயரில் இருந்தது. தூங்கச் செல்லும் நேரம் நெருங்கி விட்டது. பிதோவன் இசையைக் கேட்டபடி ஒயினை அருந்தி விட்டு உறங்கச் செல்ல அதிக நேரமில்லை. என்றாலும் மேலோட்டமாக அந்த ரிப்போர்ட்டைப் படித்து விடலாம் என்று எண்ணியவராக அந்த ரிப்போர்ட்டைப் படிக்க ஆரம்பித்தவர் காலத்தை மறந்தார். இரண்டு மணியளவில் கண்கள் தானாக மூட ஆரம்பித்தன. வேறு வழியில்லாமல் உறங்கியவர் மறுநாள் அதிகாலை ஐந்து மணியளவில் தானாக முழித்துக் கொண்டு மறுபடி எழுந்து அந்த ரிப்போர்ட்டைப் படித்தார். காலம் மறுபடி மறக்கப்பட்டது. முடிவில் அவருக்கு பிரமிப்பே மிஞ்சியது.

ஜான் ஸ்மித் அவரைச் சந்திக்க வந்த போது அவரிடம் ஏதோ ஒரு பெரிய மாற்றம் தெரிந்தது போல் உணர்ந்தார். ஆனால் அது என்ன மாற்றம் என்பதை நிச்சயமாகக் குறிப்பிட்டு அவரால் சொல்ல முடியவில்லை.

எர்னெஸ்டோ அவரிடம் கேட்டார். "ஜான், விஸ்வம் திரும்பவும் அவனுடைய சக்திகள் எல்லாம் உபயோகப்படுத்த அவன் உடல்நிலை எந்த அளவிற்கு சரியாக வேண்டும்?"

ஜான் ஸ்மித் சொன்னார். "அவன் உடம்பின் முக்கியமான எல்லா பாகங்களும் பிரச்சினை கொடுக்காத அளவுக்காவது தேற வேண்டும். முக்கியமாக அவன் நரம்புகள் வலிமையாக மாற வேண்டும்."

"மூளை?"

மருத்துவச் சொற்கள் இல்லாமல் அவருக்குப் புரிய வைப்பது எப்படி என்று ஜான் ஸ்மித் யோசித்தார். பின் சொன்னார் "அதில் அவன் டேட்டாவை நிரப்பி வைத்திருக்கிறான். ஆனால் தகவல்கள் நரம்பு மண்டலத்திற்குப் போவதும், திரும்பப் பெறுவதுமான வழிகள் தடங்கல் இல்லாமல் போய் வர வைக்க வேண்டும்."

எர்னெஸ்டோ கேட்டார் "இதை எல்லாம் இந்த உடம்பில் அவனால் செய்ய முடியுமா? எந்த அளவு செய்ய முடியும், அதற்கு எவ்வளவு காலம் அவனுக்குத் தேவைப்படும்?"

ஜான் ஸ்மித் சொன்னார். "உடல் உறுப்புகள் எல்லாம் ஒன்றுக்கு ஒன்று சம்பந்தம் இருப்பவை. ஒட்டு மொத்தமாய் எல்லாம் சேர்ந்து இயங்க ஆகிற காலத்தை நிபுணர்களுடன் கலந்தாலோசித்த பிறகு தான் ஓரளவு அனுமானிக்க முடியும்"

எர்னெஸ்டோ கேட்டார். "மூளைக்கு நீ இருக்கிறாய். மற்றதெல்லாம் தெரிந்து கொள்ள எத்தனை நிபுணர்கள் வேண்டும்?"

ஜான் ஸ்மித் சொன்னார். "முக்கியமாய் நரம்பியல் நிபுணர் ஆலோசனை வேண்டும். மற்ற பாகங்கள் இருக்கிற நிலைமை ம்யூனிக் ஆஸ்பத்திரி ரிப்போர்ட்களில் இருக்கிறது. அதை வைத்து நாங்களே முடிவு செய்து விடலாம்..."

இதையே உளவுத்துறை ரிப்போர்ட்டும் சொல்லி இருந்தது நினைவுக்கு வந்து திருப்தியடைந்த எர்னெஸ்டோ சொன்னார். "அதை உடனே செய்து எனக்கு அவன் எல்லா முயற்சிகளையும் கச்சிதமாகச் செய்தாலும் அவன் உடம்பு அதிகபட்சமாய் எந்த அளவு தேறும், அதற்கு குறைந்த பட்சம் எத்தனை காலம் தேவைப்படும் என்று கண்டு பிடித்துச் சொல். எனக்கு நாளைக்கே தெரிய வேண்டும்."

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, December 5, 2019

இல்லுமினாட்டி 26

ஜான் ஸ்மித் சந்திக்க விரும்பிய நரம்பியல் நிபுணர் பாரிஸில் இருந்தார். நரம்பியல் நுணுக்கங்களில் அவருக்கிருந்த ஞானம் அபாரமானது. அந்தத் துறையில் அவர் தெரிவிக்கும் கருத்துகளே முடிவானவை என்கிற அளவுக்கு அவர் சொல்வதே வேதவாக்காக அந்தத் துறையின் அறிஞர்களால் எடுத்துக்கொள்ளப்பட்டது. அவர் ஜான் ஸ்மித் முதலில் காட்டிய ரிப்போர்ட்களைப் பார்த்து விட்டுக் கேட்ட முதல் கேள்வி "இந்த ஆள் இன்னும் சாகவில்லையா?" என்பது தான்.

"அதிசயமாய்ப் பிழைத்து விட்டான்" என்று ஜான் ஸ்மித் சொன்னார்.

"நம்ப முடியவில்லையே"

டேனியல் உடல் புத்துயிர் பெற்ற பின் எடுக்கப்பட்ட சில ரிப்போர்ட்களை ஜான் ஸ்மித் அவரிடம் காட்டினார். ஆச்சரியத்துடன் அவற்றைப் படித்துப் பார்த்த அந்த நரம்பியல் நிபுணர் சொன்னார். "நீங்கள் சொன்னது போலவே அதிசயம் தான்... விஞ்ஞானம் வழியாக எத்தனை தான் நாம் தெரிந்து வைத்திருந்தாலும் சில சமயங்களில் இயற்கை நம்மைத் திகைக்க வைத்து விடுகிறது. இதையும் அப்படித்தான் எடுத்துக் கொள்ள வேண்டும்."

சொல்லி விட்டு அந்த நரம்பியல் நிபுணர் மூளையின் ஸ்கேன் ரிப்போர்ட்களை ஆராய்ந்தார். ஜான் ஸ்மித் தன் கருத்துகள் எதையும் சொல்லப் போகாமல் மௌனமாக இருந்தார். அந்த நரம்பியல் நிபுணர் கடைசியில் சொன்னார். "பேராச்சரியம் தான்... இந்த ரிப்போர்ட்கள் ஆள் மாறி எடுத்திருக்கவும் வாய்ப்பிருக்கிறது. இது இரு வேறு மனிதர்களின் ரிப்போர்ட்களாகவும் இருக்கலாமல்லவா?"

ஜான் ஸ்மித் மெல்லச் சொன்னார். "ஒரே மனித உடலுடைய ரிப்போர்ட்கள் தான் என்பது நிச்சயமாக எனக்குத் தெரியும்."

நரம்பியல் நிபுணர் ஆச்சரியத்துடன் கேட்டார். "இப்போது இந்த ஆள் எங்கிருக்கிறான்?"

ஜான் ஸ்மித் சொன்னார். "ஜெர்மனியில் தான். உயிர் பிழைத்ததில் என்ன ஆச்சரியமென்றால் அவனுக்கு போதையின் மேல் இருந்த ஈடுபாடெல்லாம் போய் விட்டது. அவனுக்கு யோகா, உடம்பைப் பலப்படுத்திக் கொள்வது, இதிலெல்லாம் திடீரென்று ஆர்வம் வந்து விட்டது. நான் கேட்க வந்தது இந்த அதிசயம் நரம்பு மண்டலத்திலும் ஏற்பட முடியுமா? அவன் அதில் ஏற்பட்டிருக்கும் சேதாரத்தை முழுவதுமாகச் சரி செய்து கொள்ள முடியுமா?"

"நரம்புகள் பாதிக்கப்பட்டு சேதாரமாவது நிதானமாகத் தான். ஆனால் சேதாரமான பிறகு முழுவதுமாகச் சரியாகிற வாய்ப்பே இல்லை. போதையால் நைந்து போன நரம்புகள் பழைய நிலைமைக்கு வரும் வாய்ப்பே இல்லை."

"அதிலும் அதிசயம் நடக்க முடிந்தால்....?" ஜான் ஸ்மித் கேட்டார்.

"அதிசயம் நடக்க முடிந்தாலும் அது ஓரளவு தான் சரியாகும். அப்படிச் சரியாவதும் மிக நிதானமாகவே இருக்கும். அப்படி ஓரளவு சரியாவதும் சுலபமாக இருக்காது. போதையின் தாக்கத்தை நான் சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. உடம்பு திரும்பவும் போதையின் சுகம் தான் வேண்டும் என்று அடம்பிடிக்கும். நரம்புகள் அந்த உணர்ச்சிப் பெருக்கத்துக்குத் தான் ஆசைப்படும். கண்டிப்பாக மீண்டும் போதைப் பழக்கத்திற்கே அவனை அழைத்துப் போகும்... அவன் அதற்குச் சம்மதிக்கா விட்டால் மரண வேதனையைத் தரும். உடம்பு பல விதமாக எதிர்ப்பு தெரிவிக்கும். அதைத் தாக்குப் பிடிப்பது சாதாரண விஷயமல்ல. சாதாரண மனிதனுக்கு முடிகிற விஷயமும் அல்ல."

அவனும் சாதாரண மனிதனல்ல என்று மனதுக்குள் தெரிவித்த ஜான் ஸ்மித் கேட்டார். "அதைத் தாக்குப் பிடித்து அவன் உறுதியாகத் தன்னைச் சரி செய்து கொள்ள முயற்சி செய்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அவன் அதிகபட்சமாக எத்தனை சதவீதம் தன் பழைய சக்தியை நரம்புகளில் மீட்க முடியும்? அதற்கு எவ்வளவு குறைந்த பட்ச காலம் தேவைப்படும்?"

அந்த அதிசயம் நரம்புகள் விஷயத்தில் நடப்பது சாத்தியமேயில்லை என்று சொல்ல வாயெடுத்த அந்த நரம்பியல் நிபுணர் தன் முன்னால் இருந்த இரண்டு முற்றிலும் வித்தியாசமான ரிப்போர்ட்களை ஒரு கணம் பார்த்து சொல்ல வந்ததைச் சொல்லாமல் விழுங்கிக் கொண்டார். இது இரண்டும் ஒரே மனிதனுடையது, சில மணி நேர இடைவெளியில் எடுக்கப்பட்டவை என்பது சத்தியமானால் ஜான் ஸ்மித் கேட்பதும் சாத்தியமே என்று நினைத்துக் கொண்டார். பின் சிந்தித்து விட்டு ஜான் ஸ்மித்திடம் சொன்னார். "அதிக பட்சமாய் அறுபது சதவீதம் மீட்டெடுக்க முடியும். அதுவும் சின்ன இடைவெளி கூட இல்லாமல், சின்னப் பின்னடைவு கூட இல்லாமல் தொடர்ந்து முயற்சித்து வெற்றி பெற முடிந்தால் மட்டுமே அந்த அறுபது சதவீதமும் சாத்தியமாகும். அதற்குக் குறைந்தபட்சம் ஏழெட்டு மாதமாவது தேவைப்படும்..... ஆனால் உடம்பு தரும் ஆரம்பச் சித்ரவதையைத் தாங்கிக் கொண்டும் அவன் மறுபடி போதையின் பக்கம் போகாமல் இருப்பது மிக முக்கியம்..."

சொல்லும் போதே அப்படியெல்லாம் ஒருவன் தாக்குப்பிடிப்பது சாத்தியமல்ல என்ற பாவனையுடனேயே அவர் சொன்னதைக் கவனித்த ஜான் ஸ்மித் உள்ளுக்குள் புன்னகைத்தார். 'இவர் விஸ்வத்தைச் சந்தித்ததில்லை. அவனைப் பற்றிக் கேள்விப்பட்டதுமில்லை...' பின் அவரிடம் கேட்டார். "அவன் தீவிர மன உறுதியுடன் தாக்குப் பிடிக்க ஆசைப்படுகிறான். அவனுக்கு மருத்துவரீதியாக நாம் உதவ முடியுமானால் எந்தெந்த மருந்துகள் என்ன அளவில் தரலாம்?'

மரணத்தையே வரவழைத்துக் கொள்ளும் அளவுக்குத் தீவிரமாக போதையில் மூழ்கியிருந்த மனிதன் எவ்வளவு தீவிர மன உறுதியுடன் முயல்வான் என்று யோசித்தாலும் அந்த நரம்பியல் நிபுணர் பதில் சொன்னார். அவர் சொன்ன மருந்துகளை எல்லாம் ஜான் ஸ்மித் மனதில் குறித்துக் கொண்டார்.

எர்னெஸ்டோ ஜான் ஸ்மித், நரம்பியல் நிபுணர் இருவருக்கும் இடையே நடந்த பேச்சின் ஒலிநாடாவைக் கண்களை மூடிக் கொண்டு கேட்டார். முழுவதும் கேட்டு முடிந்த பின் ஜான் ஸ்மித்திடம் சொன்னார். "அவர் சொன்னது முழு மூச்சில் அவன் முயற்சி செய்தால் ஏழெட்டு மாத காலத்திற்குள் அறுபது சதவீத நரம்பு சக்திகளை அவன் மீட்டு விடுவான் என்று. டேனியல் என்ற போதை மனிதனின் உடலின் இயல்பான பலத்தில் அறுபது சதவீதம் மீட்கப்படலாம் என்று தான் அதற்கு அர்த்தம். அது விஸ்வத்தின் பழைய கட்டுப்பாடான உடல் சக்தியின் சிறு துளியாக அல்லவா இருக்கும்? ..."

எர்னெஸ்டோவின் வாதம் ஜான் ஸ்மித்தைப் புன்னகைக்க வைத்தது. "இருக்கலாம். ஆனால் உடனடியாக இல்லா விட்டாலும் சிறிது சிறிதாக அந்த உடலைப் பயிற்சியாலும், கட்டுப்பாட்டாலும் அவனால் தனக்கு வேண்டியபடி ஓரளவு மாற்றிக் கொள்ள முடியும் என்று திபெத்தில் அந்த யோகி என்னிடம் சொன்னது ஞாபகம் வருகிறது. தன்னால் முடிந்ததை விஸ்வம் செய்யாமலிருந்ததாய் சரித்திரம் இல்லை..."

எர்னெஸ்டோவும் புன்னகைத்தார். "அப்படியானால் அந்த நரம்பியல் நிபுணர் சொன்ன அறுபது சதவீதம், ஏழெட்டு மாதம், திபெத் யோகி சொன்ன 'ஓரளவு' என்ற வார்த்தைகளில் தான் நாம் நம்மை இப்போதைக்கு ஆசுவாசப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று சொல்கிறாய். சரி தானே?"

ஜான் ஸ்மித் சிரித்துக் கொண்டே "ஆமாம்" என்றார்.

"அப்படியானால் உடனடிப் பிரச்சினை எதுவும் இல்லை. நல்லது. நீ தொடர்ந்த பயணத்தினால் மிகவும் களைப்பாய்த் தெரிகிறாய். போய் ஓய்வு எடுத்துக் கொள்" என்று சொல்லி ஜான் ஸ்மித்தை வீட்டுக்கு அனுப்பி வைத்த எர்னெஸ்டோ சிந்தனையில் ஆழ்ந்தார். 'விஸ்வம் தன் வாழ்க்கை முழுவதும் எல்லைகளை நீட்டி முன்னேறியவன். அப்படியே இப்போதும் செய்கிறான் என்று வைத்துக் கொண்டால் டேனியலின் உடலைத் தன் மனோ பலத்தால் தன் உடல் போலவே 'ஓரளவு' மாற்றிக் கொண்டு அதில் ஆதிக்கம் செலுத்த முடியும்... அந்த நரம்பியல் நிபுணர் சொல்லியிருந்த அறுபது சதவீதத்தை எழுபதாகவே உயர்த்தினாலும் முப்பது சதவீதம் குறைகிறது. குறைந்த பட்சக் காலமாக அவர் சொன்ன ஏழெட்டு மாதங்களை ஆறாகவே குறைத்தாலும் இன்னும் ஆறு மாத அவகாசம் இருப்பதாக எடுத்துக் கொள்ளலாம். அதற்கு முன் எத்தனை சீக்கிரம் முடிகிறதோ அத்தனை சீக்கிரம் அவனைக் கண்டுபிடித்து அவன் கதையை நிரந்தரமாய் முடித்து விடுவது மிக முக்கியம்... அவன் பிரச்சினையாகக் கூடியவன். பிரச்சினைகளை ஆரம்ப நிலையிலேயே முடித்து வைப்பது நல்லது....'

சிந்தனையிலிருந்து மீண்டவர் அந்த ஒலிநாடாவை இல்லுமினாட்டியின் உளவுத்துறைக்கு அனுப்பி வைத்தார். எல்லாக் கோணங்களிலும் தகவல்களை அலசி அவர்கள் ஒரு முடிவுக்கு வரட்டும் என்று நினைத்தார். ஆனால் அவர்களாலும் ஒரு விஷயத்தில் தெளிவான முடிவை எட்டி விட முடியாது என்பதில் அவருக்குச் சந்தேகமில்லை. எழுபது, அறுபது சதவீதம் என்கிற கணக்கு மருத்துவத்திலும், விஞ்ஞானத்திலும் அர்த்தமுள்ளதாக இருக்கலாம். ஆனால் சக்திகளில் எழுபது சதவீதத்தையும், அறுபது சதவீதத்தையும் எப்படி அளப்பது? அதுவும் புதிய அவதாரம் எடுத்துள்ள விஸ்வம் எந்த அளவு அளப்பதற்கு அகப்படுவான்?... அவனால் எதெல்லாம் முடியும்? எதெல்லாம் முடியாது? இந்தக் கேள்விகளுக்குப் பதில் ஒரே ஒருவனிடம் கிடைக்கும் என்று அவர் உள்மனம் சொன்னது... அமானுஷ்யன்!

(தொடரும்)

என்.கணேசன்

இல்லுமினாட்டி 27

இல்லுமினாட்டி 27

வாங் வேயால் பொறுத்திருக்க முடியவில்லை. எர்னெஸ்டோக்குக் கிடைத்திருக்கும் தகவல்கள் என்ன. அவர் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறார் என்பதை எல்லாம் உடனடியாகத் தெரிந்து கொள்ளா விட்டால் தலையே வெடித்து விடும் போல அவருக்கிருந்தது. எர்னெஸ்டோவின் உதவியாளரிடம் பேசி இரண்டு நாட்களாகி விட்டன. அங்குள்ள நிலவரத்தை அறிய வேண்டி மறுபடியும் அந்த உதவியாளருக்கு வாங் வே போன் செய்தார்.

"தலைவர் இப்போதும் பிசியாகத் தான் இருக்கிறாரா?..."

"...ம்... இன்றிலிருந்து தான் பார்வையாளர்களைப் பார்க்க ஆரம்பித்திருக்கிறார். அதனால் தான் பிசி......"

"இன்றைக்கு அவரைச் சந்திக்க எத்தனை பேர் இருக்கிறார்கள்?" என்று வாங் வே கேட்டார். ஒரு நாளில் அதிகபட்சமாய் 15 அப்பாயின்மெண்ட்கள் தான் எர்னெஸ்டோ தருவார். பத்துக்கு மேல் இன்று அனுமதித்திருந்தால் தலைவர் இயல்பு நிலைக்கு வந்து விட்டார் என்று அர்த்தம். மிகவும் குறைவாகத் தான் அவர் பார்ப்பதாய் இருந்தால் இல்லுமினாட்டி கொடுத்திருக்கும் உளவுத் துறை ரிப்போர்ட்டில் இன்னும் தீவிரமாகக் கிழவர் ஈடுபட்டிருக்கிறார் என்று அர்த்தம்... அந்தக் குறைவான அப்பாயின்மெண்ட்களில் இப்போதைய நிலவரம் சம்பந்தமான மிக முக்கியமான ஆட்கள் இருக்கவும் கூடும்...

"பதினைந்து அப்பாயின்மெண்ட்கள் இருக்கின்றன. இப்போது இரண்டாம் அப்பாயின்மெண்ட் தான் போய்க் கொண்டிருக்கிறது... பிஷப் ஃப்ரான்சிஸ் தான் தலைவருடன் பேசிக் கொண்டிருக்கிறார். அவசரமாகப் பேச வேண்டுமானால் அவர் வெளியே வந்தவுடன் தலைவருக்கு இணைப்பு தருகிறேன்."

பெர்லினில் இருக்கும் பிஷப் ஃபிரான்சிஸ் இல்லுமினாட்டிக்கு மிகவும் நெருக்கமானவர். அவரை வாங் வேயும் நன்றாகவே அறிவார். "அப்படி அவசரமாய் பேச வேண்டியதில்லை. தலைவருக்குத் தகவலை மெயிலிலேயே அனுப்பி வைக்கிறேன். அவர் ஓய்வாக இருக்கையில் பார்க்கட்டும்..." என்று சொல்லி வாங் வே பேச்சை முடித்துக் கொண்டார்.

வாங் வே ஆழ்ந்து யோசிக்க ஆரம்பித்தார். மறுபடியும் எல்லோரையும் சந்திக்கிற அளவுக்கு கிழவர் இயல்பு நிலைக்குத் திரும்பி இருந்தாலும் அவரை இரண்டு நாள் பாதித்த முக்கியத் தகவல்கள் எதையும் இப்போதும் தலைமைக்குழு உறுப்பினர்களுடன் கூட அவர் பகிர்ந்து கொள்ளவில்லை. ஃப்ராங்க்பர்ட் மருத்துவமனையில் டேனியல் என்ற போதை மனிதன் செத்துப் பிழைத்ததையும் அந்த ஸ்கேன் ரிப்போர்ட்களில் இருந்த ஆச்சரியமான தகவல்களையும், ஜான் ஸ்மித் திபெத் போய் அறிந்து வந்ததையும் பகிர்ந்ததோடு சரி, அவரிடமிருந்து வேறெந்தத் தகவலும் இல்லை. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். டேனியல் உடலில் இருக்கலாம் என்று எல்லோரும் சந்தேகிக்கும் விஸ்வம் இன்னும் இல்லுமினாட்டிக்குக் கிடைக்கவில்லை. கிடைத்தால் என்ன செய்வார்கள் என்ற நிச்சயமுமில்லை. அந்த விஸ்வமே அடுத்ததாக என்ன செய்வான் என்றும் தெரியவில்லை. தலைமைக்குழுவைக் கிழவர் கூட்டினால் இல்லுமினாட்டி தரப்பு முடிவாவது என்ன என்பது ஓரளவு தெரியும். அவர் அதையும் செய்யாமல் இழுத்தடிப்பதன் உத்தேசம் வாங் வேக்குப் பிடிபடவில்லை...

திடீரென்று உள்ளுணர்வு உந்த வாங் வே பிஷப் ஃப்ரான்சிஸின் பெர்லின் அலுவலகத்திற்குப் போன் செய்தார். பிஷப் ப்ரான்சிஸின் செகரட்டரி தான் போனில் பேசினார். "...பிஷப் இப்போது சர்ச்சில் பிரார்த்தனையில் இருக்கிறார். முடித்து வர இன்னும் ஒன்றரை மணி நேரமாவது ஆகும்...."

வாங் வே மேற்கொண்டு பேசாமல் இணைப்பைத் துண்டித்தார். பிஷப் ஃப்ரான்சிஸ் பெர்னிலேயே இருக்கிறார் என்றால் அந்தப் பெயரில் எர்னெஸ்டோவைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருப்பது யார் என்ற கேள்வி அவர் மனதைக் குடைய ஆரம்பித்தது. அந்த ஆள் தன் அடையாளத்தை மறைத்துக் கொண்டு ரகசியமாகப் பேச வேண்டியதன் அவசியம் என்னவாக இருக்கும் என்ற அடுத்த கேள்வியும் அந்தக் குடைச்சலில் சேர்ந்து கொண்டது.

எர்னென்ஸ்டோவிடம் பிஷப் ஃப்ரான்சிஸ் வேடத்தில் பேசிக் கொண்டிருந்தது இல்லுமினாட்டியின் உளவுத் துறைத் தலைவனான இம்மானுவல் தான்.

இம்மானுவலுக்கு வயது நாற்பத்தைந்து இருக்கும். வெளியுலகுக்கு அவன் முந்தைய கால்பந்து விளையாட்டு வீரன். குங்ஃபூவில் தேர்ச்சி பெற்றவன். இப்போது கால்பந்து விளையாட்டுகள் குறித்த கட்டுரைகளைப் பல பத்திரிக்கைகளில் எழுதி வருவதால் வெளியுலகுக்கு அவன் கட்டுரையாளன் மட்டுமே. இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த அவன், இல்லுமினாட்டியைப் பொருத்தவரை ஒரு சாதாரண உறுப்பினர். அதிகம் பேசாத, எதிலும் துடிப்புடன் கலந்து கொள்ளும் இயல்பில்லாத கடைமட்ட உறுப்பினர். அவன் அறிவுக்கூர்மையின் அளவையும், இல்லுமினாட்டி உளவுத் துறைத் தலைவன் அவன் என்பதையும் எர்னெஸ்டோவும், உபதலைவரும் மட்டுமே அறிவார்கள்.

எந்த ஒரு விஷயத்தையும், சூழலையும் ஆழமாகவும் துல்லியமாகவும் அலச முடிந்த அவனிடம் எர்னெஸ்டோ கேட்டார். "விஸ்வத்தின் கூட்டாளிகள் பற்றி கண்டுபிடிக்க முடிந்ததா?"

இம்மானுவல் எந்த விதமான தயக்கமோ சங்கடமோ இல்லாமல் சொன்னான். "இல்லை"

எர்னெஸ்டோ இம்மானுவலைக் கூர்ந்து பார்த்துக் கேட்டார். "ஏன்? அவன் கூட்டாளிகளில் ஒருவனாவது ஆஸ்பத்திரிக்குள் நுழைந்திருக்கிறான் என்பது உறுதி. அப்படி உள்ளே நுழைந்து அந்த இசையை ஒலிக்க ஏற்பாடு செய்திருக்கிறான் என்று உங்கள் ரிப்போர்ட்டே சொல்கிறது. அப்படி இருந்தும் உங்களால் ஆஸ்பத்திரிக்குள் நுழைந்த அந்த ஒருவனைக்கூட ஏன் கண்டுபிடிக்க முடியவில்லை?"

இம்மானுவல் அமைதியாக விவரித்தான். "அந்த ஆஸ்பத்திரியின் காமிராக்கள் பதிவு பண்ணின எல்லாத்தையும் நுணுக்கமாவே அலசி விட்டோம். சந்தேகப்படுகிற மாதிரி எதுவுமே எங்களுக்குக் கிடைக்கவில்லை. புதிய ஆளுங்க சிலர் வந்திருந்தது கூட அவங்க நுழைந்ததிலிருந்து வெளியே போன நிமிஷம் வரைக்கும் ஏதோ ஒரு காமிரால அவங்க நடமாட்டத்தோட ரிக்கார்டிங் இருந்தது. ஒருவேளை முதல்லயே ரிக்கார்ட் பண்ணியிருந்த கிதார் இசையை ஆஸ்பத்திரில வேலை பார்க்கிற ஆள் யாராவது மூலமா ஒலிக்க விட்டிருக்கலாமோன்னு கூட ஒரு சந்தேகம் வந்துச்சு. ஆனா நம்ம மீட்டிங்ல நடந்த சம்பவத்தைக் கோர்வையா யோசிச்சப்ப அதுக்கும் வாய்ப்பில்லைன்னு புரிஞ்சுது...."

எர்னெஸ்டோ கேட்டார். "ஏன் வாய்ப்பில்லை?"

"நம்ம இல்லுமினாட்டி மீட்டிங் ஹால்ல திடீர்னு தான் விஸ்வம் இறந்திருக்கான். அவன் இறந்தது நம் ஆள்களுக்கே தெரியாமல் மீட்டிங் தொடர்ந்து நடந்திருக்கு. அவன் இறந்த அந்த சமயத்தில் தான் இந்த கிதார் இசை ஆஸ்பத்திரியில் ஒலிச்சிருக்கு. முதல்லயே ரிக்கார்டிங் பண்ணி ஒரு ஆள் அந்த நேரத்துல ஆஸ்பத்திரில அந்த நேரத்துல ஒலிக்க வச்சிருக்கணும்னா விஸ்வம் இந்த நேரத்துல சாவான்னு முன்பே தெரிஞ்சிருந்தா தான் அது முடியும். அதனால தான் அதுக்கு வாய்ப்பில்லைன்னு சொன்னேன்..."

இம்மானுவல் சொன்னதைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த எர்னெஸ்டோ திகைப்புடன் கேட்டார். "நமக்கே விஸ்வம் இறந்தது தெரியாத போது அவன் கூட்டாளிகளுக்கு எப்படித் தெரிய வந்திருக்கும்?"

இம்மானுவல் சொன்னான். "அது தான் மில்லியன் டாலர் கேள்வி. என் அனுமானம் சரியாக இருக்குமானால் விஸ்வத்தின் கூட்டாளி ஒரே ஆளாகத் தான் இருக்க வேண்டும். அதற்கு மேல் இருக்க வாய்ப்பு குறைவு. அந்த ஒரு ஆளும் விஸ்வத்தையும் விடச் சக்திகள் அதிகம் இருக்கிறவனாகத் தான் இருக்க வேண்டும். அப்படி இருக்கிற ஒருவனுக்குத் தான் மிக மிக ரகசியமாக நடந்த அந்தக் கூட்டத்தில் விஸ்வம் இறந்து போனது உடனடியாகத் தெரிந்திருக்கிறது...."

"நம் ரகசியமான கூட்டத்தில் என்ன நடக்கிறது என்பது நமக்குத் தெரிவதற்கு முன்னே வெளியில் இருக்கும் ஒருவனுக்குத் தெரிகிறது என்பதே நமக்குக் கேவலம் அல்லவா?" எர்னெஸ்டோ கேட்ட போது இம்மானுவல் அதற்குப் பதில் சொல்வது தேவையில்லை என்பது போல் மௌனமாக இருந்தான்.

ஆனால் எர்னெஸ்டோ அவனை விடுவதாக இல்லை. அவர் புன்னகையுடன் கேட்டார். "ஏன் ஒன்றும் சொல்ல மாட்டேன்கிறாய்?"

அவனும் மெல்லப் புன்னகைத்து விட்டுச் சொன்னான். "நடந்திருப்பது எதுவும் இயல்பானதல்ல. அமானுஷ்யமானது. இல்லுமினாட்டிக்கு இது எல்லாம் பழக்கமானதல்ல. விஸ்வத்தின் மூலமாகத் தான் இந்த அமானுஷ்ய சக்திகள் எல்லாம் நமக்கு அறிமுகம் ஆகியிருக்கின்றன. இதிலும் என்ன எல்லாம் இருக்கிறது என்றே தெரியாத அளவுக்கு எல்லாம் புதுமையாகவும், விசித்திரமாகவும் இருக்கிறது. ஓருசிலர் மட்டுமே பேசக்கூடிய மொழி நமக்குத் தெரியவில்லை என்பது எப்படிக் கேவலம் இல்லையோ அப்படித் தான் இதுவும் கேவலம் இல்லை என்று நினைக்கிறேன்."

அவனுடைய பதிலை அவர் ரசித்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் சொன்னார். "அந்த சக்திகள் விஷயத்தில் நீ சொல்வது சரியாக இருக்கலாம். ஆனால் அந்த ஆளையே கண்டுபிடிக்க முடியாத விஷயத்தை நான் நமக்குக் கேவலமாகத் தான் நினைக்கிறேன். விஸ்வத்துக்கு ஒரு கூட்டாளி இருந்திருக்கிறான் என்பது மட்டுமல்ல அவன் ம்யூனிக் வரைக்கும் அவனைப் பின் தொடர்ந்து வந்திருக்கிறான். ஆனாலும் அப்படி ஒருவன் இருப்பதையோ, இங்கே வந்ததையோ, அவன் யார் என்பதையோ நாம் கண்டுபிடிக்கவில்லை என்பதை வேறு விதமாக எடுத்துக் கொள்ள என்னால் முடியவில்லை. அது மட்டுமல்ல இது வரை அந்தக் கூட்டாளியும் விஸ்வமும் எங்கே இருக்கிறார்கள் என்று நீங்கள் இன்னும் கண்டுபிடிக்கவில்லை...."

இப்படி ஒரு கேள்வி அவரால் கேட்கப்படும் என்று இம்மானுவல் எதிர்பார்த்தே இருந்தான். அவன் அமைதியாக தன்னுடைய ப்ரீஃப்கேஸில் இருந்து ஒரு தடிமனான ஃபைலை வெளியே எடுத்தான்.

(தொடரும்)

என்.கணேசன்

இல்லுமினாட்டி 28

அந்த தடிமனான ஃபைலை அவருடைய மேஜையில் வைத்து விட்டு இம்மானுவல் சொன்னான். "இதில் விஸ்வம் இந்தியாவில் ஹரித்வாரில் தங்கி இருந்த வீட்டில் அவனைச் சந்தித்த மனிதர்கள் முதற்கொண்டு எல்லாத் தகவல்களும் இருக்கின்றன தலைவரே. அங்கே மாஸ்டரைத் தவிர அவனை அதிகம் சந்தித்த மனிதர்கள் யாருமில்லை. அவனாகச் சென்று சந்தித்த மனிதர்கள் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவு குறைந்த மனிதர்களே. அவர்களுடனும் அவன் தொடர்ந்து தொடர்பில் இருக்கவில்லை. ஏதாவது ஒரு வேலையாக வேண்டிச் சந்தித்து, வேலை முடிந்த பின் அவர்களிடமிருந்தும் தூரமாகவே இருந்திருக்கிறான். மாஸ்டரின் ரகசிய ஆன்மீக இயக்கத்தில் சேர்வதற்கு முன் அவன் தொடர்பு வைத்திருந்தது சில அபூர்வ சக்திகள் இருந்த குருமார்களிடம் மட்டுமே. அந்தத் தொடர்பும் அவன் கற்று முடிந்த பின் இருக்கவில்லை. அவன் புனேயில் நம் இல்லுமினாட்டியின் நவீன்சந்திர ஷாவைச் சந்தித்த பிறகு அவனை மிக உன்னிப்பாக எங்கள் பார்வையிலேயே வைத்திருந்தோம். அவன் பின்னால் எப்போதுமே நம் ஆள் ஒருவன் இருந்திருக்கிறான். அப்படிக் கண்காணித்த போது கூட அவன் வேறு எந்த ஒரு ஆளுடனாவது நெருங்கிய தொடர்பில் இருந்த தடயம் நமக்குக் கிடைக்கவில்லை. அவன் லண்டனுக்குப் போய் நம் இல்லுமினாட்டியின் உறுப்பினர்களைப் பார்த்த போதும் சரி, பிறகு ம்யூனிக் நகரத்திற்கு வந்து நம் செயற்குழு உறுப்பினர்களைப் பார்த்த போதும் சரி அவனை யாரும் பின் தொடர்ந்து வரவில்லை என்பது உறுதி. ம்யூனிக் நகரத்திற்கு அவன் ஆரம்பத்தில் வந்த அந்த நாளுக்கு முன்னேயே யாராவது வந்து இங்கே அவனுக்காகக் காத்திருக்கும் வாய்ப்பு இருக்கிறதா என்பதையும் கூட எல்லாக் கோணங்களிலும் சோதித்துப் பார்த்து விட்டோம். அவனை யாரும் பின் தொடரவோ, கண்காணிக்கவோ இல்லை... ம்யூனிக்கில் இரண்டாவதும், கடைசியுமான கூட்டத்தில் பேச அவன் திரும்ப வந்த போதும் அவனைத் தொடர்ந்து யாரும் வரவில்லை. முன்பே வந்திருந்து அவனைப் பின் தொடரவும் இல்லை.."

இம்மானுவல் சொன்னதை எல்லாம் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த எர்னென்ஸ்டோ அவன் மேஜையில் வைத்த ஃபைலை எடுத்துப் பிரித்துப் பார்த்தார். விஸ்வம் இந்தியாவில் தொடர்பில் இருந்தவர்கள், அவர்கள் பற்றிய விவரங்கள், அவர்களை அவன் எத்தனை முறை சந்தித்திருக்கிறான் என்பதிலிருந்து ஏராளமான தகவல்கள் வரிசைப்படுத்தப்பட்டிருந்தன. இல்லுமினாட்டியின் கவனத்திற்கு விஸ்வம் வந்த பிறகோ சிறிய தகவல்கள் கூட விடுபட்டிருக்கவில்லை. அவன் இரண்டு முறை ம்யூனிக் வந்த போதும் விமானத்தில் அவனுடன் பயணித்த பயணிகளில் எத்தனை பேர் அவன் தங்கிய ஓட்டலிலேயே தங்கினார்கள், எத்தனை பேர் அருகிலிருந்த ஓட்டல்களில் தங்கினார்கள், அவர்களில் யாரிடமெல்லாம் விஸ்வம் ஒரு வார்த்தையாவது பேசினான் என்பது முதற்கொண்டு எல்லாத் தகவல்களும் பல புகைப்படங்களோடு இருந்தன. ம்யூனிக் நகரத்திற்குப் பயணத்திற்கான இரண்டு முறைப் பயணத்திலும் பயணம் செய்திருந்த ஒரு பயணியின் வாழ்க்கை வரலாறே அந்த ஃபைலில் இருந்தது. அதே போல் இரண்டு முறையும் அவன் தங்கியிருந்த ஓட்டலில் அதே நாட்களில் தங்கியிருந்த இரண்டு நபர்களின் வாழ்க்கை வரலாறுகளும் இருந்தன. இந்த மனிதர்கள் எல்லோருமே வெவ்வேறு சமயங்களில் அந்த இடத்தை விட்டுப் போயிருக்கிறார்கள். இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற தகவல்கள் கூட அந்த ஃபைலில் இருந்தன.

அந்த ஃபைலின் பக்கங்களை மேலோட்டமாகப் புரட்டிக் கொண்டே வந்து அவ்வப்போது ஒரு சில விவரங்களைக் கூடுதல் கவனத்துடன் படித்து விட்டு ஃபைலை மூடிய எர்னெஸ்டோ இதற்கு மேல் கண்காணிக்க எதுவுமில்லை என்று நினைத்தபடி இம்மானுவலிடம் அமைதியாகக் கேட்டார். "இத்தனை தகவல்களுக்குப் பின்னும் அவன் கூட்டாளியைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதைத் தவிர வேறு எந்த முடிவை நீ எட்டி இருக்கிறாய் இம்மானுவல்?"

"அந்த ஆள் விஸ்வத்தை விட அதிகமான சக்திகள் படைத்த ஆள் என்பதில் சந்தேகமில்லை. அந்த அதீத சக்திகள் மூலமாகவே விஸ்வத்துக்குத் தெரியாமலேயே அந்த ஆள் அவனைக் கண்காணித்திருக்க வேண்டும். ஏனென்றால் விஸ்வத்தின் குணாதிசயங்களை அலசியதில் அவன் இன்னொருவர் கண்காணிப்பில் இருப்பதை ரசிப்பான் என்று தோன்றவில்லை. அதனால் அப்படி அதிகமான சக்திகள் படைத்த அந்த ஆளை விஸ்வத்திற்குத் தெரிந்திருக்க வழியில்லை. அப்படித் தெரிந்திருந்தால் அந்த ஆளிடம் தானும் கற்று அந்த ஆளை மிஞ்சியிருக்காமல் விஸ்வம் இருந்திருக்க மாட்டான்... "

இம்மானுவல் சொன்னதை ஒரு நிமிடம் யோசித்து விட்டு எர்னெஸ்டோ சொன்னார். "முன்பின் தெரியாத ஆள் விஸ்வத்தின் நடவடிக்கைகளை ஏன் கவனித்து வந்திருக்க வேண்டும்? அவன் ஏன், எந்த வகையில் விஸ்வத்தைத் தொடர்பு கொண்டான்? அப்படித் தெரியாதவன் ஒருவனை நம்பி விஸ்வம் அவனுடன் காரில் போயிருப்பானா?"

இம்மானுவல் சொன்னான். "அதையும் நாங்கள் சிந்திக்காமல் இல்லை. ஒருவேளை அந்த அதிசக்தி மனிதன் விஸ்வத்திற்குப் பரிச்சயமான, ஆனால் அதிகம் தொடர்பில் இல்லாத ஆளாய் இருக்கலாம். அந்த ஆள் தன் சக்தி மூலமாகவே விஸ்வத்துக்கே தெரியாமல் அவனைக் கண்காணித்துக் கொண்டும் இருந்திருக்கலாம். இன்னொரு யூகமும் இருக்கிறது..."

சொல்லி விட்டு அவரை இம்மானுவல் தயக்கத்துடன் பார்த்தான். எர்னெஸ்டோ சொன்னார். "எதுவாக இருந்தாலும் தயங்காமல் சொல்"

இம்மானுவல் சொன்னான். "க்ரிஷை ஒரு ஏலியன் தொடர்பு கொண்டது போல் விஸ்வத்தைத் தொடர்பு கொண்டதும் ஒரு ஏலியனாகவோ, அல்லது அதற்கு இணையான அமானுஷ்ய சக்தியாக இருக்கலாம். ஏனென்றால் விஸ்வத்தின் மரணத்தைப் பற்றித் தெரிந்து கொண்டதிலிருந்து அவனை இன்னொரு உடம்பில் புகுந்து கொள்ள வைத்து ரகசியமாய் அழைத்துக் கொண்டு போயிருக்கும் விதத்தையும் பார்த்தால் அமானுஷ்ய முத்திரை தான் தெரிகிறது. ஆழமாக யோசித்துப் பார்த்தால் க்ரிஷ் விஷயத்தில் நடந்தது தான் விஸ்வத்தின் விஷயத்திலும் நடந்திருக்கிறது..."

"எதைச் சொல்கிறாய்?"

"க்ரிஷைக் கடுமையான விஷப்பாம்பு கடித்து இறக்க இருந்த சமயத்தில் ஏலியன் தான் அவனைக் காப்பாற்றியிருக்கிறது. இரண்டு நிமிடங்களில் கிட்டத்தட்ட 16000 கிலோமீட்டர் தொலைவில் இருக்கிற அமேசான் காடுகளுக்கு அவனைத் தூக்கிக் கொண்டு போய் விஷமுறிவு மருந்து தந்து காப்பாற்றி இருக்கிறது. அது மனிதர்களால் முடிந்த காரியம் அல்ல. சில வினாடிகளுக்குப் பின் சாட்டிலைட் காமிராவுக்குக் கூட சம்பந்தப்பட்ட காட்சிகள் அகப்படவில்லை. விஸ்வமும் இறந்து போய்க் கிட்டத்தட்ட இதே போல் அமானுஷ்ய முறையில் தான் காப்பாற்றப்பட்டு இருக்கிறான். அவனுடைய கூட்டாளி நம்முடைய இத்தனை துல்லியமான கண்காணிப்பில் கூட எந்த விதத்திலும் நமக்கு அகப்படாமல் இருப்பதற்கு அதே காரணமாக ஏன் இருக்கக்கூடாது?...."

எர்னென்ஸ்டோ அவனைத் திகைப்புடன் பார்த்தபடி சொன்னார். "எனக்குத் தலை சுற்றுகிறது. இன்னொரு ஏலியனா?"

இம்மானுவல் சொன்னான். "யூகம் தான். ஏலியனாக இல்லாவிட்டால் வேறெதோ அமானுஷ்ய சக்தியாக இருந்திருக்கலாம். விஸ்வத்தின் கூட்டாளி ஒரு மனிதனாக இருந்திருந்தால் நாங்கள் கண்டிப்பாகக் கண்டுபிடித்திருப்போம்..."

எர்னெஸ்டோ சிறிது யோசித்து விட்டுச் சொன்னார். "க்ரிஷை அந்த ஏலியன் தொடர்பு கொண்ட சமயம் அந்த இடங்களில் எத்தனையோ வித்தியாசமான அலைவரிசைகளை நாசாவும், இஸ்ரோவும் கண்டுபிடித்தன...."

இம்மானுவல் சொன்னான். "அதே போல் இப்போது இங்கேயும் அந்த அலைவரிசைகளில் ஏதாவது வித்தியாசத்தை நாசாவும் இஸ்ரோவும் கண்டுபிடித்திருக்கலாம். அதைப் பார்த்து விட்டுச் சொல்லும்படி நாசா, இஸ்ரோ இரண்டிலுமே ஆட்களை ஏற்பாடு செய்திருக்கிறேன். நம் உறுப்பினர் விஸ்வேஸ்வரய்யாவிடம் நீங்களும் பேசுவது நல்லது..."

அவன் தீவிரமாகவே தன் யூகத்தை நம்ப ஆரம்பித்திருக்கிறான் என்பது எர்னெஸ்டோவுக்கு இன்னும் ஆச்சரியமாகத் தான் இருந்தது. அவர் சொன்னார். "அந்தக் கூட்டாளி ஏலியனாக இருந்திருந்தால் க்ரிஷைத் தூக்கிக் கொண்டு போனது போல தூக்கிக் கொண்டு போயிருக்கலாம். அல்லது நீ சொன்னது போல் அமானுஷ்ய சக்தியாக இருந்திருந்தாலும் இப்படிக் காரில் வந்து கூட்டிக் கொண்டு போயிருக்கும் என்று தோன்றவில்லை..."

இம்மானுவலுக்கு அவருடைய அந்த வாதத்தை மறுக்க முடியவில்லை. காரில் அழைத்துப் போவது ஏலியன் அல்லது அமானுஷ்ய சக்தியின் வேலையாக இருக்கும் என்று நினைப்பதே அவனுக்கும் அபத்தமாகப் பட்டது. ஆனால் விஸ்வத்தின் மரணத்தை அது நிகழும் போதே உணர முடிந்தது சாதாரண மனித சக்தியாகவும் தோன்றவில்லை.

அவன் மெல்லச் சொன்னான். "அப்படியானால் நான் முன்பே சொன்னது போல விஸ்வத்தைக் காட்டிலும் கூடுதல் சக்திகள் கொண்ட ஏதோ ஒரு மனிதன் தன் சக்திகள் மூலமாக ஏதோ ஒரு காரணத்துடன் அவனைக் கண்காணித்துக் கொண்டே இருந்திருக்கலாம். தன் அமானுஷ்ய சக்தி மூலம் அவனைக் காப்பாற்றி அழைத்துக் கொண்டு போயிருக்கலாம்...."

கடைசியில் இந்த யூகத்தில் இருவரும் உடன்பட்டாலும் அந்த ஏதோவொரு காரணம் என்னவாக இருக்கும் என்பதை இருவராலும் கணிக்க முடியவில்லை.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, December 26, 2019

இல்லுமினாட்டி 29

பதில் கிடைக்காத கேள்விகளில் அதிக நேரம் தங்குவதில் அர்த்தமில்லை என்று நினைத்தவராக எர்னெஸ்டோ இம்மானுவலிடம் சொன்னார். "நீ முக்கியமான எதையோ பேச வேண்டும் என்று நேரில் சந்திக்க அனுமதி கேட்டாய். அதைச் சொல்"

இம்மானுவல் தான் சொல்ல வந்ததை மனதில் கோர்வைப்படுத்திக் கொள்ள சில வினாடிகள் எடுத்துக் கொண்டு, பிறகு மெல்ல ஆரம்பித்தான். "விஸ்வம் இல்லுமினாட்டியின் உறுப்பினராகச் சேர்ந்த போது நம் உறுப்பினர்களில் பெரும்பாலானோர் அவனை இல்லுமினாட்டிக்குக் கிடைத்த அதிசய மனிதனாகவே நினைத்தார்கள். அவனுடைய அமானுஷ்ய சக்திகள், அவன் காட்டிய தீவிரம், மனஉறுதி, அவன் பிறகு கொண்டு வந்த நம் சின்னம், அது அவன் கையில் ஒளிர்ந்தது எல்லாமே அவன் மேல் பிரமிப்பை ஏற்படுத்தியது. க்ரிஷ் வந்து பேசிய பிறகு தான் அந்தப் பிரமிப்பு கரைந்தது. மதிப்பு சரிந்தது. ஆனால் இறந்த பின் அவனால் இன்னொரு உடலுக்குப் போக முடிந்தது என்றும், அந்த இன்னொரு உடலில் அவன் வாழ்கிறான் என்றும் கேள்விப்பட்ட பிறகு நம் இல்லுமினாட்டியில் அவன் மறுபடி பிரபலமடைந்து வருகிறான் தலைவரே. மறுபடியும் அவனைப் பற்றிப் பலரும் பிரமிப்புடன் பேச ஆரம்பித்திருக்கிறார்கள்... க்ரிஷ் சரித்து விட்ட அவன் மதிப்பு மறுபடியும் உயர ஆரம்பித்திருக்கிறது. ஒருவேளை அவன் திரும்பி வந்தால் உற்சாகமாக அவனை ஏற்றுக் கொள்ளும் மனநிலை பாதிக்கும் மேலான உறுப்பினர்களிடம் தெரிகிறது. முடிவெடுப்பதைப் பொது வாக்கெடுப்புக்கு நீங்கள் அனுமதித்தால் அவன் இல்லுமினாட்டியில் கண்டிப்பாக நுழைந்து விடும் நிலைமை தான் இருக்கிறது..."

சொல்லி விட்டு இம்மானுவல் அவரிடமிருந்து கருத்து ஏதாவது வருகிறதா என்று பார்த்தான். அவர் அமைதியாகவே இருக்கவே அவன் தொடர்ந்தான். "எங்கள் கணிப்பின் படி அவன் உண்மையான நோக்கமே இல்லுமினாட்டியைக் கைப்பற்றுவது தான். அவனுக்கு எதிராகவும், தடையாகவும் நீங்கள் தான் இருக்கிறீர்கள். அவன் உங்களை அப்புறப்படுத்தினால் இல்லுமினாட்டியில் மறுபடியும் நுழையலாம். எதிர்காலத்தில் இதற்குத் தலைவனாகலாம் என்று நினைக்கக் காரணம் வலுவாக இருப்பதால் தான் உங்கள் உயிருக்கு அவன் குறி வைப்பான் என்று எதிர்பார்க்கிறோம்...."

எர்னெஸ்டோ புன்னகையுடன் சொன்னார். "எனக்கு சாகப் பயமில்லை இம்மானுவல். இந்தத் தலைமைப் பதவியும் எனக்கு அலுத்து விட்டது. இல்லுமினாட்டியை அடுத்த உயர்வுக்குக் கொண்டு போகும் ஒரு தகுதிவாய்ந்த மனிதன் வந்தால் அவனிடம் ஒப்படைத்து விட்டுப் போகவே நானும் ஆசைப்படுகிறேன். ஆனால் விஸ்வம் அந்தத் தகுதி வாய்ந்த மனிதன் அல்ல என்று உறுதியாக நம்புகிறேன். க்ரிஷ் சுட்டிக் காட்டியது போல அவன் தன்னை மட்டுமே மையமாக வைத்துக் கொண்டு இயங்குபவன். அவன் இல்லுமினாட்டியில் நுழைந்தால் இந்த இயக்கத்தையும், உலகத்தையும் அழித்து விட்டே ஓய்வான். அதில் சந்தேகமேயில்லை..."

இம்மானுவல் சொன்னான். "ஆனால் நம் உறுப்பினர்களில் பலரும் அந்த அளவு அவர்களுடைய சிந்தனைகளை நீட்டவில்லை. அவர்களைப் பொருத்த வரை அவன் சக்திகள் வாய்ந்தவன், அவன் பேசிய தொனியும், விஷயமும் இல்லுமினாட்டியின் தன்மைக்கு ஒத்து வருகிறது. க்ரிஷின் தொனி தான் இல்லுமினாட்டிக்குப் பொருத்தமில்லாததாக இருப்பதாக சிலர் இப்போது நினைக்க ஆரம்பித்திருக்கிறார்கள். மென்மையான தத்துவார்த்தமான அணுகுமுறை இல்லுமினாட்டியைப் பலவீனப்படுத்தி விடும் என்று பயப்படுகிறார்கள்... நம் சின்னம் தொடர்ந்து அவன் கையில் ஜொலித்து அடையாளம் காட்டிய போது உணர்ந்த தாக்கம் இப்போது உறுப்பினர்கள் மத்தியில் குறைந்து வருகிறது..."

க்ரிஷ் விஷயத்தில் இம்மானுவல் சொன்னது அவரை ஆச்சரியப்படுத்தவில்லை. இது அவர் முன்பே எதிர்பார்த்தது தான். அதனால் தான் அவர் க்ரிஷ் பேசிய போது அன்றே சொல்லியிருக்கிறார். 'இந்தக் கணத்தில் எங்கள் இல்லுமினாட்டி தவசி அகஸ்டின் உன் மூலம் சொன்னதாக நாங்கள் உணரும் இந்த உயர்ந்த உணர்வுகள் நாளைக் காலை எத்தனை பேருக்கு எத்தனை சதவீதம் தங்கும் என்பதை உறுதியாக என்னால் கூற முடியாது. இன்னும் சில நாட்கள் போன பின் கண்டிப்பாக இதே உணர்வுகளை இதே அளவிலும் இதே உறுதியிலும் உறுப்பினர்கள் பின்பற்றுவார்கள் என்று கூற முடியாது. மனித இயல்பை நீண்ட காலம் கவனித்து வந்ததால் தான் இதை வருத்தத்துடன் கூறுகிறேன். இந்த உயர்ந்த உணர்வுகள் நீர்த்துப் போகாமல் இருக்க வேண்டுமென்றால் உன்னைப் போன்றவன் எங்களுடன் இணைந்து இருக்க வேண்டும்...'

இம்மானுவல் சொன்னான். "உங்களுக்கு இப்போது இருக்கும் பாதுகாப்பு மிக வலிமையானது. சாதாரணமாக யாராலும் பாதுகாப்பு வளையத்தை மீறி உங்களை நெருங்கி விட முடியாது. ஆனால் விஸ்வத்தைக் குறைத்து எடை போட்டு விட முடியாது. இந்தியாவின் ஒரு மாநில முதலமைச்சரை அவன் கொன்றிருக்கிறான். பலத்த பாதுகாப்பில் இருந்த அவரை அவன் நெருங்கியது எப்படி, வேலையை முடித்து விட்டு அவன் அங்கிருந்து தப்பித்துப் போனதெப்படி என்பதை இது வரைக்கும் யாராலும் யூகிக்க முடியவில்லை. ரகசியமாக விசாரித்ததில் காவலில் இருந்த ஒரு போலீஸ் அதிகாரி ஏதோ நிழல் போல ஒன்று வேகமாக நகர்ந்தது போல் உணர்ந்ததாகவும், பின் கூர்ந்து பார்த்த போது யாரும் தெரியவில்லை என்று மட்டும் சொல்லி இருக்கிறார். அந்த அளவு வேகமாகவும், நுணுக்கமாகவும் இருந்திருக்கிறது விஸ்வத்தின் செயல்முறை. அந்தக் கொலை நோக்கு வர்மத்தால் அவன் நிகழ்த்தியது என்றும் ஒரு குறிப்பிட்ட அளவு நெருக்கத்தில் அவன் இருந்தானென்றால் அதை நிகழ்த்தி விட முடியும் என்றும் சொல்கிறார்கள். டாக்டர்கள் அந்த முதலமைச்சரின் மரணத்திற்கான காரணமாக மாரடைப்பைத் தான் சொல்ல முடிந்தது. வேறெந்த தடயமோ, காயமோ இருக்கவில்லை...."

எர்னெஸ்டோ எந்த விதமான பாதிப்பும் இல்லாமல் மிகவும் சுவாரசியத்துடன் கேட்டுக் கொண்டிருந்தது இம்மானுவலை அசத்தியது. இந்த வகையில் தானும் பாதிக்கப்பட்டு மரணமடைந்து விடக்கூடும் என்கிற எந்த அச்சம் அவரிடம் சிறிதும் இருக்கவில்லை. மனதளவில் அவர் இரும்பு மனிதர் என்பதை எத்தனையோ சந்தர்ப்பங்களில் இம்மானுவல் உணர்ந்திருந்தாலும் மனிதர் ஒவ்வொரு முறையும் சிறிதாவது அசரத்தான் வைக்கிறார்...

இம்மானுவல் தொடர்ந்தான். "விஸ்வம் ஓரளவு பலத்தையாவது திரும்பப் பெற குறைந்த பட்சம் ஆறு மாதமாவது வேண்டும் என்று தெரிகிறது. அதற்குள் அவனைக் கண்டுபிடித்து அவனைத் தீர்த்துக்கட்டுவது தான் நல்லது. அதற்கான எல்லா முயற்சிகளையும் நாம் செய்வோம் என்றாலும் அது முடியா விட்டால் என்ன செய்வது என்பதையும் முன்கூட்டியே யோசித்த போது தான் எங்கள் கவனத்திற்கு 'அமானுஷ்யன்' வந்தான். நான் அனுப்பியிருந்த அவனுடைய ஃபைலை முழுவதுமாகப் படித்தீர்களா?"

எர்னெஸ்டோ புன்னகையோடு சொன்னார். "தூக்கத்தைத் தியாகம் செய்து படித்தேன். விஸ்வத்தைச் சந்திக்கும் முன்னால் இப்படி ஒரு மனிதன் இருக்க முடியும் என்று நான் கற்பனையாகக் கூட நினைத்ததில்லை. அதே உணர்வு தான் அந்த அமானுஷயனைப் பற்றிப் படிக்கும் போதும் எனக்கு ஏற்பட்டது. ஆனால் கூடுதலாக அமானுஷ்யன் மேல் அன்பும், மரியாதையும் ஏற்பட்டது என்றே சொல்ல வேண்டும்...."

இம்மானுவல் சொன்னான். "அவனைச் சந்தித்துச் சிறிது காலமாவது பழகியவர்கள் அவனை மிகவும் நேசிக்காமல் இருந்ததில்லை. அவன் எதிரிகளுக்கு அவன் சிம்ம சொப்பனமாக இருந்திருக்கிறான். தற்காப்புக் கலைகளில் அவனுக்கு நிகர் யாருமில்லை. அவனும் நிறைய அமானுஷ்யமான தாக்குதல் முறைகளைக் கற்று எல்லாவற்றிலும் முதலிடம் வகிப்பவன். ஒருவேளை விஸ்வம் ஆறு மாதம் வரை நமக்குச் சிக்காமல் போனால் அமானுஷ்யன் நமக்குப் பயன்படுவான்."

எர்னெஸ்டோ சொன்னார். "அது வரைக்கும் காத்திருக்கும் பொறுமை எனக்கில்லை. அமானுஷ்யனைச் சீக்கிரமே சந்திக்க நான் ஆசைப்படுகிறேன்..."

இம்மானுவல் சிறு தயக்கத்துடன் சொன்னான். "பணம் தந்தோ, அதிகாரத்தைக் காட்டியோ, பயமுறுத்தியோ அவனை நாம் வரவழைக்க முடியாது. அவன் உயிருக்கு இப்போதும் அச்சுறுத்தல் இருக்கின்றது. தலிபான் தீவிரவாதிகள் அவனைத் தீவிரமாகத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் இப்போது அவன் இந்தியாவில் சாதாரண மனிதனைப் போல் ஒதுங்கி வாழ்ந்து கொண்டு இருக்கிறான்...."

எர்னெஸ்டோ சொன்னார். "இல்லுமினாட்டி பணம், பயம், அதிகாரம் வைத்தே இது வரை எல்லாவற்றையும் சாதித்து விடவில்லை இம்மானுவல். அவனை நான் வரவழைத்துக் கொள்கிறேன். இப்போதைக்கு விஸ்வத்தைக் கண்டுபிடிக்க நீ என்ன திட்டம் வைத்திருக்கிறாய் அதைச் சொல்...."

இம்மானுவல் சொன்னான். "விஸ்வம் தன் சக்திகளால் ஒன்றைக் கண்டுபிடிக்க முடியாமல் போன போதெல்லாம் ஒரு மூதாட்டியின் உதவியை நாடிப் போனதுண்டு என்பதை நாங்கள் கண்டுபிடித்திருக்கிறோம் தலைவரே. அந்த மூதாட்டி அலெக்ஸாண்டிரியாவில் இருக்கிறாள். அவளைச் சந்திக்கலாம் என்றிருக்கிறோம்..."

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, January 2, 2020

இல்லுமினாட்டி 30

அலெக்சாண்டிரியா நகரின் எல்லைப்பகுதியில் வசித்து வந்த அந்த மூதாட்டியிடம் அந்த மனிதன் இரண்டு நாட்களுக்கு முன்பே போனில் பேசி இருந்தான். "ஒருவன் தற்போது எங்கே இருக்கிறான் என்று தெரிய வேண்டும்" என்று அவன் சொன்னவுடன் அந்த மூதாட்டி சொன்னாள். "அவன் பயன்படுத்தி இருந்த ஏதாவது பொருள் ஒன்றும், ஆறாயிரம் பவுண்டுகளும் கொண்டு வந்தால் சொல்லலாம்"

அவன் கேட்டான் "எப்போது வரட்டும்?"

"நாளை மறுநாள் காலை பத்து மணிக்கு வாருங்கள். வீடு எங்கே என்பது தெரியுமல்லவா?"

"தெரியும்" என்று அவன் அந்த வீட்டைக் கண்காணித்தபடியே சொன்னான். அந்த வீட்டை அவனும் அவன் ஆட்களும் மாற்றி மாற்றி நேற்றிலிருந்தே கண்காணித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பழங்கால வீட்டிலிருந்து அந்த மூதாட்டி ஒரு முறை கூட வெளியே வரவில்லை. வாரம் ஒரு முறை ஒரு பெண்மணி வந்து வீடு சுத்தம் செய்து கொடுத்து விட்டுப் போகிறாள் என்பதை அவர்கள் முன்பே தெரிந்து வைத்திருந்தார்கள். அதே போல் வாரம் ஒரு முறை பக்கத்து டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸிலிருந்து அவளுக்கு வேண்டிய பொருள்கள் வந்து சேர்கின்றன. அவள் எந்தச் செய்தித்தாளையும் வாங்குவதில்லை. அவள் வீட்டிலிருந்து ஒரு கருப்புப்பூனை தான் தினமும் இரண்டு மூன்று முறையாவது வெளியே வருவதும், உள்ளே போவதுமாக இருந்தது. அவள் ஒருநாளுக்கு ஒரு ஆளுக்குத் தான் குறி பார்த்துச் சொல்கிறாள் என்றும் அதற்கு மேல் யாரையும் வர அனுமதிப்பதில்லை என்றும் அவர்கள் கண்டுபிடித்திருந்தார்கள். ஆனால் மாதம் குறைந்தது இருபது ஆட்களுக்காவது அந்த மூதாட்டி குறி சொல்கிறாள் என்றும் அதிகபட்சமாக 25 ஆட்களுக்குக் குறி சொல்கிறாள் என்றும் அவர்கள் சேகரித்திருந்த குறிப்புகள் தெரிவித்தன... நேற்று ஒரு ஆப்பிரிக்கப் பெண்மணி அந்த வீட்டுக்கு வந்து குறி கேட்டுப் போனாள். அவள் நேற்று மாலை நான்கு மணிக்கு வந்தவள் ஐந்தரை மணி வரை அந்த வீட்டுக்குள் இருந்தாள்.

இன்று காலை பத்து மணிக்கு அவன் அந்த வீட்டுக்குப் போனான். அழைப்பு மணி அடித்து விட்டு அவன் பொறுமையாகக் காத்திருந்தான். மூதாட்டியால் வேகமாக நடக்க முடிவதில்லை என்பதால் மெல்ல தான் வந்து கதவைத் திறப்பாள் என்பது அவனுக்குத் தெரியும். அவள் கதவைத் திறந்தவுடன் வணக்கம் சொல்லி அவன் முன்பே தெரிவித்திருந்த பெயரைச் சொன்னான். அவள் தலையசைத்து விட்டு அவனை உள்ளே அழைத்துப் போனாள்.

வீட்டில் இருந்த எல்லா பொருள்களும் பழையவையாகத் தானிருந்தன. ஹாலில் இருந்த சோபாவில் கருப்புப்பூனை படுத்திருந்தது. கண்களைத் திறந்து அவனை ஒரு முறை பார்த்து விட்டு சுவாரசியம் காட்டாமல் கண்களை மறுபடி மூடிக் கொண்டது. மூதாட்டி ஒரு பழைய மர மேஜைக்குப் பின்னால் இருந்த நாற்காலியில் கஷ்டப்பட்டு உட்கார்ந்து விட்டு எதிர்ப்புற நாற்காலியில் அவனை உட்காரச் சொன்னாள். அவன் அமர்ந்தவுடன் கையை நீட்டினாள். அவன் "என்ன?" என்பது போல் பார்த்தான்.

அவள் சொன்னாள். "பணம்"

அவன் ஆறாயிரம் எகிப்தியப் பவுண்டுகளை எண்ணித் தந்தான். அதை வாங்கிக் கவனமாக எண்ணி மேஜையோரம் இருந்த இரும்பு டப்பாவில் வைத்து இறுக்கமாக மூடினாள். பின் கேட்டாள். "என்ன பொருள் கொண்டு வந்திருக்கிறாய்?"

அவன் விஸ்வம் கடைசியாக உபயோகப்படுத்தியிருந்த கைக்குட்டையை ஒரு பிளாஸ்டிக் கவரின் உள்ளே வைத்துக் கொண்டு வந்திருந்தான். அதை அந்த ப்ளாஸ்டிக் உறையோடு அவளிடம் தந்தான். "இது அந்த ஆளின் கைக்குட்டை"

அந்த மூதாட்டி அந்த ப்ளாஸ்டிக் உறையிலிருந்து அந்த வெள்ளை நிறக் கைக்குட்டையை வெளியே எடுத்தாள். அந்தக் கைக்குட்டையைத் தொட்டவுடன் லேசாக அவள் உடம்பு ஒரு கணம் நடுங்கியது போலிருந்தது. அவன் திகைப்புடன் அவளைக் கேட்டான். "என்ன?"

அவள் சொன்னாள். "ஒன்றுமில்லை" ஆனால் அவள் அதற்குப் பிறகு அந்தக் கைக்குட்டையைக் கையில் வைத்துக் கொள்ளாமல் மேஜையில் வைத்து விட்டாள். அவளுடைய ஆள்காட்டி விரல் மட்டும் அதைத் தொட்டது. அவள் அதைத் தொட்டுக் கொண்டிருந்தபடியே கண்களை மூடினாள். அவன் கடிகாரத்தையும் அவளையும் பார்த்தபடியே அமைதியாக அமர்ந்திருந்தான். பதினைந்து நிமிடங்கள் கடந்த போது அவள் உறங்கி விட்டாளோ என்று கூட அவனுக்குச் சந்தேகமாக இருந்தது. ஆனாலும் அமைதியாகவே அவளைக் கூர்ந்து பார்த்தபடி அமர்ந்திருந்தான்.

பதினெட்டு நிமிடங்கள் முடிந்த போது மெல்ல அவள் சொல்ல ஆரம்பித்தாள். "இந்த ஆள் சாதாரணமானவன் இல்லை. மிகவும் சக்தி வாய்ந்தவன்."

அவன் தலையசைத்தான். அவள் தொடர்ந்து சொன்னாள். "இப்போது இந்தக் கைக்குட்டையைப் பயன்படுத்திய கை இல்லை, தீயில் கருகி விட்டது..."

அவனுக்கு அவள் சொன்னது திகைப்பாய் இருந்தது. மறுபடியும் தலையசைத்தான். அவள் சொன்னாள். "ஆனால் உயிர் இருக்கிறது..... உனக்கு இவனைப் பற்றி என்ன தெரிய வேண்டும்?"

"அவன் இப்போது எங்கே இருக்கிறான்? அவன் கூட யார் இருக்கிறார்கள்?"

அவள் கண்களைத் திறக்கவில்லை. அவள் தன் கவனத்தை எங்கேயோ குவிப்பது போன்ற பாவனை அவள் முகத்தில் தெரிந்தது. மறுபடியும் மௌனம். இந்த முறை இருபது நிமிடங்கள் நகர்ந்தன. பிறகு அவள் சொல்ல ஆரம்பித்தாள். "ஒரு அழகான வீட்டில் இருக்கிறான்.... அது ஒரு தனி வீடு..... வீட்டின் சுற்றுவட்டாரத்தில் நிறைய தூரத்திற்கு வேறு வீடோ, கட்டிடங்களோ இல்லை.. அவன் அந்த வீட்டு ஹாலின் தரையில் ஒரு சிறிய துணிவிரிப்பில் உட்கார்ந்திருக்கிறான்... ஏதோ மூச்சுப் பயிற்சி செய்கிற மாதிரி தெரிகிறது.... அவன் ஏதோ வேதனையை அனுபவித்து வருகிறான்... மிகவும் களைப்பாக இருக்கிறான்...."

அவன் கேட்டான். "அவனுடன் யார் இருக்கிறார்கள்? அதை விவரிக்க முடியுமா?"

"ஆள் யாரும் காணோம்.... ஒரு கிதார் மட்டும் அவன் உட்கார்ந்திருக்கும் ஹாலின் மூலையில் இருக்கிறது.... அந்தக் கிதார் சாதாரணமான கிதார் போலத் தெரியவில்லை. அதில் ஏதோ அமானுஷ்யமாய் இருக்கிறது...."

கிதார் பற்றிச் சொன்னதும் அவன் திகைப்பும், சுவாரசியமும் இரட்டிப்பாகியது. அவன் கேட்டான். "என்ன அமானுஷ்யம்?..."

அந்த மூதாட்டி அப்போது அந்தக் கிதாரைக் கூர்ந்து பார்ப்பது போல் தோன்றியது. அவள் மெல்லச் சொன்னாள். "சரியாகச் சொல்ல முடியவில்லை.... ஏதோ அபாயம்.... ஆபத்தான வசீகரம் அதில் தெரிகிறது...."

பின் மௌனமானாள். அவன் பரபரப்பாகப் பொறுமையிழந்து கேட்டான். "அது என்ன என்று முடிந்த வரை விளக்குங்களேன்......"

"பனிமூட்டம் அந்தக் கிதாரைச் சூழ்கிறது.... ஏதோ ஒரு நட்சத்திரம் அந்தப் பனிமூட்டத்தில் தெரிகிறது. இப்போது கிதார் மறைந்து விட்டது. தெரியவில்லை....."

அவனுக்கு ஏமாற்றமாகப் போய் விட்டது. அவன் கேட்டான். "இந்தக் கைக்குட்டைக்காரனையும் அந்த வீட்டையும் பார்க்க முடிகிறதா?"

அவள் முகம் சிறிது வலது புறமாகத் திரும்பியது. அவள் சொன்னாள். "முடிகிறது"

"அந்த வீட்டைக் கண்டுபிடிக்க ஏதாவது துப்பு கொடுங்கள். சுற்றிலும் இருப்பதில் ஏதாவது வித்தியாசமாகத் தெரிகிறதா?"

அவள் ஒரு நிமிட மௌனத்திற்குப் பிறகு சொன்னாள். "அந்த வீட்டிலிருந்து நூறடி தூரத்தில் ஒரு ஓக் மரம் இருக்கிறது. அதன் ஒரு கிளை மட்டும் தரையைத் தொட்டபடி இருக்கிறது. மிகப்பழைய மரம் அது. விரிந்திருக்கிறது..... அதன் ஒரு கிளை தீயால் கருகி விட்ட வடு மரத்தில் இருக்கிறது...."

அதற்கு மேல் அவளால் எதையும் சொல்ல முடியவில்லை. சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு சிரமத்துடன் சொன்னாள். "இப்போது அந்த மரத்தை கிதார் மறைக்கிறது..... கிதாரே வளர்ந்தது போல் பிரம்மாண்டமாய் தெரிகிறது..... இப்போது மூடுபனி வந்து விட்டது. அது எல்லாவற்றையும் மறைத்து விட்டது.... மூடுபனி மட்டுமே தெரிகிறது..... ஆனால் அது கூட அந்த ஒற்றை நட்சத்திரத்தை மறைக்க முடியவில்லை.... ஒற்றை நட்சத்திரம் மங்கலாகத் தெரிகிறது... அவ்வளவு தான்."

அவள் கண்களைத் திறந்து விட்டாள். அவன் நன்றி தெரிவித்து விட்டு அந்தக் கைக்குட்டையை மறுபடி ப்ளாஸ்டிக் உறையில் போட்டுக் கொண்டு கிளம்பினான்.

அவன் அனுப்பிய தகவல் ஐந்து நிமிடங்களில் இம்மானுவலுக்கு வந்து சேர்ந்தது. சிறிது யோசித்தவனுக்கு அந்த மூதாட்டி சொன்ன இடம் ம்யூனிக் சுற்று வட்டாரத்திலேயே இருக்க வாய்ப்பு அதிகம் என்று உள்ளுணர்வு சொன்னது. உடனே ஒரு கிளை தரையைத் தொட்டபடியும், ஒரு கிளை தீயில் கருகியும் இருக்கும் ஓக் மரம் ம்யூனிக்கின் சுற்று வட்டாரத்தில் எங்காவது இருக்கிறதா என்று கண்டுபிடித்து உடனடியாகச் சொல்லும்படி தன் ஆட்களுக்குக் கட்டளையிட்டான்.

(தொடரும்)

என்.கணேசன்

இல்லுமினாட்டி 31

இம்மானுவல் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்த போன்கால் இரண்டு மணி நேரத்தில் வந்தது. அவனுடைய உளவுத்துறை ஆள் ஒருவன் பரபரப்புடன் சொன்னான். "ம்யூனிக் நகரிலிருந்து சுமார் நூறு கிலோ மீட்டர் தூரத்தில் நீங்கள் சொன்னது போல் ஒரு ஓக் மரம் இருக்கிறது... ஒரு கிளை தீயில் கருகி இருக்கிறது. ஒரு கிளை தரையைத் தொட்டபடி இருக்கிறது. பழைய மரம்...."

இம்மானுவல் கேட்டான். "நீ அங்கே தான் இருக்கிறாயா?"

"ஆமாம். மரத்தின் அடியில் நின்று கொண்டு தான் பேசுகிறேன்"

"உனக்கு அங்கேயிருந்து அருகில் எதாவது வீடு தெரிகிறதா?"

"நூற்றியிருபது அடி தூரத்தில் ஒரு தனி வீடு தெரிகிறது"

"வேறெதாவது வீடுகள், கட்டிடங்கள்?"

"கண்ணுக்கெட்டிய தூரம் வரை இல்லை"

இம்மானுவல் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். இரவு எட்டு... அவன் தன் ஆளிடம் கேட்டான். "அந்த வீட்டுக்குள் விளக்கு வெளிச்சம் எதாவது தெரிகிறதா?"

"இல்லை."

"நீ இருக்கும் இட வரைபடத்தை எனக்கு வாட்சப்பில் அனுப்பி வை"

ஐந்து வினாடிகளில் அவன் சொன்னான். "அனுப்பி விட்டேன்..."

"சரி நீ அங்கேயே இரு. நம் ஆட்கள் சிலரை அங்கே அனுப்புகிறேன். அது வரை அந்த வீட்டில் இருந்து யாரும் வெளியேறி விடாமல் பார்த்துக் கொள்..."

அந்த ஆள் சரியென்றான். அவன் பார்வை அந்த வீட்டிலேயே தங்கி இருந்தது. உள்ளே ஆட்கள் இருப்பது போல் தெரியவில்லை. மறைவாக இருக்க விரும்பி யாராவது விளக்கை அணைத்துவிட்டு ஒளிந்து கொண்டிருக்கவும் வாய்ப்பு இருக்கிறது. அப்படி மறைவாக ஒளிந்திருக்க மிகவும் கச்சிதமான வீடு தான் அது...

அடுத்த ஒரு மணி நேரத்தில் இம்மானுவல் அனுப்பிய ஆட்கள் ஏழு பேர் வந்து சேர்ந்தார்கள். ஒவ்வொருவர் கையில் அதுநவீன துப்பாக்கிகள் இருந்தன. அவர்களில் தலைவர் போல் இருந்தவன், தகவல் தெரிவித்துக் காத்திருந்தவனிடம் வந்து கேட்டான். "ஆட்கள் யாராவது உள்ளே இருக்கிற மாதிரி தெரிகிறதா?"

"இல்லை."

தலையசைத்து விட்டு அவன் தன் ஆட்கள் மூவரையும், தகவல் தெரிவித்தவனையும் சில அடிகள் இடைவெளிகளில் அங்கேயே நிற்க வைத்து விட்டுச் சொன்னான். "நாங்கள் நாலு பேர் சென்று உள்ளே யாராவது இருக்கிறார்களா என்று பார்க்கிறோம். ஒருவேளை அங்கு ஆட்கள் இருந்து எங்களை மீறி அங்கிருந்து ஓடி வந்தால் தயங்காமல் சுட்டு விடுங்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும் அவர்கள் இங்கிருந்து தப்பித்து விடக்கூடாது..."

சொல்லி விட்டு அவனும் அவன் ஆட்கள் மூன்று பேரும் வீட்டை நோக்கிச் சத்தமில்லாமல் முன்னேறினார்கள். வீட்டை வெளியிலிருந்தே சுற்றிப் பார்த்தார்கள். எல்லா ஜன்னல்களும் சாத்தியிருந்தன. உள்ளே இருட்டாகவே இருந்தது. பின் வாசலில் இருவரை நிற்க வைத்து விட்டு அவன் தன் சகா ஒருவனுடன் முன் வாசற்கதவுக்கு வந்து கதவருகே இருந்த பாதுகாப்பு அலாரத்தை ஆராய்ந்து விட்டுச் சொன்னான். "இதை ஆஃப் செய்து வைத்திருக்கிறார்கள். நீ கதவைத் திற"

அவன் சகா தன்னிடமிருந்த மெல்லிய இரும்புக் கம்பியை வளைத்து அந்தக் கதவின் சாவித் துளையில் விட்டான். ஒன்றரை நிமிடத்தில் அவன் கதவைத் திறந்து விட்டான். மிகவும் எச்சரிக்கையுடன் உள்ளே நுழைந்து விளக்கைப் போட்டார்கள். துப்பாக்கியை நீட்டிக் கொண்டே உள்ளே போய் ஒவ்வொரு அறையாகப் பார்த்தார்கள். யாருமே இல்லை. ஆனால் சில மணி நேரங்கள் முன்பு வரை சமையலறை பயன்படுத்தப்பட்டிருந்த சின்னச் சின்னத் தடயங்கள் நுணுக்கமாக ஆராய்ந்ததில் தெரிந்தன.

அந்த வீட்டுக்காரன் நியூயார்க்கில் இருக்கிறான் என்றும், வருடம் ஒரு முறை கிறிஸ்துமஸ் சமயத்தில் வந்து போவான் என்றும் வரும் முன்பே தகவல் சேகரித்திருந்தார்கள். தற்போது இரண்டு மாதங்களாக வீடு காலியாகத் தான் இருந்திருக்கிறது. அக்கம் பக்கம் வீடுகளும் இல்லை. அதனால் ஒளிந்து கொள்ள மிக வசதியான வீடு தான் இது. பாதுகாப்பு அலாரத்தை 'ஆஃப்' செய்து வைத்திருப்பதும், சமையலறையைப் பயன்படுத்தி இருப்பதும் சமீபத்தில் ஆட்கள் இங்கே இருந்திருப்பதற்கு அத்தாட்சி...

இந்த விவரங்கள் உடனடியாக இம்மானுவலுக்குத் தெரிவிக்கப்பட்டது.

அதே நேரத்தில் விஸ்வமும் ஜிப்ஸியும் ஒரு வெள்ளை நிறக் காரில் முன்னூறு கிலோமீட்டர் தொலைவில் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். ஜிப்ஸி காரை சீரான வேகத்தில் ஓட்டிக் கொண்டிருந்தான். விஸ்வம் பின்சீட்டில் படுத்துக் கொண்டிருந்தான். முன் சீட்டில் அவன் உட்கார்ந்திருந்து அவனை யாராவது பார்த்து, ஞாபகம் வைத்துப் பின் அவன் எதிரிகளிடம் தெரிவிக்கக்கூடும் என்ற எச்சரிக்கை உணர்வு அவர்களுக்கிருந்தது.

சில மணி நேரங்களுக்கு முன் தான் ஜிப்ஸி அவசரமாக வந்து அவனிடம் தெரிவித்தான். "அவர்கள் நம்மைக் கண்டுபிடித்து விட்டார்கள்"

சற்று ஆச்சரியத்துடன் விஸ்வம் கேட்டான். "எப்படி?

ஜிப்ஸி வேக வேகமாக அவர்களது துணிமணிகளை ஒரு சூட்கேஸில் திணித்துக் கொண்டே சொன்னான். "அலெக்சாண்டிரியாவில் உனக்குக் குறி சொன்னவள் தான் உன் இருப்பிடத்தை அவர்களுக்கும் சொல்லி இருக்கிறாள்..."

விஸ்வம் முகத்தில் களைப்பின் ரேகை ஒரு கணம் படர்ந்து மறைந்தது. அவர்கள் அடுத்த எட்டாவது நிமிடம் அங்கிருந்து கிளம்பி இருந்தார்கள். ஜிப்ஸி அந்த வீட்டுக்கு வந்த மறுநாளே காரை மாற்றி இருந்தான். விஸ்வம் சவரம் செய்யாமலேயே இருந்ததால் டேனியல் முகவாய்க்கட்டையில் இருந்த ஆழமான கீறல் தாடியால் மறைக்கப்பட்டிருந்தது. அந்த இரவு நேரத்தில் எந்த விதமானத் தயக்கமோ, கலக்கமோ இல்லாமல் இருவரும் அமைதியாகப் பயணித்துக் கொண்டு இருந்தார்கள்.

விஸ்வம் அவனிடம் "எங்கே போகிறோம்?" என்று கேட்கவில்லை. விஸ்வம் இந்தச் சில நாட்களில் வாய் விட்டுப் பேசிய வார்த்தைகளை விரல் விட்டு எண்ணி விடலாம். இந்த நாட்களில் அவன் மூச்சுப் பயிற்சியிலும் யோகா பயிற்சிகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருந்தான். அதற்கெல்லாம் பழக்கப்பட்டிருக்காத டேனியலின் உடல் கடுமையாக முரண்டு பிடித்தது. அசௌகரியங்களால் அவஸ்தைப்பட்டது. போதும், ஓய்வெடுத்துக் கொள்ளலாம் என்று கதறியது. ஆனால் விஸ்வம் அதையெல்லாம் கண்டு கொள்ளவில்லை. உடல் எல்லாம் ரணமாக வலித்தாலும் அவன் கருமமே கண்ணாய் இருந்தான். அவனுக்கு எல்லைகள் இல்லை. எல்லைகளை விஸ்தீரப்படுத்திக் கொண்டே முந்தைய உடலில் வாழ்ந்தவன் அவன். இந்த உடலிலும் அவன் அப்படியே முன்னேறுவான். பரிதாபமான நிலையில் இருந்தாலும் இந்த உடல் அவனுக்குக் கிடைத்திருக்கிற கருவி. எவ்வளவு பலவீனமான கருவியாக இருந்தாலும் அவனால் இந்தக் கருவியை முடிந்த வரை சரி செய்ய முடியும். வெற்றி தோல்விகளை நிர்ணயிப்பது கருவிகள் அல்ல. பயன்படுத்துபவனது திறமையும், மன உறுதியுமே முடிவில் எல்லாவற்றையும் தீர்மானிக்கின்றன. அவன் கர்த்தா... இந்த உடல் ஒரு கருவி...

ஜிப்ஸி அவன் சிந்தனைகளைக் கலைத்தான். "மறுபடியும் அந்தக் கிழவியால் உன்னைக் கண்டுபிடிக்க முடியுமா?"

ஜிப்ஸி பதிலைத் தெரிந்து வைத்துக் கொண்டே தான் இந்தக் கேள்வியைக் கேட்கிறான் என்பதில் விஸ்வத்திற்குச் சந்தேகமில்லை. ஆனாலும் பொறுமையாகச் சொன்னான். "முடியாது. ஒரு முறை பயன்படுத்திய பிறகு அந்தப் பொருளில் இருக்கும் நமது தடயம் மங்கலாகிப் பலவீனமடைந்து விடும்."

ஜிப்ஸி அதற்கு மேல் எதுவும் கேட்கவில்லை. கார் நெடுஞ்சாலையிலிருந்து பிரிந்து போன ஒரு தனிப்பாதையில் காரிருளில் வேகமாகப் போக ஆரம்பித்தது. இப்போது எந்த வாகனமும் அவர்களுக்கு எதிரே வரவுமில்லை, அவர்களைக் கடந்து செல்லவுமில்லை. தூர தூரங்களில் ஓரிரு கட்டிடங்கள் அபூர்வமாகத் தெரிந்தன. அதையெல்லாம் கடந்து ஜிப்ஸி காரோட்டிச் சென்று கடைசியில் ஒரு பழங்கால சர்ச்சின் முன் காரை நிறுத்தினான். சர்ச்சைச் சுற்றிப் புதர்கள் படர்ந்திருந்தன. இப்போது வழிபாட்டில் இல்லாத சர்ச் என்பது அதைப் பார்க்கையிலேயே தெரிந்தது. இருவரும் காரிலிருந்து இறங்கினார்கள்.

ஜிப்ஸி டார்ச் விளக்கை ஒளிர விட்டு சர்ச்சின் பக்கவாட்டில் விஸ்வத்தை அழைத்துச் சென்றான். விஸ்வம் அப்போதும் எதுவும் கேட்கவில்லை. பக்கவாட்டில் இருந்த ஒரு ஜன்னல் கதவை ஜிப்ஸி மெல்லத் தள்ளினான். அந்த ஜன்னல் கதவு திறந்து கொண்டது. ஜன்னலில் கம்பிகள் இல்லை. ஜிப்ஸி அதன் வழியாக உள்ளே குதித்தான். விஸ்வமும் தொடர்ந்து குதித்தான். உள்ளே ஏதோ ஒரு பறவை அமானுஷ்யமாகக் கிறீச்சிட்டது.

விஸ்வம் பறவைகளின் பாஷையை ஓரளவு அறிவான். அது "அபாயம்" என்று கூக்குரல் இடுவதாக உணர்ந்தான்.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, January 16, 2020

இல்லுமினாட்டி 32

ராஜேஷ் என்ற அந்த சக கைதி வந்ததிலிருந்து மனோகரின் மனக்கலக்கம் குறைந்திருந்தது. அவனுடைய பிரச்சினைகள் குறையவில்லை. விடிவுகாலம் அவன் அறிவுக்கு எட்டிய வரை தெரியவில்லை. செந்தில்நாதன் அதற்குப்பின் அவனைப் பார்க்கவோ, பேசவோ வரவில்லை. அவர் அவன் கணக்கில் எந்த வழக்குகளை எல்லாம் சேர்க்க முயற்சி செய்து கொண்டிருக்கிறாரோ, அவனுக்குத் தெரியவில்லை. விஸ்வத்தின் சக்தி இன்னும் அவனை எட்டவில்லை. அவன் இருக்கிறானா இல்லை இறந்து விட்டானா என்றும் தெரியவில்லை. ஆனாலும் கூட அவன் மனக்கலக்கம் குறைந்திருக்கிறது என்றால் காரணம் ராஜேஷின் கலகலப்பான பேச்சினால் விழித்திருக்கும் நேரங்களில் அவன் கவலைகளை மறந்திருந்தது தான். ராஜேஷ் தன்னுடைய சிறிய பெரிய குற்றங்களைச் சுவாரசியமாக அவனிடம் சொன்னான். எப்படியெல்லாம் போலீஸை ஏமாற்றி இருக்கிறான் என்பதை விவரித்துப் பெருமையாகச் சொன்னான். அவ்வப்போது மாட்டிக் கொண்டது எப்படி என்பதையும் அவன் மறைக்கவில்லை. மாட்டிக் கொண்டாலும் குறைவான தண்டனையைப் பெறுவது எப்படி, சீக்கிரமே சிறையிலிருந்து விடுதலை பெறுவது எப்படி என்றெல்லாம் கூட மனோகருக்கு அவன் விளக்கினான். இப்படி மாட்டிக் கொள்வதிலும், தப்பிப்பதிலும், வெளியேறுவதிலும் இவ்வளவு சூட்சுமங்களா என்று மனோகரால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

ராஜேஷ் அத்தனை விளக்கமாகத் தன் குற்றங்களைச் சொன்னாலும் மனோகர் தான் ஜெயிலுக்கு வந்த விதத்தை அவனிடம் விளக்கமாகச் சொல்லி விடவில்லை. முதலமைச்சர் குடும்பத்துக்கு எதிரானவன் தன் முதலாளி என்றும், அந்தப் பகை காரணமாக முதலாளி செய்ய வைத்த ஒரு செயலில் பிடிபட்டு விட்டதாக மட்டும் சுருக்கமாகச் சொன்னான்.

“உன் முதலாளி உன்னை ஜாமீன்ல எடுக்க வரலயா?” ராஜேஷ் கேட்டான்.

“அவர் என்ன ஆனார்னே தெரியலை. அவர் கிட்ட இருந்து எந்தத் தகவலும் இல்லை.”

ராஜேஷ் சொன்னான். “காரியம் ஆகணும்னா நம்ம கிட்ட முதலாளிக தாராளமா இருப்பாங்க. மாட்டிகிட்டா, நம்மளால அவங்களுக்குப் பிரச்சன தான்னா அப்பறம் அவங்களப் பிடிக்க முடியாது. இது தான் உலகம்”

மனோகர் சொன்னான். “இவர் அப்படிப்பட்டவர் இல்லை ராஜ்...”

‘இந்தக் கலிகாலத்தில் இப்படியும் ஒரு வெகுளியா?’ என்பது போல் ராஜேஷ் அவனைப் பார்த்தாலும் அதற்குப் பிறகு எதுவும் சொல்லவில்லை. குடைந்தும் கேட்கவில்லை.

தொடர்ந்து வளவளவென்று பேசும் ராஜேஷ் சில சமயங்களில் திடீரென்று மௌனமாக இருப்பதும் உண்டு. அப்போது அவன் என்ன யோசிப்பானோ தெரியாது. அந்தச் சமயங்களில் அவன் மனோகரை வெறித்துப் பார்ப்பான் ஆரம்பத்தில் மனோகர் அவனிடம் கேட்டிருக்கிறான். “ஏன் அப்படிப் பார்க்கிறாய்?”

“ஒன்றுமில்லை” என்று சொல்லி ராஜேஷ் பார்வையைத் திருப்பிக் கொண்டு சுவரையோ, இரும்புக்கம்பிக் கதவையோ வெறித்துப் பார்க்க ஆரம்பித்து விடுவான். அவனுக்கும் கவலைப்படவோ, யோசிக்கவோ ஏதாவது இருக்கும் போல என்று மனோகர் எண்ணிக் கொள்வான்.

இரவு உறங்கும் நேரங்களில் மனோகர் எண்ணமெல்லாம் அதிகமாக விஸ்வத்தைப் பற்றியே இருக்கும். விஸ்வத்தின் சக்தி அலைகள் தொடர்ந்து அவனை எட்டவேயில்லை. ஒரு வேளை இறந்து போயிருப்பானா என்ற சந்தேகம் அவனுக்கு மறுபடியும் வரும். மனதில் இருக்கும் கொஞ்ச நஞ்ச நம்பிக்கையும் வடிந்து போகும். ஆனாலும் ஏதோ ஒன்று அவனை நம்பிக்கை கொள்ளச் செய்யும்...

அப்படி ஒரு நாள் இரவு உறக்கம் வராமல் படுத்துப் புரண்டு கொண்டிருக்கையில் தான் மனோகருக்கு விஸ்வத்தின் சக்தி அலைகள் மிக மிக மெலிதாக வந்து போனது போல் இருந்தது. சில வினாடிகள் தான் என்றாலும், உணர்ந்தது மிக மிக மெலிதாகத் தான் என்றாலும் அவன் உணர்ந்ததை அவனால் மறுக்க முடியவில்லை. இதயத்துடிப்புகள் ஓட்டமெடுக்க, உடம்பெல்லாம் வியர்க்க மனோகர் சடாரென்று எழுந்து உட்கார்ந்தான்.

வாஷிங்டனில் அந்த வயதான இல்லுமினாட்டி உறுப்பினர் கர்னீலியஸ் ஒரு முடிவுக்கு வந்திருந்தார். தனக்கும் பிரச்சினை வராமல், இல்லுமினாட்டிக்கும் பிரச்சினை வராத ஒரு வழியை அவர் யோசித்து வைத்திருந்தார். அதை நிறைவேற்ற அவர் காலை ஒன்பது மணிக்கு காரில் வெளியே கிளம்பினார். வெளியே வந்த போது அவருடைய அனுபவமுள்ள கூர்மையான கண்கள் சுற்று வட்டாரத்தை ஆராய்ந்தன. எதுவும் வித்தியாசமாகவோ, சந்தேகப்படுகிற மாதிரியோ இல்லை. திருப்தி அடைந்தவராக பயணத்தை ஆரம்பித்தார்.

இல்லுமினாட்டி உறுப்பினர்களுக்குப் பலத்த பாதுகாப்பு உண்டு. அவர்கள் வெளியே செல்லும் போது தேவைக்கேற்ற மாதிரி அந்தப் பாதுகாப்பு வீரர்களும் கூடவே செல்வார்கள். அது இரண்டு விதங்களில் இல்லுமினாட்டிக்குப் பயன்பட்டது. முதலாவது அவர்கள் உறுப்பினர்களின் பாதுகாப்பு. இரண்டாவது அந்த உறுப்பினர்களின் வெளி நடவடிக்கைகள், யாரை எல்லாம் சென்று சந்திக்கிறார்கள் என்ற தகவல்கள் எல்லாம் அந்தப் பாதுகாப்பு வீரர்கள் மூலமாக இல்லுமினாட்டியின் தலைமையின் கவனத்திற்கு அவ்வப்போதே போய்ச் சேரும். மிகவும் சூட்டிப்பாகவும், அதிகாரபூர்வமாகவும் செயல்படும் இல்லுமினாட்டி உறுப்பினர்களுக்கும், ஆபத்தான வேலைகளில் ஈடுபட வேண்டி இருக்கும் உறுப்பினர்களுக்கும் மற்றவர்களை விட அதிகப் பாதுகாப்பு இருக்கும்.

கர்னீலியஸ் ஆரம்பத்திலிருந்தே அதிகார வர்க்கத்தில் இருந்ததில்லை. பழங்கால இல்லுமினாட்டி ஏடுகள், சின்னங்கள், கோயில்கள் ஆகியவை குறித்த ஆழ்ந்த ஞானம் உள்ள அவர் யாருக்கும் எதிரியோ, எதிரியாக முடிந்தவரோ அல்ல. இல்லுமினாட்டியின் அறிஞர் என்ற அளவிலேயே உறுப்பினராக இருக்கும் அவர் ஆரம்பத்திலிருந்தே பாதுகாப்பு தேவை இல்லை என்று இல்லுமினாட்டிக்குத் தெரிவித்தவர். ஆனாலும் ஆரம்பத்தில் அவருக்கு சிறிய அளவில் பாதுகாப்பு ஏற்பாடு செய்துதரப்பட்டது. ஆனால் நூலகங்கள், புத்தகங்கள், வரலாற்றுச் சின்னங்கள் குறித்த ஆராய்ச்சிகள் என்று சதாசர்வகாலம் இருந்த அவருக்குப் பிற்காலத்தில் பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டது. ஆனால் எப்போது தேவைப்பட்டாலும் அவர் பாதுகாப்பு வசதிகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் கர்னீலியஸுக்கு பாதுகாப்பு தேவைப்படவில்லை. இல்லுமினாட்டி உறுப்பினராக ஆரம்பத்தில் அவர் கற்றுக் கொண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும், கவனமாக இருப்பதையும் கைவிடாமல் இருந்த அவருக்கு இன்று வரை பயம் ஏற்பட்டதில்லை. ஆனால் இன்று அவருக்கு மடியில் கனம் இருப்பதால் ஒரு இனம் புரியாத பயம் சிறிதளவு ஏற்பட்டிருந்தது.

அது அர்த்தமில்லாதது என்பதை அவர் அறிவார். அப்படி ஒரு ஆவணம் இருப்பதே யாருக்கும் தெரியாது. அதனால் அது அவரிடம் இருக்கக்கூடும் என்று யாரும் சந்தேகப்படும் வாய்ப்பு கடுகளவும் இல்லை. அவரே அந்த இரகசிய ஆவணத்தைப் படித்துக் கிட்டத்தட்ட ஐம்பதாண்டுகளுக்கு மேல் ஆகி இருந்தது. கூடு விட்டுக் கூடு பாயும் அந்த விசித்திரத் தகவல் தவிர அவருக்கே கூடுதலாக நினைவில்லை. ஏன் அவர் அந்த ஆவணத்தைப் பற்றியே விஸ்வம் இல்லுமினாட்டியில் சேரும் வரை நினைத்துக்கூடப் பார்த்ததில்லை. ஐம்பதாண்டுகளுக்கு முன் வங்கி லாக்கரில் உள்ளே வைத்துப் பூட்டியதோடு சரி, பின் அதை அவர் மறந்தே விட்டிருந்தார்.

விஸ்வம் இல்லுமினாட்டியில் சேர்வதற்கு முன் அவனுக்கு இளமையில் இருந்தே வரும் கனவைப் பற்றிச் சொன்னதாகத் தகவல் வந்த போது, அவன் கனவில் வந்தது சிகாகோவின் இல்லுமினாட்டிக் கோயிலும், கோயில் அடித்தளத்தில் இருந்த ரகசிய ஓலைச்சுவடியும் தான் என்று பேசப்படவும் ஆரம்பித்த போது எல்லோருக்கும் இல்லுமினாட்டி இரகசியக் காப்பகத்தில் வைக்கப்பட்டிருந்த அந்த ஓலைச்சுவடி நினைவுக்கு வந்தது என்றால் கர்னீலியஸுக்குக் கூடுதலாக அவருடைய வங்கி லாக்கரில் வைக்கப்பட்டிருந்த ஆவணமும் அப்போது நினைவுக்கு வந்தது.

ஆனால் விஸ்வம் இறந்தும் இன்னொரு உடலில் உயிர் பெற்று வந்திருக்கக்கூடும் என்ற செய்தி கிடைத்த போது அவர் அதிர்ந்து போனார். காரணம் இந்த நம்ப முடியாத செய்தி, நடக்கவே முடியாது என்று அவர் நம்பி இருந்த செய்தி அந்த இரகசிய ஆவணத்தில் பதிவாகி இருக்கிறது. ஐம்பதாண்டுகளுக்கு முன்பு ஒரு முறை படித்திருந்த அந்த ஆவணத்தில் அவருக்குச் சரியாக முழுமையாக நினைவிருக்கும் இந்தச் செய்தி உண்மை ஆகிறது என்றால் அதற்குப் பின்னால் உள்ள அவருக்குச் சரியாக நினைவில்லாத தகவல்களும் உண்மையாகவே இருக்கக் கூடும். அவை என்ன என்று தெரிந்து கொள்வதும், தெரியப்படுத்த வேண்டியவர்களுக்குத் தெரியப்படுத்துவதும் மிக முக்கியம்..

அவருடைய கார் வங்கியை நோக்கி விரைய ஆரம்பித்தது.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, January 23, 2020

இல்லுமினாட்டி 33

படுத்துக் கொண்டிருந்த மனோகர் படபடப்புடன் எழுந்து உட்கார்ந்ததைக் கவனித்த ராஜேஷ் கொட்டாவி விட்டபடி கேட்டான். “என்ன ஆச்சு?”

அவன் கேட்ட பிறகு தான் அவனும் உறங்காமல் விழித்துக் கொண்டிருப்பது மனோகருக்குத் தெரிந்தது. உண்மையைச் சொல்லத் தோன்றாமல் மெல்ல “ஏதோ கனவு” என்று சொல்லி அவன் சமாளித்தான்.

நல்ல வேளையாக ராஜேஷ் அடுத்து கேள்வி எதுவும் கேட்கவில்லை. மனோகர் கண்களை மூடிக் கொண்டான். கண்களை மூடிக் கொண்டு அசையாமல் சிலை போல் சிறிது நேரம் அமர்ந்து மிகவும் கூர்மையாகத் தன்னை அண்டும் உணர்வுகளைக் கவனித்தான். அவன் முன்பு உணர்ந்ததை மறுபடி உணர முடியவில்லை. சிறைக்காவலர்கள் இருவர் சிரித்துப் பேசும் சத்தம் கேட்டது. பின் பேரமைதி. ஆனால் அந்தப் பேரமைதியிலும் அவனால் கூடுதலாக எதையும் உணர முடியவில்லை. நீண்ட நேரம் காத்திருந்து பின் மறுபடியும் அவன் படுத்துக் கொண்டான். முன்பு மெலிதாக உணர்ந்தது விஸ்வத்தின் சக்தி அலைகள் தானா, இல்லை தன்னுடைய கற்பனையா என்ற சந்தேகம் அவனைத் தொற்றிக் கொண்டது. விஸ்வத்தின் சக்தி அலைகள் இவ்வளவு பலவீனமாகத் தீண்டாதே என்று சந்தேகப்பட்டான். க்ரிஷ் அல்லது அவனுடைய மாஸ்டர் போல யாராவது அவனுடன் விளையாடுகிறார்களா என்ற சந்தேகமும் வந்தது. குழப்பத்தில் பல விதமாக யோசித்து சலித்து அப்படியே மனோகர் உறங்கிப் போனான்.

அவனைச் சிறையறையிலிருந்த ரகசியக் காமிரா மூலம் கண்காணித்துக் கொண்டிருந்த அதிகாரிக்கு அவனுடைய நடவடிக்கை இது வரை இல்லாத அதிசயமாகப் பட்டது. அவன் நடவடிக்கைகளில் ஏதாவது வித்தியாசமாகத் தெரிந்தால் உடனடியாகத் தெரிவிக்கும்படி முன்பே செந்தில்நாதன் உத்தரவிட்டிருந்தார். அந்த அதிகாரி கடிகாரத்தைப் பார்த்தார். இரவு மணி இரண்டு. இந்த நேரத்தில் அழைப்பதா இல்லை அதிகாலையில் அழைக்கலாமா என்ற யோசனையில் ஆழ்ந்தவர் பின் அவர் அலைபேசிக்கு ஒரு குறுஞ்செய்தி மட்டும் அனுப்பினார். “மனோகர் சற்று முன் வித்தியாசமாக நடந்து கொண்டான்”

அடுத்த அரைமணி நேரத்தில் செந்தில்நாதன் அங்கிருந்தார். அவர் அந்தக் காமிராப் பதிவைக் கவனமாகப் பார்த்தார். அவருக்கு அது அசாதாரணமாகவே பட்டது. ராஜேஷிடம் அவன் கனவு என்று சொல்லிச் சமாளித்தாலும் அவன் பின் உறங்கவே இல்லை என்பதால் அது பொய் என்பதில் சந்தேகமில்லை. வெளியில் இருந்து பார்வைக்குத் தெரிந்த மாதிரியோ, காதுக்குக் கேட்கிற மாதிரியோ எந்தச் செய்தியும் அவனை எட்டவில்லை என்பது தெளிவு. அப்படியானால் அவர்கள் சந்தேகப்பட்டது போல் அது விஸ்வத்தின் தொடர்பாக இருக்கலாம். உடனடியாக அவர் நேரம் காலம் பார்க்காமல் க்ரிஷை அழைத்தார். அப்போது மணி அதிகாலை 3.15

க்ரிஷ் தூக்கக்கலக்கத்தோடு “ஹலோ” சொன்னான். அவர் சொன்ன தகவலைக் கேட்ட பிறகு அவனுடைய தூக்கம் விடைபெற்றது. அவனும் அந்தக் காமிராப் பதிவை இரண்டு முறை பார்த்தான். இல்லுமினாட்டிக்குத் தெரிவிக்கும் முன் ஒரு உளவியல் நிபுணர் கருத்தையும் கேட்பது உத்தமம் என்று அவனுக்குத் தோன்றியது.

காலை 9.10க்கு அந்தக் காமிராப் பதிவை ஒரு உளவியல் நிபுணருக்குக் காண்பித்தான். அவர் நிதானமாகவும், கூர்மையாகவும் அதைப் பார்த்து விட்டுச் சொன்னார். “திடீரென்று ஏதோ ஞாபகம் வந்து அவன் எழுந்த மாதிரி தெரிகிறது. கணநேரத்தில் அவன் முகம் மலர்ந்ததைப் பார்த்தால் அது நல்ல நினைவு மாதிரி தான் தெரிகிறது. மறந்து போயிருந்த ஏதோ நல்ல விஷயம் மறுபடி நினைவு வந்தது போல் இருக்கிறது. ஆனால் அது முழுமையாக இல்லை போல் இருக்கிறது. அதனால் தான் அவன் எழுந்து உட்கார்ந்து கண்களை மூடி முழுதாகத் தெரிந்து கொள்ள கவனம் செலுத்துகிறான். ஆனால் அவன் எதிர்பார்த்த அந்தக் கூடுதல் தகவல் கிடைக்கவில்லை என்பது அவன் முக உணர்ச்சிகளைப் பார்த்தால் தெரிகிறது. அது நினைவுக்கு வரும் என்று எதிர்பார்த்துக் காத்து உட்கார்ந்திருந்தது போலத் தோன்றுகிறது. ஆனால் அது நடக்கவில்லை என்பதால் அந்த ஏமாற்றம் முகத்தில் தெரிகிறது. நினைவுக்கு வந்த தகவல் சரிதானா என்ற சந்தேகம் அல்லது அது சம்பந்தமாகப் புரிந்து கொண்டது சரிதானா என்ற குழப்பம் அவனை அலைக்கழிப்பது போல இருக்கிறது. கடைசியில் அவன் பல முரண்பாடான எண்ணங்களையே யோசித்துக் களைத்து உறங்கப் போன மாதிரி தான் தெரிகிறது...”

அந்த உளவியல் நிபுணருக்கு இந்த நிகழ்வுக்குப் பின்னணியான உண்மைகள் தெரியாதென்பதால் அவர் தன் கருத்துகளைச் சொன்னார். பின்னணி தெரிந்திருந்த க்ரிஷ் அவர் சொன்னதை மாற்றிக் கொண்டு சரியாகவே புரிந்து கொண்டான். மனோகருக்கு நினைவு வந்த விஷயம் அரைகுறையாக இருக்கவோ, அரைகுறையாகப் புரிந்து கொண்டிருக்கவோ வழியில்லை. விஸ்வம் தன் சக்தி அலைகளை அனுப்பி மனோகரைத் தொடர்பு கொள்ள முயன்றிருக்கலாம். அது மனோகரை எட்டி இருக்கலாம். அதனால் அவன் ஆச்சரியமும், மகிழ்ச்சியும் அடைந்து உட்கார்ந்திருக்கிறான். ஆனால் பழையது போல் முழுமையாக வராததால் அல்லது தொடராததால் மனோகர் ஏமாற்றமடைந்திருக்க வாய்ப்பு இருக்கிறது...

அவன் நினைப்பது சரியாக இருந்தால், டேனியலின் உடலில் நரம்பு மண்டலம் எத்தனை தான் பலவீனமாக இருந்தாலும், அதையும் மீறி விஸ்வம் இவ்வளவு சீக்கிரம் பலவீனமாகவாவது மனோகரைத் தன் சக்தியால் தொடர்பு கொண்டான் என்பது ஆபத்தான செய்தி. விஸ்வத்தால் இனி எத்தனை சீக்கிரம், எவ்வளவு தூரம் தன் சக்திகளைத் திரும்பப் பெற முடியும் என்பது தெரியவில்லை. ஆனால் இயல்பிலேயே சக்திவாய்ந்த அவர்களது எதிரி தன் ஆற்றலைத் திரும்பப் பெறும் முயற்சியில் முழுமூச்சோடு இறங்கி விட்டான் என்பதற்கு அறிகுறி தெரிந்து விட்டது.

க்ரிஷ் இந்த அபாயச் செய்தியை உடனடியாக எர்னெஸ்டோவுக்குத் தெரிவிப்பது அவசியம் என்ற முடிவுக்கு வந்தான்.

கர்னீலியஸின் கார் ஒரு சிக்னலில் நின்ற போது தான் யாரோ அவரைக் கூர்ந்து கவனிப்பது போல் உணர்ந்தார். அவருடைய பார்வை இரண்டு பக்கமும் ஊடுருவியது. அங்கே நிறைய வாகனங்கள் நின்றிருந்தன. அவற்றில் ஏதாவது ஒரு வாகனத்திலிருந்து யாரோ அவரைக் கண்காணிக்கிறார்களா? இந்த சந்தேகம் வந்ததும், அந்த சிக்னலிலிருந்து நகர்ந்த பின்னர் அவரை யாராவது பின்தொடர்கிறார்களா என்று கவனிக்க ஆரம்பித்தார். சில வாகனங்கள் பின்னால் இருந்தன. அத்தனையும் அவரைப் பின் தொடர்வதாக நினைப்பது முட்டாள்தனம்... அவர் வங்கிக்குப் போகும் தெருவில் எப்போதுமே வாகனப் போக்குவரத்து அதிகம். அந்தத் தெருவில் பயணித்தால் அவரைப் பின் தொடரும் வாகனத்தைக் கண்டுபிடிப்பது கஷ்டம். எனவே ஓரிடத்தில் அந்தத் தெருவிலேயே தொடர்ந்து செல்லாமல் வலது பக்கம் இருந்த ஒரு குறுக்குத் தெருவில் அவர் காரைத் திருப்பினார். அந்தத் தெருவிற்கு அவர் கார் திரும்பிய போது கூடவே ஒரு வேனும், வேறொரு காரும் மட்டும் தான் திரும்பின. கர்னீலியஸ் அந்த வேனைக் கவனித்தார். அது உணவுப் பொருட்களை வினியோகிக்கும் வேன். அதை ஓட்டிக் கொண்டு வந்த ஆள் சத்தமாக ஏதோ பாட்டைக் கேட்டுக் கொண்டே தலையாட்டியபடி இருந்தான். அந்த இசைப்பிரியன் அவரைக் கண்காணிப்பது போல் தெரியவில்லை. இன்னொரு காரை ஓட்டி வந்த கருப்பினப் பெண்மணி தன் அருகில் அமர்ந்திருந்த ஆளிடம் காரசாரமாக எதையோ விவாதித்துக் கொண்டிருந்தாள்.

கர்னீலியஸ் தன் காரின் வேகத்தைக் குறைத்துக் கொண்டார். அந்த வேனும், காரும் அவர் காரைத் தாண்டிச் சென்றன. அவர் குறைந்த வேகத்திலேயே சிறிது தூரம் சென்றார். இப்போது எந்த வாகனமும் அவர் காரைத் தொடர்வது போல் தெரியவில்லை. புதிது புதிதாய் வாகனங்கள் அவர் காரைத் தாண்டிப் போயின. ஆனாலும் யாரோ அவரைக் கண்காணிப்பது போன்ற உணர்வு ஏனோ குறையவில்லை. மாறாக அது கூடியது. திடீரென்று, கண்காணிப்பது விஸ்வமாக இருக்குமோ என்று தோன்றிய போது அவர் இதயத் துடிப்பு ஒரு கணம் நின்று பின் ஓட்டம் எடுத்தது.

(தொடரும்)

என்.கணேசன்

இல்லுமினாட்டி 34

இம்மானுவல் தன் ஆட்களிடமிருந்து விஸ்வத்தைக் கண்டு பிடித்த செய்தி சொல்லும் போன்கால் வரும் என்று காத்திருந்து சலித்துப் போனான். அவன் எதிர்பார்த்த போன்கால் வரவேயில்லை. அலெக்சாண்டிரியாவின் குறி பார்த்துச் சொல்லும் கிழவி அவர்களுக்குத் தகவல் தந்து அரை மணி நேரத்திற்குள் விஸ்வமும், அவன் கூட்டாளி அல்லது கூட்டாளிகளும் அந்த வீட்டை விட்டுப் போயிருக்கிறார்கள் என்பதைத் தடயங்கள் தெரிவித்தன. அந்த வீட்டின் அருகில் வேறு வீடுகளோ, ஆட்களின் போக்குவரத்தோ இல்லாததால் அவர்கள் போன திசையைக் கூட யூகிக்க முடியவில்லை. அங்கே சுற்றி உள்ள எல்லா இடங்களிலும் டேனியலின் புகைப்படத்தை அனுப்பி இருந்தான். கூடவே மீசை, தாடி, கண்ணாடி, தலைமுடி ஆகியவற்றை கூட்டி, குறைத்து, மாற்றி பலவிதமான படங்களையும் அனுப்பி இருந்தான். எப்படி வேடம் போட்டாலும் கண்டு பிடித்து விடும்படியான பல விதமான புகைப்படங்கள் ரயில்நிலையங்கள், விமானநிலையங்கள் ஆகியவற்றிற்கும் கூட அனுப்பப்பட்டிருந்தன. எங்கிருந்தும் எந்தத் தகவலும் இல்லை. அதனால் விமானம், ரயிலில் அவர்கள் போகவில்லை என்பது மிக உறுதி. அதே போல் ஓட்டல்கள், லாட்ஜ்கள் ஆகியவற்றிற்கும் அந்தப் புகைப்படங்கள் அனுப்பப் பட்டிருந்தன. அங்கிருந்தும் தகவல் இல்லாததால் அங்கெங்கும் கூடப் போகாமல் விஸ்வம் கவனமாக இருந்திருக்கிறான் என்பதும் தெரிந்தது. பின் எங்கே போனார்கள், எங்கே ஒளிந்திருக்கிறார்கள் என்பது தெரியவில்லை.

மறுபடி அலெக்சாண்டிரியா கிழவியைத் தொடர்பு கொண்ட போது அந்தக் கையெழுத்திட்ட காகிதம் மூலமாக இனித் தெரிந்து கொள்ள முடியாது என்றும் விஸ்வம் சமீபத்தில் அணிந்திருந்த உடைகள், உபயோகப்படுத்திய கைக்குட்டைகள் இருந்தால் அவற்றைத் துவைப்பதற்கு முன் கொண்டு வந்து தந்தால் கண்டுபிடித்துச் சொல்ல முடியும் என்று அவள் சொன்னாள். கடைசியாக விஸ்வம் அணிந்திருந்த ஆடைகள், கைக்குட்டை எல்லாம் கூட அவன் இறந்த போதே லேசாகக் கருகி விட்டிருந்ததால் அவர்கள் அவற்றை அன்றே அப்புறப்படுத்தி இருந்தார்கள். விஸ்வம் இரண்டு மாதங்களுக்கு முன்பு ஒரு அடி நீளமுள்ள காளி வெண்கலச்சிலை ஒன்றை ஃப்ராங்பர்ட்டில் உள்ள இல்லுமினாட்டி செயற்குழு உறுப்பினருக்குப் பரிசளித்திருந்தான். அதை வைத்து ஏதாவது சொல்ல முடியுமா என்று கூடக் கேட்ட போது அவள் மூன்று நாட்களுக்கு முன்பு வரையாவது அதை விஸ்வம் அவன் கையில் வைத்திருந்தால் தான் சொல்ல முடியும் என்று சொல்லி விட்டாள். அதனால் விஸ்வத்தை அந்த வகையில் கண்டுபிடிக்கும் முயற்சியை இம்மானுவல் கைவிட வேண்டி வந்தது.

இனி என்ன வழி என்று இம்மானுவல் தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தான்.

அந்த சர்ச்சில் தூசியும், குப்பைகளும் மண்டியிருந்தன. உள்ளே நுழைந்த பத்து நிமிடங்களில் ஏழெட்டு முறை விஸ்வம் தும்மி விட்டிருந்தான். அந்தத் தும்மல் ஒலி கூட சர்ச்சின் உள்ளே அமானுஷ்யமாக எதிரொலித்தன. ஜிப்ஸி டார்ச் விளக்கொளியில் அந்தச் சர்ச்சின் ஒரு மூலையை வேகமாகச் சுத்தம் செய்தான். பெரிய இரண்டு தரை விரிப்புகளை விரித்து இருவரும் தூங்கினார்கள். களைப்பின் காரணமாக விஸ்வம் படுத்தவுடனே உறங்கிப் போனான். அவன் மறுநாள் காலை எழுந்த போது பக்கத்துத் தரைவிரிப்பில் ஜிப்ஸியைக் காணவில்லை. தரைவிரிப்பு மடித்து ஒழுங்காக அங்கேயே வைக்கப்பட்டிருந்தது. அவன் எழுந்து காலைக்கடன் கழிக்கப் போயிருப்பான் என்று எண்ணியபடி விஸ்வம் எழுந்து உட்கார்ந்தான். காலை நேரமானபடியால் சர்ச்சுக்குள் உடைந்த ஜன்னல் வழியே சூரிய ஒளி உள்ளே புகுந்து இப்போது எல்லாம் தெளிவாகத் தெரிந்தன.

விஸ்வம் மெல்ல எழுந்து சர்ச்சை ஆராய்ந்தான். அவன் பார்வையில் முதலில் பட்டது சர்ச்சின் உள்ளே மேட்டுப்பகுதியில் இருந்த ஏசு கிறிஸ்துவின் பிரதான உடைந்த சிலை. அந்தச் சிலையின் கை உடைந்திருந்தது. சிலுவையில் விரிசல் விட்டிருந்தது. அந்தப் பிரதான சிலை உடைந்த பிறகு அங்கு வழிபாடுகள் நின்றிருக்கலாம் என்று நினைத்த விஸ்வம் நின்ற இடத்திலிருந்தே சுற்றிலும் பார்த்தான். சுவரெல்லாம் பைபிள் நிகழ்வுகள் ஓவியங்களாக நிறைந்திருந்தன.

உடைந்த பிரதான சிலையின் பின்புறச் சுவரில் இருந்த ஓவியம் 'லாஸ்ட் சப்பர்" ஓவியமாக இருந்தது. மிகவும் அழகாக வரையப்பட்டிருந்த அந்த ஓவியத்தில் ஏதோ ஒன்று வித்தியாசமாக இருப்பதாக அவன் உள்ளுணர்வு சொல்ல அதைக் கூர்ந்து கவனித்தான். ஏசு கிறிஸ்துவும், சீடர்களும் நேர்த்தியாக வரையப்பட்டிருந்தார்கள். அந்த உணவு மேஜையும் அதன் மீதிருந்த பாத்திரங்களும் கூட அப்படித்தான் நேர்த்தியாக வரையப்பட்டிருந்தன. கீழே வரைந்தவரின் பெயர் ஜெர்மானிய எழுத்தில் இருந்தது. லாஸ்ட் சப்பர் ஓவியங்கள் ஏராளமாக இருக்கின்றன என்றாலும் எல்லாம் ஒரே மாதிரி வரையப்பட்டிருப்பதில்லை. லியார்னாடோ டாவின்ஸி ஓவியமும், மற்ற ஓவியங்களும் சிறிய விதங்களில் நிறையவே வித்தியாசப்பட்டு இருப்பதை விஸ்வம் கவனித்திருக்கிறான். இந்த ஓவியத்தில் அவன் உள்ளுணர்வைத் தொட்ட அம்சம் என்ன என்று ஆராய்ந்து பார்த்தான். மூன்று நிமிடங்களில் அவன் அதைக் கண்டுபிடித்தான்.

ஏசு கிறிஸ்துவின் வயிற்றுப்பகுதியும் மேஜைப் பகுதியும் இணையும் இடத்தில் மெலிதாக இல்லுமினாட்டி சின்னமான பிரமிடு நெற்றிக்கண் தெரிந்தது. மேலோட்டமாகப் பார்த்தால் ஏசு கிறிஸ்துவின் சால்வையின் வேலைப்பாடு போலவும், மேஜையின் வேலைப்பாடு போலவும் தோன்றும்படி வரையப்பட்டிருந்தாலும் கூர்ந்து பார்த்துக் கண்டுபிடித்த பின் தெளிவாகவே அந்த இல்லுமினாட்டி சின்னம் தெரிந்தது. இது வரை அவன் பார்த்திருந்த லாஸ்ட் சப்பர் ஓவியம் எதிலும் இந்தச் சின்னம் இல்லை. அவன் இல்லுமினாட்டியின் ஆபத்திலிருந்து தப்பிக்க அடைக்கலம் வந்து சேர்ந்திருக்கிற அந்த சர்ச்சில் இருக்கும் ஓவியத்தில் அந்தச் சின்னம் இருப்பது அவனுக்குப் பாதுகாப்பா, அபாய எச்சரிக்கையா என்பது அவனுக்குத் தெரியவில்லை. அந்தச் சின்னத்தைப் பார்த்தபடி அவன் யோசனையோடு நின்றான்...

கூர்ந்து கவனிப்பது விஸ்வமாக இருக்குமோ என்று தோன்றி இதயத்தின் படபடப்பும் கூடியவுடன் கர்னீலியஸ் மெல்ல ஓரமாகக் காரை நிறுத்தினார். இப்போது உயிரோடு இருக்கும் ஆட்களில் அவரைத் தவிர யாருக்கும் அந்த இரகசிய ஆவணம் இருப்பது தெரியாது. அதில் அவருக்குச் சிறிதும் சந்தேகம் இல்லை. அந்த ஆவணம் இருப்பதே தெரியாத போது அந்த ஆவணத்தை வங்கி லாக்கரில் அவர் வைத்திருப்பதையோ, தற்போது அவர் அதை எடுக்கப் போவதையோ கூட யாரும் அறிந்திருக்க வழியில்லை. பின் யார் எதற்காக அவரைக் கண்காணிக்கிறார்கள்?

அவர் இல்லுமினாட்டி உறுப்பினர் என்றாலும் அதன் முக்கிய முடிவுகள் எடுப்பதில் அவருக்கு எந்தப் பங்கும் இருந்ததில்லை. சொல்லப் போனால் இல்லுமினாட்டியில் அவருக்கு முக்கியத்துவம் இருக்கும் ஒரே ஒரு நிகழ்ச்சி வருடத்திற்கு ஒரு முறை இல்லுமினாட்டி கோயிலில் அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொண்டு உறுதிமொழி எடுத்துக் கொள்ளும் நிகழ்ச்சி தான். கலப்பு மொழியில் எழுதப்பட்டிருக்கும் அவர்களுடைய பழங்காலச் சுவடியிலிருக்கும் உறுதிமொழியை உறுப்பினர்களுக்குப் படித்துக் காட்டும் வேலை ஒன்று தான் அவர் அத்தனை பேரும் பார்க்கச் செய்கிற வேலை. அந்த மொழியில் வல்லுனர் அவர் என்பதும், மூத்த உறுப்பினர் என்பதும் தான் அந்த வேலையை அவருக்கு ஒதுக்கி இருக்கக் காரணமேயொழிய வேறெந்த முக்கியத்துவமும் இல்லை. பின் ஏன் யார் அவரைக் கண்காணிக்க வேண்டும். யாரும் பின் தொடரவும் இல்லை என்பதும் தெரிந்து விட்டது. யாரும் ஒரே இடத்திலிருந்து கண்காணிக்க வழியில்லாமல் அவர் நெடுந்தூரம் பயணித்தும் விட்டார். ஆனாலும் அந்த அசாதாரண உணர்வு இருக்கிறது என்றால் அந்த நபர் விஸ்வமாகவே இருக்க வேண்டும் என்று மறுபடியும் தோன்றியது. அவன் அசாதாரணமானவன், அவனிடம் இருக்கும் எத்தனையோ சக்திகளின் காரணமாக அவர் மனதில் ரகசியமாக வைத்திருக்கும் அந்த இரகசிய ஆவணம் பற்றியும் அவன் தெரிந்து கொண்டிருக்கலாம்...

கண்களை மூடிக் கொண்டு கர்னீலியஸ் யோசித்தார். அவர் நினைக்க நினைக்க அவர் எண்ணங்களை யாரோ படிப்பது போல் தோன்றியது. அதற்கும் மேலாக அந்த இரகசிய ஆவணத்தில் எழுதியிருக்கும் முழு விவரங்களை அறிய அந்த 'யாரோ' ஆசைப்படுவது போலவும் உள்ளுணர்வு சத்தமில்லாமல் அவரை எச்சரித்தது.

கர்னீலியஸ் வங்கி லாக்கரில் இருந்து அந்த இரகசிய ஆவணத்தை இப்போது எடுக்கும் எண்ணத்தை உடனடியாகக் கைவிட்டார். திரும்பவும் வீட்டுக்கே போய் விடலாம் என்று அவருக்குத் தோன்றியது. காரைத் திருப்பிக் கொண்டு வந்த வழியே செல்ல ஆரம்பித்தார்.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, February 6, 2020

இல்லுமினாட்டி 35

இல்லுமினாட்டியின் தலைவரிடமிருந்து செயற்குழு உறுப்பினர்களுக்கு விஸ்வம் பற்றி இன்னமும் எந்தச் சுற்றறிக்கையும் வரவில்லை. வாங் வேக்கு இது கூடுதல் விசித்திரமாகப் பட்டது. கிழவர் ரகசியமாய் ஆட்களைச் சந்திக்கிறார். தூக்கத்தைத் தியாகம் செய்து வேலை செய்கிறார். ஆனால் என்ன செய்கிறார், விஸ்வம் சம்பந்தமாக என்ன முடிவெடுத்திருக்கிறார் என்று செயற்குழு உறுப்பினர்களுக்குக் கூட இன்னமும் எந்தத் தகவலும் சொல்லாமல் இருக்கிறார். உபதலைவரைக் கூடக் கூப்பிட்டுப் பேசியதாகத் தெரியவில்லை. என்ன நடக்கிறது என்று தெரிந்து கொள்ள முடியாமல் இனியும் பொறுமை காப்பது கஷ்டம் என்று வாங் வேக்கு தோன்றியது. அவர் அலமாரியிலிருந்து ஒரு ரகசிய அலைபேசியை எடுத்தார். அதிலிருந்து இது வரை ஒரே ஒரு நபருக்குத் தான் அழைப்புகள் சென்றிருக்கின்றன. அந்த நபரிடமிருந்து மட்டும் தான் அந்த அலைபேசியில் அழைப்புகளும் வந்திருக்கின்றன.

அவர் அழைத்த மனிதர் தாமதமாகத் தான் அழைப்பை ஏற்றார். மிக மெலிந்த குரலில் “ஹலோ” என்றார். உண்மையில் அந்த மனிதர் கனத்த குரலுக்குச் சொந்தக்காரர். இந்த அலைபேசி அழைப்பில் பேசுவதற்கென்றே பிரத்தியேகமாய் இந்த மெலிந்த குரலை அவர் பயன்படுத்துகிறார். இந்த அளவு எச்சரிக்கை உடைய ஆளை வாங் வே இது வரையில் பார்த்ததில்லை.

வாங் வே அவரிடம் சொன்னார். “நாம் உடனே சந்திக்க வேண்டும்.”

அந்த மெலிதான குரல் சொன்னது. “காலை பதினோரு மணி. வழக்கமான இடம்”

வாங் வே சொன்னார். “சரி”.

விஸ்வம் அந்த ஓவியத்திலிருந்த இல்லுமினாட்டி சின்னத்தை நீண்ட நேரம் பார்த்தான். முன்பு ஆனது போல் அந்தச் சின்னம் இப்போது அவனிடம் எந்த வித்தையையும் காட்டவில்லை. ஒளிரவில்லை. எந்த மாறுதலையும் காண்பிக்கவில்லை. அப்படி ஏதாவது ஆகும் என்று ஏன் எதிர்பார்த்தோம் என்று அவனுக்கே விளங்கவில்லை. ஆனால் அந்த ஓவியத்தில் இல்லுமினாட்டி சின்னம் இருப்பது அவனை என்னவோ செய்தது.

அவன் மெல்ல அருகில் இருந்த அடுத்த ஓவியத்தைப் பார்த்தான். அது ஜூடாஸின் முத்தம் என்ற ஓவியமாக இருந்தது. ஏசு கிறிஸ்துவை அதிகாரிகளுக்குக் காட்டிக் கொடுக்கும் விதமாக ஜூடாஸ் அவருக்கு முத்தம் தரும் காட்சி ஒரு பிரபல ஓவியத்தின் தழுவலாக இந்த ஓவியத்தில் வரையப்பட்டிருந்தது. இதிலும் அந்த இல்லுமினாட்டிச் சின்னம் இருக்கக் கூடுமோ என்ற சந்தேகத்தில் விஸ்வம் அந்த ஓவியத்தை ஆராய்ந்தான். முடிவில் ஜூடாஸின் ஆடையில் மங்கலாக அந்தப் பிரமிடுக்குள் இருக்கும் கண் வரையப்பட்டிருந்ததை விஸ்வம் கண்டுபிடித்தான். கூர்ந்து கவனித்தால் ஒழிய அதை யாரும் கண்டுபிடிக்க முடியாது... அதிலும் அந்தச் சின்னம் கிட்டத்தட்ட ஓவியத்தின் மையத்தில் தான் இருந்தது.

யோசனையுடன் விஸ்வம் மற்ற ஓவியங்களைப் பார்த்தான். எல்லா ஓவியங்களிலும் ஏதாவது ஓரிடத்தில் இல்லுமினாட்டியின் அந்தச் சின்னம் இருந்தது. மேடைப் பகுதியில் இருந்த மூன்று ஓவியங்களில் மையப்பகுதியில் இருந்த அந்தச் சின்னம் மற்ற சுவர் ஓவியங்களில் ஏதாவது ஓரிடத்தில் இருந்தது. எதிலுமே மிக உன்னிப்பாகப் பார்த்தால் ஒழிய அந்தச் சின்னம் வரையப்பட்டிருப்பதை யாரும் கண்டுபிடிக்க முடியாது.

எல்லாம் பார்க்கும் விழி எல்லா ஓவியங்களிலும் இருந்தது அவன் யோசனையை அதிகப்படுத்தியதே ஒழிய பயமுறுத்தவில்லை. பயம் அவன் வாழ்க்கையில் இன்று வரை அறியாதது. குழப்பத்தையும் அவன் அதிக நேரம் இது நாள் வரை வைத்துக் கொண்டதில்லை. குழப்பத்தைத் தன் அறிவுக்கூர்மையின் மூலம் அவ்வப்போதே விலக்கி தெளிந்து கொள்ளும் அவனுக்கு இந்த ஓவியங்களால் ஏற்பட்ட குழப்பம் சீக்கிரம் தீர்வதாய் இல்லை. அவன் களைப்புடன் தரையில் அமர்ந்தான்...

அப்போது தான் ஜிப்ஸி சர்ச்சுக்குள் நுழைந்தான். விஸ்வம் அவனிடம் கேட்டான். “எங்கே போயிருந்தாய்?”

“நம் காரை மறைவாக வைக்கப் போயிருந்தேன். அது இந்த சர்ச் அருகில் இருந்தால் நம்மைக் காட்டிக் கொடுத்து விடலாம்...”

விஸ்வம் தலையசைத்து விட்டு அந்த ஓவியங்களைக் காட்டிக் கேட்டான். “என்ன இதெல்லாம்? நாம் ஏன் இங்கே வந்திருக்கிறோம்?”

வாங் வே ஷாங்காய் நகரிலிருந்து அறுபது கிலோமீட்டர் தள்ளியிருந்த அவரது சகோதரரின் வீட்டுக்குள் நுழைந்த போது சரியாகப் பதினோரு மணி ஆகியிருந்தது. அவருடைய பாதுகாவலர்கள் வீட்டுக்கு வெளியே நின்று கொண்டார்கள். அவருடைய சகோதரரின் வீட்டார் வாசலில் அவரை வரவேற்றதோடு சரி தங்கள் வழக்கமான வேலைகளைப் பார்க்கச் சென்று விட்டார்கள். வாங் வே பரபரப்புடன் ஒரு மூலையிலிருந்த அறைக்குள் நுழைந்தார். அங்கு அவருக்காக இல்லுமினாட்டி உளவுத் துறையின் உபதலைவர் சாலமன் காத்திருந்தார்.

வெளியுலகிற்கு சாலமன் ஒரு தொழிலதிபர். இல்லுமினாட்டியின் உளவுத் துறையில் கடந்த முப்பது ஆண்டுகளாக இருக்கிறார். இருபது ஆண்டுகளாக அதிகாரியாகவும், கடைசி பத்தாண்டுகள் உபதலைவராகவும் இருக்கிறார். மூன்றாண்டுகளுக்கு முன் இல்லுமினாட்டி உளவுப்படையின் தலைவர் மாரடைப்பால் காலமான போது சாலமன் தலைவராகப் பதவி ஏற்பார் என்று பலரும் நினைத்திருந்தார்கள். ஆனால் எர்னென்ஸ்டோ தலைவராக இம்மானுவலைத் தேர்ந்தெடுத்தார். வயதிலும், அனுபவத்திலும் குறைந்த ஒருவன் தனக்கு வர வேண்டிய பதவியில் அமர்ந்ததும், அவனுக்குக் கீழே தான் வேலை செய்ய வேண்டி வந்ததும் சாலமனைப் பெரிதும் பாதித்தது. ஆனால் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அவர் தன் வேலைகளைத் தொடர்ந்தார். வெளியுலக வேலைகளில் இது போன்ற சந்தர்ப்பங்களில் ராஜினாமா செய்து விட்டுப் போவது கௌரவமாக இருந்திருக்கும். ஆனால் இல்லுமினாட்டியில் சில முக்கியப் பொறுப்புகளில் இருந்து விடுதலை தருவது மரணமாக மட்டுமே இருந்தது. அந்த முக்கியப் பொறுப்புகளில் உளவுத் துறையின் உபதலைவர் பொறுப்பும் அடங்கி இருந்தது.

உளவுத்துறையில் இருக்கும் ஒருசில ஆட்களை மட்டுமே இல்லுமினாட்டியின் உறுப்பினர்கள் அறிவார்கள். செயற்குழு உறுப்பினர்கள் மட்டுமே கூடுதலாகச் சிலரையும் அறிவார்கள். கணிசமான பகுதி உளவுத்துறை ஆட்கள் உளவுத்துறை தலைவர், உபதலைவருக்கு அடுத்தபடியாக இல்லுமினாட்டியின் தலைவர், உபதலைவர் மட்டுமே அறிவார்கள். அந்த அளவு இல்லுமினாட்டியிலும் உளவுத்துறை ரகசியமாகவே பெருமளவு இயங்கி வந்தது.

ஒரே ஊர்க்காரரும், முக்கிய செயற்குழு உறுப்பினருமாகிய வாங் வே சாலமனுக்கு உளவுத்துறைத் தலைமைப் பதவி கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்த்தவர். அவர் சாலமனிடம் முன்பிருந்தே நெருக்கமாக இருந்தவரும் கூட. எர்னெஸ்டோ இம்மானுவலை உளவுத்துறைத் தலைவராகத் தேர்ந்தெடுத்ததில் அவருக்கு உடன்பாடு இருக்கவில்லை. அவர்களைக் கலந்தாலோசிக்காததோடு, எர்னெஸ்டோ அப்படி முடிவு எடுத்ததற்குக் காரணத்தை செயற்குழுவிலும் தெரிவிக்கவும் இல்லை. அதில் வாங் வேக்கு அதிருப்தி இருந்தது. அதைத் தனியாக சாலமனிடமே சொல்லி அவர் மனதில் பெருமதிப்பைப் பெற்றிருந்தார். எர்னெஸ்டோ சீக்கிரத்தில் ராஜினாமா செய்து விட்டுப் போகும் உத்தேசத்தை முன்பே முக்கியமானவர்களிடம் தெரிவித்து இருந்ததால், அப்படிப் புதிய தலைமை வருமானால் சாலமனை தலைமைப் பதவிக்கு உயர்த்துவதாக அவரிடம் வாங் வே சொல்லியுமிருந்தார்.

வாங் வே இல்லுமினாட்டியின் சக்தி வாய்ந்த உறுப்பினர்களில் ஒருவர். செயற்குழு உறுப்பினரும் கூட. புதிய தலைமைக்குப் போட்டி என்று வருமானால் போட்டியிடவும் வெற்றி பெறவும் முடிந்த மனிதர் என்பதால் அவர் கொடுத்த வாக்கு சாலமனை முழுவதும் அவர் பக்கம் சாய்த்திருந்தது. எத்தனையோ ரகசியங்களை அதிரகசியமாக அவர் வாங் வேக்குத் தெரிவிப்பதை அன்றிலிருந்து வழக்கமாக வைத்திருந்தார். எந்த விதத்திலும் தனக்குக் கிடைக்கும் ரகசியங்களை வாங் வே வெளியே தெரிவிப்பவர் அல்ல என்பதை மிகவும் எச்சரிக்கை உணர்வுடைய சாலமன் எடை போட்டு வைத்து இருந்ததால் அதில் எந்த விதத் தயக்கமும் அவருக்கு இருக்கவில்லை.

இவர்களுக்கு இடையே நடந்த சந்திப்புகள் எப்போதும் வாங் வேயின் சகோதரரின் வீட்டில் தான் நடைபெறும். வாங் வே வருவதற்கு அரை மணி நேரம் முன்பே வந்து சாலமன் அங்கே காத்திருப்பார். வாங் வேயிடம் பேசுவதைப் பேசி விட்டு வாங் வே போய் அரை மணி நேரம் கழித்தே அவர் வெளியே செல்வார். இந்தச் சந்திப்புகள் வாங் வேயின் பாதுகாவலர்கள் கூட அறியாதபடியே நடந்தன.

சாலமனைப் பார்த்தவுடன் வாங் வே மரியாதையுடன் வணக்கம் தெரிவிக்க சாலமன் எழுந்து நின்று இரட்டிப்பு மரியாதையுடன் வணக்கம் தெரிவித்தார். இருவரும் அமர்ந்தவுடன் வாங் வே கேட்டார். “என்ன நடக்கிறது?”

சாலமன் மெல்லக் கேட்டார். “எதைக் கேட்கிறீர்கள்?”

“விஸ்வம் விஷயத்தில் கேட்கிறேன்” என்றார் வாங் வே.

“அவன் ம்யூனிக்கில் ஒரு வீட்டில் ஒளிந்திருப்பதைக் கண்டுபிடித்தோம். நாங்கள் அங்கே போவதற்குள் அவன் அங்கேயிருந்து தப்பி ஓடி விட்டான்...” என்று சொன்ன சாலமன் அந்த விவரங்களை முழுமையாகத் தெரிவித்தார்.

“அவன் கூட்டாளிகள் பற்றி எதாவது தகவல் தெரிந்ததா?”

“நம் உளவுத்துறை விஸ்வத்தை மிகத் துல்லியமாக எடை போட்டு வைத்திருக்கிறது. அவன் எப்படி சிந்திப்பான், என்ன செய்வான் என்றெல்லாம் கூட எங்களுக்கு இப்போது அத்துபடியாகி இருக்கிறது. ஆனால் அவன் கூட்டாளி பற்றி எங்களால் ஒன்றையும் கண்டுபிடிக்க முடியவில்லை”

“கூட்டாளி என்கிறீர்கள். அப்படியானால் ஒருவன் தான் கூட்டாளியா?”

“இம்மானுவல் அப்படித் தான் இப்போது யூகிக்கிறான். அவன் யூகம் பொய் ஆவது அபூர்வம்”

இம்மானுவலின் தலைமையைச் சகிக்க முடியாதவராக இருந்த போதும் அவன் திறமையை அங்கீகரிப்பதில் சாலமனுக்கு எந்தத் தயக்கமும் இல்லாததைக் கவனித்த வாங் வேக்கு சாலமன் மீது மதிப்பு கூடியது. அவர் கேட்டார். “உங்கள் தலைவன் வேறென்ன யூகித்து வைத்திருக்கிறான்?”

“விஸ்வத்தால் எர்னெஸ்டோவின் உயிருக்கு ஆபத்திருக்கிறது என்று யூகம் இல்லாமல் நம்பவே செய்கிறான்”

வாங் வேயின் உள்ளத்தில் எழுந்த உற்சாகத்தை அவரால் உடனடியாக முகத்தில் மறைக்க முடியவில்லை. ஒரு கணம் கழித்தே அவர் மறைத்துக் கொண்டாலும் சாலமன் மனது அதைப் பதிவு செய்து கொண்டது.

வாங் வே கேட்டார். “அந்த ஆபத்திலிருந்து அவரை அவன் எப்படிக் காப்பாற்றுவானாம்?”

சாலமன் சொன்னார். “அவன் அதை வெளிப்படுத்தவில்லை. ஆனால் அவன் அவரைக் காப்பாற்றக்கூடிய ஒருவனைக் கண்டுபிடித்து வைத்திருப்பது தெரிகிறது”

வாங் வே பரபரப்புடன் கேட்டார். “யாரவன்?”

சாலமன் சொன்னார். “அமானுஷ்யன்”

(தொடரும்)

என்.கணேசன்

இல்லுமினாட்டி 36

அமானுஷ்யன் என்ற பெயரை வாங் வே முன்பே கேள்விப்பட்டிருக்கிறார். அவர் முக்கியமான எதையும் லேசில் மறக்கிறவர் அல்ல என்பதால் அந்தப் பெயர் குறித்த விவரங்களை நினைவுபடுத்திக் கொள்ள முயன்றார். ஆனால் அவரால் சட்டென்று நினைவுபடுத்திக் கொள்ள முடியவில்லை.
அவர் யோசனையுடன் சொன்னார். “அந்தப் பெயரைக் கேள்விப்பட்டிருப்பதாய் ஞாபகம். ஆனால் எங்கே எப்போது என்று தெரியவில்லை.”

சாலமன் புன்னகையுடன் சொன்னார். “புத்தரின் மறுபிறவியாக மைத்ரேயன் என்றொரு குழந்தை திபெத்தில் பிறந்திருப்பதாக பேச்சு அடிபட்டது உங்களுக்கு நினைவிருக்கலாம்...”

வாங் வேக்கு இப்போது நினைவு வந்தது. புத்தரின் மறுபிறவிக் குழந்தை இருப்பதை உலகம் நம்பினால் அந்தக் குழந்தை மைத்ரேயனை வைத்து தலாய் லாமா திபெத்தின் சுதந்திரத்திற்கான போராட்டத்தைத் தீவிரப்படுத்தலாம், உலக அளவில் அதற்கு ஆதரவு பெருகலாம் என்று எண்ணி சீனாவிலிருந்து அந்தக் குழந்தையைக் கண்டுபிடித்துத் தீர்த்துக் கட்ட சில ஆண்டுகளுக்கு முன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. மைத்ரேயனாக இருக்குமோ என்ற சந்தேகத்தில் சில அப்பாவிக் குழந்தைகளும் கொல்லப்பட்டாலும் உண்மையான மைத்ரேயன் என்று தலாய் லாமா நம்பிய குழந்தையைத் திபெத்திலிருந்து அமானுஷ்யன் என்றப் பட்டப்பெயருடையவன் தான் காப்பாற்றிக் கொண்டு போனதைக் கேள்விப்பட்டிருக்கிறார். இப்போது சீன உளவுத்துறையின் தலைவனாக இருக்கும் லீ க்யாங் அப்போது சீன உளவுத்துறையின் உபதலைவனாக இருந்தான். அறிவிலும், திறமையிலும் இணையில்லாதவனாகக் கருதப்பட்ட லீ க்யாங் அந்தச் சமயத்தில் பல தீவிர முயற்சிகள் எடுத்தும் கூட அவனிடம் சிக்காமல் மைத்ரேயனை திபெத்திலிருந்து அழைத்துச் சென்றவன் என்பதாலேயே சில ஆண்டுகளுக்கு முன் சீன அதிகார வட்டத்தில் அமானுஷ்யன் பரபரப்புடன் பேசப்பட்டான். அதனாலேயே அவருக்கு அந்த வினோதப் பெயர் நினைவிருக்கிறது.

வாங் வே சொன்னார். “லீ க்யாங்கையே ஏமாற்றி திபெத்திற்குள் நுழைந்து அவனை ஏமாற்றி அந்தக் குழந்தையுடன் திபெத்திலிருந்து தப்பித்தும் போனவன் அந்த அமானுஷ்யன் அல்லவா?”

சாலமனின் புன்னகை விரிந்தது. "ஆமாம். சீன உளவுத் துறையின் சரித்திரத்திலேயே சர்வ வல்லமை உள்ள லீ க்யாங் தோற்றுப் போனது அந்த அமானுஷ்யன் ஒருவனிடம் தான்...”

வாங் வேக்கு லீ க்யாங்கை அவ்வளவாகப் பிடிக்காது. அவன் திமிர் பிடித்தவன் என்பதும், அவரைப் போன்றவர்களின் அதிகாரத்தைப் பொருட்படுத்த மறுப்பவன் என்பதுமே அவனை அவருக்குப் பிடிக்காமல் போகக் காரணமாக இருந்தது. அவன் இரண்டாண்டுகளுக்கு முன் சீன உளவுத்துறையின் தலைவனாக ஆக்கப்பட்ட போது அவர் அதைத் தடுக்கக்கூட முயன்றிருக்கிறார். 'அவன் மரியாதை தெரியாதவன்' என்று சூசகமாக சீனக்கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரிடம் அவர் தெரிவித்திருக்கிறார்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் வரண்ட குரலில் அப்போது சொன்னார். “உண்மை. ஆனால் அந்த அறிவு, திறமை, தேசபக்தி எல்லாம் மரியாதை தெரிந்த மற்ற ஆட்களிடம் இல்லையே”

அந்த அறிவு திறமை தேசபக்திக்கு எதிராகச் சொல்ல வாங் வேயிடம் எதுவும் இருக்கவில்லை என்பதால் அவர் சின்ன மனக்கசப்போடு பேசாமல் இருந்து விட்டார். இப்போது அந்த அறிவு, திறமைக்கும் மிஞ்சி ஜெயித்த ஒருவன் இல்லுமினாட்டியின் தலைவரின் உயிரைக் காப்பாற்ற கொண்டு வரப்படுவது அவருக்கு இரட்டிப்புக் கசப்பாக இருந்தது.

“ஏன் இல்லுமினாட்டியாலும் உங்களாலும் கூட அவரைக் காப்பாற்ற முடியாது என்று இம்மானுவல் நினைக்கிறானா என்ன?” வாங் வே முகம் சுளித்தபடி கேட்டார்.

“விஸ்வத்தின் சக்திகள், அவனுடைய பழைய சரித்திரம் எல்லாம் தான் அவனைப் பயமுறுத்துகிறது. இந்தியாவில் பலத்த காவல் இருக்கையிலேயே ஒரு மாநில முதலமைச்சரை விஸ்வம் கொன்று அதை மாரடைப்பு என்று நம்ப வைத்தவன். அவனிடமிருந்து அவரைக் காப்பாற்ற அதைவிடப் பலமடங்கு கடுமையான பாதுகாப்பு கொடுத்தே ஆக வேண்டும். எங்களால் தலைவருக்கு அப்படிப் பாதுகாப்பு தந்து அவரைக் காவல் காக்க முடியும். ஆனால் நெருக்கமான பலத்த காவல் அவருக்கு எப்போதும் பிடித்தமானதல்ல எல்லா நேரங்களிலும் அந்தப் பாதுகாப்போடு இருக்கத் தலைவர் சம்மதிக்க மாட்டார்....”

சாலமன் சொன்னது உண்மை. எர்னெஸ்டோ தன் பங்களாவில் கூட வெளியே இருக்கும் பலத்த காவலுக்கு ஆட்சேபணை சொல்பவர் அல்ல. ஆனால் வீட்டிற்குள் அப்படிக் காவலர்கள் இருப்பதை அவர் ரசிப்பவர் அல்ல. அதே போல் பயண சமயங்களிலும் மிக நெருக்கமாகக் காவலர்கள் நிற்பதை அவர் எப்போதும் அனுமதித்ததில்லை.

வாங் வே சந்தேகத்துடன் கேட்டார். “விஸ்வத்தின் சக்திகளுக்கு அந்த அமானுஷ்யன் இணையாவானா?” அவர் அறிந்த வரை விஸ்வத்தின் சக்திகளுக்கு யாருமே இணையானவர்கள் அல்ல.

சாலமன் சொன்னார். “அவனுடைய ஃபைலைப் படித்துப் பார்த்த போது எனக்கு அந்தச் சந்தேகம் வரவில்லை. அவன் காற்றைப் போல நகர முடிந்தவன் என்று சொல்கிறார்கள். ஒரு கண நேரத்தில் இங்கிருப்பவன் அடுத்த கணம் பல அடிகள் தள்ளி இருப்பான் என்றும், அவன் இங்கிருந்து அங்கே போவதை யாரும் கவனிக்கக்கூட முடியாத வேகத்தில் நகர்வான் என்று சொல்கிறார்கள். தலீபான் தீவிரவாதிகள் அவனைச் சைத்தான் என்று கூடச் சொல்வதுண்டாம்... அவனும் தன் வித்தைகளை இமயமலையிலும், திபெத்திலும் தான் கற்றுக் கொண்டவன் என்று சொல்கிறார்கள்... அவன் பயங்கரமான வர்மக் கலை ஏதோ கற்றவனாம். அவன் கையசைப்பது மட்டும் தான் தெரியும், எதிரி நரம்பு சுளுக்கி அசைய முடியாமல் துடிக்க வேண்டி வரும் என்கிறார்கள். அவன் வர்மக்கலையால் போடும் நரம்புச் சுளுக்கு முடிச்சுகளை அவிழ்க்க முடிந்த ஆட்கள் அவனைத் தவிர வேறு இல்லை என்கிறார்கள். ஆஸ்பத்திரிக்குப் போனாலும் அதைச் சரி செய்ய முடியாதாம். அப்படி எத்தனையோ பேர் கோமாவிலேயே இருந்து இறந்தும் போயிருக்கிறார்களாம்.”

வாங் வே திகைப்போடு சாலமனைப் பார்த்தார். “அந்தப் ஃபைல் நகலைக் கொண்டு வந்திருக்கிறீர்களா?”

சாலமன் தயக்கத்தோடு சொன்னார். “இல்லை. இம்மானுவல் அந்தப் ஃபைலை எனக்குப் படிக்கக் கொடுத்து பக்கத்திலேயே இருந்தான். அவனுக்குப் பதிலாக வேறு யாராவது இருந்திருந்தால் சுலபமாக அவர்களுக்குத் தெரியாதபடி காமிராவில் ரகசியமாகப் பதிவு செய்து கொண்டு வந்திருப்பேன். ஆனால் இம்மானுவலை ஏமாற்றுவது சுலபமல்ல. ஒரு தடவை அவனுக்குச் சந்தேகம் வந்து விட்டால் பின் நமக்கு எப்போதுமே ஆபத்து தான்...”

வாங் வே அதை உணர்ந்தே இருந்தார். அவர் சிறிது யோசித்து விட்டுக் கேட்டார். “கிழவர் இல்லுமினாட்டிக்கு வெளியே இருந்து ஒரு பாதுகாவலன் வரச் சம்மதித்து விட்டாரா?”

சாலமன் சொன்னார். “அப்படித்தான் தோன்றுகிறது. அந்த ஃபைலை இம்மானுவல் அவருக்கும் அனுப்பியிருக்கிறான் என்றே நினைக்கிறேன். முக்கியமாக அந்த ஃபைலைப் படித்த பின் அவருக்கு அமானுஷ்யனைப் பார்க்க ஆர்வம் கூடியிருக்கிறது போல் தோன்றுகிறது....”

வாங் வேக்கு நடப்பது எதுவும் பிடிக்கவில்லை. இல்லுமினாட்டி உறுப்பினர் அல்லாத ஒருவன் இல்லுமினாட்டிக் கூட்டத்திற்கு வந்து பேசியதையே அவரால் ஜீரணம் செய்ய முடிந்திருக்கவில்லை. எர்னென்ஸ்டோ க்ரிஷை அழைப்பதற்கு முன் செயற்குழு உறுப்பினர்களை அழைத்துப் பேசிய போது “இது வரை நாம் இல்லுமினாட்டி அல்லாத ஒருவனை நம் சபைக்கு வரவழைத்துப் பேசவிட்டுக் கேட்டதில்லை” என்று சுட்டிக் காட்டியவர் அவர் ஒருவர் தான். அப்போது எர்னெஸ்டோ அதைப் பொருட்படுத்தாமல் “அவசியம் வரும் போது அபூர்வமானதையும் சிலசமயம் செய்ய வேண்டியிருக்கிறது” என்று சொல்லி க்ரிஷை வரவழைத்தார். இப்போது இல்லுமினாட்டியைச் சாராத இன்னொருவனும் உள்ளே வர இருக்கிறான். இல்லுமினாட்டிக்கு அழிவு இது போன்ற செயல்களின் மூலமாகத் தான் வரும் போல் அவர் மனதுக்குப் பட்டது. 'எல்லாம் விஸ்வத்திடமிருந்து ஆரம்பித்தது. ஒழுங்காகப் போய்க் கொண்டிருந்த இயக்கத்தில் முதலில் அவன் நுழைந்தான். பின் க்ரிஷ்... இப்போது இந்த அமானுஷ்யன்...'

வாங் வே எரிச்சலோடு கேட்டார். “அந்த அமானுஷ்யன் எப்போது வருகிறானாம்?”

சாலமன் சொன்னார். “தெரியவில்லை. இல்லுமினாட்டி அழைத்தாலும் அவன் வரச் சம்மதிப்பானா என்று இம்மானுவலே சந்தேகப்படுகிறான்... அமானுஷ்யனை எப்படி வரவழைப்பது என்பதை அவன் தலைவரிடமே தீர்மானிக்க விட்டிருப்பதாகத் தெரிகிறது...”

கர்னீலியஸின் கார் வீட்டை நோக்கிச் செல்ல ஆரம்பித்தவுடன் அவரை யாரோ கண்காணித்துக் கொண்டிருப்பது போன்ற உணர்வு சுத்தமாக விலகி விட்டது. திரும்பவும் போகலாமா என்று அவர் ஒரு கணம் நினைத்தார். ஆனால் வங்கி நோக்கிச் செல்லும் போது மீண்டும் அந்தக் கண்காணிப்பு தொடரும் என்று உள்ளுணர்வு அவரை எச்சரித்தது. ஒரு வேளை அவர் வங்கி லாக்கரிலிருந்து அந்த ஆவணத்தை எடுத்துக் கொண்டு வந்தால் அந்த ஆவணம் அவரிடமிருந்து பறி போய் விடலாம் என்று கூடத் தோன்றியது. அதிலிருக்கும் தகவலை அறிய 'அந்த யாரோ'வும் ஆவலாக இருப்பது போல் தோன்றியது அது பிரமையாகவும் இருக்கலாம் என்றாலும் இப்போதைக்குத் தன் எச்சரிக்கையைத் தளர விடுவது கர்னீலியஸுக்கு உசிதமாகத் தோன்றவில்லை. இனி ஒரு நாள் அதைப் பார்த்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்தார்.

(தொடரும்)

என்.கணேசன்

இல்லுமினாட்டி 37

க்ரிஷ்
இல்லுமினாட்டி

தலைமையிடமிருந்து வந்திருந்த தகவல்களால் தன் மன அமைதியைத் தொலைத்திருந்தான். விஸ்வம் டேனியலின் உடம்புடன் ஜெர்மனியை விட்டு வெளியேறி விடாதபடி கடுமையான ஏற்பாடுகளைச் செய்திருப்பதைத் தெரிவித்திருந்தார்கள். அதனால் ஜெர்மனியிலிருந்தே விஸ்வம் செய்ய முடிந்ததைச் செய்யலாமே ஒழிய அங்கிருந்து வெளியேறி எதையும் செய்ய முடியாத அளவு ஜெர்மனியின் எல்லைகளில் கடுமையான காவல் இருக்கிறது என்ற தகவல் க்ரிஷுக்கு ஓரளவு திருப்தியைத் தந்தது. டேனியலின் உடல்வாகு, முகவாய்க்கட்டைக் கீறல் என்ற இரண்டையும் குறி வைத்து சோதனைகளைத் தீவிரப்படுத்தி இருந்தார்கள். ஆனால் விஸ்வத்தின் கூட்டாளி பற்றி இல்லுமினாட்டிக்கு எந்தத் தகவலும் இது வரை கிடைத்திருக்காததால் அந்தக் கூட்டாளி மூலம் விஸ்வம் எதையும் செய்யக் கூடும் என்று இல்லுமினாட்டியின் தலைவர் எர்னெஸ்டோ எச்சரித்திருந்தார். இப்போதைக்கு விஸ்வத்தின் முதல் எதிரி க்ரிஷ், அடுத்ததாக எர்னெஸ்டோ என்ற நிலைமை இருப்பதைத் தெரிவித்திருந்த எர்னென்ஸ்டோ க்ரிஷை நேரடியாக எதுவும் செய்ய முடியாத பட்சத்தில் அவன் குடும்பத்தை விஸ்வம் குறி வைக்கலாம் என்று தெரிவித்திருந்தார். அதில் தான் க்ரிஷ் தன் மன அமைதியை இழந்திருந்தான்.

முன்பே அவன் காதலி ஹரிணியைக் கடத்திச் சென்றவன் விஸ்வம். தெய்வாதீனமாக ஒரு முறை அவளைக் காப்பாற்ற முடிந்தது. அடுத்தபடியாக விஸ்வம் தன் மர்மக்கூட்டாளி மூலம் யாரைக் குறி வைக்கிறானோ தெரியவில்லை. க்ரிஷின் தந்தை கமலக்கண்ணன் மாநில முதலமைச்சர். சகோதரன் உதய் பாராளுமன்ற உறுப்பினர். இருவரும் எப்போதுமே நல்ல பாதுகாப்புடன் இருப்பவர்கள். ஆனால் ஹரிணியும், அவன் தாய் பத்மாவதியும் அப்படியல்ல. ஹரிணியாவது சற்று எச்சரிக்கையாக இருக்கக்கூடியவள். ஆனால் பத்மாவதி அதிலும் போதாது. அவள் மூத்த மகன் உதய்க்குப் பெண் பார்க்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கியிருக்கிறாள். ஒரே நாளில் இரண்டு மகன்களின் திருமணத்தையும் முடித்து விட்டால் நல்லது என்று எண்ணியிருக்கும் அவள் மூத்த மகனின் ஜாதகப் பிரதிகளை எங்கே போனாலும் கொண்டு போகிறாள். யாராவது எங்காவது தகுந்த பெண் இருப்பதாகச் சொன்னால் அவர்களிடம் மகன் ஜாதகத்தைக் கொடுத்து பெண் ஜாதகத்தை வாங்குவது இப்போது வாடிக்கையாகி விட்டிருக்கிறது. இந்த விஷயத்தில் தெரிந்தவர், தெரியாதவர் என்ற பாகுபாடு கூட அவள் பார்ப்பதில்லை. இந்தப் பலவீனத்தை விஸ்வம் நன்றாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்று நினைக்கையில் க்ரிஷுக்கு மனம் பதைத்தது.

குடும்பத்தாரிடம் முழுத் தகவல்களையும் அவனால் சொல்ல முடியாது. அதே நேரத்தில் எச்சரிக்காமலும் இருக்க முடியாது. நிறைய யோசித்து ஆபத்து ஏற்படலாம் என்கிற நிலைமையை உதயிடமும், ஹரிணியிடமுமாவது தெரிவிக்க க்ரிஷ் முடிவு செய்து இருவரையும் தனியாக அழைத்துப் பேசினான். இறந்து போனதாய் அவர்கள் நினைத்த விஸ்வம் கூடு விட்டு கூடு பாய்ந்திருப்பதாகவும், அவனுக்குக் கூட்டாளி ஒருவன் இருப்பதாகத் தெரிய வந்திருப்பதாகவும் அன்பின் காரணமாக இல்லுமினாட்டி தகவல் அனுப்பி முக்கியமாகக் குடும்பத்தினரை எச்சரிக்கையாக இருக்கும்படி அறிவுறுத்தியதாக அவன் தெரிவித்தான்.

ஹரிணி கவலையுடன் அவனைப் பார்த்தாள். உதயோ சிரித்து விட்டான். "டேய் கற்பனைக்கும் ஒரு லிமிட் இருக்குடா. இந்தக் காலத்துல இப்படி எல்லாமுமா நடக்கும்."

க்ரிஷ் அண்ணனை முறைத்தான். உடனே உதயின் சிரிப்பு குறைந்தது. தம்பியைத் தைரியப்படுத்தும் தோரணையில் அவன் சொன்னான். "சரி உண்மைன்னே வெச்சுக்குவோம். நடக்கறது நம்ம ஆட்சிடா. பாதுகாப்பு விஷயத்துல பயமே தேவையில்லை."

க்ரிஷ் சொன்னான். "விஸ்வம் கொன்னப்ப ராஜதுரையும் முதலமைச்சர் தான்"

உதய் மெல்ல நிலைமையின் தீவிரத்தை உணர்ந்தான். க்ரிஷ் சொன்னான். "முக்கியமாய் ஹரிணியும், நம் அம்மாவும் ஜாக்கிரதையாய் இருக்கிறது நல்லதுன்னு தோணுது..."

ஹரிணி புரிதலுடன் தலையசைத்தாள். உதய் சொன்னான். "கிழவியைக் கட்டுப்படுத்தறது தான் கஷ்டம். ஜாதகக்கட்டை கைல வெச்சுகிட்டு அது தினமும் பண்ற அலப்பறை தாங்கலை... யார் யாரோ வந்து பாக்கறாங்க. கிழவியும் எங்கெங்கெயோ போகுது. நானும் பல தடவை சொல்லிப் பார்த்துட்டேன், அம்மா ஒரு முதலமைச்சரோட பொண்டாட்டியா கௌரவமா நடந்துக்கப் பழகிக்கோன்னு... சொன்னா கேக்கணுமே... பேசாம கிழவி காலை முறிச்சுப் போட்டுடறது தான் நல்லது... அப்ப தான் வீட்டோடயே இருக்கும்"

தாயிற்கும், மகனுக்கும் இடையே இருக்கும் நட்புடன் கூடிய அதீத பாசத்தை அறிந்திருந்த ஹரிணி புன்னகையுடன் சொன்னாள். "பாவம் அத்தை உங்களுக்கு ஒரு நல்ல பொண்ணு கிடைக்கணும்னு தான் அப்படி அலையறாங்க..."

உதய் சொன்னான். "அலைஞ்சு என்ன பிரயோஜனம். அது போடற கண்டிஷனை எல்லாம் பாத்தா எனக்கு நல்ல அழகான பொண்ணு அமையறது கஷ்டம் தான்னு ஒரு புரோக்கர் சொல்றான். ஆனா அவன் சொன்னான்கிறத தயவு செஞ்சு கிழவி காதுல போட வேண்டாம்னு வேற கெஞ்சறான். கிழவி வெளியவும் கொஞ்சம் பேரை இப்படி பயமுறுத்தி வெச்சிருக்குது..."

ஹரிணி வாய்விட்டுச் சிரித்தாள். "அநியாயத்துக்கு அத்தையை இப்படி எல்லாம் சொல்லாதீங்க..."

க்ரிஷ் இருக்கின்ற நிலைமையின் தீவிரம் புரியாமல் தமாஷ் பேசும் இரண்டு பேரையும் முறைத்துப் பார்த்தான். உதய் ஹரிணியிடம் கேட்டான். "உனக்குக் காதலிக்க இந்த சிடுமூஞ்சியைத் தவிர வேற ஆளே கிடைக்கலியா...." பின் தம்பி முகம் போன போக்கைப் பார்த்து அவன் தோளைத் தட்டிக் கொடுத்துச் சொன்னான். "சரி சரிடா... புரியுது... அம்மா பாதுகாப்புக்கு நான் ஏற்பாடு பண்றேன். நீ கவலைப்படாதே...."

க்ரிஷ் பாதி நிம்மதியடைந்தான்.

விஸ்வம் அந்த ஓவியங்களைக் காட்டி "என்ன இதெல்லாம்? நாம் ஏன் இங்கே வந்திருக்கிறோம்?" என்று கேட்டவுடன் புரியாதது போல் ஜிப்ஸி கேட்டான். "நீ எதைக் கேட்கிறாய்?"

விஸ்வம் ஒரு ஓவியத்தில் இருந்த இல்லுமினாட்டி சின்னத்தைக் காண்பித்து விட்டுச் சொன்னான். "இதைத் தான் கேட்கிறேன்"

ஜிப்ஸி முகத்தில் புன்னகை படர்ந்தது. "கண்டிப்பாய் நீ கண்டுபிடிப்பாய் என்று தெரியும். ஆனால் வந்த ஒரு நாளுக்குள்ளாகவே நீ கண்டுபிடிப்பாய் என்று நான் எதிர்பார்க்கவில்லை. உண்மையில் உனக்கு நிகர் நீ தான்"
விஸ்வம் அந்தப் பாராட்டில் புளங்காகிதம் அடைந்து விடாமல் 'நான் கேட்டதற்கு என்ன பதில்?' என்பது போல ஜிப்ஸியைப் பார்த்து நின்றான்.

ஜிப்ஸி சொன்னான். "நாம் ஒளிந்திருக்க இப்போதைக்கு இதை விட நல்ல வேறு பாதுகாப்பான இடம் நமக்குக் கிடைக்காது. அதைக் கணக்குப் போட்டுத் தான் இங்கே உன்னைக் கூட்டிக் கொண்டு வந்தேன். ஆனால் இங்கே ஒவ்வொரு ஓவியத்திலும் இல்லுமினாட்டி சின்னம் இப்படி மறைந்திருக்கும் என்பதை நான் எதிர்பார்த்திருக்கவில்லை... வந்த பிறகு தான் தெரிந்தது..."

விஸ்வம் அமைதியாகக் கேட்டான். "சரி இதன் அர்த்தம் என்ன?"

ஜிப்ஸி சொன்னான். "அதை நாம் தான் இங்கே கண்டுபிடிக்க வேண்டும். கண்டிப்பாக ஏதாவது காரணம் இருக்கும். விதி காரணம் இல்லாமல் நம்மை இங்கே இழுத்து வந்திருக்காது..."

விஸ்வம் முகம் இறுகியது. "விதி இழுக்கிற இடங்களுக்கு எல்லாம் போவதில் எனக்கு உடன்பாடு கிடையாது. நான் இழுக்கிற இடத்திற்கு விதி வந்து சேர வேண்டும் என்று நினைக்கிறவன் நான்... என் வாழ்க்கைக்கான பொறுப்பை விதிவசம் ஒப்படைக்க எனக்கு விருப்பம் இல்லை"

ஜிப்ஸி சொன்னான். "நம் விருப்பப்படியே எல்லாம் நடந்து விடுவதில்லை. வாழ்க்கை விதியும், நாமும் சேர்ந்து விளையாடுகிற ஒரு ஆட்டம் தான். பாதி விதி ஆடுகிறது. மீதி நாம் ஆடுகிறோம். இதில் தவிர்க்க முடியாத அம்சம் ஒருவர் விட்ட இடத்தில் தான் இன்னொருவர் தொடர வேண்டி இருக்கிறது என்பது தான். அதனால் வாழ்க்கை முழுவதுமே விதி ஆடி விடுவதில்லை ஒரு காயை நகர்த்தி விட்டு நீ ஆடவும் வாய்ப்பு தருகிறது. நீ தீர்மானித்து ஆடி முடித்த பின் அதுவும் சிலதைத் தீர்மானிக்கும். அதை நீ மறுக்க முடியாது"

விஸ்வம் கசப்புடன் சொன்னான். "ஆனால் விதி சுதந்திரமாக விளையாடுகிறது. எனக்கு அந்தச் சுதந்திரம் இல்லை. என்னைக் கட்டிப் போட்டிருக்கிறது"

ஜிப்ஸி கேட்டான். "எப்படிச் சொல்கிறாய்?"

"இந்த உடம்பே என்னைக் கட்டிப் போட்டதற்கு அடையாளம் தான். இதில் குடியேறியதில் இருந்து இதன் இம்சை தாங்கவில்லை. என் திறமைகளை என்னால் உபயோகப்படுத்த முடியவில்லை. இது போதை போதை என்று அசுரப்பசியோடு கத்துகிறது. சில நேரங்களில் மனதைக் குவிப்பது கூட கஷ்டத்தின் உச்சமாக இருக்கிறது. மூளையில் எல்லா ப்ரோகிராம்களையும் வைத்திருக்கிறேன். ஆனால் சிறிய முயற்சிக்குக் கூடப் பிரம்மப் பிரயத்தனம் செய்ய வேண்டி இருக்கிறது. கஷ்டப்பட்டு நேற்று ஒரு சக்தியை முயன்றேன். சின்ன முயற்சியில் நான் நான்கு நாள் சேர்த்து வைத்த சக்தி முழுவதும் தீர்ந்து போய் விட்டது. மறுபடி பலமிழந்து நிற்கிறேன்."

ஜிப்ஸி சொன்னான். "அரை மணி நேரம் கூடப் போதையை விட்டு இருக்க முடியாத உடம்பு நான்கு நாள் போதை இல்லாமல் தாக்குப்பிடிக்கும்படி செய்திருக்கிறாய். டேனியல் இந்த உடலைச் சாக வைத்திருக்கிறான். நீ இதைப் பிழைக்க வைத்திருக்கிறாய். இதில் எல்லாம் நான் உன் பலத்தைத் தான் பார்க்கிறேன்..."

சிறிய வெற்றிகளில் நிறைவடைவதை என்றோ நிறுத்தியிருந்த விஸ்வம் ஜிப்ஸி சொல்வதில் மனச்சமாதானம் அடைய மறுத்து உறுதியாகச் சொன்னான். "எனக்கு இந்தச் சர்ச்சின் வரலாறு தெரிய வேண்டும். தயவு செய்து உண்மையைச் சொல்"

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, February 27, 2020

இல்லுமினாட்டி 38

க்ரிஷுக்குப் போன் செய்து எர்னெஸ்டோ சொன்னார். "க்ரிஷ். நீ செய்து கொண்டிருக்கும் எல்லா வேலையையும் விட்டு விட்டு உனக்கு அனுப்பி இருக்கும் லிங்கில் இருக்கும் தகவல்களைப் படி. ஒன்றரை மணி நேரம் தான் அது உனக்குப் படிக்கக் கிடைக்கும். அதன் பின் படிக்க அந்த லிங்க் வேலை செய்யாது. அதை டவுன்லோடு செய்யவும் முடியாது. நான் ஒன்றரை மணி நேரம் கழித்துக் கூப்பிடுகிறேன். அதற்குள் நீ படித்து முடி."

க்ரிஷுக்குத் தலைகால் புரியவில்லை. லாப் டாப்பை எடுத்து மெயிலைப் பார்த்த போது அமானுஷ்யன் என்றொரு லிங்க் அனுப்பப்பட்டிருந்தது. கடிகாரத்தைப் பார்த்து விட்டு அதுவழிச் சென்று படிக்க ஆரம்பித்தான். நேரம் போனதே தெரியவில்லை. எல்லாம் பிரமிப்பாக இருந்தது. இப்படியும் ஒரு மனிதன் இருக்க முடியுமா என்று தோன்றியது. அவன் விஸ்வத்திற்கு அடுத்தபடியாக பிரமித்த மனிதன் இந்த அமானுஷ்யன் தான். க்ரிஷ் கடிகாரத்தைப் பார்த்தான். ஒரு மணி 28 நிமிடம் ஆகியிருந்தது. அவனுக்குப் படித்து முடிக்க இவ்வளவு நேரம் தான் ஆகும் என்று இல்லுமினாட்டி அனுமானிக்க முடிந்தது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவனைப் பற்றி இல்லுமினாட்டி எந்த அளவு தெரிந்து வைத்திருக்கிறது என்று வியந்தான். இரண்டு நிமிடத்தில் லாப்டாப் ஸ்கிரீன் வெறுமையாகியது.

அடுத்த நிமிடம் எர்னெஸ்டோ போன் செய்தார். "என்ன க்ரிஷ் படித்து முடித்து விட்டாயா?" அந்த ஆளைப் பற்றி என்ன நினைக்கிறாய்?"

க்ரிஷ் பிரமிப்பு குறையாமல் சொன்னான். "விஸ்வத்தைப் போலவே இந்த ஆளும் என்னைப் பிரமிக்க வைக்கிறார் தலைவரே"

எர்னெஸ்டோ புன்னகைத்தார். அமானுஷ்யன் குறித்த முழுக்கதையும் அவனுக்கு அவர்கள் அனுப்பி வைத்திருக்கவில்லை. முக்கிய சாராம்சத்தையும், சில முக்கிய இடங்களில் மட்டும் விரிவான நிகழ்வுகளையும் அவனுக்கு அனுப்பி வைத்திருந்தார்கள். அதைப் படித்து அவன் பிரமிப்பு அடைந்தது அவரை ஆச்சரியப்படுத்தவில்லை. அமானுஷ்யனைச் சொல்லும் போது விஸ்வத்தையும் அவன் மறக்காமல் சொன்னது தான் அவரை ஆச்சரியப்படுத்தியது. விஸ்வம், அமானுஷ்யன் வரிசையில் க்ரிஷும் சேர்க்க வேண்டியவனே என்று தோன்றியது.

எர்னெஸ்டோ சொன்னார். "விஸ்வம் தன்னுடைய பழைய மன உறுதியுடன் முயன்றால் ஓரளவு சக்திகளை அந்தப் போதை மனிதனின் உடலில் இருந்து கொண்டும் ஆறு மாதத்திற்குள் மீட்க முடியும் என்று கணக்குப் போடுகிறோம். அவனுடைய முதல் எதிரியாக நீ இருந்தாலும், உடனடியாக முடித்துக் கட்ட வேண்டியவனாக என்னைத் தான் நினைப்பான் என்று தோன்றுகிறது. பாதுகாப்பு விஷயத்தில் இல்லுமினாட்டியில் சின்னப் பலவீனம் கூட இருக்காது என்றாலும் விஸ்வம் உங்கள் நாட்டின் ரகசிய ஆன்மிக இயக்க குருவையும், உங்கள் மாநில முதலமைச்சரையும் கொன்ற விதம் என் பாதுகாப்பு அதிகாரிகளைப் பயமுறுத்துகிறது. அவன் சக்திகளை வேகமாகப் பயன்படுத்துபவன் என்பதால் உச்சக்கட்டப் பாதுகாப்பை என்னேரமும் எனக்குத் தந்தாக வேண்டியிருக்கும் என்று சொல்கிறார்கள். அந்த விதமான பாதுகாப்பு ஜெயில் வாசம் போலத்தான் என்பதால் நான் அது தொடர்ந்து இருக்க எப்போதும் அனுமதிப்பதில்லை. ஆனால் இப்போது நம் உளவுத்துறை என்னை மூன்று மாதத்திற்குள் இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கச் சொல்கிறது. உச்சக்கட்டப் பாதுகாப்பு அல்லது அமானுஷ்யன் போன்ற ஒருவன் என் அருகிலிருக்கும் பாதுகாப்பு..."

அவர் சில வினாடிகள் நிறுத்தி விட்டுத் தொடர்ந்தார். "க்ரிஷ். நான் சாகப் பயப்படவில்லை. நான் எல்லாச் சுகங்களையும் அனுபவித்தாகி விட்டது. இனிப் புதிதாக ஆசைப்பட்டுக் கிடைக்க எந்தப் பெரிய விஷயமும் பாக்கியில்லை. உடலில் ஒவ்வொரு அங்கமும் முந்தைய பலத்தில் இல்லை. பல விஷயங்களில் சலிப்பு தோன்ற ஆரம்பித்து விட்டது. இந்த நிலைமையில் மரணம் எனக்குப் பெரிய விடுதலை தான். ஆனால் நான் இத்தனை காலம் தலைமை வகித்த இல்லுமினாட்டியின் அழிவையோ, அது உலகத்தை அழிப்பதையோ பார்க்க விரும்பவில்லை. அப்படி ஒரு நிலைமையில் இல்லுமினாட்டியை விட்டு விட்டுச் சாகவும் நான் விரும்பவில்லை. தகுந்த ஒருவன் கையில் இல்லுமினாட்டியை ஒப்படைத்து விட்டு, ஒரு நல்ல பாதுகாப்பான சூழலில் இல்லுமினாட்டியையும், உலகத்தையும் விட்டுப் போக விரும்புகிறேன். அதனால் அந்த அமானுஷ்யன் பாதுகாவலை நாடச் சம்மதம் தெரிவித்திருக்கிறேன். அவன் வரலாற்றைப் படித்த பிறகு, சாவதற்கு முன் அவனைப் போன்ற ஒரு ஆளை நேரில் பார்த்துப் பழகி விட்டுச் சாகலாமே என்ற ஆவல் தோன்ற ஆரம்பித்திருக்கிறது...."

அவன் கதையைப் படித்த யாருக்கும் அப்படித் தோன்றாமல் இருக்காது என்று க்ரிஷ் நினைத்தான். பெயரும் அவனுக்கு ஏற்ற மாதிரி தான் வைத்திருக்கிறார்கள். அமானுஷ்யன்!

"நல்லது தலைவரே. அப்படியே செய்யுங்கள்" என்றான் க்ரிஷ்.

எர்னெஸ்டோ சொன்னார். "ஆனால் அவன் இல்லுமினாட்டியின் அதிகாரத்தையோ, பலத்தையோ, பணத்தையோ காண்பித்து வரவழைக்க முடிந்தவன் அல்ல. அவன் மறைவில் இருந்து வெளியே வருவதில் அவனுக்கு நிறைய ஆபத்தும் இருக்கிறது. தலிபான் தீவிரவாதிகள் அவனைப் பழி தீர்க்கத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் அவன் குடும்பத்தினரும் அவன் புதிய வேலைகளை ஏற்றுக் கொள்வதை ஆட்சேபிக்கிறார்கள். அதையும் மீறி அவனை வரவழைக்க வேண்டுமென்றால் அவனிடம் தர்மம், நியாயம், மனிதம் என்று நீ பேசுவது போல் பேசினால் தான் எடுபடும்... இதற்கு முன் அவனிடம் உதவி பெற்றவர்களும் அப்படிப் பேசித்தான் அவனிடம் உதவி வாங்கி இருக்கிறார்கள். அதனால் நீ போய்ப் பேசினால் தான் வேலை முடியும் என்று நினைக்கிறோம்..."

க்ரிஷ் தயக்கத்துடன் கேட்டான். "என்னால் முடியும் என்று நினைக்கிறீர்களா?"

எர்னெஸ்டோ சொன்னார். "இல்லுமினாட்டியில் பேசியே ஜெயித்தவன் நீ. உனக்கு ஏன் சந்தேகம் வருகிறது?"

இல்லுமினாட்டியில் பேசி வென்றதில் தன் பங்கை விட மாஸ்டரின் பங்கும், அகஸ்டின் துறவியின் பங்கும் அதிகம் என்று இப்போதும் க்ரிஷ் நினைத்தான். அவனை அதிகம் சிந்திக்க விடாமல் எர்னெஸ்டோ சொன்னார். "அவன் தற்போதும் இருக்கும் விலாசத்தை நான் உனக்கு அனுப்புகிறேன். நீ உடனடியாகச் சென்று அவனைச் சந்திக்க வேண்டும்..."

"இந்தச் சர்ச்சின் வரலாறு எனக்குத் தெரிய வேண்டும்" என்று சொன்ன விஸ்வத்திடம் ஜிப்ஸி சொன்னான். "இந்த சர்ச்சுக்குப் பெரிய வரலாறு எதுவும் கிடையாது..."

"சரி சிறிய வரலாறானாலும் பரவாயில்லை. சொல்" விஸ்வம் அவனை விடுவதாக இல்லை.

ஜிப்ஸி சொன்னான். "பழங்காலத்தில் இது ஃப்ரீமேசனின் கோயிலாக இருந்தது. இன்று இல்லுமினாட்டியின் கோயில்களாகச் சொல்லப்படும் முக்கால்வாசிக் கோயில்கள் ஃப்ரீமேசன் கோயில்கள் தான் என்பது உனக்குத் தெரிந்திருக்கும். ஃப்ரீமேசன் இல்லுமினாட்டி இரண்டுமே கிட்டத்தட்ட ஒரே கொள்கை, சித்தாந்தம், நோக்கம் கொண்டது. பிற்காலத்தில் ஒன்றாகவே இணைந்து இல்லுமினாட்டி என்று அழைக்கப்பட்டாலும் ஆரம்பத்தில் வேறு வேறாகத் தான் இருந்தன. அந்தக் காலத்தில் இந்தக் கோயில் இங்கே மிகவும் பிரபலமாக இருந்தது. ஜெர்மானிய தத்துவ மேதை கதே ஃப்ரீமேசனாக இருந்தவர் என்றும், அவருடைய "Masonic Lodge" என்ற பிரபல கவிதையை இந்தக் கோயிலில் தான் எழுதினார் என்றும் சொல்கிறார்கள். இங்கே நிறைய ரகசியச் சடங்குகள் ஹிட்லரின் ஆட்சிக்காலத்திற்கு முன்பு வரை நடந்திருக்கிறது. ஹிட்லர் தனக்குப் புரியாததையும், தன்னைப் பயமுறுத்துவதையும் ஒழித்துக்கட்டியே தீர்வது என்று செயல்பட்டதால் பாதிக்கப்பட்டதில் இந்தக் கோயிலும் ஒன்று. இல்லுமினாட்டிக் கோயில் சர்ச் ஆக்கப்பட்டது. முன்பு இல்லுமினாட்டி ஓவியங்கள் வரையப்பட்டிருந்த சுவர்களில் பைபிள் நிகழ்வுகள் வரையப்பட்டன. வரைந்த ஓவியன் இல்லுமினாட்டிக்கு ஆதரவாளனாக இருந்திருக்க வேண்டும். பழைய ஓவியங்களின் மேல் புதிய ஓவியங்கள் வரைந்த அவன் முன்பிருந்த ஓவியங்களின் பிரமிடுக்குள் கண் இல்லுமினாட்டி சின்னத்தை மட்டும் முழுவதுமாக மறைக்காமல் லேசாக்கி புதிய ஓவியத்தில் கலந்திருப்பது போல் ஆக்கி விட்டான். அதைத்தான் நீ பார்த்திருக்கிறாய்."

ஜிப்ஸி சொன்னதைக் கூர்ந்து கவனித்துக் கேட்ட விஸ்வம் "இப்போது இந்த சர்ச்சில் வழிபாடும் நடப்பதில்லை. யேசு கிறிஸ்துவின் சிலை உடைந்திருக்கிறது. ஏன்?"

"இந்த சர்ச் ஆரம்பத்தில் ஹிட்லருக்கு நெருக்கமான ஜெர்மன் எவாஞ்சலிகல் சர்ச் ஆதிக்கத்தில் வந்தது. சில காலம் அவர்கள் வழிபாடு நடத்தினார்கள். பின் இது ரோமன் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் கட்டுப்பாட்டில் வந்தது. அவர்களும் இங்கே சில காலம் வழிபாடு நடத்தினார்கள். பிறகு ப்ராட்டஸ்டண்ட் கிறிஸ்தவர்கள் இந்த சர்ச்சை எடுத்துக் கொண்டார்கள். அவர்களும் சில காலம் தான் வழிபாடு நடத்த முடிந்தது. யாரும் தொடர்ந்து இங்கே வழிபாட்டை நடத்த விடாதபடி ஏதாவது பிரச்னைகள், விபத்துகள் எல்லாம் நடந்து கொண்டே இருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக இந்தப் பகுதியில் இருந்த கிறிஸ்தவர்கள் பலரும் இடம் மாறினார்கள். கடைசியில் யேசு சிலையும் உடைந்து போனதால் ஏதோ அபசகுனமாக நினைத்து மீதமிருந்த கிறிஸ்தவர்களும் இங்கே வருவதை நிறுத்தி விட்டார்கள். அதிலிருந்து இந்த சர்ச் கேட்பாரில்லாமல் கிடக்கிறது..."

ஜிப்ஸி சொல்லி முடித்தவுடன் விஸ்வம் சுற்றிலும் உள்ள ஓவியங்களை ஒரு முறை பார்த்தான். எல்லா ஓவியங்களிலும் மற்ற பகுதிகள் மங்கி பிரமிடுக்குள் கண் சின்னம் மட்டுமே ஒரு கணம் அவன் கண்களுக்குத் தெரிந்தது. ஏதோ இங்கே சரியில்லை என்று அவனுடைய உள்ளுணர்வு சொன்னது.

(தொடரும்)

என்.கணேசன்

இல்லுமினாட்டி 39

விஸ்வம் ஜிப்ஸியிடம் கேட்டான். "இந்த இடம் இல்லுமினாட்டியின் கோயிலாக ஒரு காலத்தில் இருந்தது என்கிறாய். சர்ச் ஆகி இப்போது சில காலமாய் வழிபாடு நடத்தப்படாமல் இருக்கிறது என்கிறாய். ஜெர்மனிக்குள் இல்லுமினாட்டி ஆட்கள் நம்மைத் தேடுவதாக இருந்தால் இந்த மாதிரியான இடங்களுக்குத் தானே முதலில் வருவார்கள்?. பின் எப்படி ஒளிந்து கொள்ள இதை விட நல்லப் பாதுகாப்பான இடம் கிடைக்காது என்கிறாய்?"

ஜிப்ஸி சொன்னான். "உண்மை தான். ஆனால் அவர்கள் இங்கே வந்து பார்த்தாலும் நாம் அவர்களுக்குப் பார்க்கக் கிடைக்க மாட்டோம்..."

'எப்படிச் சொல்கிறாய்?' என்பது போல விஸ்வம் பார்த்தான். ஜிப்ஸி அவனிடம் சொன்னான். "இங்கே ஒரு ரகசியப் பாதாள அறை இருக்கிறது. அது இல்லுமினாட்டிக்கே தெரியாது...."

'இதென்ன புதுக்கதை' என்று விஸ்வம் நினைத்தான். எல்லாவற்றையும் ஒரேயடியாகச் சொல்லாமல் தவணை முறையில் ஜிப்ஸி சொல்வது அவனுக்கு எரிச்சலைத் தந்தது. அவன் எண்ண ஓட்டத்தைப் புரிந்து கொண்டது போல் ஜிப்ஸி சொன்னான். "நீ ஏன் கோபப்படுகிறாய்? கோபம் சக்தி விரயம் அல்லவா? ஒவ்வொரு சக்தியையும் சேமித்து வைக்க வேண்டிய நிலைமையில் இருக்கும் நீ பொறுமை இழக்கலாமா?"

விஸ்வம் சில வினாடிகள் கண்களை மூடித் திறந்து புன்னகைத்தான். "நீ சொல்வது உண்மை. உடல் பலவீனமாக இருக்கும் போது மனமும் பலவீனம் ஆகி பொறுமையும் போய் விடுகிறது. பொறுமை இழந்து சக்திகளை விரயம் செய்ய முடிந்த அளவுக்கு நான் மேலான நிலைமையில் இல்லை. இனி எச்சரிக்கையாக இருக்கிறேன். சரி நீ சொல். இல்லுமினாட்டியின் கோயிலில் இல்லுமினாட்டிக்கே தெரியாத ஒரு ரகசியப் பாதாள அறை இருப்பது எப்படி?"

'ஏன் கோபப்படுகிறாய்?' என்று கேட்டால் கூடுதலாய் கோபப்படும் சாதாரண மனிதனாய் இல்லாமல் சொன்னதை விஸ்வம் ஏற்றுக் கொண்ட விதத்தை மெச்சுவது போல் பார்த்த ஜிப்ஸி தொடர்ந்தான். "நான் முன்பு இது ஃப்ரீமேசனின் கோயிலாக இருந்தது, அவர்கள் ரகசியச் சடங்குகள் இங்கே அதிகம் நடந்தது என்று சொன்னேனில்லையா. அவர்களில் உயர்வான நிலையை எட்டியவர்கள் விரல் விட்டு எண்ணும் அளவில் இருந்தார்கள். அவர்கள் சில அதிரகசியச் சடங்குகளில் ஈடுபட்டார்கள். அதை மற்ற சாதாரண உறுப்பினர்களுக்குத் தெரியும்படி செய்வதில் அவர்களுக்கு உடன்பாடு இருக்கவில்லை. அதனால் அந்தக் கோயிலைப் புனரமைத்த போது அதிரகசியச் சடங்குகள் செய்வதற்கென்று அவர்கள் ஒரு ரகசியப் பாதாள அறையைச் சேர்த்துக் கட்டினார்கள். அந்தச் சடங்குகள் பெரும்பாலும் நள்ளிரவிலிருந்து அதிகாலைக்குள் இந்த ரகசியப் பாதாள அறையில் நடந்தன. அந்தச் சடங்குகள் பெரும்பாலும் நள்ளிரவிலிருந்து அதிகாலைக்குள் இந்த ரகசியப் பாதாள அறையில் நடந்தன. ஃப்ரீமேசனும் இல்லுமினாட்டியும் இணைந்த பிறகு ஒரு முறை கூட இந்த ரகசியப் பாதாள அறை பயன்படுத்தப்படவில்லை. சர்ச் ஆக இது மாறிய பிறகும் ரகசியப் பாதாள அறை யாருக்கும் தெரிய வாய்ப்பு வரவில்லை. இல்லுமினாட்டி தங்களுடைய கோயில்களை எல்லாம் ஏதாவது வழியில் தங்களுக்கு வேண்டியபடி நூலகமாகவோ, அருங்காட்சியகமாகவோ, ஏதாவது அலுவலகமாகவோ மாற்றி வைத்து இப்போதும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார்கள். ஆனால் சர்ச் ஆகி விட்ட இந்த இல்லுமினாட்டிக் கோயிலைத் திரும்பத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர அவர்களும் முயற்சி எடுக்கவில்லை..."

'இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?' என்று ஜிப்ஸியை விஸ்வம் கேட்க நினைத்தாலும் கேட்காமல் விட்டு விட்டான். ஜிப்ஸி வெளிப்படையாகப் பதில் சொல்வான் என்று அவனுக்குத் தோன்றவில்லை.

ஜிப்ஸி "வா. பாதாள அறையைப் பார்ப்போம்" என்று சொல்லி விட்டு மேடைப்பகுதிக்குப் போக விஸ்வம் அவனைப் பின் தொடர்ந்தான். ஜிப்ஸி உடைந்த ஏசு கிறிஸ்து சிலைக்குப் பின் இருக்கும் 'லாஸ்ட் சப்பர்' ஓவியத்தின் கீழே வலதுபுற மூலையில் தடவினான். சிறிய துளை தெரிந்தது. அதனுள் விரலை விட்டு சற்று சிரமப்பட்டு ஒரு பித்தளைச் சாவியை வெளியே எடுத்தான், பின் மேடைப்பகுதியின் வலது புற மூலையில் தரை விரிப்பை மேலே தூக்கினான். அதன் கீழே தரையில் இரண்டடிக்கு இரண்டடி இருக்கும் ஒரு சதுர மரப்பலகை இருந்தது. அங்கிருந்த ஒரு துணியால் அந்த மரப்பலகையில் இருக்கும் தூசியைத் துடைத்தான். மரப்பலகையின் ஓரத்தில் ஒரு சாவித் துவாரம் தெரிந்தது. அந்தச் சாவியை அந்த துவாரத்தில் நுழைத்துத் திருப்பிய பின் இழுத்தான். மரப்பலகை கையோடு வந்தது. கீழே படிகள் தெரிந்தன.

இருவரும் அதன் வழியாக இறங்கினார்கள். பழைய உடலில் இருந்திருந்தால் விஸ்வம் விளக்கு இல்லாமலேயே தன் சூட்சுமப்பார்வையாலேயே பாதாள அறையை அலசி ஆராய்ந்திருப்பான். இப்போது அவனுக்கு டார்ச் லைட் தேவைப்பட்டது. ஜிப்ஸி அவன் கையில் டார்ச் லைட்டைத் தந்தான்.

டார்ச் லைட் விளக்கொளியில் தூசி மண்டிய பாதாள அறை கும்மிருட்டில் இருந்து மீண்டது. சுமார் முப்பது அடி நீளமும், இருபத்தியோரு அடி அகலமும் கொண்ட பாதாள அறையின் சுவர்களிலும் ஓவியங்கள், சின்னங்கள், குறியீடுகள், எழுத்துக்கள் எல்லாம் இருந்தன. ஒரு உயரமான மரக்கட்டில் ஓரத்தில் இருந்தது.

ஜிப்ஸி அவனிடம் சொன்னான். "நீ பார்த்து விட்டு மேலே வா. நான் மேலே இருக்கிறேன்"

விஸ்வம் தலையசைத்தான். ஜிப்ஸி போய் விட்டான். விஸ்வம் முதலில் சுவர்களில் என்ன இருக்கிறது என்று பார்த்தான். ஒரு சுவரில் பிரமிடு நெற்றிக்கண் பெரியதாக வரையப்பட்டிருந்தது. பிரமிடுக்குள் தெரிந்த அந்தக் கண்ணில் ஏதோவொரு அமானுஷ்ய சக்தி ஈர்ப்பை விஸ்வம் உணர்ந்தான். இந்தப் பிரமிடு நெற்றிக் கண்ணின் சக்தி வீச்சில் அவன் முன்பு ஏமாந்திருக்கிறான் என்பதால் அவன் அதை மன உறுதியுடன் பார்த்தபடி சிறிது நேரம் நின்றான். அந்த பிரமிடு நெற்றிக்கண் சுவருக்கு நேர் எதிரில் உள்ள சுவரில் ஏதோ எழுதப்பட்டிருந்தது. மற்ற இருபக்கத்துச் சுவரிலும் ஓவியங்களும் சின்னங்களும் வரையப்பட்டிருந்தன. ஒரு சுவரில் ஃப்ரீமேசன் முறைப்படி ஒரு இளைஞன் தீட்சை பெறும் ஓவியம் இருந்தது. தீட்சை பெறப்போகும் இளைஞனின் கண்கள் கட்டப்பட்டிருந்தன. அதற்கான சடங்குகளுக்கான மண்டலம் கீழே வரையப்பட்டிருந்தது. எதிரில் குருவைப் போன்ற மனிதன் ஒருவன் அமர்ந்திருந்தான். வேறுசிலர் நின்றிருந்தார்கள். மற்ற சின்னங்களும், ரகசியக் குறியீடுகளும் சுவர்களில் வரையப்பட்டிருந்தன. எல்லாம் மனித சக்திக்கு மீறிய சக்திகளைக் குறிப்பதாகவே இருந்தது. எத்தனையோ சக்திகளை வசப்படுத்தி வாழ்ந்திருந்த விஸ்வத்திற்கு அதில் பெரிய ஈடுபாடு தோன்றவில்லை.

பிரமிடு நெற்றிக்கண் வரையப்பட்டிருந்த சுவருக்கு எதிர்ச் சுவருக்கு விஸ்வம் வந்தான். என்ன எழுதப்பட்டிருக்கிறது என்று பார்த்தான். ஜெர்மானிய தத்துவ ஞானி கதே அந்தக் கோயிலில் இருந்து எழுதியதாக விஸ்வம் சொன்ன "Masonic Lodge" கவிதை அந்தச் சுவரில் எழுதப்பட்டிருந்தது.

விஸ்வம் என்றுமே கவிதைகளை ரசித்ததில்லை. கவிதைகளின் மென்மை அவனை எப்போதுமே அசைத்ததில்லை. ஆனாலும் ஏதாவது ரகசியத் தகவல்கள் கதே எழுதிய இந்தக் கவிதையில் இருக்கக்கூடும் என்று தோன்றியதால் அந்தக் கவிதையைப் படிக்க ஆரம்பித்தான்.

Masonic Lodge

The Masons's ways are A Type of Existence
And his persistence Is as the days are
Of men in this world. The future hides it

Gladness and Sorrow, We press still thorow,
Naught that abides in it Daunting us - onward.
And Solemn before us Veiled, the dark portal,

Goal of all mortal; Stars are silent o'er us
Graves under us silent. While earnest thou gazest
Comes boding of terror, Comes phantasm and error

Perplexes the bravest With doubt and misgiving.
But heard are the voices - Heard are the Sages,
The Worlds and the Ages; "Choose well; your choice is

"Brief and yet endless; "Here eyes do regard you
"In eternity's stillness; "Here is all fullness,
"Ye have to reward you, "Work, and despair not."

கடைசி ஐந்து வரிகள் அவனுக்காகவே எழுதப்பட்டிருப்பது போல் ஒரு உணர்வு அவனுக்குள் எழுந்தது. டார்ச் லைட்டை அணைத்து விட்டு அந்த இருட்டில் கண்களை மூடிக் கொண்டு யோசித்தான். பின் மறுபடி கண்களை அவன் திறந்த போது டார்ச் லைட் இல்லாமலேயே அந்தச் சுவரின் மேல் அந்தக் கவிதை படிக்குமளவுக்கு மங்கலான ஒளி விழுந்து கொண்டிருந்தது. விஸ்வம் திகைத்தான். எங்கிருந்து வருகிறது இந்த ஒளி? திரும்பிப் பார்த்தான். பிரமிடு நெற்றிக்கண்ணிலிருந்து தான் அந்த ஒளி வந்து கொண்டிருந்தது. சில வினாடிகள் நீடித்த ஒளி பின் மங்கி மறைந்து மறுபடியும் இருள் சூழ்ந்தது.

(தொடரும்)

என்.கணேசன்

இல்லுமினாட்டி 40

விஸ்வம் திகைத்தான்.

இல்லுமினாட்டியின் சின்னம் மறுபடி அவன் வாழ்க்கையில் விளையாட ஆரம்பித்து விட்டதா என்ன? அது இப்படி அடிக்கடி ஒரு காலத்தில் எரிந்து ஒளிவீசி அவனுக்கு நம்பிக்கை ஊட்டி உச்சத்திற்குக் கொண்டு போய்க் கடைசியில் அதல பாதாளத்தில் இறக்கி, சாகடித்தும் அல்லவா மங்கியிருக்கிறது. அதனால் இந்த முறை அவன் அதனிடம் ஏமாறத் தயாராக இல்லை. அவன் பிரமிடு நெற்றிக்கண்ணை அலட்சியம் செய்தவனாகத் திரும்பினான். கும்மிருட்டில் இப்போது பார்க்க முடியா விட்டாலும் கதேயின் கவிதையின் கடைசி வார்த்தைகள் அவன் மனதில் பிரகாசித்தன. ***"Work, and despair not."***

அவனுடைய இப்போதைய சூழ்நிலைக்கு அந்த வார்த்தைகளே தாரக மந்திரமாகத் தோன்றின. பழைய தவறுகளுக்கு வருந்தியும், இப்போதைய சூழ்நிலைக்குப் பச்சாதாபப்பட்டும் செயலற்றுத் தேங்கி விடாமல் அவன் செயல்பட வேண்டும். வலிமையான எதிரிகளை வென்று அவன் எல்லா வலிமைகளுக்கும் மேலானவன் என்று நிரூபிக்க வேண்டும்....

கண்களை மூடிக் கொண்டு அமைதியாக யோசித்தபடி அவன் சிறிது நேரம் நின்றான். இந்தப் பாதாள அறை ஒளிந்து கொள்ளப் பாதுகாப்பானது என்றாலும் இங்கே அவர்கள் இருப்பதை எதிரிகள் கண்டுபிடித்து விட்டால் இங்கே இருப்பது எலி வலையில் சிக்கிக் கொள்வது போல ஆபத்தானது, உயிருடன் தப்ப முடியாது என்ற யதார்த்த உண்மை அவனை வதைத்தது. அப்படி ஒரு நிலைமை வந்தால் அப்போது தப்பிக்க எதாவது வழியை இப்போதே ஏற்படுத்திக் கொள்ளாமல் இங்கே பதுங்கி இருப்பதில் அர்த்தமில்லை என்று தோன்றியது.

ரகசியமாகச் சில வேலைகளைச் செய்ய இந்தக் கோயிலைக் கட்டிய ஃப்ரீமேசன்கள் ரகசியமாகவே இங்கிருந்து போகவும் ஏதாவது வழியை ஏன் உருவாக்கியிருக்கக்கூடாது என்று விஸ்வம் தன்னையே கேட்டுக் கொண்டான். அந்தக் கேள்வி அவனுக்கு அபத்தமாகத் தோன்றவில்லை. அப்படி ரகசியமாகப் போக வழி செய்து கொண்டிருக்க வாய்ப்பு இருப்பதாகவே அவனுக்குத் தோன்றியது. அவன் டார்ச் லைட்டைப் போட்டு அந்தப் பாதாள அறையை மேலும் ஆராய்ந்தான். ஆராய்ந்ததில் ரகசிய வழி எதுவும் சிக்கவில்லை.

மறுபடியும் ஆராய உள்ளுணர்வு சொன்னது. எதுவும் முதல் பார்வைக்கே தெரிந்து விட வேண்டும் என்பது அவசியமில்லையே.... மீண்டும் கவனமாக நான்கு சுவர்களையும் ஆராய்ந்தான். புதிதாக எதுவும் தெரியவில்லை. ஆராய அங்குமிங்கும் நடந்த போது ஓரிடத்தில் நுட்பமான மாறுதலை அவன் கால்கள் உணர்ந்தன. அவன் தரையில் அந்த இடத்தை ஆராய்ந்தான். தரையில் தூசியைக் கையால் துடைத்து விட்டு ஆராய்ந்த போது மெலிதாய் ஒரு கோடு தெரிந்தது. மெல்ல அந்தப் பகுதியைத் தட்டினான். அந்தப் பகுதியைத் தாண்டிப் பள்ளம் இருப்பதாய் அந்தச் சத்தம் அறிவித்தது. உற்சாகமான அவன் அந்த மெலிதான கோட்டை மேலும் ஆராய்ந்ததில் பெரிய சதுர வடிவுக்கு அது நீண்டது. சதுர வடிவில் ஒரு சிமெண்ட் பலகையைப் பொருத்தி இருக்கிறார்கள். சிறிது நேர முயற்சிக்குப் பின் அவன் மெல்ல சிமெண்ட் பலகையைப் பெயர்த்து எடுத்தான். கீழே சுரங்கப் பாதை தெரிந்தது. ஊர்ந்து மட்டுமே செல்லக்கூடிய அளவில் தான் அந்த அகலம் இருந்தது.

விஸ்வம் ஊர்ந்தபடி இறங்கிச் சென்றான். சிறிது தூரம் சென்ற பின் சுரங்கப் பாதை முடிந்தது. அங்கும் அடைத்தபடி இருந்தது ஒரு சிமெண்ட் பலகை. கஷ்டப்பட்டு அதைத் தள்ளி மேலே பார்த்த போது அதன் மேலே ஒரு சிமெண்ட் பெஞ்சு தெரிந்தது. தலையை வெளியே நீட்டி சுற்றிப் பார்த்தான். சர்ச் அருகே இருந்த பார்க் பெஞ்சின் கீழே தான் அந்த பாதை முடிந்திருப்பது புரிந்தது. சிறிது தொலைவில் சர்ச் தெரிந்தது.

மெல்ல வந்த வழியே விஸ்வம் திரும்பினான். இங்கிருந்து தப்பிக்கவும் ஒரு வழி இருக்கிறது என்ற புரிதலில் மனம் சின்னதாய் நிம்மதியை உணர்ந்தது. பாதாள அறைக்கு வந்து அங்கிருந்தும் மேலே சர்ச்சுக்குள் வந்து திரும்பவும் அந்த மரப் பலகையால் அந்தத் துவாரத்தை அடைத்துச் சாவியைத் திருகிப் பூட்டி விட்டு தரை விரிப்பால் பலகையை விஸ்வம் மூடினான். பின் அதன் மீது பலமாகக் காலை வைத்து வரும் சத்தத்தை கவனமாகக் கேட்டான். சந்தேகப்பட்ட அளவு மரப்பலகை காட்டிக் கொடுக்கவில்லை. யோசனையுடன் அந்தத் தரை விரிப்பை எடுத்து ஆராய்ந்தான். அந்த மரப்பலகைக்கு மேலே மட்டும் அந்தத் தரை விரிப்பு கூடுதல் தடிமனாக இருந்தது. அந்தக்காலத்திலேயே கவனமாகத் தான் இருந்திருக்கிறார்கள்... திருப்தி அடைந்தவனாய் விஸ்வம் சாவியை எடுத்த இடத்திலேயே வைத்து விட்டு வந்த போது ஜிப்ஸி ஜன்னலோரம் இருந்த மரப்பெஞ்சில் அமர்ந்து வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

விஸ்வம் தன் புதிய கண்டுபிடிப்பை ஜிப்ஸியிடம் சொல்லாமல் தன் சந்தேகத்தைக் கேட்டான். “இல்லுமினாட்டி ஆட்கள் இங்கே வந்து பார்க்க வாய்ப்பிருக்கிறதல்லவா?”

ஜிப்ஸி சொன்னான். “இருக்கிறது. ஆனால் அவர்களைப் பொறுத்த வரை இந்த இடம் அவர்கள் தேடக்கூடிய நூற்றுக் கணக்கான இடங்களில் இதுவும் ஒன்று. கண்டிப்பாக நாம் இங்கே இருப்போம் என்று சந்தேகம் அவர்களுக்கு வராத வரை அவர்கள் தேடல் சாதாரணமாகத் தான் இருக்கும். ஒன்றிரண்டு ஆட்கள் வந்து பார்த்து விட்டுப் போகலாம்... அவர்கள் வரும் போது நாம் இரண்டு பேரும் பாதாள அறைக்குப் போனால் போதும். இல்லுமினாட்டி ஆட்கள் இங்கிருக்கும் பாதாள அறையைக் கண்டுபிடிக்கும் வாய்ப்பு குறைவு.”

விஸ்வம் கேட்டான். “எதை வைத்து அப்படிச் சொல்கிறாய்?”

“இந்த சர்ச் பற்றி முழு விவரங்கள் தெரிந்திருந்தால் கண்டிப்பாக இந்த சர்ச்சைத் தங்கள் கட்டுப்பாட்டிற்கு எப்போதோ அவர்கள் கொண்டு வந்திருப்பார்கள். நான் முன்பே சொன்ன மாதிரி முக்கியத்துவம் வாய்ந்த, கூடுதல் ரகசியங்கள் இருக்கிற மேசன் கோயில்கள் எல்லாவற்றையும் அவர்கள் எப்போதோ தங்கள் கட்டுப்பட்டிற்குக் கொண்டு வந்து விட்டார்கள். அவர்கள் இப்படி அலட்சியப்படுத்தி விட்டிருக்கிறார்கள் என்றால் அவர்கள் அறியவில்லை அல்லது முக்கியமானதாக நினைக்கவில்லை என்று தான் அர்த்தம்.”

விஸ்வத்திற்கு ஜிப்ஸியின் அனுமானம் சரியென்றே தோன்றினாலும் மனதில் ஏதோ ஒன்று நெருடியது. அந்த நெருடலைச் சத்தமாகச் சொன்னான். “ஆனால் இப்போதும் இந்த ரகசியப் பாதாள அறையைப் பற்றித் தெரிந்து வைத்திருப்பவர்கள் கண்டிப்பாக இருப்பார்கள். ரகசிய வழிபாடுகள் நடத்திக் கொண்டிருந்தவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்காவது தெரிந்திருக்கும் அல்லவா?”

ஜிப்ஸி புன்னகைத்தான். “நீ சொல்வது உண்மை. இங்கே ரகசிய வழிபாட்டை நடத்திக் கொண்டிருந்த குடும்பத்தினர்கள் அறிவார்கள். அவர்கள் இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருக்கும் போதே ஜெர்மனியிலிருந்து போய் விட்டார்கள். அவர்கள் யாருமே இப்போது இங்கே இல்லை...”

இல்லுமினாட்டியில் இணையும் வரை எப்போதுமே இரட்டை வாழ்க்கை வாழ்ந்திருக்காத க்ரிஷ் இப்போது அப்படி வாழ்வதில் உள்ள சிரமங்களைத் துல்லியமாகவே உணர்ந்தான். வீட்டு ஆட்களிடமே சதா எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டியிருந்தது அவனுக்குள் பலத்த குற்ற உணர்வை ஏற்படுத்தியது. காதலியிடமும், குடும்பத்தினரிடமும் கூட சில விஷயங்களில் உண்மையாகவும், வெளிப்படையாகவும் இருக்க முடியாததற்கு அவன் உள்ளூர வருந்தினான்.

இப்போது அவன் அமானுஷ்யனைச் சந்திக்கப் போய்க் கொண்டிருப்பதைக் கூட அவனால் வெளிப்படையாக அவர்களிடம் தெரிவித்து விட்டு வர அவனுக்கு முடியவில்லை. அவன் அமானுஷ்யனைச் சந்திக்கும் தகவல்கள் வெளியே கசிவது இருவர் பாதுகாப்புக்கும் நல்லதல்ல என்று எர்னெஸ்டோ எச்சரித்திருந்தார். அதனால் முதலமைச்சர் மகனான க்ரிஷுக்கு வழக்கமாக அரசாங்கம் அனுப்பும் பாதுகாப்பைக் கூட அவன் மறுக்க வேண்டி இருந்தது. ரகசியமாகப் போக வேண்டி இருப்பதற்கு உதயிடம் ஏதேதோ பொய் சொல்லி விட்டுக் கிளம்ப வேண்டி இருந்தது...

எர்னெஸ்டோ அமானுஷ்யன் என்றழைக்கப்படும் அக்‌ஷயின் தற்போதைய இருப்பிடம் மற்றும் வேலை குறித்த தகவல்களை க்ரிஷுக்கு முன்கூட்டியே அனுப்பி இருந்தார். ஒரு சிறிய நகரத்தில் ஒரு பள்ளிக்கூடத்தில் உடற்பயிற்சி ஆசிரியனாக வேலை செய்யும் அக்‌ஷயை, எந்தத் தேதியில், எந்த நேரத்தில் சந்திப்பது நல்லது என்பதையும் தெரிவித்திருந்தார். அந்தத் தேதியில் அந்த நேரத்திலேயே க்ரிஷ் அங்கே போய்ச் சேர்ந்தான்.

பல பள்ளி மாணவர்கள் ஒரு போட்டிக்காகப் பயிற்சிகள் செய்து கொண்டிருக்கும் ஒரு மைதானத்தில் பார்வையாளர்கள் அமரும் பகுதியில் க்ரிஷ் வந்து அமர்ந்த முதல் கணமே அக்‌ஷய் அவனைக் கவனித்தான். பார்வையாளர்கள் சுமார் இருநூறுக்கும் மேலே இருந்த போதும் அவன் அங்கே இது வரை பார்த்திராத புதியவர்கள் க்ரிஷைச் சேர்த்து எட்டு பேர் இருந்தார்கள். புதியவர்களில் ஐந்து பேர் க்ரிஷ் வருவதற்கு முன்பே அங்கு வந்து விட்டிருந்தார்கள். அவர்கள் சாதாரண பார்வையாளர்கள் அல்ல என்பதும், விளையாட்டில் உள்ள ஆர்வத்தால் வந்தமர்ந்தவர்கள் அல்ல என்பதும் அக்‌ஷய்க்கு ஆரம்பத்திலேயே தெரிந்து விட்டது. க்ரிஷ் வந்தமர்ந்து இரண்டு நிமிடங்களில் கூடுதலாக மூன்று புதியவர்கள் சில வினாடிகள் இடைவெளிகளில் வந்து க்ரிஷ் அருகே விரைந்து செல்லக்கூடிய தூரங்களிலேயே அமர்ந்தார்கள்.

அக்‌ஷயின் உள்ளுணர்வு அவனை உடனடியாக அங்கிருந்து தப்பித்துச் செல்லும்படி எச்சரித்தது.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, March 19, 2020

இல்லுமினாட்டி 41

அக்‌ஷயின் உள்ளுணர்வு அவனைத் தப்பித்துச் செல்லும்படி சொல்லக் காரணம் இருந்தது. க்ரிஷைத் தவிர அங்கே முன்பும், பின்பும் வந்தமர்ந்த புதியவர்கள் எட்டு பேரும் மிகக் குறுகிய காலத்தில் விரைந்து செயல்படக்கூடியவர்களும், கச்சிதமாகக் கொலை கூடச் செய்து விட்டு அலட்டிக் கொள்ளாமல் அங்கிருந்து மறைந்து விட முடிந்தவர்களுமான மனிதர்கள் என்பதை முதல் பார்வையிலேயே அக்‌ஷய் அனுமானித்தான். பொதுவான கைதேர்ந்த உளவாளிகள், காவல்துறையினர் வகையையும் மீறிய உயர் ரகப் பாதுகாவலர்கள் அல்லது கொலையாளிகள் வகையில் சேர்க்கக்கூடிய மனிதர்கள் அவர்கள் என்பதை அவனால் கணிக்க முடிந்தது. அவர்கள் அங்கே வர அவன் தான் காரணம் என்பது புரிந்தது. இது போன்ற ஆபத்தான மனிதர்களுடன் எந்த விதத்திலும் சம்பந்தப்பட அவன் விரும்பவில்லை. உள்ளுணர்வு எச்சரித்தவுடன் உடனடியாகத் தப்பிச் செல்ல அவன் முயலாததற்குக் காரணமாக அந்த எட்டு பேருடன் வந்திருந்த அந்த இளைஞன் இருந்தான்.

அந்த இளைஞனை அவன் எங்கேயே பார்த்திருக்கிறான். அந்த முகம் நன்றாகப் பரிச்சயமான முகம்.... மூளையைக் கசக்கி யோசித்ததில் சில வினாடிகளில் பதில் வந்தது. முதலமைச்சரின் மகன். இளைய மகன். பெயர் க்ரிஷோ கிரிஷோ? அவன் ஜீனியஸ் என்றும், நல்ல பண்பாளன் என்றும் பத்திரிக்கைகளில் படித்திருந்ததாக நினைவு. தந்தையையும், சகோதரனையும் போல மீடியாக்களில் அடிக்கடி இடம் பெறும் ஆள் அல்ல. இவன் எதற்கு இந்த எட்டுப் பேருடன் இங்கே வந்தான் என்று அக்‌ஷய் யோசித்தான். முதலமைச்சரின் மகன் என்பதால் அவனுடைய பாதுகாவலுக்கு வர வேண்டிய அரசாங்கப் பாதுகாவலர் ஒருவர் கூட அந்த எட்டு பேரில் இல்லை. அது அக்‌ஷய்க்கு விசித்திரமாகப் பட்டது. யாரவர்கள்? அவனுடன் இங்கே ஏன் வந்திருக்கிறார்கள்?

இத்தனை அவன் யோசித்த போதும் அவனைக் கவனித்துக் கொண்டிருந்த க்ரிஷுக்கு அவன் அவர்களைப் பார்த்தது போல் கூடத் தெரியவில்லை. மாணவர்கள் பயிற்சியில் இருக்கும் குறைபாடுகளை அக்‌ஷய் அடிக்கடி சுட்டிக் காட்டித் திருத்தி சரியான ஆலோசனைகள் வழங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்த போது அவன் முழுக் கவனமும் மாணவர்கள் மேல் இருப்பது போல் தான் க்ரிஷுக்குத் தோன்றியது. மாணவர்களின் தவறைச் சுட்டிக் காட்டும் போது கூட அக்‌ஷய் சிறு முகச்சுளிப்பு கூட காட்டாததும், சிறிது கூட அமைதியிழக்காததும், ஏன், சலிப்பின் நிழல் கூட அந்த முகத்தில் படராதது க்ரிஷைப் பிரமிக்க வைத்தது. அங்கே இருந்த வேறு சில பயிற்சியாளர்கள் கத்திக் கொண்டும், மாணவர்களைத் திட்டிக் கொண்டும் இருந்தார்கள். அக்‌ஷயின் குரல் கூட உயரவில்லை. எல்லாம் சரியாகத் தான் இருக்கிறது என்பது போலவோ, சம்பந்தம் இல்லாதவன் போலவோ பேரமைதியுடன் அவன் மைதானத்தில் இருந்ததை க்ரிஷ் கவனித்த போது அவனுக்கு அமானுஷ்யன் என்ற பெயர் பொருத்தமானதாகவே தோன்றியது.

க்ரிஷ் வைத்த கண் எடுக்காமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்ததைக் கவனித்த அக்‌ஷய் அந்த எட்டு பேரில் ஐந்து ஆட்கள் மைதானத்தைத் தீவிரமாகக் கண்காணித்ததையும், மூன்று பேர் அப்படியே க்ரிஷைச் சுற்றிக் கண்காணித்ததையும் கவனித்தான். அவர்களில் இருவர் க்ரிஷை ஒருசில வினாடிகளில் எட்டும் தூரத்தில் தான் இருந்தார்கள்... அவர்கள் அனுமதி இல்லாமல் க்ரிஷை யாரும் நெருங்க முடியாது என்பது தெளிவாகத் தெரிந்தது.

முக்கால் மணி நேரத்தில் பயிற்சிகள் முடிந்தன. மாணவர்கள் தங்கள் பயிற்சியாளர்களிடம் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினார்கள். அக்‌ஷயின் பொறுப்பில் இருந்த மாணவர்கள் அவனிடம் கை கொடுத்தும், கையாட்டியும் விடைபெற்றார்கள். அத்தனை முகங்களிலும் அன்பு கலந்த மரியாதையை க்ரிஷ் கவனித்தான். அந்த ஆத்மார்த்தம் மற்ற பயிற்சியாளர்களிடம் அவர்களது மாணவர்கள் காட்டவில்லை என்பதையும் க்ரிஷ் கவனித்தான். பயிற்சி மாணவர்களின் குடும்பத்தினரும், நண்பர்களும் அதிகமாக இருந்த பார்வையாளர் கூட்டமும் எழுந்து கலைய ஆரம்பித்தது.

க்ரிஷ் எழுந்து மைதான வாயிலருகே சென்று அக்‌ஷய்க்காகக் காத்திருந்தான். அக்‌ஷய் அவசரமில்லாமல், பதற்றமில்லாமல் நிதானமாக நடந்து வந்ததில் கூட ஒரு தாளலயம் இருந்தது போல் க்ரிஷுக்குத் தோன்றியது. அவன் அருகே வந்த போது அவனை வழிமறித்து நின்று புன்னகையுடன் கைநீட்டி க்ரிஷ் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். “சார் நான் க்ரிஷ். உங்களைப் பார்க்கத் தான் சென்னையிலிருந்து வருகிறேன்...”

முதலமைச்சர் மகன், ஒரு எம் பி யின் தம்பி, அந்தப் பெருமைகளையோ, தன் அறிவு மற்றும் கல்வித் தகுதி பெருமையையோ சொல்லாமல் எளிமையாகத் தன் பெயரையும், ஊரையும் மட்டும் சொன்னது அவன் வித்தியாசமானவன் என்பதை உரக்கச் சொன்னது.

அக்‌ஷய் அமைதியாக அவன் கையைக் குலுக்கிச் சொன்னான். “நான் அக்‌ஷய். சொல்லுங்கள், என்ன விஷயம்?”

விஸ்வத்திடம் ஜிப்ஸி பாதாள அறையிலிருந்து மேலே வர ஏன் இவ்வளவு நேரம், இத்தனை நேரம் என்ன செய்து கொண்டிருந்தாய், என்ன பார்த்தாய் என்றெல்லாம் கேட்கவில்லை. விஸ்வமும் தான் கண்ட சுரங்கப்பாதை பற்றிச் சொல்லவில்லை. ஆனாலும் அவன் சுரங்கப்பாதை இருப்பதைக் கண்டுபிடித்திருப்பது ஜிப்ஸிக்குக் கண்டிப்பாகத் தெரியாமல் இருக்காது என்று விஸ்வம் நினைத்தான்.

ஜிப்ஸி அவனிடம் கேட்டான். “இனி என்ன செய்யப் போவதாய் உத்தேசம்?”

விஸ்வம் உடனே பதில் சொல்லவில்லை. அவனுடைய சக்திகளை மீட்டெடுப்பது தான் அவனுடைய முதல் உத்தேசம் என்றாலும் அதை ஜிப்ஸி கேட்கவில்லை என்பதை அறிவான். அது குறித்து அவனுக்கு எந்தச் சந்தேகமும் இருக்க முடியாது. ஒளிந்து கொள்ள ஒரு தோதான இடமும் கிடைத்திருக்கிறது. அங்கே இப்போதைக்கு உடனடியாக எந்த ஆபத்தும் வரும் என்று தோன்றவில்லை. பழைய சக்திகளின் சூட்சுமங்களும், வழிமுறைகளும் இந்த மூளையிலும் அவன் பதித்து அறிந்து வைத்திருந்தாலும் இயல்பாகப் பிரயோகிக்க முடிகிற வரை அவனால் செயலற்று இருந்து விட முடியாது. இல்லுமினாட்டியும், க்ரிஷும் கண்டிப்பாகச் செயலற்றுச் சும்மா இருந்து விட மாட்டார்கள். தற்காப்பில் மட்டுமே விஸ்வம் இருந்து விட முடியாது. அவர்கள் அவனுக்கு எதிராக முழுமூச்சாக இறங்கி விடக்கூடாது. அதை அவன் அனுமதிக்க மாட்டான்.

இல்லுமினாட்டியைப் பொருத்த வரை தலையாய பிரச்சினை எர்னெஸ்டோ தான். ஆனால் அதிகார உச்சத்தில் இருக்கும் அவரை அவனால் இப்போதைக்கு எதுவும் செய்ய முடியாது. சக்திகளைத் திரட்டிக் கொண்ட பின்னரே அவரை அவனால் எதாவது செய்ய முடியும். க்ரிஷ் முதலமைச்சர் மகனாகவும் இல்லுமினாட்டியாகவும் மாறி இருப்பதால் அவனும் பாதுகாப்பாகவே இருக்கிறான்.

விஸ்வம் இப்போதைய சூழ்நிலையில் அவனால் செய்ய முடிந்தது என்னவெல்லாம் என்று ஆழமாக யோசித்தான். கடைசியில் ஜிப்ஸியிடம் சொன்னான். “இல்லுமினாட்டியில் எர்னெஸ்டோவுக்கு எதிராகச் சிந்திக்க முடிந்தவர்கள், அடுத்த தலைவராக விரும்புபவர்கள் பற்றிய முழு விவரங்கள் நமக்கு வேண்டும் நண்பனே”

ஜிப்ஸி தலையசைத்தான். விஸ்வம் தன் பழைய உறுதியையும், தெளிவையும் ஓரளவு பெற்று விட்டது போலத் தான் அவனுக்குத் தோன்றியது. "க்ரிஷ் விஷயத்தில் என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்டான்.

இல்லுமினாட்டி பற்றியும் க்ரிஷ் பற்றியும் தான் அவன் யோசித்திருக்கிறான் என்பதை ஜிப்ஸி தெரிந்து வைத்திருக்கிறான், அதனால் தான் இல்லுமினாட்டி பற்றிச் சொல்லி முடித்ததும் க்ரிஷ் பற்றிக் கேட்கிறான் என்பதை விஸ்வம் மனதில் குறித்துக் கொண்டபடி சொன்னான். “க்ரிஷின் மிகப்பெரிய பலம் அவனுடைய அறிவு. அவனுடைய மிகப்பெரிய பலவீனம் அவன் அன்பும், காதலும், குடும்பத்தின் மீது வைத்திருக்கும் பாசமும். அவன் பலத்தைக் குறைக்க வேண்டுமானால் நாம் அவன் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவன் அமைதியாகச் சிந்திக்க முடியாதபடி அவனுடைய பலவீனமான பகுதியில் தாக்க வேண்டும்...”

ஜிப்ஸி கேட்டான். “நீ யாரைச் சொல்கிறாய்? ஹரிணியையா, அவன் குடும்பத்து ஆட்களையா?”

ஹரிணியின் பெயரைக் கேட்டவுடன் விஸ்வம் ஒருவித கசப்புணர்வை உணர்ந்தான். அவளைக் கடத்திய பிறகும் அசராத அவள் அழுத்தத்தையும், அவள் மனோகரிடம் பேசிய திமிர்ப் பேச்சையும் அவனால் மறக்க முடியாது. அவளை க்ரிஷின் பலவீனமான பகுதியாக அவனால் நினைக்க முடியவில்லை. விஸ்வம் சொன்னான். “அவன் குடும்பத்தைச் சொல்கிறேன். முக்கியமாக அவன் நேசிக்கும் அண்ணன், அம்மா ...”

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, March 26, 2020

இல்லுமினாட்டி 42

விஸ்வம் நேரடியாகத் தேர்ந்தெடுத்து வேலை வாங்கிய ஆட்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவே. ஏனென்றால் அவனிடம் பாஸ் மார்க் வாங்குவது யாருக்கும் சுலபமில்லை. அசாதாரணத் திறமையும், உறுதியான நிலைப்பாடும் இல்லாத ஆட்களை அவன் மனிதர்களாக மதித்தது கூடக் கிடையாது. அவன் தேர்ந்தெடுத்த ஆட்கள் கூட ஒருவருக்கொருவர் தெரிந்து வைத்திருப்பதையும், பரிச்சயமாவதையும் அவன் அனுமதித்தது கிடையாது. அவனுடைய ஆள் ஒருவன் எதிரியிடம் மாட்டிக் கொண்டால் அந்த ஆள் மூலம் விஸ்வத்தின் மற்ற ஆட்களையும் எதிரி அறிந்து கொள்வது அவனுக்கு உடன்பாடானதல்ல. அவன் எல்லா ரகசியங்களையும் கச்சிதமாகக் கட்டிக் காப்பாற்ற இந்த எச்சரிக்கை உணர்வு இன்று வரையும் உதவி இருக்கிறது. இப்போது மனோகர் மாட்டிக் கொண்ட போதும் அவன் மூலம் பெரிய ரகசியங்கள் கசிய வாய்ப்பில்லை என்ற நம்பிக்கை அவனுக்கு உண்டு. மனோகர் மாட்டிக் கொண்டது அவனுக்கு அவமானமே தவிர ஆபத்தல்ல.

டேனியலின் உடலுக்குள் வந்த பிறகு, ஓரளவு பாதுகாப்பான இடத்திற்கும் வந்து சேர்ந்த பிறகு, புதிய உடலின் பலவீனங்களைப் பொருட்படுத்தாத அளவு ஆன பிறகு விஸ்வம் தெளிவாகச் சிந்திக்கும் மனநிலையை எட்டி இருக்கிறான். க்ரிஷின் பலவீனமானமாக அவன் குடும்பத்தை நினைத்து அதன் மூலம் அவனைத் தாக்க முடிவு செய்த பிறகு திட்டங்கள் பல யோசித்து முடிவில் அதில் ஒரு அருமையான திட்டத்தை விஸ்வம் தேர்ந்தெடுத்தான். அதை நிறைவேற்றக் கச்சிதமான நபராக அவனால் ஒரே ஒருத்தியைத் தான் நினைக்க முடிந்தது. அவள் தான் சிந்து!

அவன் அவளைத் தேர்ந்தெடுத்தது கூட வழக்கமான முறையில் அல்ல. அவர்கள் இருவரும் சந்தித்துக் கொண்டதே ஒரு சுவாரசியமான நிகழ்வு தான். அந்த நிகழ்வை விஸ்வம் நினைவுபடுத்திக் கொள்ளும் போதே அவன் முகத்தில் சிறிய புன்னகை அரும்பியது...

விஸ்வம் சிந்துவை முதல் முதலில் சந்தித்தது இரண்டு வருடங்களுக்கு முன், மும்பை விமான நிலையத்தில். அப்போது அவளுக்கு வயது 21 தான் முடிந்திருந்தது. மிக அழகான கல்லூரிப் பெண்ணாக இருந்தாள். அவளுக்கு நுனி நாக்கு ஆங்கிலப் புலமை இருப்பது அவள் அருகில் இருந்த ஒரு வயதான பெண்மணியுடன் பேசிக் கொண்டிருந்ததில் தெரிந்தது. அன்று விஸ்வம் ஒரு பணக்கார மார்வாடி வியாபாரியின் வேடத்தில் இருந்தான். அவன் கழுத்தில் கனமான தங்கச் சங்கிலியும், விரல்களில் ஏழு மோதிரங்களும் அணிந்திருந்தான். அவனுடைய கனமான பர்ஸ் ஜிப்பா பாக்கெட்டில் புடைத்துக் கொண்டிருந்தது.

அவள் எண்ணங்களைப் படிக்காமல் இருந்திருந்தால். அவன் அன்று அவளை ஒரு பொருட்டாகவே நினைத்திருக்க மாட்டான் அருகிலுள்ள வயதான பெண்மணியிடம் இந்தியாவில் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைப் பற்றிக் காரசாரமாகப் பேசிக் கொண்டிருந்த போதும் அவள் மனதில் அவன் பர்ஸைப் பற்றித் தான் தீவிரமாக நினைத்துக் கொண்டிருந்தாள். 'இந்த சேட்டின் பர்ஸை இன்று அடித்து விட வேண்டும்' என்று அவள் தமிழில் எண்ணியதை அவனால் படிக்க முடிந்த போது அவன் திகைப்படைந்தான். யாரையும் தோற்றத்தை வைத்து எடை போட முடியாது என்றாலும், அவனே ஒரு வேடத்தில் தான் இருக்கிறான் என்றாலும் ஒரு திருட்டுப் பெண் என்று இம்மியும் யூகிக்க முடியாதபடி அவள் தோற்றத்திலும், பேச்சிலும் இருந்த கண்ணியம் அவனை அசர வைத்தது.

அவன் மெல்ல சூட்கேசுடன் எழுந்து பாத்ரூம் நோக்கி நடக்க ஆரம்பித்தான். அவளும் அந்தப் பெண்மணியிடம் ஏதோ காரணம் சொல்லி விட்டு எழுந்து பின்னால் வந்தாள். எதிரில் வேறிரண்டு முதியவர்கள் பேசியபடி வந்து கொண்டிருந்தார்கள். அவர்களை விஸ்வம் கடக்கையில் அவளும் விஸ்வத்தைக் கடந்தாள். அடுத்த வினாடி விஸ்வத்தின் பர்ஸ் அவள் கையில் இருந்தது. அதற்கடுத்த வினாடி விஸ்வத்தின் இரும்புக்கரம் அவள் கையை பர்ஸோடு இறுக்கிப் பிடித்தது. அந்தக் கணத்தில் அவள் முகத்தில் பேரதிர்ச்சி விரிந்தது. 'பாவி எப்படிக் கண்டுபிடித்தான்' என்று மனதில் அவள் தமிழில் கூவியது தெரிந்தது.

ஆனால் அடுத்த கணம் அவள் சுதாரித்துக் கொண்டாள். "சார். உங்கள் பர்ஸை அங்கேயே விட்டு விட்டு வந்து விட்டீர்கள். இந்தாருங்கள்" என்று தூய ஹிந்தியில் அவள் அலட்டாமல் அன்பாகச் சொன்னாள்.

அவர்கள் அருகே வந்திருந்த முதியவர்கள் நடந்தது எதையும் கவனித்திருக்கவில்லை. அவள் பேச்சையும், இருவர் பிடியிலும் இருந்த பர்ஸையும் பார்த்து இருவரில் ஒரு முதியவர் விஸ்வத்திடம் சொன்னார். "இந்தக் காலத்திலும் இப்படி நல்ல பெண்கள் இருப்பதால் தான் நாட்டில் மழை பெய்கிறது"

விஸ்வத்தால் அந்தப் பெண்ணைச் சிலாகிக்காமல் இருக்க முடியவில்லை. இப்படியொரு அசாத்தியத் திறமையையும், துணிச்சலையும், சமயோசிதத்தையும் அவன் இது வரை எந்தப் பெண்ணிடமும் பார்த்ததில்லை. அவனைத் தவிர யார் இருந்திருந்தாலும் அந்தப் பர்ஸை அவளிடம் கண்டிப்பாகப் பறி கொடுத்திருப்பார்கள். அவளைத் தவிர வேறு யாராக இருந்தாலும் பிடிபட்டவுடன் தப்பிக்க வழி தெரியாமல் திணறிப் போயிருப்பார்கள்.

விஸ்வம் நாடகத்தைத் தொடர்ந்தான். "நன்றி மகளே" என்று ஹிந்தியில் சொன்னபடி தன் பர்ஸை மீண்டும் பைஜாமா பாக்கெட்டில் நுழைத்து விட்டுச் சொன்னான். "வா மகளே. காபி வாங்கித் தருகிறேன்..."

அவள் மனதினுள் 'ஆளை விடுடா சாமி' என்று முணுமுணுத்தது விஸ்வத்துக்குத் தெரிந்தது. ஆனால் "பரவாயில்லை அங்கிள் வேண்டாம்" என்று சொல்லி விட்டு அவள் நகரப் பார்த்தாள்.

விஸ்வம் அவள் கையை இறுக்கிப் பிடித்தபடி சொன்னான். "நன்றி தெரிவிக்க எனக்கு ஒரு வாய்ப்பு கொடு மகளே."

இதைப் பார்த்துக் கொண்டிருந்த அந்தப் பெரியவர்களில் மற்றொருவர் அவளிடம் அன்பாகச் சொன்னார். "நல்ல பெண்ணாக இருக்கிறாய். அவர் மனதைப் புண்படுத்தாமல் போய் காபி குடியம்மா."

'சனியன் விடமாட்டான் போலிருக்கிறதே' என்று விஸ்வத்தைப் பார்த்து மனதில் சொல்லிக் கொண்டவள் அந்தப் பெரியவரைப் பார்த்து அன்பான புன்னகையை உதிர விட்டு "சரி" என்றாள்.

அந்தப் பெரியவர்கள் கடந்து போய் விட்டார்கள். விஸ்வத்துடன் அவள் அலட்டாமல் அமைதியாக வந்தாள். இருவரும் ரெஸ்டாரண்டில் அமர்ந்தார்கள். விஸ்வம் தமிழில் அவளிடம் கேட்டான். "என்ன சாப்பிடுகிறாய்?"

அவள் ஒரு கணம் திகைத்து விட்டுச் சொன்னாள். "காபி"

காபி ஆர்டர் செய்து விட்டு விஸ்வம் அவளைக் கேட்டான். "உன் பெயர் என்ன?"

அவள் அமைதியாகத் தன் உண்மையான பெயரையே சொன்னாள். "சிந்து". பின் கேட்டாள். "உங்கள் பெயர்?"

அவன் அப்போது தரித்திருந்த வேடத்தின் பெயரையே சொன்னான். "விஸ்வாஸ்ஜி"

இப்போது நினைத்தாலும் அவளுடைய அசாத்தியத் துணிச்சலும், சமயோசித புத்தியும் அவனுக்குப் புன்னகை வர வைத்தன. க்ரிஷ் வீட்டில் நுழைந்து அலட்டாமல் எதையும் செய்ய அவளால் நிச்சயமாக முடியும்...

விஸ்வம் ஜிப்ஸியிடம் சொன்னான். "நான் இந்தியாவில் ஒருத்தியிடம் பேச வேண்டும்"

ஜிப்ஸி மெல்லச் சொன்னான். "பேசுவது பெரிதல்ல. அவள் மூலம் எதிரிகள் உன்னை இங்கே கண்டுபிடிக்க முடிந்தால் அது ஆபத்து அல்லவா?"

விஸ்வம் சொன்னான். "என் ஆட்கள் மூலமாக யாரும் என்னைக் கண்டுபிடித்து விட முடியாது. எல்லா விதங்களிலும் சோதித்துப் பார்க்காமல் யாரையும் நான் தேர்ந்தெடுத்ததில்லை... உன் போன் மூலமாக என்னைக் கண்டுபிடிக்கும்படி ஆகிவிடாதல்லவா?"

ஜிப்ஸி தன் போனை எடுத்து அவனிடம் கொடுத்தபடி சொன்னான். "இது பாதுகாப்பானது தான்"

விஸ்வம் சிந்துவின் அலைபேசி எண்ணை அழுத்தினான். அவள் உடனே எடுத்துப் பேசி விடவில்லை. நாலைந்து முறை அடித்த பிறகு தான் எடுத்தாள். "ஹலோ"

விஸ்வம் சொன்னான். "சிந்து. நான் விஸ்வாஸ்ஜி பேசுகிறேன்"

அவள் மெல்லச் சொன்னாள். "இது ராங் நம்பர் என்று நினைக்கிறேன்"

அவள் அவனுடைய குரலின் மாற்றத்தை வைத்துத் தான் அப்படிப் பேசுகிறாள் என்பது அவனுக்குப் புரிந்தது. அவன் சொன்னான். "குரல் தான் மாறி இருக்கிறது. ஆள் மாறவில்லை சிந்து. மும்பையில் நீ பர்ஸ் எடுத்துக் கொடுத்த அதே விஸ்வாஸ்ஜி தான் பேசுகிறேன்."

அவள் ஒன்றும் சொல்லாமல் அமைதியாக இருந்தாள். அவள் மௌனம் அவனை மேற்கொண்டு சொல் என்றதாய் அவன் உணர்ந்தான். அவன் சொன்னான். "புதிய வேலை. ஐந்து பேரைப் பற்றிய விவரங்களை நான் மெயிலில் அனுப்புகிறேன். நீ செய்ய வேண்டியதெல்லாம் இது தான்...."

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, April 2, 2020

இல்லுமினாட்டி 43

இல்லுமினாட்டி உளவுத்துறையின் தலைவன் இம்மானுவல் முகத்தில் தெரிந்த தீவிர சிந்தனை எதைப்பற்றியதாக இருக்கும் என்று யோசித்தபடியே அவன் எதிரில் வந்தமர்ந்தார் உளவுத்துறையின் உபதலைவர் சாலமன். அவர் தெரிவித்த வணக்கத்திற்கு மறு வணக்கம் அவன் தெரிவித்த போதும் அவனுடைய பாதிக் கவனம் வேறெங்கோ இருப்பது அவருக்குத் தெரிந்தது.

“என்ன தீவிர சிந்தனை தலைவரே?” என்று சாலமன் கேட்க இம்மானுவல் ஒற்றைச் சொல்லில் பதில் சொன்னான். "விஸ்வம்"

வாங் வே விஸ்வம் பற்றித் தெரிய வருகிற எல்லாத் தகவல்களையும் உடனுக்குடன் தெரிவிக்கும்படி சாலமனைக் கேட்டுக் கொண்டிருந்ததால் சாலமன் ஆவலை அதிகமாய் வெளிப்படுத்திக் கொள்ளாமல் சாதாரணமாகக் கேட்பது போல் கேட்டார். "அவன் எங்கிருக்கிறான் என்பது தெரிந்ததா?"

இம்மானுவல் சொன்னான். “இல்லை. கற்பூரம் போலக் காற்றில் கரைந்து விட்டான் போலிருக்கிறது. யார் கண்ணிலும் அவன் இன்னமும் படவில்லை”

சாலமன் சொன்னார். “ஆச்சரியமாகத் தான் இருக்கிறது. நமக்கு இதுவரை இப்படி ஒரு நிலைமை வந்ததில்லை. அவன் ஜெர்மனியை விட்டு வெளியே போயிருக்க வழியில்லை. ஜெர்மனியிலும் ஓட்டல்கள், லாட்ஜ்கள், எல்லாம் விசாரித்து விட்டோம். இப்போது காலி வீடுகள் எல்லாம் தேடி வருகிறோம்.... அதில் ஏதாவது ஒன்றில் சிக்குவான் என்று நினைக்கிறேன். அவன் கூட்டாளி பற்றி ஏதாவது தகவல் கிடைத்திருந்தால் நமக்கு அவனைத் தேடுவது சுலபமாக இருந்திருக்கும்...”

சரியான இடத்தில் நிறுத்தி யோசிப்பது போல் பாவனை காட்டி அவர் இம்மானுவலைப் பார்த்தார். அந்தக் கூட்டாளி பற்றி ஏதாவது தகவல் கிடைத்திருந்தால் இம்மானுவல் சொல்வான் என்று எதிர்பார்த்தார்.

இம்மானுவல் தன் மேஜையின் மேலிருந்த ஃபைலைப் பார்த்தபடியே சொன்னான். “அந்தக் கூட்டாளி விஸ்வத்தை விட அதிக மர்மமான ஆசாமியாக இருக்கிறான். அவனைப் பற்றி எதுவுமே தெரியவில்லை...”

அப்போது தான் அந்த ஃபைலின் மேலே “விஸ்வத்தின் கூட்டாளி” என்று எழுதியிருந்ததை சாலமன் கவனித்தார். அந்த ஃபைலில் நிறைய தாள்கள் இருந்தன. எதுவுமே தெரியாத ஆளைப் பற்றி இத்தனை தாள்களில் தகவல்கள் சேர்த்திருக்கிறானே இவன் என்ற திகைப்பு எழுந்தாலும் அதை அவர் காட்டிக் கொள்ளவில்லை. அவனாக ஏதாவது சொல்வானா என்று காத்திருந்தார். ஆனால் இம்மானுவல் அதைப் பற்றிப் பேசாமல் உளவுத்துறையின் வேறு விஷயங்களைப் பற்றிப் பேச ஆரம்பித்தான்.

அவருக்கு அவனிடம் பேசிக் கொண்டிருக்கும் போது அவன் விஸ்வத்தின் கூட்டாளி பற்றிச் சேகரித்திருக்கும் தகவல்கள் என்னவாக இருக்கும் என்ற சிந்தனையே மேலோங்கி இருந்தது.

சிந்து விஸ்வத்துடன் பேசி முடித்த பின் பெரும் மனக்குழப்பத்தில் இருந்தாள். பேசியது விஸ்வம் தானா என்கிற சந்தேகம் அவளுக்கு இன்னும் சிறிது இருந்தது. அந்தக் குரல் விஸ்வத்துடையதல்ல. ஆனால் பேசிய விதம் விஸ்வத்தினுடையதே. என்ன ஆக வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும் என்று தெரிவித்ததில் இருந்த தெளிவு விஸ்வத்தின் தனித்தன்மையே. அவள் மிகவும் கவனமாக அவன் சொன்னதை எல்லாம் கேட்டிருந்தாள். அவன் செய்ய முடியுமா? செய்கிறாயா? என்றெல்லாம் கேட்கவில்லை. அந்தக் கேள்விகளை அவன் முதல் சந்திப்புக்குப் பிறகு அவளிடம் இது வரை என்றுமே கேட்டதில்லை. கட்டளை மட்டுமே அவனிடமிருந்து எப்போதும் வரும். இப்போதும் அது மட்டுமே வந்திருக்கிறது. இதுவும் அவனுடைய தனித்தன்மை தான். ஆனால் மனக்குழப்பத்தில் அவள் இருந்ததற்கு மூன்று காரணங்கள் இருந்தன.

முதல் காரணம் அவன் இது போன்ற வேலையை இதுவரை கொடுத்ததில்லை. குடும்பம், பாசம், காதல் செண்டிமெண்ட் போன்றவற்றின் மீது அவனுக்கு என்றுமே நல்லபிப்பிராயம் இருந்தது கிடையாது. அவற்றைப் பயன்படுத்தி எதையும் சாதிக்க நினைக்கும் ரகமும் அவன் அல்ல என்பதை அவள் முன்பே கணித்திருந்தாள். ஆனால் முதல் முறையாக இதைச் செய்யச் சொல்கிறான். குரல் மாற்றத்திற்கு அடுத்தபடியாக அவன் கொடுத்த இந்த வேலையின் இயல்பும் அவளைச் சந்தேகிக்க வைத்தது.

இரண்டாவது காரணம் அவளுக்கும் அவனைப் போலவே குடும்பம், பாசம், காதல், செண்டிமெண்ட்களில் கடுகளவு நம்பிக்கையும் கிடையாது. ஈடுபாடும் கிடையாது. நடிப்புக்காகக்கூட அவற்றில் ஈடுபடுவது அவளுக்கு வெறுப்பாக இருந்தது.

மூன்றாவது காரணம் இந்த வேலையில் இருந்த ஆபத்து. இது வரை அவள் விஸ்வத்திற்காகச் செய்து கொடுத்திருந்த வேலைகள் எல்லாம் ரகசியமாய், அசாத்தியத் திறமையுடன் செய்ய வேண்டியிருந்தவை. சிலநாள் திட்டமிட்டாலும் ஓரிரு நாளில் செயல்படுத்தி அங்கிருந்து கிளம்பி வந்து விட முடியும். ஆனால் இந்த வேலை அப்படியல்ல. தமிழக முதலமைச்சரின் குடும்பத்தில் நுழைவதும் நீண்ட நாட்கள் அவர்களுடன் தங்குவதும் கண்டிப்பாக ரகசியமாய் வைத்திருக்க முடிந்ததல்ல. வேலை முடிந்து அவள் சந்தேகத்திற்கு ஆளாகாமல் அங்கிருந்து தப்பிப்பதும் சுலபமாய் முடிந்த வேலை அல்ல. சின்னத் தவறு நேர்ந்தாலும் வாழ்நாள் பூராவும் சிறையில் இருக்க வேண்டி வரும். அல்லது மரண தண்டனை கூட கிடைக்கலாம். ஜெயித்தால் ஏராளமான கோடிகள் கிடைக்கும். ஆனாலும் இந்த ஆபத்து நிறைந்த, சுத்தமாகப் பிடிக்காத வேலையில் ஈடுபடுவது தேவை தானா என்று யோசித்தாள்.

இந்த மனக்குழப்பமும், தயக்கமும் விஸ்வம் வேலையைப் பற்றி அவளிடம் சொல்லிக் கொண்டிருந்த போதே அவளுக்கு எழ ஆரம்பித்திருந்தது. அவனிடம் அவள் சரி என்று கூட சொல்லவில்லை. பேசும் ஆள் அவன் தானா, இல்லை இது விஸ்வத்தின் எதிரிகள் அவளுக்காக விரிக்கும் வலையா என்று கூட சந்தேகமும் இருந்ததால் அவள் ஒரு வார்த்தை கூட பேசவும் இல்லை. பதிலை எதுவும் எதிர்பார்க்காமல் அவன் பேச்சை முடித்துக் கொண்டதைப் பார்க்கையில் இப்போது அவளுக்கு விஸ்வம் தான் பேசியது என்று உறுதியாகத் தோன்றியது. அதை நிரூபிப்பது போல முப்பது லட்சம் ரூபாய் அவளுடைய கணக்கில் சேர்க்கப்பட்டு விட்டதாக குறுந்தகவல் அவளுடைய அலைபேசிக்கு வந்து சேர்ந்தது.

இத்தனை பெரிய தொகை அவளுக்கு இது வரைக்கும் எந்த வேலைக்கும் கிடைத்ததில்லை. இனி அவள் மறுக்க முடியாது. மறுத்து விட்டு நீண்ட நாட்கள் உயிரோடு இருந்து விட முடியாது. விஸ்வாஸ்ஜியாக அறிமுகமாகிய அந்த மனிதன் மிக மிக ஆபத்தானவன் என்பதை அவள் இந்த இரண்டு வருடங்களில் மிக நன்றாக அறிவாள். இரண்டு வருடங்களுக்கு முன்பு மும்பை விமான நிலையத்தில் மார்வாடி சேட்டின் வேடத்தில் இருந்த அவன் பர்ஸைத் திருட நினைத்தது அவள் வாழ்க்கையில் செய்த மிகப்பெரிய தவறோ என்று அவளுக்குப் பல சமயங்களில் தோன்றி இருக்கிறது. அவள் வாழ்க்கையில் பிடிபட்டது அவன் ஒருவனிடம் தான்.

அவன் தோற்றம் பொய் என்பது அவள் அவன் பர்ஸை ஜேப்படி செய்த அடுத்த வினாடியில் அவன் இரும்புப்பிடி பிடித்த போதே அவளுக்குப் புரிந்து விட்டது. ரெஸ்டாரண்டில் அவளிடம் அவன் தமிழில் என்ன சாப்பிடுகிறாய் என்பது அவளுக்கு அடுத்த அதிர்ச்சியாக இருந்தது. அவள் தமிழ்க்காரி என்பது அவனுக்கு எப்படித் தெரியும் என்று திகைத்தாள். அவர்கள் இருப்பது மும்பையில். அவள் அந்த விமான நிலையத்தில் ஒருவரிடம் கூடத் தமிழில் பேசியிருக்கவில்லை. ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும் மட்டுமே தான் பேசி இருக்கிறாள். அவளுக்குத் தமிழ் தெரியும் என்பதற்குக் கூட எந்த அறிகுறியும் அவள் காட்டியிருக்கவில்லை. ஆனாலும் அவன் கண்டுபிடித்து விட்டான்.

காபி குடித்துக் கொண்டிருக்கையில் அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அந்தப் பார்வையிலேயே அவளுடைய அத்தனை ரகசியங்களையும் அவன் தெரிந்து கொண்டு விட்டான் என்று அவள் உள்ளுணர்வு சொன்னது. அவள் வாழ்க்கை வரலாறையே அவன் படித்துக் கொண்டிருக்கிறான் என்ற உணர்வு அவளுக்கு மேலிட்டது.

இருவரும் காபி குடித்து முடித்த போது அவன் சொன்னான். “உன் திறமைக்கு நீ சின்னச் சின்னத் திருட்டுகளில் ஈடுபடக்கூடாது”

அவளுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. ஒரே நேரத்தில் அவளுக்கு அவமானமாகவும், பெருமையாகவும் இருந்தது. அவனிடமிருந்து தப்பித்தால் போதும் என்று தோன்ற ஆரம்பித்தது.

அவன் அவளிடம் சொன்னான். “உன் திறமைக்கு ஏற்ற வேலைகள் வரும் போது சொல்கிறேன். லட்சக்கணக்கில் நீ சம்பாதிக்கலாம். செய்வாயா?”

அவன் சொல்வதை எந்த அளவு நம்பலாம் என்று அவளுக்குத் தெரியவில்லை. அவனிடமிருந்து தப்பித்தால் போதும் என்ற எண்ணம் வலுவடைய ஆரம்பித்தாலும் அவள் அதைக் காட்டிக் கொள்ளாமல் "சரி விஸ்வாஸ்ஜி" என்று .சொன்னாள்.

அவனுக்கு அவள் பெயர் சொல்லி அழைத்தது வேடிக்கையாக இருந்ததாகத் தோன்றியது. "அவ்வளவு நீளம் வேண்டாம். விஸ்வம் என்றே கூப்பிடு" என்றான். அவள் தலையசைத்தாள். அதுவாவது அவனுடைய உண்மையான பெயரா இல்லை விஸ்வாஸ்ஜியின் சுருக்கமா என்று அவள் யோசித்தாள்.

அவன் எழுந்து சென்று விட்டான். வேலை கொடுக்கிறேன் என்றவன் அவளுடைய போன் நம்பரை வாங்காததும், விலாசத்தை வாங்கிக் கொள்ளாததும் விசித்திரமாக இருந்தாலும் விட்டது சனியன் என்ற எண்ணமும் வந்தது. நிம்மதியுடன் அவளும் ரெஸ்டாரெண்டில் இருந்து வெளியே வந்தாள். அவன் எங்கும் கண்ணில் படவில்லை.

ஆனால் மூன்று மாதங்கள் கழித்து விஸ்வம் அவளுக்கு ஒரு வேலை விஷயமாகப் போன் செய்தான்.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, April 9, 2020

இல்லுமினாட்டி 44

விஸ்வத்துக்கு எப்படி அவளுடைய அலைபேசி எண் கிடைத்தது என்று சிந்து திகைத்தபடி அவன் சொன்ன வேலையைக் கேட்டுக் கொண்டாள். என்ன செய்ய வேண்டும் எப்படிச் செய்ய வேண்டும் என்று தெளிவாகச் சொன்ன அவன் முன்பணமாக இரண்டு லட்சம் ரூபாய் அனுப்பி வைத்தான். அந்த வேலையை அவள் செய்யும் போது அவன் உடன் இருந்து பார்த்துக் கொண்டிருப்பது போன்ற பிரமை மட்டும் அவளுக்கு இருந்து கொண்டேயிருந்தது. கூடவே அவனுக்கு அந்த வேலை ஒன்றும் மிக முக்கியமான வேலை அல்லவென்றும் அவள் எப்படி அந்த வேலையைச் செய்கிறாள் என்பதைப் பார்ப்பதற்காகவே அந்த வேலையை ஒப்படைத்து இருக்கிறான் என்றும் உள்ளுணர்வு சொன்னது. அந்த உள்ளுணர்வு உண்மையா என்று தெரியவில்லை. ஆனால் மிக புத்திசாலித்தனமும், தைரியமும் கொண்ட அவள் அவன் சொன்ன மாதிரியே அந்த வேலையைச் செய்து முடித்தாள். முடித்த அரை மணி நேரத்தில் மீதித் தொகை மூன்று லட்சம் ரூபாய் அவள் வங்கிக் கணக்கில் வந்து சேர்ந்தது. அவளுக்கு அவன் பண விஷயத்தில் மிகவும் ஒழுங்காக இருப்பது பிடித்திருந்தது.

அவன் ஆபத்தானவன், தவறுகள் நேர்ந்து விட்டாலோ, அவன் ரகசியங்களை வெளியிட்டாலோ சிறிதும் தயங்காமல் அவள் உயிரை எடுத்து விடுவான் என்பதை சிந்து வார்த்தைகளில்லாமலேயே உணர்ந்திருந்தாள். அதையும் மீறிப் பணம் அவளை அவன் தந்த அடுத்த வேலைகளையும் செய்ய வைத்தது. வேலையில் இருக்கிற ஆபத்திற்கேற்ற மாதிரி அவன் பணம் அனுப்பி வைத்தான். முதல் வேலையில் இருந்தது போல் மற்ற வேலைகள் செய்யும் போது அவன் அருகில் இருந்து பார்க்கிற பிரமை அவளுக்கு ஏற்படவில்லை. முக்கியமான கணங்களில் மட்டும் அவள் அவன் இல்லாத போதும் அவனுடைய தீட்சண்யப் பார்வையை உணர்ந்தாள். இது வரை அவளுக்கு அதிகபட்சமாய் பத்து லட்ச ரூபாய் தான் ஊதியமாகக் கிடைத்திருக்கிறது. முதல் முறையாக முன்பணமாகவே முப்பது லட்சம் ரூபாய் கிடைத்திருக்கிறது என்பது ஆபத்தின் அளவையும் சொல்லி அவளை எச்சரித்தது. ஆனால் அவள் ஆபத்துக்கெல்லாம் அசருபவள் அல்ல. ஆபத்தான வேலைகளையும் அசாத்தியத் துணிச்சலுடன் கச்சிதமாகச் செய்யும் போது கிடைக்கும் சுகமே தனி.

ஆனால் வேலை ஒரு குடும்பத்தோடு ஒட்டி உறவாடுவதாக இருந்தது தான் அவளுக்கு கசப்பாக இருந்தது. 'ஒரு இயல்பான குடும்பம் எனக்கு அமைந்து இருந்தால் இந்தக் கசப்பை உணர்ந்திருக்க மாட்டேன்' என்று நினைத்துக் கொண்டாள். கூடவே 'ஒரு இயல்பான குடும்பம் அமைந்திருந்தால் நீ இப்படிப்பட்ட ஒருத்தியாக ஆகி இருக்கவும் மாட்டாய்' என்று உள்மனதில் இருந்து ஒரு குரல் வந்தது...

அவளுக்கு மூன்று வயதாக இருக்கும் போது அவள் தாய் தன் பழைய காதலனுடன் ஓடிப் போனாள். அன்றிலிருந்து அவள் தாயோடு தந்தையையும் மானசீகமாக இழந்து விட்டாள். பார்க்க அவள் தாயின் சாயலில் இருந்ததாலோ என்னவோ தாயின் தவறுக்கு அவளை அவள் தந்தை வெறுக்க ஆரம்பித்தார். அந்த நாளுக்குப் பிறகு அவள் அவர் எதிரில் வரும் போதெல்லாம் அவர் முகத்தில் அந்த வெறுப்பு கொப்பளிக்கும். வாய் விட்டு அவர் எதுவும் சொன்னதில்லை. ஆனால் அந்த வெறுப்பு காலப்போக்கிலும் குறையவில்லை.

அவர் ஒரு வருடத்தில் மறுமணம் செய்து கொண்டார். சிந்து மேல் அவருக்கு இருந்த வெறுப்பு அவருடைய இரண்டாம் மனைவிக்கும் தொற்றிக் கொண்டது. அவர்கள் இருவரும் சிந்துவை அடித்துத் துன்புறுத்தவில்லை. ஆனால் அவளைத் தவிர்க்க முடியாத சுமையாகவே நினைத்தார்கள். அதை அனைத்து விதங்களிலும் வார்த்தைகள் இல்லாமல் தெரிவித்தார்கள். தந்தைக்கு இன்னொரு மகள் பிறந்தாள். அந்தக் குழந்தையைக் கொண்டாடினார்கள்.

தங்கை பிறந்ததில் சிந்துவும் மகிழ்ந்தாள். பெற்றோரிடம் கிடைக்காத அன்பு அந்தத் தங்கையிடமிருந்தாவது கிடைக்கும் என்று அவள் எதிர்பார்த்தாள். ஆனால் அவர்கள் அவளைத் தங்கையிடம் நெருங்க விடவில்லை. நேரா நேரத்திற்கு அவளுக்குச் சாப்பாடு போட்டார்கள். அதைச் சாப்பிட்டு விட்டு அவள் மறைவாக அவளுடைய அறையில் இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தார்கள். அந்த வெறுப்பைப் பார்த்தும், ஓரிரு வார்த்தைகளில் வந்த உத்தரவைக் கேட்டும் அவள் அப்படியே இருக்க வேண்டி வந்தது. அவளுடைய தங்கையும் அக்கா மீது வெறுப்பை ஊட்டியே வளர்க்கப்பட்டாள். தோற்றத்திலும், புத்திசாலித்தனத்திலும் அவளுக்கு இணையாக இருக்காத அவள் தங்கைக்கு அவளை வெறுக்க, பிறகு அதுவே காரணமாக அமைந்தது. சிந்துவுக்கு வீடு நரகமாக ஆரம்பித்தது.

வீட்டை விடப் பள்ளிக்கூடம் பரவாயில்லை என்று சிந்து நினைக்க ஆரம்பித்தாள். இயல்பாகவே இருந்த அறிவால் பரிட்சைகளில் மிக நல்ல மதிப்பெண்கள் வாங்குவாள். வகுப்பில் என்றுமே முதலாவதாக வருவாள். ஆனால் கையெழுத்துக்கு அந்த மதிப்பெண் அட்டையைத் தந்தையிடம் தரும் போது ஒரு முறை கூட அவர் முகத்தில் பெருமிதமோ, வெறுப்பின் குறைவோ தெரியவில்லை. அவர்களுடைய வெறுப்பை அதிகரிக்கிற மாதிரி அவள் தங்கை படிப்பில் மிகவும் பின்தங்கியே இருந்தாள். சிந்துவின் தந்தைக்கும் சித்திக்கும் அவர்கள் இருவருடைய மதிப்பெண்களையும் சகிக்க முடியவில்லை. தங்கைக்கு டியூஷன் வைத்தார்கள். அவர்களும் மாய்ந்து மாய்ந்து சொல்லிக் கொடுத்தார்கள். ஆனாலும் அதிகபட்சமாக அவளுக்கு வகுப்பில் ஐந்தாமிடத்தைத் தான் கஷ்டப்பட்டுப் பெற முடிந்தது.

அவளுடைய சித்தி ஒரு முறை அவர்களுடைய பள்ளிக்கூடத்திற்கு வந்து போன பிறகு அவளுடைய தோழிகளும், ஆசிரியைகளும் அவளை வித்தியாசமாகப் பார்க்க ஆரம்பித்தார்கள். சிலர் பார்வை இகழ்ச்சியாக இருந்தது. சிலர் பார்வை இரக்கமாக இருந்தது. ஒரு ஓடுகாலியின் மகளாகப் பார்க்கப்படுகிற இரண்டுமே அவளுக்கு தாங்க முடியாததாய் இருந்தது. தோழிகளிடமிருந்தும் சிந்து மெள்ள மெள்ள ஒதுங்க ஆரம்பித்தாள்.

பத்தாவது வகுப்பு முடிந்தவுடன் அவள் தந்தை அவளை ஒரு வெளியூர்ப் பள்ளியில் சேர்த்து ஹாஸ்டலிலும் சேர்த்து விட்டார். அந்த நரக வீட்டுக்கு ஹாஸ்டலே தேவலை என்று சிந்துவுக்கு இருந்தது. சிறிய சிறிய விடுமுறைகளில் ஹாஸ்டலில் இருக்கிற பக்கத்து ஊர்ப் பிள்ளைகள் தங்கள் வீடுகளுக்குப் போய் விடுவார்கள். தூரத்து ஊர்ப் பிள்ளைகள் சிலர் மட்டும் தான் ஹாஸ்டலில் இருப்பார்கள். அவர்களோடு சேர்ந்து சிந்துவும் ஹாஸ்டலில் இருப்பாள். முழுவருடமும் முடிந்து கோடை விடுமுறையில் மற்ற அனைவரும் போய் ஹாஸ்டலையே மூடி விடுவார்கள் என்பதால் அப்போது மட்டும் சிந்துவும் வீட்டுக்குப் போக வேண்டி வரும். அந்த ஒன்றரை மாத காலம் அவளும் அந்த வீட்டை நரகமாய் உணர்வாள். தந்தை, சித்தி, தங்கை மூவரும் கூட நரகமாய் உணர்வார்கள்.

மிக அழகான பெண்ணாய், மிக நல்ல மதிப்பெண்கள் வாங்கியிருக்கும் பெண்ணாய் வளர்ந்த அவளை யாராவது புகழ்ந்தாலோ, பாராட்டுப் பார்வை பார்த்தாலோ கூட அவர்களால் தாங்க முடியவில்லை. அவள் பட்டப்படிப்பின் முதல் ஆண்டு விடுமுறையில் வீட்டுக்கு வந்த போது அவள் தந்தை அவளை விடுமுறைகளில் வேலை பார்க்கச் சொன்னார். அவருக்குப் பணக்கஷ்டம் இருப்பதாகச் சொன்னார். இனி விடுமுறைகளில் கூட வரவேண்டாம் என்று சொல்வதை அவள் புரிந்து கொண்டாள். இந்தத் தகப்பனிடம் இருந்து இனி ஒரு ரூபாய் கூட தன் செலவுக்கு வாங்கக்கூடாது என்று அந்தக் கணமே சிந்து முடிவு செய்து விட்டாள். தன் படிப்பு, ஹாஸ்டல் செலவும் இரண்டையும் தானே பார்த்துக் கொள்வதாய் அவள் சொன்ன போது சம்பிரதாயத்துக்குக் கூட அவள் தந்தை மறுப்புத் தெரிவிக்கவில்லை. சரி என்றார். அந்த விடுமுறையில் அந்த வீட்டில் இருந்து வெளியேறிய அவள் பின் எப்போதும் அங்கே திரும்பவும் போகவில்லை. அவரும் அவளைக் கூப்பிட்டு ஒருமுறையும் விசாரிக்கவில்லை.

சிந்து படித்துக் கொண்டே பகுதி நேர வேலைகளுக்குப் போனாள். அவளுக்குச் சில சமயங்களில் அந்தச் சம்பாத்தியம் படிப்புக்கும், ஹாஸ்டல் செலவுக்கும் போதவில்லை. ஆனால் தந்தையிடம் கேட்பதற்குப் பதில் திருடினால் கூடத் தப்பில்லை என்று தோன்றியது. மிகவும் சாமர்த்தியமாக நகைக் கடை ஒன்றில் திருடினாள். கண்காணிப்புக் கேமிராக்கள் இருந்த போதிலும் அந்தக் கேமிராவில் சிக்காமல் அவளால் திருட முடிந்தது அவளுக்குப் பெருமையாக இருந்தது. ஆரம்பத்தில் அவசியத்துக்காகத் திருடியது பிறகு சௌகரிய வாழ்க்கைக்காகவும், பிறகு ஆடம்பர வாழ்க்கைக்காகவும் நீண்டது. அவள் அதைத் தவறு என்று நினைக்கவில்லை. தன் திறமைக்குக் கிடைத்த ஊதியமாகத் தான் நினைத்தாள். அவள் தன் திருட்டுகளில் ஒரு முறை கூட சிக்கிக் கொள்ளவில்லை. அதில் அவளுக்கு ஒருவித கர்வம் இருந்தது. அவள் கர்வம் குறைந்தது விஸ்வத்திடம் அகப்பட்ட பிறகு தான்...

விஸ்வம் ஐந்து பேர்களைப் பற்றி அனுப்பி இருந்த முழுவிவரங்கள் அவளுக்கு வந்து சேர்ந்தன. கமலக்கண்ணன், பத்மாவதி, உதய், க்ரிஷ், ஹரிணி என்ற பெயர்களில் அனுப்பி இருந்த விவரங்களை சிந்து படிக்க ஆரம்பித்தாள்.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, April 16, 2020

இல்லுமினாட்டி 45

க்ரிஷ் அக்‌ஷயிடம் சொன்னான். "நான் சொல்லப் போகும் விஷயம் கொஞ்சம் நீளமானது. நாம் இங்கே எங்கேயாவது உட்கார்ந்து கொண்டு பேசலாமா?"

அக்‌ஷய் க்ரிஷைக் கூர்ந்து பார்த்து விட்டுச் சம்மதித்து அந்த மைதானத்தில் இப்போது காலியாகி இருந்த பார்வையாளர்கள் அமரும் இடத்தை நோக்கிக் கையைக் காண்பித்தான். வெட்ட வெளியில் பேசுவது தான் பாதுகாப்பு என்று அவனுக்குத் தோன்றியது. க்ரிஷை நம்பின அளவுக்கு அவனுடன் வந்திருந்த எட்டு பேரை அவன் நம்பவில்லை. பார்வையாளர்கள் அமரும் இடம் நோக்கி அவர்கள் இருவரும் நடந்தார்கள். அவர்கள் ஓரிடத்தில் உட்கார்ந்த பிறகு அந்த எட்டு பேரில் இருவர் ஏதோ சுவாரசியமாகப் பேசிக் கொண்டே தாங்களும் உட்கார்ந்து பேசத் தீர்மானித்தது போல் காண்பித்துக் கொண்டு சுமார் நாற்பது அடி தள்ளி அமர்ந்து கொண்டார்கள். மற்ற அறுவரும் அக்‌ஷய் கண்ணுக்குத் தென்படவில்லை என்றாலும் அந்த மைதானத்தைச் சுற்றிலும் தான் இருப்பார்கள் என்பதை யூகித்தான். க்ரிஷ் என்ன சொல்லப் போகிறான் என்பதைக் கேட்க அவன் ஆர்வமாய் இருந்தான்.

க்ரிஷ் தன்னை வேற்றுக்கிரகவாசி தொடர்பு கொண்டதிலிருந்து அக்‌ஷயிடம் சொல்ல ஆரம்பித்தான். வேற்றுக்கிரகவாசி அவனைக் காப்பாற்றியது, அவனுக்குத் தெரிவித்த உலக அழிவு குறித்த செய்தி, மாஸ்டர், அவரது ரகசிய ஆன்மிக இயக்கம், விஸ்வம், அவன் செயல்பாடுகள் எல்லாம் சொல்லிக் கொண்டே வந்தான். அக்‌ஷய் மிக உன்னிப்பாகவும், பிரமிப்புடனும் அதைக் கேட்டுக் கொண்டே வந்தான். வேற்றுக்கிரகவாசி க்ரிஷைத் தொடர்பு கொண்ட முறை அவனை மெய்சிலிர்க்க வைத்தது. வேற்றுக்கிரகவாசி சொன்ன விஷயங்கள் சத்தியமானவை என்று உள்மனம் சொன்னது. விஸ்வமும், மாஸ்டரும் ஒருங்கே அவனைப் பிரமிக்க வைத்தார்கள். க்ரிஷ் வாயிலிருந்து அந்தத் தகவல்கள் வராமல் வேறு யாராவது இதையெல்லாம் சொல்லி இருந்தால் அவன் முழுவதுமாக நம்ப மறுத்திருப்பான். ஆனால் க்ரிஷின் வெளிப்படையான, ஆத்மார்த்தமான பேச்சு அவன் சொல்வதெல்லாம் உண்மை, உண்மையைத் தவிர வேறில்லை என்பதை அவனுக்கு உணர்த்தியது. மாஸ்டரிடம் க்ரிஷ் கற்றுக் கொள்ளப் போனதையும் அவர் சொல்லிக் கொடுத்த பாடங்களை அவன் கற்றுக் கொண்ட போது உணர்ந்ததையும் சொன்ன போது ஒரு கணம் அவனிடம் அக்‌ஷய் தன்னையே பார்த்தான். இருவர் மனநிலைகளிலும் நிறைய ஒற்றுமை இருந்தது.

க்ரிஷிடம் இல்லுமினாட்டி என்ற ஒரு வார்த்தையை மட்டும் அக்‌ஷயிடம் பேசும் போது எந்தக் கட்டத்திலும் பயன்படுத்த வேண்டாம் என்றும், வேறு பெயர் பயன்படுத்தினாலும் இப்போது அவன் அதன் உறுப்பினர் என்பதைத் தெரிவிக்க வேண்டாம் என்றும் எர்னெஸ்டோ சொல்லி இருந்தார். அவன் அவர்களுக்கு உதவ ஒப்புக் கொண்டு அங்கே சென்ற பிறகு அவனுக்குத் தெரிவித்தால் போதும் என்றும், ஒருவேளை மறுத்தால் அவனுக்கு முன்பே தெரிவித்திருப்பது தேவையில்லாத தகவல் பரிமாற்றமாகி விடும் என்றும் அவர் நினைத்தார். அதனால் விஸ்வம் இல்லுமினாட்டியில் சேர்ந்ததைச் சொல்ல வந்த போது அதை க்ரிஷ் விஸ்வம் ஏதோ ஒரு சக்தி வாய்ந்த இயக்கத்தில் சேர்ந்ததாகத் தெரிய வந்ததாகப் பொதுவாகச் சொன்னான்.

அது வரை இயல்பாகச் சொல்லி வந்தவன் சற்று யோசித்துச் சொல்ல ஆரம்பித்ததைக் கண்ட அக்‌ஷய் மனதுக்குள் புன்னகைத்தான். அதிகம் பொய் பேசி அறியாதவர்களுக்கு உண்மைகளை மறைப்பது சிரமமான செயல் தான்...

இல்லுமினாட்டி தவசி அகஸ்டின் பற்றியும், இல்லுமினாட்டி சின்னம் பற்றியும் கூடச் சொல்வதைத் தவிர்த்த க்ரிஷ் விஸ்வம் அந்த இயக்கத்தில் சேர்ந்த பின் அவனைப் பற்றி அறிய அந்த இயக்கத்தின் உறுப்பினர் க்ரிஷைத் தொடர்பு கொண்டதாகவும் அவரிடம் அனைத்து உண்மைகளையும் க்ரிஷ் சொன்னதாகவும், பின் அதுபற்றி அந்த இயக்கத்தினர் விஸ்வத்தைக் கேட்ட போது விஸ்வம் மறுத்ததாகவும், ஆனாலும் அவனை இயக்கத்தில் இருந்து நீக்க அதன் தலைவர் தீர்மானித்ததாகவும், அந்த நேரத்தில் மர்மமான முறையில் அவன் இறந்ததாகத் தெரிய வந்ததாகவும் சொன்னான். அதன் பிறகு அவன் கூடு விட்டு கூடு பாய்ந்ததாக அவர்கள் நினைக்கும் சம்பவங்கள் நடந்ததை விவரித்துச் சொன்னான்.

பொதுவாக அக்‌ஷய் எதற்கும் அசருபவன் அல்ல. ஆனால் விஸ்வத்தின் சக்திகளும், அதிலும் கடைசியாக அவன் பிரயோகித்த இந்தக் கூடு விட்டுக் கூடு பாயும் சக்தியும் அக்‌ஷயை அசர வைத்தது. என்ன மனிதனவன் என்று அவனால் பிரமிக்காமல் இருக்க முடியவில்லை.

க்ரிஷ் கவனமாகத் தொடந்தான். "அந்த சக்தி வாய்ந்த இயக்கத்திலிருந்து என்னை முதலில் தொடர்பு கொண்ட உறுப்பினர் தான் இதை எல்லாம் எனக்குத் தெரிவித்து விட்டு என்னை ஜாக்கிரதையாக இருக்கச் சொன்னார். அவர்கள் விஸ்வம் கண்டிப்பாக ஆறே மாதத்தில் பலம் பெற்று விடுவான் என்று நம்புகிறார்கள். அப்படி அவன் பலம் பெற்று விட்டால் அவனைக் காட்டிக் கொடுத்த என்னையும், அவனை அந்த இயக்கத்திலிருந்து நீக்க நினைத்த அதன் தலைவரையும் கொல்ல முயற்சி செய்வான் என்று நினைக்கிறார்கள்... இந்த நிலைமையில் இந்த அமானுஷ்ய சக்திகளைக் கையாள முடிந்த ஒரு திறமைசாலியின் உதவி கிடைத்தால் நல்லது என்று நினைக்கிறார்கள்..."

அக்‌ஷய்க்கு அந்த இயக்கம் இல்லுமினாட்டி என்பது சந்தேகத்திற்கு இடமில்லாமல் தெரிந்து விட்டது. இல்லுமினாட்டி இருப்பது உண்மை என்பதை ஏற்கெனவே அறிந்திருந்த அக்‌ஷய் விஸ்வத்தைப் போன்ற ஒருவன் சென்று சேர ஆசைப்படும் இடம் அதை விடக்குறைவாக இருக்க வழியில்லை என்பதையும் சுலபமாக யூகித்தான். தங்கள் உறுப்பினர் அல்லாத ஒருவனை இல்லுமினாட்டி தூதாக அனுப்பியிருக்க வழியில்லை என்பதை உணர்ந்த அவன் க்ரிஷ் அந்த இயக்கத்தின் உறுப்பினராக இருக்கிறவன் என்பதையும் சுலபமாகக் கணித்தான். க்ரிஷ் கவனமாக யோசித்துப் பேச ஆரம்பித்ததிலிருந்து கூட்டிக் கழித்துப் பார்த்தவனுக்கு உண்மையாக நடந்திருக்கக்கூடியது ஓரளவு நிச்சயமாகவே புரிந்தது. ஆனால் அதை வெளியே காண்பித்துக் கொள்ளாத அக்‌ஷய் சொன்னான். "அதற்கு உங்கள் மாஸ்டரை விடப் பொருத்தமான ஆள் அவர்களுக்குக் கிடைக்காது என்று நான் நினைக்கிறேன்"

சில நாட்களுக்கு முன்பிருந்தே ஞான வைராக்கிய எண்ணங்களால் ஆட்கொள்ளப்பட்டிருந்த மாஸ்டர் சமீபத்தில் இமயமலைக்குத் தவம் செய்யப் போய் விட்டதாக க்ரிஷ் தெரிவித்து விட்டுச் சொன்னான். "உங்களால் உதவ முடியுமா என்று கேட்கத் தான் என்னை அனுப்பியிருக்கிறார்கள்"

அக்‌ஷயின் பார்வை தூர இருந்த மலை முகட்டுக்கு நகர்ந்தது. பல சமயங்களில் சொல்ல வேண்டியது "முடியாது" என்ற பதிலைத் தான் என்றாலும் அதை எல்லோரிடமும் சுலபமாகச் சொல்லி விட முடிவதில்லை. இவனைப் போன்ற நல்ல இளைஞனிடம் அதை மனம் நோகடிக்காமல் நாசுக்காகச் சொல்வதெப்படி என்று அக்‌ஷய் யோசித்தான். அவன் சொல்லாமலேயே பதிலை க்ரிஷ் உணர்ந்து ஏமாற்றமடைந்தாலும் அவன் சொல்லட்டும் என்று அமைதியாகக் காத்திருந்தான்.

அக்‌ஷய் அவனைப் பார்த்து அன்புடன் வருத்தம் கலந்து புன்னகைத்து விட்டுச் சொன்னான். "க்ரிஷ். மிக ரகசியமாக நான் இங்கே வாழ்ந்து வந்தாலும் என்னைப் பற்றி முழுவதும் தெரிந்து வைத்து, நான் இங்கே இருப்பதைக் கண்டு பிடித்து, என்னிடம் பேச உன்னை அனுப்பி இருப்பதிலேயே எத்தனை சக்தி வாய்ந்த இடத்தில் அந்த இயக்கம் இருக்கிறது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. அப்படிப்பட்ட இயக்கம் என்னை ஒரு பொருட்டாக நினைத்து என்னிடம் உதவி கேட்டது எனக்கு பெருமையாக இருந்தாலும் அதை ஏற்க முடியாத நிலைமையில் நான் இருக்கிறேன் என்று நீ அவர்களிடம் சொல். ஏற்கெனவே தலிபான் என் தலைக்குப் பெரிய விலை வைத்திருக்கிறது. என் குழந்தைகள் கூட என்னைப் பயமுறுத்துவதற்காக முன்பு கடத்தப்பட்டிருக்கிறார்கள். கடவுள் அருளால் எப்படியோ காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள் என்றாலும் இனியும் நான் வெளியே வந்து ஆபத்துகளில் இறங்க விரும்பவில்லை. ஒவ்வொரு தடவை நான் கிளம்பும் போதும் பயத்துடன் தான் என் குடும்பம் என்னை அனுப்பி இருக்கிறது. நான் திரும்பி வரும் வரை அவர்கள் ஒரு நிமிஷமும் நிம்மதியாக இருந்ததில்லை. இனியும் அவர்களை அந்த நிலைமையில் விட்டுப் போவது நியாயம் என்று தோன்றவில்லை. நான் சாகசம் செய்த காலம் முன்பு நிறைய இருந்திருக்கிறது. ஆனால் இப்போது எனக்கு அந்த வயதுமில்லை. அதற்கான மனமும் இல்லை. மீதி இருக்கும் காலத்தில் அன்பான குடும்பத்துடன் அமைதியாக வாழ ஆசைப்படுகிறேன். நான் மறுப்பதற்குக் காரணம் அது மட்டுமல்ல. ஒரு மாநில முதலமைச்சர் மகனான உனக்கும், ஒரு சக்தி வாய்ந்த இயக்கத்தின் தலைவருக்கும் ஒரு பெரிய பட்டாளமே பாதுகாப்பு தர முடியும். அதை விட அதிகமாகத் தனிமனிதனான நான் தந்து விட முடியாது. நீ சொல்கிற விஸ்வத்தின் சக்திகளை எல்லாம் பார்த்தால் அவனுக்கு நான் எந்த விதத்திலும் சமமானவனும் கிடையாது...."

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, April 23, 2020

இல்லுமினாட்டி 46

அக்ஷயிடம் க்ரிஷ் சொன்னான். "நீங்கள் விஸ்வத்தின் சக்திகளின் அளவைப் பார்த்து விட்டு அவனுக்கு இணையானவர் நீங்கள் அல்ல என்கிறீர்கள். இருக்கலாம். ஆனால் நீங்களும் சாதாரணமானவர் அல்ல என்று பலர் சொல்கிறார்கள். உங்களை அமானுஷ்யன் என்ற பெயரால் மட்டுமே அவர்கள் அழைக்கும் அளவில் தான் நீங்களும் உயர்ந்திருக்கிறீர்கள்..."

அக்ஷய்க்கு அவனுடைய மறுப்பை க்ரிஷ் உடனடியாக ஏற்றுக் கொள்ளாமல் பேசுவது தர்மசங்கடத்தைத் தந்தது. அவன் வருத்தம் கலந்த மெலிதான புன்னகையுடன் சொன்னான். "என்னை அப்படிக் கூப்பிடுபவர்கள் யாரும் விஸ்வத்தை அறியாதவர்கள். அவர்கள் அவனைப் பற்றியும் தெரிந்து வைத்திருந்தால் நான் மூன்றாம் வகுப்பு படிக்கும் கல்வியில் அவன் தங்கப்பதக்கம் பெற்ற பட்டதாரி என்று சொல்வார்கள்."

க்ரிஷ் சொன்னான். "இருக்கலாம். ஆனால் அவனிடம் மிகப்பெரிய பலவீனம் இருக்கிறது. அது அதர்மம். அது தற்காலிகமாய் ஜெயிக்கலாம். ஆனால் கடைசியில் அவனை அழித்தே தீரும். அதில் சந்தேகமேயில்லை"

"உண்மை. ஆனால் அதர்மம் அழிவதற்கு முன்னால் நிறைய நல்லதையும் அழித்து விடுவதுண்டு என்பதே கசப்பான உண்மை. என் வாழ்க்கையில் அதை நான் நிறையவே பார்த்திருக்கிறேன். அப்படி நான் நேசித்த மனிதர்களை இழந்தும் இருக்கிறேன். தர்மம் கடைசியில் ஜெயித்தாலும் இடையில் இழந்த நல்ல விஷயங்களை மீட்டுக் கொடுப்பதில்லை, க்ரிஷ்"

"நம் வாழ்க்கையில் ஒவ்வொன்றும் வருவதற்கு ஒரு காலம் இருக்கிறது. அது நம்மை விட்டுப் போவதற்கும் ஒரு காலம் இருக்கிறது. அது அது அததன் காலத்தில் நடக்கிறது. அதனால் வரும் சுக துக்கங்கள் நம்மைப் பாதிப்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் அதற்கும் தர்மம் அதர்மத்திற்கும் நாம் முடிச்சுப் போடுவது சரி என்று எனக்குத் தோன்றவில்லை."

அக்ஷய் அவன் வாதத்திறமையை ரசித்தான். க்ரிஷ் சொன்னதில் இருந்த உண்மையையும் அவன் உணர்ந்தே இருந்தான். ஆனாலும் இப்போதைய வாழ்க்கையின் அமைதியை அவன் இழக்க விரும்பவில்லை. அவன் எதுவும் சொல்லாமல் மௌனமாக இருந்தான்.

அவனுடைய மௌனத்தைப் படிக்க முடிந்தவனாக க்ரிஷ் தொடர்ந்து சொன்னான். "நல்லவர்களான நாம் அமைதியையே விரும்புகிறோம். அதைப் பாதிக்கிற எதிலும் ஈடுபடுவதை நாம் விரும்புவதில்லை. ஆனால் தீமையை வளர விட்டால் நாம் என்றும் அமைதியுடன் வாழ முடியாது. தீமையை ஆதரிப்பது தான் ஆபத்து என்பதில்லை. எதிர்க்காமல் விலகி நிற்பதும் வளர்ப்பது போல் ஆபத்து தான். தனி மனிதர்களுக்கோ, அந்த இயக்கத்திற்கோ மட்டும் அந்த ஆபத்து என்பதில்லை. அந்த ஆபத்து மற்றவர்களுக்கும் வேகமாகப் பரவத்தான் செய்யும். அன்பான குடும்பத்துடன் அமைதியாக வாழ ஆசைப்படுவதாகச் சொன்னீர்கள். அந்த ஆசையே எனக்கும் இருக்கிறது. ஆனால் நாம் இன்று போராடி தீமையை அழிக்கா விட்டால் நாளைய நன்மையையும், அமைதியையும் கண்டிப்பாக இழந்து விடுவோம். நம் சந்ததியும் நிம்மதியாய் வாழ முடியாது. இதெல்லாம் உங்களுக்கு என்னை விட நன்றாகத் தெரியும். உங்கள் கடந்த காலத்தில் அந்தப் புரிதலோடு தான் தீய சக்திகளுடன் நிறைய போராடி இருக்கிறீர்கள். ஜெயித்தும் இருக்கிறீர்கள்"

அக்ஷய் சொன்னான். "உண்மை. அன்று அந்தப் போராட்டத்திற்கு அர்த்தம் இருந்தது. என் அவசியமும் இருந்தது. ஆனால் விஸ்வத்தை எதிர்த்துப் போராட அந்தச் சக்தி வாய்ந்த இயக்கமே தாராளமாகப் போதும். அந்த இயக்கத்தை விட நான் எந்த விதத்திலும் பலசாலி அல்ல. பட்டாளங்களால் பாதுகாக்க முடிந்த மனிதர்களுக்குத் தனி மனித உதவி தேவையில்லை என்று தான் சொல்கிறேன்..."

க்ரிஷ் அவன் சொன்னதைப் பொறுமையாகக் கேட்டு விட்டுச் சொன்னான். "அந்த இயக்கம் இந்தக் காலக்கட்டத்தில் அழிவின் விளிம்புக்கு வரும் என்று ஆரகிள் சொல்லியிருப்பதை அவர்கள் திடமாக நம்புகிறார்கள். அதற்கு ஏற்ற மாதிரி விஸ்வத்தின் சாகசங்களும் இருக்கின்றன. வேற்றுக்கிரகவாசி சொன்னதும் ஒத்துப் போகிறது. பாதுகாப்புப் பட்டாளத்தால் அந்த இயக்கத் தலைவரைக் கண்டிப்பாகக் காப்பாற்ற முடியும் - எப்போதுமே அந்தப் பட்டாளத்தின் மத்தியில் அவர் இருக்க முடியுமானால். நடைமுறையில் அது அவருக்கு முடிகிற காரியம் அல்ல என்று அவர்கள் சொல்கிறார்கள். விஸ்வம் பழைய சக்தி பெற்று வந்தால் அவன் நினைத்ததை செய்து முடிக்க அவனுக்குச் சில வினாடிகள் போதும். அவன் இயங்க முடிந்த வேகத்துக்கு ஈடு கொடுக்க உங்களைத் தவிர வேறு யாரும் இருப்பதாக அவர்களுக்குத் தெரியவில்லை. அதனால் தான் என்னை உங்களிடம் அனுப்பி அனுப்பியிருக்கிறார்கள். நீங்கள் அவர்களுக்கு உதவுவதனால் இருக்கும் ஆபத்துகளை அவர்கள் அலட்சியம் செய்யவில்லை. அந்த இயக்கம் உங்கள் குடும்பத்திற்கு முழுப் பாதுகாப்பு தருவதாக உத்திரவாதம் தருவதாக வாக்களிக்கிறது. அவர்களுடைய பாதுகாவல் மிகவும் சக்தி வாய்ந்தது என்பதற்கு நானும் உத்திரவாதம் தருகிறேன். இப்போது நானே அந்த இயக்கத்தின் நான்கு பாதுகாப்பு வீரர்கள் பாதுகாவலில் தான் இங்கே வந்திருக்கிறேன். இது அரசு பாதுகாப்பை விட இரு மடங்கு அதிக பாதுகாப்பு என்பதை நான் உணர்கிறேன்..."

அக்ஷய் தன் புன்னகையைக் கஷ்டப்பட்டு மறைத்தான். 'வாதங்களிலும், பல துறைகளிலும் அபார அறிவுத் திறமை இருக்கும் இந்த இளைஞன் சில விஷயங்களில் நிறையவே வெகுளியாகவும் இருக்கிறான். எட்டுப் பேரைப் பாதுகாவலுக்கு அனுப்பி இருப்பதை இல்லுமினாட்டி இயக்கம் இவனுக்கே தெரிவிக்கவில்லை. பாதியாகத் தான் சொல்லி அனுப்பி இருக்கிறது. இவனும் இப்போது வரை உண்மையை உணரவில்லை..."

க்ரிஷ் கேட்டான். "ஏன் சிரிக்கிறீர்கள்?"

அக்ஷய் திகைத்தான். அவன் சிரிப்பை வெளியே காண்பிக்கவில்லை என்பது நிச்சயம். ஆனாலும் மாஸ்டரின் மாணவன் உள்ளுணர்வால் உணர்ந்து விட்டிருக்கிறான். கவனிக்கும் விஷயங்களில் இவன் நுண்ணுணர்வு அபாரமாகவே இருக்கிறது. கவனிக்காத விஷயங்களில் தான் இவன் வெகுளியாக இருக்கிறான்...

அக்ஷய் அவனுடன் சற்று நெருக்கத்தை உணர ஆரம்பித்ததால் உண்மையையே சொன்னான். "உன்னுடன் பாதுகாவலர் எட்டுப் பேர் வந்திருக்கிறார்கள். ஆனால் நீ நான்கு பேர் என்று சொல்கிறாயே அது தான் வேடிக்கையாக இருந்தது. ஆனால் எனக்குத் தோன்றியதை நான் வெளியே காட்டவில்லை. அப்படி இருந்தும் நீ கண்டுபிடித்து விட்டாய்"

க்ரிஷுக்குத் தன் பாதுகாவலுக்கு வந்த ஆட்களின் எண்ணிக்கை சரியாகத் தெரியாதது அவமானமாகத் தெரியவில்லை. இல்லுமினாட்டி அவனிடமே பொய் சொல்லியிருப்பது கோபத்தையும் ஏற்படுத்தவில்லை. அக்ஷய் சிரிப்பை மறைத்தும், தான் சரியாகக் கண்டுபிடித்து விட்டது பெருமையாகவும் இருக்கவில்லை. அவனுக்கு அவனுடன் வந்த பாதுகாவலர்களின் எண்ணிக்கையை அக்ஷய் சரியாகக் கண்டுபிடித்தது தான் ஆச்சரியமாக இருந்தது. க்ரிஷ் சொன்னான். "உங்களை அமானுஷ்யன் என்று சொல்வது சரியாகத் தான் இருக்கிறது. உங்கள் கவனம் எல்லாம் அந்தப் பிள்ளைகள் மேலேயே இருந்தது போலத்தான் இருந்தது. அப்படி இருந்தும் கண்டுபிடித்து விட்டீர்கள்."

க்ரிஷ் உணராத அவமானமும், கோபமும், பெருமிதமும் அக்ஷயின் கவனத்திலிருந்து தப்பவில்லை. அவன் மனதில் க்ரிஷ் பல மடங்கு உயர்ந்து போனான்.

க்ரிஷ் அக்ஷயிடம் கேட்டான். "நீங்கள் என்ன முடிவு செய்திருக்கிறீர்கள் என்று நான் அந்த இயக்கத்தினரிடம் சொல்லட்டும்"

அக்ஷய் சொன்னான். "எனக்கு யோசிக்க இரண்டு நாள் அவகாசம் வேண்டும், க்ரிஷ்"

ஒரேயடியாக மறுத்து விடாமல் அவன் யோசிக்க அவகாசம் கேட்டதே க்ரிஷுக்கு நல்ல விஷயமாகத் தோன்றியது. சரியென்றான்...

சிந்து அந்த ஐவர் பற்றிய விரிவான விவரங்களைப் படித்து முடித்த போது நள்ளிரவாகி இருந்தது. அந்த ஐவரையும் அவள் மிகநெருங்கிப் பழகி அறிந்தவள் போல் இப்போது உணர்ந்தாள். அந்த அளவு அவர்களை அவள் மனதில் கச்சிதமான சித்திரங்களாக விஸ்வம் எழுப்பி இருந்தான். அந்த ஐந்து பேரில் அவள் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டிய ஆட்களாக இரண்டு பேரை அபாயக்குறி போட்டு விஸ்வம் எச்சரித்திருந்தான். ஒன்று க்ரிஷ். இரண்டாவது ஹரிணி. க்ரிஷ் குறித்த விவரங்களின் இறுதியில் "மிக எளிமையாகவும், நல்லவனாகவும் தோன்றினாலும் அபாயமானவன்" என்று விஸ்வம் எழுதியிருந்தான். ஹரிணி குறித்த விவரங்களின் இறுதியில் "துணிச்சல்காரி. புத்திசாலி. இவளிடம் எச்சரிக்கை தேவை" என்று எழுதி இருந்தான்.

ஆரம்பத்தில் அவள் செய்ய வேண்டிய வேலைகளை விஸ்வம் தெளிவாகச் சொல்லி இருந்தாலும் முடிவில் என்ன செய்ய வேண்டும் என்று அவளிடம் சொல்லி இருக்கவில்லை. அதைப் பிற்பாடு தேவையான நேரத்தில் சொல்வதாகத் தெரிவித்திருந்தான். இந்த ஐந்து பேருமே விஸ்வத்தின் எதிரிகளாக இருக்க வாய்ப்பில்லை. ஐவரில் யார் விஸ்வத்தின் எதிரி என்று சிந்துவுக்குக் கணிக்க முடியவில்லை. பத்மாவதியைத் தவிர யார் வேண்டுமானாலும் விஸ்வத்தின் எதிரியாக இருக்கலாம் என்று தோன்றியது.

அவள் உள்மனம் ஏனோ இந்த வேலை வேண்டாம் என்று எச்சரித்தது. இது வரை இப்படி அவளுக்குத் தோன்றியதில்லை. அவள் அந்த எச்சரிக்கையை அலட்சியப்படுத்தியபடி அடுத்து அது சம்பந்தமாக அவள் செய்ய வேண்டியவற்றை நிதானமாகப் பட்டியல் போட ஆரம்பித்தாள்.

(தொடரும்)

என்.கணேசன்

இல்லுமினாட்டி 47

விஸ்வம் வஜ்ராசனத்தில் அமர்ந்தபடி பிராணாயாமப் பயிற்சிகளைச் செய்து கொண்டிருந்ததைப் பார்த்தபடி ஜிப்ஸி அமர்ந்திருந்தான். அந்த பிராணாயாமப் பயிற்சிகளுக்கு டேனியலின் உடல் சுலபமாக ஒத்துழைக்கவில்லை என்பதை அவன் கவனித்தான். போதையிலேயே திளைத்து வலுவிழந்து போயிருந்த அந்த உடலுக்கு வஜ்ராசனமும் பிடிக்கவில்லை, அந்தப் பயிற்சிகளும் பிடிக்கவில்லை என்பது நிதர்சனமாகத் தெரிந்தது. ஆனால் அந்த உடலின் அதிருப்தியான முணுமுணுப்புகளை விஸ்வம் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. உயிர் டேனியலுடையதாக இருந்த போது தன் சுகங்களையும், சௌகரியங்களையும் தங்குதடை இல்லாமல் அனுபவித்து வந்திருந்த அந்த உடலுக்கு விஸ்வத்தின் இந்தக் கெடுபிடிகள் சுத்தமாகப் பிடிக்கவில்லை என்பதற்குப் பல அறிகுறிகள் தெரிந்து கொண்டே இருந்தன. ஆனால் பள்ளிக்குப் போகப் பிடிக்காத பிள்ளையைத் தரதரவென்று தாய் இழுத்துக் கொண்டு போவதைப் போல், விஸ்வம் அந்த உடலைத் தன் வழிக்கு இழுத்துக் கொண்டிருந்தான். வேறு வழியில்லாமல் அந்த உடல் அவன் வழிக்கு வேண்டா வெறுப்பாக வந்து கொண்டிருந்தது...

சிந்துவுக்கு மெயிலில் தகவல்களை அனுப்பி விட்டு வேறிரண்டு பேருக்கு சுருக்கமான மெயில்களை அனுப்பி விட்டுஅமைதியாக வஜ்ராசனத்தில் அமர்ந்து பிராணாயாமப் பயிற்சிகளைச் செய்ய ஆரம்பித்த விஸ்வத்தைப் பார்த்து ஜிப்ஸிக்கு வியக்காமல் இருக்க முடியவில்லை. உடம்பின் சௌகரியங்களே முழுமுதல் பிரதானம் என்று வாழ்கிற மனிதர்களின் நடுவில் இந்த அளவுக்கு ஒரு ஆளுமை படைத்த மனிதனைப் பார்க்க நேர்வது அபூர்வம் என்று நினைத்துக் கொண்டான். டேனியலுடையதாக இருந்த போது பொலிவிழந்து, சக்திகளையும் இழந்து போயிருந்த உடல் இப்போது ஓரளவு தேறி வருவது இவனுடைய கடுமையான பயிற்சிகளால் தான் என்று எண்ணினான்.

'இனி முடியவே முடியாது' என்ற நிலைக்கு வந்து முடிவில் அந்த உடல் பரிதாபமாக அலற ஆரம்பித்த பின் தான் விஸ்வம் வஜ்ராசனத்தைக் கலைத்து மெல்ல எழுந்தான்.

ஜிப்ஸி விஸ்வத்தைக் கேட்டான். "உடம்பு என்ன சொல்கிறது?"

"அது சொல்வதை நான் சட்டை செய்வதில்லை" என்று சொல்லிக் கொண்டே இரு கைகளையும் உயர்த்திச் சோம்பல் முறித்துக் கொண்டே முன்னங்கால் நுனியில் சில வினாடிகள் நின்ற விஸ்வத்திடம் ஜிப்ஸி கேட்டான். "அந்தப் பெண்ணால் உன் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க முடியும் என்று நீ எப்படி நம்புகிறாய்?"

விஸ்வம் சொன்னான். "இந்தத் திட்டத்திற்கு அவளை விடப் பொருத்தமான ஒரு பெண்ணைக் கண்டுபிடிக்க முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. சின்னக் கூச்சமோ, தயக்கமோ கூட இல்லாமல் அவளால் எத்தனையோ வேலைகளைச் செய்ய முடியும்... அவள் அப்படிப்பட்டவள் என்று தோற்றத்தை வைத்து யாரும் ஊகிக்கவே முடியாது. மிகவும் கண்ணியமான பெண்ணாகவே வெளியே தெரிபவள் அவள். அழகும் அறிவும் அவளிடம் அதிகமாகவே இருக்கிறது. அவள் இது வரை எத்தனையோ குற்றங்களைச் செய்திருக்கிறாள். ஆனால் ஒரு முறை கூடப்பிடிபட்டதில்லை. எந்தப் போலீஸ் ஸ்டேஷனிலும் அவளைப் பற்றிய சந்தேகத் தகவல்கள் கூட இல்லை. எல்லாவற்றுக்கும் மேலாக, அவளிடம் கொடுத்த வேலைகளை அவள் இது வரை சிறிது கூடச் சொதப்பியதில்லை."

சிறையில் விஸ்வத்தின் சக்தியை மிக மெலிதாக உணர்ந்து அது விலகிய பிறகு மனோகரால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. அதன் பின் தினமும் அடிக்கடி மிக அமைதியாக இருந்து அந்தச் சக்தியை மறுபடியும் உணர முடிகிறதா என்று அவன் முயற்சி செய்து பார்த்தான். மறுபடி அந்தத் தொடர்பு கிடைக்கவில்லை. முன்பு கிடைத்ததே நிஜமா பிரமையா என்று சந்தேகம் அவனை மெல்ல அரிக்க ஆரம்பித்தது.

அவனுடைய தவிப்பைக் கவனித்த சக கைதி ராஜேஷ் கரிசனத்துடன் கேட்டான். "என்ன ஆச்சு?"

மனோகர் எச்சரிக்கையுடன் தன்னை அமைதிப்படுத்திக் கொண்டு சற்று சோகமாகச் சொன்னான். "இங்கே இருக்க முடியவில்லை. இருக்கப் பிடிக்கவில்லை."

ராஜேஷ் முகத்தில் அவனைப் புரிந்து கொண்ட மென்மை படர்ந்தது. "உனக்கு இது முதல் அனுபவம் அல்லவா? அது தான் பிரச்னை. எனக்கு இது இரண்டாம் வீடு மாதிரி ஆகி விட்டது. அதனால் இங்கே கவலை இல்லாமல் என்னால் இருக்க முடிகிறது. போரடித்தால் கிளம்பி விடுவேன்..."

அவன் அலட்டாமல் ' போரடித்தால் கிளம்பி விடுவேன்' என்று சொன்னதைக் கேட்க மனோகருக்கு ஆச்சரியமாகவும், பொறாமையாகவும் இருந்தது. "அதெப்படி நினைக்கும் போது கிளம்ப முடியும்" என்று அவன் கேட்டு வைத்தான்.

ராஜேஷ் ரகசியமாக அவனிடம் தாழ்ந்த குரலில் சொன்னான். "சிறைச்சாலை சிலருக்குத் தான் நரகம். பிரச்சினை. ஆனால் கை நிறைய பணமும், முக்கியமான ஆட்களின் தொடர்பும் இருந்தால் இங்கே நம்மால் முடியாதது என்று எதுவும் கிடையாது. எல்லாவற்றிற்கும் ஒரு விலை உண்டு. எல்லாருக்கும் ஒரு விலை உண்டு. அந்த விலையைக் கொடுக்க நாம் தயாராக இருக்கிற வரை இங்கிருந்து தப்பித்துப் போவது உட்பட எல்லாமே நம்மால் முடியும்"

இந்த விதி சிறைச்சாலைக்கு மட்டுமல்ல உலகின் பெரும்பாலான இடங்களுக்கும் பொருந்தும் என்பதை மனோகர் அறிவான். விஸ்வத்தின் பிரதிநிதியாக எத்தனையோ இடங்களில் அவன் அந்த விதியைச் செயல்படுத்தி வெற்றி கண்டவன். இப்போது விஸ்வம் இருக்கிறானா இல்லையா என்றே தெரியவில்லை. பணம் பல கோடிகளில் மனோகர் வசமே இருக்கிறது என்றாலும் அவன் பல வங்கிகளில் பிரித்து வைத்திருக்கிற பணத்தைப் பயன்படுத்த முடியாதபடி இந்தச் சிறையில் அவன் சிக்கிக் கொண்டிருக்கிறான். அவனுடைய போதாத காலம் கமலக்கண்ணன் தற்போது முதலமைச்சராக இருக்கிறார். அவருக்கு மருமகளாக வரப்போகிற பெண்ணையே அவன் கடத்திச் சென்ற குற்றத்தில் சிறைப்பட்டிருக்கிறான்...

அவன் முகத்தில் படர்ந்த சோகத்தைக் கவனித்து விட்டு ராஜேஷ் இரக்கத்துடன் கேட்டான். "உனக்கு இங்கிருந்து தப்பித்துப் போக வேண்டுமா?"

வாங் வேயின் ரகசிய அலைபேசி இரு முறை அடித்து விட்டு அமைதியாகியது. அந்த அலைபேசியில் அழைக்கக்கூடிய நபர் இல்லுமினாட்டி உளவுத்துறையின் உபதலைவர் சாலமன் ஒருவர் தான் என்பதால் சாலமனுக்குத் தெரிவிக்க ஏதோ ஒரு முக்கிய தகவல் இருக்கிறது என்பது புரிந்தது.

வாங் வே பரபரப்புடன் சாலமனுக்குப் போன் செய்தார். "என்ன விஷயம்?"

சாலமனின் எச்சரிக்கையான மிக மெல்லிய குரல் ஒலித்தது. "தலைவன் நம் ஆளின் கூட்டாளியைப் பற்றி பல தகவல்களைச் சேகரித்து வைத்துக் கொண்டிருக்கிறான்."

வாங் வே பரபரப்பு குறையாமல் கேட்டார். "என்ன தகவல்கள்?"

சாலமன் சொன்னார். "தெரியவில்லை. அதைச் சொல்லாமல் தவிர்க்கிறான்."

"அப்படியானால் நம் ஆள் சீக்கிரம் உங்களிடம் சிக்கி விடுவானா?"

"அது நிச்சயமில்லை. அந்த அளவுக்கு நம்பிக்கையோடும் தலைவன் தென்படவில்லை. எதையும் வாய் விட்டுச் சொல்லவும் மாட்டேன்கிறான்"

"சொல்லா விட்டாலும் கூட அவன் அடுத்ததாக உங்கள் ஆட்களுக்கு என்ன உத்தரவிடுகிறான் என்பதை வைத்து யூகிக்கலாமே."

"நாடு முழுவதும் எந்தப் பகுதியிலும் புதிய ஆட்களின் நடமாட்டம் தெரிந்தால் அதைத் தெரிவிக்க அறிவிப்புகள் வெளியாகி இருக்கின்றன. உணவுப் பொருள்களோ, வேறு பொருள்களோ வாங்கிக் கொண்டு போக பழக்கமில்லாத புதிய ஆட்கள் வந்தால் தெரிவிக்கச் சொல்லி எல்லா டிபார்ட்மெண்ட் ஸ்டோர்கள், மால்கள் எல்லாம் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள்..."

வாங் வே கேட்டார். "பொது மக்களிடமிருந்தோ, அந்த டிபார்ட்மெண்ட் ஸ்டோர்கள், மால்களிடமிருந்தோ எந்தத் தகவலும் வரவில்லையா?"

"தினமும் நாலைந்து அழைப்புகளாவது வருகின்றன. ஆனால் போய்ப் பார்க்கையில் அதெல்லாம் நமக்கு வேண்டிய ஆளாக இல்லை. இந்த வலைவீச்சில் சில கிரிமினல்கள் கூட அகப்பட்டிருக்கிறார்கள். நம் ஆள் சிக்கவில்லை..."

வாங் வேக்குப் பிரமிப்பாக இருந்தது. சிறிது யோசித்து விட்டுச் சொன்னார். "அப்படியானால் அந்தக் கூட்டாளி உள்நாட்டு ஆளாகத் தான் இருக்க வேண்டும். அவன் தன் வீட்டில் அல்லது தன் நண்பர்கள் வீட்டில் நம் ஆளோடு இப்போதிருக்க வாய்ப்பு இருக்கிறது."

சாலமன் சொன்னார். "அப்படி ஒரு இடம் இருந்திருந்தால் அவர்கள் முன்பே அந்தக் காலி வீட்டில் ஒளிந்து கொண்டிருக்க மாட்டார்கள். நேராக ஆரம்பத்திலேயே அங்கே போயிருப்பார்கள்..."

அதுவும் சரியென்றே வாங் வேக்குத் தோன்றியது. கூட்டாளி பற்றி நிறைய தகவல்கள் கிடைத்தும் அவர்கள் இப்போது ஒளிந்திருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றால் கிடைத்திருக்கும் தகவல்கள் உபயோகமில்லாத பழைய தகவல்களா?"

"எந்தத் தகவலும் எப்போதும் அலட்சியப்படுத்த முடிந்ததல்ல. எது எப்போது நமக்கு உபயோகப்படும் என்பது நமக்கே தெரியாது. தலைவனிடம் இருக்கும் தகவல்களில் ஏதோ ஒன்று சீக்கிரமே அவர்கள் இருக்குமிடத்தை அடையாளம் காட்ட உதவலாம்."

வாங் வே அழுத்தம் திருத்தமாகச் சொன்னார். "அப்படி ஒருவேளை அவர்கள் ஒளிந்திருக்கும் இடம் நமக்குத் தெரிய வந்தால் மற்றவர்களுக்கு முன்னால் நாம் அவர்களைச் சந்தித்துப் பேசுவது முக்கியம்"

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, May 7, 2020

இல்லுமினாட்டி 48

கர்னீலியஸ் கடந்த இரண்டு நாட்களாக வாஷிங்டன் வீதிகளில் தனியாக நீண்ட நடை நடக்கிறார். காரிலும் சில இடங்களுக்குச் சென்று வந்தார். அந்தச் சமயங்களில் அவரை யாராவது பின் தொடர்கிறார்களா, கண்காணிக்கிறார்களா என்று சோதித்துப் பார்த்தார். அப்படி எதுவும் நடக்கவில்லை. அப்படிக் கண்காணிக்கப்படுகிற உணர்வும் அவருக்கு ஏற்படவில்லை.
இன்னொரு முறை வங்கிக்குப் போக முயற்சிக்கலாமா என்று கூட கர்னீலியஸ் எண்ணினார். ஆபத்து என்று உள்மனம் எச்சரித்தாலும் எத்தனை நாட்கள் இதைத் தள்ளிப்போட முடியும் என்று மனம் கேள்வி கேட்டது. இல்லுமினாட்டியின் உறுப்பினராக இருந்து கொண்டு அதன் மிக நெருக்கடியான காலக்கட்டத்தில் அவர் அந்த ரகசிய ஆவணத்தை இனியும் மறைப்பது நியாயமல்ல என்று மனசாட்சி உறுத்தியது.

இல்லுமினாட்டியில் மூன்று தலைமுறையாக உறுப்பினராக இருக்கும் குடும்பங்கள் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே இருந்தன. அந்த அபூர்வக் குடும்பங்களில் அவரது குடும்பமும் ஒன்றாக இருந்தது. இல்லுமினாட்டியின் பல தலைவர்களின் குடும்பங்களே அடைந்திருக்காத பெருமை அது. தனிமனிதத் தகுதியாலேயே இல்லுமினாட்டிக்கு ஒருவன் தேர்ந்தெடுக்கப்படுகிறான். அந்தத் தகுதியை இழக்கும் போது அவன் நீக்கவும் படுகிறான். நீக்கப்பட்டவன் தான் உறுப்பினராக இருந்த போது அறிந்ததையோ, கிடைத்த ரகசியங்களையோ இல்லுமினாட்டிக்கு எதிராகப் பிறகு உபயோகப்படுத்தினால் உடனடியாகக் கொல்லப்படுவதும் உறுதி...

கர்னீலியஸின் தாத்தா ஃப்ரீமேசனாக இருந்து பிறகு அந்த இயக்கத்தோடு இல்லுமினாட்டியில் ஐக்கியமானவர். அவர் பழங்காலச் சுவடிகள் மற்றும் ரகசியக் கலைகளில் தேர்ச்சி பெற்றவராக இருந்தார். ஐரோப்பிய மொழிகளிலும் அவருக்குப் புலமை இருந்தது. அது இல்லுமினாட்டியை ஆரம்பித்த அறிஞர்களுக்குப் பேருதவியாக இருந்தது. அவர் இல்லுமினாட்டியின் உறுப்பினர் என்பது அவருடைய ஒரே மகனான கர்னீலியஸின் தந்தைக்கு நீண்ட காலம் கழித்துத் தான் தெரிந்தது. அவரும் தந்தையின் புலமையுடன் இல்லுமினாட்டி, ஃப்ரீமேசன் இயக்கங்களின் ரகசியச் சின்னங்கள், சங்கேத மொழிகள் ஆகியவற்றில் ஆழமான ஞானம் பெற்று இல்லுமினாட்டியால் அழைக்கப்பட்டு உறுப்பினராகச் சேர்ந்த சமயத்தில் தான் தன் தந்தை இல்லுமினாட்டி உறுப்பினர் என்பதை அறிந்து கொண்டார். தந்தை, தாத்தா இருவரின் தனித்திறமைகளும் சேர்ந்து கர்னீலியஸுக்கும் இருந்தது. அவர்களை விட ஒருபடி மேலாகவே அவர் சூட்சும விஷயங்களை அறிந்திருந்தார். அதனாலேயே அவரும் இல்லுமினாட்டியால் அழைக்கப்பட்டார். அவரும் இணையும் சமயத்தில் தான் தந்தையும் இல்லுமினாட்டி உறுப்பினர் என்று அறிந்தார்.

கர்னீலியஸின் தாத்தா இல்லுமினாட்டியாக இருந்த போது ஞானத்திற்கும், அந்தச் சுவடிகளுக்கும் இருந்த முக்கியத்துவம் கர்னீலியஸின் தந்தை இல்லுமினாட்டியாக இருந்த போது குறைந்து போனது. கர்னீலியஸ் காலத்தில் முக்கியத்துவம் சுத்தமாக மறைந்து போய் மரியாதை, கௌரவம் மட்டுமே மிஞ்சியது. இப்போது வருடம் ஒருமுறை இல்லுமினாட்டி உறுப்பினர்கள் சம்பிரதாயமாக உறுதிமொழி எடுத்துக் கொள்ளும் நிகழ்ச்சியில் மட்டுமே கர்னீலியஸ் மேடை ஏறுகிறார். இப்போது அவர் அறிந்ததை இருக்கும் உறுப்பினர்களிலேயே இந்த விஷயங்களில் ஈடுபாடு அதிகம் இருக்கும் ஒரு நடுத்தரவயது உறுப்பினர் ஒருவருக்குச் சொல்லித்தரும் வேலையும் கர்னீலியஸுக்கு வந்து சேர்ந்திருக்கிறது. அந்த உறுப்பினர் வருடத்திற்கு இரண்டு முறை கர்னீலியஸிடம் வந்து ஒவ்வொரு வாரம் இருந்து அதைக் கற்றுக் கொண்டு போகிறார்.

ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக முழுமனதுடன் ஈடுபட்டுக் கற்று அறிந்து கொண்ட அளவில்லாத ஆழமான விஷயங்களை வருடத்திற்கு இரண்டு வாரங்கள் சொல்லிக் கொடுத்து அந்த உறுப்பினர் எந்த அளவுக்குப் புரிந்து கொள்ள முடியும் என்று கர்னீலியஸ் பல முறை யோசித்தது உண்டு. ஆனால் அந்தக் குறிப்பிட்ட ஞானத்திற்காகவே உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கும் வழக்கத்தை எப்போதோ இல்லுமினாட்டி நிறுத்தி இருந்தது. அதற்கு இப்போதையத் தேவை அந்த ஆழமான ஞானமாக இருக்கவில்லை. வயதான கர்னீலியஸ் இறந்து போய் விட்டால் வருடாந்திர உறுதிமொழி நிகழ்ச்சியை சம்பிரதாயமாய் நடத்திக் கொடுக்க ஒரு ஆள் தான் அதற்குத் தேவைப்பட்டது. அதற்காகத் தான் அந்த உறுப்பினருக்குக் கூடுதல் பொறுப்பு தரப்பட்டு அவர் வந்து போகிறார் என்பது கர்னீலியஸுக்குப் புரிந்திருந்தது. அதற்காக அவர் வருத்தப்படவில்லை. ஆனால் அவர் தந்தை இல்லுமினாட்டியின் போக்கில் ஏற்பட ஆரம்பித்த இந்த மாற்றத்திற்கு அவர் வாழ்ந்த காலத்தில் நிறையவே வருத்தப்பட்டு இருக்கிறார். மிக உன்னதமான நோக்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட இல்லுமினாட்டி ஞானத்திற்கும் நேர்மைக்கும் தருகின்ற முக்கியத்துவம் குறைந்து கொண்டே போவது அவரை நிறையவே பாதித்திருந்தது. பொதுவாக அவர் மகனிடம் இல்லுமினாட்டி குறித்துப் பேசுவது கிடையாது. ஆனால் ஒருமுறை தாங்க முடியாமல் "நன்மைக்கும், ஞானத்திற்கும் தருகின்ற இடத்தை பணத்திற்கும் அதிகாரத்திற்கும் தருவது அழிவுக்கான பாதை. இல்லுமினாட்டி அதை நோக்கியே பயணிக்கிறது" என்று விரக்தியுடன் சொல்லியிருக்கிறார்.

அவர் மறுபடி இல்லுமினாட்டி குறித்துப் பேசியது நீண்டதாக இருந்தது. அவர் இறப்பதற்கு மூன்று நாட்கள் முன் பேசிய அந்த நாள் கர்னீலியஸ் மனதில் இப்போதும் பசுமையாக முழுமையாக நினைவிருக்கிறது. அந்த நாள் தான் அவர் கர்னீலியஸிடம் அந்த ரகசிய ஆவணத்தைத் தந்த நாள்.

அன்று இரவுச் சாப்பாட்டிற்குப் பின் ஒரு வெள்ளிப் பெட்டியை எடுத்துக் கொண்டு கர்னீலியஸிடம் வந்த அவர் உணர்ச்சிப் பெருக்கில் இருந்ததும், சிறிது நேரம் என்ன சொல்வது, எப்படிச் சொல்வது என்று யோசிப்பதும் தெரிந்தது.

கர்னீலியஸ் கேட்டார். "என்ன அப்பா? ஏன் என்னவோ போலிருக்கிறீர்கள்?"

அவர் சிறிது நேரம் பதில் சொல்லாமல் மௌனமாக இருந்து விட்டுக் குரலடைக்கச் சொன்னார். "என் அப்பா நினைவு வந்தது.... மிக நல்ல மனிதர்...."

இந்த வெள்ளிப்பெட்டி அவர் உபயோகித்ததாய் இருக்க வேண்டும் என்று கர்னீலியஸ் யூகித்தார். ஆனால் இது வரை அதைத் தங்கள் வீட்டில் பார்த்திருந்ததாய் அவருக்கு நினைவில்லை. அப்பா இதை எங்கேயாவது மறைத்து வைத்திருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டார்.

மறுபடி சிறிது நேரம் மௌனம் சாதித்து விட்டு அவர் தந்தை பேச ஆரம்பித்தார். "எந்த ஒரு நல்ல இயக்கமும் ஆரம்பிக்கப்பட்ட உயர்ந்த நோக்கத்திலேயே கடைசி வரை செயல்பட்டு விடுவதில்லை. மதங்களைப் போலவே இயக்கங்களும் ஆரம்பப் புனிதத்தைக் காலப்போக்கில் இழந்து விடுகின்றன. நம் இல்லுமினாட்டியும் அதற்கு விதிவிலக்கல்ல..."

கர்னீலியஸ் மென்மையாகச் சொன்னார். "மாற்றம் ஒன்றே மாறாதது என்று அறிந்திருந்தும் அதற்கு ஏன் வருந்துகிறீர்கள் அப்பா? இதுவும் ஒரு நாள் மாறுமல்லவா?"

அவர் தந்தை மகனைப் பெருமிதத்தோடு பார்த்து விட்டுக் குரல் கரகரக்கச் சொன்னார். "உண்மை கர்னீலியஸ். ஆனால் மாற்றம் சீரழிவை நோக்கிப் போகும் போது நன்மையை விரும்பும் மனிதர்களால் வருத்தப்படாமல் இருக்க முடிவதில்லை"

மறுபடியும் மௌனம். பின் கர்னீலியஸின் தந்தை கேட்டார். "ஒரு காலத்தில் இல்லுமினாட்டியின் எதிர்காலத்தைப் பற்றி ஆரகிள் சொன்னது உனக்குத் தெரியும் அல்லவா?"

கர்னீலியஸ் தலையசைத்தார். அவர் தந்தை தொடர்ந்தார். "இல்லுமினாட்டிக்கு ஆட்சியாளர்களிடமும், மதகுருமார்களிடமும் கடுமையான எதிர்ப்பிருந்த காலம் அது. இல்லுமினாட்டி என்று தெரிந்தால் சிறைத்தண்டனை, மரண தண்டனை என்று தண்டிக்கப்பட்ட காலம்... உறுப்பினர்கள் குறைந்து கொண்டே போன போது இல்லுமினாட்டியும், ஃப்ரீமேசனும் இணைந்து இழப்புகளைச் சமாளிக்கப் பார்த்தார்கள். ஆனாலும் எதிர்காலம் குறித்து நிச்சயம் இல்லாத நிலை அப்போது இருந்தது. அப்போது தான் ஆரகிளிடம் குறி கேட்கப்பட்டது. அப்போது ஆரகிள் எத்தனை அடக்குமுறை இருந்தாலும் இப்போதைக்கு இல்லுமினாட்டிக்கு அழிவில்லை. அது வளர்ந்து கொண்டே போகும். உலகத்தையே மறைமுகமாய் ஆளும். அழிவை ஏற்படுத்த முடிந்த காலம் ஒன்றேகால் நூற்றாண்டு கழித்து வரும் என்று சொன்னது. இல்லுமினாட்டியின் தலைவர் அந்தக் குறி கேட்ட சமயத்தில் உன் தாத்தாவும் அவருடன் இருந்தார்..."

கர்னீலியஸிற்கு அதுப் புதுத்தகவல். தந்தையை வியப்புடன் பார்த்தார்.

அவர் தந்தை சொன்னார். "அன்றைக்கு ஆரகிள் சொல்லச் சொல்ல எழுதி வைத்துக் கொண்ட பாதித் தகவல் தோராயமாக எல்லாருக்கும் தெரியும். மீதித் தகவல் இந்த வெள்ளிப் பெட்டியில் இருக்கிறது"

கர்னீலியஸ் திகைப்புடன் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, May 14, 2020

இல்லுமினாட்டி 49

மகனுடைய திகைப்பைக் கவனித்த கர்னீலியஸின் தந்தை சொன்னார். “என் தந்தை இந்தத் தகவலைச் சொல்லி இந்த வெள்ளிப் பெட்டியைத் தந்த போது எனக்கும் திகைப்பாகத் தான் இருந்தது...”

கர்னீலியஸ் மெல்லக் கேட்டார். “இது நம்மிடம் இருப்பது இல்லுமினாட்டியில் எத்தனை பேருக்குத் தெரியும்?”

“இப்போதைக்கு உனக்கும் எனக்கும் மட்டுமே தெரியும் கர்னீலியஸ்.”

“குழப்பாமல் விளக்கமாகச் சொல்லுங்கள் அப்பா. இது எப்படி நம்மிடம் வந்தது. இதில் என்ன எழுதி இருக்கிறது?”

கர்னீலியஸின் தந்தை உடனடியாக எதையும் சொல்லவில்லை. அவர் கைகள் அந்த வெள்ளிப்பெட்டியை வருட அவர் கண்கள் கர்னீலியஸையும் தாண்டி வெற்றிடத்தில் நிலைத்தன. அவருடைய தந்தை அவருக்கு விவரித்த அந்தச் சம்பவத்தை அவர் கர்னீலியஸிடம் சொல்ல ஆரம்பித்தார்.

“அன்றைக்கு இல்லுமினாட்டியின் தலைவர் ஆரகிளிடம் குறி கேட்கப் போன போது உன் தாத்தாவும் கூட இருந்தார் என்று சொன்னேனல்லவா? அவர்களிடம் இல்லுமினாட்டிக்கு அழிவை ஏற்படுத்த முடிந்த காலத்தை அடையாளம் காட்டிய ஆரகிள் அழிவிலிருந்து தப்பிக்க முடிந்த வழியையும் சொன்னது. “உயர்சக்தியால் தேர்ந்தெடுக்கப்பட்டவன் தேஜஸுடன் இமயமலைக்குத் தெற்கில் இருந்து வருவான். எல்லாம் பார்க்கும் விழி அவனை அடையாளம் காட்டி உணர்த்தும். எது சரியென்றும் எது வழியென்றும் உணர்த்தி அவன் வழி காட்டுவான். உய்யும் வழி அது ஒன்றே. அன்றேல் அழிவது உறுதி.” அந்தப் பதிலால் இருவரும் திருப்தி அடையவில்லை. காரணம், காலத்தைத் துல்லியமாகச் சொன்ன ஆரகிள் முடிவைத் தெளிவாகச் சொல்லவில்லை என்பது தான். மதில் மேலிருக்கும் பூனை எந்தப்பக்கமும் பாயலாம் என்பது போல் பதிலைச் சொல்ல ஆரகிள் தேவையா என்று நினைத்தார்கள். அவர்கள் நிச்சயமானதொரு பதிலைச் சொல்லும்படி ஆரகிளை வற்புறுத்தினார்கள்...’

“ஆரகிள் அவர்களிடம் சொன்னது. “எதிர்காலம் எல்லா விதங்களிலும் முன்கூட்டியே தீர்மானித்திருக்கப்படுவதில்லை. சில விஷயங்கள் முன்பே தீர்மானிக்கப்படுகின்றன. சில விஷயங்கள் காலப்போக்கில் மனிதர்கள் எடுக்கும் முடிவைப் பொறுத்து பின்னால் தீர்மானிக்கப்படுகின்றன. காலமே இன்னும் தீர்மானிக்காத விஷயத்தை நான் எப்படிச் சொல்ல முடியும்?”

“எதிர்காலத்தை எட்டிப் பார்க்க முடிந்த ஆரகிளிடம் முடிவான பதிலைப் பெற முடியாத அவர்கள், கூர்ந்து பார்த்து முடிந்த வரை கூடுதல் தகவல்கள் தரச் சொன்னார்கள். அந்தத் தகவல்கள் பின்னால் வரும் சோதனைக்காலத்திற்கு உதவக்கூடும் என்று அவர்கள் நம்பினார்கள். நீண்ட நேரம் எடுத்துக் கொண்டு தான் ஆரகிளால் அந்தக் கூடுதல் தகவல்கள் பார்த்துச் சொல்ல முடிந்தது. ஆனால் சொன்ன கூடுதல் தகவல்கள் எளிமையான வார்த்தைகளில் இல்லாமல் ரகசிய சங்கேத வார்த்தைகளில் இருந்தன. சொன்னதை அப்படியே அப்போதைய இல்லுமினாட்டியின் தலைவர் எழுதி வைத்துக் கொண்டாலும் அதை அந்த இருவராலும் கூடப் புரிந்து கொள்ள முடியவில்லை. இரண்டாவதாக சங்கேத மொழியில் சொல்லப்பட்ட தகவல்களைப் புரிந்து கொண்டு சொல்லும் பொறுப்பு ரகசியக் கலைகளில் நிபுணரான உன் தாத்தாவுக்குத் தரப்பட்டது. அப்படித்தான் இந்தச் சுவடி உன் தாத்தா வசம் வந்தது...”

சுவாரசியமாக எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு வந்த கர்னீலியஸ் பதற்றத்துடன் தந்தையிடம் கேட்டார். “அந்தச் சுவடியை தாத்தா திருப்பித் தரவில்லையா?”

கர்னீலியஸின் தந்தை கர்னீலியஸிற்குப் பின்னால் வெற்றிடத்தைப் பார்த்தபடியே சொன்னார். “அவருக்கு அந்தத் தகவல்களைப் புரிந்து கொள்ள பல ஆண்டுகள் தேவைப்பட்டன. அதற்கு முன் நிறைய சம்பவங்கள் நடந்து விட்டன. ஆரகிளிடம் கேட்டு வந்த ஒரு மாதத்திற்குள் அந்த இல்லுமினாட்டியின் தலைவர் இறந்து விட்டார். இல்லுமினாட்டியின் தலைமைக்குழுவிடம் ஆரகிள் தெளிவாக முதலில் சொன்னதை மட்டும் தெரிவித்த அவர் சங்கேத மொழியில் சொல்லப்பட்ட கூடுதல் தகவல்களை அவர்களிடம் சொல்லவில்லை. புரியாததை ஏன் சொல்ல வேண்டும் என்றோ, புரிந்த பின் சொல்லிக் கொள்ளலாம் என்றோ அவர் நினைத்திருக்கலாம். இல்லுமினாட்டிக்கு எதிரான கெடுபிடிகள் அதிகமாகி இல்லுமினாட்டியின் ரகசிய ஆவணங்கள் 1892ல் சிகாகோவில் கட்டப்பட்ட இல்லுமினாட்டி கோயில் அஸ்திவாரத்தில் வைக்கப்பட்ட போது இந்தச் சுவடியில் சொல்லப்பட்டிருப்பதை உன் தாத்தாவுக்கு முழுவதுமாகக் கண்டுபிடிக்க முடிந்திருக்கவில்லை. அதனால் வலிய இதைக்கொண்டு போய் கொடுத்து மற்ற ஆவணங்களுடன் புதைக்க அவர் விரும்பவில்லை. இது அவரிடமே தங்கி விட்டது...”

கர்னீலியஸ் கேட்டார். “தாத்தா எப்போது இதன் முழு அர்த்தத்தையும் கண்டுபிடித்தார்.?”

“அவர் இறப்பதற்கு ஒரு வருடம் முன்பு தான் அவரால் கண்டுபிடிக்க முடிந்தது. இறக்கும் போது தான் இந்த விஷயத்தைச் சொல்லி இதை என்னிடம் கொடுத்து விட்டுப் போனார்.”

கர்னீலியஸ் கேட்டார். “நீங்களாவது இதை இல்லுமினாட்டி தலைமையிடம் ஒப்படைத்திருக்கலாமே? 1939 ஆம் ஆண்டில் அந்த இல்லுமினாட்டி கோயில் இடிக்கப்பட்டு அஸ்திவாரத்தில் இருந்த ரகசிய ஆவணங்கள் எல்லாம் வாஷிங்டனில் இல்லுமினாட்டி ஆவணக்காப்பகத்தில் மாற்றப்பட்ட போது இதையும் சேர்த்திருக்கலாமே”

கர்னீலியஸின் தந்தை சொன்னார். “செய்திருக்கலாம். இதில் எழுதி இருப்பதை நம்ப முடிந்திருந்தால். இதில் கூடுவிட்டு கூடு பாயும் ஆவி பற்றி எல்லாம் சொல்லியிருக்கிறது. அதெல்லாம் அறிவுக்குப் பொருந்துகிற மாதிரி இல்லை. இக்காலத்தில் நடக்க முடிகிற மாதிரியும் இல்லை...”

கர்னீலியஸ் கேட்டார். “உங்களுக்கே நம்ப முடியாததை ஏன் இப்போது என்னிடம் தருகிறீர்கள்?”

“உன் தாத்தா இதை நம்பினார். இது இல்லுமினாட்டியின் ஆபத்து காலத்தில் உதவும் என்று நினைத்தார். அதனால் உன்னிடம் தருகிறேன்”

“இதை நான் என்ன செய்வது?”

“பத்திரமாக வைத்திரு. உன் காலத்தில் தான் ஆரகிள் சொன்ன அழிவுக்காலம் வருகிறது. அப்போது உன் தாத்தா நம்பிய மாதிரி இது இல்லுமினாட்டிக்கு உதவலாம். இல்லை நான் நினைக்கிற மாதிரி உதவாமலும் போகலாம். அப்படி உதவாமல் போனால் அழித்து விடு. உதவினால் பயன்படுத்திக் கொள்”

அப்படி அன்று கொடுத்து விட்டு உறங்கப் போன அவருடைய தந்தை காலையில் எழுந்திருக்கவில்லை. அவர் அதிகாலையில் தூக்கத்திலேயே இறந்து போயிருந்தார். ஈமச்சடங்குகள் எல்லாம் முடிந்த பின் அந்த வெள்ளிப்பெட்டியில் இருக்கும் சுவடியை கர்னீலியஸ் படித்துப் பார்த்தார். பழைய கலப்பு மொழியில் சங்கேத சூட்சுமங்களுடன் எழுதப்பட்டிருக்கும் வார்த்தைகளுக்கு கண்டுபிடித்த அர்த்தங்களை அவர் தாத்தா எழுதி வைத்திருக்கவில்லை. அதில் பாண்டித்தியம் பெற்றிருந்த அப்பாவும் எழுதி வைத்திருக்கவில்லை. என்றாலும் அதில் சிறப்பு நிபுணராக இருந்த கர்னீலியஸுக்கு அதில் எழுதி இருப்பதைக் கண்டுபிடிக்க கஷ்டமாக இருக்கவில்லை. கூடுவிட்டு கூடுபாயும் சம்பவம் ஆரம்பத்திலேயே சொல்லப்பட்டிருந்ததை அவராலும் புரிந்து கொள்ள முடிந்தது. தந்தை நம்பாததாலோ என்னவோ அவருக்கும் நம்ப முடியவில்லை. தொடர்ந்து மேலோட்டமாகப் படித்ததில் எல்லாவற்றையும் தீர்மானிக்கக் கூடிய இரண்டு மனிதர்கள் பற்றியும், தீர்மானிக்கும் இடம் பற்றியும் எழுதியிருந்தது. அதைப் படித்து நினைவில் இருத்திக் கொள்ள கர்னீலியஸ் முயலவில்லை. அதை ஒரேயடியாக அலட்சியப்படுத்தி எங்கேயாவது வைக்கவும் மனம் வரவில்லை. தாத்தா தந்திருக்கும் முக்கியத்துவத்தை மனதில் வைத்து அதை வங்கி லாக்கரில் வைத்து விட்டு கர்னீலியஸ் மறந்தே போனார்.

திரும்பவும் அந்த வெள்ளிப் பெட்டியில் இருந்த சுவடி அவருக்கு நினைவுக்கு வந்தது இல்லுமினாட்டியில் விஸ்வம் நுழைந்த போது தான். இமயமலைக்குத் தெற்கில் இருந்து வருபவன் என்று ஆரகிள் சொல்லி இருந்தது அவன் தானோ என்று மற்றவர்களைப் போல அவரும் நினைத்தார். ஆனால் க்ரிஷ் வந்து பேசி இல்லுமினாட்டியின் சின்னம் இடைவிடாது ஒளிர்ந்த போது ஆரகிள் சொன்னது அவனைத் தான் என்பது தெளிவாகியது. அவன் பேசிய ஒவ்வொரு வார்த்தையிலும் இருந்த நேர்மை, தெளிவு எல்லாம் அவருடைய அந்தராத்மாவைத் தொட்டது. அவருடைய தந்தையும், தாத்தாவும் இருந்திருந்தால் அவனைக் கொண்டாடி இருப்பார்கள் என்று தோன்றியது. ஆரகிள் சொன்னது உண்மையாகிறதே அப்படியானால் அது அடுத்ததாகச் சொல்லியிருப்பதும் உண்மையாகக்கூடுமோ என்ற சந்தேகம் அவர் மனதில் மெல்ல எழுந்தது. விஸ்வம் இறந்து போன போது அந்தச் சந்தேகம் அர்த்தமில்லாததாகத் தோன்றியது.

ஆனால் ம்யூனிக் நகர மருத்துவமனையில் இறந்து கொண்டிருந்த ஒரு மனிதன் விஸ்வம் இறந்திருக்கும் அதே நேரத்தில் உயிர் பிழைத்திருப்பது தெரிந்த மறு கணம் ஆரகிள் சொல்லியிருக்கும் அந்த இரண்டாவது தகவல் சுவடியும் உண்மையாகப் போகிறது என்பது தெளிவாகியது. அந்தச் சுவடி இல்லுமினாட்டியின் ஆவணங்களுடன் இருந்திருந்தால் இன்னேரம் அவர்கள் தீர்மானம் எடுக்க மிக உதவியாக இருந்திருக்கும் என்று அவர் மனசாட்சி உறுத்தியது.

அதைப் படித்து அந்தத் தகவல்களைச் சேர்க்க வேண்டிய இடத்தில் சேர்க்க அவர் முடிவெடுத்தாலும் அதைச் செய்து முடிக்க விடாமல் தடுப்பது விஸ்வமாகத் தானிருக்க வேண்டும் என்று அவருக்குத் தோன்றியது. வேறு யாராகவும் இருக்க வழியில்லை...

ஐம்பதாண்டுகளுக்கு முன் மேலோட்டமாகப் படித்ததில் கூடுதலாக எதாவது தகவல் நினைவுக்கு வருகிறதா என்று மூளையைக் கசக்கி யோசித்துப் பார்த்தார். தீர்மானிக்கும் இருவர், தீர்மானிக்கும் இடம் குறிப்பிடப்பட்டிருந்தது என்பது தவிர வேறு எதுவும் நினைவுக்கு வரவில்லை. ஆனால் அது குறித்த கூடுதல் விவரிப்புகள் அந்தச் சுவடியில் இருந்ததென்னவோ நிச்சயம் தான். யாரந்த இருவர்? அந்த இடம் தான் என்ன?

(தொடரும்)

என்.கணேசன்

இல்லுமினாட்டி 50

"சிறையிலிருந்து தப்பித்துப் போக வேண்டுமா?" என்று இரக்கத்துடன் கேட்ட ராஜேஷை மனோகர் 'இது என்ன கேள்வி?' என்பது போலப் பார்த்து விட்டுச் சொன்னான். "சிறையிலிருந்து தப்பித்துப் போகும் ஆசை யாருக்குத் தான் இருக்காது? ஆனால் அப்படித் தப்பிக்க முடிய வேண்டுமே!"

ராஜேஷ் சொன்னான். "நான் முன்பே சொன்னது போல நீ பணம் செலவு செய்யத் தயாராக இருந்தால் தாராளமாக அவர்களே நீ தப்பிக்க வழி சொல்லிக் கொடுப்பார்கள்"

மனோகர் எச்சரிக்கையுடன் கேட்டான். "பொதுவாக இங்கிருந்து தப்பிக்க ஒருவன் எத்தனை பணம் தர வேண்டியிருக்கும்?"

ராஜேஷ் சொன்னான். "அது நாம் எந்தக் குற்றத்திற்காக எவ்வளவு கால தண்டனையில் இருக்கிறோம் என்பதைப் பொருத்தது. சின்னக் குற்றங்கள், குறைந்த தண்டனையில் இருந்தால் சுமார் ஐம்பதாயிரம் தந்தால் கூடப் போதும் பெரிய குற்றம் பெரிய தண்டனையாக இருந்தால் ஐந்து லட்சம், பத்து லட்சம் கூட செலவழிக்க வேண்டி வரும்..."

மனோகருக்குக் கடத்தல் குற்றம் எந்த அளவுகோலில் இருக்கிறது என்ற சந்தேகம் எழுந்தது. சிறு தயக்கத்துக்குப் பின் கேட்டான். "நான் எவ்வளவு தர வேண்டியிருக்கும்?"

ராஜேஷ் சொன்னான். "நான் கேட்டுச் சொல்கிறேன்"

மனோகருக்குப் பயமாகவும் இருந்தது. 'இவன் கேட்டுச் சொல்கிறேன் என்று நான் தப்பிக்க முயல்கிறேன் என்ற செய்தியைப் பரப்பி விட்டால் அது சிக்கலை அதிகப்படுத்தி விடுமே' என்று யோசித்தான்.

அவன் முகபாவனையிலிருந்தே அவன் மனப்போக்கைப் படிக்க முடிந்த ராஜேஷ் அவன் தோளில் தட்டிக் கொடுத்தபடிச் சொன்னான். "கவலைப்படாதே. என் ஆட்கள் ரகசியம் காக்க முடிந்தவர்கள். உதவ முடியா விட்டாலும் மாட்டிவிட மாட்டார்கள். தாராளமாக நம்பலாம்"

அவன் அப்படிச் சொன்னாலும் மனோகருக்கு மனதில் நெருடலாகத் தான் இருந்தது. இவன் யாரிடம் கேட்பான், எப்படிக் கேட்பான் என்று தெரியவில்லை. அதைக் கேட்டாலும் அவன் சொல்வான் என்று தோன்றவும் இல்லை. இவனிடம் சொல்லித் தேவையில்லாமல் பிரச்னை செய்து கொள்கிறோமோ என்று தோன்றியது. ஆனாலும் முயற்சி எதுவும் செய்யாமல் இப்படியே அடைந்து கிடப்பது ஆகாது, ஏதாவது செய்தே ஆக வேண்டும் என்று உறுதியுடன் நினைத்துக் கொண்டான்.

அன்று மதிய உணவின் போது ராஜேஷ் திடீரென்று காணாமல் போனான். கைதிகளுக்கு மத்தியில் மனோகர் எத்தனை தேடியும் அவனைக் காண முடியவில்லை. இருவரும் ஒன்றாகத் தான் சாப்பிடுமிடத்திற்கு வந்தார்கள். மனோகர் பின்னால் தான் அவன் உணவுக்காக வரிசையில் நின்றிருந்தான். மனோகர் தட்டில் சாப்பாட்டை வாங்கிக் கொண்டு திரும்பிப் பார்த்த போது ராஜேஷைக் காணவில்லை. சாப்பிடும் ஹாலில் கதவருகே இரண்டு காவலர்கள் துப்பாக்கியோடு நின்றிருந்தார்கள். அவர்கள் இருவருடைய பார்வையும் அங்கிருந்த கைதிகள் மீதே நிலைத்திருந்தன. அவர்களை ஏமாற்றி அவன் வெளியே போயிருக்க வழியேயில்லை என்பதால் அவர்கள் அனுமதியோடு தான் போயிருக்க வேண்டும். போய் மனோகர் தப்பிக்க முயற்சி செய்கிறான் என்று காட்டிக் கொடுத்து விடுவானோ என்று மெல்ல திகில் வந்தது. பல வித யோசனைகள், பயங்களுடன் அவன் சாப்பிட்டு முடித்துக் கைகழுவித் திரும்பிய போது ராஜேஷ் சாப்பாட்டுக்காக வரிசையில் நின்றிருந்தான். எப்போது வந்தான், எப்படி வந்தான் என்பது தெரியவில்லை.

சிறையறைக்குத் திரும்பவும் இருவரும் வந்து சேர்ந்த பிறகு சிறையறைகள் பூட்டப்பட்டு வராந்தாவில் காவலர்களின் காலடியோசை குறைந்து கொண்டே போய் வராந்தாவில் முழுஅமைதி திரும்பிய பிறகு ராஜேஷ் மனோகரிடம் சொன்னான். "பத்து லட்சம் கேட்கிறார்கள்?"

அப்படியானால் அவன் சார்பாகப் பேசுவதற்காகத் தான் ராஜேஷ் இடையே காணாமல் போயிருக்கிறான் என்பது மனோகருக்குப் புரிந்தது. காட்டிக் கொடுக்கிறவனாக இருந்தால் இப்படி பேரம் பேசிவிட்டு வந்திருக்க மாட்டான் என்று அவன் மனம் சிறிது நிம்மதி அடைந்தது. கோடிக்கணக்கில் அவன் வங்கிக் கணக்கில் இருப்பதால் எத்தனையும் செலவழிக்க மனோகர் தயார் தான் என்றாலும் அத்தனை பணமா என்பது போல முகத்தில் திகைப்பைக் காட்டினான். பணம் அவனிடம் நிறைய இருக்கிறது என்கிற உண்மை யாருக்கும் தெரிவது அவசியமில்லை என்று அவன் நினைத்தான்.

மனோகர் திகைப்பைப் பார்த்து ராஜேஷ் வருத்தத்துடன் சொன்னான். "எனக்கும் அவர்கள் தொகையைச் சொன்னவுடன் திகைப்பாய் இருந்தது. 'என்னைய்யா இவன் காஷ்மீர் தீவிரவாதியா, ஒரு பெண்ணைக் கடத்தியவனைத் தப்பிக்க வைக்க இவ்வளவு பணம் கேட்கிறீர்கள் என்று கேட்டேன். அவர்கள் முதலமைச்சர் குடும்பம் சம்பந்தப்பட்ட வழக்கில் இருக்கும் ஆளைத் தப்பிக்க வைத்தால் இரண்டு மூன்று பேருக்காவது சஸ்பென்ஷன், விசாரணை எல்லாம் உறுதி. அதெல்லாம் பரவாயில்லை என்று துணிந்து செய்ய வேண்டுமானால் குறைந்தபட்சம் பத்து லட்சமாவது வேண்டும். இல்லா விட்டால் பேசவே பேசாதே என்கிறார்கள்...."

மனோகர் ஆழ்ந்து யோசிக்கும் பாவனை காட்ட, ராஜேஷ் அவனை இரக்கத்துடன் பார்த்தான். மனோகர் சிறிது யோசித்து விட்டுக் கேட்டான். "பணத்திற்கு நான் எப்படியாவது ஏற்பாடு செய்கிறேன் என்று வைத்துக் கொள். அவர்களுக்கு எப்படிப் பணம் தருவது?"

அவன் பணம் ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னது ராஜேஷைச் சிறிது ஆச்சரியப்படுத்தியது போல் இருந்தது. இத்தனை பெரிய தொகையை அவனால் தர முடியாது என்று நினைத்திருக்கிறான் என்பது மனோகருக்கு அந்த ஆச்சரியத்தைப் பார்த்துப் புரிந்தது.

ராஜேஷ் உற்சாகமாகச் சொன்னான். "அது பணமாகவும் தரலாம். அவர்கள் சொல்லும் அக்கவுண்டுக்கு நீ அனுப்பியும் வைக்கலாம். பணம் கிடைத்து அதிகபட்சமாய் மூன்றே நாளில் தப்பிக்க அவர்கள் ஏற்பாடு செய்து விடுவார்கள். அதற்கு நான் உத்திரவாதம் தருகிறேன். நீ பணத்தை எப்படி தரப்போகிறாய்?"

அந்தப் பிரபல பத்திரிக்கையில் வேலைக்குச் சேர்வது சிந்துவுக்குச் சிரமமாக இருக்கவில்லை. அவளிடம் இயல்பாகவே இருந்த அழகு, புத்திசாலித்தனம், துணிச்சலான அணுகுமுறை எல்லாம் ஒரு பத்திரிக்கை நிருபர் வேலைக்குக் கச்சிதமாகவே பொருந்தி இருந்ததாலும், சம்பளம் எவ்வளவானாலும் பரவாயில்லை என்று சொல்லியதாலும் உடனே வந்து சேர்ந்து கொள்ளச் சொல்லி விட்டார்கள். அவளுக்குப் பத்திரிக்கைத் துறையில் முன் அனுபவம் இல்லாததால் முதல் மூன்று மாதங்களைப் பயிற்சி மாதங்களாகத் தான் எடுத்துக் கொள்வோம், அந்த மூன்று மாதங்களில் சம்பளம் பாதியாகத் தான் தருவோம் என்று சொன்னதற்கும் சிந்து ஒத்துக் கொண்டாள். அவளுக்கு அந்தப் பத்திரிக்கையில் நிறைய நாட்கள் இருக்கும் எண்ணம் சுத்தமாக இல்லை. உதயை அணுக அந்தப் பத்திரிக்கை நிருபர் பதவி உதவியாக இருக்கும் என்பதைத் தவிர அந்த வேலையில் அவளுக்கு வேறெந்த அக்கறையும் இருக்கவில்லை.

முதலிரண்டு நாட்களில் அவள் ஒரு மூத்த நிருபருக்கு உதவியாளராக இருந்து அந்த வேலையின் நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டாள். மூன்றாவது நாள் இன்னொரு நிருபர் கொண்டு வந்த செய்தியைப் பிழை திருத்தும் வேலை அவளுக்குத் தரப்பட்டது. நான்காவது நாள் எந்த வேலையையும் அவர்கள் ஒதுக்குவதற்கு முன் அவள் பத்திரிக்கை ஆசிரியரைச் சந்தித்துச் சொன்னாள். "சார் நானாகவே ஒரு வேலையை முழுமையாகச் செய்ய ஆசைப்படுகிறேன்"

அந்தப் பெண்ணிடம் இருந்த உற்சாகமும், தன்னம்பிக்கையும் அந்தப் பத்திரிக்கை ஆசிரியர் முகத்தில் சிறு புன்னகையை வர வைத்தது. "என்ன செய்யலாம் என்றிருக்கிறாய்" என்று கேட்டார்.

"ஒரு இளம் அரசியல்வாதியைப் பேட்டி எடுக்க ஆசைப்படுகிறேன்..."

"யாரையாவது குறிப்பாக மனதில் நினைத்து வைத்திருக்கிறாயா?"

"ஆமாம் சார். முதலமைச்சர் மகனும், எம்.பியுமான உதய் கமலக்கண்ணனைப் பேட்டி எடுக்க ஆசைப்படுகிறேன்"

"ஏன் அவரை?"

சிந்து சிறிதும் யோசித்து நிற்காமல் ஒரு ரகசியத்தைப் பகிர்ந்து கொள்பவள் போலச் சொன்னாள். "மத்தியில் கூட்டணி ஆட்சி அமையும் சூழல் உருவானால் உதய் கமலக்கண்ணனுக்குக் கண்டிப்பாக மத்திய மந்திரி பதவி கிடைக்கும் என்று டெல்லியிலிருக்கும் என் பத்திரிக்கை நண்பர் மூலம் கேள்விப்பட்டேன். அப்படி ஒருவேளை நடந்தால் அவரை முன்கூட்டியே பேட்டி எடுத்து வெளியிட்டிருப்பது நம் பத்திரிக்கைக்குச் சிறப்பாக இருக்கும் அல்லவா?"

அந்தப் பத்திரிக்கை ஆசிரியர் முகத்தில் புன்னகை விரிந்தது. இளமைக்கே உரிய உற்சாகம், வித்தியாசமான யோசனைகள், நடைமுறைப்படுத்த நினைக்கும் துடிப்பு இருக்கிற இந்த பெண்ணைத் தடுக்கத் தோன்றவில்லை. "சரி முயற்சி செய். பேட்டி எப்படி வருகிறது என்று முதலில் பார்ப்போம். அப்புறமாய் வெளியிடுவது பற்றி யோசிக்கலாம்" என்று சொல்லி அனுப்பினார்.

சிந்துவுக்குப் பேட்டி வந்தாலும் வராவிட்டாலும் ஒன்று தான். பேட்டி எடுக்கும் சாக்கில் உதயைச் சந்திக்கும் வாய்ப்பு தான் அவளுக்கு வேண்டியது. அதனால் முகமலர்ந்து இரண்டு முறை நன்றி சொல்லி விட்டு அவர் அறையை விட்டு வெளியே வந்தாள். உதயைச் சந்திக்க ஒரு சாக்கு கிடைத்து விட்டது.

அவள் உதயை அவனுடைய பாராளுமன்ற உறுப்பினர் அலுவலகத்திலேயே முதலில் சந்திக்க முடிவு செய்தாள். எந்தக் காரணத்தைக் கொண்டும் தன் திட்டத்தில் முதல் பாகத்தைக் கடக்கும் வரை க்ரிஷ் கண்ணில் பட அவள் விரும்பாததால் உதயை வீட்டில் சந்திப்பதைத் தவிர்த்தாள்.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, May 28, 2020

இல்லுமினாட்டி 51

அக்ஷய் தன் வாழ்க்கையின் அமைதியான ஓட்டத்திற்கு இப்படியொரு தடை வரும் என்று சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை. க்ரிஷ் அவனிடம் நேற்று பேசி விட்டுப் போய் விட்டான். க்ரிஷ் இந்த முடிவு தான் எடுக்க வேண்டும் என்று அவனை வற்புறுத்தவில்லை. போவதற்கு முன் க்ரிஷ் "என்ன முடிவு எடுக்கிறீர்கள் என்பதை மட்டும் தயவு செய்து எனக்குத் தெரிவியுங்கள்" என்று அவனுடைய அலைபேசி எண்ணைத் தந்து விட்டுப் போயிருந்தான்.

அவன் செல்வதற்கு முன் அக்ஷய் தன் சந்தேகத்தை வெளிப்படையாகவே கேட்டிருந்தான். "ஒருவேளை நான் மறுத்து விட்டால் உங்கள் இயக்கம் என்னைத் தொந்திரவு செய்யாமல் விட்டு விடுமல்லவா? இல்லை என்னையும் ஒரு எதிரியாக நினைக்க ஆரம்பிக்குமா?"

க்ரிஷ் அந்தக் கேள்வியையோ, அப்படி ஒரு நிலைமையையோ எதிர்பார்த்திருக்கவில்லை என்பது அவன் முகபாவனையிலேயே தெரிந்தது. "உங்கள் சுதந்திரத்தில் தலையிட அந்த இயக்கத்திற்கு என்ன உரிமை இருக்கிறது. வேண்டுகோளுக்கு மறுப்பு தெரிவிப்பவர்களை எல்லாம் எதிரிகளாய் நினைப்பது யாரானாலும் அது தவறல்லவா? என்று க்ரிஷ் உறுதியாகவே சொன்னான்.

அக்ஷய்க்கு அவன் நேர்மையும், அதிலிருந்த உறுதியும் மிகவும் பிடித்திருந்தது. அதே சமயம் அவன் வேண்டுமென்றே 'உங்கள் இயக்கம்' என்று சொல்லிப் பார்த்ததற்கு அவன் தன்னைச் சம்பந்தப்படுத்திக் கொள்ளாமல் 'அந்த இயக்கம்' என்று சொல்லி விலக்கிக் கொண்ட விதமும் பிடித்திருந்தது. அவன் புன்னகையுடன் சொன்னான். "அதை நீ சொல்கிறாய். ஆனால் அந்த இயக்கமும் அந்த விதமாகவே சிந்திக்கும் என்பது என்ன நிச்சயம்?"

க்ரிஷ் சொன்னான். "அப்படித் தங்கள் விருப்பத்தை மற்றவர்கள் மேல் பலவந்தமாகத் திணிக்கும் போக்கு அந்த இயக்கத்திற்கு இருந்தால் அதற்கும், விஸ்வத்திற்கும் இடையே என்ன வித்தியாசம் இருந்து விட முடியும்?"

அக்ஷய் எதுவும் சொல்லவில்லை. க்ரிஷ் போய் விட்டான். க்ரிஷ் போனாலும் இல்லுமினாட்டியின் காவலர்கள் அல்லது ஒற்றர்கள் அங்கேயே இருக்க வாய்ப்பு உண்டு என்று அக்ஷய் எதிர்பார்த்தான். ஆனால் அவனையோ அவன் வீட்டையோ யாரும் கண்காணிப்பதாக அவன் உணரவில்லை. நள்ளிரவில் எழுந்து கூட ஜன்னல் வழியே பார்த்தான். மறுநாள் அதிகாலை எழுந்து நடைப்பயிற்சி போன போதும் யாராவது பின் தொடர்கிறார்களா என்று பார்த்தான். அப்படி யாரும் பின்தொடரவில்லை. அந்த அளவு நாகரிகத்தை இல்லுமினாட்டியிடமிருந்து அக்ஷய் எதிர்பார்த்திருக்கவில்லை. ஆனால் அவனுக்கு அவர்களது கோரிக்கை குறித்து சுலபமாக ஒரு தீர்மானித்திற்கு வர முடியவில்லை. அவனுடைய குடும்பத்தினரிடம் சொன்னால் கண்டிப்பாக ஒத்துக்கொள்ள மாட்டார்கள். மனைவி, மகன்கள், அண்ணா யாருமே ஒத்துக் கொள்ள மாட்டார்கள்...

அண்ணா பற்றி எண்ணியதுமே அவனிடம் இல்லுமினாட்டி பற்றி கேட்டுப் பார்க்கலாமே என்று தோன்றியது. அண்ணா ஆனந்த் இப்போது சிபிஐ டைரக்டராக இருக்கிறான். அவனுக்குக் கண்டிப்பாகக் கூடுதலாகத் தகவல்கள் தெரிந்திருக்கும். உடனே அக்ஷய் அவனுக்குப் போன் செய்து பேசினான். பரஸ்பர குடும்ப நலன்களை எல்லாம் விசாரித்து, சமீபத்திய தகவல்கள் பரிமாறிக் கொண்டு விட்டுக் கேட்டான். "இன்றைக்கு ஒரு பத்திரிக்கையில் இல்லுமினாட்டி பற்றிக் கட்டுரை ஒன்றைப் படித்தேன். ஆனந்த் நீ என்ன நினைக்கிறாய்? உண்மையிலேயே இல்லுமினாட்டி இருக்கிறதா?"

ஆனந்த் யோசிக்காமல் மறு கேள்வி கேட்டான். "சூரியன் இருக்கிறதா?"

அக்ஷய் சிரித்தான். "சரி நீ இது வரை ஏதாவது இல்லுமினாட்டி உறுப்பினரைப் பார்த்திருக்கிறாயா?"

"தொடர்ந்து அதிகார உச்சத்தில் இருக்கும் ஒவ்வொருவரைப் பார்த்தாலும் எனக்கு அவர்கள் இல்லுமினாட்டி ஆட்களாக இருக்குமோ என்று தோன்றும். அதை உறுதிப்படுத்திக் கொள்ள வழியில்லை. அவர்கள் எப்போதுமே தங்களை இல்லுமினாட்டிகளாகக் காண்பித்துக் கொள்ள மாட்டார்கள். அது சரி நீ ஏன் இல்லுமினாட்டி பற்றி திடீரென்று கேட்கிறாய்?"

"நான் தான் சொன்னேனே, இல்லுமினாட்டி பற்றி ஒரு கட்டுரை சமீபத்தில் படித்தேன் என்று. அதனால் தான் கேட்டேன்..."

ஆனந்துக்கு அதை முழுவதுமாக நம்பி விட முடியவில்லை. "அக்ஷய். நீ சொல்வது உண்மை தானே?"

அக்ஷய் கேட்டான். "நான் இது வரைக்கும் ஏதாவது பொய் சொல்லி இருக்கிறேனா?"

ஆனந்த் சொன்னான். "ஏகப்பட்ட பொய் சொல்லியிருக்கிறாயே."

அக்ஷய் வாய்விட்டுச் சிரித்தான். "ஏன் ஆனந்த் இப்படிக் காலை வாருகிறாய்?"

ஆனந்த் சொன்னான். "உன்னால் தொடர்ந்தாற்போல் பிரச்சினைகளில் இருந்து விலகி இருக்க முடியாது. அந்தப் பயத்தில் தான் சொல்கிறேன். எப்போதுமே விளையாட்டுக்காகக்கூட இல்லுமினாட்டியோடு சம்பந்தப்பட்டு விடாதே"

"ஏனிப்படி அவர்களுக்குப் பயப்படுகிறாய்?"

"அவர்கள் பற்றி நம்பத்தகுந்த வட்டாரத்திலிருந்து நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன் அக்ஷய். அதனால் தான். யாரையும் பயமுறுத்திப் பணிய வைக்கப் பார்ப்பார்கள். அல்லது விலை கொடுத்து வாங்கப் பார்ப்பார்கள். இரண்டும் முடியா விட்டால் அலட்டிக் கொள்ளாமல் ஆளையே முடித்துக்கட்டி விடுவார்கள்..."

இல்லுமினாட்டி பற்றி சும்மா தான் விசாரித்ததாக ஆனந்தை நம்ப வைப்பதற்குள் அக்ஷய் படாதபாடுபட்டு விட்டான். போனில் பேசி முடித்த பிறகு பெருமூச்சு விட்டான். அவன் ஆரம்பத்தில் நினைத்ததைத் தான் ஆனந்தும் சொல்கிறான். இல்லுமினாட்டி சகவாசமே வேண்டாம்!...

சிந்து மிகவும் கவனமாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டு கிளம்புவதற்கு முன்னால் கண்ணாடியில் பார்த்துக் கொண்டாள். சேலையில் அவள் மிக அழகாகவே தெரிந்தாள். மும்பையிலேயே பிறந்து வளர்ந்த அவளுக்கு சேலையை விட மற்ற சுடிதார், பேண்ட், சட்டை முதலான ஆடைகளே பிடித்தமானது என்றாலும் உதய்க்குப் பெண்களிடம் பிடித்த உடை சேலை என்பதால் அதையே அணிந்திருந்தாள். அவள் பெரும்பாலும் பொட்டு வைப்பதில்லை. வைத்தாலும் குண்டூசியின் தலைப்பகுதியை விடப் பெரிதாக அவள் வைத்துக் கொண்டதில்லை. ஆனால் உதய்க்குப் பிடிக்கும் என்பதற்காக கண்ணுக்குத் தெரிகிற அளவில் பொட்டு வைத்திருந்தாள். தனக்குப் பிடிக்காததை எல்லாம் செய்கிறோமே என்று ஒரு கணம் அவளுக்குத் தன் மீதே வெறுப்பாகக்கூட இருந்தது. ஆனால் 'இது பணம் சம்பாதித்துத் தரும் வேலை, அதற்குத் தேவையான நடிப்பு அவ்வளவு தான்' என்று நினைவுபடுத்திக் கொண்டு கிளம்பினாள்.

உதயின் உதவியாளன் வந்து பிரபல பத்திரிக்கையின் ஒரு பெண் நிருபர் பேட்டி ஒன்றுக்காக அப்பாயின்மெண்ட் கேட்டு வந்திருக்கிறாள் என்று சொன்ன போது உதய் முகம் சுளித்தான். அவனுக்கு இன்னமும் பேட்டிகள் எல்லாம் கசக்கவே செய்தன. ஒரே மாதிரியான கேள்விகள் கேட்கப்படுவதும், ஒரே மாதிரியான பாசாங்குகளும், நடிப்புகளும், வார்த்தை ஜாலங்களும் பதிலுக்குத் தேவைப்படுவதும் சலிப்பாகவே இருந்தன. எல்லாம் 'க்ரிஷ் சிந்தனைகளின் தாக்கம்' என்று நினைத்துக் கொண்டான். ஆனால் இப்போது மத்தியில் கூட்டணி ஆட்சிக்கான சூழல் உருவாகிக் கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் அந்தப் பிரபல பத்திரிக்கையில் பேட்டி வருவது அனுகூலம் தான் என்று நினைவு வந்தது.

"சரி அடுத்த வாரம் ஏதாவது ஒரு நாள் கொடுத்து அனுப்பு. கேள்விகளை முன்கூட்டியே கொடுக்கச் சொல்..." என்றான்.

தலையசைத்து விட்டுப் போன உதவியாளன் இரண்டு நிமிடங்களில் திரும்பவும் வந்தான். "அந்தப் பெண் உங்களை ஒரே ஒரு முறை பார்த்து விட்டுப் போகிறேன் என்று கெஞ்சுகிறாள்..."

உதய் குறும்பாகப் புன்னகைத்து விட்டுக் கேட்டான். "பெண் பார்க்க எப்படி இருக்கிறாள்?"

உதவியாளனும் புன்னகைத்தான். "தேவதை மாதிரி இருக்கிறாள்?"

உதய் சொன்னான். "சரி அனுப்பு. ஆனால் ஐந்து நிமிடத்துக்குள் கிளம்பி விட வேண்டும் என்று சொல்லி அனுப்பு"

உதவியாளன் தலையசைத்து விட்டுப் போனான். சிறிது நேரத்தில் சிந்து உள்ளே நுழைந்தாள். அவளைப் பார்த்தவுடன் உதயின் இதயத்துடிப்பு ஒரு கணம் நின்றது. தேவதை என்று உதவியாளன் சொன்னது குறைத்துச் சொன்னதாகவே தோன்றியது. கல்லூரி நாட்களிலிருந்து இன்று வரை எத்தனையோ அழகான பெண்களை அவன் பார்த்திருக்கிறான், ரசித்திருக்கிறான். ஆனால் இந்தப் பெண் போல யாரும் அவனைப் பாதித்தது இல்லை. குடும்பப்பாங்கான, கண்ணியமான அழகு...

அவள் "வணக்கம் சார்" என்று சிறு புன்னகையுடன் கைகூப்பினாள். கன்னத்தில் விழுந்த சிறு குழியும், விரிந்த உதடுகளின் புன்னகையின் அழகும் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல அவனுக்குத் தோன்றியது.

ஒரு விஷ வலையில் விழுந்து கொண்டிருக்கிறோம் என்று தெரியாமலேயே அவளிடம் தன் மனதை முதல் பார்வையிலேயே பறி கொடுத்தான்.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, June 4, 2020

இல்லுமினாட்டி 52

"பத்து லட்சத்தை எப்படித் தரப் போகிறாய்?" என்று ராஜேஷ் கேட்டதற்கு மனோகர் வழியை யோசித்தான்.

ராஜேஷ் சொன்னான். "உனக்குத் தெரிந்த ஆள் மூலமாக ரொக்கமாகக் கொடுப்பதானாலும் கொடுக்கலாம். அவர்கள் தருகிற அக்கவுண்ட் நம்பருக்கு பணத்தை அனுப்பி வைக்க ஏற்பாடு செய்வதானாலும் செய்யலாம். அதற்கு நீ போனில் பேச நான் ஏற்பாடு செய்கிறேன் கவலைப்படாதே...."

மனோகருக்குச் சொன்ன வேலையைச் செய்ய அடியாட்கள் வெளியே இருக்கிறார்கள். செக்கில் அவன் கையெழுத்துப் போட்டு அவர்கள் கையில் கொடுத்தனுப்பலாம் என்ற போதும் அவர்களை இதில் ஈடுபடுத்த அவன் விரும்பவில்லை. "அப்படி நம்புகிற அளவுக்கு யாரும் இல்லை." என்று வருத்தத்துடன் மனோகர் சொன்னான்.

ராஜேஷ் அவனை இரக்கத்துடன் பார்த்து விட்டு யோசித்தான். பின் சொன்னான். "சரி நான் ஒரு லாப்டாப் கொண்டு வர ஏற்பாடு செய்கிறேன். நெட் பேங்கிங் மூலமாக நீயே அவர்கள் அக்கவுண்டிற்குப் பணத்தை அனுப்பி வை. அது தான் நல்லது..."

அப்படி அனுப்பி வைப்பதிலும் மனோகருக்கு முழுத் திருப்தி இல்லை என்றாலும் அதையும் விட்டால் வேறு வழி தெரியவில்லை. இருந்தாலும் அவனுக்கு மெல்லக் கேட்டுப்பார்க்கத் தோன்றியது. "நான் வெளியே தப்பித்துப் போன பிறகு அவர்களுக்குக் கொடுத்தால் என்ன?"

ராஜேஷுக்குக் கோபம் வந்து விட்டது. "அப்படி நான் போய் கேட்டால் என்னைச் செருப்பால் அடிப்பார்கள். எனக்குத் தேவையா? நீ தப்பித்துப் போகிறதை மறந்து விடு...."

மனோகர் அவனைச் சமாதானப்படுத்தினான். "கோவிக்காதே. லாப்டாப் இருந்தால் மட்டும் போதாது. என் செல்போனும் வேண்டி வரும். பணம் அனுப்புவதை உறுதிசெய்ய OTP செல்போனில் தான் வரும். அதையும் சேர்த்துக் கேட்க வேண்டுமே என்று தான் அப்படிச் சொன்னேன்"

ராஜேஷ் சொன்னான். "இத்தனை செய்கிறார்கள். உன் செல்போனை அரை மணி நேரத்துக்கு எடுத்துத் தர மாட்டார்களா? அதைப்பற்றிக் கவலைப்படாதே. அதற்கும் ஏற்பாடு செய்கிறேன்"

மறுநாளும் மதிய சாப்பாட்டு வேளையில் ராஜேஷ் காணாமல் போனான். மனோகர் சாப்பிட்டு முடித்த பிறகு தான் அவன் உணவுக்காக வரிசையில் நின்று கொண்டிருப்பதை மனோகர் பார்த்தான். தட்டில் சாப்பாட்டை வாங்கிக் கொண்டு வந்து மனோகர் பக்கத்தில் அமர்ந்தவன் அவன் காதில் முணுமுணுத்தான். "லாப்டாப் நம் சிறையறையில் இருக்கிறது. அக்கவுண்ட் விவரங்களும் ஒரு பேப்பரில் இருக்கிறது"

மனோகர் பரபரப்புடன் சிறையறைக்கு வந்து பார்த்த போது அங்கே லாப்டாப் சுவரோரமாக வைக்கப்பட்டிருந்தது. பக்கத்திலேயே ஒரு தாளில் முத்துசாமி என்ற பெயரும் அக்கவுண்ட் விவரங்களும் எழுதப்பட்டிருந்தன. அந்தத் தாளுக்கு மேலே மனோகரின் அலைபேசி வைக்கப்பட்டிருந்தது. மனோகர் செல்போனை எடுத்துப் பார்த்தான். பொதுவாக கைதிகளிடமிருந்து வாங்கிப் பாதுகாப்பில் வைக்கும் அலைபேசியை ஸ்விட்ச் ஆ∴ப் செய்து தான் வைத்திருப்பார்கள். ஆனால் மனோகர் அலைபேசியைக் கிட்டத்தட்ட ஒருவாரம் கழித்து தான் ஸ்விட்ச் ஆ∴ப் செய்திருக்கிறார்கள். அவனுக்கு வந்த அழைப்புகளை ஒரு வாரம் கண்காணித்திருக்கிறார்கள் என்பது புரிந்தது. அந்த அழைப்புகளைப் பார்த்தான். எதுவுமே முக்கியமானதோ, காட்டிக் கொடுக்கிற மாதிரியோ இல்லை. அதனால் தான் அலுத்துப் போய் ஸ்விட்ச் ஆ∴ப் செய்திருக்கிறார்கள் போலிருக்கிறது.

சற்று நிம்மதி அடைந்த மனோகருக்கு அந்த லாப்டாப் எந்த அளவு பாதுகாப்பானது என்று தெரியவில்லை. ஆனால் அதைப் பயன்படுத்துவதைத் தவிர வேறு வழியே இல்லை என்பதால் அதை எடுத்து மறைவாக வைத்துக் கொண்டு பயன்படுத்த ஆரம்பித்தான். அவனுக்கு இருக்கும் ஐந்து அக்கவுண்ட்களில் மிகவும் குறைவாகப் பணம் வைத்திருக்கும் அக்கவுண்டில் ரூ35,26,180/- இருந்தது. அதிலிருந்து பத்துலட்சம் அந்த முத்துசாமியின் அக்கவுண்டுக்கு அனுப்பி வைத்தான். ஒருவேளை அந்த லாப்டாப்பில் பாஸ்வர்டை ரகசியமாய் சேமித்து வைக்கும் சா∴ப்ட்வேர் கூட இருக்கலாம். யார் கண்டது? அப்படி இருந்து அவர்கள் மீதமிருக்கும் இருபத்தி ஐந்து லட்சத்தைத் திருடிக் கொண்டாலும் அவனுக்கு மற்ற அக்கவுண்ட்களில் இருக்கும் பணத்தோடு ஒப்பிடும் போது அது பேரிழப்பு அல்ல.

ராஜேஷ் சத்தமாகப் பாடிக் கொண்டு வரும் சத்தம் கேட்டது. பிரச்னைக்குரிய காவலர் யாரோ வருகிறார் போலிருக்கிறது. புரிந்து கொண்டு மனோகர் அந்த லாப்டாப்பையும், அலைபேசியையும் சுவர் ஓரமாக ஒளித்து வைத்து உட்கார்ந்தான். ஒரு காவல் அதிகாரி அவர்கள் சிறையறை முன்னால் வந்து நின்று உள்ளே நோட்டமிட்டார். பின்னாலேயே வந்த ராஜேஷ் உள்ளே வந்தவுடன் கதவை மூடிப் பூட்டிக் கொண்டு போனார்.

ராஜேஷ் தாழ்ந்த குரலில் கேட்டான். "வேலை முடிந்ததா?"

மனோகர் "முடிந்தது" என்று சொல்லி விட்டுக் கேட்டான். "இனி எப்போது என்னைத் தப்பிக்க வைப்பார்கள்?"

ராஜேஷ் சொன்னான். "பணம் போய்ச் சேர்ந்தவுடன் தான் சொல்வார்கள். நாளைக்குக் கேட்டுச் சொல்கிறேன்"

அரை மணி நேரம் கழித்து மெலிதாக விசில் சத்தம் கேட்டது. ராஜேஷ் லாப்டாப்பையும், அலைபேசியையும் எடுத்து சிறைக்கம்பிகள் வழியாக வெளியே சுவரோரமாக வைத்தான்.

யாரோ வேகமாக வந்து அதை எடுத்துக் கொண்டு போகும் காலடி ஓசை மட்டும் கேட்டது.

எர்னெஸ்டோவுக்கு அக்ஷயிடன் க்ரிஷ் பேசிய பேச்சின் ஒலிப்பதிவு உடனடியாக வந்து சேர்ந்தது. அவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்த போது நாற்பது அடி தள்ளி அமர்ந்திருந்த பாதுகாவலர்களிடமிருந்த ஒட்டுக் கேட்கும் கருவி மிக நவீன தொழில்நுட்பத்தினால் உருவானது. பாதுகாவலர்கள் இடையிடையே மெல்லிய குரலில் பேசிக் கொண்டிருந்தாலும் தள்ளி இருந்த அக்ஷய் க்ரிஷ் பேச்சைப் பிரத்தியேகமாகப் பிரித்து துல்லியமான பதிவாக அவர்கள் அனுப்பி வைத்திருந்தார்கள். முழுப் பேச்சையும் கேட்டு முடித்த பின் அவர் கண்களை மூடியபடி சிந்தனையில் ஆழ்ந்தார்.

அமானுஷ்யனுக்கு எட்டுப் பாதுகாவலர்கள் போயிருப்பது தெரியாமல் இருந்திருந்தால் தான் ஆச்சரியம். அவனுடைய ∴பைலைப் படித்த போதே அவனுடைய பார்வைக் கூர்மை அவருக்குப் புரிந்திருந்தது. அந்தக் கூர்மையும் மற்ற திறமைகளும் இல்லாதிருந்தால் இல்லுமினாட்டி அவன் உதவியை நாடியே இருக்காது. ஆனால் அவன் உடனடியாக சம்மதிக்காதது, அப்படிச் சம்மதிக்கிற மாதிரி க்ரிஷ் அழுத்தமாகப் பேசியிருக்காதது அவருக்கு ஏமாற்றத்தை அளித்தது. அமானுஷ்யனைப் போன்ற ஒருவனின் பார்வையில் அவனைக் கவரக்கூடிய சிறப்பு அம்சமே க்ரிஷின் நேர்மை தான். இனம் இனத்தோடு சேரும் என்ற விதியை எர்னெஸ்டோ உறுதியாக நம்பினார். அதனால் தான் அவனையே அனுப்பியுமிருந்தார். அந்த வகையில் க்ரிஷின் பேச்சு உணர்ச்சி பூர்வமாகவும், அறிவுபூர்வமாகவும் இருந்ததென்னவோ உண்மை தான். ஆனால் அமானுஷ்யன் மறுத்தவுடன் க்ரிஷ் கூடுதல் அழுத்தம் கொடுத்துப் பேசியிருக்க வேண்டும் என்று அவருக்குத் தோன்றியது. ஒரு இல்லுமினாட்டியின் வேகமும், அழுத்தமும் க்ரிஷின் பேச்சில் விடுபட்டு இருப்பதாக அவர் நினைத்தார்.

அப்படி நினைத்த போதே அவன் இல்லுமினாட்டியானதே அவரால் தான் என்பதும், அவன் அறிவுஜீவியே ஒழிய இது போன்ற விவகார ஞானத்தில் அவன் அனுபவம் குறைவு என்பதும் நினைவுக்கு வந்து அவர் மனம் மென்மையாகியது. இன்னொரு உண்மையும் அவருக்குப் புரிந்திருந்தது. க்ரிஷ் ஒரு இல்லுமினாட்டியாகப் பேசியிருந்தால் அமானுஷ்யன் யோசித்துச் சொல்ல இரண்டு நாட்கள் கூட எடுத்திருக்க மாட்டான். உடனடியாக மறுத்தே அனுப்பி இருப்பான். பிறகு அவனுக்கும் அவன் குடும்பத்திற்கும் இல்லுமினாட்டி எத்தனையோ பிரச்னைகள் உண்டாக்க முடியும் என்றாலும் அவன் மனதை மாற்றி அவர்கள் பக்கம் இழுத்திருக்க முடியாது. அவனை ஒரு எதிரியாக்கிக் கொள்வது படுமுட்டாள்தனம் என்பதில் இருவேறு கருத்துகள் அவரிடம் இருக்கவில்லை. அவன் யோசிக்கின்ற நேரத்தில் எந்த விதமான எதிர்மறை அபிப்பிராயங்களும் அவன் மனதில் உருவாகி விடக்கூடாது என்பதற்காகவே அவர் இல்லுமினாட்டியின் அதிகாரவழி உபாயங்கள் எதையும் மேற்கொள்ளவில்லை...

க்ரிஷ் அவருக்குப் போன் செய்தான். அவரிடம் நடந்ததை எல்லாம் சொன்னான். அவர்கள் பேசியதை அவர் முன்பே கேட்டிருப்பதை அவர் காட்டிக் கொள்ளவில்லை. அவன் தங்களுக்குள் பேசிக் கொண்டதை இம்மி அளவும் மாற்றாமல் அவரிடம் சொன்னான்.

கடைசியில் அவர் மெல்லக் கேட்டார். "அவன் சம்மதிப்பான் என்று தோன்றுகிறதா?"

"அவரைச் சம்மதிக்க வைக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது தலைவரே" என்று க்ரிஷ் சொன்ன போது அவர் அசந்து போனார். இது வரை பேசி சம்மதிக்க வைக்க முடியாதது இனி முடியும் என்று எந்த நம்பிக்கையில் இவன் சொல்கிறான்.? அவர் கேட்டார். "எதை வைத்து நீ நம்புகிறாய்?"

க்ரிஷ் சொன்னான். "நிகோலா டெஸ்லா!"

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, June 11, 2020

இல்லுமினாட்டி 53

ஐந்து நிமிடம் பேச அனுமதிக்கப்பட்டவளிடம் உதய் ஒரு மணி நேரம் பேசிக்கொண்டிருந்தான். அந்த ஒரு மணி நேரமும் எப்படிப் பறந்ததென்றே அவனுக்குத் தெரியவில்லை. அவளைப் பற்றி முழுவதுமாக விசாரித்துத் தெரிந்து கொண்டான். அவள் பிறந்து வளர்ந்தது, படித்தது, பட்டம் பெற்றது எல்லாம் மும்பையில் என்று சொன்னாள். அவள் சிறியவளாக இருக்கையிலேயே அவளுடைய தாய் இறந்து விட்டாளென்று சொன்னாள். சொன்ன போது அவள் கண்களில் ஈரம் தெரிந்தது. தந்தை இரண்டாம் திருமணம் செய்து கொண்டார் என்றும் சித்தியோடு தனக்கு ஒத்துப் போகவில்லை என்றும் சொன்னாள். படித்து முடித்த பின் வீட்டில் இருக்க முடியாமல் வெளியே வந்து விட்டதாகச் சொன்னாள். மும்பையில் சின்னச் சின்ன வேலைகளில் இருந்ததாகவும் இப்போது இந்தப் பத்திரிக்கையில் வேலை கிடைத்துச் சென்னை வந்திருப்பதாகவும் சொன்னாள். அவனுடைய பேட்டி தான் அவள் அந்தப் பத்திரிக்கையில் தனியாகச் செய்யப் போகிற முதல் வேலை என்று சொன்னாள். அவனை நேரில் பார்க்க முடிந்து பேசிக் கொண்டிருப்பதே பாக்கியம் என்று அவள் நினைப்பது போல் காட்டிக் கொண்டாள். அவன் கண்கொட்டாமல் பார்த்த போது சிறு வெட்கத்துடன் மெல்ல நெளிந்தாள். அவள் அழகு, பேச்சு, வெட்கம் எல்லாமே அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது.

பேச ஆரம்பித்த சில நிமிடங்களில் சிந்துவும் அவனிடம் இயல்பாகப் பேச ஆரம்பித்தாள். அவன் இந்த அளவு எளிமையாகவும், பந்தா இல்லாமலும் பழகுவான் என்று சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை என்று சொன்னாள்.

உதய் புன்னகையுடன் சொன்னான். "என்னைப் பார்த்தே இப்படிச் சொல்கிறாயே. என் தம்பியைப் பார்த்துப் பேசினால் என்ன சொல்வாய் என்று தெரியவில்லை. என் தம்பி ஒரு ஜீனியஸ் தெரியுமா? அவன் அறிவில் கால் பாகம் இருந்திருந்தாலும் எனக்கு தலைக்கனம் கண்டிப்பாக வந்திருக்கும். ஆனால் அவனிடம் துளி கூடக் கர்வமும் கிடையாது.. அவன் ரொம்ப நல்லவன் தெரியுமா?" உதய்க்குத் தம்பியைப் பற்றிச் சொல்லும் போதே பெருமிதம் பொங்கியது.

சிந்து கன்னத்தில் குழி விழப் புன்னகைத்தபடி கேட்டாள். "அப்படியானால் நீங்கள்?"

உதய் சிரித்துக் கொண்டே சொன்னான். "நான் நல்லவன் தான் ஆனால் அவன் அளவுக்கு நான் நல்லவன் இல்லை"

விஸ்வமே ஜாக்கிரதையாக இருக்கச் சொன்ன ஆள் அவன் தம்பி என்பதை சிந்து நினைவுபடுத்திக் கொண்டாள். பொதுவாக நல்லவர்களிடம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டியதில்லை என்பது அவள் அனுபவம். ஆனால் விஸ்வம் காரணமில்லாமல் எதையும் சொல்ல மாட்டான்....

முதல் சந்திப்பிலேயே இன்னும் அதிக நேரம் அங்கே தங்குவது உசிதம் அல்ல என்று நினைத்தவளாய் அவள் எழுந்து நின்றாள். "உங்களுக்கு எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை. என்னையும் சரிசமமான ஒருத்தியாய் நினைத்துப் பேசுவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை...."
உதய்க்கு அவளைப் போக விட மனமிருக்கவில்லை. ஏதாவது சொல்லி இனியும் உட்கார வைத்து அவள் அவனைக் கவுரவக்குறைவாய் நினைக்க வைத்து விட வேண்டாம் என்று நினைத்து "சந்தித்ததில் மகிழ்ச்சி. எதற்கும் உன் போன் நம்பரை என் உதவியாளரிடம் கொடுத்து விட்டுப் போ" என்று சொல்லிக் கை நீட்டினான்.

அவளும் கை நீட்ட அவன் அவள் கையைக் குலுக்கினான். அவள் கையின் ஸ்பரிஷம் அவனை என்னவோ செய்தது. சில வினாடிகள் கூடுதலாகப் பிடித்து பின்பு தான் விட்டான். அவள் சின்னதாய் வெட்கப்பட்டு மறுபடி நன்றி சொல்லி விட்டுக் கிளம்பினாள்.

இந்த முதல் சந்திப்பு கச்சிதமாகச் சென்றதாய் அவளுக்குத் தோன்றியது. அவள் வலையில் விழுந்து விட்ட இவனைக் கையாள்வது இனி சுலபம் என்று நினைத்துக் கொண்டு திருப்தியுடன் வெளியே வந்தாள்.

மறுநாள் மதிய உணவுவேளையின் போது மறுபடியும் காணாமல் போய் திரும்பி வந்த ராஜேஷ் சாப்பாட்டு அறையில் எதுவும் மனோகரிடம் சொல்லவில்லை. சிறையறைக்கு வந்த பின் சொன்னான். "அவர்கள் என்னையும் தப்பித்துப் போகச் சொல்கிறார்கள். நாம் இரண்டு பேரும் சேர்ந்து தப்பித்தால் தான் அது யதார்த்தமாய்த் தெரியும் என்று நினைக்கிறார்கள். நீ மட்டும் தப்பிக்க ஏற்பாடு செய்தால் அவர்களைக் காட்டிக் கொடுத்து விடும் என்று நினைக்கிறார்கள்."

மனோகர் ஒன்றும் சொல்லவில்லை. இவன் தப்பிப்பதற்கும் பணம் கேட்கிறார்களோ என்ற சந்தேகம் வந்தது. இவனும் சேர்ந்து தப்பிப்பதில் இன்னொரு பிரச்னையையும் மனோகர் கண்டான். இவன் நம்மோடு ஒட்டிக் கொண்டால் ஆபத்து, பின் இவனை எப்படி உதறுவது?...

ராஜேஷ் சொன்னான். "நீங்களாய் தானே என்னை தப்பிக்கச் சொல்கிறீர்கள். அதனால் நான் ஒன்றும் பணம் தர மாட்டேன் என்று சொல்லி விட்டேன். கடைசியில் ஒத்துக் கொண்டார்கள்"

மனோகர் தலையசைத்து விட்டுக் கேட்டான். "எப்போது எப்படி நாம் தப்பிக்கப் போகிறோம்..."

"அதைத்திட்டம் போட்டு நாளைக்குச் சொல்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் என்ன காரணம் வைத்தும் நீ திரும்பவும் ஒரு முறை மாட்டிக் கொள்ளாமல் கவனமாய் இருக்கச் சொல்கிறார்கள். அதே மாதிரி நானும் நீயும் சேர்ந்து வெளியில் இருப்பது ஆபத்து என்கிறார்கள். அதனால் நீயும் நானும் வெளியே போன பின் பிரிந்து விட வேண்டியிருக்கும்..."

மனோகருக்கும் அது தான் தேவையிருந்தது. மனம் சிறிது நிம்மதியடைந்தது. அன்று தான் நிம்மதியாகத் தூங்கினான்.

கர்னீலியஸ் மறுநாளும் தன்னை யாராவது கண்காணிக்கிறார்களா பின் தொடர்கிறார்களா என்று பார்த்தார். யாரும் அவரைக் கண்காணிக்கவில்லை. பின்தொடரவுமில்லை. இன்னொரு முறை வங்கிக்குப் போய் அங்கு லாக்கரில் இருக்கும் அந்த ரகசிய ஆவணத்தை எடுத்துக் கொண்டு வந்தால் என்ன என்று தோன்றியது. முயற்சி செய்வதில் தப்பில்லை.... அப்படிக் கண்காணிக்கப்படுவது போல் தோன்றினால் அங்கேயே அந்த ஆவணத்தைப் படித்து தெரிந்து கொண்டு மறுபடியும் லாக்கருக்குள் வைத்து விட்டு வருவது பாதுகாப்பு என்று நினைத்துக் கொண்டார்.

தெரிந்த பின்னும் இல்லுமினாட்டி தலைமைக்கு எப்படித் தெரிவிப்பது என்ற தலைவலி இருக்கிறது. நேரடியாகச் சொல்ல முடியாது. இத்தனை நாள் மறைத்து வைத்தது ஏன் என்று அவர்களுக்கு விளக்கம் தர வேண்டியிருக்கும். அதை அவர்கள் ஏற்பார்களா என்று தெரியாது. இல்லுமினாட்டி விதிமுறைகளில் முக்கியமான ஆவணங்களைத் திருடுவதோ, மறைத்து வைத்திருப்பதோ மரண தண்டனை வாங்கித் தரக்கூடியது. ஆனாலும் விஸ்வத்தை ஜெயிக்க விடுவதில் அவருக்கு உடன்பாடில்லை. இந்த வயதில் மரணம் அவருக்குத் தண்டனை அல்ல பெரிய விடுதலை தான். மூன்று தலைமுறையாய் நன்மைகளின் பக்கமே இருந்து அந்த வழியிலேயே வாழ்ந்து விட்டு இப்போது அவர் பொறுப்பில்லாமலும் அலட்சியமாயும் நடந்து கொண்டால் அவருடைய தந்தையும் தாத்தாவும் மன்னிக்க மாட்டார்கள். அதனால் அந்த ரகசிய ஆவணத்தைக் கொண்டுவர முடியாவிட்டாலும் அங்கேயே படித்து விட்டாவது வர வேண்டும் என்ற தீர்க்கமான முடிவுக்கு கர்னீலியஸ் வந்தார்..

உடனே காரில் அவர் கிளம்பினார். யாராவது பின் தொடர்கிறார்களா அல்லது கண்காணிக்கிறார்களா என்பதை அவர் கவனித்துக் கொண்டே வந்தார். எந்தப் பிரச்னையும் இருக்கவில்லை. கார் வங்கியை நோக்கி விரைந்தது. ஆனால் கார் அந்த சிக்னலுக்கு வந்து நிற்க நேர்ந்த போது அவருக்கு மறுபடியும் கண்காணிக்கப்படும் உணர்வு ஏற்பட ஆரம்பித்தது. இந்த முறை அதையும் மீறி முன்னேறினார். என்ன ஆகிறது பார்ப்போம் என்ற பிடிவாத உணர்வு வந்தது. சில அடிகள் சென்றிருப்பார். அவர் கார் திடீரென்று ஆஃப் ஆகி நின்று விட்டது. காரை மறுபடியும் கிளப்ப முடியவில்லை. என்னென்னவோ செய்து பார்த்தார். ஒன்றும் வெற்றி தரவில்லை. அந்தக் குளிர்காலத்திலும் அவருக்கு வியர்த்தது.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, June 18, 2020

இல்லுமினாட்டி 54

ஜப்பானில் நடந்த அந்த அரசியல் நிகழ்வு அத்தனை முக்கியமானதல்ல என்ற போதிலும் அவருடைய நண்பர் அகிடோ அரிமாவைச் சந்திக்கும் வாய்ப்பை நழுவ விடாமல் வாங் வே அதில் கலந்து கொண்டார். அந்த நிகழ்ச்சி முடிந்தவுடன் வாங் வே நண்பர் வீட்டுக்குச் சென்றார். அகிடோ அரிமா நண்பரை மகிழ்ச்சியுடன் வரவேற்றார். குசல விசாரிப்புகள் கழிந்தவுடன் அகிடோ அரிமா தாழ்ந்த குரலில் நண்பரிடம் சொன்னார். “விஸ்வம் பற்றி தலைமையிலிருந்து ஏதாவது தகவல் அதிகாரபூர்வமாக வரும் என்று காத்துக் கொண்டிருந்தேன். ஏன் ஒன்றுமே வரவில்லை.”

“தலைமைக் குழுவுக்கே வரவில்லை. அதன் பிறகல்லவா மற்ற உறுப்பினர்களுக்கு வருவது” என்று எரிச்சலுடன் வாங் வே சொன்னார்.

அகிடோ அரிமா திகைத்தார். “ஏன்? என்ன தான் நடந்து கொண்டிருக்கிறது?”

வாங் வே தற்போது உள்ள மூடு மந்திரமான நிலவரத்தைச் சொன்னார். அகிடோ அரிமா கேட்டார். “தலைமைக்குழு உறுப்பினர்கள் எல்லாம் சேர்ந்து கொண்டு பொதுவாகவாவது நிலவரம் கேட்கலாமல்லவா? ஜான் ஸ்மித் போய்க் கேட்டு விட்டு வந்தத் தகவல்கள் எல்லாம் தலைவர் உங்களிடம் பகிர்ந்து கொண்டாரல்லவா? அப்படி இருக்கையில் அதன் பின் ஏதாவது முன்னேற்றம் இருக்கிறதா என்று நீங்கள் எல்லாம் கேட்கலாமே?”

“நீ சொல்வது சரிதான். ஆனால் மற்ற தலைமைக்குழு உறுப்பினர்கள் எல்லாம் மௌனமாகத் தான் இருக்கிறார்கள். அப்படி இருக்கையில் நான் மட்டும் கேட்டால் நன்றாக இருக்காது என்பதால் நானும் கேட்கவில்லை. ஆனால் விஸ்வத்தின் பழைய சரித்திரப்படி அவன் இல்லுமினாட்டியின் தலைவரையே கொல்லக்கூடும் என்றும் என்னேரமும் நான்கைந்து அடுக்கு முழுக்காவல் இருந்தால் ஒழிய அபூர்வ சக்தி பெற்ற விஸ்வத்திடமிருந்து தலைவரைக் காப்பாற்ற முடியாது என்றும் உளவுத்துறை நம்புகிறது....” அவர் தொடர்ந்து தலைவரைக் காப்பாற்ற அமானுஷ்யன் என்ற இந்தியனின் உதவியை இல்லுமினாட்டி நாடியிருக்கிறது என்று சொன்னார்.

“ஆரகிள் சொன்னது இதற்குக்கூடப் பொருந்துகிறது பார்த்தீர்களா? இவனும் இமயத்தின் தெற்கில் தான் இருக்கிறான்.” என்று அகிடோ அரிமா வியக்க உடனே வாங் வே எரிச்சலுடன் சொன்னார். “பிரச்சினையான விஸ்வமும் இந்தியாவில் இருந்து தான் வந்திருக்கிறான். அதை ஆரகிள் சொல்லவில்லை”

இந்தியா என்றாலே இந்த சீன நண்பருக்குக் கோபம் வந்து விடுகிறது என்று எண்ணிப் புன்னகைத்த அகிடோ அரிமா கேட்டார். “அந்த அமானுஷ்யன் எப்போது வரப் போகிறான்?”

வாங் வே ஏளனமாகச் சொன்னார். “அவன் வருவது நிச்சயமாகவில்லை. ஆனால் இல்லுமினாட்டி போன்ற ஒரு உச்ச சக்தி இயக்கத்தின் நிலைமை எப்படி ஆகி விட்டது பார்த்தாயா? தலைவரின் பாதுகாப்புக்கு ஒரு தனிமனிதனின் உதவி தேவைப்பட்டு அதற்காக இந்தியா வரை போய் இல்லுமினாட்டி போக வேண்டியிருக்கிறது!”

அகிடோ அரிமா சொன்னார். “அதை நான் தவறாக நினைக்கவில்லை. விஸ்வம் மாதிரி அபூர்வசக்தி படைத்த ஒருவன் கண்ணிமைக்கும் நேரத்தில் இயங்கி ஒரு ஆளைக் கொல்லவும் முடிந்தவன் என்றிருக்கும் போது அதற்கு இணையாக இயங்கிக் காப்பாற்ற முடிந்த ஆளின் தேவையை உணர்ந்து அந்த ஆளை அணுகுவது ஒரு அவமானப்பட வேண்டிய விஷயம் அல்லவே.. இப்போது நமக்கு ஒரு வித்தியாசமான கொடிய நோய் வந்து விட்டது என்று வைத்துக் கொள்வோம். அதைக் குணப்படுத்த உலகில் ஒரே ஒரு டாக்டரால் தான் முடியும் என்றால் நாம் உடனே அந்த டாக்டரிடம் போக மாட்டோமா? அது தவறு ஒன்றும் இல்லையே. அது போலத்தானே இதுவும்...”

வாங் வேக்கு அந்த வாதத்திற்குப் பதில் சொல்ல முடியவில்லை. நண்பர் மாறுபட்ட சிந்தனைகளையும் எந்த விதமான தயக்கமும் இன்றிச் சொல்லக் கூடியவர். அது சில சமயங்களில் கசப்பாக இருந்தாலும் சிந்திக்காத கோணங்களில் இருந்தும் எடுத்துச் சொல்ல ஒரு உண்மையான நண்பர் தேவையாக இருக்கிறது. வாங் வே வேண்டா வெறுப்பாகத் தலையசைத்தார். “நீ சொல்வதும் சரி தான். அதை விடு. மொத்தத்தில் நமக்கு நிறைய பிரச்சினைகள், மாற்றங்கள் காத்திருக்கின்றன. இதில் கவனமாகக் காய் நகர்த்தி ஜெயிப்பவர்கள் தலைமையில் தான் இல்லுமினாட்டியும் இந்த உலகமும் போய்ச் சேரும்”

அவர் அதைச் சொன்ன போதே அவர் கண்கள் ஏதோ கனவு காண்பது போல் மின்னின. சில நாட்களாகவே நண்பர் ஆசைப்படுவதும், ரகசியமாகத் திட்டமிடுவதுமாக இருப்பதை அறிந்திருந்த அகிடோ அரிமா மெல்லச் சொன்னார். “நண்பரே, தலைவர், விஸ்வம் இருவருமே ஆபத்தானவர்கள். மிகுந்த எச்சரிக்கை தேவை!”

க்ரிஷ் அக்‌ஷயின் தயக்கத்தையோ, யோசிக்க அவகாசம் கேட்டதையோ சிறிதும் தவறாக நினைக்கவில்லை. வேற்றுக்கிரகவாசி அவனைத் தொடர்பு கொண்ட போது அவனும் அக்‌ஷய் போலத் தான் நடந்து கொண்டது அவனுக்கு நினைவிருக்கிறது. வேற்றுக்கிரகவாசி சொன்னதை எல்லாம் கேட்ட போது முதலில் குடும்பத்தினரும், ஹரிணியும் தான் அவனுக்கு நினைவுக்கு வந்தார்கள். அவனுக்கு ஏதாவது ஆனால் அவர்கள் தாங்க மாட்டார்கள் என்ற எண்ணம் தான் முதலில் மேலோங்கி நின்றது. அதையும் மீறி அவனை மனம் மாற வைத்த சக்தி அக்‌ஷயையும் மாற்றி விடும் என்று நம்பினான்.

"எப்படி நம்புகிறாய்?" என்று எர்னெஸ்டோ கேட்டதற்கு அவன் "நிகோலா டெஸ்லா" என்று சொன்னான். அந்த விஞ்ஞானி சொன்ன ஏதோ சித்தாந்தப்படி நம்புவதாக அவன் சொல்கிறான் என்று மட்டும் அவருக்குப் புரிந்தது. அந்தச் சித்தாந்தம் என்ன, அதை வைத்து எப்படி நீ நம்புகிறாய் என்றெல்லாம் கேட்டுத் தெரிந்து கொள்ள அவர் முயற்சிக்கவில்லை. அதற்கான நேரமோ, பொறுமையோ அவருக்கில்லை. ஆனால் சாதாரண நடைமுறை அறிவுக்கு முரணாக எல்லாம் நடந்து கொண்டும் கூட அந்த அறிவுஜீவி பல அற்புதமான நிகழ்வுகளைச் சாதித்துக் காட்டியிருக்கிறான் என்று நினைவுபடுத்திக் கொண்ட அவர் ‘என்ன நடக்கிறது என்று பார்ப்போம்’ என்று விட்டுவிட்டார்.

ஆனால் க்ரிஷ் அவனை மாற்றிய சக்தியையும் நிகோலா டெஸ்லாவையும் நம்பி சும்மா இருந்து விடவில்லை. மாஸ்டர் சொல்லிக் கொடுத்த பயிற்சிகள் எல்லாம் செய்து தியான நிலையில் இருந்து கொண்டு அக்‌ஷயின் மாற்றத்திற்குத் தூண்ட பிரபஞ்ச சக்தியை வேண்டிக் கொண்டிருந்தான். அந்த வேண்டுதல் நிறைவேறும் என்று அவன் மனமார நம்பினான். நல்லவர்கள் தங்களால் முடிந்த நல்லதைச் செய்யாமல் இருக்க முடியாது, அதற்கு அவர்கள் மனசாட்சி அனுமதிக்காது என்று க்ரிஷ் நம்பினான். அக்‌ஷய் மிக நல்லவன். அதனால் தான் அவன் நிழலுலக தாதா ஒருவரின் வளர்ப்பு மகனாக வளர்ந்த போதும் தந்தையின் தொழிலை ஏற்றுக் கொள்ளவில்லை. அவன் உயிரையே பணயம் வைத்து தலிபான் தீவிரவாதிகளிடமிருந்து நாட்டைக் காப்பாற்றி இருக்கிறான். எந்தச் சூழலிலும் அவன் பொறுப்பற்றவன் ஆகவோ, உலகம் எக்கேடு கெட்டால் எனக்கென்ன என்பது போலவோ இருந்து விடவில்லை. தன் உயிரைப் பணயம் வைத்து புத்தரின் மறுபிறவியைக் காப்பாற்றி இருக்கிறான். தீமைக்கு எதிர்ப்பும், நன்மைக்கு ஆதரவும் அவன் இரத்தத்திலேயே கலந்திருக்கிறது. அப்படிப்பட்டவன் விஸ்வத்தின் கை ஓங்க விட மாட்டான். கண்டிப்பாக உதவுவான்.... இந்தத் திடமான நம்பிக்கையுடன் க்ரிஷ் தன் பங்கு பிரார்த்தனையும், பயிற்சிகளையும் சேர்த்துக் கொண்டிருந்தான். இந்த அலைவரிசைகள் கண்டிப்பாக அக்‌ஷயைச் சிந்திக்க வைக்கும். நல்ல முடிவை எடுக்கத் தூண்டும் என்று அவன் திடமாக நம்பினான்.

உதய் தம்பியிடம் சிந்து பற்றிச் சொல்ல வேண்டும் என்று ஆர்வமாக வீட்டுக்கு வந்தவுடன் தம்பி அறைக்குள் எட்டிப் பார்த்த போது க்ரிஷ் ஆழ்ந்த தியானத்தில் இருந்தான். அவனை இப்போது தொந்தரவு செய்தால் சண்டைக்கு வருவான் என்ற பயத்தில் உதய் சத்தமில்லாமல் தம்பி அறைக்கதவை மூடி விட்டுத் தனதறைக்குப் போனான். ‘அந்தப் பெண்ணைப் பிடித்திருக்கிறது என்பதெல்லாம் சரி தான். அந்தப் பெண் மனதில் என்ன இருக்கிறது என்று தெரிந்து கொள்ள வேண்டாமா? அதைத் தெரிந்து கொள்ளாமல் ‘அந்தப் பெண்ணை எனக்குப் பிடித்திருக்கிறது. அவளைப் பார்த்த பிறகு நான் நானாக இல்லை’ என்பதை எல்லாம் இப்போதே ஏன் க்ரிஷிடம் சொல்ல வேண்டும். ஒரு வேளை அந்தப் பெண் மனதில் வேறு யாராவது இருந்தால் அல்லது அவளுக்கு ‘அந்த அபிப்பிராயமே’ வராமல் போனால்?... எதற்கும் சில நாட்கள் கழித்து அந்தப் பெண்ணின் மனத்தையும் தெரிந்து கொண்டு க்ரிஷிடம் சொன்னால் போதும்’ என்று உதய்க்குத் தோன்றியது. அதனால் சிந்து பற்றி க்ரிஷிடம் இப்போது எதுவும் சொல்ல வேண்டாம் என்று அவன் தள்ளிப் போட்டான்.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, June 25, 2020

இல்லுமினாட்டி 55

மறுநாள் காலை உணவு வேளையிலேயே ராஜேஷ் போய்ப் பேசி விட்டு வந்தான். மனோகரிடம் அவர்கள் திட்டத்தைச் சொன்னான்.

“இரவில் ஒரு காவலாளியைக் கத்தியால் குத்தி விட்டு நம் இருவரையும் தப்பித்துப் போகச் சொல்கிறார்கள். அவன் கையில் கத்தியால் குத்த வேண்டுமாம். அது அவர்களும் இதில் கூட்டு சேரவில்லை என்று காட்டவாம். எந்த நேரம் எப்படி, எப்படித் தப்பிப்பது என்று பக்காவான திட்டம் சொல்லி இருக்கிறார்கள்...” என்று ஆரம்பித்து அந்தத் திட்டத்தை ராஜேஷ் விளக்க ஆரம்பித்தான். அந்தத் திட்டத்தில் மனோகர் மனம் ஒட்டவில்லை. கத்தியால் குத்தியவர்கள் தப்பிக்க அவர்கள் எப்படி உதவுகிறார்கள் என்ற திட்டத்தில் குறையிருக்கவில்லை. எங்கே எத்தனை பேர் இருப்பார்கள். எங்கே எப்படிப் பதுங்க வேண்டும். எப்போது அவர்கள் வேண்டுமென்றே கவனக்குறைவாக இருப்பார்கள், அப்போது எப்படி அங்கிருந்து போக வேண்டும், எந்த இடத்தில் கூடுதல் கவனம் தேவை, அங்கிருந்து தப்பித்துச் செல்வதெப்படி என்று படிப்படியாகச் சொன்னாலும் மனோகர் அந்தத் திட்டத்தில் அபாயத்தை உணர்ந்தான். கடத்தல் குற்றத்தில் சிக்கியவன் மேல் கத்தியால் குத்திக் கொலை செய்ய முயன்ற குற்றத்தையும் சேர்க்க செந்தில்நாதன் போட்டுக் கொடுத்த திட்டமாக இருக்குமோ என்ற சந்தேகம் கூட வந்தது.

சாதாரணமாகத் தப்பிக்க முயன்று மாட்டினால் கூடப் பரவாயில்லை. கொலை செய்ய முயன்ற குற்றமும் சேர்ந்து மாட்டினால் அது நிச்சயமான ஆபத்து...அதை மனோகர் ராஜேஷிடம் வெளிப்படையாகவே சுட்டிக் காட்டி விட்டுச் சொன்னான். “நான் கொடுத்த பத்து லட்சத்துக்கு இதை விட நல்லத் திட்டத்தை எதிர்பார்த்தேன்...”

ராஜேஷ் சிறிது யோசித்து விட்டுச் சொன்னான். “நீ சொல்வதும் சரி தான். அவர்கள் கண்டிப்பாக நம்மை மாட்டி விட நினைக்க மாட்டார்கள். அதில் எனக்குச் சந்தேகம் இல்லை. ஆனால் அவர்கள் மேல் தப்பில்லை, அவர்களையும் மீறி நடந்த வேலை என்று காண்பிக்க தான் அதிகமாய் சிரமம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று எனக்கும் படுகிறது. நமக்குத் திருப்தி இல்லாத திட்டத்திற்கு நாம் ஒத்துக் கொள்ள வேண்டாம்...”

மனோகர் சந்தேகத்துடன் கேட்டான். “ஒரு வேளை அந்தத் திட்டம் மட்டும் தான் எங்களால் முடியும் என்று அவர்கள் சொன்னால்....?”

ராஜேஷ் சிரித்துக் கொண்டே சொன்னான். “பணத்தைத் திருப்பித் தர சொல்லி விட வேண்டியது தான்....”

மனோகர் ஆச்சரியத்துடன் கேட்டான். “அதற்கு ஒத்துக் கொள்வார்களா?”

ராஜேஷ் ரகசியமாய்ச் சொன்னான். “நான் ஒரு பெரிய கூட்டத்தில் முக்கியமான ஆள். எங்கள் ஆட்கள் அடிக்கடி எதிலாவது மாட்டி இங்கே வந்து போவார்கள். சிறிது காலச் சிறைவாசம் என்றால் முடித்து விட்டுப் போவோம். அதிகமான காலம் என்றால் கப்பம் கட்டி விட்டு இடையில் சிறிது காலம் வெளியே போய் போவதும் உண்டு. அவசியமான சமயத்தில் தப்பித்துப் போவதும் உண்டு. அதில் பேரம் பேசி வேண்டியதை சாதித்துக் கொள்வது அடிக்கடி நடக்கக்கூடிய ஒரு விஷயம் தான். அதனால் இது உண்மையில் ஒரு வியாபாரம் தான். இங்கே பேச்சு வார்த்தையில் இரண்டு தரப்பும் சுத்தமாக இருப்போம். ஒருவன் ஏமாற்றினால் மறுபேச்சு கிடையாது. தீர்த்துக் கட்டவும் எங்களிடம் ஆள் இருக்கிறது. அதே மாதிரி நாங்களும் ஏமாற்ற மாட்டோம். அதனால் அவர்கள் பணம் வாங்கிக் கொண்டு திட்டம் ஒன்று சொல்லி நமக்கு அதிருப்தி இருந்தால் தாராளமாக மாற்றி யோசிக்கச் சொல்லி நாம் கேட்கலாம். பணம் வாங்கிய அவர்கள் ஒத்துக் கொண்டு தான் ஆக வேண்டும். இது எங்களுக்கிடையே இருக்கும் எழுதப்படாத ஒரு ஒப்பந்தம். அதனால் அதற்கு நீ கவலைப்பட வேண்டாம். இன்றைக்கு மதியமே போய்ப் பேசி விட்டு வருகிறேன்...”

மதியம் ராஜேஷ் வேறொரு திட்டத்துடன் வரும் வரை மனோகருக்கு இருப்பு கொள்ளவில்லை. அவர்கள் வேறு திட்டம் தருவார்களா? தந்தால் அந்தத் திட்டம் என்னவாக இருக்கும், அதில் எத்தனை ஓட்டைகள் இருக்கும், மாட்டிக் கொள்ளும்படியான அம்சங்கள் ஏதாவது இருக்குமா, மாட்ட வைத்து விடுவார்களா என்று பல விதமான எண்ணங்கள் வர ஆரம்பித்தன. நேரம் போகப் போக வர ஆரம்பித்த எண்ணங்கள் அவனுக்கே பயங்கரமாக இருந்தன. தன்னையே திட்டிக் கொண்டான். ‘யாருடைய ஆள் நீ? விஸ்வத்தின் ஆள் இப்படிப் பயப்படலாமா? உன்னைப் பார்த்து இந்தத் தமிழ்நாட்டின் முன்னால் முதலமைச்சரும் அவர் குடும்பமுமே பயப்பட்டிருக்கிறதே, அப்படிப்பட்ட நீ இப்போது பயந்து நடுங்கலாமா? சிறைத்தண்டனை ஒரு ஆளை இப்படியெல்லாமா கோழையாக்கி விடும்?’ என்றெல்லாம் கேட்டுக் கொண்டு பலவந்தமாகத் தைரியம் வரவழைத்துக் கொண்டான். ஆனால் ஓரிரு நிமிடங்கள் கழித்து மனம் மறுபடி கவலைப்பட ஆரம்பித்தது.

வழக்கமான நேரம் முடிந்தும் ராஜேஷ் வரவில்லை. நேரம் ஆமை வேகத்தில் நகர்ந்தது.... ராஜேஷ் மிகவும் தாமதமாகத் தான் வந்தான். அவனிடம் மனோகர் ஆர்வத்துடன் கேட்டான். “என்ன சொல்கிறார்கள்?”

ராஜேஷ் அவனிடம் மிகத் தாழ்ந்த குரலில் சொன்னான். “புதிய திட்டம் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் இதில் நானும் உன்னுடன் சேர்ந்து வெளியே போக வழியில்லை”

மனோகருக்கு ராஜேஷ் தப்பிப்பதிலோ அங்கேயே இருந்து விடுவதிலோ எந்த விதமான சங்கடமும் இருக்கவில்லை. ஆனால் அதை அப்படியே வெளிப்படுத்தி விட முடியுமா என்ன? அதனால் முகத்தில் ஏமாற்றத்தைக் காட்டினான்.

ராஜேஷ் சொன்னான். “அது பரவாயில்லை. எனக்குத் தேவைப்படும் போது நான் போய்க் கொள்வேன். நீ தப்பித்தால் அதுவே எனக்குப் போதும்...”

மனோகர் மனதில் இருந்த பெரிய பாரம் விலகியது. ஆனால் அதை அவன் உடனடியாகக் காட்டி விடாமல் முகத்தில் சிறிது சோகத்தைத் தக்க வைத்துக் கொண்டு தலையாட்டினான். பின் மெல்லக் கேட்டான். “அவர்கள் திட்டம் என்ன?”

“நீ நாளை மதியம் மூன்றரை மணிக்குக் கடுமையான வயிற்று வலி இருப்பது போல் நடி. உன்னை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக் கொண்டு போவார்கள். அது நிஜமான வயிற்று வலி தான் என்பறு சொல்வதற்கு ஒரு டாக்டரை ஏற்பாடு செய்து பணமும் கொடுத்து விட்டார்கள். ஆஸ்பத்திரியில் உனக்குப் பலத்த காவல் ஆரம்பத்தில் இருக்கும். ஆனால் உனக்கு லேசாக மயக்க மருந்து தந்து சிகிச்சை தருவது போல் அந்த டாக்டர் ஏற்பாடு செய்வார், அப்போது நீ மயக்கத்தில் இருப்பாய் என்பதால் உனக்குக் காவலைக் குறைத்துக் கொள்ள சம்மதித்திருக்கிறார்கள். உனக்கு மயக்கம் இரவு இரண்டு மணிக்கு மேல் தான் தெளியும் என்று டாக்டர் சொல்வார். ஆனால் இரவு பன்னிரண்டு மணிக்கு மேலேயே உனக்கு மயக்கம் தெளிந்து விடும். பன்னிரண்டு மணியில் இருந்து ஒன்றரை மணிக்குள் நீ தப்பித்து விட வேண்டும். ஒன்றரை மணிக்குத் திரும்பவும் காவல் பலப்படும். நீ மயக்கம் தெளிவது இரவு இரண்டு மணிக்கு என்று டாக்டர் சொல்வார் என்பதால் அதற்கு அரை மணி நேரம் முன்பே காவல் பலப்பட்டு விடும். ஆக நீ தப்பித்துப் போக உன்னிடம் இரவு பன்னிரண்டு முதல் ஒன்றரை மணி வரை சமயம் இருக்கிறது. காசு வாங்கியவர்கள் நீ வெளியே தப்பித்துப் போவதில் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் பார்த்துக் கொள்வார்கள்.. ஆனால் நீ திரும்பவும் மாட்டிக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.... மாட்டிக் கொண்டால் எந்தக் காரணம் வைத்தும் உன்னைத் தப்பிக்க வைத்தார்கள் என்பதைக் காட்டிக்கொடுத்து விடக் கூடாது... அதனால் அங்கிருந்து நீ எங்கே போவாய், எப்படி ஒளிந்து கொள்வாய் என்பதெல்லாம் உன்னைச் சேர்ந்தது....”

மனோகர் தலையாட்டினான். ராஜேஷ் அக்கறையுடன் கேட்டான். “உனக்கு ஒளிந்து கொள்ள ஏதாவது பாதுகாப்பான இடத்தை நான் ஏற்பாடு செய்து தர முடியும். வேண்டும் என்றால் தயங்காமல் என்னிடம் கேள்”

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, July 2, 2020

இல்லுமினாட்டி 56

மனோகருக்கு அவனிடம் கூடுதல் உதவி எதுவும் பெறுவதில் விருப்பம் இருக்கவில்லை. விஸ்வத்திடம் வேலை செய்யும் அவனுக்கு ஆரம்பத்தில் இருந்து தரப்பட்டிருக்கும் மிக முக்கியமான கட்டளை என்னவென்றால் கூடுமான அளவு வெளியாட்களின் தொடர்பைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்பது தான். அன்னியர்களை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் நெருக்கப்படுத்திக் கொண்டால் பிரச்சினை தான்.... மனோகர் சொன்னான். "அதை நான் பார்த்துக் கொள்கிறேன். நீ இந்த அளவு உதவி வாங்கித் தருவதே எனக்குப் பெரிய உபகாரம் தான்.... எனக்கு ஒரே ஒரு உதவி மட்டும் கூடுதலாகச் செய். எந்த ஆஸ்பத்திரியில் என்னைச் சேர்ப்பார்கள். அந்த ஆஸ்பத்திரி எங்கே இருக்கிறது என்பதை மட்டும் முன்கூட்டியே சொன்னால் நான் மீதியைப் பார்த்துக் கொள்கிறேன்...."

ராஜேஷ் அந்த மருத்துவமனையின் பெயரைச் சொல்லி சிறிய வரைபடம் ஒன்றையும் தந்தான். மனோகர் ஆர்வத்துடன் அதை வாங்கிப் பார்த்தான். அந்த மருத்துவமனை இருக்குமிடம் அதிக ஜன நடமாட்டம் இருக்கக்கூடிய பகுதியாகவோ, போக்குவரத்து அதிகமாக இருக்கும் பகுதியாகவோ இருக்கவில்லை. அந்தப் பகுதி அவன் மிக நன்றாக அறிந்த பகுதி. அங்கிருந்து நான்கைந்து மைல் தூரத்தில் அவன் பாதுகாப்பாய் ஒளிந்து கொள்ள வசதியும் இருக்கிறது. ஆனால் அந்தத் தகவலை ராஜேஷுக்குத் தெரிவிக்கவில்லை. ராஜேஷிடம் சொன்னான். "மிகவும் நன்றி நண்பா. ஆஸ்பத்திரியிலிருந்து தப்பித்தால் மீதியை நான் பார்த்துக் கொள்கிறேன்... அது வரை எல்லாம் சரியாகப் போக நீ உதவி செய் போதும். மற்றதை நான் எப்படியாவது சமாளித்துக் கொள்வேன்"

விஸ்வம் ஜிப்ஸியிடம் கேட்டுக் கொண்டிருந்தான். "நண்பா நான் உன்னிடம் இல்லுமினாட்டியின் அடுத்த தலைவராக ஆர்வம் உள்ளவர்கள் பற்றியும், எர்னெஸ்டோவுக்கு எதிராக சிந்திக்க முடிந்தவர்கள் பற்றியும் உன்னிடம் கேட்டிருந்தேனே?"

"உறுப்பினர்களில் பாதி பேருக்கு தலைவராக ஆர்வம் உண்டு. அவர்களில் பாதி பேருக்கு அதில் அதிக ஆசை உண்டு. ஆனால் தீவிரமாக அதைப் பற்றி யோசிப்பவர்கள், தலைவராக முடிந்த தகுதியும் செல்வாக்கும் உள்ளவர்கள் இவர்கள் மூன்று பேர்..."

விஸ்வம் நீட்டிய சீட்டில் வாங் வே பெயரும், மற்ற இருவர் பெயரும் இருந்தது. விஸ்வம் தொடர்ந்து சொன்னான். "எர்னெஸ்டோவுக்கு எதிராகச் சிந்திப்பவர்கள் நிறைய பேர் இல்லுமினாட்டியில் இருக்கிறார்கள். ஆனால் யாருமே அதை வெளிப்படையாகச் சொல்லவோ, தங்கள் அதிருப்தியை ஏதாவது வகையில் தெரியப்படுத்தவோ தயாரில்லை... அந்த அளவு அவர் வானளாவிய அதிகாரம் படைத்தவராக இருக்கிறார்..."

விஸ்வம் எர்னெஸ்டோவை நினைத்துப் பொறாமைப்பட்டான். யாருமே கேள்வி கேட்க முடியாத, எதிர்க்கத் துணியாத அந்த அசைக்க முடியாத நிலை அவன் என்றுமே விரும்பும் உச்ச நிலை... அதை அவன் ஒரு நாள் கண்டிப்பாக அடைவான். அவன் ஒரு விதி செய்வான். அந்த விதியால் இந்த உலகை ஆள்வான்...

கர்னீலியஸ் காரில் ஏதோ கோளாறு என்பதைப் புரிந்து கொண்டு ஒரு போலீஸ்காரர் ஓடி வந்தார். பின்னால் கார்களில் இருந்தவர்கள் இருவரும் ஓடி வந்தார்கள். "என்ன ஆயிற்று?"

கர்னீலியஸ் சுதாரித்துக் கொண்டு சொன்னார். "திடீரென்று ஆஃப் ஆகி விட்டது. ஸ்டார்ட் ஆக மாட்டேன்கிறது"

அவர்களும் முயன்று பார்த்தார்கள். ஆனால் கார் நகர்வதாயில்லை. சில வீண் முயற்சிகளுக்குப் பிறகு போலீஸ்காரர் கேட்டார். "எங்கே போக வேண்டும்? கேப் எதாவது ஏற்பாடு செய்து தரட்டுமா? இந்தக் காரை ரிப்பேர் செய்த பிறகு நீங்கள் மறுபடி பெற்றுக் கொள்ளலாம்"

கர்னீலியஸ் வங்கிக்குப் போக விரும்பவில்லை. வீட்டுக்குப் போகவே நினைத்து வீட்டு விலாசத்தைச் சொன்னார். அரை மணி நேரத்தில் வீடு வந்து சேர்ந்தார்.

லாக்கரில் அந்த ரகசிய ஆவணத்தில் இருக்கும் தகவல்களில் அந்த இடம், மனிதர்கள் குறித்து பல சங்கேத மொழிகளில் எழுதியிருப்பது என்னவெல்லாம் என்பது யோசித்துப் பார்த்தும் சுத்தமாக நினைவில்லை. அவர் அதுபற்றித் தெரிந்து கொள்வதையோ, அதை இல்லுமினாட்டி தலைமைக்குத் தெரிவிப்பதையோ யாரோ விரும்பவில்லை என்பது மட்டும் நிச்சயம். அந்த யாரோ விஸ்வமாக இருக்கலாம், அல்லது அவன் கூட்டாளியாக இருக்கலாம் அல்லது வேறு யாராவதோவாகக் கூட இருக்கலாம். உடனடியாக இல்லுமினாட்டி தலைமைக்குப் போன் செய்து அந்த ரகசிய ஆவணம் பற்றிச் சொல்வது தான் எளிமையான தீர்வாக அறிவுக்குத் தோன்றியது. ஆனால் மனம் இப்போதும் ஏனோ மறுத்தது. ஒரு வேளை அவர் போன் செய்து சொல்லத் தீர்மானித்தால் பேசுவதற்கு முன் கொல்லப்பட்டுவிடக் கூட வாய்ப்பிருக்கிறது. மிக நல்ல நிலைமையில் இருந்த காரை நடுத்தெருவில் ஸ்தம்பிக்க வைத்தவர்கள். அவர் இதயத்துடிப்பை ஸ்தம்பிக்க வைக்க நிறைய நேரம் ஆகாது....

பிரச்சினைகளை விட்டு தீர்வை நோக்கி கர்னீலியஸ் யோசிக்க ஆரம்பித்தார். இப்போதைய அசாதாரணமான ஆபத்தான சூழ்நிலைகளில் அவர் மன அமைதியைத் திரும்பப் பெறுவதே முக்கியம். அவரைத் தற்காத்துக் கொள்வதே அவசியம் என்று உள்ளுணர்வு சொன்னது. சிறிது நேரத்தில் அமைதியானார். அடுத்ததாக இப்போது இருக்கிற நிலைமையில் அவர் என்னவெல்லாம் செய்ய முடியும் என்று மனம் பல வழிகளை யோசித்துப் பார்த்துக் கொண்டிருந்த வேளையில் திடீரென்று அவருக்கு அந்தப் புத்தகம் நினைவுக்கு வந்தது. உடனடித் தீர்வு கிடைக்கா விட்டாலும் அவர் அந்த ரகசிய ஆவணத்தில் ஐம்பதாண்டுகளுக்கு முன் படித்ததை அந்தப் புத்தகத்தில் சொல்லியிருக்கும் பயிற்சிகள் மூலம் நினைவுபடுத்திக் கொள்ள முடியும். இளம் வயதில் அவரும் அவர் நண்பன் ஒருவனும் சேர்ந்து அந்த அபூர்வ வழியில் சில முக்கிய, முக்கியமில்லாத விஷயங்களை எல்லாம் நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பழைய நினைவே இப்போது அவரை உற்சாகப்படுத்தியது. ஆனால் அவர் எச்சரிக்கையாகவும் இருக்கத் தீர்மானித்தார். அவருடைய இந்த உணர்வும் அவரை 'சிக்னலில்' கண்காணித்த ஆளை எட்டுவதை விரும்பவில்லை. அது ஆபத்து.

அமைதியாக சிறிது நேரம் உட்கார்ந்து தன் உணர்வுகளைக் கூர்மை ஆக்கினார். இப்போது கண்காணிக்கப்படும் உணர்வு வருகிறதா என்று பார்த்தார். நல்ல வேளையாக இல்லை. அவர் மெல்ல எழுந்து வீட்டின் அறைக்கதவுகளையும், ஜன்னல்களையும் சாத்தி விட்டு அவருடைய படுக்கையறையுடன் ஒட்டி இருந்த நூலக அறைக்குள் நுழைந்தார். அலமாரிகளில் எத்தனையோ விலைமதிக்க முடியாத நூல்கள் இருந்தன. அவற்றில் சில புத்தகங்கள் சில ரகசிய வழிமுறைகளைப் பற்றி விளக்கும் புத்தகங்கள். அவற்றில் அவர் அந்தக் குறிப்பிட்ட நூலைத் தேட ஆரம்பித்தார். கடைசி அலமாரியில் அந்தப் புத்தகம் கிடைத்தது. அதைத் தொட்டவுடன் அவரையும் அறியாமல் அவர் மனம் படபடத்துக் கொண்டது.

அந்தப் புத்தகத்தின் அட்டை கெட்டியாக கருநீல நிறத்தில் இருந்தது. தூசி படிந்த அந்த அட்டையில் புத்தகத்தின் பெயரோ அதை எழுதியவரின் பெயரோ இருக்கவில்லை. கர்னீலியஸ் அந்தப் புத்தகத்தை எடுத்தவுடன் ஏதோ ஒரு சிலிர்ப்பை உணர்ந்தார். அது அதன் உள்ளே இருக்கிற ஏதோ ஒரு சக்தி அவருக்குச் செய்யும் ஆசிர்வாதமாகவே அவருக்குப் பட்டது. அலமாரி ஓரத்தில் வைத்திருந்த துணியால் அந்தப் புத்தகத்தைத் துடைத்தார்.. பிறகு தான் அந்தப் புத்தகத்தின் அட்டையில் ஒரு கண் மெலிதாக வரையப்பட்டிருந்தது அவருக்குத் தெரிந்தது. அந்தக் கண் அவரையே ஊடுருவிப் பார்ப்பது போல இருந்தது.

கர்னீலியஸ் கண்மூடி ஒரு கணம் பிரார்த்தித்து விட்டு அந்தப் புத்தகத்தைத் திறந்தார். எங்கேயோ இடி இடித்தது....

(தொடரும்)

என்.கணேசன்

இல்லுமினட்டி 57

"இல்லுமினாட்டியின் சகவாசமே வேண்டாம்" என்று அக்‌ஷயிடன் அவன் சகோதரன் ஆனந்த் சொல்லி இருந்தான். இல்லுமினாட்டியின் சகவாசம் வைத்துக் கொள்வதில் அக்‌ஷய்க்கும் விருப்பம் இருக்கவில்லை. இல்லுமினாட்டி பற்றி இதுவரை அவன் கேள்விப்பட்டது எதுவுமே நல்லதாக இருக்கவில்லை. அதனால் சுருக்கமாக "முடியாது, மன்னித்து விடுங்கள்" என்று சொல்லி விலகி விடுவது தான் ஆரம்பத்தில் அக்‌ஷய்க்கு எளிமையான வழியாகத் தெரிந்தது. ஆனால் ஆழமாக யோசிக்க யோசிக்க அந்த நிலைப்பாட்டிலேயே அவனால் தொடர்ந்து இருக்க முடியவில்லை. அந்தச் சக்தி வாய்ந்த இல்லுமினாட்டியை விஸ்வம் போன்ற ஒரு மனிதன் கைப்பற்ற வாய்ப்பிருக்கிறது என்பது இரட்டிப்பு ஆபத்தாக அவனுக்குத் தோன்றியது. வேற்றுக்கிரகவாசி உலகத்தின் அழிவு பற்றிச் சொன்னதையும், விஸ்வம் பற்றி க்ரிஷ் சொன்னதையும் அக்‌ஷய் யோசித்துப் பார்த்தான். வேற்றுக்கிரகவாசி சொன்னதில் பரிபூரண உண்மை மட்டுமே தெரிந்தது. விஸ்வம் என்ற மனிதன் வென்றால் எதிர்கால உலகம் நிம்மதியாக இருக்க முடியாது என்பதும் நிச்சயம் தான். இப்படிப்பட்ட ஒரு மனிதன் மனித ஆளுமையின் உச்சம், சக்தியின் அதி உச்சம். அவன் அழிக்கக் கிளம்பினால், அவனைத் தடுத்து நிறுத்த மற்றவர்கள் தயங்கினால் என்ன ஆகும் என்று யோசித்துப் பார்த்தாலே பகீரென்றது.

நன்மை என்றுமே தானாக ஜெயிக்காது என்பது அவன் அனுபவமாக இருந்திருக்கிறது. அதற்காக மனிதர்கள் போராட வேண்டும். மனிதர்களுக்கும் முடியாத போது தெய்வம் அவதாரமாவது எடுத்து வர வேண்டும். அப்படித் தான் பெருந்தீமைகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. எங்கேயோ எதுவோ நடக்கிறது, எனக்கென்ன என்று யாரும் இருந்து விட முடியாது. அடுத்தவர்களைத் தீண்டிய தீமை நம்மையும் தாக்காமல் விடாது. தீமையின் இயல்பே அது தான்.

அவன் வளர்ப்புத் தந்தை மும்பையில் ஒரு தாதாவாக இருந்தவர். அவர் பெயரைச் சொன்னால் பலரும் பயந்து நடுங்கினார்கள். ஆனால் அக்‌ஷய்க்கு அந்த வாழ்க்கை பிடிக்கவில்லை என்பதை அறிந்து அவனுக்காக அவர் திருந்தி வாழ நினைத்த போது அதை அவருடன் இருந்தவர்கள் சகிக்கவில்லை. அவர் திருந்த முயன்ற போது தான் கொல்லப்பட்டார். அவர் மட்டுமல்ல, அவன் வளர்ப்புத் தாயும் சேர்ந்து இறந்து போனாள். நினைத்துப் பார்த்த போது அக்‌ஷய்க்கு இப்போதும் வலித்தது.

அதிகார உச்சத்தில் இருக்கும் இல்லுமினாட்டியும் அதிசயமாக திருந்தப் பார்ப்பது போல் தான் இருக்கிறது. ஆரகிள் சொன்ன அழிவுகாலம் என்பதால் தான் அந்த எண்ணம் அவர்களுக்குத் தோன்றியிருக்கலாம். அது மட்டுமில்லா விட்டால் அவர்கள் கண்டிப்பாகக் கண்டு கொண்டிருக்க மாட்டார்கள். க்ரிஷ் சொல்வதை எல்லாம் பார்த்தால் தன் சக்திகளை விஸ்வம் திரும்பப் பெற்றால் இல்லுமினாட்டியின் தலைவரைத் தீர்த்துக்கட்டுவது அவனுக்குப் பெரிய விஷயமல்ல. சில வினாடிகள் போதும் அவனுக்கு. நன்மை ஜெயிக்க அக்‌ஷயால் உதவ முடியும் என்று சிலர் நம்புகிறார்கள். அவன் ஆழ்மனதிலும் அந்த நம்பிக்கை இருக்கிறது. அவன் இது நாள் வரை நன்மையின் பக்கமே இருந்திருக்கிறான். இப்போது அவன் விலகி நிற்பதாக முடிவெடுத்தால் அது ஒரு விதத்தில் தீமைக்கே உதவுவதாக இருக்கும். தானுண்டு தன் அறிவுபூர்வமான கல்வி உண்டு என்று வாழ்ந்த க்ரிஷ் என்ற இளைஞன் இதில் அழிவுக்கு வாய்ப்பு அதிகம் என்று அறிந்த பின் தன்னுடைய பொறுப்பை உணர்ந்து உள்ளே வந்திருக்கிற போது இது நாள் வரை நன்மையின் பக்கமே இருந்த அவன் விலகி நிற்பது நியாயமல்ல என்று மனசாட்சி உரக்கச் சொன்னது.

இந்த உலகம் க்ரிஷுடையதோ, இல்லுமினாட்டியினுடையதோ, விஸ்வத்துடையதோ மட்டும் அல்ல. அழிவு வந்தால் அது அவர்களை மட்டும் பாதித்து நின்றுவிடாது. இந்த உலகம் அக்‌ஷயுடையதும், அவன் மனைவி பிள்ளைகளுடையதும் தான்... அக்‌ஷய் தீவிரமாக பல விதங்களில் யோசித்து முடிவில் க்ரிஷுக்குப் போன் செய்து வரத் தயார் என்றும், அதற்கான நிபந்தனைகளையும் சொன்னான்.

அன்றிரவெல்லாம் மனோகர் உறங்கவில்லை. மறுநாள் தப்பித்துப் போகும் ஏற்பாட்டில் ஏதாவது எதிர்பார்க்காத பிரச்சினை வந்து விடுமோ என்று அவன் பயந்தான். அவன் புரண்டு புரண்டு படுப்பதைப் பார்த்து விட்டு ராஜேஷ் சொன்னான். "கவலைப்படாதே. நாளை இன்னேரம் கண்டிப்பாக நீ ஒரு சுதந்திரப்பறவையாக இருப்பாய்"

மனோகர் புன்னகைக்க முயன்றான். முடியவில்லை. ராஜேஷ் அவனிடம் கேட்டான். "உனக்கு ஏதாவது செல்போனோ, சிறிது பணமோ வேண்டி இருந்தாலும் சொல். கூச்சப்படாதே"

"பணம் மட்டும் ஆயிரம் வரையில் இருந்தால் உதவியாக இருக்கும்" என்றான் மனோகர். ராஜேஷிடமிருந்து வாங்கும் செல்போன் ஆபத்தானது. அவன் இருக்கும் இடத்தைக் காட்டிக் கொடுக்கவும் செய்யலாம். மனோகர் அந்தப் பிரச்சினைக்கு இடம் தர விரும்பவில்லை.

ராஜேஷ் சொன்னான். "சரி. ஆஸ்பத்திரியில் உன் தலையணைக்கு அடியில் ஆயிரம் ரூபாய் வைக்கப்பட்டிருக்கும் கவலைப்படாதே"

மனோகர் நன்றி சொன்னான். கோடிக்கணக்கில் அவன் கையில் விளையாடி இருக்கிறது. ஆனால் இப்போதைக்கு ஆயிரம் ரூபாய்க்கு அவன் கையேந்த வேண்டியிருக்கிறது என்று மனம் புலம்பியது.

மறுநாள் மிக மெல்லமாக விடிந்தது. மதியம் மூன்றரை மணி வரை காலம் ஆமை வேகத்தில் நகர்ந்தது. மூன்றரை ஆனதும் ராஜேஷ் அவனைப் பார்த்துத் தலையசைத்தான். மனோகர் கடுமையான வயிற்று வலியில் துடிப்பது போல் நடிக்க ஆரம்பித்தான். ராஜேஷ் சத்தம் போட்டு அழைக்க ஒரு காவலாளி அலட்டாத நிதானத்துடன் வந்தான். "ஏன் கத்துகிறாய்?"

"இவன் வயிற்று வலியால் துடிக்கிறான்..." என்று பதற்றத்துடன் சொன்னபடியே ராஜேஷ் மனோகரைக் காண்பித்தான்.

"வயிற்று வலி வருகிற அளவு இவன் வித்தியாசமாய் எதுவும் சாப்பிடவில்லையே. நடிக்கிறானோ" என்று அந்தக் காவலாளி கேட்டான்.

ராஜேஷ் கோபத்துடன் சொன்னான். "நடிப்பதில் இவனுக்கு என்ன லாபம்? போய் டாக்டரைக் கூப்பிடப்பா"

சிறைக்காவலாளி மெல்லத் தான் போனான். டாக்டர் வர கால்மணி நேரம் ஆகியது. வந்து மனோகரைப் பரிசோதித்து விட்டுச் சொன்னார். "ஆஸ்பத்திரியில் அட்மிட் செய்வது நல்லது என்று தோன்றுகிறது...."

அடுத்த அரைமணி நேரத்தில் ஆம்புலன்ஸ் வந்தது. மனோகரை அறையில் இருந்து தூக்கிச் செல்லும் போது ராஜேஷ் தைரியம் சொன்னான். "கவலைப்படாதே நண்பா. எல்லாம் சரியாகி விடும்."

ஆஸ்பத்திரியில் நர்ஸ்கள் ஏதேதோ பரிசோதனைகள் செய்தார்கள். அந்தச் சமயங்களில் எல்லாம் வயிற்று வலி போல் விடாமல் மனோகர் நடித்தபடியே இருந்தான். ஆஸ்பத்திரி டாக்டர் வயதானவராக இருந்தார். அவர் ஒரு கட்டத்தில் பொறுமை இழந்து சொன்னார். "இங்கே வந்தபிறகும் ஏன் கத்துகிறாய். அமைதியாய் இரு. நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்...."

மனோகர் அதன் பின் அடக்கி வாசித்தான். சிறிது நேரத்தில் அவனுக்கு மயக்க மருந்து தந்தார்கள். அவன் சுயநினைவை இழந்தான். அவனுக்கு நினைவு திரும்பிய போது ஆஸ்பத்திரியே அமைதியில் மூழ்கிக் கிடந்தது. மனோகர் தொண்டையில் ஒரு கடும் கசப்பை உணர்ந்தான். கண்களைத் திறந்து இருக்கும் இடத்தின் நிலவரத்தைக் கவனிக்க அவனுக்கு ஐந்து நிமிடம் தேவைப்பட்டது. அவன் அருகே யாரும் இல்லை. அவன் ஒரு தனியறையில் இருந்தான். உடல் சிறிது பலவீனமாக இருப்பதாக அவன் உணர்ந்தான். இந்தப் பலவீனம் ஆபத்து என்று எண்ணித் தன்னையே கடிந்து கொண்டான். சுவர்க் கடிகாரத்தில் இரவு மணி 11.55 காட்டியது. மெல்ல தலையணையை உயர்த்திப் பார்த்தான். ஒரு ஐநூறு ரூபாய் நோட்டும், ஐந்து நூறு ரூபாய் நோட்டுகளும் இருந்தன. ராஜேஷ் சொன்னபடியே வைக்க ஏற்பாடு செய்திருக்கிறான். நல்லது.

மனோகர் மெல்ல எழுந்து படுக்கையிலேயே அமர்ந்தான். இப்போதும் அவனை யாரும் வந்து பார்க்கவில்லை. தூரத்தில் நர்ஸ்கள் பேசிச் சிரித்துக் கொள்ளும் சத்தம் கேட்டது. எழுந்து வந்து ,மெல்லக் கதவைத் திறந்து பார்த்தான். வராந்தா கடைசியில் பேசிக் கொண்டிருந்த நர்ஸ்களைத் தவிர வேறு யாரும் இருக்கவில்லை. இப்போது அவன் ஆஸ்பத்திரி உடையில் தான் இருந்தான். இதைப் போட்டுக் கொண்டு தப்பிப்பது கஷ்டம் என்று தோன்றியது. சுவரில் ஆணியில் அவனுடைய சிறை உடை தொங்கிக் கொண்டிருந்தது. அதைப் போட்டுக் கொண்டு போவதும் பிரச்சினை தான்...

ஐந்து நிமிடங்கள் கழித்து வெளியே சத்தம் நின்ற பின் அவன் மெல்ல வெளியே வந்தான். இப்போது அந்த நர்ஸ்களில் ஒருத்தி மட்டுமே வராந்தா கோடியில் இருந்தாள். அவள் மேசையில் தலை வைத்து படுத்துக் கொண்டிருந்தாள். மனோகர் மெல்ல வராந்தாவில் நடந்தான். அவன் இருந்த அறைக்கு மூன்றாவது அறையில் ஒருவன் குறட்டை விட்டுப் படுத்துக் கொண்டிருந்தான். தரையில் படுத்திருந்த ஒரு பெண்மணியும் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பது தெரிந்தது. அந்த ஆளின் உடைகள் சுவற்று ஆணியில் தொங்கிக் கொண்டிருந்தன. கிட்டத்தட்ட அவன் உடையளவு தான் அவையும்.

மனோகர் மெல்ல அந்த அறைக்குள் நுழைந்தான். படுத்திருந்த இருவரும் ஆழ்ந்த உறக்கத்தில் தான் இருந்தார்கள். மனோகர் தன் உடைகளைக் கழற்றி அந்த உடைகளைப் போட்டுக் கொண்டான். பின் வெளியே வந்த போதும் வராந்தாவில் ஆட்கள் யாரும். இருக்கவில்லை. மனோகர் சத்தமில்லாமல் நடந்தான். அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் அவன் ஆஸ்பத்திரியிலிருந்து மிடுக்குடன் வெளியேறி விட்டான்.

(தொடரும்)

என்.கணேசன்

இல்லுமினாட்டி 58

மனோகருக்கு இப்போதும் எல்லாம் கனவு போலவே இருந்தது. ஆஸ்பத்திரிக்கு வெளியே வீசிய இரவுப் பனிக்காற்று அவனுக்கு மிக இதமாக இருந்தது. மெல்லத் திரும்பிப் பார்த்தான். யாரும் அவனைத் தேடி ஓடி வரவில்லை. ராஜேஷ் சொன்னது போல காசு வாங்கியவர்கள் விசுவாசமாகத் தான் இருக்கிறார்கள்.

அந்தப் பக்கம் வந்த ஆட்டோவை மனோகர் நிறுத்தி முதலில் ஏறிக் கொண்டான். சில மைல்கள் தூரத்தில் இருந்த ஒரு இரவு உணவகத்தின் பெயரைச் சொல்லி அங்கே போகச் சொன்னான். ஆட்டோக்காரன் அவனைத் திரும்பி ஒரு தரம் பார்த்து விட்டுச் சொன்னான். “முன்னூறு ரூபா ஆகும் சார்”

மீட்டர் சார்ஜ் நூற்றி இருபது ரூபாயைத் தாண்டாது. இரவு இரட்டிப்பு வாடகை என்றாலும் 240 தான் ஆகும். முன்னூறு மிக அதிகம். பணத்தைப் பற்றிக் கவலைப்படாத மனோகர் அதற்கும் சரி என்று தலையசைத்தான். ஆட்டோ வேகமெடுத்தது.

மனோகர் ஆட்டோக்காரனிடம் சொன்னான். “மொபைல் எடுத்து வர மறந்து விட்டேன். ஒரு நம்பருக்குக் கால் செய்து பேச வேண்டுமே”

ஆட்டோக்காரன் யோசிக்காமல் தன் மொபைல் போனை பின்னால் நீட்டினான். “தேங்க்ஸ்” என்று சொல்லி வாங்கிக் கொண்ட மனோகர் தனக்கு மனப்பாடமாக இருந்த ஒரு அலைபேசி எண்ணை அழுத்தினான். ஏழெட்டு முறை அடித்த பிறகு தான் தூக்கக்கலக்கத்துடன் ஒரு குரல் கேட்டது. “ஹலோ”

மனோகர் தன் பெயரை மட்டும் சொல்லி விட்டு கால்மணி நேரத்திற்குள் அந்த இரவு நேர உணவகத்திற்கு வந்து சேரச் சொன்னான். பின் இணைப்பைத் துண்டித்து விட்டு ஆட்டோக்காரனுக்கே அந்த மொபைல் போனைத் திருப்பித் தந்தான்.

பத்து நிமிடத்தில் ஆட்டோ அந்த இரவு உணவகத்தை அடைந்தது. ஆட்டோக்காரனிடம் முன்னூறு ரூபாயைக் கொடுத்து விட்டு மனோகர் உணவகத்திற்குள் நுழைந்தான். உள்ளே ஆட்கள் அதிகம் இல்லை. மனோகர் கடைசி டேபிளில் அனைவருக்கும் முதுகைக் காட்டியபடி உட்கார்ந்தான். ஆனாலும் அவனுடைய ஆள் வரும் வரை அவனுக்கு என்னேரமும் போலீஸ் வரலாம் என்று உள்ளூர ஒரு நடுக்கம் இருந்து கொண்டே இருந்தது. இரண்டு நிமிடம் கழித்து அவன் ஆள் வந்தான். குண்டாக வழுக்கைத் தலையுடன் இருந்த அவன் ஆள் வந்து சேர்ந்ததைப் பார்த்தவுடன் மனோகர் மனம் நிம்மதி அடைந்தது.

இருவரும் ஒருவருக்கொருவர் ஒன்றும் பேசிக் கொள்ளவில்லை. “என்ன சாப்பிடுகிறீர்கள்?” என்று கேட்டுக் கொண்டு வந்த சர்வரிடம் மனோகர் தனக்கு மசால் தோசை ஆர்டர் செய்தான். வந்த நபரும் அதையே தனக்கும் சொன்னான். மனோகர் மெல்லக் கேட்டான். “வெளியே சந்தேகப்படும்படி யாராவது இருக்கிறார்களா?”

அந்த நபர் “இல்லை” என்றான். மனோகர் நிம்மதி அடைந்தான். இருவரும் மசால் தோசை சாப்பிட்டு விட்டு காபியும் குடித்து விட்டுக் கிளம்பினார்கள். வெளியே அந்த நபரின் இன்னோவா கார் நின்றிருந்தது. அந்த நபர் முதலில் மனோகர் ஏறக் கார்க்கதவைத் திறந்து மரியாதையாக நின்றான். மனோகர் ஏறியவுடன் கார்க்கதவைச் சாத்தி விட்டுப் பின் டிரைவர் சீட்டில் ஏறிக் கொண்டான். கார் மிதமான வேகத்தில் அங்கிருந்து கிளம்பியது. கார் தூரமாகச் செல்லச் செல்ல மனோகர் நிம்மதியடைய ஆரம்பித்தான். அவன் வெற்றிகரமாகத் தப்பித்து விட்டான்...

சிந்து விஸ்வம் அனுப்பியது தவிரத் தானாகவே க்ரிஷ் மற்றும் ஹரிணி இருவரது கூடுதல் தகவல்களைத் தேடித் தேடிப் படித்துக் கொண்டிருந்தாள். யாரிடம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டுமோ, அவர்களைப் பற்றிக் கூடுதல் தகவல்கள் தெரிந்து வைத்திருப்பது மிகவும் பாதுகாப்பு என்று அவள் திடமாக நம்புபவள். அவர்களைப் பற்றித் தெரிந்து கொண்டதில் இரண்டு பேருமே அதிபுத்திசாலிகள் என்பது தெரிந்ததே ஒழிய மற்றபடி பயப்பட எதுவும் அவர்களிடம் இருப்பதாக அவளுக்குத் தோன்றவில்லை. அவர்கள் அவளைப் போன்ற ஒருத்தி உலகில் இருக்கக்கூடும் என்ற சந்தேகப்படக்கூட முடியாத அளவுக்கு மிக நல்லவர்களாக இருந்ததால் சாதாரண எச்சரிக்கையே போதும் என்று அவளுக்குத் தோன்றியது. ஆனாலும் அவள் தன் கருத்தை விட விஸ்வத்தின் கருத்தை அதிகம் நம்பினாள். அவன் அவளை விடப் பல மடங்கு புத்திசாலி மட்டுமல்ல அவன் காரணம் இல்லாமல் எதையும் சொல்ல மாட்டான். அதனால் அவர்கள் இருவரிடம் மிகவும் கவனமாக இருப்பது நல்லது தான்...

உதயின் உதவியாளன் இரண்டு தடவை போன் செய்து விட்டான். கேள்விகளை அனுப்பச் சொல்லியிருந்தான். அவளே கொண்டு வந்து கொடுத்தால் நல்லது என்று சொன்னான். உதய் பேட்டிக்கு முன் அவளை இடையில் ஒரு முறை பார்க்க ஆசைப்படுகிறான் என்று தெரிந்தது. அவனைக் கையாள்வது கஷ்டமாக இருக்காது என்று சிந்து நினைத்துக் கொண்டாள். ஆனால் நடிப்பதற்குக் கூட அவளுக்குக் காதல் கசந்தது. அந்த உணர்வோடு அவளுக்கு தன் தாயை இணைத்துப் பார்க்காமல் இருக்க முடியாதது தான் காரணமாகத் தோன்றியது. சிறு குழந்தையாக இருந்த அவளைப் பற்றிச் சிறிதும் நினைக்காமல் தன் காதலனுடன் ஓடிப் போன அந்தத் தாயை அவளால் மன்னிக்க முடிந்ததில்லை. அந்த வெறுப்பு தாய் மீது வந்து, அதைத் தாண்டி காதல் மீதும் வந்து நிறைந்திருந்தது. அவள் எத்தனையோ குற்றங்கள் செய்திருக்கிறாள். தேவைப்பட்ட போது தன் அழகால் மனிதர்களை மயக்கியும் இருக்கிறாள். ஆனால் இது வரை எந்த ஆணையும் அவளை அத்து மீறித் தொட அவள் அனுமதித்ததில்லை.

சிந்து உதய் உதவியாளனுக்குப் போன் செய்து கேள்விகளை முன்கூட்டியே மெயிலில் அனுப்பி வைப்பதாகச் சொன்னாள். பத்திரிக்கைக்குப் புதியவள் ஆனதால் வேலைகள் நிறைய இருப்பதாகச் சொன்னாள். நாளை மறு நாள் பேட்டிக்கு அரை மணி நேரத்திற்கு முன்பாகவே வந்துவிடுவதாகவும் சொல்லி கேள்விகளை நேரில் கொண்டு வந்து தர முடியாததற்கு மன்னிப்பு கேட்டுக் கொண்டாள். அவன் பரவாயில்லை என்று சொன்ன பின் நன்றி தெரிவித்து விட்டுப் போனை வைத்தாள்.

அவள் முன் இருந்த தினசரிப் பத்திரிக்கையை மேலோட்டமாகப் படிக்க ஆரம்பித்த போது மனோகர் என்ற சிறைக்கைதி தப்பிய செய்தி கண்ணில் தட்டுப்பட்டது. அவன் படத்தையும் போட்டிருந்தார்கள். மேலோட்டமாக அந்தச் செய்தியைப் படித்து நகர்வதற்கு முன் ஹரிணி பெயரைப் பார்க்க நேர்ந்தது. மனோகர் ஹரிணியைக் கடத்தியவன் என்ற தகவலையும் படித்த உடனே நிதானமாக முழுச் செய்தியையும் படித்தாள். அவன் தப்பித்ததில் கவனக்குறைவாக இருந்த இரண்டு காவலர்களை சஸ்பெண்ட் செய்த செய்தியும் தரப்பட்டிருந்தது. ஹரிணியைப் பற்றி விஸ்வம் அனுப்பியிருந்த தகவல்களில் அந்தக் கடத்தல் பற்றியும் ஒரு வரி இருந்தது. ஆனால் என்ன காரணத்திற்காக யார் அந்தக் கடத்தலைச் செய்தார்கள் என்ற விவரம் மட்டும் இருக்கவில்லை. மற்ற எல்லா விஷயங்களையும் விவரமாகச் சொல்லியிருந்த விஸ்வம் அந்த விஷயத்தை மட்டும் ஒற்றை வாக்கியத்தில் முடித்து விட்டான். ஒருவேளை அந்தக் கடத்தலுக்கு விஸ்வம் காரணமாக இருக்கக்கூடுமோ? மனோகர் தப்பவும் விஸ்வம் உதவி இருக்கக்கூடுமோ?

இல்லுமினாட்டியின் உளவுத்துறை ஆட்கள் அந்தக் காலி அபார்ட்மெண்டில் விஸ்வமும் அவன் கூட்டாளியும் ஒளிந்திருக்கக்கூடுமோ என்ற சந்தேகத்தில் முழுவதுமாகத் தேடினார்கள். இது இன்றைய நாளில் மூன்றாவது அபார்ட்மெண்ட். தேடிய ஆட்கள் அந்த மூன்று அபார்ட்மெண்ட்களிலும் வந்ததற்கான அறிகுறியே இல்லை. அந்த அபார்ட்மெண்டுக்கு உள்ளே ஒரு புகைப்படமும் வெளியே இருந்து ஒரு புகைப்படமும், எடுத்து வைத்துக் கொண்டு வெளியே வந்தார்கள்.

மறுபடி வந்து கார் ஏறியவுடன் இருவரில் இளையவன் மூத்தவனிடம் கேட்டான். “அடுத்தது எங்கே?”

“எட்டு கிலோமீட்டர் தூரத்தில் ஒரு சர்ச் இருக்கிறது. அங்கே வழிபாடு எதுவும் நடப்பதில்லை. அங்கே அவர்கள் ஒளிந்திருக்கவும் வாய்ப்பிருக்கிறது. அங்கேயும் போய்ப் பார்த்து விடுவோம்...”

“ஏன் அங்கே வழிபாடு நடப்பதில்லை?”

“முன்பே அங்கே பெரிய கூட்டம் வந்ததில்லை. சிறிது காலத்திற்கு முன் அந்தச் சர்ச்சில் யேசுவின் பிரதான சிலை உடைந்து போயிருக்கிறது. அதன் பிறகு எல்லாமே நின்று போயிருக்கிறது...”

சர்ச்சை நோக்கி அவர்கள் கார் செல்ல ஆரம்பித்தது.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, July 23, 2020

இல்லுமினாட்டி 59

சர்ச்சிலிருந்து சிறிது தூரத்திலேயே காரை நிறுத்தி விட்டு இல்லுமினாட்டியின் உளவுத் துறை ஆட்கள் துப்பாக்கிகளை உயர்த்திப் பிடித்துக் கொண்டே சத்தமில்லாமல் சர்ச்சை நெருங்கினார்கள். அவர்களைப் பொருத்த வரை ஒவ்வொரு இடத்திற்குப் போகும் முன்னும் அங்கே எதிரிகள் இருக்கக்கூடும் என்ற முழு நம்பிக்கையுடனேயே செல்வார்கள். வெளியேயிருந்து ஒரு புகைப்படம் இளையவன் எடுத்துக் கொண்டான். பின் இருவரும் அமைதியாக சர்ச்சுக்குள் நுழைந்தார்கள். சர்ச்சுக்குள் யாரும் இல்லை. ஆனாலும் சர்ச்சுக்குள் ஒரு முறை வலம் வந்தார்கள்.

சர்ச்சில் குப்பையும், தூசியும் மண்டியிருந்த போதிலும் ஒரு மூலையில் மட்டும் தரை சுத்தமாக இருந்தது. இருவரில் மூத்தவர் சொன்னார். 'இந்த மூலையில் மட்டும் குப்பையும் தூசியும் இல்லை, கவனித்தாயா?"

இளையவன் கவனித்ததாகத் தலையசைத்தான். சர்ச்சின் ஒரு மூலையில் இருந்த கழிவறை சுத்தமாக இருந்தது. அவன் அந்த இடத்தையும் புகைப்படம் எடுத்துக் கொண்டான். "ஒருவேளை அவர்கள் இங்கே சில நாட்கள் தங்கி இருந்திருக்கக்கூடும். பிறகு இடம் மாறியிருக்கக்கூடும்"

அந்தச் சர்ச்சில் ஏதாவது மறைவிடம் இருக்கிறதா என்று இருவரும் சந்தேகப்பட்டு தேடிப் பார்த்தார்கள். இல்லை... மூத்தவர் சொன்னார். ".எதற்கும் வெளியேயும் பார்த்து விடுவது நல்லது. அந்தப் பக்கம் ஒரு பார்க் பார்த்த மாதிரி ஞாபகம்"

வெளியே பார்க்கிலும் போய்ப் பார்த்தார்கள். அங்கே யாரும் இல்லை. அங்கே ஆட்கள் சமீபத்தில் இருந்ததற்கான அறிகுறியும் இல்லை.

பார்க்கையும் இளையவன் புகைப்படம் எடுத்துக் கொண்டான். மறுபடியும் சர்ச்சுக்குள் போனார்கள். இளையவன் சொன்னான். "யாராவது பிச்சைக்காரர்கள் கூட இங்கே தங்கிப் போயிருக்க வாய்ப்பு இருக்கிறது"

மூத்தவர் தலையசைத்தார். மறுபடிச் சில புகைப்படங்கள் எடுத்துக் கொண்ட பின் அவர்கள் அங்கிருந்து கிளம்பினார்கள்.

பிள்ளைகளிடம் ஏற்படும் மாற்றங்களை முதலில் கவனிப்பவள் தாய் தான். பத்மாவதி உதய் கண்ணாடி முன் அதிக நேரம் கழிப்பதையும், உறக்கம் வராமல் தவிப்பதையும் கவனித்த அவள் மகனிடம் நேரடியாகவே கேட்டாள். "என்னடா ஆளே ஒரு தினுசா இருக்கே? என்ன ஆச்சு?"

'ஆஹா.... கிழவி கண்கள் கூர்மை தான்' என்று உதய் மனதில் நினைத்துக் கொண்டாலும் வெளியே காட்டிக் கொள்ளாமல் சொன்னான். "ஒரு தினுசும் இல்லை. எப்பவும் மாதிரி தான் இருக்கேன்"

"எப்பவும் இப்படிக் கண்ணாடி முன்னாடி இவ்வளவு நேரம் நின்னதில்லையேடா" என்று பத்மாவதி கேட்டாள்.

"அப்படில்லாம் இல்லை" என்று சொன்ன உதய் அவசர அவசரமாகக் கண்ணாடி முன்னாலிருந்து நகர்ந்தான். ஆனால் பத்மாவதி மகனை விடுவதாயில்லை. "என்னடா காதலா?" என்று வெளிப்படையாகவே கேட்டாள்.

"சும்மா கற்பனைக் குதிரையை பறக்க விடாதே. உன் சின்னப் பையன் கூட காதலிக்கிறான். அவன் கண்ணாடி முன்னாடியா நிற்கிறான்?"

"அவன் எல்லாத்துலயுமே ஒரு விதிவிலக்கு. ஏதோ அந்தப் பொண்ணு ஹரிணியானதால அவனைக் காதலிக்குது. வேற யாராயிருந்தாலும் அவன் நடந்துக்கறதுக்கு சரி தான் போடான்னு போயிடுவா. அவனை விடு. உன்னைப் பத்திச் சொல்லு.... நான் ஜாதகக்கட்டை எடுத்துகிட்டு அலையறதை நிறுத்திடவா?"

"அவசரப்படாதே கிழவி. அப்படி ஏதாவது இருந்தால் நானே உன் கிட்ட சொல்றேன்" என்று உதய் சொன்னான். மகனைக் கூர்மையாக ஒரு முறை பார்த்து விட்டு அங்கிருந்து நகர்ந்தாள். அடுத்த ஐந்தாவது நிமிடம் சின்ன மகன் அறையில் இருந்தாள். க்ரிஷ் தீவிரமாக எதையோ கம்ப்யூட்டரில் பார்த்துக் கொண்டிருந்தாள். மகன் அருகே அமர்ந்து ஒரு டவலை எடுத்துக் கம்ப்யூட்டரை மூடினாள்.

க்ரிஷ் எரிச்சலுடன் "ஏம்மா இப்படி எல்லாம் பண்றே? என்று கேட்டான்.

"சொந்த வீட்டுல என்ன நடக்குதுன்னு தெரியாமல் உலகத்தில் என்னவெல்லாம் நடக்குதுன்னு என்னடா ஆராய்ச்சி?"

"இங்கே என்ன நடக்குது சொல்லு தெரிஞ்சுக்கறேன்"

"உங்கண்ணன் யாரையோ காதலிக்கிற மாதிரி இருக்கு. ஆனால் கேட்டால் சரியா சொல்ல மாட்டேன்கிறான். உன் கிட்ட தான் எதையும் மறைக்காமல் சொல்வானே. ஏதாவது சொன்னானாடா?"

"ஒன்னும் சொல்லலையே"

"நீ சதா எதாவது செய்துகிட்டே இருந்தால் உன் கிட்ட எவன்டா வந்து எதாவது சொல்வான்? குடும்பத்துக்குன்னு எதாவது நேரம் ஒதுக்குடா. அப்புறம் உலகத்தை நல்லதாக்கலாம்...."

"அவனுக்கே ஏதாவது சந்தேகம் இருக்கும்மா. அதனால தான் ஒன்னும் சொல்லலை. கொஞ்சம் பொறு. அவனுக்குத் தீர்மானமா எதாவது தெரிஞ்சுதுன்னா அவன் கண்டிப்பாய் சொல்வான்"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. அவன் கிட்ட பேசித் தெரிஞ்சுகிட்டு என் கிட்ட நீ சொல்லணும். இல்லைன்னா நான் உன்னைப் படிக்க விட மாட்டேன். சொல்லிட்டேன்" என்று கறாராய் சொல்லி விட்டு பத்மாவதி எழுந்தாள்.

தாய் போவதையே பார்த்துக் கொண்டிருந்த க்ரிஷ் மெலிதாகப் புன்னகைத்தான். உலகத்தில் என்ன நடக்கிறது என்ற கவலை அவளுக்கில்லை. அவள் வீட்டில் என்ன நடக்கிறது என்பது மட்டும் தான் அவளுக்குக் கவலை. உதயிடம் ஏதோ மாற்றத்தைக் கவனித்திருப்பதால் தான் இப்படிச் சொல்கிறாள். யாரந்தப் பெண்ணாக இருக்கும் என்று தனக்குள் அவன் கேட்டுக் கொண்டான்.

அவள் சொன்னது போல அவன் இந்த வீட்டில் என்ன நடக்கிறது என்பதைக் கவனிப்பதை நிறுத்தி சில காலமாகிறது. இல்லுமினாட்டியில் நடந்து கொண்டிருந்த பரபரப்பு நிகழ்வுகளின் மத்தியில் வேறெதற்கும் கவனம் தர அவனால் முடியவில்லை.

அக்ஷய் வருவதாக ஒப்புக் கொண்டு தான் திரும்பி வரும் வரை அவன் குடும்பத்தினரின் பாதுகாப்புக்கு இல்லுமினாட்டி முழுப் பொறுப்பு எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை விதித்தான். முதலிலேயே அவர்கள் அவன் சொல்லாமலேயே அந்தக் கோரிக்கையை எதிர்பார்த்து அதற்கு சம்மதம் தெரிவித்திருந்தார்கள். அது நியாயமான கோரிக்கை என்று எர்னெஸ்டோவும் சொல்லி இருந்தார். அதனால் எல்லாம் வேகமாக நடக்க ஆரம்பித்தன. அக்ஷய் ஜெர்மனி செல்ல விமானத்தில் முதல் வகுப்பு டிக்கெட்டும் அனுப்பப்பட்டிருந்தது.

இந்தக் கட்டத்தில் மனோகரும் சிறையில் இருந்து தப்பித்தது பரபரப்பான சூழ்நிலையை ஏற்படுத்தி இருந்தது. செந்தில்நாதன் மிகவும் சுறுசுறுப்பாகி விட்டார்....

செந்தில்நாதன் ஒரு தேக்க நிலையிலிருந்து மீண்டு வருவதற்கு மனோகரின் சிறையிலிருந்து தப்பும் நிகழ்வு ஒரு நல்ல காரணமாகி விட்டது. அவனை ரகசியக் காமிரா வழியாக சிறையில் கண்காணித்துக் கொண்டே வந்த அவர்கள் அவனாக விஸ்வத்தைக் காட்டிக் கொடுக்கும் வாய்ப்போ, அவனுக்குத் தெரிந்ததை எல்லாம் சொல்லும் வாய்ப்போ இல்லை என்பதைப் புரிந்து கொண்டார்கள். அதனால் அடுத்த காயை நகர்த்தும் விதமாக ராஜேஷ் என்ற போலீஸ் அதிகாரியை ஒரு கைதியாக அவன் அறைக்குள் அனுப்பி வைத்தார்கள். மெல்ல மெல்ல ராஜேஷ் மனோகருக்கு நெருக்கமானான். ஆனாலும் கூட மனோகர் ராஜேஷிடம் எதையும் சொல்லி விடவில்லை. விஸ்வத்தை அவன் ஒரு முறை உணர்ந்தது போலிருந்தது. ஆனால் பின் அதுவும் ஒரு நிச்சயமில்லாத நிலையாக அவர்கள் உணர்ந்தார்கள்.

பின் ராஜேஷ் மெல்ல தப்பிக்கும் ஆசையை மனோகருக்குக் காட்டினான். அவனும் ஒரு கைதி, அவனுக்கு எல்லா நிலையிலும் வேண்டிய ஆட்கள் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கை வந்த பின் மனோகர் தப்பிப்பதில் ஆர்வம் காட்ட ஆரம்பித்தான். அவன் ஆஸ்பத்திரியில் சேர்ந்த பிறகு அவனுக்கு மயக்க மருந்து கொடுத்து ஒரு சின்ன அறுவை சிகிச்சை செய்து அவன் உடலில் ஒரு 'சிப்' உள்ளே வைத்து விட்டார்கள். அவன் எங்கே போனாலும் அந்தச் சிப் மூலம் அவன் இருப்பிடத்தை அவர்கள் கம்ப்யூட்டரில் அறிய முடியும், கண்காணிக்க முடியும். அவரும் ராஜேஷும் அவன் இயக்கத்தைக் கவனித்துக் கொண்டு இருந்தார்கள்...

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, July 30, 2020

இல்லுமினாட்டி 60

மனோகர் பெங்களூரில் ஒரு பெரிய பங்களாவில் இருந்தான். அவன் தோற்றம் நிறையவே மாறியிருந்தது. சிறையிலிருந்த போதிருந்த தோற்றத்திற்கும் இப்போதைய தோற்றத்திற்கும் சம்பந்தமேயில்லை என்று சொல்லும்படியாக எல்லாவற்றையும் மாற்றியிருந்தான். அவன் அதிகம் பங்களாவை விட்டு வெளியே செல்வதைத் தவிர்த்தான். என்ன வேண்டும் என்றாலும் போனில் பேசியே தருவித்தான். தினமும் அவனைப் பற்றி என்ன செய்தி பத்திரிக்கை மற்றும் ஊடகங்களில் வருகின்றன என்பதைக் கூர்ந்து கவனித்து வந்தான். அவன் தப்பித்ததற்கு மறுநாள் காவலர் இருவர் சஸ்பெண்ட் என்று செய்தி வந்திருந்தது. அதன் பின் எந்தத் தகவலும் இல்லை. பத்து லட்சம் ரூபாய் நன்றாக வேலை செய்கிறது என்றே அவன் நினைத்துக் கொண்டான்.

அவனுக்கு மூன்று தனி ஐ.டிக்கள் இருந்தன. அந்த மூன்றிலும் ஒன்றுக்கு ஒன்று எந்தச் சம்பந்தமும் இல்லாதவாறு அவன் பார்த்துக் கொண்டிருந்தான். சிறைப்படும் போது அவனிடம் இருந்த ஐ.டி, செல்போன் எண், விலாசம், அக்கௌண்ட் எல்லாம் போலீசாரால் எப்போதும் அலசப்படலாம் என்பதால் அவன் தப்பித்த பின் அந்த ஐ.டி சம்பந்தமான எல்லாவற்றையுமே பயன்படுத்துவதைத் தவிர்த்தான். அவன் தப்பித்தவுடன் இரவு உணவகத்திற்கு வந்து அவனை அழைத்துச் சென்ற நபர் அவன் தோற்றத்தை மாற்றி இங்கே வரை வந்து விட்டு விட்டுப் போனவன் அவனைப் பின் தொடர்பு கொள்ளவில்லை. இந்த வீட்டிலிருந்தும் என்னேரமும் கிளம்பிச் செல்ல அவன் தயார்நிலையில் இருந்தான். அங்கிருந்து அவன் கிளம்பினால் அடுத்தபடியாக மைசூரில் அவனுக்கு ஒரு பங்களா ஒளிந்து கொள்ள உதவுவதாக இருந்தது. விஸ்வத்தின் தொடர்பு எந்த நேரத்திலும் வரலாம் என்ற எதிர்பார்ப்பில் அவன் இருந்தான். அவன் சிறையில் இருந்து தப்பித்து வந்தது விஸ்வத்தை மகிழ்ச்சியடைய வைக்கும் என்று அவன் எதிர்பார்த்தான். முன்பு போலவே மிகவும் சுறுசுறுப்புடன் இயங்க அவன் தயாராக இருப்பது விஸ்வத்தின் கவனத்துக்குக் கொண்டு வர வேண்டும் என்பதே அவனுக்கு ஆசையாக இருந்தது.

அவனுடைய பங்களாவிற்கு எதிரில் இருந்த ஒரு வர்க்ஷாப்பில் அவனுடைய ரகசியக் காவலன் ஒருவன் வேலை செய்து வந்தான். அவன் வர்க்ஷாப்பில் வேலை செய்வது போல வெளிப்பார்வைக்குத் தெரிந்தாலும் அவனுடைய உண்மையான வேலை எதிர்ப்பங்களாவை யார் கண்காணிக்கிறார்கள் என்று கவனிப்பதாக இருந்தது. இரண்டு நிமிடத்திற்கு மேல் அந்தப் பங்களாவை யார் பார்த்தாலும் உடனடியாக மனோகருக்குப் போன் செய்து சொல்ல வேண்டும் என்று அவனுக்குக் கட்டளையிடப்பட்டிருந்தது. மனோகர் அந்தப் பங்களாவில் குடிபுகுந்த பிறகு அப்படிப் பார்த்தது ஒரே ஒருவன் தான். அவனும் போலீஸ் அல்ல, ஒரு சில்லரைத் திருடன் என்பதை அவனைத் தொடர்ந்து சென்ற மனோகர் ஆட்கள் கண்டுபிடித்தார்கள். பின் மனோகர் நிம்மதி அடைந்தான். விஸ்வத்தை ஒரே ஒரு முறை மீண்டும் தொடர்பு கொள்ள முடிந்தால் போதும் என்ற எதிர்பார்ப்பு மட்டும் நிறைவேறாததால் அந்த ஏமாற்றத்தைத் தவிர வேறு எந்தப் பிரச்னையும் அவனுக்கு இப்போது இல்லை. ஏன் இந்த முறை விஸ்வம் அவனைத் தொடர்பு கொள்ள இந்த அளவு இடைவெளியை ஏற்படுத்தியிருக்கிறான் என்ற கேள்வி திரும்பத் திரும்ப அவன் மனதில் எழுந்து கொண்டே இருந்தது. ஹரிணியைக் கடத்திய போது அவனிடம் பேசிக் கொண்டிருந்த விஸ்வத்தின் போன் எண்ணில் பின் அவன் எப்போதும் தொடர்பு கொண்டதில்லை. அவன் சிக்கிய பின் அந்த அலைபேசியில் இருந்து போன, வந்த எண்களெல்லாம் கண்டிப்பாக செந்தில்நாதன் கோஷ்டிக்குக் கிடைத்திருக்கும் என்பதால் அந்த எண்ணை மறுபடி பயன்படுத்துவதில் சிக்கல் இருந்தது. விஸ்வம் எப்போதோ அந்த அலைபேசி எண்ணைப் பயன்படுத்துவதை நிறுத்தியுமிருப்பான். விஸ்வத்தின் வேறு அலைபேசி எண் எதுவும் மனோகருக்குத் தரப்பட்டிருக்கவில்லை. இனி விஸ்வமாக அவன் சக்தியை உபயோகித்து அவனைத் தொடர்பு கொள்ளும் வரை அவன் காத்திருக்கத் தான் வேண்டும். மனோகர் காத்திருக்கிறான்.

இல்லுமினாட்டியின் உளவுத் துறை ஆட்கள் அந்தச் சர்ச்சை அலசி ஆராய்ந்து கொண்டிருந்த போது பாதாள அறையில் விஸ்வமும், ஜிப்ஸியும் காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டு சிலைகள் போல அமர்ந்திருந்தார்கள். உளவுத் துறை ஆட்களில் ஒருவன் சர்ச் மேடைப் பகுதியில் அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்த போது மின்னல் வேகத்தில் இயங்க விஸ்வம் தயாராக இருந்ததை ஜிப்ஸி கவனித்தான். நல்ல வேளையாக உளவுத் துறை ஆட்கள் அந்த பாதாள அறையைக் கண்டுபிடிக்கவில்லை. அவர்கள் போய்க் கால் மணி நேரம் கழித்து ஜிப்ஸியும், விஸ்வமும் வெளியே வந்தார்கள்.

ஜிப்ஸி சொன்னான். "இனி நமக்கு இங்கே பிரச்னைகள் எதுவும் இருக்காது. அவர்கள் வந்து பார்த்து விட்டுப் போன இடம் என்பதால் மறுபடி வரும் வாய்ப்புகள் குறைவு"

விஸ்வம் தலையசைத்தான். இந்தச் சின்னச் சின்ன ஆசுவாசங்களால் சந்தோஷப்படும் மனநிலையில் அவன் இல்லை. அவன் முகத்தைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்த ஜிப்ஸி கேட்டான். "என்ன நினைத்துக் கொண்டு இருக்கிறாய்?"

"என் பழைய உடலோ, அது போன்ற உடலின் பாதி வலிமையான உடலோ எனக்குக் கிடைத்திருந்தால் கூட இப்போதே ஏதாவது செய்யக்கூடிய நிலைமைக்கு வந்திருப்பேன். இந்தப் போதையில் நலிந்த உடலை வலிமைப்படுத்துவது சுலபமாக இல்லை"

ஜிப்ஸி சொன்னான். "உன் உடலில் இருந்து உயிர் பிரிந்து போன அந்த ஓரிரு வினாடிகளுக்குள் உனக்குக் கூடு விட்டு கூடு பாய இன்னொரு உடல் கிடைக்க வேண்டும். அந்த உடலிலும் அப்போது தான் உயிர் போயிருந்திருக்க வேண்டும். அந்த ஓரிரு வினாடிகளுக்குள் அப்படி ஒரு உடல் கிடைக்கா விட்டால் பின் உன் முயற்சி எதுவும் கண்டிப்பாக வெற்றி பெற்றிருக்காது. அந்த நேரத்தில் உனக்குக் கிடைத்த ஒரே உடல் இந்த உடல் தான். என்ன செய்வது?"

விஸ்வம் சொன்னான். "உண்மை. தான். இந்த உடலில் நான் எத்தனை முயன்றாலும் பழைய சக்திகளை முழுவதுமாகப் பெறும் வாய்ப்பு குறைவு. எத்தனை சதவீதம் திரும்பப் பெறுவேன் என்பது உன் கணிப்பு"

"இந்தச் சில நாட்களிலேயே உன்னுடைய முயற்சிகளால் நீ நிறையவே முன்னேறி இருக்கிறாய். போதையால் ஏறத்தாழ எல்லாமே சிதைந்து போயிருந்த உடம்பில் நீ கொண்டு வந்திருக்கும் கட்டுப்பாடு சாதாரணமானது அல்ல. இதே வேகத்தில் எல்லாம் போனால் இன்னும் மூன்று மாதங்களுக்குள் முக்கால் வாசி சக்திகளையாவது நீ கண்டிப்பாய் திரும்பப் பெறலாம் என்று நான் நினைக்கிறேன்"

நூறு சதவீதத்திற்குக் குறைவான எந்தச் சாதனையிலும் திருப்தி அடைய முடியாத விஸ்வம் மனதில் ஒருவிதக் கசப்பு நிறைந்து போனது. அவன் சொன்னான். "சேமிக்கும் சக்திகளை இழப்பதும் இப்போது வேகமாகவே இருக்கிறது. நான் சில சக்திகளை எந்த அளவுக்கு உபயோகப்படுத்த முடிகிறது என்று சில பரிசோதனைகள் செய்து பார்த்திருக்கிறேன். சின்னச் சின்ன முயற்சிகள் கூட வேகமாக என் சக்திகளை வறண்டு போக வைத்து விடுகின்றன"

ஜிப்ஸி அதற்குப் பதில் ஒன்றும் சொல்லவில்லை. தலையை மட்டும் புரிதலோடு அசைத்தான். விஸ்வம் கேட்டான். "க்ரிஷைக் கவனித்துக் கொள்ள நான் செய்திருக்கும் ஏற்பாடு ஒரு பிரம்மாஸ்திரமாய் இருக்கப் போகிறது என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. இல்லுமினாட்டியில் இப்போது நிலைமை என்ன?"

ஜிப்ஸி சொன்னான். "அவர்கள் நீ பழைய வலிமையைப் பெற எல்லா முயற்சிகளையும் செய்வாய் என்று எதிர்பார்க்கிறார்கள். அப்படிச் செய்து வலிமை பெற்று விட்டால் நீ செய்யக்கூடிய முதல் காரியம் இல்லுமினாட்டி தலைவரைக் கொல்வதாக இருக்கலாம் என்று நினைக்கிறார்கள். அதற்கு வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஒரு பாதுகாவலனை இந்தியாவில் இருந்து வரவழைக்கப் போகிறார்கள். அவன் உண்மையான பெயர் அக்ஷய். அவனுடைய பட்டப் பெயர் அமானுஷ்யன்"

விஸ்வம் ஜிப்ஸியைக் கூர்ந்து பார்த்தபடிக் கேட்டான். "அவன் எனக்கு இணையானவனா?"

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, August 6, 2020

இல்லுமினாட்டி 61

விஸ்வம் "அவன் எனக்கு இணையானவனா?" என்று கேட்டதற்கு ஜிப்ஸி சிறிதாய் முறுவலித்து விட்டுச் சொன்னான். "உனக்கு இணையானவன் என்று அவனைச் சொல்ல முடியாது. ஆனால் அவனை அலட்சியப்படுத்தி விட முடிகிற அளவுக்கு அவன் சாதாரணமானவனும் அல்ல"

"அவனிடம் என்ன சிறப்பு இருப்பதாக எண்ணி இல்லுமினாட்டி அவனை வரவழைத்திருக்கிறது?" விஸ்வம் கேட்டான்.

ஜிப்ஸி சொன்னான். "அவன் காற்றின் வேகத்தில் இயங்கக்கூடியவன் என்று அவன் எதிரிகள் சொல்கிறார்கள். அது மட்டுமல்ல நரம்பு மண்டலத்தின் சூட்சுமங்களைத் துல்லியமாக அறிந்தவன் என்றும் சொல்கிறார்கள். அவன் ஒருவனைத் தொட்டு கண நேரத்தில் நரம்புகளில் முடிச்சு போட்டு கோமாவில் ஆழ்த்த வல்லவன் என்ற பெயர் எடுத்திருக்கிறான். அந்த முடிச்சை அவனே விலக்கி பழையபடி ஆக்குவதிலும் அவனுக்கு இணை யாரும் கிடையாது என்கிறார்கள். நவீன மருத்துவத்தில் கூட அவன் போட்ட முடிச்சை விலக்கி குணப்படுத்தி விட முடியாது என்று சொல்லப்படுகிறது. அப்படி எத்தனையோ பேரை பரலோகம் அனுப்பியிருக்கிறான் அவன்"

விஸ்வம் கண்களை மூடிக் கொண்டான். அவன் பழைய உடலில் இருந்திருந்தால் அந்த அமானுஷ்யனை ஒரு கை பார்த்திருக்கலாம். இப்போது இந்த போதை மனிதனின் உடலில் நரம்பு மண்டலம் தான் மிகவும் பலவீனம் ஆக இருக்கிறது. "எனக்கு அவனைப் பற்றிய எல்லாத் தகவல்களும் தெரிய வேண்டும்..." என்று சொன்னான்.

ஜிப்ஸி எங்கிருந்து ஆரம்பிப்பது என்று யோசித்தது போல் இருந்தது. இரண்டு நிமிடங்கள் மௌனமாய் இருந்து விட்டுச் சொன்னான். "சிறிய வயதில் பெற்றவர்களிடமிருந்து பிள்ளை பிடிக்கும் கும்பலால் திருடப்பட்டவன் அவன். மும்பையில் தாதாவாக இருந்த ஒருவரிடம் தற்செயலாகப் போய் சேர்கிறான். குழந்தைகள் இல்லாத அவரும் அவர் மனைவியும் கடவுளே அனுப்பிய மகன் என்று எண்ணி அவனை வளர்க்கிறார்கள். அவன் முதுகில் கழுத்துக்குச் சற்று கீழே ஒரு பெரிய நாக மச்சம் இருந்தது. அதைப் பார்த்த பலர் அவன் அமானுஷ்ய சக்திகள் பலவற்றை வசப்படுத்திக் கொள்வான் என்று சொன்னார்கள். அவர்கள் சொன்னது போலவே வளர்ந்தான். ஹதயோகி ஆனான். பல மொழிகளில் விற்பன்னனாக இருந்தான். அவன் வளர்ப்புத் தந்தையின் கூட்டாளி ஒரு முஸ்லீம் தாதா. அவர் குழந்தைகளுடன் சேர்ந்து குரான், உருது படித்து அமானுஷ்யன் இரண்டிலுமே அவர்களை விட அதிகமாக தேர்ச்சி பெற்றான். கீதை, புத்தமதம் இரண்டிலுமே கூட அவன் அறிவு பிரமாதமாக இருந்தது. திபெத்திய யோகிகளிடம் நிறைய கற்றுக் கொண்டான். அவனுக்குத் தந்தையின் தொழில் பிடிக்கவில்லை. மகன் விருப்பப்படவில்லை என்ற ஒரே காரணத்தால் அவரும் அத்தொழிலை விட்டுவிடத் தீர்மானித்தார். ஆனால் அவர் கூட்டாளியின் பிள்ளைகள் மூவர் அவர் பங்கைத் திருப்பித் தர மறுத்ததோடு அவரையும், அவர் மனைவியையும் கொன்றும் விடுகிறார்கள். அமானுஷ்யன் வளர்ப்புப் பெற்றோரின் மரணத்திற்குக் காரணமான மூவரையும் கோமாவில் ஆழ்த்திப் பழி தீர்த்துக் கொண்டான். முதல் இருவருக்கு அறுவை சிகிச்சை செய்து பிழைக்க வைக்க முயற்சிக்கிறார்கள். அது அவர்கள் மரணத்தில் முடிகிறது. மூன்றாவது பிள்ளையையாவது பிழைக்க வைக்கும் படி அந்தக் கூட்டாளியின் மனைவி அமானுஷ்யனிடம் கெஞ்ச மனமிரங்கி அவனைப் பிழைக்க வைக்கிறான். பிறகு பிரபலமாகிறான். அவன் திறமைகளை இந்தியாவின் சிபிஐ பல கேஸ்களில் பயன்படுத்திக் கொள்கிறது. சிபிஐயில் அதிகாரியாக இருக்கும் ஒருவனது தம்பி தான் அவன் என்ற உண்மையும் அமானுஷ்யனுக்குப் பிற்பாடு தெரிகிறது. ஒரு கேஸில் தலிபான் தீவிரவாதிகளைப் பிடித்துக் கொடுத்து அவர்களுடைய எதிரியும் ஆகிறான். பிறகு மறைவான இயல்பான வாழ்க்கை வாழ்கிறான். திபெத்தில் புத்தரின் மறு அவதாரமாக எல்லோரும் நினைக்கும் ஒரு குழந்தை கொல்லப்படுவதைக் காப்பாற்ற தலாய் லாமாவுக்கு உதவுகிறான். சீனாவின் தற்போதைய உளவுத்துறைத் தலைவனாக இருக்கும் திறமைசாலி லீ க்யாங் கூட அவனைத் தடுக்க முடியவில்லை. பின் அவனுடைய நல்லபிப்பிராயத்தையும் அமானுஷ்யன் பெறுகிறான். மறுபடி இந்தியாவில் தலைமறைவு வாழ்க்கை வாழ்கிறான். இப்போது இல்லுமினாட்டி அவனை அணுகி இருக்கிறது. அதிகாரத்தைக் காட்டிப் பேசியிருந்தால் இல்லுமினாட்டி அவனை வரவழைத்திருக்க முடியாது. க்ரிஷ் போய் பேசி தான் அவனைச் சம்மதிக்க வைத்திருக்கிறான்..."

விஸ்வம் அந்தத் தகவல்களை முழுவதுமாக உள்வாங்கினான். பின் மெல்லக் கேட்டான். "அக்ஷய் இது வரை தோற்றதேயில்லையா?"

அமானுஷ்யன் என்ற பெயரைத் தவிர்த்து அக்ஷய் என்ற இயற்பெயரிலேயே நின்றதை ஜிப்ஸி கவனித்தான். பின் புன்னகையுடன் சொன்னான். "பல ஆபத்துகளில் அவன் மாட்டியிருக்கிறான். பல அபாயங்களில் சிக்கியிருக்கிறான். இந்த முறை அவன் கண்டிப்பாகச் சிக்கிக் கொள்வான் என்று பலரும் நினைத்திருக்கிறார்கள். ஆனால் அவன் அதிலிருந்தெல்லாம் தன் புத்திசாலித்தனத்தாலும், சமயோசித அறிவாலும் அனாயாசமாகத் தப்பி இருக்கிறான்."

"இல்லுமினாட்டி என்னை எதிரியாகப் பார்ப்பதும், நான் அதன் தலைவனைக் கொல்லப் போகிறேன் என்று நினைப்பதும் அனுமானத்தினாலே தானே. எதையும் நான் செய்யாமல் எனக்கு எதிராக அவர்கள் நினைக்கும் இந்த முட்டாள்தனத்தை அதிலிருக்கும் யாரும் யோசிக்கவே மாட்டார்களா?" விஸ்வம் ஜிப்ஸியிடம் கேட்டான்.

"உன்னை எதிரியாக நினைப்பதும், தலைவரைக் கொல்வாய் என்று எதிர்பார்ப்பதும் இல்லுமினாட்டி உறுப்பினர்கள் அல்ல. எர்னெஸ்டோவும், உளவுத்துறையும் தான். உறுப்பினர்களுக்கு எந்தத் தகவலும் தெரிவிக்கப்படவில்லை. நான் உன்னிடம் அன்றே சொன்னது போல் தலைவரின் தவறான அபிப்பிராயங்கள் தெரிந்தாலும் அவர்கள் எதுவும் செய்ய முடியாது. இல்லுமினாட்டியைப் பொருத்த வரை அதன் தலைவர் தான் அதன் முடிசூடா சக்கரவர்த்தி. அவருடைய கருத்தே பிரதானம். எந்த ஒரு தனி உறுப்பினரும் அவருக்கு எதிராக நடந்து கொள்ள முடியாது. அப்படி நடந்து கொள்வது மரண தண்டனையை வரவழைக்கும். எர்னெஸ்டோவைப் பொருத்த வரை நீ இல்லுமினாட்டியை அழிவுக்குக் கொண்டு போக முடிந்தவன். அவர்கள் ஆரகிள் சொன்னதை கிழவர் பரிபூரணமாக நம்புகிறார். நீ அவரைக் கொல்லப் போகிறாய் என்ற நிலைப்பாட்டை எடுத்தது இல்லுமினாட்டியின் உளவுத்துறை. உன் கடந்த காலத்தில் எதிரிகள் யாரையும் முடிக்காமல் விட்டதில்லை என்பது அவர்கள் எடுத்த முடிவுக்குக் காரணம். இந்திய ரகசிய ஆன்மீகப் பேரவையின் குரு, தமிழக முதலைமைச்சர் ராஜதுரை மரணம் ஆகியவற்றை வைத்து நீ அடுத்து செய்யப் போவது இதுவாகத் தான் இருக்கும் என்று அவர்களை எண்ண வைத்திருக்கிறது."

"இது வரை இல்லுமினாட்டியின் தலைவரை யாரும் எதிர்த்ததோ, எதிராக யாரும் நடந்து கொண்டதோ கிடையாதா? ஒரு தவறான ஆள் இல்லுமினாட்டியின் தலைவனாக வந்தால் அவனிடமிருந்து தப்பிக்க இல்லுமினாட்டிக்கு வழியே கிடையாதா? இல்லுமினாட்டியின் விதிமுறைகள் என்ன சொல்கின்றன?"

"இல்லுமினாட்டியின் தலைவருக்கு எதிரான ஒரு நிலைப்பாட்டை மூன்றில் ஒரு பங்குக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் சேர்ந்து எடுக்கலாம். அதை அவர்கள் இல்லுமினாட்டியின் உபதலைவரிடம் எழுத்து மூலம் தெரிவித்தால் அவர் இல்லுமினாட்டியின் முழு உறுப்பினர் கூட்டத்தைக் கூட்டுவார். அதில் அவர்கள் தங்கள் குற்றச்சாட்டுகளைத் தெரிவிக்க வேண்டும். தலைவர் தன் தரப்பு நியாயத்தை விளக்க அனுமதிக்கப்படுவார். பின் ஓட்டெடுப்பு நடத்தலாம். அந்த ஓட்டெடுப்பில் இல்லுமினாட்டியின் தலைமைக்கு எதிராக பெரும்பாலான உறுப்பினர்கள் தீர்மானித்தால் மட்டுமே அவரை அப்புறப்படுத்த முடியும். பின் புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்க மறுபடி ஒரு தேர்தல் நடக்கும். அப்போது உறுப்பினர்கள் யார் வேண்டுமானாலும் தலைவர் பதவிக்குப் போட்டியிடலாம்...."

"அப்படி இது வரை இல்லுமினாட்டியின் வரலாற்றில் நடந்திருக்கிறதா?"

"இல்லை.... பெரும்பாலும் உபதலைவரைத் தேர்ந்தெடுப்பது தலைவர் தான். தலைவர் தனக்கு மிகவும் நம்பிக்கையான ஆளைத் தான் அந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுப்பார் என்பதால் அந்த உபதலைவரிடம் தலைவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளுடன் மூன்றில் ஒரு பங்குக்கும் மேலான உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து புகார் கூறும் வாய்ப்பே இல்லை. தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எப்போதும் பதிவு செய்யலாம். ஆனால் முடிவில் எதையும் தீர்மானிப்பது தலைவரே. அதற்கு எதிராக யாரும் நடந்து கொள்ள முடியாது. அதனால் இல்லுமினாட்டியின் தலைவர் பதவி மிகவும் சக்தி வாய்ந்தது."

அந்த சக்தி வாய்ந்த தலைவர் பதவியிலிருந்து எர்னெஸ்டோ ராஜினாமா செய்து ஓய்வெடுக்க நினைத்ததையும், மிகச் சரியான அந்த சமயத்தில் விஸ்வம் தன் சக்திகளைக் காட்டி இல்லுமினாட்டி உறுப்பினர்கள் மத்தியில் ஒரு பிரமிப்பை ஏற்படுத்தியிருந்ததையும் விஸ்வம் நினைத்துப் பார்த்தான். க்ரிஷ் இடையில் வந்து பேசி குழப்பி இருக்காவிட்டால் இன்னேரம் அதன் சக்தி வாய்ந்த தலைவராகத் தான் இருந்திருக்கலாம் என்று நினைத்த போது விஸ்வத்திற்கு அவன் மீது கடுமையான ஆத்திரம் ஏற்பட்டது. சிறிது யோசனைக்குப் பின் கேட்டான். "ஒருவேளை இல்லுமினாட்டியின் தலைவர் திடீரென்று இறந்து போனால் என்ன நடக்கும்?"

"உடனே உபதலைவர் தற்காலிகமாகத் தலைவராக ஆவார். தலைவர் பதவிக்குத் தேர்தல் அறிவிக்கப்படும். அதிகபட்சமாய் 46 நாட்களுக்குள் தேர்தல் நடக்கும். உறுப்பினர்கள் யார் வேண்டுமானாலும் அந்தப் பதவிக்குப் போட்டியிடலாம். ஆனால்..." என்று சொல்லி ஜிப்ஸி நிறுத்தினான்.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, August 13, 2020

இல்லுமினாட்டி 62

"**ஆ**னால்..." என்று நிறுத்திய ஜிப்ஸியை விஸ்வம் கேள்விக்குறியுடன் பார்த்தான்.

ஜிப்ஸி சொன்னான். "தலைவரின் மரணம் இயற்கை மரணமாய் இருக்க வேண்டும். அது கொலையாக இருக்கலாம் என்ற சிறிய சந்தேகம் வந்தால் கூட கொலைகாரனாக இருக்கலாம் என்று சந்தேகப்படும் ஆளைக் கொல்லாமல் வேறு எதையும் யோசிக்க மாட்டார்கள். அது மட்டுமல்ல. தலைவர் பதவிக்குப் போட்டியிடும் ஆட்களில் யாருக்காவது அந்தக் கொலையில் பங்கு இருக்கக்கூடும் என்ற சிறிய சந்தேகம் வந்தால் கூட அவன் அந்தப் போட்டியில் ஜெயிக்கும் வாய்ப்பே இருக்காது...."

"தலைவரின் மரணம் இயற்கை மரணமாக இருந்து விட்டால் பிரச்னை இல்லை அல்லவா?" விஸ்வம் நிதானமாகக் கேட்டான்.

ஜிப்ஸி தயக்கத்துடன் சொன்னான். "இயற்கை மரணம் என்று அவர்கள் நம்பினால் பிரச்னையே இல்லை. ஆனால் இப்போதைய சூழ்நிலையில் இயற்கை மரணத்தைக்கூட நீ செய்த கொலையாக இருக்கலாம் என்று அவர்கள் நினைக்கும் ஒரு வாய்ப்பு இருக்கிறது"

விஸ்வம் புரிகிறது என்று தலையசைத்து விட்டு மெல்லச் சொன்னான். "ஒரு விதத்தில் அவர்கள் தலைவரின் பாதுகாப்புக்கு 'அமானுஷ்யனை' வரவழைப்பது கூட நல்லதுக்குத் தான். அவர்கள் நம்பும் அமானுஷ்யன் தலைவருடன் இருக்கையில் நான் எப்படி அவரைக் கொல்ல முடியும்?"
ஆனால் அவன் சொன்ன விதத்தில் 'நான் அந்த ஆளைக் கொல்ல நினைத்தால் அதை யார் தடுக்க முடியும்? நான் கொன்றேன் என்று யார் நிரூபிக்க முடியும் என்று பார்க்கிறேன்' என்ற தொனி தொனித்ததை ஜிப்ஸி கவனித்தான். விஸ்வம் தன் பழைய தீவிரத்திற்கும், திட்டமிடலுக்கும் திரும்பிவிட்டதாகவே தோன்றியது.

விஸ்வம் கேட்டான். "ஒருவேளை தலைவர் பதவிக்குப் போட்டி வந்தால், நீங்கள் அன்று செல்வாக்கான ஆட்கள் என்று மூன்று பேரைச் சொன்னீர்களே அவர்களில் இப்போதைக்கு இவர் போட்டியிட்டால் ஜெயிப்பது நிச்சயம் என்று சொல்கிற நிலைமையில் யாராவது இருக்கிறார்களா?"

ஜிப்ஸி சொன்னான். "இல்லை"

விஸ்வம் ஓரளவு திருப்தி அடைந்தான். க்ரிஷின் வேற்றுக்கிரகவாசி நண்பன் திரும்பி வருவதற்குள் அவன் சாதிக்க வேண்டியது நிறைய இருக்கிறது. காலம் அதிகம் அவன் கையில் இல்லை என்று விஸ்வத்துக்குத் தோன்றியது. அவன் விரைந்து இயங்க வேண்டும்.....

விஸ்வம் ஜிப்ஸியிடம் சொன்னான். "நான் இல்லுமினாட்டி தலைவருக்கு ஒரு கடிதம் எழுத வேண்டும் நண்பா. விஸ்வம் என்கிற உறுப்பினர் சாகவில்லை. மறுபிறவி எடுத்துச் சாதித்திருக்கிறேன். தகுந்த சமயத்தில் திரும்பி வருவேன் என்று தெரிவிக்க வேண்டும். நாம் இருக்கிற இடத்தைக் காட்டிக் கொடுக்காத இடத்தில் இருக்கும் ஒரு தபால் பெட்டியில் அந்தக் கடிதத்தை நீ போட வேண்டும்"

அந்தக் கடிதம் இரண்டு நாள் கழித்து எர்னெஸ்டோவுக்குப் போய் சேர்ந்தது. எர்னெஸ்டோவின் உதவியாளன் மிகக் குறைவான மதிப்பு தருவது தபாலில் வரும் கடிதங்களைத் தான். அழைப்பிதழ்களும், வாழ்த்துக்களும் தான் அதிகம் தபாலில் வருகின்றன என்பது தான் அவனுடைய அலட்சியத்துக்கு முக்கியக் காரணம். உலகெங்கும் இருந்து வரும் தபால்களில் அவசியமானதும், முக்கியமானதும் ஒன்றிரண்டு மட்டும் சில நாட்களில் இருக்கும். சில நாட்களில் அப்படி ஒன்றிரண்டும் கூட இருக்காது.

வேண்டா வெறுப்பாகத் தபால்களைப் பிரித்துப் பார்த்தே வந்தவனுக்கு சாதாரணத் தபாலில் தபால்தலை ஒட்டி வந்த உள்ளூர் கடிதம் முக்கியமானது போல் ஆரம்பத்தில் தோன்றவில்லை. அனுப்பியது யார் என்று பார்த்தான். விஸ்வம், உறுப்பினர், ஜெர்மனி என்று அனுப்புனர் விலாசத்தில் டைப் செய்யப்பட்டிருந்தது. விஸ்வம் பெயரைப் பார்த்த அவன் திகைத்தான். அடுத்த நிமிடம் அவன் அந்தக் கடிதத்தோடு எர்னெஸ்டோ அறையில் இருந்தான்.

எர்னெஸ்டோ அவன் பரபரப்புடன் நீட்டிய கடிதத்தை வாங்கிப் பார்த்தார். அனுப்புனர் விஸ்வம் என்று இருந்தது தான் அவனுடைய பரபரப்பிற்குக் காரணம் என்பது புரிந்து கொண்டு மெல்லப் புன்னகைத்தார். "இந்த விஸ்வம் எத்தனை பேரைக் கதிகலங்க வைக்கிறான்!..."

எர்னெஸ்டோ அவனை அனுப்பி விட்டுத் தபாலைப் பிரித்தார். விஸ்வம் அனுப்பிய கடிதம் உள்ளேயும் டைப் செய்யப்பட்டிருந்து கடைசியில் விஸ்வம் கையொப்பம் மட்டும் போட்டிருந்தான்.

"மதிப்பிற்குரிய இல்லுமினாட்டி தலைவருக்கு விஸ்வத்தின் வணக்கங்கள்!

இத்தனை வருட காலத்தில் இறந்தவர்கள் கடிதம் எழுதி நீங்கள் படிக்கும் சந்தர்ப்பம் தங்களுக்குக் கிடைத்திருக்காது. அப்படி ஒரு கடிதம் வந்திருந்தால் யாரோ தமாஷ் செய்கிறார்கள் என்றே தங்களுக்குத் தோன்றியிருக்கும். அதற்கு முதல் விதிவிலக்கை உங்கள் மேலான இயக்கத்தின் விசுவாசமான உறுப்பினராக உங்களுக்கு அறிமுகப்படுத்துவதில் நான் பெருமை கொள்கிறேன்.

நான் கற்ற ஒவ்வொரு வித்தைக்கும் என் வாழ்நாட்களை விலையாகக் கொடுத்திருக்கிறேன். அவை கடைசி வரை எனக்கு உதவியிருக்கின்றன. மரணம் வரை மட்டுமல்ல மரணத்தைத் தாண்டியும் எனக்கு உதவியிருக்கின்றன. தங்கள் கூட்டத்தில் நான் எப்படி உயிர் இழந்தேன் என்பது தெளிவில்லை. சில சதிகாரர்களின் சதிச்செயலாக இருக்கலாம். செய்தது யார், எப்படி என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் க்ரிஷ் பேசிக் கொண்டிருக்கையில் உயிரிழக்க ஆரம்பித்ததை மெல்ல உணர ஆரம்பித்தேன். நான் கற்ற கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தை நினைவுக்கு வந்தது. உங்கள் உறுப்பினரான நான் அதற்கு முழு மனதுடன் முயற்சி செய்தேன். அதே நேரத்தில் இறந்து கொண்டிருந்த ஒரு போதை மனிதனின் உடலில் என்னால் புக முடிந்தது. என் சக்திகளுக்கு மகுடம் சூட்டியது போல் உங்கள் உறுப்பினரான நான் உணர்ந்தேன். இந்தப் பெருமையும் எனக்கல்ல, இல்லுமினாட்டிக்கு என்ற எண்ணமே இப்போதும் என் மனதில் மேலோங்குகிறது. உடல் மாறினாலும் மனம், அறிவு, ஆவி, மாறவில்லை என்பதால் ஏற்படுத்திக் கொண்ட மாற்றங்களைத் தெரிவித்து ஆள் மட்டும் பழையவன் தான் என்று தெரிவிக்கும் பொறுப்பை இந்தக் கடிதம் மூலம் நிறைவேற்றியிருக்கிறேன்.

நேரடியாகவே வந்து நான் நிலைமையைத் தெரிவித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று இப்போதும் உறுதியாக நினைக்கிறேன். ஆனால் புறச் சூழ்நிலைகள் அதற்குச் சாதகமாக இல்லை. என்னைக் கொல்ல இப்போதும் சில முயற்சிகள் நடப்பதாகத் தெரிகிறது. அது ஏன்? என் மேல் உள்ள தவறு தான் என்ன? என்ற கேள்விகள் என்னை அலைக்கழிக்கின்றன. ஆனால் பதில் கிடைக்கவில்லை.

இதுவரை யாரும் செய்யாத சாதனையைச் செய்து விட்டுத் திரும்பினாலும் இல்லுமினாட்டி உறுப்பினர் நான் என்ற சாதனையைக் காட்டிலும் அதிகமான ஆனந்தத்தை இந்தச் சாதனை எனக்களித்து விடவில்லை. நான் ஒரு பாதுகாப்பான சூழலை உணர்ந்தவுடன் முடிந்த வரை உடல் சக்திகளிலும் ஓரளவாவது பழைய விஸ்வமாக ஆனவுடன் திரும்பவும் தங்கள் அனுமதி பெற்று மீண்டும் தங்களைச் சந்திக்கிறேன். தாங்கள் அனுமதித்தால் விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து க்ரிஷ் பேச்சுக்குப் பதிலளிக்கவும் நான் தயார்.

எது உகந்தது என்று நினைக்கிறீர்களோ அதைத் தாங்கள் முடிவெடுங்கள். மனதளவில் நான் வலிமையாக இருந்த போதிலும் குடியேறியிருப்பது ஒரு போதை மனிதனின் பாழ்பட்ட உடல் என்பதால் உடல் அளவில் பலவீனமாகவே உணர்கிறேன். அதையும் விரைவில் சரிசெய்து கொள்வேன் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. அப்படிச் சரிசெய்து கொண்ட பின் தங்கள் மேலான உத்தரவு எதுவோ அதை நிறைவேற்ற மீண்டும் தங்களைத் தொடர்பு கொள்வேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி.

தங்கள் உண்மையுள்ள
விஸ்வம்

எர்னெஸ்டோ படித்து முடித்த பிறகு ஆலோசனையில் ஆழ்ந்தார். ஜான் ஸ்மித் மூலமாக விஸ்வத்தின் கூடு விட்டு கூடு பாய்ந்த சாதனையைப் பற்றி அறிந்து கொண்ட பின் இல்லுமினாட்டி உறுப்பினர்களுக்கு பெயர் எதுவும் குறிப்பிடாமல் என்ன நடந்திருக்கிறது என்ற தகவல்களை அனுப்பி வைத்திருந்தார். செயற்குழு உறுப்பினர்களுக்குக் கூடுதல் தகவல்களைத் தெரிவித்திருந்தார். ஆனால் அதற்குப்பின் இல்லுமினாட்டி உளவுத் துறையின் கண்டுபிடிப்புகளையும், அனுமானங்களையும் அவர் யாரிடமும் பகிர்ந்து கொள்ளவில்லை. அது அவசியம் என்று நினைக்கவில்லை. ஆனால் இப்போது விஸ்வம் ஒரு உறுப்பினராக நேரடியாக ஒரு கடிதம் அவருக்கு அனுப்பி விட்டதை தலைவர் என்ற நிலையில் மற்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய பொறுப்பு அவருக்கு இருக்கிறது.

அதன் நகலை எல்லா உறுப்பினர்களுக்கும் அனுப்ப உத்தரவிட்டு விட்டு அவர் உளவுத்துறை தலைவன் இம்மானுவலுக்குப் போன் செய்து வரச் சொன்னார்.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, August 20, 2020

இல்லுமினாட்டி 63

அன்று தான் சிந்துவுக்கு அவன் பேட்டி கொடுக்கும் தினம் என்பதால் உதய் கண்ணாடி முன் அதிக நேரம் இருந்து அழகாய்த் தெரிய முயற்சிகள் எடுத்துக் கொண்டான். மறைவில் இருந்து அடிக்கடி மூத்த மகனைக் கவனித்த பத்மாவதி பிறகு இளைய மகன் அறைக்கு வந்தாள். ஏதோ ஒரு புத்தகத்தில் மூழ்கி இருந்த க்ரிஷ் எச்சரிக்கையுடன் படித்துக் கொண்டிருக்கும் பக்கத்தை நுனி மடக்கிக் குறித்துக் கொண்டு புத்தகத்தை மூடி பக்கத்தில் வைத்துக் கொண்டான். இல்லா விட்டால் அம்மா சின்னக் குழந்தை அதைப் பிடுங்கிக் கொண்டு போய் விடுவாள். "முதலில் நான் சொல்வதை எல்லாம் கேள். பிறகு தான் தருவேன்" என்று சொல்லிப் பிடிவாதம் பிடிப்பாள்.

பத்மாவதி க்ரிஷிடம் ரகசியமாய்ச் சொன்னாள். "பார் இப்போதும் கண்ணாடி முன் உன் அண்ணன் நின்று அரை மணி நேரம் ஆகிறது. இன்னும் மேக்கப் முடியவில்லை. என்னவென்று நீ போய்க் கேள். உன் கிட்ட மனசு விட்டுப் பேசினாலும் பேசுவான்"

க்ரிஷ் புன்னகையுடன் எழுந்தான். எப்போதுமே அவனைக் கிண்டல் செய்யும் அண்ணனைக் கிண்டல் செய்ய நல்ல சந்தர்ப்பம். இல்லா விட்டாலும் அவன் அங்கிருந்து கிளம்பாமல் அம்மா விட மாட்டாள்.

"என்னடா இப்ப எல்லாம் மேக்கப்புக்கு ரொம்ப நேரம் எடுத்துக்கிறாய் என்று அம்மா சொல்கிறாள். என்ன நடக்குது" என்று சொன்னபடியே க்ரிஷ் உதய் அறைக்குள் நுழைய, உதய் அசடு வழிந்தபடி வாசலிலேயே தள்ளி நிற்கும் தாயை லேசாக முறைத்தான்.

"ஒன்னும் இல்லடா. சாதாரணமா தான் இருக்கேன். கிழவி தான் கற்பனைக் குதிரையைத் தட்டி விடுது"

"இல்லையே. நானும் உன்னை இவ்வளவு அழகாய் இத்தனை நாளாய் பார்த்ததே இல்லையே..." என்று அண்ணனைக் கூர்ந்து பார்த்தபடி சொன்னான்.

தன் முயற்சிகள் வீண் போகவில்லை, அழகாய்த் தெரிகிறதாய் தம்பியே சொல்லி விட்டான் என்று பரமதிருப்தி அடைந்த உதய் "அப்படில்லாம் இல்லை" என்று பலவீனமாய்ச் சொன்னான்.

"பார்த்தியா என்கிட்டயே மறைக்கிறாய்" என்று புகார் சொன்னபடியே க்ரிஷ் அங்கிருந்த நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்து சொன்னான். "யார்டா அது..."

உதய் அதற்கு மேல் எதையும் மறைக்கவில்லை. தாழ்ந்த குரலில் தம்பியிடம் சிந்து பற்றிச் சொன்னான். அவளைப் பார்த்ததிலிருந்து தன் இதயம் தன்னிடம் இல்லை என்று சொன்னான். அவள் அவளைப் பற்றிச் சொல்லியிருந்த தகவல்களை எல்லாம் தம்பியிடம் சொன்னான். எத்தனையோ காதுகளைத் தீட்டியும் அரைகுறையாய் தான் பத்மாவதி காதில் விழுந்தது. ஆனால் நெருங்கிப் போனால் தம்பியிடம் சொல்வதையும் உதய் நிறுத்தி விடுவான் என்று பயந்தாள். அப்புறமாய் இளைய மகனிடம் விரிவாய்க் கேட்டுக் கொள்ளலாம் என்று விட்டு விட்டாள்.

"அவளைப் பார்த்த நாளைக்கே உன்கிட்ட சொல்லலாம்னு வந்தேன். நீ எதோ தியானத்தில் இருந்தாய். அப்புறம் அவள் மனசில் என்ன இருக்குன்னும் எனக்குத் தெரியாது. அந்தப் பெண் மனசில் ஒரு எம்.பின்னு கொடுத்த மரியாதை மட்டும் இருக்கலாம். அவள் மனசில் வேற யாரையாவது காதலிச்சுட்டு இருக்கலாம். அதெல்லாம் தெரியாமல் என்ன சொல்றதுன்னு கூடத் தோணுச்சு. அதனால் பிறகு உன் கிட்டயும் சொல்லலை...." அவன் தம்பியிடம் சொல்லி முடித்த போது பத்மாவதி அவனுக்குப் பின்னால் இருந்தாள். உதய் பிறகு தான் கவனித்து முறைத்ததை அவள் கண்டுகொள்ளவில்லை.

"அதுவும் சரி தான்" என்று க்ரிஷ் புரிதலுடன் தலையசைத்தான்.

பத்மாவதி சொன்னாள். "நான் சும்மா உன் கூட உன் ஆபிசுக்கு வர்ற மாதிரி வரட்டுமா? எனக்கு ஒரு தடவை அந்தப் பொண்ணைப் பார்க்கணும்"

உதய் அழாத குறையாய் க்ரிஷிடம் சொன்னான். "என்னை இந்தக் கிழவி கிட்ட இருந்து தயவு செய்து காப்பாத்துடா"

பத்மாவதி மூத்தமகனை முறைத்தாள். க்ரிஷ் அம்மாவிடம் சற்றுக் கண்டிப்பான குரலில் சொன்னான். "அந்தப் பொண்ணு மனசுல என்ன இருக்குன்னு தெரியாம அப்படில்லாம் நீ போறது நாகரிகம் இல்லைம்மா. இத்தனை நாள் பொறுத்த உனக்கு இன்னும் ரெண்டு நாள் பொறுக்க முடியாதா. சும்மா இரு."

பத்மாவதி தலையசைத்தாள். சின்ன மகன் எதையும் நியாயமாய் தான் சொல்வான். ஆனால் அவள் மூத்த மகனிடம் தீர்க்கமான குரலில் சொன்னாள். "ஆனா இந்த மாதிரி விஷயத்துல எல்லாம் ஜவ்வு இழு இழுக்கக்கூடாது. அவ மனசுல என்ன இருக்குன்னு சீக்கிரமே தெரிஞ்சுக்கோ. ரெண்டு நாள்ல நீ கேட்டுச் சொல்லலைன்னா நானே நேர்ல போய் அந்தப் பொண்ணு கிட்ட நாசுக்கா பேசித் தெரிஞ்சுக்குவேன். அதுக்கு மேல பொறுக்க மாட்டேன். சொல்லிட்டேன்"

விஸ்வத்தின் கடிதத்தின் நகல் க்ரிஷுக்கும் வந்து சேர்ந்தது. அவனுடைய விடாமுயற்சியையும், துணிச்சலையும் க்ரிஷால் வியக்காமல் இருக்க முடியவில்லை. சீக்கிரமே களத்துக்கு வந்து விடுவேன் என்று அறிவிக்கிற அறிவிப்பு போலத் தோன்றியது.

க்ரிஷ் செந்தில்நாதனுக்குப் போன் செய்தான். அந்தக் கடிதம் பற்றிய தகவலைச் சொல்லி விட்டு விஸ்வம் இனி எப்போது வேண்டுமானாலும் மனோகரைத் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது என்று சொன்னான். மனோகர் எப்படி இருக்கிறான் என்று கேட்டான்.

செந்தில்நாதன் சொன்னார். "பெங்களூர் புறநகர்ப்பகுதியில் ஒரு பங்களாவில் குடியிருக்கிறான். அவனுடன் ரெண்டு வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். அவன் அதிகம் வீட்டை விட்டு வெளியே வருவதில்லை. ஏதாவது வேண்டுமானால் வாங்கி வர அந்த வேலைக்காரர்கள் போகிறார்கள், அல்லது போனில் வரவழைக்கிறான். அவர்களிடம் ஏதோ வயிற்று ஆபரேஷன் முடிந்து இப்போது ஓய்வில் இருப்பதாகச் சொல்லியிருக்கிறான். அக்கம் பக்கத்திலும் அந்தச் செய்தியையே சொல்லி இருக்கிறான். அவன் வீட்டு எதிரில் இருக்கிற வர்க்ஷாப்பில் இருக்கும் இளைஞன் ஒருவனும் இவன் ஆள் போல் தெரிகிறது. அந்த வீட்டை யார் பார்க்கிறார்கள், யார் போகிறார்கள் என்றெல்லாம் கண்காணிக்கும் வேலையையும் சேர்ந்தே அவன் பார்க்கிறான். இது வரை விஸ்வம் மனோகரைத் தொடர்பு கொண்டது போலத் தெரியவில்லை. சக்தி அலைகளில் விஸ்வம் தொடர்பு கொள்வதில் ஏதாவது சிக்கல் இருந்தாலும் போன்கால் வரும் வாய்ப்பு இருக்கிறது என்று மனோகர் ஆவலாக எதிர்பார்ப்பது மாதிரி தான் தெரிகிறது. எந்தப் புதிய எண்ணில் இருந்து போன்கால் வந்தாலும் ஓடிப் போய் ஆவலாய் பார்க்கிறான். ஏதாவது விளம்பரமோ, தவறான நம்பரோவாக இருந்தால் சலிப்போடு பேசி போனை வைத்து விடுகிறான்... இது தான் இப்போதைய நிலவரம்...."

"அப்படியானால் இனி எந்த வகையிலோ அவனை விஸ்வம் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு அதிகம் இருக்கிறது. கவனமாக இருங்கள்" என்று க்ரிஷ் சொன்னான்.

விஸ்வத்தின் கடிதத்தை கர்னீலியஸும் படித்தார். இல்லுமினாட்டியின் தலைமை தன் எந்தக் கருத்தையும் அத்துடன் சேர்ந்து அனுப்பவில்லை. ஒரு உறுப்பினரிடமிருந்து வந்த கடிதத்தை மற்ற உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்தும் அன்றாட வேலையைச் செய்வது போல் தலைமை காட்டிக் கொண்டது.

கர்னீலியஸ் கண்களை மூடிக் கொண்டு சிறிது நேரம் அமர்ந்திருந்தார். அவர் அருகில் இருந்த மேசையில் அந்த ரகசியப் புத்தகம் இப்போதும் இருந்தது. அந்தப் புத்தகத்தில் இருக்கும் ரகசியப் பயிற்சிமுறைகளைத் தினமும் பின்பற்றி வருகிறார். இளமையில் அந்தப் பயிற்சிகள் மூலம் எத்தனையோ நினைவுத்திருப்பல்களைச் செய்திருக்கிறார். காலப் போக்கில் விட்டு விட்டதாலோ இல்லை வயதாகி விட்டதாலோ மூளை முந்தைய அளவு ஒத்துழைக்க மாட்டேன்கிறது.

அன்று அந்த சிக்னலில் அவர் கார் செயலற்றுப் போனதிலிருந்து வங்கிக்குப் போகும் முயற்சியை அவர் எடுக்கவே இல்லை. அந்த சிக்னலைத் தாண்டாமல் அவருடைய வங்கிக்குப் போக முடியாது என்பதாலோ என்னவோ அங்கே தான் விஸ்வம் ஏதோ மர்ம முடிச்சு போட்டு இருப்பதாக அவருக்குத் தோன்றியது. ஏனென்றால் அவர் வீட்டில் இருக்கும் போதோ வேறு இடங்களுக்குப் போகும் போதோ எந்தப் பிரச்னையும் இல்லை. இப்போது சில நாட்களாய் அந்த ரகசிய ஆவணத்தில் எழுதியிருப்பதை நினைவுபடுத்திக் கொள்ள அவர் முயற்சிகள் எடுக்கும் போது கூட இந்தக் கண்காணிப்பு உணர்வுப் பிரச்னையில்லை.

இந்தப் பயிற்சிகளில் சின்னச் சின்ன முன்னேற்றம் இருக்கிறது. சில்லறைத் தெளிவுகள் கிடைக்கின்றன. சுவடியின் ஆரம்பத்தில் இருக்கும் இப்போதைக்கு அவசியமில்லாத பகுதிகள் எல்லாம் ஓரளவு நினைவுபடுத்திக் கொள்ள முடிகிறது. ஆனால் ரகசிய ஆவணத்தின் முக்கியமான பகுதிக்கு அவரால் வேகமாகப் போக முடியவில்லை. அதுவே அவருக்கு வருத்தமாக இருந்தது. விஸ்வத்தின் வேகத்திற்கு இணையாக இல்லாமல் இருக்கிறோமே என்ற குற்றவுணர்வு இருந்து கொண்டே இருந்தது. ஆனால் இந்தக் கலையில் பொறுமை மிக முக்கியம். அவசரப்பட்டால் எதுவுமே நடக்காது என்பதை நினைவுபடுத்தி மனதைத் தேற்றிக் கொண்டு. மறுபடி அந்தப் பயிற்சியைச் செய்ய ஆரம்பித்தார். கண்டிப்பாக அதைக் கண்டுபிடிக்காமல் அவர் விட மாட்டார். கண்டுபிடித்து அவர் இல்லுமினாட்டியின் தலைமையிடம் அதைத் தெரிவித்த பின் விஸ்வம் அவரைக் கொன்றாலும் கவலையில்லை....

இந்த எண்ணம் வந்தவுடன் அவர் தன்னையே கடிந்து கொண்டார். இது போன்ற விசேஷப் பயிற்சிகள் செய்யும் போது 'விஸ்வம் அவரைக் கொன்றாலும் பரவாயில்லை' என்பது போன்ற எதிர்மறை எண்ணங்கள் வந்தால் அவை பலிக்கும் வாய்ப்பு இருக்கிறது... அந்த எண்ணத்தை மனதிலிருந்து விலக்கப் பார்த்தார். ஆனால் அந்த எண்ணம் விலகவில்லை....

(தொடரும்)

என்.கணேசன்

இல்லுமினாட்டி 64

சிந்துவும் பேட்டி எடுக்க மறுபடி உதயின் அலுவலகத்திற்கு வந்த போது கண்ணியமாகவும் அழகாகவும் ஒப்பனை செய்து வந்திருந்தாள். அவளைப் பார்த்த உதய்க்குத் தன் பார்வையைத் திருப்பிக் கொள்வது எளிதாக இருக்கவில்லை. அவள் அவன் கூடுதலாய் அலங்கரித்துக் கொண்டு வந்திருந்ததைக் கவனித்து, அவனைப் பார்த்துச் சிறிது மெய்மறந்தது போலவும் பின் சுதாரித்துக் கொண்டது போலவும் காட்டிக் கொண்டாள். அவள் முகத்தில் சிறிதாய் வெட்கம் படர்ந்தது. அவனுக்கோ அவள் என்ன செய்தாலும் அது பேரழகாய்த் தெரிந்தது.

உதய் அவளிடம் சில தாள்களை நீட்டினான். அவற்றில் அவளுடைய கேள்விகளும் அவன் பதில்களும் நேர்த்தியாக அச்சடிக்கப்பட்டிருந்தன. அவளுடைய கேள்விகளுக்கான பதில் சில இடங்களில் இரத்தினச் சுருக்கமாகவும், தேவைப்பட்ட சில இடங்களில் விளக்கமாகவும் இருந்தன. அரசியல், அவன் தொகுதி, பாராளுமன்ற அனுபவங்கள், குடும்பம் என எல்லாவற்றிலும் அவன் பதில்களில் எந்தக் குறையும் இருக்கவில்லை. குடும்பம் பற்றி மிகப் பெருமையாகச் சொல்லி இருந்தான். அவன் தந்தையின் எளிமை, தாயின் பாசமும், வெகுளித்தனமும், தம்பியின் அறிவும் அடக்கமும் பற்றி எல்லாம் சொல்லி இது போன்ற ஒரு குடும்பம் தான் அவனுடைய பேரதிர்ஷ்டம் என்று நினைப்பதாகவும் சொல்லி இருந்தான்.

அவள் நிதானமாகப் படித்தாள். அவனைப் பார்ப்பதை விட அது சுலபமாக இருந்தது. அவனுக்கு அவள் படிப்பதைப் பார்ப்பதே இனிமையாக இருந்தது.

கேள்வி பதிலில் "உங்கள் திருமணம் எப்போது?" என்று கேட்டிருந்ததற்கு அவன் "கூடிய விரைவில்..." என்று இரண்டே சொற்களில் சொல்லி இருந்தான்.

அவள் நிமிர்ந்து மெல்லக் கேட்டாள். "திருமணம் கூடிய விரைவில் என்று சொல்லி இருக்கிறீர்கள். நீங்கள் திருமணம் செய்து கொள்ளப் போகிற அந்த அதிர்ஷ்டசாலி யார் என்பதைத் தெரிந்து கொள்ளலாமா?"

அவன் புன்னகையுடன் சொன்னான். "ஒரு பெண்ணை சமீபத்தில் பார்த்தேன். பிடித்திருந்தது. ஆனால் அவள் மனதில் என்ன இருக்கிறது என்று தெரியவில்லை..."

"அவள் மனதில் ஏற்கெனவே வேறு யாராவது இருந்தால்...?" என்று சிந்து குறும்பாகக் கேட்டாள்.

அவன் சிரித்தான். "மனமெல்லாம் உடைந்து போக மாட்டேன். அம்மாவிடம் சீக்கிரம் யாராவது ஒரு பெண்ணைப் பார். உனக்கு நன்றாகப் பிடித்திருந்து எனக்கு ஓரளவு பிடித்திருந்தால் கூட ஓ.கே என்று சொல்லி விடலாம் என்று இருக்கிறேன். ஏனென்றால் நான் காத்திருக்கிறேன் என்றாலும் என் அம்மா காத்திருக்கத் தயாரில்லை...."

அவள் அந்தப் பதிலை எதிர்பார்த்திருக்கவில்லை. அவனுக்கு அவள் மேல் இருந்த ஈர்ப்பு உண்மையாக இருந்தாலும் சினிமாத்தனமான சோகத்தில் ஈடுபடவெல்லாம் அவன் தயாராய் இல்லை என்பது தெளிவாகவே தெரிந்தது. 'என்ன இருந்தாலும் அரசியல்வாதியல்லவா?' என்று மனதில் நினைத்துக் கொண்டாள்.

அவளும் சிரித்தாள். "உங்கள் ப்ராக்டிகல் அப்ரோச் எனக்கு பிடித்திருக்கிறது. அந்தப் பெண்ணிடம் நேரடியாகக் கேட்டு விட வேண்டியது தானே."

அவன் சின்னத் தயக்கத்துடன் சொன்னான். "புதிதாக அறிமுகம் ஆகி இருக்கும் பெண்ணிடம் திடீரென்று இந்த அளவு நெருக்கமான கேள்வியைக் கேட்பது சரி தானா என்றும் தோன்றுகிறது"

சிந்து சொன்னாள். "நீங்கள் ஒன்றும் அந்தப் பெண்ணைப் பலாத்காரம் செய்யவில்லையே. கட்டாயமும் படுத்தவில்லை. அதனால் அவள் மனதில் என்ன இருக்கிறது என்று கேட்டுத் தெரிந்து கொள்வதில் தப்பேயில்லை"

உதய் சின்ன வெட்கத்துடன், வேகமாய் அடிக்க ஆரம்பித்த இதயத்துடிப்புடனும் கேட்டான். "சரி உன் மனதில் என்ன இருக்கிறது சிந்து?"

அவளுக்குப் புரிய சிறிது நேரமானது போல் காட்டிக் கொண்டாள். பின் நம்ப முடியாத அதிர்ச்சி போல் காட்டிக் கொண்டாள். பின் திகைப்பு, தயக்கம், வெட்கம் என்ற உணர்ச்சிகளை வரிசையாகக் காட்டினாள். பின் வாயடைத்துப் போனது போல் மௌனமாக இருந்தாள்.

"நான் தப்பாய் எதுவும் கேட்டு விடவில்லையே" என்று உதய் கேட்டான்.

சிந்து ஒரு நிமிட அமைதிக்குப் பின் சொன்னாள். "நீங்கள் தப்பாய் கேட்கவில்லை. நான் இதை எதிர்பார்க்கவில்லை. அவ்வளவு தான்....."

"சரி என்ன சொல்கிறாய்? பதிலெதுவானாலும் பரவாயில்லை. நான் அதில் சங்கடப்பட மாட்டேன். உன் மனதில் வேறு யாராவது இருந்தாலும், உனக்குப் பிடிக்கவில்லை என்று சொன்னாலும் கண்டிப்பாக நாகரிகமாக ஒதுங்கி விடுவேன்."

சிந்து தயக்கத்துடன் சொன்னாள். "என் மனதில் யாரும் இல்லை. நான் ஒரு சாதாரண பெண். ஒரு முதலமைச்சரின் மகன், எம்.பி ஆன உங்களுக்கு அந்தஸ்திலும் மற்ற விஷயங்களிலும் எந்த விதத்திலும் நான் தகுதியானவளாகத் தெரியவில்லை"

உதய் மனதில் இருந்த பெரிய பாரம் இறங்கியது போல் உணர்ந்தான். அவள் மனதில் வேறு யாரும் இல்லை.... சற்று முன் அவள் மனதில் யாராவது இருந்தால் வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்வேன் என்று சொன்னவன் இவளைத் தவிர இனி என் மனதில் இன்னொரு பெண்ணுக்கு இடமில்லை என்று அந்தக் கணத்தில் முடிவு செய்தான்.

சிந்து லேசாகக் கண்கலங்கத் தொடர்ந்தாள். "சாதாரணமானவளாகக் கூட என் நிலைமை இல்லை. ஒரு விதத்தில் நான் தனிமரம் மாதிரி தான். அன்பு செலுத்தவோ, அக்கறை கொள்ளவோ கூட எனக்கு யாரும் இல்லை. என் அப்பாவுக்கு நான் வேண்டாதவள். என் சித்திக்கு நான் பாரம். என் சகோதரிக்கு என் மேல் வெறுப்பு. என்ன வாழ்க்கை நான் வாழ்கிறேன், ஏன் வாழ்கிறேன், என்ன அர்த்தம் இருக்கிறது என்றெல்லாம் விளங்காத நிலைமையில் தான் ஒரு புது வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டும் என்று நினைத்து, கடவுளிடம் எதாவது வழி காட்டு. என்று வேண்டிக் கொண்டு தான் மும்பையை விட்டுச் சென்னைக்கு வந்தேன்...."

கண்டிப்பாக அவள் பின்னணி பற்றி போலீசார் விசாரிப்பார்கள் என்று சிந்துவுக்குத் தெரியும். அப்படி விசாரிக்கையில் இத்தனை காலம் இருந்த மும்பையை விட்டு அவள் சென்னைக்கு ஏன் வந்தாள் என்ற நியாயமான கேள்விக்கு ஒரு பதிலைத் தயார் செய்து தரவேண்டி இருக்கும் என்பதை அவள் அறிவாள். அதனால் பேச்சோடு பேச்சாக அவள் இப்படி சென்னைக்கு வந்த காரணத்தை அவனிடம் சொல்லி வைத்தாள்.

அவள் கண்கலங்கியதில் உதய் பதறிப் போனான். அவள் சொன்ன வார்த்தைகளில் அவன் உள்ளம் நெகிழ்ந்து போனான். இனிமேல் தனிமரம், யாருமில்லை என்றெல்லாம் சொல்ல வேண்டாம் என்று சொன்னான். அவனும், அவன் குடும்பமும் அவளுக்கு இருப்பதைச் சொன்னான். தன்னைப் பற்றிச் சொல்வதை விட அதிகமாகத் தன் குடும்பத்தைப் பற்றிச் சொன்னான். அன்பானவர்கள் என்று சொன்னான். அவன் தாயைப் போல் ஒரு தாயை யாரும் எங்கேயும் பார்க்க முடியாது என்று சொன்னான்.

அவள் தயக்கத்துடன் கேட்டாள். "அவர்களுக்கு என்னைப் பிடிக்கா விட்டால்?"

அவன் உறுதியாகச் சொன்னான். "என் விருப்பம் தான் அவர்களுடைய விருப்பமுமாக இருக்கும். என் சந்தோஷம் தான் அவர்களுடைய சந்தோஷமுமாக இருக்கும்."

அவன் தன் குடும்பத்தைப் பற்றி மேலும் சொல்லிக் கொண்டே போனான். சிந்துவுக்கு ஆரம்பத்தில் இருந்தே கடவுள் நம்பிக்கை கிடையாது. அவள் நினைவு தெரிந்த நாளிலிருந்து கடவுளை வணங்கியது கிடையாது. காரணம் கடவுள் இருப்பது அவளுக்கு நிச்சயமில்லை. இருந்தால் கூட இது வரை அவர் அவள் பக்கம் கடைக்கண் பார்வையைத் திருப்பின அறிகுறியும் தெரிந்ததில்லை. உதய் சொல்வதை எல்லாம் பார்க்கும் போது கடவுள் இருந்தால் அவர் மிக பாரபட்சமானவர் என்றே தோன்றியது. குடும்பம், அன்பு விஷயத்தில் அவளுக்கு எந்த நல்லதையும் செய்யாத கடவுள் உதய்க்கு யோசித்து யோசித்து எல்லா நன்மைகளையும் செய்திருப்பது போல் தோன்றியது. அவன் சொன்னது எதுவும் அதிகபட்சமில்லை என்பதையும் அவள் அறிவாள். ஏற்கெனவே விஸ்வம் அனுப்பியிருந்த தகவல்களில் அவன் சொன்னது அத்தனையும் இருந்தன.

அவள் மனதில் ஓடிய எண்ணங்களை அவள் முகம் சிறிதும் காட்டவில்லை. அவள் முகத்தில் பிரமிப்பும், அன்பும், நன்றியும் மட்டுமே தெரிந்தன...

அவன் தன் குடும்பத்தைப் பற்றிச் சொன்ன போது கூடவே க்ரிஷின் காதலி ஹரிணியைப் பற்றியும் சொன்னான். அவளுடைய புத்திசாலித்தனம், தைரியம், பரந்த மனம் பற்றியும் சொன்னாள். அவன் தம்பி அவளைக் கவனிப்பதில் சில சமயம் அலட்சியம் காட்டினாலும் கூட அவனை விடாமல் காதலிப்பதைப் பற்றிச் சொன்னான். தனக்கு ஒரு சகோதரியாக அவள் மாறி விட்டதைப் பற்றிச் சொன்னான். தன் தாய் தினமும் ஒரு தடவையாவது அவளிடம் பேசாமல் இருப்பதில்லை என்று சொன்னான்...

அவள் முகத்தில் பிரமிப்பு காட்டிக் கேட்டுக் கொண்டே வந்தாள். தன்னுடைய திட்டத்தின் அடுத்த பகுதியில் இவ்வளவு சீக்கிரம் வெற்றியடைய முடியும் என்று அவள் நம்பியிருக்கவில்லை. விஸ்வம் இந்த வெற்றியைக் கேள்விப்பட்டால் மிகவும் சந்தோஷப்படுவான் என்பதில் அவளுக்குச் சந்தேகமேயில்லை. திருப்தியுடன் புன்னகைத்தாள்...

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, September 3, 2020

இல்லுமினாட்டி 65

க்ரிஷ் ஏதோ ஒரு எச்சரிக்கையை உணர்ந்தான். வார்த்தைகள் இல்லாத அந்த எச்சரிக்கை உணர்வுக்கு அவனுக்கு அர்த்தம் விளங்கவில்லை. மாஸ்டர் போன பின்னும் அவன் அவர் சொல்லிக் கொடுத்த தியானப்பயிற்சிகளையும், உணர்வுப் பயிற்சிகளைச் செய்யத் தவறியதில்லை. தினமும் குளிப்பது போல், சாப்பிட்டுச் சக்தி பெறுவது போல அவனுடைய தினசரி வாழ்க்கையின் ஒரு பகுதியாக அந்தப் பயிற்சிகள் ஆகியிருந்தன. இந்த விஷயத்தில் அவனுக்கு மாஸ்டருக்கு இணையாக விஸ்வமும் ஒரு ஆதர்ச புருஷனாக இருந்தான். ஒவ்வொன்றையும் அவன் கற்றுக் கொண்ட விதம், மரணத்தையும் வென்ற விதம் எல்லாம் ஒரு சாதாரண மனிதனால் முடிந்த விஷயமல்ல. போதை மனிதனின் உடல் தான் அவனுக்குக் கிடைத்தது என்ற போதிலும் அதை வைத்துக் கொண்டு அவன் சமாளிக்கும் விதம், இல்லுமினாட்டிக்கு ஒரு கடிதம் அனுப்பிய துணிச்சல் அதை எல்லாம் க்ரிஷால் சிலாகிக்காமல் இருக்க முடியவில்லை. அத்தனையையும் அவன் நன்மைக்காகப் பயன்படுத்தி இருக்கலாம் என்ற ஆதங்கம் மட்டும் இப்போதும் க்ரிஷ் மனதில் நிலைத்து நின்றது.

க்ரிஷ் அந்த எச்சரிக்கையை எங்காவது பொருத்திப் பார்க்க முயற்சி செய்தான். ஆனால் அந்த உணர்வு அவன் அறிந்த எதிலும் பொருந்துவதாய் இல்லை. இனி பலவந்தப்படுத்தினால் அது இயல்பானதாக இருக்காமல் நாமே எதன் மீதாவது திணிப்பது போலாகி விடும் என்று அவனுக்குத் தோன்ற அவன் முயற்சியைக் கை விட்டான்.

அம்மா அறைக்குள் எட்டிப் பார்த்தாள். மகன் கண்களை விழித்திருப்பதும் கையில் புத்தகமோ, மடியில் லேப்டாப்போ இல்லாமல் இருப்பதைப் பார்த்த பிறகு தைரியமாக உள்ளே வந்தாள். "சாப்பாடு சாப்பிடறயாடா?"

"அண்ணா வரலையா?"

"இல்லை. அந்தப் பொண்ணு கிட்ட அவனுக்குப் பேசி முடிஞ்சிருக்காது. இந்த மாதிரி விஷயத்துல அவன் உன்னை மாதிரி இல்லை. வாழ்க்கையை ரசிக்கத் தெரிஞ்சவன்"

க்ரிஷ் வாய்விட்டுச் சிரித்தான். இதுவே உதயைக் கிண்டல் பண்ணியிருந்தால் நன்றாகப் பதிலடி கொடுத்திருப்பான். இளைய மகன் உண்மை என்று நினைப்பதை என்றுமே சமாளிக்கப் பார்தத்தில்லை.

பத்மாவதி சொன்னாள். "நான் உதய் ஆபிஸ் அசிஸ்டெண்டுக்கு மூன்று தடவை போன் பண்ணிட்டேன். இன்னும் பேசிட்டே இருக்காங்களாம். ரகசியமா அந்தப் பொண்ணை மட்டும் போட்டோ பிடிச்சு அனுப்பறியான்னு கேட்டேன். அவன் அண்ணன் திட்டுவாரும்மாங்கறான். ரொம்பப் பயந்தவனா இருக்கான்"

க்ரிஷுக்குத் தாயின் பொறுமையின்மை சிரிப்பை வரவழைத்தது. "உதயே கொஞ்ச நேரத்துல வந்துடப் போறான். அவன் கிட்டயே வாங்கிப் பார்க்கலாமே. உனக்கு அப்படி என்ன அவசரம்?"

"அதுக்குள்ளே பார்த்துடலாம்னு ஒரு நப்பாசை தான். நீ ஹரிணி கிட்டே விஷயத்தைச் சொல்லிட்டியா?"

"உதயே நிச்சயமாய் சொல்லலை. அப்படி இருக்கறப்ப அதை ஹரிணி கிட்ட சொல்ல என்ன இருக்கு"

"என்னடா இப்படி எதுலயுமே ஒரு ஆர்வம், துடிப்பு இல்லாமல் இருக்கே. உன்னைக் கட்டிகிட்டு அந்தப் பொண்ணு என்ன பாடுபடப் போகுதோ"

க்ரிஷ் மறுபடி சிரித்தான். அம்மாவுக்குப் பொழுது போக மாட்டேன்கிறது. பத்மாவதியின் அலைபேசி அலறியது. "உதயோட அசிஸ்டெண்ட் தான்" என்று இளைய மகனுக்குத் தெரிவித்து விட்டு "படம் ஏதாவது அனுப்பிச்சிருக்கானோ என்னவோ?" என்று சொல்லி விட்டுப் பேசினாள். "என்னப்பா. உதய் கிளம்பிட்டானா. இப்ப தானா. சரி தேங்க்ஸ்" என்று போனைக் கீழே வைத்து விட்டுக் கடிகாரத்தைப் பார்த்தாள். "ட்ராஃபிக் இல்லாட்டி அரை மணி நேரத்துல இங்கே இருப்பான். வந்தவுடனே அவனை உன் அறைக்குக் கூட்டிகிட்டு வந்துடறேன். அவன் தனித்தனியா எதையும் சொல்ல வேண்டாம் பாரு. பின்னே உன் கிட்டேன்னா மனசுவிட்டு எல்லாத்தையும் சொல்வான். என் கிட்டேன்னா பாதி தான் சொல்வான். என்ன அண்ணன் தம்பிகளோ. அம்மான்னா தான் உங்களுக்கு இளக்காரம்"

க்ரிஷ் சிரித்துக் கொண்டே கேட்டான். "காதலிக்கிறது அவன் தானே. நீ ஏன் இப்ப பரபரப்பா இருக்கே?"

"உன்னை மாதிரி அசராமல் இருக்க ஒரு அம்மாவுக்கு முடியுமாடா? சீக்கிரம் அவனுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணி வைக்க வேண்டாமாடா. அவனுக்கு வயசாய்கிட்டே போகுது. அதுக்குப் பின்னால நீயும் இருக்காய். அந்த ஹரிணி அம்மாவுக்கும் பொண்ணைச் சீக்கிரம் கட்டிக் கொடுத்தா நிம்மதின்னு தோணாதாடா. அதுவும் நீ சாமியார் மாதிரி அடிக்கடி என்னென்னவோ பண்றே. அந்தப் பொண்ணு வெகுளி பாவம். உன் மேல நம்பிக்கை வச்சுக் காத்திருக்கு. ரெண்டு கல்யாணம் முடிஞ்சா அப்புறம் நான் எதைப் பத்தியும் யோசிக்க மாட்டேன்." சொல்லி விட்டுக் கடிகாரத்தைப் பார்த்தாள். கடிகாரம் அநியாயத்துக்கு மெல்ல நகர்கிற மாதிரி ஒரு பிரமை அவளுக்கு. அந்தப் பெண் எப்படி இருப்பாள் என்று தெரிந்தால் தேவலை என்று நினைத்தாள்.

உதய் வருவதற்கு முன் மூன்று தடவை வாசலுக்குப் போய் பார்த்தாள். இடையிடையே வந்து இளைய மகன் ஏதாவது புத்தகத்தையோ, லேப் டாப்பையோ எடுக்காமல் பார்த்துக் கொண்டாள். "கொஞ்சம் அண்ணன் வர்ற வரைக்கும் பொறுடா. எப்பப்பாரு படிச்சுகிட்டு. அம்மா கிட்ட தான் அது வரைக்கும் பேசிட்டு இரேன்."

க்ரிஷ் தாயைக் கிண்டல் அடித்தான். "அப்பா உன்னை எப்படித் தான் சமாளிக்கிறாரோ?"

பத்மாவதி சொன்னாள். "அவரை நான் எப்படிச் சமாளிக்கிறேன்னு கேளுடா. அவரும் உன்னை மாதிரி தான். அவர் வேலைன்னு எதை நினைக்கிறாரோ அதைத்தான் செய்வார். நாம ஏதாவது சொன்னா காதுலயே போட்டுக்க மாட்டார். .... உன் அண்ணன் வந்துட்டான். இரு இங்கேயே அவனைக் கூட்டிகிட்டு வர்றேன்....."

பரபரப்புடன் குழந்தையைப் போல் ஓடிப் போகும் அம்மாவைப் பார்க்க அவனுக்குப் பாவமாக இருந்தது. உண்மையிலேயே அவள் ஒரு குழந்தை தான்.....

பத்மாவதி மூத்த மகனை வரவேற்றாள். "வாடா உனக்காக தான் நானும் உன் தம்பியும் காத்துகிட்டிருக்கோம். அவன் அறைக்கே வா. அவனை நீ வர்ற வரைக்கும் வேற வேலை எதுலயும் போயிடாதபடி பார்த்துக்க நான் பட்ட பாடு எனக்கு தான் தெரியும்"

உதயைக் கையைப் பிடித்துக் கொண்டு பத்மாவதி கூட்டிக் கொண்டு போய் சோபாவில் உட்கார வைத்து பக்கத்தில் அமர்ந்து கொண்டாள். "முதல்ல அந்தப் பொண்ணோட போட்டோவைக் காண்பி. அப்புறம் சொல்லு"

உதய் முகம் மலர்ந்திருந்தான். அந்த மாதிரி ஒரு சந்தோஷத்தில் அவனைச் சமீபத்தில் பார்த்ததாய் க்ரிஷுக்கு நினைவில்லை. உதய் அலைபேசியில் எடுத்திருந்த சிந்துவின் போட்டோவைக் காண்பித்தான். பேரார்வத்துடன் அதை வாங்கிப் பார்த்த பத்மாவதி திருப்தியுடன் "பொண்ணு லட்சுமிகரமாய் இருக்கா" என்று சொல்லி விட்டு க்ரிஷ் கையில் கொடுத்தாள். க்ரிஷுக்கும் அந்தப் பெண் அழகாகவும் உதய்க்குப் பொருத்தமாகவும் இருப்பதாய்ப் பட்டது. ஆனால் அவன் சற்று முன்பு உணர்ந்திருந்த எச்சரிக்கை உணர்வு இப்போது அந்தப் பெண் மீது குவிய ஆரம்பித்தது. அந்த உணர்வு அவளைக் கைகாட்டுவது போல அவன் உணர ஆரம்பித்தான்.

க்ரிஷ் அதிர்ந்து போனான். ஆனால் அவன் அதிர்ச்சியை உதயும் பத்மாவதியும் கவனிக்கவில்லை. உதய் அவர்களிடம் சிந்து பற்றிச் சொல்ல ஆரம்பித்தான். உதய் அந்தப் பெண் மிகவும் நல்ல, புத்திசாலித்தனமான, பாவப்பட்ட நடுத்தர வர்க்கத்துப் பெண் ஆரம்பத்தில் தான் ஆழ்மனதில் உணர்ந்ததைச் சொல்லிப் பின் அவள் சொன்னதையெல்லாம் உணர்வு பூர்வமாக அவன் சொல்ல ஆரம்பிக்க க்ரிஷ் கூர்ந்து கேட்க ஆரம்பித்தான்.

சிந்துவின் சோகக்கதை கேட்டு பத்மாவதி இரண்டு மூன்று முறை கண்கலங்கி, கண்களைத் துடைத்துக் கொண்டாள். "ஏண்டா இன்னொரு வீட்டுக் குழந்தையையே கூட இப்படி நாம் நடத்த மாட்டோம். பெத்த அப்பா இப்படியா மகளை நடத்துவார். பாவம் என்னவொரு நரக வாழ்க்கை."

க்ரிஷ் ஒன்றும் சொல்லாமல் தலையசைத்தான். அவள் சொன்னதெல்லாம் உண்மையா, இல்லையா என்று அவனுக்குத் தெரியாது. அதனால் அதுகுறித்து அவசரமாக எந்த முடிவுக்கும் வர அவன் விரும்பவில்லை. அவன் மனமும், அறிவும் உதய் சொன்ன தகவல்களில் இருந்தன. மும்பையில் பிறந்து வளர்ந்த தமிழ்ப் பெண், பத்திரிக்கைத் துறை அனுபவம் இல்லாதவள், திடீரென்று தமிழ்நாட்டுக்கு வருகிறாள், இங்கே பத்திரிக்கையில் வேலைக்குச் சேர்கிறாள், அவளுடைய முதல் வேலை உதயைப் பேட்டி எடுப்பது, அவள் அவன் மனதைக் கவர்கிறாள், அவன் காதலிக்கிற அளவுக்குக் கவர்கிறாள். இத்தனையும் ஒரு வாரத்திற்குள்.... இது எதுவும் இயல்பாய் இல்லை. உதய் சாதாரண மனநிலையில் இருந்திருந்தால் அப்போதே க்ரிஷ் அதையெல்லாம் சுட்டிக் காட்டியிருப்பான். ஆனால் உதய் அவளிடம் தன்னை முழுமையாக இழந்திருந்தான் என்பது அவனைப் பார்க்கையில் நிச்சயமாகவே தெரிந்தது. க்ரிஷ் சொல்வது அவனை எப்படிப் பாதிக்கும், அவன் எப்படி எடுத்துக் கொள்வான் என்று அவனுக்குத் தெரியவில்லை. நிச்சயமாய் தம்பியைக் குற்றம் சொல்ல மாட்டான். ஆனால் உதயின் மனதில் தற்போது ஒளியின் வேகத்தில் கட்டப்பட்டு வரும் எத்தனையோ கோட்டைகள் உருக்குலைந்து போகும். இப்போது தெரியும் அந்த பேரின்ப மலர்ச்சி கண்டிப்பாய் காணாமல் போகும்... அதைக் காண முடிந்த மன திடம் க்ரிஷிடம் இல்லை.

ஒரு மனிதன் தன் மனதில் உணரும் முதல் காதல் எவ்வளவு அழகானது, இனிமையானது என்பதை க்ரிஷ் அறிவான். அந்தக் காதல் ஒரு ஏமாற்று முயற்சியாக இருக்கலாம் என்கிற சந்தேகம் கூட எப்படி அந்த மனதை ரணமாக்கும் என்பதையும் க்ரிஷ் அறிவான். எதையும் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் க்ரிஷ் தவித்தான்.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, September 10, 2020

இல்லுமினாட்டி 66

க்ரிஷ் அன்று மாலை வரை நிறைய யோசித்தான். அவனுக்கு வந்த எச்சரிக்கை உணர்வையும், அதையொட்டி யோசித்ததில் எழுந்த சிந்து பற்றிய சந்தேகங்களையும் உதயிடம் தெரிவிப்பது தான் சரி என்று அவன் அறிவு சொன்னது. மாலை உதயின் அறைக்குப் போன போது உதய் சிந்துவிடம் தாழ்ந்த குரலில் பேசிக் கொண்டிருந்தான். உதயின் கண்களில் படாமல் சத்தமில்லாமல் க்ரிஷ் திரும்பி வந்து விட்டான்.

மாஸ்டர் இந்த சமயத்தில் இங்கே இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று க்ரிஷ் நினைத்தான். அவன் உணர்வுக்கு அவரிடம் அதிக விளக்கம் பெற்றிருக்கலாம்; என்ன செய்வது என்று ஆலோசனை பெற்றிருக்கலாம்....

பத்மாவதி அவன் அறைக்கு வந்து அவனிடம் புன்னகையுடன் சொன்னாள். "எப்பப் போனாலும் அந்தப் பொண்ணு கிட்டயே பேசிகிட்டிருக்கான். நாம போறதைக் கூட கவனிக்க மாட்டேன்கிறான்..."

க்ரிஷும் புன்னகைக்க முயன்றான். பத்மாவதி உற்சாகத்துடன் சொன்னாள். "நான் ஹரிணிக்குப் போன் செய்து விஷயத்தை அவ கிட்டயும் சொல்லிட்டேன். அவளும் சந்தோஷப்பட்டா. அவளுக்கும் சிந்து போட்டோவை அனுப்பியிருக்கேன். சிந்து அழகாய் இருக்கிறதா ஹரிணியும் சொன்னா"

க்ரிஷ் தலையசைத்தான். பத்மாவதி சொன்னாள். "உன் அப்பா வந்தவுடனே அவர் கிட்ட எல்லாத்தையும் சொல்லி சீக்கிரம் கல்யாணத்திற்கு ஏற்பாடு பண்ணுங்கன்னு சொல்லணும். எதையுமே நாம பத்து தடவை சொல்லணும். அப்படின்னா தான் அவரை நகர்த்த முடியும். அடுத்த முகூர்த்தம் எப்ப இருக்குன்னு தெரியலை..."

க்ரிஷ் சொன்னான். "அம்மா அவசரப்படாதே. பொறும்மா...."

பத்மாவதி கோபத்துடன் மகன் வாயை அடைத்தாள். "இன்னும் என்னடா பொறுக்கறது. எதுவுமே காலா காலத்துல ஆனாத் தான் அதுக்கொரு மதிப்பு..."

உதய் மாலை தான் அவனறைக்கு வந்தான். சிந்து பற்றி தான் அதிகம் பேசினான். அர்த்தமில்லாமல் போய்க் கொண்டிருந்த வாழ்க்கைக்கு இப்போது தான் அர்த்தம் கிடைத்திருப்பதாக உணர்வதாகச் சொன்னான். இப்போது தான் வாழ்க்கையில் ஒரு நிறைவை உணர்வதாகச் சொன்னான். க்ரிஷால் உதயிடம் எதையும் மனம் விட்டுப் பேச முடியவில்லை. அவனைக் காயப்படுத்தாமல் எதையும் சொல்ல முடிந்த நிலைமை இல்லை...

வாங் வே விஸ்வத்தின் கடிதத்தைப் படித்துப் பரபரப்படைந்தார். எர்னெஸ்டோ இதை எப்படி எடுத்துக் கொள்ளப்போகிறார், இது குறித்து அவர் கருத்து (தீர்ப்பு) என்ன என்று அறியப் பேராவலாக இருந்தார். ஆனால் இந்த முறையும் தனக்கு வந்த கடிதத்தை உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்தியதுடன் தன் கடமை முடிந்து விட்டதாய் எர்னெஸ்டோ இருந்து விட்டார். குறைந்தபட்சம் தலைமைச் செயற்குழு உறுப்பினர்களுடனாவது அவர் கலந்தாலோசித்திருக்க வேண்டும், அவர்களின் கருத்தைக் கேட்டிருக்க வேண்டும், தன் மனதில் என்ன இருக்கிறது என்று அவர் மனம் விட்டுப் பேசி இருக்க வேண்டும். கடிதம் அனுப்பிய பின் ஓரிரண்டு நாட்களில் அதைச் செய்வார் என்று அவர் எதிர்பார்த்தார். அப்போதே அவர் நண்பரான அகிடோ அரிமா சொல்லியிருந்தார். "கிழவர் இதற்கெல்லாம் கருத்துச் சொல்லிக் கொண்டிருக்க மாட்டார். வேண்டுமானால் பொறுத்திருந்து பாருங்கள். அவர் அசரவே மாட்டார். மௌனமாகவே இருப்பார். என்ன சொல்கிறீர்கள் என்று தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மற்ற யாரும் கேட்கப் போவதில்லை. அதனால் ஒன்றும் நடக்கப் போவதில்லை."

உண்மை. அவரைத் தவிர மீதமிருக்கும் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் யாரும் தாங்களாக வாயைத் திறந்து இது போன்ற விஷயங்களில் இது வரை பேசியதில்லை. எப்போதாவது யாராவது வாய் விட்டுத் தாங்களாகவே கருத்துக்கள் சொல்லி இருக்கிறார்கள், கேட்டிருக்கிறார்கள் என்றால் அது வாங் வே தான். வாங் வேயும் மிக ஜாக்கிரதையானவர். கிழவரின் சந்தேகப் பார்வை அவர் மீது பதிந்து விட வாங் வே அனுமதித்ததேயில்லை. அதற்கு முன்பே அவர் இது வரை நிறுத்திக் கொண்டிருக்கிறார்.

அன்றிரவு அவர் இல்லுமினாட்டியின் உளவுத் துறை உபதலைவர் சாலமனுக்கு ரகசிய போன் செய்து பேசினார். "இந்தக் கடிதத்தை வைத்து விஸ்வம் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து விட்டீர்களா?"

"இல்லை. அப்படிக் கண்டுபிடிக்கும் அளவுக்கு விஸ்வமும் அஜாக்கிரதையாய் இல்லை. சம்பந்தமில்லாத இடத்திலிருந்து தான் தபாலை அனுப்பி இருக்க வேண்டும் என்று இம்மானுவல் நினைக்கிறான். எனக்கும் அப்படித் தான் தோன்றுகிறது. அவன் கூட்டாளி ஒருவனும் கூட இருப்பதால் அவன் எத்தனையோ தூரம் வந்து கூட தபாலை அனுப்பி இருக்கலாம்"

"அந்தக் கூட்டாளி குறித்த விவரங்கள் எதையாவது இம்மானுவலிடம் இருந்து தெரிந்து கொள்ள முடிந்ததா?"

"இல்லை இம்மானுவல் அதுவிஷயமாக வாயையே திறக்க மாட்டேன்கிறான். நான் இரண்டு தடவை அந்தக் கூட்டாளி சம்பந்தமாக அவனிடம் பேசிப் பார்த்தேன். ஆனால் அவன் ஒன்றுமே தெரியாத பாவனையைத் தான் காட்டுகிறான். நானும் நேரடியாக அந்தக் கூட்டாளி சம்பந்தமான ஃபைலைக் காட்டி இதெல்லாம் என்ன என்று கேட்க முடியாத நிலைமையில் இருக்கிறேன்."

வாங் வேக்கு ஆத்திரமாக வந்தது. "கிழவர் தனக்குச் சரிசமமான ஆளைத் தான் உளவுத்துறைக்குத் தலைவராகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்"

சாலமன் அந்தக் கருத்துக்குப் பதிலேதும் சொல்லவில்லை. வாங் வே கேட்டார். "வேறு ஏதாவது தகவல்?"

"அந்த அமானுஷ்யன் நாளை ஜெர்மனி போய் சேர்கிறான்."

அந்த அமானுஷ்யனின் கதையை ஒரு நாவலின் சுவாரசியத்தோடு படித்திருந்த வாங் வேக்கு அவனை ஒரு முறை நேரில் பார்க்க ஆவலாய் இருந்தது. ஆனால் உடனடியாக ஜெர்மனி போய் அவனையும், கிழவரையும் சந்திக்க அவரிடம் போதுமான வேறு காரணங்கள் இல்லை. காரணங்கள் கிடைக்கும் வரை அவர் காத்திருந்தே ஆக வேண்டும். ஆனால் அவருக்குக் காத்திருப்பது தான் கஷ்டமாக இருந்தது. இல்லுமினாட்டியில் என்னென்னவோ நடக்கிறது. எல்லாம் ஏதோ மாற்றம் நடக்கவிருப்பதன் அறிகுறிகளாகத் தெரிகின்றன. அப்படி மாற்றம் ஏதாவது வராதா, அதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முடியாதா என்று காத்திருக்கும் அவருக்கு எதுவும் அவர் எதிர்பார்க்கும் அளவுக்குப் பூதாகரமாக எழாதது ஏமாற்றமாக இருந்தது.

சிறிது யோசித்து விட்டுச் சும்மா இருக்க முடியாமல் கிழவரிடம் விஸ்வத்தின் கடிதம் குறித்துப் பேசிப் பார்க்கலாமா என்ற எண்ணம் அவருக்குத் தோன்றியது. தலைமைக்குழு உறுப்பினரான அவருக்கு அதுகுறித்துத் தலைவரிடம் பேசும் அதிகாரம் உண்டு. விஸ்வத்தின் கடிதம் குறித்துக் கேட்பதனாலேயே அவர் மேல் கிழவர் சந்தேகப்படக் காரணம் இல்லை. அகிடோ அரிமா சொன்னது போல எல்லோரும் வாயை மூடிக் கொண்டு இருந்தால் எதுவும் நடக்காது...

இந்த எண்ணம் மனதில் எழுந்து வலுப்பட்டவுடன் வாங் வே எர்னெஸ்டோவுக்குப் போன் செய்தார். உதவியாளனிடம் கேட்டார். "தலைவர் பிசியா"

"ஒரு நிமிடம்..." என்றவன் இரண்டு நிமிடங்கள் கழித்து தலைவருக்கு இணைப்பைத் தந்தான். "ஹலோ" என்று எர்னெஸ்டோவின் குரல் கேட்டது.

"வணக்கம் தலைவரே வாங் வே பேசுகிறேன்.... ஒன்றுமில்லை.... இரண்டு நாள் முன்பு விஸ்வத்தின் கடிதம் கிடைத்தது. அது குறித்து நாம் என்ன முடிவு எடுப்பது என்று யோசித்தேன். ஒன்றும் விளங்கவில்லை. உடலைப் பொருத்த வரை அவன் டேனியல். மனதைப் பொருத்த வரை அவன் விஸ்வம். நாம் அவனை உறுப்பினராக எடுத்துக் கொள்ள முடியுமா? இதை எப்படி அணுகுவது என்று எனக்கு ஒன்றும் புரியவில்லை. அவனுக்குப் பதில் ஏதாவது தரவேண்டுமா? அதை உங்களிடம் கேட்கலாம் என்று தான் போன் செய்தேன்..."

எர்னெஸ்டோ சொன்னார். "நேரில் அவன் வந்திருந்தால் நேரிலேயே அவனுக்கு ஏதாவது பதில் சொல்ல நாம் யோசித்திருக்கலாம். தபாலில் அவன் எதையோ எழுதியிருக்கிறான். தபாலில் வந்ததற்குப் பதில் தபால் ஏதாவது அனுப்பலாம் என்றால் அவன் இருக்கும் விலாசத்தை நமக்குத் தெரிவிக்கவில்லை. அதனால் இப்போதைக்கு நாம் செய்வதற்கு ஒன்றுமில்லை. பொறுத்திருப்போம். ஒருநாள் அவன் கண்டிப்பாக நேரில் வரலாம். அப்போது யோசிப்போம்"

எர்னெஸ்டோ பேச்சை முடித்துக் கொண்டார். வாங் வே பெருமூச்சு விட்டார்.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, September 17, 2020

இல்லுமினாட்டி 67

சிந்துவை மறுநாள் இரவுச் சாப்பாட்டுக்கு வரச் சொல்லி இருந்தார்கள். அவளைப் பார்த்துப் பேச உதய் வீட்டில் எல்லோருமே ஆர்வமாய் இருந்தார்கள். மறுநாள் இரவுச் சாப்பாட்டுக்கு ஹரிணிக்கும் அழைப்பு போய் இருந்தது. சிந்து அவர்களைப் பற்றித் தெரிந்து கொள்ளவும், அவர்கள் அவளைப் பற்றிப் புரிந்து கொள்ளவும் உதவியாக இருக்கும் என்று உதய் நினைத்தான்.

அன்றிரவு அனைவரும் அமர்ந்து சாப்பிடும் போதே பத்மாவதி கணவரிடம் கறாராய் சொல்லி விட்டாள். "பாருங்க நாட்டு நிர்வாகம் நீங்க முதலமைச்சர் ஆகறதுக்கு முன்னாடியும் நடந்துகிட்டு தான் இருந்தது. நீங்க இல்லாட்டியும் நடக்கத் தான் போகுது. அதனால நம்ம வீட்டுல ரெண்டு கல்யாணம் நடந்து முடியற வரைக்கும் வீட்டைப்பத்தி மட்டும் யோசியிங்க. புரியிதா. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கல்யாணங்களை முடிச்சுடுவோம். அடுத்த முகூர்த்தம் எப்போன்னு காலண்டரைப் பார்த்தேன். இந்த மாசக் கடைசிலயே ஒரு முகூர்த்தம் இருக்கு. என்ன சொல்றீங்க?"

கமலக்கண்ணன் தலையசைத்து விட்டுச் சொன்னார். "பார்க்கறேன்"

பத்மாவதிக்குக் கோபம் வந்து விட்டது. "மக்கள் கிட்ட பேசறது, நிருபர்கள் கிட்ட பேசறது மாதிரியெல்லாம் என் கிட்டயும் பேசினா எனக்குக் கோபம் வந்துடும் சொல்லிட்டேன். பார்க்கறதுக்கு என்ன இருக்கு. முழுமூச்சா இறங்கணும்கிறேன்"

"சரி" என்று கமலக்கண்ணன் அழுத்தமாய்ச் சொல்ல க்ரிஷும், உதயும் தந்தையைப் புன்னகையுடன் பார்த்தார்கள்.

க்ரிஷ் நீண்ட நேரம் யோசித்தான். உதயிடம் உண்மையைச் சொல்லவும் அவனால் முடியவில்லை. அதே நேரம் பத்மாவதி படும் அவசரப்படி வேகமாகத் திருமணம் நடந்து விடுவதிலும் அவனுக்குச் சம்மதமில்லை. யோசனையின் முடிவில் தந்தையிடம் தனியாகப் பேசத் தீர்மானித்தான். அன்றிரவு உதய் சிந்துவிடம் மறுபடி அலைபேசியில் பேச ஆரம்பித்த பின், பத்மாவதி பூஜையறைக்குத் தன் பணப்பையுடன் உள்ளே போகும் வரைக் காத்திருந்தான். உதய் குறைந்தபட்சம் இரண்டு மணி நேரம் பேசுவான். பத்மாவதி தன் வீட்டில் நடக்க இருக்கும் இரண்டு திருமணங்களுக்கு விசேஷப் பிரார்த்தனை செய்யக் கிளம்பியிருக்கிறாள். சில தொகைகளைச் சில கடவுள்களுக்குத் தனி உண்டியல்களில் போட்டு சில மஞ்சள் சிவப்புத் துணிகளில் சில தொகைகளைச் சில தெய்வங்களைப் பிரார்த்தித்து வைத்து முடிச்சுப் போட்டு அவள் மனமுருகப் பிரார்த்தித்து விட்டு வெளியே வர குறைந்தபட்சம் ஒரு மணி நேரமாவது ஆகும். இரண்டு பேரும் இப்போதைக்கு வர வழியில்லை என்று உறுதிப்படுத்திக் கொண்டபின் க்ரிஷ் தந்தையின் அறைக்குச் சென்றான்.

கமலக்கண்ணன் இளையமகன் வரவில் ஆச்சரியப்பட்டார். அவருக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து அவனாக அவரைச் சந்தித்துப் பேச வந்ததேயில்லை. ஓரிரு முறை அவர் உடல்நலமில்லாமல் இருந்த போது எப்படி இருக்கிறீர்கள் என்று விசாரிக்க வந்து ஐந்தைந்து நிமிடங்கள் இருந்திருக்கிறான். மற்றபடி அவன் எது குறித்தும் அவரிடம் பேச வந்ததில்லை. என்ன விஷயமானாலும் அண்ணன் தம்பி இருவர் தான் மணிக்கணக்கில் பேசிக் கொள்வார்கள். அடிக்கடி போய் தாயும் சேர்ந்து கொள்வாள். பேசுவது மிகமுக்கியமான விஷயமாக இருக்கையில் அவர்கள் இருவரும் அவளைத் துரத்திவிடுவது உண்டு. "சாப்பிட வருவீங்க தானே, அப்ப பார்த்துக்கறேன்" என்று பத்மாவதி மிரட்டி விட்டு வந்தாலும் நேரம் வருகையில் அவளே பிள்ளைகளிடம் சாப்பிட வரச் சொல்லி வருந்தி நிற்பாள்...

"என்னடா?" கமலக்கண்ணன் கவலையுடன் கேட்டார்.

க்ரிஷ் கவனமாகச் சொன்னான். "அம்மா சொல்றபடி இந்தக் கல்யாணத்துல ரொம்ப அவசரப்படறது வேண்டாம்னு தோணுதுப்பா"

"ஏண்டா?"

"அந்தப் பொண்ணு கிட்ட நம்ம குடும்பம் நெருங்கிப் பழகி நல்லாத் தெரிஞ்சுகிட்டதற்கப்புறம் கல்யாணம் பத்தி பேசறது தான் நல்லதுன்னு தோணுதுப்பா. அவசரத்துல நாம தப்பு செய்துடக்கூடாதுன்னு நினைக்கிறேன். அதை அம்மா கிட்ட லேசா சொல்லிப் பார்த்தேன். சொன்னதுக்கு என்னைத் திட்டறாங்க. உதய் கிட்ட சொல்லி, அவன் கிட்ட சொல்லச் சொன்னாலும் அவனுக்கும் திட்டு தான் விழும்..."

கமலக்கண்ணன் சிரித்துக் கொண்டே சொன்னார். "எனக்கும் அது தாண்டா நிலைமை"

"இல்லை நீங்க உங்க கருத்தா சொல்லாமல் வேற விதமா சொன்னா அம்மா மறுக்க மாட்டாங்க. ஆனா அதை நாங்க சொன்னால் எடுபடாது..." என்று சொல்லி விட்டு மெல்ல க்ரிஷ் தன் யோசனையைச் சொன்னான். சொல்லி விட்டு "விஷயம் நம்ம ரெண்டு பேருக்குள்ளயே இருக்கட்டும்" என்றும் சொல்லி நின்ற இளைய மகனை கமலக்கண்ணன் புன்னகையோடு பார்த்துத் தலையசைத்தார்.

அவருக்கும் திருமண விஷயங்களில் தேவையில்லாத அவசரம் பிடிக்கவில்லை. எல்லோருக்கும் சரி என்றால் எனக்கும் சரி என்ற மனோபாவத்திலேயே மனைவி சொன்னதற்குத் தலை அசைத்திருந்தார். ஆனால் அனாவசியமாக எந்த விஷயத்திலும் தலையிடாத இளையமகன், நியாயமாகவும், யோசனையுடனும், பொறுப்புடனும் மட்டுமே நடந்து கொண்டிருக்கும் இளைய மகன் எச்சரிக்கை உணர்வோடு சொல்கிறான் என்பதோடு பத்மாவதியைச் சமாளிக்க வழியும் சொல்லிக் கொடுத்திருக்கிறான். அப்படியே செய்வது நல்லதென்று அவருக்குத் தோன்றியது.

எர்னெஸ்டோ வாங் வேயிடம் பேச ஆரம்பிப்பதற்குச் சற்று முன் தான் அவரைக் காண இம்மானுவல் வந்திருந்தான். உளவுத்துறை தலைவனான இம்மானுவல் பெரும்பாலும் தன் வழக்கமான தோற்றத்தில் அவரைச் சந்திப்பதில்லை. ஏதாவது வேடத்தில் அவரைச் சந்தித்துப் பேசுவதையே வழக்கமாகக் கொண்டிருந்தான். இல்லுமினாட்டியின் உளவுத்துறைத் தலைவன் முக்கியமான தகவல்களுடன் இல்லுமினாட்டி தலைவரைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருக்கிறான் என்ற தகவல் கூட உதவியாளன், மற்ற பணியாட்கள் மூலமாக வெளியே கசிவதை அவன் விரும்பவில்லை. அன்று அவன் எர்னெஸ்டொவின் வயதான நண்பர் ஒருவர் வேடத்தில் வந்து பேசிக் கொண்டிருந்தான்.

வாங் வேயிடம் பேசி முடித்து விட்டு எர்னெஸ்டோ இம்மானுவலிடம் கேட்டார். "வாங் வே பற்றிய உன் அபிப்பிராயம் என்ன?"

இம்மானுவல் உடனடியாகச் சொன்னான். "மதில் மேல் பூனை. எப்போதும் எப்படியும் தாவலாம்."

இது வரை எந்த அபிப்பிராயத்தைச் சொல்லவும் இம்மானுவல் சிறிது நேரமாவது யோசித்ததாய் எர்னெஸ்டோவுக்கு நினைவில்லை. கேட்டவுடன் பதில் உடனடியாக வரும். அந்தப் பதில் மிகச்சரியாகவும், தெளிவாகவும் இருக்கும்.

எர்னெஸ்டோ ஒன்றும் சொல்லவில்லை. வாங் வே மட்டுமல்ல. பெரும்பாலான மனிதர்கள் சந்தர்ப்பவாதிகளே. அவரவர் லாப நஷ்டங்களைக் கணக்கிட்டே அவர்கள் ஒவ்வொரு விஷயத்திலும் நடந்து கொள்வார்கள். நிலையான கொள்கைகள், மதிப்பீடுகளின்படி நடப்பவர்கள் மிக அபூர்வமே!

"புதிதாக என்ன செய்தி இம்மானுவல்"

"க்ரிஷின் அண்ணன் ஒரு பெண்ணைக் காதலிக்கிறான், அவளை அவன் திருமணம் செய்து கொள்ளக்கூடும் என்ற தகவல் வந்தது. மும்பையிலிருந்து வந்த புதிய பெண் என்று சொன்னதால் அந்தப் பெண்ணைப் பற்றி விசாரித்துச் சொல்ல ஏற்பாடு செய்திருக்கிறேன்."

எர்னெஸ்டோ தலையசைத்தார். "அப்புறம்?"

இம்மானுவல் சொன்னான். "எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்தால் ஆரகிள் சொன்னது, சொல்லாதது எல்லாமே இமயமலையின் தெற்குப் பக்கத்திலிருந்து தான் அமைகிறது கவனித்தீர்களா?"

எர்னெஸ்டோ கேட்டார். "என்ன சொல்கிறாய்?"

இம்மானுவல் சொன்னான். "நமக்குப் பிரச்சினையான விஸ்வம் இமயமலையின் தெற்கில் இருக்கும் இந்தியாவிலிருந்து வந்தான். அடுத்தது தீர்வு என்று நாம் நினைத்த க்ரிஷும் இந்தியாவிலிருந்து தான் வந்திருக்கிறான். விஸ்வம் இறந்து இன்னொரு உடலுக்குப் போன போதை மனிதன் டேனியலும் இந்தியாக்காரன் தான். இந்தியாவில் கேரளாக்காரன். அவன் ஐந்து வருடங்களுக்கு முன் தான் வேலை விஷயமாக ஜெர்மனி வந்து சேர்ந்தவன். ஆக விஸ்வம் போய்ச் சேர்ந்த உடம்பும் இந்தியனுடையது தான். இப்போது ஆபத்திலிருந்து தற்காத்துக் கொள்ள நாம் வரவழைத்திருக்கும் அமானுஷ்யன் அக்ஷயும் இந்தியா தான். எல்லாமே எப்படி இந்தியாவையே கைகாட்டுகிறது என்று இன்று காலை தான் வியந்தேன்..."

எர்னெஸ்டோவும் அப்போது தான் அந்த ஒருமைப்பாட்டைக் கவனித்தார். சுவாரசியத்துடன் தலையசைத்து விட்டுக் கேட்டார். "அப்படியானால் விஸ்வத்தின் கூட்டாளி? அவன் பற்றி ஏதாவது புதிய தகவல் கண்டுபிடித்திருக்கிறாயா?"

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, September 24, 2020

இல்லுமினாட்டி 68

விஸ்வத்தின் கூட்டாளி பற்றிப் புதிய தகவல் ஏதாவது

கண்டுபிடித்திருக்கிறாயா என்று எர்னெஸ்டோ கேட்டதற்கு இம்மானுவல் நேரடியாகப் பதில் எதையும் சொல்லாமல் அவன் கொண்டு வந்திருந்த அந்த ரகசிய ஃபைலை அவரிடம் நீட்டினான். அவருக்கு அத்தனையும் படித்துப் புரிந்து கொள்ள நேரமும் இருக்கவில்லை, ஆர்வமும் இருக்கவில்லை. அவன் விஸ்வேஸ்வரய்யாவிடம் சில தகவல்களைக் கேட்டுச் சொல்லும்படி அவரிடம் சொல்லியிருந்ததற்குக் கூட அவர் விஸ்வேஸ்வரய்யாவிடம் பேசி அவர் கண்டுபிடிக்கும் கருத்துக்களை இம்மானுவலுக்கே அனுப்பி வைக்கச் சொல்லியிருந்தார்.

அதனால் அதைப் படிக்காமல் நீயே சொல் என்று அவர் வாய் விட்டுச் சொல்வதற்கு முன் அவன் விவரமாக ஃபைலைத் திறந்து அந்தப் பக்கங்களில் அவன் அடிக்கோடிட்ட இடங்களை மட்டும் படிக்கும்படி சொல்லி முதல் பக்கத்தைப் பிரித்து அவரிடம் அந்த இடத்தில் விரலையும் வைத்துக் காட்டினான். எர்னெஸ்டோவால் புன்னகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. புன்னகைத்தபடியே அந்தப் பக்கத்திலிருந்து அவன் கோடிட்ட இடங்களை மட்டும் படிக்க ஆரம்பித்தார். சுமார் முக்கால் மணி நேரம் படித்து விட்டுத் திகைப்புடன் அவனை அவர் பார்த்தார். விஸ்வத்தின் கூட்டாளி மனிதன் அல்ல என்ற அவன் கருத்தை ஆமோதிக்கிறாற் போல நிறைய தகவல்களைச் சேகரித்திருந்த இம்மானுவல் அவரைப் பார்த்துப் புன்னகைத்தான்.

எர்னெஸ்டோ சொன்னார். "ஒரு உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் நான் ஆரம்பத்தில் இல்லுமினாட்டிக்கு அழிவு வரும் என்பதை நம்பவில்லை. காரணம் நாம் அதிகாரத்தின் உச்சத்தில் இருக்கிறோம். நமக்கும் மீறி எதுவும் நடக்க முடியும் என்று நம்ப எனக்குக் கஷ்டமாய் இருந்தது. இப்போது பிரச்னைகளும் சரி, வரும் ஆள்களும் சரி எந்தெந்த மாதிரி இருக்கிறார்கள் என்று பார்த்தால் ஆரகிள் சொன்னதன் அர்த்தம் விளங்க ஆரம்பிக்கிறது. எதுவும் நம் சக்தியாலோ, அதிகாரத்தாலோ சரி செய்ய முடிந்ததாக இல்லை. அதனால் தான் சிக்கலை உணர்கிறோம். விஸ்வமே பெருங்குழப்பத்தைத் தருகிறான் என்றால் இந்த மனிதனல்லாத கூட்டாளி இன்னும் அவனைக் காட்டிலும் பத்து மடங்கு குழப்பம் தருபவனாக இருக்கிறான்.... எனக்கு ஒரு சந்தேகம். விஸ்வம் இன்னேரம் அந்தக் கூட்டாளி பற்றித் தெளிவாக எல்லாவற்றையும் தெரிந்து வைத்திருப்பானா? அந்தக் கூட்டாளி தன்னைப் பற்றிச் சொல்லியிருப்பானா?"

"தெரியவில்லை..."

"எனக்கு விஸ்வத்தின் சக்திகளே சரியாகப் பிடிபடவில்லை. அதோடு இந்தக் கூட்டாளி சக்திகளும் சேர்ந்து குழப்புகின்றன."

இம்மானுவல் சொன்னான். "நான் ஜான் ஸ்மித்திடம் ஒரு நாள் முழுவதும் பேசி விஸ்வத்தின் சக்திகள் பற்றி விவாதித்திருக்கிறேன். அந்தச் சக்திகளின் பயன்பாடு பழைய உடலில் இருந்ததற்கும், டேனியல் உடலில் வந்த பின் இருப்பதற்கும் என்ன வித்தியாசம் இருக்கக்கூடும், அவன் தன் சக்திகளை எப்படிப் பயன்படுத்திக் கொள்கிறான், அதனால் உடலில் ஏற்படும் மாற்றங்கள் என்னென்ன என்பதை எல்லாம் அவருடன் பேசித் தெளிவான முடிவுக்கு வந்திருக்கிறேன்...."

எர்னெஸ்டோ நிமிர்ந்து உட்கார்ந்தார். "அப்படியானால் ஃபைல் எதையும் நீட்டாமல் எனக்குப் புரிகிற மாதிரி நீயே சொல் பார்ப்போம்"

இம்மானுவல் புன்னகைத்து விட்டுச் சொன்னான். "இதை நான் புரிந்து கொண்டபடி சொல்கிறேன். இந்த அபூர்வ சக்திகளை அவன் கற்றுக் கொண்டு அதில் அவன் ஆளுமை அடைந்தபின் அவை ஆழ்மனதிலும் அவன் மூளையின் பகுதிகளிலும் ப்ரோகிராம்களாக மாறித் தங்கி விடும். அவன் எப்போது வேண்டுமானாலும், எதை வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் அவன் பயன்படுத்துவதற்கு நரம்பு மண்டலத்தின் சக்தி தேவைப்படுகின்றது. அந்த நரம்பு மண்டலச் சக்தியைக் குவித்தே அவன் அந்த அபூர்வ சக்திகளைப் பிரயோகப்படுத்த முடியும். இது எந்த உடலில் இருந்தாலும் ஒரே விதி தான். விஸ்வத்தின் பழைய உடலில் அவனுடைய உயர்வான பழக்க வழக்கங்களால் அவன் நரம்பு மண்டல சக்தி 100 சதவீதம் இருந்தது. அப்போதும் அவன் அபூர்வ சக்திகளைப் பிரயோகப்படுத்திய பின் அவன் நரம்பு மண்டலச் சக்தி குறையும். அவை குறைவது பிரயோகப்படுத்தும் அபூர்வ சக்திகளுக்குத் தேவையான அளவு இருக்கும். சில அபூர்வ சக்திகள் குறைந்த அளவு நரம்பு மண்டலச் சக்தியைத் தான் எடுத்துக் கொள்ளும். சில அபூர்வ சக்திகள் நிறைய நரம்பு மண்டலச் சக்தியை எடுத்துக் கொள்ளும். அப்படிக் குறையும் நரம்பு மண்டலச் சக்தியை விஸ்வம் பழையபடி பயிற்சிகள் செய்து நிறைவாக அவ்வப்போது வைத்துக் கொள்வான். அது விஸ்வத்தின் பழைய உடலில் ஒழுங்கான முறையில் நடந்து கொண்டிருந்தது."

"இப்போது கற்ற அபூர்வ சக்திகளை விஸ்வம் பழைய உடம்பில் இருந்து புதிய உடம்பின் மூளையில் ப்ரோகிராம்களாக டவுன்லோடு செய்து ஏற்றிக் கொண்டிருக்கிறான். ஆனால் அபூர்வசக்தி ப்ரோகிராம்களை டவுன்லோடு செய்த மாதிரி நரம்பு மண்டல சக்தியை யாரும் டவுன்லோடு செய்து கொள்ள முடியாது. அது ஒவ்வொரு உடலோடு இணைக்கப்பட்டிருக்கும் விஷயம். இப்போது விஸ்வம் சந்திக்கும் பிரச்சினை அந்த நரம்பு மண்டல சக்தி தான். போதையில் உடம்பு மிக மோசமாக இழப்பது நரம்பு மண்டல சக்தியைத் தான். அந்த மாதிரி பலவீனமான உடம்பில் வந்து சேர்ந்திருக்கும் விஸ்வம் அந்த நரம்பு மண்டல சக்தியை அதிகரிக்கும் பயிற்சியில் முழுமூச்சோடு இறங்கியிருக்கிறான். அவனைத் தவிர வேறு யாராக இருந்தாலும் அந்த வேலையை அந்த உடம்பில் யோசித்துக் கூடப் பார்க்க முடியாது. போதை உடம்பு கண்டிப்பாக அந்த முயற்சிகளை, கட்டுப்பாட்டை எல்லாம் விரும்பாது. சீரழிந்து போயிருக்கும் அந்த உடல் எல்லா முயற்சிகளையும் வெறுத்துத் தகராறு செய்யும். உடம்பு வலிக்கும். என்னென்னவோ வழியில் எல்லா உறுப்புகளும் தகராறு செய்யும். மறுபடி போதையையே எதிர்பார்க்கும். விரும்பும். ஆனால் மன உறுதிக்கும், கட்டுப்பாட்டிற்கும் பெயர் போன விஸ்வம் அதை எல்லாம் எதிர்த்துப் போராடி அந்த நரம்பு மண்டல சக்தியை இப்போது வளர்த்துக் கொண்டிருப்பான். மற்றவர்களாக இருந்தால் கண்டிப்பாக உடம்பு தாக்குப்பிடிக்க மருந்துகள் சாப்பிட்டுத் தான் தாக்குப்பிடித்திருக்க முடியும். அதனால் நாங்கள் அது போன்ற மருந்துகளை வாங்கும் ஆட்கள் பற்றிய விவரங்கள் தரும்படி கூட எல்லா மருந்துக் கடைகளுக்கும் தெரிவித்திருந்தோம். ஆனால் விஸ்வம் அந்த மருந்துகளை எல்லாம் வாங்கவில்லை..."

"இப்போது விஸ்வம் எந்த தன் அபூர்வ சக்தியைப் பயன்படுத்தினாலும் அதில் நரம்பு மண்டல சக்தியை அதற்குத் தகுந்தாற்போல் இழக்க வேண்டியிருக்கும். ஏற்கெனவே மிக பலவீனமாக இருந்து அவன் சிறிது சிறிதாக சேமித்து வளர்த்துக் கொண்டு வரும் நரம்பு மண்டல சக்தியை, அனாவசியமாக எந்த அபூர்வ சக்தியைப் பிரயோகித்தும் அவன் குறைத்துக் கொள்ளும் நிலையில் இல்லை. ஜான் ஸ்மித் அவன் ஓரளவு நன்றாக நரம்பு மண்டல சக்தியை வளர்த்துக் கொண்டு விட குறைந்த பட்சம் ஆறுமாதங்களாவது தேவைப்படும் என்கிறார். அது வரை அவன் நரம்பு மண்டல சக்தியை விரயம் ஆக்காமல் கவனமாகச் சேமித்து வருவான் என்று எதிர்பார்க்கிறார். அது வரை அதிமுக்கியம் என்று அவன் நினைத்தால் ஒழிய அவன் முன்பு போல் நினைத்தவுடன் எந்த அபூர்வ சக்தியையும் அனாவசியமாக உடனே உபயோகிக்க மாட்டான்..."

எர்னெஸ்டோவுக்கு இப்போது தான் விஸ்வத்திடம் இருக்கும் அபூர்வ சக்திகள், அதைப் பிரயோகிப்பதில் இருக்கும் நரம்பு மண்டல சக்தியின் பங்கு புரிந்தது. இந்த நேரத்தில் அமானுஷ்யன் நினைவுக்கு வர அவர் கேட்டார். "அந்த அமானுஷ்யனின் நரம்பு மண்டல சக்தி எல்லாம் எந்த அளவில் இருக்கும்."

இம்மானுவல் சொன்னான். "அவன் அவசரப்பட்டோ, பதட்டப்பட்டோ, பலவீனமாகியோ யாரும் பார்த்ததேயில்லை என்று சொல்கிறார்கள். எந்தச் சமயத்திலும், எந்தச் சூழ்நிலையிலும் அவன் அமைதியுடன் தயார்நிலையில் தான் இருப்பானாம்..."

எர்னெஸ்டோ பெருமூச்சு விட்டார். "என்ன மனிதர்களிவர்கள்?"

மறு நாள் மாலை கமலக்கண்ணன் வீட்டுக்கு வந்தவுடன் பத்மாவதியை அழைத்துச் சொன்னார். "நான் நாமக்கல்லில் இருக்கிற ஜோதிடர் நாராயணசாமி கிட்ட போன் பண்ணிப் பேசினேன். நம்ம பசங்க கல்யாணத்துக்கு சீக்கிரம் ரெண்டு முகூர்த்தம் அல்லது ஒரே முகூர்த்தமானாலும் பரவாயில்லை, பார்த்துச் சொல்லுங்கள்னேன்..."

'மழை தான் வரும். மனுஷர் முதல் தடவையா சொன்னவுடனே போய் ஜோசியர் கிட்ட பேசியிருக்கார்' என்று பத்மாவதி நினைத்துக் கொண்டாள். அந்த ஜோதிடரைப் பற்றிப் பல முறை கமலக்கண்ணன் சொல்லிக் கேட்டிருக்கிறாள். சமீப காலங்களில் அவர் எதையும் அந்த ஜோதிடரைக் கேட்டு தான் செய்கிறார்...

பத்மாவதி ஆவலுடன் கேட்டாள். "என்ன சொன்னார்?"

"பெரியவன் ஜாதகத்தில் ஏதோ தோஷம் இருக்காம். ரெண்டு மாசத்துக்குள்ள கல்யாணம் செய்தால் அவனுக்கோ அல்லது அந்தப் பொண்ணுக்கோ ஏதாவது கண்டம் வர வாய்ப்பு இருக்காம். அதனால் ரெண்டு மாசம் வரைக்கும் அது சம்பந்தமான பேச்சு வார்த்தை கூட வேண்டாம் என்கிறார்"

பத்மாவதி அதிர்ந்து போனாள். கண்களை மூடிக் கடவுளை வணங்கி இரண்டு கன்னங்களிலும் தட்டிக் கொண்டாள். "ஐயோ. அப்படின்னா இந்த விஷப்பரிட்சை வேண்டாம். இத்தனை காலம் காத்தாச்சு. ரெண்டு மாசம் காக்கிறது பெரிய விஷயமா? என்ன சொல்றீங்க?"

கமலக்கண்ணன் தலையசைத்தார். பத்மாவதி உடனே போய் இரண்டு மகன்களிடமும் தகவலைச் சொன்னாள். பின் உதயிடம் சொன்னாள். "இனி இந்த விஷயத்தை எல்லாம் அந்தப் பொண்ணு கிட்ட சொல்லிகிட்டு இருக்காதே. ஆரம்பத்துலயே என்ன அபசகுனமா இந்த மாதிரி வார்த்தை எல்லாம் கேட்கிறோமேன்னு அவளுக்குத் தோணும். நாமளே அவசரமில்லாமல் இருக்கிற மாதிரி இருந்துக்குவோம்."

உதய் தலையசைத்தான். பத்மாவதி கேட்டாள். "ராத்திரி சாப்பாட்டுக்கு அந்தப் பொண்ணு எத்தனை மணிக்கு வர்றா?"

"ஏழு மணிக்கு வர்றதா சொல்லியிருக்கா"

சிந்துவின் வரவுக்காக அவர்கள் எல்லோருமே வேறு வேறு மனநிலையில் காத்திருந்தார்கள்.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, October 1, 2020

இல்லுமினாட்டி 69

சிந்து அன்றிரவுச் சாப்பாட்டுக்கு உதய் வீட்டுக்குச் செல்ல மனதளவில் தன்னை நன்றாகத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தாள். உதயைப் பொருத்த வரை அவளுக்கு எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை. காதலிக்கிறேன் என்றவனிடம் தயங்கித் தயங்கித் தானும் தன்னை அறியாமல் அவனை விரும்ப ஆரம்பித்திருப்பதாய்ச் சொல்லி அவன் தகுதிக்குத் தான் பொருத்தம் இல்லை என்பதை அடிமனதளவில் உணர்வதாய்ச் சொல்லி அவன் மனதில் கூடுதலாக இடம் பிடிக்க அவள் அதிகம் கஷ்டப்பட வேண்டியிருக்கவில்லை. தொடர்ந்து அவளிடம் மணிக்கணக்கில் பேச ஆரம்பித்தவனிடம் அவள் அதிகம் பேச வேண்டியிருக்கவில்லை. அவன் சொன்னதை எல்லாம் அசாத்தியப் பொறுமையுடன் அவள் கேட்டுக் கொள்ள மட்டும் வேண்டி இருந்தது. பேசிய கொஞ்சம் வார்த்தைகளையும் உணர்ச்சி பூர்வமாகப் பேசுவதற்கு அவளிடம் இயற்கையாக எந்த உணர்வும் இருக்கவில்லை. சில பிரபல காதல் கதைகள், நாவல்களைப் படித்து அதிலிருந்த வார்த்தைகளையும், உணர்வுகளையும் அப்படியே அவள் பிரதிபலிக்க வேண்டி இருந்தது. அவன் அவளிடம் எந்தக் குறைபாட்டையும், கண்டுபிடிக்கவில்லை. ஆனால் அவன் குடும்பம் அப்படி அல்ல. அத்தனை பேரும் அவள் மீதே கண்ணாய் இருப்பார்கள். அவர்கள் உதய் போல் அவளிடம் மனதைப் பறி கொடுத்தவர்கள் அல்ல என்பதால் கூர்மையாகவே கவனிப்பார்கள். கேள்விகள் கேட்பார்கள். அதனால் அவர்களிடம் அவள் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்...

அவர்கள் அவளிடம் என்னவெல்லாம் கேள்விகள் கேட்கக்கூடும் என்று அவள் ஒரு பெரிய பட்டியலே தயாரித்து அந்தக் கேள்விகளுக்குக் கச்சிதமான பதில்களையும் தயாரித்து வைத்திருந்தாள். கிளம்புவதற்கு முன் அந்தக் கேள்வி-பதில்களையும் ஒரு முறை பார்த்துக் கொண்டு தான் அவள் கிளம்பினாள். உதய் அனுப்பிய காரில் அவள் அங்கே சென்று சேர்ந்த போது மணி ஏழே கால்.

மிக அழகாகவும், கண்ணியமாகவும் அளவான ஒப்பனை செய்து கொண்டு வந்திறங்கிய சிந்து தன் மீது அத்தனை கண்களும் ஊடுருவுவதைப் பார்த்தாள். முக்கியமாய் க்ரிஷின் கண்கள் மிகவும் கூர்மையாக அவள் மீது தங்குவதைக் கவனித்தாள்.

பத்மாவதி தான் அவளைப் பார்த்து மெய் மறந்து நின்றவள். என்ன தான் புகைப்படத்தில் பார்த்தாலும் நேரில் பார்ப்பதற்கு ஈடாவதில்லை. அங்கு சிந்து இறங்கியவுடன் உதய் அருகில் வந்து கைகுலுக்கி வரவேற்றான். ஒவ்வொருவரிடமும் அவளை அறிமுகப்படுத்தினான். கமலக்கண்ணன் குடும்பப் பாங்கான அமைதியான பெண்ணாக அவளைக் கண்டார். அதுவே பெரிய விஷயம், அது போதும் என்பது போல அவர் திருப்தி அடைந்து விட்டார். பத்மாவதி அவளைப் பாசத்துடன் அணைத்துக் கொண்டாள். அது போன்ற நெருக்கங்களைத் தன் வாழ்க்கையில் என்றுமே சந்தித்திராத சிந்து கூச்சத்தில் சிறிது நெளிந்தாலும் அந்த அன்பில் நெகிழ்ந்து போனதாகக் காட்டிக் கொண்டாள்.

உதய் தம்பியைக் கூடுதல் பெருமையுடன் சிந்துவுக்கு அறிமுகம் செய்து வைத்தான். க்ரிஷ் புன்னகையுடன் அவள் கையைக் குலுக்கினான். அவன் முகத்தில் சினேகம் தெரிந்தாலும் அவன் பார்வையின் கூர்மை ஏனோ குறையவில்லை. ஊடுருவிய பார்வையுடன் அவளுடைய மனதில் உள்ளதை எல்லாம் அறிய முற்படுகிற தோரணை அவனிடம் தெரிந்தது.

உதய் ஹரிணியை அறிமுகப்படுத்தி வைத்தான். “இது ஹரிணி. க்ரிஷைக் கல்யாணம் பண்ணிக்கப் போறவள். இப்பவே எங்கள்ல ஒருத்தி”

ஹரிணியும் அவள் கையைக் குலுக்கினாள். அவள் பார்வையிலும் சினேகம் இருந்தாலும் கூடவே புத்திசாலித்தனம் தெரிந்தது. முன்பே நினைத்தது போல இருவரிடமும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று சிந்து தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

உதய் முன்பே பத்மாவதியிடம் வளவளவென்று பேசவோ, கேள்விகள் கேட்கவோ கூடாது என்றும் மாமியார் என்கிற மரியாதையையும் கௌரவத்தையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்றும் எச்சரித்திருந்ததால் கண்கள் விரிய அவர்கள் இரண்டு பேரின் ஜோடிப் பொருத்தத்தை ரசித்துப் பார்ப்பதுடன் நிறுத்திக் கொண்டாள்.

க்ரிஷும், ஹரிணியும் தான் அதிகம் பேசினார்கள். இருவரும் நாகரிகமாக அவள் குடும்பத்தைப் பற்றிப் பேசுவதைத் தவிர்த்தார்கள். அதைப் பேசி அவள் மனதைப் புண்படுத்த வேண்டாம் என்று முன்பே அவர்கள் முடிவு செய்திருந்தார்கள். ஹரிணி கல்லூரி வாழ்க்கை எப்படி இருந்தது, அவள் என்ன படித்தாள் என்றெல்லாம் கேட்க க்ரிஷ் அவளுடைய தோழிகள் பற்றிக் கேட்டான். இடையிடையே அவளிடம் கேட்ட விஷயங்களில் தங்களைப் பற்றியும் அவர்கள் சொல்லிக் கொண்டதால் அது இயல்பாகவும், துருவிக் கேட்பதாய்த் தோன்றாமலும் இருந்தது. ஆனால் கேள்விகளுக்கான பதில்களை சிந்து மிகவும் யோசித்து ஜாக்கிரதையாகச் சொல்ல வேண்டியிருந்தது.

அவள் பதில்களில் புதிர் விலகுவதற்குப் பதிலாக கூடுவது போல க்ரிஷ் உணர்ந்தான். தாய் இறந்து, தந்தையும் அன்னியமான ஒரு குடும்பத்தில் பிறந்து தனிமையாக வளர்ந்தது விதியின் கொடுமையாக இருக்கலாம். ஆனால் அவளுக்கு ஆழமான நட்புகள் கூட இல்லை என்பதை அவள் பதில்கள் மூலம் அறிந்த க்ரிஷுக்கு அது விசித்திரமாக இருந்தது. உறவுகள் வேண்டுமானால் இறைவன் திணித்ததாய் இருக்கலாம். ஆனால் நட்பு எப்போதும் அவரவர் தீர்மானங்களே அல்லவா? எத்தனையோ நல்ல நண்பர்களை இந்தப் பெண் ஏற்படுத்திக் கொண்டிருக்கலாமே. அதை யார் தடுத்தது? ஏன் மிக நெருங்கிய நட்புகள் ஒன்று கூட அவளுக்கு இல்லை?

அவனுடைய சந்தேகங்களை சிந்து உணர்ந்தது போல் இருந்தது. அவள் மெல்லச் சொன்னாள். “குடும்பத்தில் என் அன்பு நிராகரிக்கப்பட்டவுடன் நான் அதிலேயே நொறுங்கிப் போய் விட்டேன். நட்புகளிலும் அப்படி ஆகி விடுமோ என்ற பயம் என்னை தயக்கத்துடன் மற்றவர்களுக்குத் தொலைவிலேயே வைத்தது. யாராவது தோழிகள் நெருங்கி வந்தாலும் என்னால் அவர்களுடன் நெருங்கிப் பழக முடியவில்லை. தனிமையே எனக்குப் பாதுகாப்பு போல் தோன்றி அப்படியே வாழ்ந்து விட்டேன்.... சொல்லப் போனால் வாழ்க்கையில் முதல் முறையாக இப்போது தான் ஒரு வட்டத்திலிருந்து வெளியே வந்திருக்கிறேன்.... அதுவும் இவராக என்னை வரவழைத்திருக்கா விட்டால் நடந்திருப்பது சந்தேகம் தான். இவர் காட்டிய அன்பு, இவர் கொடுத்த தைரியம், நம்பிக்கை....” அதற்கு மேல் பேச முடியாமல் அவள் வாயடைத்துப் போய் அவள் கண்களில் நீரும் நிறைந்த விதத்தில் பத்மாவதியும் உதயும் பதறிப் போனார்கள். சிந்து கண்களைத் துடைத்துக் கொண்டாள். ஹரிணி கண்களில் கூடப் பரிவு தெரிந்தது. ஆனால் க்ரிஷ் முகத்திலிருந்து அவன் என்ன நினைக்கிறான் என்று சிந்துவால் யூகிக்க முடியவில்லை. ஆனால் அவன் அதற்குப் பிறகு கேள்விகள் கேட்பதை நிறுத்திக் கொண்டான்.

பேச்சை மெல்ல ஹரிணி கல்லூரி வாழ்க்கை, கல்லூரி நகைச்சுவை, வித்தியாசமான ஆசிரியர்கள் என்று கொண்டு சென்றாள். அதில் சிந்து இயல்பாகக் கலந்து கொண்டாள். பல சுவாரசியமான நிகழ்வுகளைச் சொன்னாள். பேச்சு அவளைச் சுற்றி வட்டமிடாததால் அவளால் கலகலப்பாகக் கலந்து கொள்ள முடிந்தது. க்ரிஷும், உதயும் கூட பேச்சில் சேர்ந்து கொண்டார்கள். அவர்கள் நான்கு பேரும் பேசிக் கொண்டதை கண்களும் மனதும் நிறைய பத்மாவதி பார்த்துக் கொண்டிருந்தாள். கடவுளே இவர்கள் இப்படியே ஒற்றுமையுடனும், அன்பாகவும் கடைசி வரை இருக்கும்படி அருள் புரியப்பா!

சிந்து திடீரென்று பத்மாவதியைப் பார்த்து உதயிடம் கேட்டாள். “ஏன் அம்மா ஒன்றுமே பேச மாட்டேன்கிறார்கள்?”

உதய் சிரித்துக் கொண்டே சொன்னான். “பேச ஆரம்பித்தால் ஏண்டா இப்படிக் கேட்டோம் என்று நீயே வருத்தப்படுவாய்.”

“ஏண்டா தடியா அப்படிச் சொல்கிறாய்?” என்று பத்மாவதி பொய்க் கோபத்துடன் கேட்க உதய் சிந்துவிடம் “பாரு இது தேவையா?” என்று கேட்க கலகலப்பு தொடங்கியது. தாயைக் கிண்டல் செய்ய உதயுடன் க்ரிஷும் சேர்ந்து கொள்ள பத்மாவதிக்கு ஆதரவாக ஹரிணி பேச ஆரம்பிக்க சிந்துவும் ஹரிணி பக்கம் சேர்ந்து கொண்டாள். பத்மாவதிக்கு மூத்த மருமகளும் தன் பக்கம் சேர்ந்து கொண்டது பரமதிருப்தியை அளித்தது. உற்சாகமாகப் பிள்ளைகளுடன் சண்டை போட்டாள். கமலக்கண்ணன் புன்னகையுடன் இரு தரப்பையும் வேடிக்கை பார்த்தார். அவருக்கும் சிந்துவை மிகவும் பிடித்து விட்டது.

இந்தக் கலகலப்பு சாப்பாட்டு வேளையிலும் தொடர்ந்தது. எல்லோரும் சந்தோஷமாக இருந்தது போல் வெளிப்பார்வைக்குத் தோன்றினாலும் சிந்து மனதளவில் அவர்களிடமிருந்து விலக ஆரம்பித்தாள். இந்தக் கலகலப்பு, குடும்ப சந்தோஷம் பார்க்கையில் அவளுக்குத் தன் வீடு, குடும்பம் நினைவுக்கு வந்தது. இங்கே குழந்தைகளுக்காக உயிரையும் விடத் தயாராய் இருக்கும் தாயைப் பார்க்கிறாள். பொய்யாக மகனைத் தடியா என்று சொல்லி என்ன செய்கிறேன் பார் என்ற தோரணையில் மிரட்டினாலும், அவனும் பதிலுக்குக் கிழவி என்று சொன்னாலும் அந்த பாசத்தின் நெருக்கம் பார்க்கையிலேயே அவளுக்குப் புரிந்தது.

அவளுக்கும் ஒரு தாய் இருந்தாள். சின்னக் குழந்தையாக அவள் இருக்கையிலேயே அவள் தாய் கள்ளக் காதலனுடன் போய் விட்டாள். அவள் குழந்தை மேல் இருந்த அக்கறையை விடக் காதலன் மேல் இருந்த ஆசை தான் அதிகமாகி விட்டது. அப்பா இரண்டாவதாகக் கட்டிக் கொண்டவளும் அவளை ஒரு பொருட்டாக நினைத்ததில்லை. ஒரு நாள் கூட இப்படிச் சந்தோஷமாகச் சேர்ந்து எல்லோரும் சாப்பிட்டதாய் அவளுக்கு நினைவில்லை. படைத்தவன் உண்மையிலேயே பாரபட்சமானவன். ஓரிடத்தில் எல்லாவற்றையும் கொட்டிக் கொடுத்து, இன்னொரு இடத்தில் எதுவும் தராமல் பாரபட்சம் காண்பித்திருக்கிறான்.... படைத்தவன் மேல் இருந்த வெறுப்பு அவன் கொட்டிக் கொடுத்திருந்தவர்கள் மேலும் அவளுக்கு வர ஆரம்பித்தது....

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, October 8, 2020

இல்லுமினாட்டி 70

வெளியே சிரித்துக் கொண்டிருந்தாலும் உள்ளே வெறுப்பைக் கக்கிக் கொண்டிருந்த சிந்து அவளையே க்ரிஷ் கூர்மையாகப் பார்த்துக் கொண்டிருந்ததை உணர்ந்தாள். அவன் அவளுடைய எண்ணங்களைப் படிக்க முயல்வது போலிருந்தது. எச்சரிக்கையுடன் தன் வெறுப்பு எண்ண ஓட்டத்தை நிறுத்தினாள். எப்படி, எதனால் என்று தெரியாவிட்டாலும் விஸ்வத்தின் எதிரி கண்டிப்பாக க்ரிஷாகவே இருக்க வேண்டும் என்று அந்தக் கணத்தில் அவளுக்கு உறுதியாகியது. அவர்களது கலகலப்பான பேச்சு தொடர்ந்தது. அவர்களுடைய அன்னியோன்னியமும், கலகலப்பும் கசந்த போதும் முழுவதுமாக ரசித்து அதில் பங்கு கொள்வது போலக் காட்டிக் கொண்டாள். இரவு ஒன்பது மணிக்கு கடிகாரத்தைப் பார்த்து தனக்கு நேரமாகி விட்டதைச் சொன்னாள். உதயே அவளைத் தன் காரில் அழைத்துச் சென்று விட்டு விட்டு வரக் கிளம்பினான்.

கிளம்பும் போது சிந்து அனைவரையும் கண்கலங்கப் பார்த்து விட்டு "இந்தச் சில மணி நேரங்களை என் வாழ்க்கையில் கண்டிப்பாக மறக்க மாட்டேன். ஒவ்வொரு கணத்தையும் மனதில் பத்திரப்படுத்திக் கொள்வேன்" என்றாள்.

பத்மாவதி சிந்துவைப் பாசத்துடன் அணைத்துக் கொண்டாள். உதய்க்கு சிந்துவும் அவர்களுடன் கலகலவென்று கலந்து கொண்டதில் மிகுந்த சந்தோஷம். அவளை அவன் குடும்பத்தினர் அனைவரும் ஏற்றுக் கொண்டதில் அவனுக்குப் பரம திருப்தி.

காரில் போகும் போது சிந்து தயக்கத்துடன் உதயிடம் கேட்டாள். "என்னை உங்கள் குடும்பத்தில் எல்லோருக்கும் பிடித்திருக்குமா?"

"அதிலென்ன சந்தேகம்?" உதய் கேட்டான்.

சிந்து உடனடியாக எதுவும் சொல்லாமல் பின் மெல்லச் சொன்னாள். "உங்கள் தம்பி ஏதோ யோசனையுடன் என்னைப் பார்த்த மாதிரி இருந்தது. அதனால் தான் கேட்டேன்"

உதய் சிரித்து விட்டான். "என் தம்பிக்கு யோசிக்க ஆயிரம் விஷயம், ஆயிரம் சப்ஜெக்ட் இருக்கும் நம்மிடம் பேசப் பேசவே அவன் அந்த விஷயங்களுக்குப் போய் விடுவான். அவனிடம் ஆரம்பத்திலிருந்தே அந்தப் பிரச்னை உண்டு..."

சிந்து நிம்மதியடைபவள் போலக் காட்டிக் கொண்டாலும் வேண்டுமென்றே சொன்னாள். "நல்ல வேளை அவருக்கு என்னைப் பிடிக்காமல் தான் சந்தேகத்துடன் அவர் அப்படிப் பார்க்கிறாரோ என்று நினைத்து நான் பயந்து விட்டேன்."

அதற்கு அவன் என்ன சொல்கிறான் என்று அவள் கூர்ந்து கவனித்தாள். உதய் மறுபடியும் சிரித்து விட்டுச் சொன்னான். "உலகத்திலேயே அவனால் யாரையும் வெறுக்க முடியது சிந்து. அவனுக்குப் பிடிக்காதவர்கள் என்று கூட யாருமில்லை. மற்றவர்களைப் பற்றித் தவறாக நினைப்பது கூடத் தவறு என்று திடமாக நம்புபவன் அவன். நான் சொன்ன மாதிரி நம்முடன் பேசிக் கொண்டிருக்கையில் திடீரென்று அவனுக்கு ஆராய்ச்சி செய்யும் விஷயம் எதாவது ஞாபகம் வந்திருக்கும். அதை நினைத்துக் கொண்டிருந்திருப்பான்...."

அவள் நிம்மதி காட்டித் தலையசைத்தாள். ஒருவிஷயம் அவளுக்குத் தெளிவாகத் தெரிந்து விட்டது. எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இவனால் இவன் தம்பியைப் பற்றித் தப்பாக நினைக்க முடியாது. இவனுக்கு இவன் தம்பி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவன்..."

உதய் பின் மெல்ல திருமணத்திற்குப் பெற்றோர் அவசரப்பட்டாலும் அப்பாவிற்குத் தெரிந்த நாமக்கல் ஜோதிடர் இரண்டு மாதங்களுக்குள் திருமணம் பற்றிப் பேசினால் இருவரில் ஒருவரின் உயிருக்கு ஆபத்து வந்து விடக்கூடும் என்று எச்சரித்ததால் இரண்டு மாதங்கள் பேச வேண்டாம் என்று வீட்டில் முடிவெடுத்திருக்கிறார்கள் என்றும் தெரிவித்தான்.

சிந்து 'என்னவொரு மூட நம்பிக்கை' என்று உள்ளுக்குள் ஏளனமாகச் சொல்லிக் கொண்டாலும் அதை மறைத்துக் கொண்டு "பெரியவர்கள் என்ன முடிவெடுத்தாலும் அது நம் நல்லதற்காகத் தானாக இருக்கும்" என்று சொன்னாள்.

அவள் மனம் மறுபடி க்ரிஷ் மேல் நிலைத்தது. அவள் மிகவும் கவனமாகத் தான் அவனைக் கையாள வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள். அவனும் அவளிடம் எச்சரிக்கையாகத் தான் இருப்பான் போலிருக்கிறது. ஒருவேளை அவனா, அவளா என்ற நிலைமை வந்தால் உதய் யார் பக்கம் இருப்பான், உதயை எந்த அளவு மாற்ற முடியும் என்ற கேள்விகள் அவள் மனதில் எழுந்தன. விடை கிடைக்கவில்லை. ஆனால் ஒருவன் மனதில் ஒரு உறுதியான இடம் பிடித்து விட்டால் பிறகு ஒரு பெண்ணால் அவன் மூலமாக முடியாதது எதுவும் இருக்க முடியாது என்று நம்பினாள்.

விஸ்வம் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான். அவனையே பார்த்தபடி ஜிப்ஸி சற்று தள்ளி அமர்ந்திருந்தான். சரியாக மூன்று மணி நேரம் தான் விஸ்வம் உறங்குவான். பிறகு தானாக விழித்துக் கொள்வான். பின் ப்ராணாயாமம், தியானம், மற்ற பயிற்சிகள் என்று அவனுடைய தினசரி வாழ்க்கை ஒரு கோடு போட்டது போல அதன் வழியே போகும். ஆரம்பத்தில் அவன் முயற்சிகளுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துப் போராடிய டேனியலின் உடல் இப்போது அடங்கி அவன் சொன்னபடி கேட்க ஆரம்பித்திருக்கிறது. அளவுக்கு மீறி நைந்து போயிருந்த நரம்பு மண்டலம் ஓரளவு பலம் பெற ஆரம்பித்திருக்கிறது. அந்தச் சக்தியை விஸ்வம் பார்த்துப் பார்த்து, யோசித்து யோசித்துச் செலவு செய்கிறான்...

"என்ன பார்க்கிறாய்?" விஸ்வம் திடீரென்று கண்விழித்துக் கேட்டான்.

"நீ எழுந்திருக்கும் நேரம் ஆகி விட்டதே என்று யோசித்துக் கொண்டிருந்தேன். நீ மிகச்சரியாக எழுந்திருந்து விட்டாய்" என்று ஜிப்ஸி சொன்னான்.

அவன் யோசித்ததைத் தான் சொல்கிறானா இல்லை வேறு எதையாவது சொல்கிறானா என்று அறிந்து கொள்ளும் நிலைமையில் விஸ்வம் இல்லை. கண்டுபிடிக்க அவன் சேமித்திருக்கும் சக்தியைச் சற்று அதிகமாகவே செலவு செய்ய வேண்டும். அப்படிச் செய்து பார்த்தாலும் அவனால் கண்டுபிடிக்க முடியுமா, முன்பு போல பனிமூட்டமும், ஒரு நட்சத்திரமும் தான் தெரியுமா என்று தெரியவில்லை. கண்டுபிடித்தும் அவன் செய்யப் போவது இப்போதைக்கு ஒன்றுமில்லை.

விஸ்வம் தன் சக்தியில் சிறு பகுதியைச் சில நாட்களுக்கு முன் தான் உதய்க்காகச் செலவு செய்தான். சிந்துவை அனுப்புவது என்று தீர்மானித்தவுடன் அவளைப் பார்த்தவுடன் அவள் மீது உதய்க்கு அதிக ஈர்ப்பு ஏற்பட அவன் உதயை எண்ணி அவனை ஆக்கிரமித்து ஒரு வசிய மண்டலத்தை அவன் மீது ஏற்படுத்தியிருந்தான். இன்னேரம் சிந்து அவன் மனதில் கண்டிப்பாக இடம் பிடித்திருப்பாள். மீதியை உதயின் வயதும், சிந்துவின் சாமர்த்தியமும் பார்த்துக் கொள்ளும்...

இந்த முயற்சியில் இழந்த சக்திக்கு இரட்டிப்பு சக்தியைச் சேர்த்துக் கொள்ளாமல் விஸ்வம் அடுத்த முயற்சி எதிலும் ஈடுபட மாட்டான். இரண்டு மூன்று நாட்களில் அந்தச் சக்தி இலக்கை எட்டி விடுவான். அடுத்த முயற்சிக்கு இரண்டு விஷயங்கள் இருக்கின்றன. ஒன்று மனோகர். அவன் நிலைமை என்ன என்று பார்க்க வேண்டும். இன்னொன்று அமானுஷ்யன் அக்ஷய். அவனை அவன் உணர்வு பூர்வமாக அறிய வேண்டும்.

இது வரை அக்ஷயைப் பார்த்திருக்காததால் அவனை அறிவது சுலபமல்ல. ஒரு முறையாவது நேரில் பார்த்து மனதில் பதிந்திருக்கும் மனிதர்களைச் சக்தியால் ஆக்கிரமிப்பது சுலபம். கண்ணால் பார்த்திராத மனிதர்களை ஆக்கிரமிப்பது சுலபமல்ல. அக்ஷய் இன்னும் சில மணி நேரங்களில் ம்யூனிக் வந்து சேர்கிறான்.

விஸ்வம் ஜிப்ஸியிடம் கேட்டான். "அக்ஷய் வந்தால் அவன் என்னேரமும் எர்னெஸ்டோ அருகிலேயே இருப்பானா?"

"தெரியவில்லை. பெரும்பாலும் அவர் வெளியே எங்காவது போகும் போது தான் அவன் அருகில் இருப்பது அவசியம் என்று நினைப்பார்கள் என்று நம்புகிறேன்"

"அப்படி அவன் கூடவே இருந்தால் அவர் யார் யாரை எல்லாம் சந்திக்கிறார், என்னவெல்லாம் பேசுகிறார் என்பது அக்ஷய்க்குத் தெரிந்து விடுமே. இல்லுமினாட்டி போன்ற ஒரு ரகசிய இயக்கத்தில் உறுப்பினரோ, ஊழியனோ அல்லாத ஒருவனை அப்படித் தெரிந்து கொள்ள எப்படி அனுமதிக்கிறார்கள்?"

"தீர்மானிப்பது இல்லுமினாட்டி அல்ல. எர்னெஸ்டோ தான். எர்னென்ஸ்டோ அமானுஷ்யன் என்றைக்குமே பிரச்சினை ஆகலாம் என்று சந்தேகப் படவில்லை போல் இருக்கிறது. அல்லது அவனுக்கும் தெரிய வேண்டாம் என்று அவர் நினைக்கிற அதிரகசிய விஷயங்களை மட்டும் அவன் இல்லாத போது செய்து கொள்வார்களோ என்னவோ?"

"அமானுஷ்யனின் ஒரு புகைப்படம் இருந்தால் எனக்குக் கொடு. நான் பார்க்க வேண்டும்"

ஜிப்ஸி யோசிக்காமல் சட்டைப் பையிலிருந்து ஒரு புகைப்படம் எடுத்து விஸ்வத்திடம் நீட்டினான்.

விஸ்வம் ஆர்வத்துடன் அந்தப் புகைப்படத்தை வாங்கிப் பார்த்தான். ஒரு புத்த பிக்கு விமான நிலையத்தில் நடந்து வருவது போன்ற புகைப்படம் அது. அந்தப் பிக்கு அமைதியின் அவதாரமாகத் தெரிந்தார். தலைகுனிந்திருந்தார்.

"அவன் என்ன புத்த பிக்குவா?"

"இல்லை. இது அவனுடைய ஒரு வேடம். லாஸா விமான நிலையத்தில் சீன உளவுத்துறைக் காமிராவில் விழுந்த படம் அது. ஒரு வேடம் போட்டால் அந்த வேடமாகவே மாறிவிடுவான் என்கிறார்கள்..."

உண்மை தான். அதில் ஒரு அமைதியான புத்தபிக்குவாகவே அவன் தெரிந்தான். விஸ்வத்திற்கு அவனுடைய கண்களை அந்தப் புகைப்படத்தில் பார்க்க முடியாதது ஒரு குறையாகத் தோன்றியது. அவனுடைய கண்கள் மூலமாக அவனை முழுமையாக அறிய வேண்டும். பின் அவனைக் கையாள வேண்டும்.... வெல்ல வேண்டும்....

விஸ்வம் சொன்னான். "அவன் ம்யூனிக் விமானநிலையத்தில் வந்திறங்கும் போது அவனை ஒரு புகைப்படம் எடுத்துக் கொடுக்க முடியுமா நண்பா. அவனுடைய இப்போதைய கோலத்தைப் பார்க்க வேண்டும்..."

ஒருசில வினாடிகள் தயங்கிய ஜிப்ஸி பின் சம்மதித்தான்.

(தொடரும்)

என்.கணேசன்

இல்லுமினாட்டி 71

அக்ஷய் பயணம் செய்த விமானம் ம்யூனிக்கை நெருங்கிக் கொண்டிருந்தது. அவன் குடும்பத்தினரிடம் இருந்து விடைபெறுவது இந்த முறையும் சுலபமாக இருக்கவில்லை. ஏன் திரும்பத் திரும்ப சம்பந்தமில்லாத பிரச்னைகளுக்குள் புகுந்து கொள்கிறீர்கள் என்ற கேள்வியைத் தான் அவனுடைய மூத்தமகனும், அண்ணனும் கேட்டார்கள். இந்த முறை தனக்கு அபாயத்திற்கான வாய்ப்பு இல்லை என்றும் ஒருவருக்குப் பாதுகாவலராக இருந்தால் போதும் என்றும் சொல்லி விட்டுக் கிளம்பியிருக்கிறான். ஆனால் அதிலும் எத்தனையோ அபாயம் இருக்கிறது என்று அறிந்திருந்த அவர்கள் அவன் ஒன்றைத் தீர்மானித்த பிறகு அவனை மாற்ற முடியாது என்று புரிந்து கொண்டு இது போன்ற காரியத்திற்குப் போவது இதுவே கடைசி என்ற சத்தியத்தை வாங்கிக் கொண்டு தான் அனுப்பி வைத்தார்கள். இல்லுமினாட்டி அவன் குடும்பத்திற்கு முழுப் பாதுகாப்பு ஏற்பாட்டைச் செய்திருந்தது. அவன் குடும்பம் இருக்கும் தெருவில் கூட அதன் காவலர்கள் அறியாமல் அன்னியர்கள் யாரும் உள்ளே நுழைந்து விட முடியாது என்ற ஏற்பாடு செய்திருப்பதைப் பார்த்துத் திருப்தி அடைந்த பின் தான் அக்ஷய் அங்கிருந்து கிளம்பியிருக்கிறான்... ஆனால் கடைசி வரை இல்லுமினாட்டி என்ற பெயரை அந்தக் காவலர்களும் உச்சரிக்கவில்லை. அவனுக்கு டிக்கெட் அனுப்பியது முதல் மற்ற பயண ஏற்பாடுகள் பேசியது வரை செய்த இம்மானுவலும் அந்த ஒரு வார்த்தையைச் சொல்லவில்லை.

விமானம் ம்யூனிக் விமானநிலையத்தில் தரையிறங்கப் போவதாய் அறிவிப்பு கேட்டவுடன் அக்ஷய் சோம்பல் முறித்தான். இந்த விமானப் பயணத்தில் அவனுக்கு உட்கார்ந்தே அலுத்து விட்டது. விமானத்தில் உடன் பயணம் செய்த பயணிகளில் சந்தேகத்திற்கு இடமான நபர் யாராவது இருக்கிறார்களா, விமான ஊழியர்களில் அப்படி யாராவது இருக்கிறார்களா என்று ஆரம்பத்தில் இருந்தே கூர்ந்து கவனித்திருந்தான். யாரும் இருப்பதாய்த் தெரியவில்லை...

அவன் விமானத்தில் இருந்து இறங்கி பார்வையாளர்கள் இருக்கும் ஹாலுக்கு நடந்து வந்த போது பலர் அலைபேசியில் அவர்கள் வரவேற்க வந்த நபர்களைப் புகைப்படங்கள் எடுத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது தான் அந்த ஜனக்கூட்டத்திற்கு நடுவில் அவனை மையமாக வைத்துப் புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்த ஒரு குட்டை மனிதனை அவன் கவனித்தான். ஆரம்பத்தில் அவன் உயர்த்திப் பிடித்திருந்த கைகளும், அலைபேசியும் தான் தெரிந்தன. பின் தான் முன்னால் நின்றிருந்த ஒரு இளைஞனைத் தாண்டி சிறிது எதிரில் வந்தான். அக்ஷயை அவன் இரண்டு படங்கள் எடுத்தான்.

அக்ஷயின் விழிகள் கூர்மையாயின. பதட்டமில்லாமல், அதிர்ச்சியில்லாமல் அந்த ஆளை அவன் கூர்ந்து பார்க்கையில் அந்த ஆளும் அவனைப் பார்த்தான். அவன் சற்று முன் தாண்டி வந்திருந்த இளைஞன் இப்போது அவனுக்கு முன்னால் வர அந்தக் குட்டை மனிதன் வசதியாக மறைந்தான். சற்று குனிந்தபடியே அவன் மற்ற பார்வையாளர்கள் நடுவில் நகர்ந்திருக்க வேண்டும் என்று அக்ஷய் நினைத்தான். சிறிது நேரத்தில் அவசர அவசரமாக வெளியே இருந்து ஒரு உயரமான ஆள் வருவதை அக்ஷய் கவனித்தான். உள்ளே நுழைந்த கணம் முதல் அவன் கண்கள் அக்ஷய் மீதே பதிந்திருந்த விதத்தை வைத்து இவன் தான் சில நாட்களாகப் போனில் தொடர்பு கொண்டிருந்த இல்லுமினாட்டி ஆசாமி என்பதை அக்ஷய் அனுமானித்தான்.

இம்மானுவல் அவனைப் புன்னகையுடன் வரவேற்றுச் சொன்னான். "வாருங்கள். நான் இம்மானுவல். மன்னிக்கவும். சில நிமிடங்கள் தாமதமாகி விட்டது. பிரயாணம் சௌகரியமாக இருந்ததல்லவா?"

அக்ஷய் புன்னகைத்தான். "சௌகரியமாக இருந்தது. நீங்கள் தாமதமானாலும் உங்கள் எதிர்தரப்பு ஆள் உங்களுக்கு முன்னால் வந்துக் காத்திருந்து என்னைப் புகைப்படம் எடுத்து விட்டுப் போய் விட்டான்"

இம்மானுவல் ஒரு கணம் அப்படியே உறைந்தான். பின் பரபரப்புடன் கேட்டான். "யாரவன்? எப்போது எடுத்தான்?"

அக்ஷய் சொன்னான். "குட்டையாய் ஒரு மனிதன். நான் அந்தத் தூண் அருகே வந்த போது என்னைப் புகைப்படம் எடுத்தான். அப்போது மணி 10.22."

இம்மானுவல் திகைத்தபடி கடிகாரத்தைப் பார்த்தான். மணி 10.30. எதிர்பாராத விதமாகத் திடீரென்று புகைப்படம் எடுக்கப்பட்ட போதும் அசராமல் அமைதியாய் இருந்து கொண்டு, புகைப்படம் எடுக்கப்பட்ட இடம் நேரம் இரண்டையும் துல்லியமாகச் சொல்லும் அமானுஷ்யனை அவனுக்கு முதல் சந்திப்பிலேயே மிகவும் பிடித்து விட்டது.

இம்மானுவல் பார்வையாலேயே அவன் பின்னால் நின்றிருந்த இரண்டு காவலர்களுக்குக் கட்டளையிட்டான். அடுத்த சில நிமிடங்களில் பல காவலர்கள் வேகமாக விமானநிலையத்தின் உள்ளே, வெளியே செல்லும் வழிகளை ஆக்கிரமித்தார்கள். அவர்கள் அக்ஷய் விவரித்த குட்டை மனிதனை உள்ளேயும், வெளியே போய்க் கொண்டிருப்பவர்களிடையேயும் தேடினார்கள். அந்தக் குட்டை மனிதன் அகப்படவில்லை. அவன் மாயமாக மறைந்திருந்தான்.

இம்மானுவல் அடுத்தபடியாக அக்ஷய் குட்டை மனிதனைக் கண்டதாகச் சொன்ன இடத்தை கண்காணித்து வந்த சிசிடிவி கேமிராப் பதிவுகளைப் பார்க்க ஆணையிட்டான். அந்த சிசிடிவி கேமிரா 10.15 முதல் பழுதாகி இருந்தது. அதைச் சற்று முன் தான் கண்டுபிடித்திருந்தார்கள். எப்படித் திடீர் என்று பழுதாகியது என்று யாருக்கும் தெரிந்திருக்கவில்லை அந்தக் கேமிராவை அவர்கள் சரி செய்த போது நேரம் 10.42.

இம்மானுவல் சந்தேகத்துடன் டேனியலின் புகைப்படத்தை அக்ஷய்க்குக் காண்பித்தான். "உயரத்தை விடு. நீ பார்த்த ஆள் கிட்டத்தட்ட இவனை மாதிரி இருந்தானா?"

அக்ஷய் சொன்னான். "இந்த ஆளுக்கும் நான் பார்த்த ஆளுக்கும் சம்பந்தமே இல்லை."

அந்த ஒரு பழுதான கேமிராவைத் தவிர மற்ற கேமிராக்களில் பிரச்சினை எதுவும் இல்லாததால் கடந்த இரண்டு மணி நேரமாக எல்லா வாசல்கள் வழியாகவும் உள்ளே வந்தவர்கள், வெளியே சென்றவர்களையும் கண்காணித்து சந்தேகப்படும்படியான குட்டையான மனிதர் இருக்கும் பதிவை எல்லாம் சில குழுக்கள் சேகரித்துக் கடைசியில் அதையெல்லாம் அக்ஷய்க்குக் காண்பித்தார்கள். அனைத்தையும் அக்ஷய் சலிப்பில்லாமல் கவனமாய்ப் பார்த்தான். குட்டை மனிதன் ஒரேயொரு கேமிராப் பதிவில் சிக்கினான்.

அவன் ஒரு வாசல் வழியாக வேகமாக உள்ளே வந்து கொண்டிருந்தான். அவன் தலை குனிந்து தன் கையில் இருந்த அலைபேசியில் எதையோ பார்த்தபடி உள்ளே வந்து கொண்டிருந்ததால் அவன் முகம் தெளிவாகத் தெரியவில்லை என்றாலும் அது தான் தன்னைப் புகைப்படம் எடுத்த குட்டை மனிதன் என்பதை அக்ஷய் உறுதியாகச் சொன்னான். அவன் உள்ளே நுழைந்த நேரத்தை இம்மானுவல் குறித்துக் கொண்டான். 10.02.

அடுத்தபடியாக விமான நிலையத்தின் உள்ளே கேமிராப்பதிவுகளில் அவன் பதிவாகி இருந்ததை எல்லாம் பார்க்க ஆரம்பித்தார்கள். அவன் உள்ளே நுழைந்த நேரம், வாசல் இரண்டும் தெரிந்த பின் வரவேற்பு ஹாலில் அவனைக் கவனிப்பது அவர்களுக்குக் கஷ்டமாயில்லை. அவன் தலை குனிந்து தன் அலைபேசியைப் பார்த்துக் கொண்டே ஒரு இருக்கையில் அமர்ந்து கொண்டான். அவன் தலை நிமிர்ந்து எந்தக் கேமிராவையும் பார்க்கவில்லை. அதனால் அவன் முகம் எதிலும் தெளிவாய்த் தெரியவில்லை. ஒரே ஒரு முறை மட்டும் கேமிராவுக்கு எதிர் திசையைப் பார்த்தபடி தன் அலைபேசியை உயர்த்தி எதோ செய்தான். பார்ப்பவர்களுக்கு அவன் எதோ புகைப்படம் எடுப்பது போல் இருந்தது. அதற்குத் தகுந்தாற் போல் எதோ ஒரு வெளிச்சமும் அவன் அலைபேசியில் இருந்து வந்தது. அவன் மறுபடி அலைபேசியை மடியருகே பிடித்துக் கொண்டு அதில் எதையோ பார்த்துக் கொண்டிருந்தான்.

பின் அக்ஷய் வந்த விமானத்திலிருந்து இறங்கி ஆட்கள் வெளியே வர ஆரம்பிக்க ஒரு கூட்டம் எழுந்து முன்னுக்கு வந்தது. அதன் இடையில் அவனும் இருந்தான். அதன் பின் அந்தப் பழுதடைந்த கேமிராப் பகுதிக்கு வந்திருக்க வேண்டும் என்பதை இம்மானுவல் அனுமானித்தான். அதற்குப்பின் அவன் எந்தக் கேமிராவிலும் பதிவாகவில்லை.

ஏதோ ஒரு நெருடலும், யோசனையும் உந்த இம்மானுவல் அந்தக் குட்டை மனிதன் முதலில் இரு கைகளையும் உயர்த்தி எதோ படம் பிடித்தது போல் செய்த நேரத்தைப் பார்த்தான். அந்த நேரம் 10.15. அதே நேரத்தில் தான் இந்தப் பக்கத்துக் கேமிரா பழுதாகியது. ஒருவேளை குட்டை மனிதன் படம் பிடித்ததல்லவோ அது? ஏதோ அலைவீச்சைச் செலுத்தி இந்தக் கேமிராவைப் பழுதடையச் செய்த வேலை தானோ அது?

இம்மானுவலுக்குச் சந்தேகம் வலுக்க ஆரம்பித்தது.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, October 22, 2020

இல்லுமினாட்டி 72

இம்மானுவல் மூளை துரிதமாக வேலை செய்தது. அந்தக் குட்டை மனிதன் அமர்ந்திருந்த இடத்திலிருந்து பழுதடைந்த கேமிரா ஒரு நேர் கோட்டில் தான் இருந்தது என்பதால் நினைத்தபடி தான் இருக்க வேண்டும் என்று தோன்ற ஆரம்பித்த பின் அந்தக் குட்டை மனிதன் யாராக இருக்கும் என்று இம்மானுவல் யோசிக்க ஆரம்பித்தான். புகைப்படம் எடுத்தது விஸ்வம் இல்லையென்றால் கண்டிப்பாக அந்தக் குட்டை மனிதன் விஸ்வத்தின் கூட்டாளியாகத் தான் இருக்க வேண்டும். ஏனென்றால் வேறு யாராவது புதிய ஆட்களை அவர்கள் கண்டிப்பாக இதில் பயன்படுத்தியிருக்கும் வாய்ப்பு குறைவு. இது நாள் வரை அந்தக் கூட்டாளியை விஸ்வத்தைத் தவிர யாரும் பார்த்தது கிடையாது என்கிற நிலை இருந்தது. அந்தக் குட்டை மனிதன் தான் விஸ்வத்தின் கூட்டாளி என்றால் இப்போது அவனை அக்ஷய் பார்த்திருக்கிறான். இந்தக் கேமிராப் பதிவுகளில் முகம் தெளிவாகத் தெரியா விட்டால் கூடப் பரவாயில்லை. அந்த ஆளின் தோற்றம் கிடைத்து விட்டது போலத்தான்.

இம்மானுவல் அக்ஷயைக் கேட்டான். “இப்போது வெளியே அவன் போன பதிவும் ஏதாவது ஒரு கேமிராவில் ஆகியிருக்கும். அவன் அதிலும் தலை நிமிர்த்தி இருப்பான் என்று தோன்றவில்லை. அறைக்குப் போக உங்களுக்கு அவசரமில்லா விட்டால் நீங்கள் விவரிக்க விவரிக்க குட்டை மனிதனைப் படம் வரைய நான் ஏற்பாடு செய்யட்டுமா? ஏனென்றால் அவன் மிக முக்கியமான மனிதன். எதிரியின் கூட்டாளி. அவனைப் பற்றி இது வரைக்கும் எந்தத் தெளிவான தகவலும் எங்களுக்குக் கிடைக்கவில்லை....”

அக்ஷய் அறைக்குப் போக அவசரமில்லை என்றான். பத்து நிமிடத்தில் வரைபவன் வந்தான். அக்ஷய் சொல்லச் சொல்ல அவன் வரைய ஆரம்பித்தான். அந்தச் சில வினாடிகளில் அக்ஷய் அந்தக் குட்டை மனிதனின் நிறைய விஷயங்களை மனதில் குறித்து வைத்திருந்தான். அவனுடைய நினைவுத் திறன் வரைபவனையும், இம்மானுவலையும் வியக்க வைத்தது. இருபது நிமிடங்களில் அந்தக் குட்டை மனிதனின் தத்ரூபமான ஓவியம் வரையப்பட்டது.

அக்ஷய் திருப்தியுடன் சொன்னான். “இது தான் நான் பார்த்த ஆள்”.

இந்த நேரத்திற்குள் குட்டை மனிதன் வெளியே போனது ஏதாவது கேமிராவில் பதிவாகியிருக்கிறதா என்று பார்த்து விட்டிருந்தார்கள். அவன் வெளியே போனது எதிலும் பதிவாகியிருக்கவில்லை. மூன்று பதிவுகளில் கும்பலாக உயரமானவர்கள் நிறைய பேர் வெளியே போயிருந்தார்கள். அவர்களுக்கு நடுவில் அந்தக் குட்டை மனிதன் சத்தமில்லாமல் வெளியே போயிருக்க வாய்ப்பு இருக்கிறது என்று அவர்கள் நினைத்தார்கள்.

அப்படியிருக்கா விட்டால் அவன் இன்னும் விமான நிலையத்திற்கு உள்ளேயே எங்காவது ஒளிந்திருக்க வாய்ப்பிருக்கிறது என்ற சந்தேகமும் இம்மானுவலுக்கு வந்து விமான நிலையத்திற்குள் மூலை முடுக்கெல்லாம் சோதித்துப் பார்க்கவும் ஏற்பாடு செய்தான். அந்தச் சோதனையிலும் குட்டை மனிதன் அகப்படவில்லை.

குட்டை மனிதனை யாரெல்லாம் கவனித்திருக்கிறார்கள் என்று விசாரித்த போது பலரும் அலைபேசியில் எதையோ பார்த்தபடி அமர்ந்திருந்த அவனைப் பார்த்த நினைவு மங்கலாக இருப்பதைத் தெரிவித்தார்கள். மற்றபடி குறிப்பாகக் கூர்ந்து பார்க்க அவர்களுக்குக் காரணம் எதுவும் இருக்கவில்லை. உண்மையில் அக்ஷயைத் தவிர வேறு இரண்டு பேர் தான் அந்த ஆளைச் சற்று அதிகமாகக் கவனித்திருந்தார்கள் என்பது அங்கே தீவிரமாக விசாரித்த போது தெரிய வந்தது. அந்த இருவரில் ஒருவன் ஒரு இளைஞன். அவனைத் தள்ளி விட்டுத் தான் புகைப்படம் எடுக்க குட்டை மனிதன் முன்னுக்கு வந்திருந்தான். அதனால் தான் கவனித்திருந்தான். கவனித்திருந்த இன்னொருவர் ஒரு முதியவர். குட்டை மனிதன் புகைப்படம் எடுத்து விட்டு குனிந்து கொண்டே அவர் முன்பக்கம் நகர்ந்த போது அவர் அவனைக் கவனித்திருந்தார். மற்றவர்கள் யாரும் அவனைப் பார்க்கவில்லை. பார்த்த அந்த இருவரும் கூட, குட்டை மனிதன் புகைப்படம் எடுக்கும் முன்னும், பின்னுமான ஓரிரு நிமிடங்களில் அவனைக் கவனித்தவர்கள் தான். அந்த ஓரிரு நிமிடங்களுக்குள் அவனைப் பார்த்திருந்த அவர்களுக்கு அவன் எப்படி அவர்கள் அருகே வந்தான் என்பதைக் கவனித்த நினைவில்லை என்றார்கள். பிறகு அவன் போனதையும் அவர்கள் பார்க்கவில்லை என்றார்கள். அதற்குப் பிறகுத் தொடர்ந்து அவன் எப்படி எந்தக் கேமிராவிலும் அகப்படவில்லை என்று யாருக்கும் தெரியவில்லை.

இந்தக் களேபரத்தில் கலந்து கொள்ளாமல் அமைதியாக அமர்ந்திருந்த அக்ஷயைப் பார்க்கையில் இம்மானுவலுக்குப் பொறாமையாக இருந்தது. பெயருக்கேற்றபடி அமானுஷ்யன் தான்...

இம்மானுவல் திடீரென்று அவனிடம் கேட்டான். “நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?”

அக்ஷய் அமைதியாகச் சொன்னான். “என்னாலும் எந்த முடிவுக்கும் வர முடியவில்லை”

அதைச் சொல்கையில் அவனுக்கு எந்தச் சங்கடமும் இருக்கவில்லை என்று இம்மானுவல் கவனித்தான். எல்லோரும் மிகப் பெருமையாக நினைக்கும் ஒருவனுக்குத் தெரியவில்லை, முடியவில்லை என்ற வார்த்தைகளைச் சொல்வது சுலபமாக இருக்க வழியில்லை. அது பெரும்பாலான மனிதர்களுக்குக் கௌரவக் குறைவாகத் தோன்றலாம். ஆனால் அக்ஷய் அந்தப் பெரும்பாலானோர் கூட்டத்தில் சேரவில்லை.

இம்மானுவல் கேட்டான். “அவன் ஏன் உங்களைப் புகைப்படம் எடுக்க வேண்டும்? அதற்கு ஏதாவது வலுவான காரணம் இருக்குமோ?”

“விஸ்வம் அவனிடம் என்னைப் புகைப்படம் எடுத்துத் தருமாறு கேட்டிருக்கலாம்?”

“உங்கள் புகைப்படத்தை வைத்து விஸ்வம் என்ன செய்ய முடியும்?”

“எவ்வளவோ செய்யலாம். என் புகைப்படத்தை வைத்து என்னைப் பற்றி அவன் நிறைய தெரிந்து கொள்ளலாம். அவன் அபூர்வ சக்திகளை வைத்து என்னுடைய பலம் பலவீனங்களை அவனால் உணர முடியும்”

இம்மானுவல் திகைத்தான். இதைச் சொல்லும் போதும் அக்ஷயிடம் எந்தத் தயக்கமும், சங்கடமும் இல்லை. இம்மானுவலுக்கு அந்தத் தகவலில் சங்கடம் இருந்தது. “அது சிக்கல் அல்லவா?”

அக்ஷய் புன்னகையுடன் கேட்டான். “யாருக்கு?”

இம்மானுவல் ஒரு கணம் திகைத்துப் பின் சிரித்து விட்டான். அமானுஷ்யனை அவனுக்கு மிகவும் பிடித்து விட்டது. சிரிப்பினூடே சொன்னான். “நமக்குத் தான்”

அக்ஷய் புன்னகையுடன் சொன்னான். “நம் பலமும், பலவீனமும் எதிரிக்குத் தெரிவதில் சிக்கல் இல்லை. அவை நமக்கே தெரியாமல் இருப்பதில் தான் சிக்கல் இருக்கிறது.”

அவன் சொன்ன வார்த்தைகளில் இருந்த தீர்க்கமான உண்மையை இம்மானுவல் ரசித்தான். முதன் முதலில் அவனைக் கண்ட கணம் முதல் இந்தக் கணம் வரை அக்ஷயிடம் ஒரு பதட்டமோ, பரபரப்போ இல்லை. எதுவும் என் கை மீறிப் போய் விடவில்லை, எல்லாம் என் கட்டுப்பாட்டில் தான் இருக்கிறது என்று பறைசாற்றுவது போல் அமைதி அவனிடம் இயல்பாகவே குடி கொண்டிருந்தது.

எர்னெஸ்டோவின் பங்களாவிற்கு அவனை அழைத்துப் போகையில் இம்மானுவல் சம்பிரதாயமாகச் சொல்ல நினைத்திருந்த வேண்டுகோளைச் சொன்னான். “நாங்கள் எங்கள் வட்டத்தை மீறி வெளியிலிருந்து ஒருவரைத் தருவிப்பது இது தான் முதல் முறை. ரகசியத்திற்கு அதிக முக்கியத்துவம் தரும் இயக்கம் எங்களுடையது. எங்களுடன் இருக்கும் காலங்களில் நீங்கள் எத்தனையோ பார்க்கவும், கேட்கவும் நேரிடலாம். ஆனால் அதை எதையும் நீங்கள் எக்காலத்திலும் யாரிடமும் வெளிப்படுத்தக்கூடாது என்று நாங்கள் உங்களை வேண்டிக் கொள்கிறோம். உங்கள் இயல்பிலிருந்தும், உங்கள் கடந்த காலத்திலிருந்தும் அந்த நம்பிக்கையை நாங்கள் பெற்றிருக்கிறோம் என்ற போதும் வாய்விட்டுச் சொல்லி உங்கள் சம்மதத்தைப் பெற விரும்புகிறோம்”

அக்ஷய் மறுபேச்சு எதுவும் பேசாமல் எந்த ரகசியத்தையும் அவன் எக்காலத்திலும் யாரிடமும் வெளிப்படுத்தப்போவதில்லை என்ற வாக்கை அளித்தான். இம்மானுவலிடம் நிஜமாகவே நிம்மதி தெரிந்தது.

எர்னெஸ்டோவிடம் இருந்து குறுந்தகவல் வந்தது. “எங்கிருக்கிறாய்? அவன் வந்து விட்டானா?”

இம்மானுவல் புன்னகைத்தான். எர்னெஸ்டோவுக்கு அமானுஷயனைக் காண்பதில் ஆர்வம் தாங்கவில்லை. அவசரப்படுகிறார். அவருக்கு உடனே தகவல் அனுப்பினான். “நாங்கள் வந்து கொண்டிருக்கிறோம். அரை மணி நேரத்தில் வந்து சேர்ந்து விடுவோம்”

இம்மானுவல் அடுத்ததாக அந்தக் குட்டை மனிதனின் ஓவியத்தை ஒவ்வொரு உளவுத் துறையினருக்கும் அனுப்பி அந்த ஆளைப் பற்றி ஏதாவது விவரம் பெற முடிகிறதா என்று பார்க்கக் கட்டளையிட்டான். அதே போல் விஸ்வம் கடைசியாக இல்லுமினாட்டியில் பேச வந்த போது தங்கிய ஓட்டல், அருகில் இருந்த ஓட்டல்கள் ஆகியவற்றிற்கு அந்த ஓவியத்தை அனுப்பி அந்த ஆளை அந்தக் காலக்கட்டத்தில் அங்கே யாராவது பார்த்து இருக்கிறார்களா என்று விசாரிக்க ஏற்பாடு செய்தான். அதே போல் ம்யூனிக் மருத்துவமனைக்கும் அந்தப் புகைப்படத்தை அனுப்பி வைத்தான். ஆனால் யார் மூலமாகவும் எந்தத் தகவலும் உபயோகமானதாய்க் கிடைக்கும் என்ற நம்பிக்கை அவனுக்கு இருக்கவில்லை.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, October 29, 2020

இல்லுமினாட்டி 73

ஏர்னெஸ்டோ ஒரு குழந்தையின் குதூகலத்துடன் அக்‌ஷயை வரவேற்றார். அவனைப் பற்றிப் படித்திருந்ததெல்லாம் அவர் மனதில் அவனை ஒரு கதாநாயகன் போல் ஆக்கியிருந்தன. அவன் பயணம் சௌகரியமாக இருந்ததா என்று அன்போடு விசாரித்தார். இம்மானுவல் அவரைப் புன்னகையோடு கவனித்தான். பலரிடம் ராஜ கம்பீரத்துடன் இடைவெளி விட்டே பழகும் அவர் வெகு சிலரிடம் மட்டும் எந்தப் பந்தாவும் இல்லாமல் எளிமையாக நட்பு பாராட்டிப் பழகுவதையும் அவன் கவனித்திருக்கிறான். அமானுஷ்யன் ஆரம்பத்திலேயே அவருடைய இரண்டாவது பட்டியலில் சேர்ந்து விட்டது புரிந்தது.

அக்‌ஷய் அரண்மனை போல் இருந்த அந்த பங்களாவில் பல அடுக்குப் பாதுகாப்பு இருந்ததைக் கவனித்து விட்டு உள்ளே வந்திருந்தான். அப்படி ஒரு அதிகார உச்சத்திலும், செல்வச்செழிப்பிலும் இருந்த போதும் இல்லுமினாட்டியின் தலைவரிடம் இருந்த எளிமையும், நட்புணர்வும் அவனுக்கும் அவர் மேல் மதிப்பை வரவழைத்தது.

இம்மானுவல் எர்னெஸ்டோவிடம் புன்னகையுடன் சொன்னான். “அக்‌ஷய் ம்யூனிக்கில் கால் வைத்தவுடனேயே நமக்கு விஸ்வத்தின் கூட்டாளியை அடையாளம் காட்டி விட்டான்”

திகைப்புடன் பார்த்த எர்னெஸ்டோவிடம் விமான நிலையத்தில் நடந்த சம்பவங்களை இம்மானுவல் விவரித்தான். விஸ்வத்தின் கூட்டாளி மனிதனல்ல என்று நினைப்பதாக இம்மானுவல் அன்று சொன்னது நினைவுக்கு வர இது என்ன புதுக்குழப்பம் என்று எண்ணிய எர்னெஸ்டோ கேட்டார். “அவனை எப்படி நீ விஸ்வத்தின் கூட்டாளி என்று சொல்கிறாய்? புகைப்படம் எடுத்துத் தர அவர்கள் ஏற்பாடு செய்திருந்த வேறு யாராவது ஒரு ஆளாக அவன் ஏன் இருக்கக்கூடாது?...”

“நானும் ஆரம்பத்தில் அப்படி தான் சந்தேகப்பட்டேன். அப்படி அவர்கள் ஏற்பாடு செய்திருந்த ஒரு ஆளாக இருந்திருந்தால் இன்னேரம் எங்களிடம் அவன் கண்டிப்பாக மாட்டியிருப்பான். இப்படி சாமர்த்தியமாக மாட்டாமல் போனதோடு அந்த சிசிடிவி கேமிராவையும் வேலை செய்யாமல் போக வைத்ததையும் பார்த்தால் அவன் விஸ்வத்தைப் போலவே கூடுதல் வித்தைகள் கையில் வைத்திருக்கிற ஆசாமி போலத் தான் தெரிகிறது. அதனால் தான் அந்தக் குட்டை மனிதன் அவன் கூட்டாளியாகத் தான் இருக்கும் என்று நான் உறுதியாய்ச் சொல்கிறேன்”

எர்னெஸ்டோ அக்‌ஷயைக் கேட்டார். “அக்‌ஷய், நீ என்ன நினைக்கிறாய்?”

அக்‌ஷய் யோசனையுடன் சொன்னான். “எனக்கு அவன் அந்த கேமிராவைச் செயல் இழக்க வைத்தது தான் சந்தேகத்தைக் கிளப்புகிறது. மற்ற கேமிராக்களில் விழுவதை அவன் ஒரு பிரச்சினையாக நினைக்கவில்லை. அந்தக் கேமிராக்களில் தலை குனிந்தே வந்திருக்கிறான். எதிலும் கேமிராவை அவன் நேருக்கு நேர் பார்க்கவில்லை. சொல்லப் போனால் என்னைப் புகைப்படம் எடுக்கும் போது தான் நிமிர்ந்து பார்த்திருக்கிறான். அப்படி அவன் நிமிர்ந்து பார்த்து அவன் முகம் தெளிவாக இந்தக் கேமிராவில் பதியும் என்று பயந்து அப்படிச் செய்திருக்கிறான் என்று எடுத்துக் கொண்டாலும் கூட மற்றதும் இடிக்கத் தான் செய்கிறது. பின் எப்படி யாரும் அவனைப் பார்க்கவில்லை. அது வரை மற்றவர்கள் கண்களில் பட்டுக் கொண்டிருந்த அவன் பிறகெப்படி ஒருவர் கண்ணில் கூடப் படவில்லை. வெளியே போவதும் ஏன் எந்தக் கேமிராவிலும் விழவில்லை என்பது தான் குழப்புகிறது. வந்த மாதிரியே அவன் செல்போனைப் பார்த்தபடியே வெளியே போயிருக்கலாமே. ஏன் அவன் அப்படிக் கூட விழவில்லை. இதெல்லாம் பார்க்கையில் அவன் கடைசியாக அந்தக் கேமிராவை ரிப்பேர் செய்ததில் வேறு ஒரு வலுவான காரணமும் இருக்கலாம் என்று தோன்றுகிறது. எதையோ நாம் தெரிந்து கொள்வதை அவன் விரும்பவில்லை...”

“முகம் தெளிவாகத் தெரிவதை அவன் விரும்பவில்லை என்று தான் தோன்றுகிறது. நேராக நிமிர்ந்து பார்த்து புகைப்படம் எடுக்கும் போது அவன் முகம் தெரிந்து விடும் என்பதால் தான் ரிப்பேர் பண்ணியிருக்கிறான்...”

அக்‌ஷய் சொன்னான். “அது மட்டும் தான் என்று எனக்குத் தோன்றவில்லை. அவன் முகத்தை நான் நேராகப் பார்த்திருக்கிறேன். என்னைப் பற்றி அவன் தெரிந்து வைத்திருக்கிறான் என்றால் ஒரு தடவை பார்த்த முகத்தை நான் மறக்க மாட்டேன் என்பதையும் கண்டிப்பாகத் தெரிந்து வைத்திருப்பான். நாம் கண்டிப்பாக அவன் தோற்றத்தைத் தெரிந்து கொண்டு விடுவோம் என்று தெரியாமல் இருக்காது.... கூடுதலாக ஏதோ இருக்கிறது...”

அக்‌ஷயின் சந்தேகம் அவர்களுக்கும் சரியென்றே தோன்றியது. அவன் சொன்னது போல அவன் அன்று அந்த விமானத்தில் வருவான் என்பது எப்படி விஸ்வத்திற்கும், அவன் கூட்டாளிக்கும் தெரிந்தது? ரகசியமாக அவர்கள் வைத்திருந்த இந்தத் தகவல்களை எல்லாம் விஸ்வமும், அவன் கூட்டாளியும் தெரிந்து வைத்திருப்பது எப்படி?

வாங் வே தனக்கு வந்திருந்த ஓவியத்தைக் குழப்பத்துடன் பார்த்தார். யாரிந்த ஆள், இந்த ஆளின் புகைப்படத்தை இல்லுமினாட்டியின் உளவுத்துறை உபதலைவன் சாலமன் அவருக்கு ஏன் அனுப்பினார் என்று புரியவில்லை. பார்த்தால் அந்த ஆள் ஒரு இன்சூரன்ஸ் ஏஜெண்டோ, ரியல் எஸ்டேட் புரோக்கரோ மாதிரி தான் தெரிந்தான்.

சாலமன் தன் வழக்கமான நேரத்தில் போன் செய்து தான் அந்த ஆள் யாரென்று விளக்கினார். “அந்த ஆள் தான் விஸ்வத்தின் கூட்டாளி என்று இம்மானுவல் சந்தேகப்படுகிறான். அமானுஷ்யன் ம்யூனிக் வந்தவுடனேயே அந்த ஆள் அவனைப் புகைப்படம் பிடிக்கப் போய் அமானுஷ்யன் பார்வையில் பட்டு விட்டான்....” என்று ஆரம்பித்து எல்லாவற்றையும் சொல்லி முடித்த போது வாங் வேக்குத் திகைப்பாக இருந்தது.

விஸ்வத்தின் கூட்டாளி விஸ்வத்தை விடப் பலமடங்கு கில்லாடியாக இருப்பான் போல் தோன்றியது. அத்தனை பெரிய ம்யூனிக் விமான நிலையத்தில் உள்ளே நுழைந்து அமானுஷ்யனைப் புகைப்படம் எடுத்து விட்டு கேமிராவை ரிப்பேர் செய்து விட்டு, யார் கண்ணிலும் படாமல், அகப்படாமல் தப்பித்துப் போயிருக்கும் பராக்கிரமத்தை என்னவென்று சொல்வது? அகிடோ அரிமா முன்பே அவரை எச்சரித்திருந்தது நினைவுக்கு வந்தது. விஸ்வத்தையும், அவன் கூட்டாளியையும் சாதாரணமாக நினைத்து விட வேண்டாம் என்று அவர் சொன்னது சரிதான் என்று தோன்றியது. ஆனால் பெரிய வெற்றிகள் ஆபத்தில்லாமல் கிடைத்து விடுவதில்லை. தயங்கிப் பின்வாங்கினால் முன்னுக்கு வராமலேயே போய்விடும் நிலைமை இருக்கிறது.

இல்லுமினாட்டியில் கடந்த ஒரு வாரத்தில் எர்னெஸ்டோ எடுத்த இரண்டு முடிவுகள் தலைமைக்குழுவில் மற்றவர்கள் சிபாரிசு செய்ததற்கு எதிர்மாறாக இருந்தன. மனிதர் க்ரிஷின் சித்தாந்தத்தால் பாதிக்கப்பட்டிருப்பது நன்றாகவே தெரிந்தது. இல்லுமினாட்டியின் பலத்தைப் பெருக்காத மென்மையான அந்த அணுகுமுறை இல்லுமினாட்டியை பலவீனப்படுத்தவும், மற்றவர்களின் பயத்தைக் குறைக்கவும் செய்யும் என்று வாங் வே நம்பினார். இதை அனுமதிக்கக்கூடாது. ஏதாவது வகையில் கிழவரை தலைமைப்பதவியில் இருந்து இறக்க வேண்டும். அது கிழவர் மரணத்தினால் தான் முடியும் என்றால் அதுவும் சரி தான் என்று வாங் வேக்கு அதிகமாகத் தோன்ற ஆரம்பித்தது. அதைச் செய்ய விஸ்வம் தான் சரியான ஆளாகத் தோன்றுகிறான். அதனாலேயே விஸ்வமோ, அவன் கூட்டாளியோ எர்னெஸ்டோவுக்கு முன்பு அவருக்குப் பார்க்கக் கிடைக்க வேண்டும் என்று அவர் ஆசைப்படுகிறார். ஆனால் அவர்கள் கிடைக்க வேண்டுமே!...

விஸ்வம் அக்‌ஷயின் புகைப்படத்தை மிகுந்த ஆர்வத்துடன் பார்த்தான். புகைப்படத்தில் அக்‌ஷய் அவனையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். அவன் புகைப்படம் தான் எடுக்கப்படுகிறது என்ற தகவல் அவன் மூளைக்குத் தெளிவாக எட்டி விட்ட அறிகுறி அந்த முகத்தில் தெரிந்தது. யாரிந்த ஆள், ஏன் என்னைப் புகைப்படம் எடுக்கிறான், என்றெல்லாம் யோசித்தபடி கூர்ந்து ஊடுருவுவது போல் அக்‌ஷய் பார்த்துக் கொண்டிருந்தான். அவனிடம் பயம் தெரியாதது விஸ்வத்தை ஆச்சரியப்படுத்தவில்லை. ஆனால் சின்ன முகச்சுளிப்போ, பரபரப்போ, பாதிப்போ கூட அவனிடம் இல்லை என்கிற செய்தி விஸ்வத்தை ஆச்சரியப்படுத்தியது.

ஜிப்ஸி அக்‌ஷயை இரண்டு படங்கள் எடுத்திருந்தான். இரண்டுமே மூன்று நான்கு வினாடிகள் வித்தியாசத்தில் எடுக்கப்பட்டவை. நின்ற கோலத்தில் இருந்து ஊடுருவிப் பார்க்கும் விதம் வரை எல்லாவற்றிலும் அவனிடம் முழுமையான ஆளுமை தெரிந்தது. விஸ்வத்திற்கு உடனடியாக அந்தப் புகைப்படத்தில் மனதை நிறுத்தி அவனைப் பற்றி எல்லாத் தகவல்களையும் தானாக உணர்ந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் எழுந்தது. ஆனால் இப்போது அதற்கு அவசரமில்லை. அதற்கும் முன் ஆக வேண்டியது நிறைய இருக்கிறது என்று உணர்ந்து அந்த ஆவலை ஒதுக்கி வைத்தான்.

“இவனை இப்போது எங்கே அழைத்துப் போகிறார்கள் நண்பா?” என்று ஜிப்ஸியை அவன் கேட்டான்.

“எர்னெஸ்டோவின் வீட்டுக்கு” என்று சொன்ன ஜிப்ஸிக்கு ஒரு கணம் இப்போதும் அந்த அமானுஷ்யன் அவனையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருப்பது போல் பிரமை இருந்தது. என்னவொரு பார்வை?...

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, November 5, 2020

இல்லுமினாட்டி 74

மனோகர் நள்ளிரவில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த போது தான் விஸ்வத்தின் அலைகளை உணர்ந்தான். விஸ்வம் அவன் அருகில் நின்று கொண்டு அவனை தீர்க்கமாகப் பார்ப்பது போல இருந்தது. நீண்ட காலமாக அவன் அதற்காக ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்த காரணத்தால் அந்த ஆழ்ந்த உறக்கத்திலும் அவன் உணர்ந்து தூக்கி வாரிப் போட்டது போல் எழுந்து உட்கார்ந்தான். இனி அவனை உணர்வோமோ மாட்டோமோ, விஸ்வம் உயிரோடு இருக்கிறானோ இல்லையோ என்ற சந்தேகம் அடிக்கடி வர ஆரம்பித்திருக்கும் நிலையில் சந்தேகங்களுக்கெல்லாம் முடிவு கட்டும் விதமாக இன்று உணர்ந்தது பெரும் நிம்மதியையும், இனி வரும் எதிர்காலம் குறித்த நம்பிக்கையையும் தந்தது. இனிக் கவலை இல்லை. ஆயிரம் செந்தில்நாதன்களைச் சந்திக்கவும் அவன் தயார்!

அதன் பிறகு அவனுக்கு உறக்கம் வரவில்லை. நடப்பதெல்லாம் நன்மைக்கு என்றே தோன்றியது. விஸ்வத்தின் சக்தி அலைகளை அவன் உணர்ந்த இந்த நேரத்தில் அவன் சிறையில் இருந்திருந்தால் அதை ஒரு பின்னடைவாக விஸ்வம் நினைத்திருக்கக்கூடும். நல்ல வேளையாக ராஜேஷின் தயவால் அங்கிருந்து தப்பித்து வந்து விட்டான்.....

படுக்கையில் அமர்ந்து கண்களை மூடிக் கொண்டே மனோகர் மறுபடி விஸ்வத்தை உணர முயன்றான். அவன் அடுத்த கட்டளை, அல்லது அவன் தெரிவிக்கும் செய்தி எதாவது ஒன்றை உணர முடியுமா என்று முயற்சி செய்தான். விஸ்வத்தைத் திரும்பவும் உணர முடியவில்லை.

அவனைக் கம்ப்யூட்டரில் கவனித்துக் கொண்டிருந்த அதிகாரி உடனடியாக செந்தில்நாதனுக்குப் போன் செய்தார். அவன் தூக்கத்திலிருந்து தடாலென்று எழுந்திருந்து எதையோ தீவிரமாக உணர முயல்கிற மாதிரி தொடர்கிறது..."

செந்தில்நாதனுக்கு விஸ்வம் மனோகரைத் தொடர்பு கொள்ள முயன்றிருக்கிறான் அல்லது தொடர்பு கொண்டிருக்கிறான் என்பது புரிந்தது. அவர் சொன்னார். "இனி நாம் அவனைத் தீவிரமாகக் கண்காணிக்க வேண்டும்...."

இம்மானுவல் அக்ஷய் வந்ததிலிருந்து எர்னெஸ்டோவின் பாதுகாப்பு விஷயத்தில் கவலை ஒழிந்தவனாக இருந்தான். எர்னெஸ்டோவுக்கு அக்ஷயை மிகவும் பிடித்திருந்ததால் பாதுகாப்பு விஷயத்தில் அவன் சொன்னதைக் கேட்பார் என்ற நம்பிக்கை இருந்தது. இல்லாவிட்டால் அவரைச் சமாளிப்பது கஷ்டம் தான். அதிகாரம் செய்தே பழகிப் போனவருக்கு மற்றவர்களுக்கு அடங்கி நடப்பது அவர் நன்மைக்காகவே என்றால் கூட சுலபம் அல்ல. பிடித்த மனிதர்களிடம் அதில் பிரச்சினை இல்லை. அக்ஷய் அவரை அழகாகச் சமாளிப்பான் என்று இம்மானுவல் நினைத்தான்.

அக்ஷய் வந்தக் கணம் முதல் தன் கடமை, வேலை விஷயத்தில் மிகவும் தெளிவாகவும், உறுதியாகவும் இருந்தான். துளி கூட எதிலும் அவனுக்கு அலட்சியம் இருக்கவில்லை. அவருடைய பங்களாவில் இருக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகளில் அவன் திருப்தி அடைந்திருந்தான். ஆனாலும் கூட பங்களாவின் ஒவ்வொரு ஜன்னல், கதவு, மூலை முடுக்கு அத்தனையும் தன் கண்ணால் பார்த்தே ஆக வேண்டும் என்று குறியாய் இருந்தான். பங்களாவுக்குள் பிரச்னை இல்லை, வெளியே செல்லும் போது கவனமாய் இருந்தால் போதும் என்று இம்மானுவல் சொன்னதை அவன் ஏற்றுக் கொள்ளவில்லை. விஸ்வம், அவன் கூட்டாளி போன்ற ஆட்கள் எதிரிகளாய் இருக்கையில் எந்த ஒரு சிறு அலட்சியமும் நல்லதல்ல என்று அவன் நினைத்தான்.

எர்னெஸ்டோவின் பக்கத்து அறையையே அக்ஷய்க்கு ஒதுக்கி இருந்தார்கள். இம்மானுவலிடமிருந்து விஸ்வத்தைப் பற்றிய முழு விவரத்தையும் அக்ஷய் வாங்கி இருந்தான். அதைப் படித்துப் பார்க்கவே சில நாட்களாகும் என்ற அளவில் விஷயங்கள் அதிகமிருந்தன என்றாலும் விஸ்வம் குறித்த சின்னத் தகவலைக் கூட தெரிந்து கொள்ளாமல் இருக்கக்கூடாது என்பதில் அக்ஷய் உறுதியாய் இருந்தான். அதே போல் விஸ்வத்தின் கூட்டாளி பற்றியும் இம்மானுவலிடம் இருக்கும் தகவல்கள் முழுவதையும் வாங்கியிருந்தான். கூட்டாளி விஷயத்தில் முடிவான தகவல்கள் தன்னிடம் இல்லை என்று சொல்லி கவனித்து முடிவுக்கு வர வேண்டிய அளவில் சில தகவல்கள் மட்டும் சேகரித்து வைத்துள்ளதாய் இம்மானுவல் சொல்லித் தந்திருந்தான். அதைப் படித்து அக்ஷய் என்ன முடிவுக்கு வருவான் என்று தெரியவில்லை....

சிந்தனைகளில் ஆழ்ந்திருந்த இம்மானுவலிடம் ஒரு ஃபைலை அவன் உதவியாளன் தந்து விட்டுப் போனான். அந்த ஃபைலில் சிந்து என்று எழுதி இருந்தது. அவளுடைய வரலாறே அந்த ஃபைலில் இருந்தது. அவள் பிரச்னை எதுவும் இல்லாத சாதாரணப் பெண்ணாக இருக்கலாம். அல்லது பிரச்னை ஆக முடிந்தவளாகவும் இருக்கலாம். இரண்டில் எந்த வகை அவள் என்பதை இந்தத் தகவல்களைப் படித்துத் தான் அவனுக்கு முடிவுக்கு வர முடியும். அவன் படிக்க ஆரம்பித்தான்.

சிறிய வயதிலேயே தாய் ஓடிப் போனது, தாயின் சாயலிலேயே இருந்ததாலோ ஏனோ தந்தை அவளை வெறுத்தது, அந்த வெறுப்பை தந்தையின் இரண்டாம் மனைவியும், மகளும் பகிர்ந்து கொண்டது, சிந்து படிப்பில் மிக சூட்டிப்பாக இருந்தது, ஹாஸ்டலில் படித்தது, குடும்பத்திலிருந்து நிரந்தரமாய் பிரிந்தது எல்லாமே விரிவாய் இருந்தது. அவளுடன் படித்தவர்களோ, ஹாஸ்டலில் தங்கியிருந்தவர்களோ அவளிடம் நெருக்கமாகவில்லை, அனைவரிடமும் விலகியே இருந்தாள் என்றும் இருந்தது. ஆனால் தேவைப்படும் நேரத்தில் யாரிடமும் எந்த சங்கோஜமும் இன்றி அவளால் பழகவும் முடியும் என்றும், வேலை முடிந்த பின் எந்தப் பற்றுதலும் இல்லாமல் விலகவும் முடியும் என்றும் கூடக் குறிப்பிட்டு இருந்தார்கள்.

படித்துக் கொண்டிருக்கையில் அவள் நிறைய பகுதி நேர வேலைகளுக்குப் போயிருக்கிறாள். படித்து முடித்த பின் சில வேலைகள் பார்த்திருக்கிறாள் என்றாலும் எந்த நிரந்தரமான வேலையிலும் அவள் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் அவள் பணத்திற்கு நிறையக் கஷ்டப்பட்டது போல் தெரியவில்லை. ஷேர் மார்க்கெட்டில் சிறிது ஈடுபாடு வைத்திருந்தாள் என்பதால் அது அவளுக்கு உதவியிருக்க வாய்ப்பிருக்கிறது என்று இம்மானுவல் நினைத்துக் கொண்டான். அவளுக்குக் காதலர்கள் யாரும் இருந்தது போல் தெரியவில்லை. ஆண்களுடன் நெருக்கமாக சகவாசம் வைத்திருந்த மாதிரியும் தெரியவில்லை.

இம்மானுவல் அவள் குடும்பத்தாரின் தகவல்களைப் பார்க்க ஆரம்பித்தான். அவள் தந்தை இப்போதும் மும்பையில் வேலைக்குப் போய்க் கொண்டிருக்கிறார். அவரிடம் எத்தனை குழந்தைகள் என்று யாராவது கேட்டால் ஒரே பெண் என்று இரண்டாம் மகளைச் சொல்கிறார்... அவருடைய இரண்டாம் மனைவி வேலைக்குப் போகாமல் வீட்டில் தான் இருக்கிறாள். இரண்டாம் மகள் படிப்பில் பெரிதாய் சாதிக்கவில்லை. இப்போது அரசாங்க வேலை கிடைக்க பரிட்சைகள் எழுதிக் கொண்டிருக்கிறாள்...

சிந்துவின் தாயாரின் இரண்டாம் கணவன் இப்போது சுப்ரீம் கோர்ட்டில் வக்கீலாக இருக்கிறான். சிந்துவின் தாயார் சமூக சேவகியாய் இருக்கிறாள். டெல்லியில் தான் அவர்கள் வசிக்கிறார்கள். அவர்களுக்கு ஒரே மகன். அவன் இன்ஜினியரிங் படித்துக் கொண்டிருக்கிறான். அவனுக்கு நண்பர்கள் அதிகம்....

சிந்து இது வரை இரண்டு முறை வெளிநாடு சென்றிருக்கிறாள். ஒரு முறை சிங்கப்பூர், மலேஷியா இன்னொரு முறை மொரிஷியஸ். இரண்டுமே தனியாகத் தனியாகத் தான் சென்றிருக்கிறாள். இரண்டுமே சுற்றுப் பயணம் தான். வேலை விஷயமாக அல்ல.....

இம்மானுவல் அப்படியே மற்ற ஏராளமான விவரங்களை மேலோட்டமாகப் பார்த்தான். அவள் குடியிருந்த வீடுகள், சிறு வயதிலிருந்து அவளுடைய சில புகைப்படங்கள், அவள் அலைபேசி எண்கள், அவள் பேசிய எண்கள், அவளுக்குப் போன் செய்து பேசிய எண்கள்.....

திடீரென்று அவன் கண்கள் ஓரிடத்தில் நிலைத்து நின்றன. அவளுக்கு வெளிநாடு ஒன்றிலிருந்து சில நாட்களுக்கு முன் ஒரு போன்கால் போய் இருக்கிறது. அது எந்த நாடு என்ற தகவல் இல்லை. அந்த எண்ணும் பேசிய ஆளை அறிய முடிந்ததல்ல. அந்தப் போன்கால் ஒரு ராங் நம்பராக இருந்திருக்க வாய்ப்பு இல்லை. சிறிது நேரம் பேசியிருக்கிறார்கள்.... பின் அந்த நம்பரில் இருந்தோ, வேறு வெளிநாட்டிலிருந்தோ அவளிடம் யாரும் பேசவில்லை. அதற்குப் பின் சில நாட்களில் அவள் மும்பையிலிருந்து சென்னை போய் விட்டாள்.

இம்மானுவலுக்கு அந்தப் போன்காலை அலட்சியம் செய்ய முடியவில்லை...

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, November 12, 2020

இல்லுமினாட்டி 75

இம்மானுவல் அனுப்பியிருந்த சிந்து பற்றிய தகவல்களை க்ரிஷ் நிதானமாகப் படித்தான். தாய் இறந்து விட்டாள் என்று அவளுடைய தந்தை அவளுக்குச் சொல்லி நம்ப வைத்திருக்கலாம். இல்லையென்றால் தாய் ஓடிப் போய் விட்டாள் என்று சொல்லச் சங்கடமாக உணர்ந்த சிந்து அவளாகவே தாய் இறந்து விட்டதாகச் சொல்லி இருக்கலாம். காரணம் எதுவாக இருந்தாலும் அவளை அதற்குக் குறை கூற முடியாது என்று க்ரிஷுக்குத் தோன்றியது. அவளுடைய வாழ்க்கையைப் படித்த போது அவனுக்கு அவள் மேல் ஒருவித பச்சாதாபமே தோன்றியது. அன்பான தாய், தந்தை, குடும்பம் என்றிருந்தால் அவளும் சந்தோஷமான வாழ்க்கையை வாழ்ந்திருப்பாள் என்ற உண்மையை அவனால் மறுக்க முடியவில்லை. மற்றபடி அவர்களிடம் அவள் சொன்ன கதையில் கட்டுக்கதை எதுவும் இருக்கவில்லை. அதெல்லாம் அவள் ஏமாற்றுப் பேர்வழி அல்ல என்ற ஆசுவாசத்தைத் தந்தாலும் அவனுக்கு முன்பு ஏற்பட்டிருந்த எச்சரிக்கை உணர்வைக் கற்பனை என்று ஒதுக்கவும் முடியவில்லை.

இம்மானுவல் அனுப்பியிருந்த தகவல்களில் சிந்து சென்னை வரத் தகுந்த காரணம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கவில்லை. அவன் அனுப்பியிருந்த அவளுடைய பழைய புகைப்படங்களுக்கும் இப்போதைய தோற்றத்திற்கும் சம்பந்தம் இருக்கவில்லை. அந்தப் பழைய படங்களில் நெற்றியில் ஒன்றில் கூட பொட்டு இருக்கவில்லை. அந்தப் புகைப்படங்களில் மாடர்ன் டிரஸ்களில் தான் இருந்தாள். இப்போதோ சேலை, நெற்றியில் பொட்டு எனப் புதிய மாற்றங்கள் சேர்ந்திருந்தன. இந்த மாற்றத்திற்கும் காரணம் தெரியவில்லை.

உதய்க்கு அவள் இப்போது இருக்கும் தோற்றம் தான் பிடித்தமானது. அதை அறிந்து அதற்காகவே இப்படி மாற்றிக் கொண்டு வந்திருக்கிறாளா என்ற சந்தேகமும் மெல்ல எழுந்தது. இது வரை தனிமையை மட்டுமே விரும்பி ஒரு சின்ன வட்டத்திற்குள் இருந்து வாழ்ந்த அவள் இந்தப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டு இங்கே வந்திருப்பது தற்செயலா அல்லது திட்டமிட்டா?

அவள் அவர்கள் வீட்டுக்கு வந்திருந்த போது அவ்வப்போது வேறு ரகசிய மனநிலைகளில் சஞ்சரித்தது போல உணர்ந்திருந்தான். அவன் உணர்ந்ததை அவள் கண்டுபிடித்து விட்டதாகவும் கூட அவனுக்குத் தோன்றியிருந்தது. பின் அவள் சாமர்த்தியமாக அதை மறைத்தது போல் கூட அவனுக்குத் தோன்றி இருந்தது. அதெல்லாம் அவன் சந்தேகத்தின் விளைவா, இல்லை அதற்கெல்லாம் வலுவான காரணம் இருக்கின்றதா என்று அவனுக்குத் தெரியவில்லை.

இரண்டு மாதத்திற்குள் கல்யாணப் பேச்சு பேசினாலோ, முயற்சி எடுத்தாலோ இருவரில் ஒருவரின் உயிருக்கு ஆபத்து என்று பயமுறுத்தி வைத்திருந்ததால் பத்மாவதி மறந்து கூட அது குறித்துப் பேசவில்லை. ஆனால் தினமும் சிந்துவிடம் ஒரு முறையாவது போனில் பேச அவள் தவறவில்லை. சிந்து அவளிடம் மிக நல்லபடியாகவே பேசியிருப்பாள் போலிருக்கிறது. பத்மாவதி மூத்த மருமள் குறித்து பரமதிருப்தியாகவே இருந்தாள். அவள் மறுபடி ஒரு நாள் சிந்துவை வரச் சொல்லியும் இருந்தாள். உதயும் கூட வற்புறுத்தியும் சிந்து வேலையைக் காரணமாகச் சொல்லி உடனடியாக அவர்கள் வீட்டுக்கு வருவதைத் தவிர்த்தாள்.

இம்மானுவல் கடைசியில் ஒரு இண்டர்நேஷனல் போன்கால் சிந்துவுக்கு வந்திருப்பதையும், அது எந்த நாட்டிலிருந்து யார் பேசியது என்று கண்டுபிடிக்க முடியவில்லை என்பதையும் கூடத் தெரிவித்திருந்தான். ராங் நம்பராக இருக்க வாய்ப்பில்லை என்பது சிறிது நேரம் பேச்சு தொடர்ந்திருக்கிறது என்பதால் தெரிகிறது என்றவன் அதற்கு மேல் தன்னுடைய சொந்த அபிப்பிராயம் எதையும் தெரிவிக்காமல் அப்படியே விட்டிருந்தான்.

மனோகர் மறுநாள் முழுவதும் மிகவும் உற்சாகமாகவே இருந்தான். இனி எல்லாமே முன்பு போல சுபிட்சமாகவே இருக்கப் போகிறது என்று அவனுக்குத் தோன்ற ஆரம்பித்திருந்தது. என்னேரமும் அடுத்த கட்டளை விஸ்வத்திடம் இருந்து வரலாம் என்ற எதிர்பார்ப்பில் அடிக்கடி சில நிமிடங்கள் கண்களை மூடி அமைதியாக இருந்தான்.

அவனைக் கண்காணித்துக் கொண்டிருந்த செந்தில்நாதனும் அவனுடைய நடவடிக்கைக்காகக் காத்திருந்தார். அவன் உடலில் ‘சிப்’ வைக்கப்பட்டிருந்ததால் அவர்கள் கம்ப்யூட்டரில் அவன் இருக்குமிடம் தெளிவாகத் தெரிந்தது. அவனுடைய தோற்றம் அதில் வரவில்லையே தவிர அவன் உட்கார்ந்திருக்கிறானா, படுத்திருக்கிறானா என்பது போன்ற நிலவரம் எல்லாம் சிப் இருக்கும் நிலை மூலம் அவர்களால் கண்டுபிடிக்க முடிந்தது.

பெங்களூரில் மனோகர் வீட்டுக்கு நெருக்கமான பகுதிகளில் செந்தில்நாதன் சில ஆட்களையும் என்னேரமும் இயங்கத் தயாரான நிலையில் தங்க வைத்திருந்தார். வீட்டின் அருகேயே ஆட்கள் இருந்தால் அவன் வீட்டுக்கு எதிரில் இருக்கும் வர்க்ஷாப்பில் இருக்கும் அவன் ஆள் மூலமாக அவனுக்குத் தெரிய வந்து விடும் என்பதால் அவர் மிகவும் கவனமாக இருந்தார்.

ஆனால் அன்றிரவு வரையில் மனோகருக்கு விஸ்வத்திடமிருந்து எந்தத் தகவலும் வரவில்லை. மனோகரே பொறுமை இல்லாமல் தவிப்பதும் அவருக்குத் தெரிந்தது. இரவு வரை காத்திருந்து விட்டுப் பின் அவர் கம்ப்யூட்டரில் கண்காணிக்கும் ஆசாமியிடம் ஏதாவது வித்தியாசமாகத் தெரிய வந்தால் உடனடியாகத் தெரிவிக்கும்படி சொல்லி விட்டுத் தன் வீட்டுக்குப் போனார்.

அன்றிரவு பதினோரு மணிக்கு மனோகர் வீட்டுக்கு ஒரு பிசா டெலிவரி பாய் வந்து சேர்ந்தான். எதிரில் இருந்த மனோகரின் ஆள் அதைத் தவறாக நினைக்கவில்லை. மனோகர் அடிக்கடி அப்படி பிசா வாங்கிச் சாப்பிடுவதை அவன் கவனித்திருப்பதால் அவன் கண்டுகொள்ளவில்லை.

மனோகரின் வீட்டுக்குள் இருந்த வேலையாள் பிசா டெலிவரி பாய் வந்ததைத் திகைப்போடு பார்த்தான். எப்போதும் மனோகர் அவனிடம் தான் பிசா ஆர்டர் செய்யச் சொல்வான். இன்று சொல்லவில்லையே பின் எப்படி என்று யோசனையுடன் பார்த்தபடி அவனிடம் கேட்டான். “யார் ஆர்டர் செய்தது?”

பிசா டெலிவரி பாய் சொன்னான். “மனோகர் சார். அவர் என்னை எதிர்பார்த்துக் கொண்டே இருப்பார். வேண்டுமானால் போய்க் கேட்டுப் பாருங்கள்”

குழப்பத்துடன் வேலையாள் மனோகரிடம் சென்றான். மனோகர் நல்ல உறக்கத்தில் இருந்தான். “இவர் ஆர்டர் செய்திருந்தால் ஏன் தூங்குகிறார். பிசா பாய் வேறெங்கோ போவதற்குப் பதிலாக இங்கே வந்து விட்டிருப்பானோ? ஆனால் அவன் தெளிவாக மனோகர் சார் பெயரைச் சொன்னானே. அவர் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார் என்று வேறு சொன்னானே. இவரை எழுப்புவதா வேண்டாமா?”

மனோகர் திடீர் என்று கண்விழித்துப் பார்த்தான். “என்ன விஷயம்?”

“பிசா டெலிவரி பாய் பிசாவோடு வந்திருக்கிறான். நீங்கள் அவனை எதிர்பார்த்துக் கொண்டே இருப்பீர்கள் என்று வேறு சொல்கிறான்.” என்று குழப்பத்துடன் வேலையாள் சொன்னான்.

மனோகருக்கு அது விஸ்வத்தின் வேலையாக இருக்க வேண்டும் என்று உடனே புரிந்தது. அவர் பிசா பாயின் மூலமாக ஏதோ செய்தியை அனுப்பியிருக்க வேண்டும்... பரபரப்புடன் மனோகர் சொன்னான். “உண்மை. அவனை உள்ளே அனுப்பு. நீ வெளியேவே இரு.”

வேலையாள் குழப்பத்துடன் அங்கிருந்து போனான். ’பிசாவை வாங்கி நான் தானே எப்போதும் இவருக்குத் தருவது வழக்கம். இன்று என்ன எல்லாமே தலைகீழாய்?’ என்று அவன் மனம் முணுமுணுத்தது. பிசா பாயிடம் “உள்ளே வரச் சொல்கிறார்” என்று சொல்லி விட்டு உட்கார்ந்து கொண்டான். தூக்கம் தூக்கமாய் வந்தது. இவனை அனுப்பித் தாள் போட்ட பின்பே தூங்கலாம் என்று அவன் மனம் கணக்குப் போட்டது.

பிசா பாய் உள்ளே போனான். மனோகர் அவனைப் பரபரப்புடன் வரவேற்றான். “என்ன தகவல்...”

பிசா பாய் சொன்னான். “உங்களை போலீஸ்காரர்கள் ஏமாற்றி இருக்கிறார்கள். உங்கள் உடலில் சிப் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. இப்போதும் போலீஸ்காரர்கள் உங்களைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்கச் சொன்னார்.”

தலையில் இடி விழுந்தது போல் மனோகர் உணர்ந்தான். திகைப்புடன் அவன் பிசா பாயைப் பார்த்தான். பிசா பாய் ஒரு பொம்மைத் துப்பாக்கியை எடுத்து அவனிடம் தர யத்தனிப்பது போல் சைகை செய்தான். அவன் சொன்ன தகவலிலேயே மனதின் சமநிலை தவறியிருந்த மனோகருக்கு இந்தப் பொம்மைத் துப்பாக்கி மூலம் என்ன செய்ய வேண்டும், இதன் மூலம் அந்தச் சிப்பை எடுத்து விட வாய்ப்பிருக்கிறதா என்பது போன்ற பல சிந்தனைகளில் இருந்தான்.

ஆனால் பிசா பாயின் பொம்மைத் துப்பாக்கியிலிருந்து ஒரு விஷ ஊசி கிளம்பி வந்து அவன் முகத்தில் கன்னத்தில் குத்தியது. சில வினாடிகளில் முகம் மரத்துப் போக ஆரம்பித்தது. அதிர்ச்சியுடன் நினைவை இழக்க ஆரம்பித்த மனோகரிடம் பிசா பாய் சொன்னான். “ஏமாந்து போவதைத் தலைவர் எப்போதுமே ரசிப்பதில்லை என்பது உங்களுக்குத் தெரியும்”

மனோகர் உடலில் விஷம் வேகமாக வேலை செய்ய ஆரம்பித்தது. படுக்கையில் அமர்ந்திருந்தவன் அப்படியே அதில் சரிந்தான். பிசா பாய் போர்வையை அவன் மீது முழுவதுமாகப் போர்த்தி விட்டு வெளியே வந்தான். வேலையாளிடம் சொன்னான். “நாளைக் காலை பிசாவைச் சாப்பிட்டுக் கொள்கிறாராம். தூக்கம் வருவதாய்ச் சொன்னார்.”

பிசா பாய் போய் விட்டான். வேலையாள் கதவைத் தாளிட்டு விட்டு மனோகரின் படுக்கையறை உள்ளே வந்து எட்டிப் பார்த்தான். மனோகர் போர்த்தியபடி மறுபடி உறங்க ஆரம்பித்திருப்பது தெரிந்தது. அவனும் உறங்கப் போனான்.

(தீபாவளியை முன்னிட்டு போனஸாக வாசகர்களுக்கு அடுத்த அத்தியாயம் 14.11.2020 அன்று அதிகாலையிலேயே அப்டேட் ஆகும்)

(தொடரும்)

என்.கணேசன்

Saturday, November 14, 2020

இல்லுமினாட்டி 76

தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

மனோகரைக் கொன்று விட்டு அலட்டிக் கொள்ளாமல் வெளியே வந்த பிசா பாய் மனோகர் வீட்டுக்கு எதிரே இருந்த வர்க் ஷாப்பில் வேலை செய்பவன் கூர்ந்து பார்ப்பதைக் கண்டு கொள்ளாமல் தன் பைக்கைக் கிளப்பிக் கொண்டு போனான். மனோகர் வீட்டிலிருந்து எந்தச் சத்தமும் வராததும், பிசா பாய் வெளியே வந்தவுடன் உள்ளே இருந்த வேலையாள் கதவைத் தாளிட்டுக் கொண்டதையும் கூடக் கவனித்த பின் எதிர் வர்க் ஷாப்பில் வேலை செய்யும் மனோகரின் ஆள் எந்தப் பிரச்சினையுமில்லை என நிம்மதி அடைந்து கடையைச் சாத்துவதற்காகப் பொருட்களை எல்லாம் உள்ளே எடுத்து வைக்க ஆரம்பித்தான்.

பிசா பாய் அடுத்த தெருவில் போகும் போது ஆளில்லா இடத்தில் பைக்கை நிறுத்தி ஒரு ரெயின் கோட்டை அணிந்து கொண்டு பயணிக்க ஆரம்பித்தான். அதற்கும் அடுத்த ரோட்டில் ஆளில்லாத இடத்தில் ஒரு கார் அவனுக்காகக் காத்திருந்தது. அங்கு பைக்கை நிறுத்தி விட்டு பிசா பாய் காரில் ஏறிக் கொண்டான். காரில் இருந்து குண்டான ஒருவன் இறங்கி பைக்கில் ஏறிக் கிளம்பினான். காரின் பின் சீட்டில் பிசா பாய் ஏறியவுடன் கார் டிரைவர் காரைக் கிளப்பினான். காரின் பின் சீட்டில் விலையுயர்ந்த கோட்டும் சூட்டும் தயாராக வைக்கப்பட்டிருந்தது. அங்கேயே தன் பிசா பாய் சீருடையைக் கழற்றி அந்தக் கோட் சூட்டை அவன் அணிந்து கொண்டான். அரை மணி நேரத்தில் கார் விமான நிலையம் அடைந்தது. கையில் ஒரு ப்ரீஃப் கேஸுடன் காரிலிருந்து கம்பீரமாக இறங்கிய போது பிசா பாய் ஒரு தொழில் அதிபர் தோற்றத்தில் மாறி இருந்தான்.

அடுத்த அரை மணி நேரத்தில் அவன் மும்பை செல்லும் விமானத்தில் உயர் வகுப்பு இருக்கையில் அமர்ந்திருந்தான்.

உறங்கிக் கொண்டிருந்த மனோகர் திடீரென்று எழுந்து உட்கார்ந்தது கம்ப்யூட்டரில் தெரிந்த போதே உஷாரான அதிகாரி அடுத்ததாக மனோகர் என்ன செய்யப் போகிறான் என்று கவனமாகப் பார்த்தான். சிறிது நேரத்தில் மனோகர் படுக்கையில் சரிந்தது தெரிந்த போது தான் விபரீதமாக ஏதோ நடந்து விட்டது என்பது அவனுக்குப் புரிந்து அவசரமாக அவன் செந்தில்நாதனுக்குப் போன் செய்தான்.

செந்தில்நாதன் உடனடியாக மனோகரின் வீடிருக்கும் பகுதியில் தங்க வைத்திருந்த தமிழ்நாட்டு போலீஸ் ஆட்களுக்கும், அப்பகுதி போலீஸ் ஸ்டேஷனுக்கும் போன் செய்து பேசினார். அடுத்த இருபது நிமிடங்களில் அவர்கள் மனோகர் வீட்டில் இருந்தார்கள். மனோகர் முன்பே இறந்து போயிருந்ததை உறுதி செய்த அவர்கள் வேலையாளைத் தீவிரமாக விசாரித்தார்கள். வேலையாள் திகைப்பிலும் பெருங்குழப்பத்திலும் இருந்தான். நடந்ததை எல்லாம் அவர்களிடம் சொன்னான். அந்த வேலையாள் சொன்ன பிசா பாயைப் பிடிக்க இரு மாநில போலீசாரும் சில குழுக்களாகப் பிரிந்து தேட ஆரம்பித்தார்கள்.

எதிரே வர்க் ஷாப்பில் வேலை பார்த்துக் கொண்டிருந்த மனோகரின் வேலையாள் போலீசார் போன போது தான் கடையைச் சாத்திக் கொண்டு இருந்தான். அவனைப் பிடித்தும் விசாரித்தார்கள். அவனால் பிசா பாய் போன திசையை மட்டும் தான் சொல்ல முடிந்தது. அவனுக்கும் மனோகர் கொலை செய்யப்பட்டிருப்பது பெரும் திகைப்பைத் தந்திருந்தது என்பது அவனைப் பார்த்த போதே தெரிந்தது.

அவன் காண்பித்த வழியே போய் எல்லோரிடமும் போலீசார் விசாரித்துப் பார்த்தார்கள். யாரும் பிசா பாயைப் பார்த்திருக்கவில்லை. ஒருவர் ரெயின் கோட் போட்டுக் கொண்டு ஒல்லியான ஒரு இளைஞன் போனதாய்ச் சொன்னார். தோற்றம் மற்ற விதத்தில் ஒத்துப் போனதால் பிசா பாய் வழியிலேயே தன் சீருடை மீது ரெயின் கோட் போட்டுக் கொண்டிருக்க வாய்ப்பிருக்கிறது என்று அனுமானித்துப் பிறகு ரெயின்கோட் இளைஞனைத் தேடினார்கள். அந்த நீண்ட தெருவின் இடையிடையே குறுக்காகப் பல தெருக்கள் இருந்தன. பிசா பாய் எங்கே வேண்டுமானாலும் திரும்பி இருக்கலாம். ஆனாலும் அந்தப் பகுதியில் உள்ள தெருக்களில் எல்லாம் கிடைத்த ஆட்களிடம் பிசா பாயையோ, ரெயின்கோட் போட்டுக் கொண்டு போன ஒல்லியான ஆளையோ பற்றி விசாரித்தார்கள். நள்ளிரவு ஆகியிருந்தது என்பதால் குறைவான ஆட்களே அவர்களுக்கு விசாரிக்கக் கிடைத்தார்கள். விசாரித்த ஆட்கள் யாரும் போலீசார் சொன்ன இரண்டு விதமான ஆட்களையும் பார்த்திருக்கவில்லை. மனோகரின் கொலையாளி மாயமாக மறைந்திருந்தான்.

செந்தில்நாதனுக்குத் தகவல் போனது. செந்தில்நாதன் விஸ்வம் உடனடியாகக் மனோகரைக் கொன்று விடுவான் என்று எதிர்பார்த்திருக்காதது தன் தவறு என்பதை மெல்ல உணர்ந்தார். சிப் வைத்திருப்பதை மனோகர் உணராமல் இருக்கலாம். ஆனால் விஸ்வம் தன் சக்தியால் அவனை அணுக முடியுமானால் அவன் உடலில் சிப் வைத்திருக்கும் தகவலை அறியவும் முடிந்திருக்கும் என்பதையும், அறிந்த பின் போலீசாரிடம் ஏமாந்த, தன்னை ஏதாவது விதத்தில் காட்டிக் கொடுக்க முடிந்த மனோகரைத் தீர்த்துக் கட்டுவது தான் அவன் நிலைமையில் புத்திசாலித்தனம் என்பதும் அவருக்குத் தெரியாமல் இல்லை. ஆனால் விஸ்வம் தன் பழைய சக்திகளைப் புதிய உடலில் பயன்படுத்துவதில் சில சிக்கல்களும் தடைகளும் இருக்கும் என்று சொல்லப்பட்டதால் விஸ்வத்திற்கு சிப் விவரம் கூட இப்போதே தெரிய வரும் என்று அவர் எதிர்பார்த்திருக்கவில்லை.

ஆனால் மனோகர் இறந்து விட்டான் என்பது தெரிந்த பிறகு அவனைக் கொன்றவன் அகப்பட வாய்ப்பில்லை என்பதை முன்பே செந்தில்நாதன் முன்பே எதிர்பார்த்திருந்தார். விஸ்வம் முட்டாள் அல்ல. அகப்படுகிற மாதிரி ஒரு கொலையாளியை அனுப்பியிருக்க மாட்டான்....

மனோகர் இறந்து விட்டதை செந்தில்நாதன் க்ரிஷுக்குப் போன் செய்து சொன்னார். விஸ்வம் எங்கிருந்தாலும் இருந்த இடத்திலிருந்தே செயல்பட ஆரம்பித்து விட்டான் என்ற செய்தி இல்லுமினாட்டிக்கும் போய்ச் சேர்ந்தது.

மனோகர் இறந்து போன செய்தியை சிந்து செய்தித்தாளில் படித்தாள். ஹரிணியை ஒரு காலத்தில் கடத்திச் சென்று போலீசில் சிக்கி, சிறைப்பட்டு, சில நாட்களுக்கு முன் தான் சிறையிலிருந்தும் தப்பித்துச் சென்று பெங்களூரில் ஒளிந்திருந்த அவனை யாரோ கொலை செய்து விட்டார்கள் என்ற செய்தியைப் படிக்கையில் கொன்றவன் யாராக இருக்கும் என்பது அவளுடைய மூளைக்கு எட்டாமல் இல்லை. மனோகர் எதாவது முட்டாள்தனம் செய்திருக்க வேண்டும், அதனால் தான் அவன் கொல்லப்பட்டு இருக்கிறான் என்பதை யாரும் சொல்லாமலேயே அவளால் யூகிக்க முடிந்தது. நாளை அவள் எதாவது முட்டாள்தனம் செய்தால் அவளுடைய நிலைமையும் அதுவாகத்தான் இருக்கும் என்ற உண்மையும் அந்தக் கணத்திலேயே அவளுக்கு உறைத்தது. ஆனால் இனி எதுவும் அவள் செய்வதற்கில்லை. அவள் அந்த வேலையை ஏற்றுக் கொண்டாகி விட்டது. விஸ்வம் ஒரு வேலையைச் சொல்லும் போது அதை யாரும் மறுத்து அதைச் செய்யாமல் இருந்து விடவும் முடியாது என்பது வேறு விஷயம். அவளுடைய அக்கவுண்டில் பெரிய தொகையும் போடப்பட்டிருக்கிறது. புலியின் மீதமர்ந்து சவாரி ஆரம்பித்து விட்டது. இனி பாதியில் இறங்கித் தப்பிக்க வழியில்லை. அவள் தான் மிக மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்றால் அவளுக்கு இந்த வேலை கொடுத்திருக்கும் விஸ்வத்தைப் பற்றியும், அவளைச் சந்தேகக்கண்ணோடு பார்க்க ஆரம்பித்திருக்கும் க்ரிஷ் பற்றியும் அவள் இன்னும் அதிகமாகத் தெரிந்து கொள்ள வேண்டும். முக்கியமாக அவர்களுக்குள் இருக்கும் உறவு அல்லது பகை என்ன என்பது தெளிவாக அவளுக்குத் தெரிய வேண்டும். அது தெரியா விட்டால் அவள் வெறும் பகடைக்காயாகவே இருந்து அவள் விதியை அவர்களிடம் ஒப்படைப்பது போலாகி விடும்...

அன்றிரவு அவளும், உதயும் ஒரு ஓட்டலில் சாப்பிடப்போயிருக்கும் போது அவள் மெல்ல அன்று பத்திரிக்கையில் பார்த்த செய்தியைச் சொன்னாள். “யாரோ மனோகர்னு ஒரு கைதி கொலைன்னு பேப்பர்ல பார்த்தேன். அவன் தான் ஹரிணியைக் கடத்திப் பிறகு கைதானவன்னு போட்டிருந்தாங்க...”

உதய்க்கு அந்த விஷயத்தைப் பேசி அந்த இரவின் இனிமையைக் குறைத்து விட விருப்பமிருக்கவில்லை. அவன் தலையை மட்டும் அசைத்தான்.

சிந்து விடுவதாக இல்லை. “அவங்களுக்குள்ளே எதாவது பகையா, இல்லை பணம் எதாவது எதிர்பார்த்து அந்த ஆள் கடத்தினானா?”

உதய் தர்மசங்கடத்தில் இருந்தான். க்ரிஷ் வெளியாட்கள் யாரிடமும் விஸ்வம் சம்பந்தப்பட்ட விஷயங்களைச் சொல்லக்கூடாது என்று முன்பே அவனிடம் எச்சரித்திருந்தான். ஆனால் சிந்து வெளியாள் அல்ல, அவள் அவன் மனைவியாகப் போகிறவள். அவளும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதால் அவளிடம் சுருக்கமாகவாவது சொல்வது நல்லது என்று அவனுக்குத் தோன்றியது.

(தொடரும்)
என்.கணேசன்

Thursday, November 19, 2020

இல்லுமினாட்டி 77

உதய் சிறிது யோசித்து விட்டுச் சொன்னான். "சிந்து எங்கள் வீட்டுல எங்களுக்குள்ளே எப்பவுமே ஒளிவு மறைவு இருந்ததில்லை. யாரும் எதையும் வீட்டாளுக கிட்டயே மறைக்கணும்னு நினைச்சதும் இல்லை. நீயும் என் மனைவியாகப் போகிறவங்கறதால சில விஷயங்களை உன் கிட்ட சொல்றேன். இதை நீ யார் கிட்டயும் எந்தக் காலத்துலயுமே சொல்லிடக்கூடாது. எனக்கு சத்தியம் பண்ணி கொடு"

சொல்லி விட்டுக் கை நீட்டிய உதயை மனதிற்குள் ஏளனமாக எண்ணினாலும், சிந்து முகத்தில் அதைக் காட்டாமல் அவன் கையில் தன் கையை வைத்து சத்தியம் செய்தாள். அதையே சாக்காக வைத்துக் கையைச் சிறிது நேரம் பிடித்தபடியே இருந்த உதய் மீது அவளுக்கு எரிச்சல் வந்தது. அதையும் அவள் மறைத்துக் கொண்டாள்.

உதய் அவளுக்கும் பின்னால் இருந்த வெட்ட வெளியை ஒரு கணம் பார்த்து விட்டு அவளிடம் சொல்ல ஆரம்பித்தான். "என் தம்பி அவனோட தனிப்பட்ட எந்த விஷயத்தையும் நான் முதல்லயே சொன்ன மாதிரி எங்க கிட்டே மறைச்சதில்லை. மறைக்க வேண்டிய அளவுக்கு அவன் எந்தத் தப்பான விஷயத்திலும் ஈடுபட்டது கிடையாது. ஆனால் ஒரே ஒரு நாளுக்கு அப்புறம் அவன் கொஞ்சம் ரகசியமாய் மாறினதா எனக்குத் தோணுது. அதுக்குக் காரணம் அவன் வெளிப்படையாய் சொன்னால் அது எங்களுக்குப் புரியாது அல்லது எங்களுக்கு கவலையைத் தரும்கிறதா கூட இருக்கலாம்..."

அவள் குழப்பத்தை முகத்தில் காட்டித் தலையசைத்தாள்.

உதய் திடீர் என்று ஒரு நாள் க்ரிஷ் காணாமல் போனதிலிருந்து ஆரம்பித்தான். அவர்கள் பயந்ததையும், துக்கப்பட்டதையும் சொன்னான். ".... பிறகு திடீர்னு ஒரு நாள் வந்தான். இடையில் என்ன ஆச்சுன்னு அவனுக்கே தெரியலைன்னு சொன்னான். ஆனால் அவன் திரும்பி வர்றப்ப ஒரு எதிரியைச் சம்பாதித்திருந்தான். அது மட்டும் தெரியும். அந்த எதிரி பெயர் விஸ்வம்..."

சிந்து அந்தப் பெயரை உதய் வாயிலிருந்து கேட்டதில் திடுக்கிட்டாள் என்றாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. உதய் தொடர்ந்தான். "அந்த ஆள் ஒரு ஜகதலப்பிரதாபன். எத்தனையோ அமானுஷ்ய சக்திகளை அவன் வசப்படுத்தியிருக்கிறதாய்ச் சொல்கிறார்கள். அதில் ஒன்று அடுத்தவர் மனதில் இருப்பதை அப்படியே தெரிந்து கொள்வது, அடுத்தவர் மனதில் ஆதிக்கம் செலுத்துவது என்கிறார்கள். அவன் சமீபத்தில் கூடு விட்டு கூடு பாய்ந்து இருக்கிறான் என்று கூடச் சொல்கிறார்கள். உண்மையைச் சொல்லப் போனால் அதை நான் நம்பவில்லை. ஆனால் க்ரிஷ் உண்மை என்று நம்புகிறான். அந்த எதிரியின் ஆள் தான் அந்த மனோகரன். அவன் க்ரிஷ் மீது இருக்கும் பகை காரணமாக ஹரிணியைக் கடத்திப் போய் விட்டான்..."

சிந்து ஆர்வத்துடன் கேட்டாள். "பின் எப்படி ஹரிணியை மீட்டார்கள். அவளைக் கடத்தி வைத்திருக்கிற இடத்தை போலீஸ் எப்படிக் கண்டுபிடித்தது?

உதய் சொன்னான். "என் தம்பிக்கும் ஏதோ சில சக்திகள் இருக்கின்றன. அதை வைத்துக் கண்டுபிடித்திருக்கிறான். அவன் சொன்ன அடையாளங்களை வைத்து அந்த இடத்தை போலீசார் கண்டுபிடித்து விட்டார்கள்..."

உண்மையாகவே சிந்து திகைத்தாள். பின் ஆர்வத்துடன் கேட்டாள். "உங்கள் தம்பியிடம் என்னென்ன சக்தியெல்லாம் இருக்கின்றன?"

அவள் திகைப்பையும் ஆர்வத்தையும் பார்த்த உதய் புன்னகையுடன் சொன்னான். "அதெல்லாம் எனக்கே தெரியாது. ஆனால் என் தம்பியின் குரு ஒருத்தர் இருந்தார். மாஸ்டர்னு அவரைக் கூப்பிடுவாங்க. அவர் ஒரு தடவை என் கிட்ட சொல்லி இருக்கிறார். எத்தனையோ சக்திகள் இருக்கிற விஸ்வம் கூட க்ரிஷ் மனதை ஊடுருவிப் பார்க்க முடியாதாம். அதை அவர் ஒரு பெருமையாகவே சொன்னார்."

அந்தத் தகவல் சிந்துவுக்குக் கசந்தது. உதய் அதற்கு மேல் அவளிடம் எதுவும் தெரிவிக்காமல் சொன்னான். "இதில் இதைவிட எனக்கும் அதிகம் தெரியாது. க்ரிஷிடம் அதிகம் துருவிக் கேட்டுக் கொள்ளவும் நான் முயன்றதில்லை. ஏன் என்றால் புரிந்து கொள்ளக்கூடிய அறிவும் எனக்குக் கிடையாது. ஆனால் ஒன்றே ஒன்றை ஞாபகம் வைத்துக் கொள். நீயும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எதிர்காலத்தில் க்ரிஷை வழிக்குக் கொண்டு வர விஸ்வம் யாரை வேண்டுமானாலும் உபயோகித்துக் கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது. நீ அவன் அண்ணியாகப் போகிறவள் என்பதால் நீயும் கவனமாக இரு."

அவள் அறிந்து கொள்ள வேண்டியதை விளக்கமாக அவன் சொல்லாதது அவளுக்கு ஏமாற்றத்தையே அளித்தது. ஆனால் அவனுக்குத் தெரிந்த வரை சொல்லி இருக்கிறான்... அதற்கு மேல் புரிந்து கொள்ளக்கூடிய அறிவு தனக்குக் கிடையாது என்று ஒப்புக் கொண்டிருக்கிறான்...

அன்று இரவு ஓட்டலில் சாப்பிட்டு விட்டு வீடு திரும்பியவளுக்குப் பல சிந்தனைகளால் உறக்கம் வரவில்லை. அவள் நினைத்ததை விடப் பெரிய சிக்கலில் மாட்டிக் கொண்டிருப்பதாய் உணர்ந்தாள். விஸ்வத்திடம் ஏதோ சக்தி கூடுதலாக இருக்கிறது என்று முதல் சந்திப்பிலேயே உணர்ந்திருந்தாள் என்றாலும் அது பல அமானுஷ்ய சக்திகளாக இருக்கும் என்று சிறிதும் அவள் எதிர்பார்த்திருக்கவில்லை. எல்லாவற்றுக்கும் மகுடம் வைத்தது போல் கடைசியாக கூடு விட்டுக் கூடு பாய்ந்து கூட அவன் சாதித்திருக்கிறான் என்று கேள்விப்பட்டதில் அவள் ஆடிப் போயிருந்தாள். இதெல்லாம் மனித ரகமே அல்ல என்று தோன்றியது. அவளால் மனிதர்களைச் சமாளிக்க முடியும் இதெல்லாம் அதற்கும் மேல் என்று அவளைப் பயமுறுத்தியது.

ஆனால் அப்படிப்பட்ட மனிதன் கூட க்ரிஷின் மனதை ஊடுருவ முடியாது என்றால் இவன் எப்படிப்பட்ட மனிதன் என்று அவள் திகைத்தாள். இரண்டு மிக சக்தி வாய்ந்த நபர்கள் ஆடும் ஆடுபுலி ஆட்டத்தில் அவள் ஒரு காயாக இருப்பதில் அவளுக்குச் சம்மதம் இருக்கவில்லை. அவர்களில் யார் வென்றாலும் அவள் தப்ப முடிவது கேள்விக்குறியாகவே இருந்தது.

இப்போது புதிய கண்ணோட்டத்தில் பார்க்கையில் முன்பு புரியாத விஷயங்கள் இப்போது புரிந்தன. அன்று விஸ்வம் போன் செய்து பேசிய போது குரல் வேறாக இருந்ததற்குக் காரணம் அவன் வேறு உடலுக்கு மாறியிருந்தது தான் என்பது புரிந்தது. இத்தனை நாள் உதயைக் கவர்ந்தது தன் அழகு தான் என்று நினைத்திருந்தாள். இப்போது அதற்கும் விஸ்வம் ஏதாவது செய்திருக்க வேண்டும் என்று தோன்ற ஆரம்பித்தது. அடுத்தவர் மனதில் ஆதிக்கம் செலுத்த முடிந்த விஸ்வம் உதய் மனதில் ஆதிக்கம் செலுத்தி அவள் மீது அவனுக்கு மையல் வர ஏதாவது செய்திருக்க வேண்டும். அதனால் தான் அவளுக்கு அவன் மனதில் சுலபமாக இடம் பிடிக்க முடிந்திருக்கிறது.

விஸ்வத்தால் எப்போது வேண்டுமானாலும் அவள் மனதையும் ஆக்கிரமித்து எல்லாம் தெரிந்து கொள்ள முடியும். அவளிடம் அதிருப்தி ஏற்பட்டால் மனோகரைக் கொன்றது போல் கொன்று விடவும் முடியும்....

பயத்தால் லேசாக அவள் உடல் நடுங்கியது. ஆழ்ந்து ஆலோசித்து என்னவானாலும் சரி விஸ்வத்தின் அதிருப்திக்கு ஆளாகாமல் இருப்பது முக்கியம் என்ற முடிவுக்கு வந்தாள். க்ரிஷை எல்லோரும் மிக நல்லவன் என்கிறார்கள். அவன் யாருக்குமே எந்தக் கெடுதலும் செய்தது கிடையாது என்கிறார்கள். நாளைக்கு அவள் நோக்கமும், திட்டமும் தெரிந்தால் கூட அவன் அவளைக் கொல்ல மாட்டான். ஆனால் விஸ்வம் அப்படியல்ல. அவன் சொன்னபடி நடந்து வெற்றிகரமாய் இதிலிருந்து தப்பித்து விட வேண்டும்...

கர்னீலியஸ் மனம் அன்று முன்பு எப்போதையும் விடத் தெளிவாக இருந்தது. இது நாள் வரை அவர் அந்த ரகசிய ஆவணத்தை நினைவுபடுத்திக் கொள்ள முயன்ற போதெல்லாம் ஒருசில சில்லறை முன்னேற்றங்கள் மட்டுமே அவருக்குக் கிடைத்திருந்தன. அவை புதிய தகவல்கள் தான், அவர் அந்த ஆவணத்தில் முன்பு படித்தது நினைவிருக்காத தகவல்கள் தான் என்றாலும் இப்போது அவற்றில் அவர் அறிய வேண்டிய அதிமுக்கியத் தகவல் பக்கத்தினுடையதாக இருக்கவில்லை.

ஆனால் இன்று ஏனோ பயிற்சியின் முடிவில் மனம் தெளிவாக முன்னேறியது. பல வருடங்களுக்கு முன்பு அன்று படித்த முக்கிய இடத்தை இன்று நினைவு கூர முடிந்தது. அந்த ரகசிய ஆவணத்தைக் கையில் வைத்துக் கொண்டிருப்பது போல் கர்னீலியஸ் இப்போதும் உணர்கிறார். அந்த வாசகங்களைப் பார்த்துப் படிப்பது போல் அவரால் படிக்க முடிந்தது.

"முன்கூட்டிக் கணக்கிட்டு, காலம் நிர்ணயித்து ஓருடல் விட்டு மறு உடல் போவது யாம் அறிந்ததே, பல முறை கண்டதே! ஓருடல் நஷ்டப்பட்டு அழியும் போது வெளியேறி மறு உடல் கண்டு சேர்ந்து நிரந்தரமாய்த் தங்கும் புதிய முயற்சி அரங்கேறும் போது ஆபத்துக் காலம் உச்சம் சென்றதென்று அறிக. இது நீங்கள் அறியாது நடக்க வழியில்லை. நடந்த பின் அறிவது உறுதி. மறு உடல் கண்ட மனிதன் மறைய உதவி கிடைக்கும். நீங்கள் தொழுத இடம் போய்ச் சேரும்...."

வெளியே யாரோ கதவை தடதடவென்று தட்டும் ஓசை கேட்டு நிகழ்காலம் வந்தார் கர்னீலியஸ். யாரது?

(தொடரும்)

என்.கணேசன்

இல்லுமினாட்டி 78

கர்னீலியஸ் இதயம் படபடவென்று அடிக்க ஆரம்பித்தது. வங்கிக்குச் செல்ல முயன்ற போது அனுமதிக்காத 'அவன்' இப்போது அவர் முயற்சியை அறிந்து நேரிலேயே வந்து விட்டானோ என்ற எண்ணம் தான் ஆரம்பத்தில் அவருக்கு வந்தது. ஆனால் அந்த சிக்னலில் ஏற்பட ஆரம்பித்த உணர்வு இப்போதும் அவருக்கு ஏற்படவில்லை என்பதும் நினைவுக்கு வந்து போனது. உடனே சில மூச்சுக்களை ஆழமாக விட்டு மனதை ஓரளவு நிதானத்திற்குக் கொண்டு வந்தார். பின் அமைதியாகச் சென்று கதவைத் திறந்தார். வாசலில் பக்கத்து வீட்டுச் சிறுவன் நின்றிருந்தான். அவன் கையிலிருந்த ட்ரேயில் நிறைய சாக்லேட்கள் இருந்தன. "இன்று எனக்கு ஹேப்பி பர்த்டே" என்று சந்தோஷமாகச் சொன்னபடி அவன் அவரிடம் ட்ரேயை நீட்டினான்.

கர்னீலியஸ் அவனுக்குப் பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்து விட்டு ஒரு சாக்லேட்டை எடுத்துக் கொண்டார். அந்தச் சிறுவனுக்குப் பரிசு தர என்ன இருக்கிறது என்று திரும்பி அலமாரியைப் பார்த்து அதிலொரு கப்பல் பொம்மை ஒன்றை எடுத்து வந்து அவனிடம் தந்தார்.

சிறுவன் புன்னகைத்து அழகாக இருக்கிறது என்று சொல்லி வாங்கிக் கொண்டு நன்றி தெரிவித்து விட்டுப் போனான். கதவைத் தாளிட்டு விட்டுத் திரும்பி வந்தவருக்கு இனி இன்றைக்கு விட்ட இடத்திலிருந்து தொடர முடியும் என்று தோன்றவில்லை. அமைதியாகச் சிறிது நேரம் யோசித்து விட்டு அவருடைய டைரியை எடுத்து கடைசி பக்கத்தில் இன்று அவர் படித்த வாசகங்களை நினைவுபடுத்தி எழுத ஆரம்பித்தார். இப்போது நினைவில் இருப்பது பிறகோ, இன்னொரு நாளோ பயிற்சியில்லாமல் நினைவுபடுத்த முடியும் என்பது நிச்சயமில்லை.

"முன்கூட்டிக் கணக்கிட்டு, காலம் நிர்ணயித்து ஓருடல் விட்டு மறு உடல் போவது யாம் அறிந்ததே, பல முறை கண்டதே! ஓருடல் நஷ்டப்பட்டு அழியும் போது வெளியேறி மறு உடல் கண்டு சேர்ந்து நிரந்தரமாய்த் தங்கும் புதிய முயற்சி அரங்கேறும் போது ஆபத்துக் காலம் உச்சம் சென்றதென்று அறிக. இது நீங்கள் அறியாது நடக்க வழியில்லை. நடந்த பின் அறிவது உறுதி. மறு உடல் கண்ட மனிதன் மறைய உதவி கிடைக்கும். நீங்கள் தொழுத இடம் போய்ச் சேரும்...."

இத்தனை நினைவில் கொண்டு வர முடிந்தது அவருக்கு சந்தோஷமாக இருந்தது. தொடர்ந்து பயிற்சி செய்து முயற்சித்தால் மீதியையும் அவர் கண்டிப்பாக நினைவுக்குக் கொண்டு வர முடியும் என்று நம்பிக்கை இப்போது முழுமையாக இருக்கிறது. இப்போது எழுதியதில் கடைசி வரி அவரைக் குழப்பியது. "நீங்கள் தொழுத இடம் போய்ச் சேரும்..." அது எந்த இடம்?

செந்தில்நாதன் க்ரிஷிடம் மனோகர் விஷயத்தில் கோட்டை விட்டு விட்டதற்கு மானசீகமாய் மன்னிப்பு கேட்டார். "அவன் வீட்டுக்கு எதிரேயே வர்க் ஷாப்பில் அவன் ஆள் இருந்ததால் நம் ஆட்களை அவன் வீட்டருகேயே நிறுத்தினால் அவன் கண்டுபிடித்து உஷாராகி விடுவான் என்று தான் பக்கத்துத் தெருக்களில் இருக்க வைத்தேன். சொன்னால் சில நிமிஷங்களில் அவர்கள் அந்த வீட்டுக்குப் போய் சேர்ந்து விடும் தூரம் தான். ஆனால் விஸ்வத்தின் ஆள் மனோகரைக் கொன்று விட்டு நம் ஆட்கள் போய்ச் சேர்வதற்கு முன் தப்பித்து விட்டான்.... நம் இத்தனை நாள் முயற்சியும் வீணாய் போயிற்றே என்று வருத்தமாக இருக்கிறது..."

க்ரிஷ் அவரைத் தேற்றும் தொனியில் மென்மையாகச் சொன்னான். "எல்லா முயற்சியும் வீண் என்று சொல்ல முடியாது. சில விஷயங்களைத் தெரிந்து கொண்டிருக்கிறோம். சில விஷயங்களை இனியும் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது.."

செந்தில்நாதன் 'எப்படி?' என்பது போல க்ரிஷைப் பார்த்தார். க்ரிஷ் சொன்னான். "விஸ்வம் தன் பழைய சக்தியுடன் யாரையும் கவனிக்க முடிகிறது என்பதை இப்போது நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம். மனோகரை உணர்வு அலைகளால் அவனால் உணர முடிந்தது மாத்திரமல்ல, அவனுக்குள் நாம் வைத்திருக்கும் 'சிப்'பைக் கூட உடனடியாக உணர முடிந்திருக்கிறது. அதனால் தான் மனோகரை அவன் கொன்றிருக்கிறான். அதை வைத்து எந்த அளவு சக்தியை அவனால் இப்போதும் பிரயோகிக்க முடிகிறது என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. இந்தச் சம்பவம் நடந்திருக்கா விட்டால் கண்டிப்பாக அவனுடைய இந்த முன்னேற்றத்தை நாம் தெரிந்திருக்க முடியாது."

அவன் அப்படிச் சொன்ன போதும் அவர் மனம் ஆறவில்லை. மனோகர் தன்னுடைய அக்கவுண்டிலிருந்து பத்து லட்சம் ரூபாய் பணம் அனுப்பி வைத்த பின் வங்கிகளைத் தொடர்பு கொண்டு மனோகரின் அக்கவுண்டுக்கு வந்து போன தொகைகளை ஆராய்ந்தும் அவர்களுக்கு அவற்றின் மூலமாக விஸ்வம் அக்கவுண்ட் பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை. பல நாட்டுப் பரிவர்த்தனைகள் நடந்திருந்தன என்றாலும் அவற்றின் மூலம் கண்டுபிடிக்க முடியவில்லை. அதுவே அவருக்கு வருத்தத்தைத் தந்திருந்தது. இப்போது மனோகர் மூலமாகவும் அவனைப் பிடிக்க முடியவில்லையே என்று மனம் நொந்தார்.

அவருக்கு இப்போதும் க்ரிஷுக்கும், விஸ்வத்திற்கும் இடையே உள்ள பகை என்ன என்பது தெரியாது. சில நாள் காணாமல் போய் வந்த பின் தான் அப்படி ஒரு எதிரி தனக்கிருக்கிறான் என்றும் காணாமல் போன போது நடந்தவற்றை அவரிடம் சொல்ல முடியாத நிலைமையில் இருக்கிறேன் என்றும் க்ரிஷ் அவரிடம் சொன்னான். அப்போது அவனும் அந்த எதிரியைப் பார்த்ததில்லை என்றும் அவன் பெயர் உட்பட அவனைப் பற்றிய எந்த விவரமும் அவனிடம் இல்லை என்பதும் அவருக்குத் தெரிந்து அது மேலும் குழப்பியது. ஆனால் அதே அளவில் தான் அவன் தன் குடும்பத்தாரிடமும் சொல்லி இருக்கிறான் என்பது உதயிடம் பின்பு ஒரு முறை பேசும் போது தெரிந்தது.

க்ரிஷ் வேண்டுகோளின்படி தான் அவர் பின் அபூர்வ சக்திகள் கொண்ட ஒரு மனிதனின் பழங்கதைகளைத் தெரிந்து கொள்ள வடக்கு நோக்கிப் பயணம் செய்தார். மாஸ்டர் அபூர்வ சக்திகளைச் சொல்லித் தரக்கூடிய குருக்கள் சிலர் இருக்கும் இடங்களைச் சொல்லியிருந்தார். அங்கெல்லாம் செந்தில்நாதன் போனார். போன இடங்களில் கிடைத்த தகவல்களை வைத்து அடுத்த இடங்களுக்குப் போனார். விஸ்வம் எப்படி சில சக்திகளை அடைந்தான் என்று சொல்லிக் கொடுத்த சில குருக்கள் சொன்னார்கள். ஒவ்வொருவரும் மறக்காமல் சொன்ன ஒரு விஷயம், அவர்களை அந்தச் சக்தியில் மிஞ்சி விட்டுத் தான் விஸ்வம் அவர்களை விட்டுப் போயிருக்கிறான் என்பது தான்.

ஒரு முறை விட்டுப் போன பின் அவன் எந்தப் பழைய குருவையும் தொடர்பு கொண்டதில்லை. கற்றுக் கொண்ட வித்தையில் குறை வைத்ததில்லை. அவனைப் பற்றி மேலும் அதிகம் தெரிந்து கொள்வதற்கு முன், ஹரிணி கடத்தப்பட்டதால் அவர் திரும்பி வர நேர்ந்தது. ஆனாலும் அவன் மீது உருவாகி இருந்த பிரமிப்பு அதன் பின் அவருக்கு என்றும் குறையவில்லை. வாழ்நாளில் ஒரு முறையாவது அவனை நேரில் பார்க்க வேண்டும் என்று செந்தில்நாதன் ஆசைப்பட்டார்.

அதன் பின் மாஸ்டர் மூலமாக அவன் பெயர் விஸ்வம் என்பது தெரிந்தது. சில காலத்திற்கு முன் வெளிநாடு சென்று திரும்பி வந்த போது க்ரிஷ் விஸ்வம் இறந்து விட்டதைச் சொன்னான். அத்தனை சக்தி படைத்த விஸ்வம் திடீரென்று இறந்து விட முடியும் என்பதை அவரால் ஜீரணிக்க முடியவில்லை. அதற்கேற்றாற் போல் சில நாட்களில் க்ரிஷ் சொன்னான். "விஸ்வம் கூடு விட்டு கூடு பாய்ந்திருக்கிறான்." வேறு யாரைப் பற்றி அவன் சொல்லி இருந்தாலும் அவர் அதை நம்பி இருக்க மாட்டார். ஆனால் விஸ்வத்தைப் பொருத்த வரை அவனால் முடியாதது என்று ஒன்றிருக்க முடியாது என்று எண்ணி வந்த செந்தில்நாதன் உடனடியாக நம்பினார்.

செந்தில்நாதன் க்ரிஷிடம் சொன்னார். "விஸ்வத்துக்குத் தன் சக்திகளையும் பயன்படுத்த முடிகிறது. ஆட்களையும் அனுப்பி யாரையும் கொல்லவும் முடிகிறது என்பது ஆபத்தான நிலைமை க்ரிஷ். நீங்கள் எல்லோரும் பாதுகாப்பாக இருப்பது நல்லது. உதய் காதலிக்கும் அந்தப் புதிய பெண் பற்றியும் முழுதாகத் தெரிந்து கொள்வது முக்கியம்..."

க்ரிஷ் தலையசைத்தான். திறமையான போலீஸ்காரரான அவர் சந்தேகம் கொண்டது அவனை ஆச்சரியப்படுத்தவில்லை. ஆபத்தானவளாக இருக்கலாம் என்று தெரிந்தே நடந்து கொண்டிருப்பதை இன்னும் அனுமதித்துக் கொண்டிருக்கும் அவனுடைய சொந்தப் புத்தியே அவனை ஆச்சரியப்படுத்தியது. ஆனாலும் கூட உதயின் காதலைக் கலைப்பதற்கு அவன் மனம் ஒத்துக் கொள்ளவில்லை...

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, December 3, 2020

இல்லுமினாட்டி 79

மனோகர் கொல்லப்பட்டது விஸ்வம் பழைய சக்திகளையும், ஆட்களையும் பயன்படுத்த ஆரம்பித்து விட்டான் என்பதை எர்னெஸ்டோவுக்குத் தெரியப்படுத்தியது. இந்த அளவு வேகமாக விஸ்வம் பலம் பெறுவான் என்பதை அவர் சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை. முந்தைய அனுமானங்களுக்குச் சிறிதும் பொருந்தாதபடி எல்லாம் நடக்கிறதே, எங்கே தவறு செய்தோம் என்று அவர் யோசிக்க ஆரம்பித்தார். அவருக்குப் பதில் எதுவும் புலப்படவில்லை. திடீரென்று இதற்கான பதில் அமானுஷ்யனிடம் கிடைக்கலாம் என்று அவருக்கு தோன்றியது. அவனிடம் பேசுவதற்கு முன் இம்மானுவலையும், ஜான் ஸ்மித்தையும் கூட வரவழைத்தார்.

அவர்கள் வந்த பின் அவர் அக்‌ஷயிடம் மனோகர் கொல்லப்பட்ட விதத்தைத் தெரிவித்து விட்டுக் கேட்டார். "ஜான் ஸ்மித் நரம்பியல் நிபுணர் ஒருவரையும் கலந்தாலோசித்து விட்டு ஓரளவு சக்தியைத் தான் விஸ்வம் டேனியலின் உடம்பில் பயன்படுத்த முடியும், அது சாத்தியமாவதற்கும் குறைந்த பட்சம் ஏழெட்டு மாதமாவது ஆகும் என்று சொன்னார். விஸ்வம் எதிலும் வேகமும், உறுதியும் கொண்டவன் என்பதால் ஏழெட்டு மாதங்களை ஆறு மாதமாக நாங்களே குறைத்துக் கொண்டோம். ஆனால் எங்கள் கணக்குகள் எல்லாம் தவிடு பொடி ஆக்கி விட்டு விஸ்வம் இவ்வளவு சீக்கிரம் இயங்க முடிந்தது எப்படி?"

அக்‌ஷய் அவசரப்பட்டு எந்தப் பதிலையும் அளிக்காமல் முதலில் ஜான் ஸ்மித்தும், அந்த நரம்பியல் நிபுணரும் எதை வைத்து அந்த முடிவை எட்டினார்கள் என்பதை அறிந்து கொள்ள விரும்பினான். ஜான் ஸ்மித் முதலில் ம்யூனிக் நகர மருத்துவமனையில் இருந்த ஸ்கேன் ரிப்போர்ட்களைக் காண்பித்து விளக்கினார். பின் அந்த திபெத்திய யோகியைச் சந்தித்த போது அவர் என்னவெல்லாம் சொன்னார் என்பதிலிருந்தே ஆரம்பித்து பின் அந்த நரம்பியல் நிபுணரைச் சந்தித்துப் பேசியது வரை விவரித்துச் சொன்னார்.

எல்லாவற்றையும் கவனமாகக் கேட்டுக் கொண்ட பின் அக்‌ஷய் சொன்னான். "நீங்கள் வந்த முடிவு தவறல்ல"

எர்னெஸ்டோ கேட்டார். "பின் எப்படி இவ்வளவு சீக்கிரம் விஸ்வம்...?"

அக்‌ஷய் பொறுமையாக விளக்கினான். "முதலாவது விஸ்வத்தின் திறமையை நீங்கள் நன்றாய்ப் புரிந்து கொள்ள வேண்டும். அவன் கற்ற ஒவ்வொரு வித்தையும் கச்சிதமாகக் கற்றவன். ஒவ்வொன்றிலும் நூறு சதவீதம் நிபுணத்துவம் பெற்றே விட்டவன். எதிலும் ஒன்றிரண்டு சதவீதம் கூட குறையோடு முற்றுப்புள்ளி வைத்தவன் அல்ல. அதனால் ஒவ்வொரு செயலிலும் குறைந்த பட்ச சக்தியையே செலவழிக்கத் தெரிந்தவன். நீங்கள் சொல்வதை எல்லாம் வைத்துப் பார்க்கையில் அவன் பழைய உடலில் இருக்கும் போதே இது அவன் அவனுடைய இயல்பாக மாறியிருக்க வேண்டும். இந்த உடலுக்கு வரும் போது அவன் மூளையின் ஒவ்வொரு செல்லிலும் பதிவாகி இருந்த நிபுணத்துவத்தை அப்படியே இந்த மூளையிலும் அவன் மாற்றிக் கொண்டிருக்கிறான். இது ஒரு பிரம்மாண்ட சாதனை தான். ஆனால் அதை அவன் சாதித்திருக்கிறான். டேனியல் என்ற போதை மனிதனின் மூளையில் அவனால் சாதிக்க முடிந்ததை நரம்பு மண்டலத்தில் சாதிக்க முடியவில்லை. அது சரி செய்ய முடியாத அளவு பலவீனமாக இருந்தது. மூளையில் பழைய டேட்டாக்களைப் பதிவு செய்த மாதிரி அவன் பழைய உடல் நரம்பு சக்தியை இதில் மாற்ற முடியவில்லை. அது ஒன்று மட்டும் முழுவதுமாகவே அந்தந்த உடல் மட்டுமே சம்பந்தப்பட்டது என்பது அவனுக்குத் தடையாகி விட்டது. ஆனால் நீங்கள் யூகித்த மாதிரி அதை அவனால் எந்த அளவு சரி செய்ய முடியுமோ அந்த அளவு சரி செய்ய அவன் கடுமையான முயற்சிகள் எடுத்துக் கொண்டிருப்பான். இது வரை சுமார் பத்து சதவீதமாவது சரி செய்து முடித்திருப்பான்."

அவர்கள் மூவரும் அவன் வார்த்தைகளில் முழுக் கவனமாக இருந்தார்கள். அவன் எளிமையாகவும் தெளிவாகவும் சொன்ன விதம் அவர்களுக்குப் பிடித்திருந்தது. புரிந்து கொள்ளவும் முடிந்தது.

அக்‌ஷய் தொடர்ந்தான். "அடுத்தவர் மனதில் இருப்பதை அறியவும், ஆதிக்கம் செலுத்தவும் முடிந்த அபூர்வ சக்தி விஷயத்தில் நரம்பு மண்டல சக்தி செலவாவது எந்த மனிதரிடம் பிரயோகிக்கிறோம் என்பதைப் பொருத்து ஆளைப் பொருத்து மாறும். நாம் மிக நேசிப்பவர்கள், முன்பே நாம் ஆக்கிரமிக்க நமக்கு அனுமதி தந்தவர்கள், நாம் அடிக்கடி ஆக்கிரமித்துப் பழகியவர்கள் போன்றவர்கள் விஷயத்தில் நமக்கு நிறைய சக்தி தேவைப்படாது. அதே போல் எந்த விதமான பாதுகாப்போ, எச்சரிக்கையோ, எதிர்ப்போ இல்லாத எளியவர்களின் மனதை ஆக்கிரமிக்கவும், தெரிந்து கொள்ளவும் கூட நமக்கு நிறைய சக்தி தேவைப்படாது. ஆனால் முதலிலேயே மனதில் நமக்கு எதிர்ப்பு இருக்கிறவர்கள், மனவலிமை மிக்கவர்கள், சக்தி படைத்த சாதுக்கள், யோகிகள் மனதை எல்லாம் ஆக்கிரமிக்க நிறைய சக்தியை நாம் பிரயோகிக்க வேண்டி இருக்கும். இதற்கும் ஒரு கணக்கைச் சொன்னால் புரியும் என்றால் மனதில் நமக்கு எதிர்ப்பு வைத்திருப்பவர்கள் விஷயத்தில் இரட்டிப்பு சக்தி தேவைப்படும். மனவலிமை மிக்கவர்கள் விஷயத்தில் நான்கைந்து மடங்கு தேவைப்படும். சக்தி படைத்த சாதுக்கள் யோகிகள் விஷயத்தில் நாற்பது ஐம்பது மடங்கு தேவைப்படும்...."

அவர்கள் பிரமிப்புடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள். இத்தனை விஷயங்கள், நூட்சுமங்கள் இந்த சக்தி பிரயோகத்தில் இருக்கின்றன என்பது அவர்களுக்குப் புதுத்தகவல்களாகவும், ஆச்சரியமாகவும் இருந்தன.

அக்‌ஷய் சொன்னான். "மனோகர் அவனுடைய வேலைக்காரன். அவன் மனதை விஸ்வம் எத்தனையோ முறை ஆக்கிரமித்திருப்பான். மனோகரும் அவன் ஆக்கிரமிக்க மானசீக அனுமதி மட்டுமல்லாமல் விருப்பமே வைத்திருக்கலாம். அவன் மீண்டும் தொடர்பு கொள்ள மாட்டானா என்று காத்துக் கொண்டிருக்கலாம். அதனால் அவன் மனதை ஆக்கிரமிக்கவும், தெரிந்து கொள்ளவும் விஸ்வத்துக்கு குறைந்தபட்ச சக்தி தான் செலவாகி இருக்கும். அதை நான் சொன்னபடி ஏற்கெனவே விஸ்வம் சேர்த்து வைத்திருப்பான். அதிலும் சிறுபகுதியைத் தான் இதற்குச் செலவு செய்திருப்பான். மனோகரை ஆக்கிரமிக்கும் போது அவன் உடலில் இருந்த சிப் தெரிந்திருக்கும். அதற்குப் பிறகு அவனைப் பயன்படுத்துவது ஆபத்து என்று புரிந்து கொண்டு அவனைக் கொல்ல முடிவெடுத்திருப்பான். அவ்வளவு தான். அதனால் இப்போதைக்கு நீங்கள் அவன் பழைய வலிமை அடைந்து விட்டான் என்றெல்லாம் பயப்பட வேண்டியதில்லை."

அவன் சொன்ன தகவல்கள் மூவருக்கும் பெரும் நிம்மதியைத் தந்தது. எதுவும் எல்லை மீறிப் போய்விடவில்லை.

எர்னெஸ்டோ கேட்டார். "அந்த வாடகைக் கொலையாளியை எல்லாம் அவன் எப்படி தொடர்பு கொண்டிருப்பான்? அதற்கு அவன் கூட்டாளி உதவி இருப்பானா?"

அக்‌ஷய் சொன்னான். "உதவியிருக்கலாம். ஆனால் அதற்கு அவசியம் இருந்திருக்காது என்றே நினைக்கிறேன். அவன் மூளையில் சேகரித்து வைத்திருந்த டேட்டாக்களில் அவன் அக்கவுண்ட் நம்பர்கள், பாஸ்வர்டுகள், ஆட்கள் விவரங்கள் அடங்கியிருக்கும். அதை அவன் வெற்றிகரமாக டேனியல் மூளையிலும் மாற்றியிருப்பான் என்பதால் தெரிந்த பழைய ஆட்களைத் தொடர்பு கொள்ளவோ, அக்கவுண்டில் இருந்து பணம் அனுப்பவோ அவன் எந்தக் கஷ்டமும் பட்டிருக்க மாட்டான்"

அவர்கள் மூவருக்கும் "என்ன மனிதனவன்?" என்ற பிரமிப்பு மறுபடி வந்து தங்கியது.

ஜான் ஸ்மித் பழைய நினைவுகள் அலைபாயச் சொன்னார். "நான் இது வரை இந்தக் கூடு விட்டுக் கூடு பாயும் வித்தை பற்றித் தெரிந்த நிறைய ஆட்களிடம் பேசி விட்டேன். எல்லாரும் திட்டமிட்டு சிறிது நேரம் போய் வருகிற சக்தி படைத்தவர்கள் பற்றி மட்டுமே பேசினார்கள். யாருமே இப்படிக் கிடைத்த உடலில் போய்ச் சேர்ந்து கொள்ள முடியும் என்று சொல்லவில்லை. அது முடியுமா என்று கேட்ட போது கூட சந்தேகத்துடன் தான் பேசினார்கள். விஸ்வம் அதையும் சாதித்து விட்டு இந்த ஆட்டம் ஆடுகிறானே என்று தான் ஆச்சரியமாக இருக்கிறது. அதைப் பற்றிக் கேட்ட போது திபெத்திய யோகி அதற்கு அவனுடைய கர்மாவும், சம்பந்தப்பட்டவர்கள் கர்மாவும் தான் காரணமாக இருக்கும் என்று சொன்னார். இத்தனை பேர் கர்மாவும் எதில் கொண்டு போய் முடியுமோ?"

(தொடரும்)

என்.கணேசன்